இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு



டாக்டர் க.வெங்கடேசன்
டாக்டர் பி.எஸ்.சந்திரபிரபு

Scanned by CamScanner

Scanned by CamScanner

இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு

டாக்டர் க. வெங்கடேசன்
டாக்டர் பி. எஸ். சந்திரபிரபு

வி.சி. பப்ளிகேஷன்ஸ்
32-ஏ, மீனாட்சி தியேட்டர் ரோடு
இராஜபாளையம் - 626 117

Scanned by CamScanner

நூல் தலைப்பு : இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு

பதிய பதிப்பு : ஜனவரி 2004

பதிப்புரிமை : ஆசிரியர்களுக்கு

நூலாசிரியர்கள் : **டாக்டர் க.வெங்கடேசன்**
முன்னாள் முதல்வர்
இராஜபாளையம் இராஜூக்கள் கல்லூரி,
இராஜபாளையம் - 626 117.

டாக்டர் பி.எஸ்.சந்திரபிரபு
ரீடர், வரலாற்றுத் துறை,
இராஜபாளையம் இராஜூக்கள் கல்லூரி,
இராஜபாளையம் - 626 117.

பக்கங்கள் : i - x + 330

விலை : ரூ.100

பதிப்பகத்தார் : வி.சி.பப்ளிகேஷன்ஸ்
32-ஏ, மீனாட்சி தியேட்டர் ரோடு,
இராஜபாளையம் - 626 117.

அச்சிட்டோர் : செந்தாமரை பிரஸ்,
மலையடிப்பட்டி,
இராஜபாளையம். போன் : 222517.

க - 1 வ ஙு
உ - 2 ஞ ஙு
ங - 3
ச - 4
ஞ - 5
ஸ - 6
ஏ - 7
அ - 8
ஹ - 9
ஷ - 10
ஷ - 20 - 20

ரூ50

கோவை
ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலய அய்யா
தியாக தீபம்
திருமிகு.தி.சு.அவினாசிலிங்கம்
அவர்களுக்கு சமர்ப்பணம்

Scanned by CamScanner

முன்னுரை

இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு

வெளியானது. அதன்பின் இதன் மறு பதிப்புகளும், திருத்திய பதிப்புகளும் வெளியிடப்பட்டன. அண்மைக் காலத்தில் தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் மறுசீரமைத்த பாடத் திட்டங்களுக்கேற்ப இந்நூல் தக்க மாற்றங்களுடன் புதிய பதிப்பாக வெளியிடப்படுகிறது. இப்பதிப்பில் ஏழு அத்தியாயங்கள் (1, 21, 28, 31, 32, 33, 34) புதிதாக சேர்க்கப்பட்டுள்ளன. பல பத்திகள் நீக்கப்பட்டு புதிய பத்திகள் எழுதப்பட்டுள்ளன. ஆண்டு வரிசைப் பட்டியல்களும், புத்தகப் பட்டியலும் இணைக்கப்பட்டுள்ளன.

பொதுவாக இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தை மகாத்மா காந்திக்கு முந்திய காலம், மகாத்மா காந்திக்குப் பிந்திய காலம் என்று பிரிப்பதுண்டு. அல்லது வசதி கருதி இக்காலத்தைப் பல காலகட்டங்களாக (1885 - 1905, 1905 - 1919, 1919 - 1929, 1929 - 1939, 1939 - 1942, 1942 - 1947)ப் பகுத்துப் பார்ப்பதுண்டு.

இப்புதிய பதிப்பு நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் பகுதியில் இந்தியாவில் ஆங்கிலேயர் ஆதிக்கம் ஏற்பட்டு, அதற்கு எதிர்ப்புக் கிளர்ச்சிகள் தோன்றி, அவை அகில இந்திய காங்கிரஸ் இயக்கமாக உருவாகும் வரை 10 அத்தியாயங்களும்; இரண்டாம் பகுதியில் காந்தி இயக்கம் முதல் ஒத்துழையாமை இயக்கம் வரை 10 அத்தியாயங்களும்; மூன்றாம் பகுதியில் சுயராஜ்யக் கட்சியின் சட்டமன்ற உள்ளிறுப்பு ஒத்துழையாமை இயக்கத்திலிருந்து இந்தியப் பிரிவினையும் சுதந்திரமும் வரை 10 அத்தியாயங்களிலும்; நான்காம் பகுதியில் விடுதலைப் போராட்டத்தில் வகுப்புவாத வளர்ச்சி, புரட்சியாளர்களின் பங்கு, பத்திரிகைகளின் பங்கு, நேருவின் பங்கு, தமிழ்நாட்டின் பங்கு ஆகிய 5 அத்தியாயங்களும் இடம் பெற்றுள்ளன.

இப்புத்தகத்தைப் படிக்கும் மாணவர்கள் இந்தியா விடுதலை பெற்று 35 ஆண்டுகளுக்குப் பின் பிறந்து வளர்ந்தவர்கள். இவர்கள் இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றைப் பற்றி நன்கு அறிந்து கொண்டால்தான் சமகால இந்திய வரலாற்றைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியும். எனவே, வரலாற்று மாணவர்களின் கல்வித் தேவைகளைக் கருத்தில் கொண்டு இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூல் இளங்கலை, முதுகலை வரலாற்று மாணவர்களுக்கும், அஞ்சல் வழி வரலாறு பயில்வோருக்கும், பெரிதும் பயனுடையதாக இருக்கும். வழக்கம் போல், மாணவர்களும், ஆசிரியர்களும், அறிவார்வமிக்கோரும் இப்புதிய பதிப்பை வரவேற்பார்கள் என்று நம்புகிறோம்.

எங்களது எழுத்துப் பணிக்குத் தொடர்ந்து ஊக்கமளித்து வரும் ராஜபாளையம் ராஜூக்கள் கல்லூரி ஆட்சிக் குழுத் தலைவர் திருமிகு.A.A.கப்பராஜா அவர்களுக்கும், செயலர் திருமிகு.V.K.கப்பிரமணிய ராஜா அவர்களுக்கும் எங்களது நெஞ்சார்ந்த நன்றி.

இந்நூலை கணிப்பொறியில் வடிவமைத்துக் கொடுத்த கிராமராஜ்யம்" எஸ். வெள்ளைச்சாமி, யாழினி படைப்பகம் எம். பாலகப்பிரமணியம், P.சுந்தரராஜ் ஆகியோர்க்கும், நூல் வரைவைப் படித்து பிழை திருத்த உதவிய மாணவர்கள் M.முத்துராஜ், C.வேதமாணிக்கம், M.அருள்பிரகாஷ் ஆகியோர்க்கும், முகப்பட்டை ஓவியம் வரைந்த ஓவியர் திரு. இராஜா அவர்களுக்கும், நூலை அழகுற அச்சிட்ட செந்தாமரை பிரஸ் நிறுவனத்தாருக்கும் எங்களது நன்றி.

க.வெங்கடேசன்

பி.எஸ்.சந்திரபிரபு

Scanned by CamScanner

பொருளடக்கம்

முன்னுரை

பகுதி - I

1. ஆங்கிலேயர் ஆதிக்கம் 1-6
ஐரோப்பியர் வருகை
கர்நாடகத்தில் ஆங்கிலேயர் ஆதிக்கம்
வங்காளத்தில் ஆங்கிலேயர் ஆதிக்கம்
தென்னிந்தியாவில் ஆங்கிலேயர் ஆதிக்கம்
மகாராஷ்டிரத்தில் ஆங்கிலேயர் ஆதிக்கம்
பஞ்சாப்பில் ஆங்கிலேயர் ஆதிக்கம்
ஆங்கிலேயரின் நிர்வாகச் சீர்திருத்தங்கள்

2. தென்னிந்தியக் கிளர்ச்சி, 1800-1801 7-17
ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு
கிளர்ச்சிக்கான காரணங்கள்
பிராந்தியக் கூட்டமைப்புகள்
கிளர்ச்சியின் போக்கு
கிளர்ச்சியின் வீழ்ச்சி
வரலாற்றுச் சிறப்பு

3. வேலூர்க் கிளர்ச்சி, 1806 18-22
சாதகமான சூழ்நிலை
கிளர்ச்சிக்கான காரணங்கள்
கிளர்ச்சியின் போக்கு
கிளர்ச்சியின் தோல்வி
கிளர்ச்சியின் இயல்பும் சிறப்பும்

4. ஆங்கிலேயருக்கு உட்புற எதிர்ப்புகள், 1808-1857 23-28
திருவாங்கூர் கலகம்
ஆந்திரப் பகுதியில் எதிர்ப்பு
மேற்கிந்தியாவில் எதிர்ப்பு
கிழக்கிந்தியாவில் எதிர்ப்பு
சாந்தல் கிளர்ச்சி 1855-1856

5. 1857 பெருங்கிளர்ச்சி 29-42
திருப்புமுனை
கிளர்ச்சிக்கான காரணங்கள்
கிளர்ச்சியின் போக்கு
கிளர்ச்சி ஒடுக்கப்படல்
கிளர்ச்சியின் தன்மை
தென்னிந்தியக் கிளர்ச்சியும், 1857 பெருங்கிளர்ச்சியும்: ஒப்பீடு

6. சமுதாய சமயச் சீர்திருத்த இயக்கங்கள் 43-53
பிரம்ம சமாஜம்
பிரார்த்தனா சமாஜம்
ஆரிய சமாஜம்
ராமகிருஷ்ணா இயக்கம்
பிரம்மஞான சபை
அலிகார் இயக்கம்
சாதிச் சீர்திருத்தம்

7. இந்திய தேசியத்தின் தோற்றம் 54-61
காரணங்கள்
இல்பர்ட் மசோதா எதிர்ப்பு

8. காங்கிரசுக்கு முற்பட்ட அரசியல் சார்ந்த அமைப்புகள் 62-66
வங்காள அரசியல் அமைப்புகள்
பம்பாய் அரசியல் அமைப்புகள்
சென்னை அரசியல் அமைப்புகள்

9. இந்திய தேசிய காங்கிரஸ், 1885-1905 67-75
காங்கிரசின் தோற்றம்
காங்கிரசின் முதல் கூட்டம்
காங்கிரசின் வளர்ச்சி
காங்கிரசின் சாதனைகள்

10. காங்கிரஸ் மிதவாதிகள் 76-84
மிதவாதிகள் யார்?
மிதவாதிகளின் சாதனைகள்
மிதவாதிகளின் குறைபாடுகள்
மிதவாதிகளின் சட்டமன்றப் பணி
பெரோஸ்ஷா மேத்தா
கோபாலகிருஷ்ண கோகலே
தாதாபாய் நௌரோஜி
உமேஷ் சந்திர பானர்ஜி

Scanned by CamScanner

பகுதி - II

11. வங்கப் பிரிவினையும் சுதேசி இயக்கமும், 1905-1908 — 85-91
வங்கப் பிரிவினை
சுதேசி இயக்கம்
விளைவுகள்
சுரேந்திரராத் பானர்ஜி
பிபின் சந்திர பால்

12. காங்கிரஸ் தீவிரவாதிகள் — 92-100
தீவிர தேசியத்தின் தோற்றம்
தீவிரவாதிகள் யார்?
சூரத் காங்கிரஸ் பிளவு, 1907
தமிழ்நாட்டில் தீவிரவாதம்
மிதவாதிகளும் தீவிரவாதிகளும்: ஒப்பீடு
திலகரின் பங்கு

13. பயங்கரவாதிகள் — 101-108
பயங்கரவாதிகள் யார்?
அரசியல் கொலைகள்
இரகசிய அமைப்புகள்
பயங்கரவாதிகள் இயக்கம் நசுக்கப்படல்
வெளிநாடுகளில் இந்திய விடுதலைப் போராட்டம்
கதார் இயக்கம்
காமகட்டாமாறு நிகழ்ச்சி

14. முஸ்லீம் லீக், 1906 — 109-113
தேக்கமுற்ற சிறுபான்மையினர்
தூண்டப்பட்ட சிறுபான்மையினர்
வங்கப் பிரிவினையும் முஸ்லீம்களும்
சிம்லா தூதுக்குழு
முஸ்லீம் லீக்
தேசிய முஸ்லீம்கள்
முஸ்லீம் லீக்கும் காங்கிரசும்
பிரிட்டிஷாரின் பொறுப்பு

15. மார்லி - மிண்டோ சீர்திருத்தங்கள், 1909 — 114-117
அடக்குமுறை

சீர்திருத்தங்கள்
சீர்திருத்தத்தின் தோல்வி
டெல்லி தர்பார், 1911

16. முதல் உலகப் போரும் சுயாட்சி இயக்கமும், 1914-1918 — 118-127
போருக்கு ஆதரவு
சுயாட்சி இயக்கம்
திலகரின் சுயாட்சி சங்கம்
பெசண்டின் சுயாட்சி சங்கம்
லக்னோ காங்கிரஸ், 1916
லக்னோ உடன்பாடு
மாண்டேகுவின் ஆகஸ்டு பிரகடனம், 1917

17. ரௌலட் சத்தியாக்கிரகம், 1919 — 127-134
காந்தியின் பிரவேசம்
ரௌலட் சட்டம்
சாத்வீகப் போராட்டம்
ஜாலியன் வாலாபாக் படுகொலை
இராணுவச் சட்ட நடவடிக்கைகள்
ஹண்டர் விசாரணைக் குழு - மதிப்பீடு

18. மாண்ட் - போர்டு சீர்திருத்தங்களும் இரட்டை ஆட்சியும், 1919 — 135-138
மாண்டேகு-செம்ஸ் போர்டு சீர்திருத்தங்கள்
இரட்டை ஆட்சி என்றால் என்ன?
செயல்பட்ட முறை
சாதனைகள்
இரட்டை ஆட்சியின் தோல்வி

19. கிலாபத் இயக்கம், 1919-1922 — 139-144
கிலாபத் பிரச்னை
கிலாபத் கிளர்ச்சி
கிலாபத் இயக்கம்
கிலாபத் இயக்கத்தின் தோல்வி
மதிப்பீடு

20. ஒத்துழையாமை இயக்கம், 1920-1922 — 145-154
சூழ்நிலைகள்
ஒத்துழையாமைத் தீர்மானம்

Scanned by CamScanner

இயக்கத் திட்டம்
கன்னாட் கோமகன் வருகைப் புறக்கணிப்பு
மலபார் மாப்பிள்ளைகள் கிளர்ச்சி
வேல்ஸ் இளவரசர் வருகைப் புறக்கணிப்பு
சௌரி சௌரா நிகழ்ச்சி
போராட்டம் நிறுத்தப்பட்டது
வரலாற்றுச் சிறப்பு

பகுதி- III

21. சுயராஜ்யக் கட்சி, 1923-1926 155-161
சட்டமன்ற நுழைவு
மாற்றம் விரும்பியோர்
மாற்றம் விரும்பாதோர்
சுயராஜ்யக் கட்சி
சுயராஜ்யக் கட்சியின் சாதனைகள்
சுயராஜ்யக் கட்சியின் சரிவு
மதிப்பீடு

22. சைமன் குழு, 1927-1929 162-169
சைமன் குழு அமைக்கப்படல்
சைமன் குழு புறக்கணிப்பு
சைமன் குழு அறிக்கை
நேரு அறிக்கை
ஜின்னாவின் 14 அம்சத் திட்டம்
பூரண சுயராஜ்யம்

23. சட்டமறுப்பு இயக்கம், 1930-1934 170-183
உப்பு சத்தியாக்கிரகம்
தண்டி யாத்திரை
வட்டமேஜை மாநாடுகள்
முதல் வட்டமேஜை மாநாடு, 1930
காந்தி-இர்வின் ஒப்பந்தம்
இரண்டாவது வட்டமேஜை மாநாடு, 1931
மீண்டும் போராட்டம்
வகுப்புத் தீர்வு
பூனா உடன்பாடு
மூன்றாவது வட்டமேஜை மாநாடு, 1932

போராட்டம் நிறுத்தப்பட்டது
மதிப்பீடு

24. இடதுசாரிகள் இயக்கம்
இடதுசாரிகள் யார்? 184-189
தோற்றம்
இந்திய கம்யூனிஸ்டு கட்சி, 1925
மீரட் சதி வழக்கு, 1929
காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சி, 1934
இடதுசாரி இயக்கத்தின் சாதனைகள்

25. 1935 இந்திய அரசாங்கச் சட்டமும்
மாநில சுயாட்சியும், 1935-1937 190-195
1935 இந்திய அரசாங்கச் சட்டம்
காங்கிரசும் தேர்தலும்
அமைச்சரவை அமைப்பு
மாநில சுயாட்சியின் செயல்பாடு
மதிப்பீடு

26. கிரிப்ஸ் தூதுக்குழு, 1942 196-205
இரண்டாவது உலகப் போரும் இந்தியாவும்
காங்கிரஸ் பதவி விலகல்
தனிநபர் சத்தியாக்கிரகம்
கிரிப்ஸ் தூதுக்குழு
கிரிப்சின் ஏற்பாடுகள்
கிரிப்ஸ் குழுவின் தோல்வி

27. வெள்ளையனே வெளியேறு இயக்கம், 1942 206-214
புதிய போராட்டம்
சூழ்நிலைகள்
காந்தியின் தீர்மானம்
மக்கள் கிளர்ச்சி
இயக்கத்தின் வீழ்ச்சி
இயக்கத்தின் இயல்பும் சிறப்பும்
மதிப்பீடு

28. சுபாஷ் சந்திர போசும்
இந்திய தேசிய இராணுவமும் 1942-1945 215-223
சுபாஷ் போசின் எழுச்சி

Scanned by CamScanner

பார்வர்டு பிளாக் கட்சி
ஜெர்மனியில் போஸ்
இந்திய தேசிய இராணுவம்
'சுதந்திர இந்தியாவின் தற்காலிக அரசாங்கம்'
பிரிட்டனுக்கு எதிராகப் போர்
இந்தியப் படையெடுப்பு
இந்திய தேசிய இராணுவப் போராட்டத்தின் முக்கியத்துவம்
இராணுவ அதிகாரிகள் மீது வழக்கு, 1945-1946
வழக்கின் முக்கியத்துவம்

29. அமைச்சரவைத் தூதுக்குழு, 1946 224-24
தூதுக்குழு வருவதற்கு முந்தைய நிகழ்ச்சிகள்
காந்தி-ஜின்னா சந்திப்பு
தேசாய்-லியாகத் உடன்பாடு
வேவல் திட்டம்
சிம்லா மாநாடு
கப்பல் படைக் கிளர்ச்சி, 1946
அமைச்சரவை தூதுக்குழு
தூதுக்குழுவின் திட்டம்
இடைக்கால அரசு
நேரடி நடவடிக்கை நாள்
இடைக்கால அரசாங்கம்
அரசியலமைப்புச் சட்ட மன்றம்

30. பிரிவினையும் விடுதலையும், 1947 241-25
அட்லியின் அறிவிப்பு
மௌன்ட் பேட்டன் திட்டம்
முடிந்த முடிவு
இந்திய விடுதலை
வெள்ளையன் வெளியேறியதேன்?
தேசப் பிரிவினையைத் தவிர்த்திருக்கலாமா?
விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றுச் சிறப்பு

பகுதி-IV

31. வகுப்புவாதத்தின் வளர்ச்சி 252-26
வகுப்புவாதம் : ஒரு விளக்கம்

முஸ்லீம் வகுப்புவாதம்
வளர்ச்சி
பிரிவினை வகுப்புவாத வளர்ச்சி
போர்ப்பாதையில் ஜின்னா
இந்து வகுப்புவாதம்
இந்து வகுப்புவாத வளர்ச்சி
ராஷ்ட்ரிய சுவயம் சேவக் சங்கம்

32. விடுதலைப் போராட்டத்தில் புரட்சியாளர்களின் பங்கு 267-272
காங்கிரஸ் தீவிரவாதிகள்
போராட்டப் புரட்சியாளர்கள்
இந்துஸ்தான் குடியரசு சங்கம், 1924
ககோரி சதி வழக்கு, 1925
இந்துஸ்தான் சோஷலிஸ்டு குடியரசு சங்கம், 1928
சாண்டர்ஸ் கொலை, 1928
சட்டமன்றத்தில் வெடிகுண்டு வீச்சு, 1929
சிட்டகாங் கிளர்ச்சி, 1930
லாகூர் சதிவழக்குத் தீர்ப்பு, 1931
பகத்சிங், 1907-1931

33. விடுதலைப் போராட்டத்தில் பத்திரிகைகளின் பங்கு 273-283
பத்திரிகைப் பணி
காங்கிரசும் பத்திரிகைகளும்
பத்திரிகை விரோதச் சட்டங்கள்
தாய்மொழிப் பத்திரிகைச் சட்டம், 1878
விசித்திர வழக்கு, 1883
திலகர் தண்டிக்கப்பட்டார், 1897
தாய்மொழிப் பத்திரிகை சங்கம், 1891
சுதேசி இயக்கமும் பத்திரிகைகளும்
புதிய பத்திரிகைச் சட்டம், 1910
சுயாட்சி இயக்கமும் பத்திரிகைகளும்
போராட்டங்களும் பத்திரிகைகளும்
வெள்ளையனே வெளியேறு இயக்கமும் பத்திரிகைகளும்
மதிப்பீடு

34. விடுதலைப் போராட்டத்தில் நேருவின் பங்கு 284-291
இங்கிலாந்தில் நேரு, 1907-1912
அரசியல் அறிமுகம், 1912-1916
அரசியல் பிரவேசம், 1916-1920

Scanned by CamScanner

அரசியல் தலைவர், 1920-1930
போராட்டத் தளபதி, 1930-1942
சாதனையாளர், 1942-1947
வரலாற்று நாயகர் : மதிப்பீடு

35. விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கு 292-324
தமிழ்நாடும் துவக்க கால காங்கிரசும்
தமிழ்நாட்டு மிதவாதிகள்
தமிழ்நாட்டுத் தீவிரவாதிகள்
தமிழ்நாட்டுப் புரட்சி தேசியவாதிகள்
சுயாட்சி இயக்கம்
ரௌலட் சத்தியாக்கிரகம்
கிலாபத் இயக்கம்
நீதிக்கட்சியும் இரட்டை ஆட்சியும்
ஒத்துழையாமை இயக்கம்
சுயராஜ்யக் கட்சி
நீல் சிலைச் சத்தியாக்கிரகம்
சைமன் குழு புறக்கணிப்பு
பூரண சுதந்திர சபதம்
உப்புச் சத்தியாக்கிரகம்
தேர்தலில் வெற்றி வாகை
தனிநபர் சத்தியாக்கிரகம்
புரட்சித் தீவிரவாதம்
வெள்ளையனே வெளியேறு இயக்கம்
ஆனந்த சுதந்திரம்

காலவரிசைப் பட்டியல் 325-327
Select Bibliography 328-331

Scanned by CamScanner

பகுதி - I

1. ஆங்கிலேயர் ஆதிக்கம்

"ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி இந்துஸ்தானத்தைக் கைப்பற்றியது மாக்கியவெல்லி முறையைவிட மோசமானது; கிறித்துவத் தன்மையற்றது"
- வில்லியம் ரோவர்டு

ஐரோப்பியர் வருகை

வர்த்தகத் தொடர்பு

பண்டைக் காலம்தொட்டே இந்தியா இயற்கை வளத்திற்கும், அறிவாற்றலுக்கும், ஆன்மிகச் சிறப்புக்கும் புகழ் பெற்றிருந்தது. அயலவருக்கு இந்தியா அதிசய உலகமாகக் காட்சியளித்தது. படையெடுப்பாளர்களும், யாத்திரிகர்களும், வர்த்தகர்களும், இந்தியாவைத்தேடி வந்தனர். குறிப்பாக இந்திய வணிகர்கள் ஆப்கானிஸ்தான், ஈரான், ஈராக், சிரியா, எகிப்து, ரோம் ஆகிய நாடுகளுடன் வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்தனர். கி.பி. 7ம் நூற்றாண்டிலிருந்து 15ம் நூற்றாண்டு வரை அரேபிய நாடுகளின் கடுமையான வர்த்தகப் போட்டியால் ஐரோப்பிய நாடுகளின் வாணிபம் பெரிதும் பாதிக்கப்பட்டது. அதன்பின் ஏற்பட்ட கடல்வழிக் கண்டுபிடிப்புகளின் விளைவாக ஐரோப்பிய நாடுகள் இந்தியாவுடன் வர்த்தகத் தொடர்பு கொள்ளத் துவங்கின.

போர்த்துக்கீசியர், டச்சுக்காரர்கள், டேனியர், பிரெஞ்சுக்காரர்கள்

15ம் நூற்றாண்டில் இந்தியாவுடன் கடல்வழி வர்த்தகத் தொடர்பு கொண்ட முதல் ஐரோப்பிய நாடு போர்ச்சுக்கல்தான். போர்த்துக்கீசியர் கொச்சியை மையமாகக் கொண்டு தங்களது வர்த்தகத்தை விரிவுபடுத்தினர். பின்னர் கோவா அவர்களது வர்த்தகக் தலைமை மையமாயிற்று (1530). 17ம் நூற்றாண்டின் முற்பகுதியில் கோவா, டையு, டாமன் தவிர பிற இடங்களை இழந்தனர். 17ம் நூற்றாண்டின் துவக்கத்தில் (1602) ஆரம்பிக்கப்பட்ட டச்சு ஓக்கியக் கம்பெனி இந்தியாவில் பல இடங்களில் வர்த்தகக் குடியேற்றங்களை ஏற்படுத்தியது. எனினும், பிரெஞ்சு மற்றும் பிரிட்டிஷ் வர்த்தக ஆதிக்கப்போட்டியை சமாளிக்க முடியாத டச்சுக்காரர்கள் இந்தியாவைவிட்டு வெளியேறினர். அதேபோன்று டேனியர்களும் இந்தியாவில் நிலைகொள்ள முடியவில்லை. 17ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வர்த்தகத் தொடர்புகொள்ள இந்தியாவுக்கு வந்த பிரெஞ்சுக் கிழக்கிந்திய கம்பெனியும், ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியும் வர்த்தகப் போட்டியில் துவங்கி நிலஆதிக்கப் போட்டியிலும் போரிலும் ஈடுபட்டன. இறுதியில் ஆங்கிலேயர் வெற்றிபெற்று இந்தியாவை அவர்களது ஆளுகையில் கீழ் கொண்டு வந்தனர்.

ஆங்கிலேயர்

1600 டிசம்பர் 31ம் நாள் 215 'வாணிப வீரர்கள்' எலிசபெத் ராணி (1558-1603) பிடமிருந்து தென் நாடுகளுடன் வாணிபம் செய்வதற்காக 'ஆங்கில நிழக்கிந்திய கம்பெனி'யைத் துவக்க அனுமதி பெற்றனர். முதலாம் ஜேம்ஸ் மன்னர் காலத்தில், 1613ம் ஆண்டு ஆங்கிலேயர் முகலாய மன்னர் ஜஹாங்கிரிடம் அனுமதியோடு, சூரத்தில் வர்த்தகக் கிடங்கைக் கட்டினர். பின்னர் ஆக்ரா, அகமதாபாத், புரோச் ஆகிய இடங்களில் வர்த்தகக் கிடங்குகளை நிறுவினர். 1661ல் இங்கிலாந்து பம்பாயைப் போர்த்துக்கீசியரிடமிருந்து இரண்டாம் சார்லஸுக்கு சீதனமாகப்பெற்று இந்தியக் கம்பெனிக்கு வாடகைக்குக் கொடுத்தது (1668). 17ம் நூற்றாண்டின் இறுதியில் இக்கம்பெனி சென்னை, கல்கத்தா, பம்பாய் ஆகிய இடங்களை வர்த்தக மையங்களாகக் கொண்டு, இந்திய உள்நாட்டுப் போர்களில் தலையிட்டு, தங்களது ஆதிக்கத்தை விரிவுபடுத்தினர்.

கர்நாடகத்தில் ஆங்கிலேயர் ஆதிக்கம்

ஆர்க்காடு நவாபுக்குச் சொந்தமான கர்நாடகத்தில் நடைபெற்ற மூன்று கர்நாடகப் போர்களில் (1746-48; 1749-54; 1758-63) விளைவாக ஆங்கிலேயர் கர்நாடகத்தில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டினர். பாண்டிச்சேரி நீங்கலாக பிற பிரெஞ்சுப் பகுதிகள் அனைத்தும் ஆங்கிலேயர் வசம் வந்தன. 1763க்குப் பின் இந்தியாவில் பிரான்சின் ஆதிக்கம் அகன்று, பிரிட்டனின் ஆதிக்கம் நிலைத்தது. 1792லிருந்து 1799க்குள் கொங்கு நாடு ஆங்கிலேயர் வசம் வந்தது. 1799ல் தஞ்சாவூர் இணைத்துக் கொள்ளப்பட்டது. 1801ல் எஞ்சிய தமிழ்நாட்டுப் பகுதிகளும் கம்பெனி வசம் வந்தன. தமிழ்நாடு ஆங்கிலேயர் ஆதிக்கத்தின்கீழ் வந்தது.

வங்காளத்தில் ஆங்கிலேயர் ஆதிக்கம்

1707ல் முகலாயப் பேரரசர் அவுரங்கசீப் இறந்தவுடன் முகலாயப் பேரரசு சரிந்து தொடங்கி போயிற்று. வாரிசுரிமைச் சண்டைகள் பேரரசில் பெருங்குழப்பத்தை ஏற்படுத்தியது. அலிவர்திகான் வங்காளத்தை முகலாயப் பேரரசிலிருந்து பிரித்துத் தன்ஆட்சியின் கீழ்க்கொண்டு வந்தார். ஆங்கிலேயர் அச்சூழ்நிலையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக்கொண்டு சண்டையிட்டோரில் ஒரு சாராரோடு சேர்ந்து தங்களது ஆதிக்க விரிவாக்கத்தில் ஈடுபட்டனர். பிளாசிப்போர் (1757) மற்றும் பக்சார்போர் (1764) ஆகியவற்றில் ஆங்கிலேயர் பங்கேற்று முன்னமே பெற்ற வெற்றிகளை நிரந்தரமாக்கிக் கொண்டனர். அலகாபாத் உடன்படிக்கை (1765)யில் விளைவாக வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய மூன்று மகாணங்களும் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தன. வங்காளத்தின் வளத்தைப் பயன்படுத்தி இந்தியாவின் பிறபகுதிகளில் தங்கள் ஆதிக்கத்தை விரிவுபடுத்தினர்.

தென்னிந்தியாவில் ஆங்கிலேயர் ஆதிக்கம்

1770 முதல் 1800 வரை மைசூரை ஆட்சி செய்த மாவீர மேதைகளான ஹைதர் அலியும் அவரது மகன் திப்புசுல்தானும், வெல்லஸ்லி பிரபுவின் பிரிட்டிஷ் மேலாதிக்கப் போக்கை முழுமூச்சுடன் எதிர்த்தனர். அதன் காரணமாக

1744-48 - கர்நாடக
1749-54 - கர்நாடக
1757 - பிளாசிப்போர்
1758-63 - மூன்றாம் கர்நாடகப்போர்
1764 - பக்சார்போர்
1764-67 - முதல் மைசூர்ப்போர்
1769-72 - இரண்டாம் மைசூர்ப்போர்
1775-82 - முதல் மராத்தியப்போர்
1780-84 - இரண்டாம் மைசூர்ப்போர்
1790-92 - மூன்றாம் மைசூர்ப்போர்
1799 - நான்காம் மைசூர்ப்போர்

எழுந்த நான்கு ஆங்கில - மைசூர் போர்களின் (1767-69; 1780-84; 1790-92; 1799) விளைவாக ஆங்கிலேயரும் நிஜாமும் மைசூர் நிலப்பகுதிகளைத் தங்களுக்குள் பிரித்துக் கொண்டனர். தக்காணம் ஆங்கிலேயர் வசமாயிற்று. மைசூர் அரசாக்கப்பட்ட கிருஷ்ணராஜ உடையார் துணைப்படை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு ஆங்கிலேயரின் மேலாதிக்கத்தை அங்கீகரித்தார். இவற்றின் காரணமாக ஆங்கில அரசின் பரப்பும், வருவாயும், அதிகாரமும், செல்வாக்கும் மேலும் உயர்ந்தன.

தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் போட்டிகளில் ஆங்கிலேயர் தலையிட்டுத் தஞ்சையில் தங்களது ஆதிக்கத்தை நிலைப்படுத்திக் கொண்டனர். இரண்டாம் மைசூர் போரின்போது ஆங்கிலேயர் முகமதுஅலிக்கு உதவிசெய்து, கர்நாடகத்தில் வரிவசூல் செய்யும் உரிமையைப் பெற்றனர். கர்நாடக ஒப்பந்தம் (1787) ஆங்கிலேய ஆட்சி அதிகாரத்தை மேலும் அதிகரித்துக் கொள்ள உதவியது. தஞ்சையில் சரபோஜி அரசருக்கு எதிராக அமரசிங்குக்கு உதவி செய்த ஆங்கிலேயர் 1787 லும், 1793 லும் தங்களுக்குச் சாதகமான உடன்படிக்கைகள் செய்து கொண்டு உரிமைகளையும், சலுகைகளையும் பெருக்கிக் கொண்டனர். மூன்றாம் மைசூர் போரின் முடிவில் ஆங்கிலேயர் திப்புசுல்தானிடமிருந்து திண்டுக்கல்லையும், பாரமகாலையும் பெற்றுக் கொண்டனர். வெல்லஸ்லி பிரபுவின் நாடு சேர்க்கும் கொள்கையின் மூலம் கம்பெனி ஆட்சி கர்நாடகம் மற்றும் மைசூர் அரசுகளை இணைத்துக் கொண்டது. இதன்மூலம் ஆங்கிலேயர் தென்னிந்தியாவைத் தங்கள் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வந்தனர்.

மகாராஷ்டிரத்தில் ஆங்கிலேயர் ஆதிக்கம்

32 ஆண்டு காலம் (1762-94) இறையாக ஆட்சி செய்து 'மராத்திய மாக்கிய வெல்லி' என்று அழைக்கப்பட்ட நானா பர்னாவிஸ் இறந்தபின் மராத்திய மாநிலத்தில் குழப்பமும், கொந்தளிப்பும் ஏற்பட்டன. மராத்திய ஆட்சியாளர்களான சிந்தியா, கோல்கார், போன்ஸ்லே, கெய்க்வாடு ஆகியோரிடையே அதிகாரப் பகிர்வுப் போட்டியும் போர்களும் துவங்கின. ஆனால் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்தானே? சூழ்நிலையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக்கொண்ட ஆங்கிலேயர் மூன்று ஆங்கில மராட்டியப் போர்களில் (1775-82; 1803-06; 1817-18) பங்கேற்றனர். விளைவு? ஆங்கிலேயர் மராட்டிய மண்ணில் அரசியல் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தும் அதிகாரத்தைப் பெற்றனர். மராட்டியக் கூட்டிணைவு முறியடிக்கப்பட்டது. பேஷ்வாவின் பதவி ஒழிக்கப்பட்டது. அவருக்கிருந்த நிலப்பகுதிகள் கம்பெனி ஆட்சியின்கீழ் வந்தன. போன்ஸ்லேயின் நர்மதைப் பகுதிகளும் இணைத்துக் கொள்ளப்பட்டன. கோல்கார் துணைப் படைத் திட்டத்தை ஏற்றார். மராத்தியருக்கு வீரம் இருந்த அளவுக்கு விவேகமும், ஒற்றுமை உணர்வும் இல்லாததால் மராட்டிய மாநிலம் ஆங்கிலேயரது ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வரப்பட்டது.

பஞ்சாப்பில் ஆங்கிலேயர் ஆதிக்கம்

'சிக்கிய சிங்கம்' மகாராஜா ரஞ்சித்சிங் (1780-1839) சிக்கியர்களை ஒன்றுதிரட்டி, பஞ்சாப் பேரரசை உருவாக்கி, ஆங்கிலேயருடன் நல்லுறவு கொண்டு, திறமையாக ஆட்சி செய்தார். அவர் இறந்தவுடன் பஞ்சாப் வாரிசுரிமைச் சுழலில் சிக்கியது.

Scanned by CamScanner

சீக்கிய குழச்சிக்காரர்கள் வலியச்சென்று ஆங்கிலேயர் விரித்த வலையில் விழுந்தனர். இரண்டு ஆங்கில சீக்கியப் போர்களின் (1845-46; 1848-49) விளைவாக பஞ்சாப் கம்பெனி ஆட்சியுடன் இணைக்கப்பட்டது. மராட்டியரைப்போன்று பஞ்சாபியரும் ஒற்றுமையில்லாமையில் ஒன்றுபட்டனர்! சுதந்திரமாக இருந்த பஞ்சாப் பிரிட்டிஷ் டொமினியனோடு சேர்க்கப்பட்டது என்று கூறுகிறார் எம்.டி.மகம்தார். பஞ்சாப் இணைக்கப்பட்டதோடு இந்தியாவில் ஆங்கிலேயர் ஆதிக்கம் நிலை பெற்றது எனலாம்.

ஆங்கிலேயரின் நிர்வாகச் சீர்திருத்தங்கள்

கிளைவின் இரட்டை ஆட்சி

இருமுறை வங்காள கவர்னராக இருந்த இராபர்ட் கிளைவ் 1765ல் வங்காளத்தில் 'இரட்டை ஆட்சி' (Dual Government or Dyarchy) முறையை அறிமுகப்படுத்தினார். அதன்படி வருவாய் சம்பந்தப்பட்ட 'திவானி' அதிகாரத்தை ஆங்கிலேயர் பெற்றனர். இராணுவம், பாதுகாப்பு, காவல், ஆட்சி போன்ற 'நிசாமத்' அதிகாரத்தை வங்காள நவாபிடம் கொடுத்தனர். அதாவது, ஆங்கிலேயர் தடையின்றி வருவாயைப்பெற நவாப் பாதுகாப்பு அளிக்க வேண்டும்! இந்த சூழ்ச்சித் திறமிக்க இரட்டை ஆட்சி வங்காளத்தில் அதிகாரமற்ற பொறுப்பையும், பொறுப்பற்ற அதிகாரத்தையும் கொண்ட முரண்பட்ட இரட்டை நிர்வாகத்தை ஏற்படுத்தியது. அதன் விளைவாக, அங்கு ஆட்சி சீர்குலைந்தது; இந்திய வாணிபம் நசிந்தது; அதிகாரவர்க்க அடக்குமுறை அதிகரித்தது; சமுதாயச் சமநிலை பிறழ்ந்தது; மக்கள் நலன் புறக்கணிக்கப்பட்டது; வளமான வங்காளம் வறுமைப் பிடியில் சிக்கியது.

வாரன்ஹேஸ்டிங்சின் சீர்திருத்தங்கள்

1772ல் வங்காள கவர்னராகி, அடுத்த ஆண்டே கவர்னர் ஜெனரலான வாரன் ஹேஸ்டிங்ஸ் கம்பெனியின் வருவாயைப் பெருக்கப் பல சீர்திருத்தங்களைச் செய்தார். கிளைவ் புகுத்திய இரட்டை ஆட்சி முறைக்கு முடிவு கட்டினார். வங்காளக் கருவூலத்தை மூர்ஷிதாபாத்திலிருந்து கல்கத்தாவுக்கு மாற்றினார். கம்பெனி வங்காள நவாப் மற்றும் முகலாயப் பேரரசுக்குக் கொடுத்து வந்த ஒப்பந்தத் தொகையை வெகுவாகக் குறைத்தார் அல்லது அடியோடு நிறுத்தினார். பேரரசுக்குக் கொடுக்கப்பட்டிருந்த மாவட்டங்களை அயோத்தி நவாபுக்கு விற்றார். இராணுவ ஆட்குறைப்பு செய்தார். வரிவசூல் கண்காணிப்பை இறுக்கி முடுக்கினார். ஐந்தாண்டுக் குத்தகைத் திட்டத்தைக் கொண்டு வந்தார். கங்கச் சாவடிகளை ஏற்படுத்தி வாணிபத்தை நெறிப்படுத்தினார். ஒவ்வொரு மாவட்டத்திலும் பொருளியல் வழக்குகளை விசாரிக்கப் பொருளியல் நீதிமன்றங்களை உருவாக்கினார். நிர்வாக, வருவாய்த்துறை, வாணிப, நீதித்துறை சீர்திருத்தங்கள் வாரன் ஹேஸ்டிங்கக்குப் புகழைத் தேடித்தந்தன. எனினும் இவரது 'வருவாய்க் கொள்கை' வங்காளத்தின் வளத்தைப் பெருக்கவில்லை! என்று கூறுகிறார் பேராசிரியர் ஆர்.சத்தியநாதய்யர்.

காரன்வாலிஸ் பிரபுவின் நிலவரித் திட்டம்

1786ல் கவர்னர் ஜெனரலாகப் பொறுப்பேற்ற காரன்வாலிஸ் பிரபு நீதி, காவல், மற்றும் நிர்வாகத் துறைகளில் பல மாற்றங்களைச் செய்தார். இவர் செய்த சீர்திருத்தங்களில் மிகச் சிறப்பாகக் கருதப்படுவது நிரந்தர நிலவரித் திட்டமே (1793) ஆகும். இத்திட்டம் கம்பெனிக்கு நிரந்தர நிலவரி வருவாயை உறுதி செய்தது; ஜமீன்தார்களும், எஜமார்களும் கம்பெனியின் விசுவாசிகளாகி, மக்களைக் கசக்கிப் பிழியும் கருவிகளாயினர்; இவர்கள் பொறுப்பின்றி ஆடம்பரமாக வாழ விவசாயிகள் வறுமையில் வாடினர். நிரந்தர நிலவரித் திட்டம் எதிர்பார்த்தபடி விவசாய உற்பத்தியை அதிகரிக்கவில்லை என்று கூறுகிறார் 'வங்காள நிதி வருவாய் வரலாறு' பற்றி எழுதிய எப்.டி. அஸ்கோலி (F.D.Ascoli). மேலும் நிதி நிர்வாகம் நிர்வாகச் சிக்கலை ஏற்படுத்தியதோடு மக்களின் பணச் சுமையையும் அதிகரித்தது. துவக்கத்தில் இச்சீர்திருத்தத்தை ஆதரித்த ஜமீன்தார்கள் போகப்போக நிலவரித் திட்டத்தை எதிர்த்தனர். இத்திட்டம் ஜமீன்தார்களின் வளத்தை உறுதி செய்தது, விவசாயிகளின் கோரிக்கைகளைத் தள்ளிப்போட்டது, ஆட்சியாளரின் வருவாயைப் பலியிட்டது என்று காரன்வாலிசின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய செட்டான் கார் (W.S. Seton-Karr) குறிப்பிட்டுள்ளார்.

வெல்லஸ்லியின் துணைப்படைத் திட்டம்

1798 முதல் 1805 வரை கவர்னர் ஜெனரலாக இருந்த வெல்லஸ்லி பிரபு 'இந்தியாவில் பிரிட்டிஷ் பேரரசு' என்று இருந்த நிலையை மாற்றி 'பிரிட்டிஷ் இந்தியப் பேரரசு' என்ற நிலைக்கு கொண்டு வந்தார். அம்முயற்சியின் அடிப்படையே அவர் புகுத்திய துணைப் படைத்திட்டம் (Subsidiary System) ஆகும். அத்திட்டத்தை 1. பிரிட்டிஷ் படையை இந்திய மன்னர்களின் உதவிக்கு அனுப்புதல்; 2.மன்னர்களின் உதவியோடு இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுதல்; 3.படைச்செலவு பெற்றுக்கொண்டு மன்னர்களுக்குப் படைப் பாதுகாப்பு அளித்தல்; 4.படைச்செலவைக் கொடுக்காத மன்னர்களின் நிலப்பகுதிகளை ஈடாகப் பெற்றுக் கொள்ளல் என்று படிப்படியாக விரிவுபடுத்தினார்.

துணைப்படைத் திட்டத்தின் நன்மைகளைவிடத் தீமைகளே அதிகம். இத்திட்டம் மத்திய இந்தியாவில் பெருங்குழப்பத்தை ஏற்படுத்தியது. ஆயிரக்கணக்கான இந்தியப்போர் வீரர்கள் வேலை இழந்தனர். அவர்கள் வயிற்றுப் பிழைப்புக்காக கொள்ளைத் தொழிலில் ஈடுபட்டனர். பாதுகாக்கப்பட்ட மன்னர்களுக்கிடையே பொறாமைப் பூசல்களும் ஆட்சி அலங்கோலங்களும் அதிகரித்தன. கிளைவின் இரட்டை ஆட்சி முறையைப் போன்றே துணைப் படைத் திட்டமும் பொறுப்பற்ற அதிகாரப் பிரயோகத்துக்கு மற்றொரு எடுத்துக்காட்டாகும். மன்னர்களின் பாதுகாப்புக்கு ஆங்கிலேய அரசாங்கம் பொறுப்பேற்றதால் மக்கள் நலப்பெருக்கத்துக்கு மன்னர்கள் பொறுப்பற்றவர்களாயினர். வெல்லஸ்லியின் ஆட்சிக் காலத்தில்தான் தென்னிந்தியக் கிளர்ச்சி (1801) வெடித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

Scanned by CamScanner

ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் பங்கு

1813ல் கவர்னர் ஜெனரலாகப் பொறுப்பேற்ற ஹேஸ்டிங்ஸ் பிரபு, தனது பத்தாண்டு கால (1813-23) ஆட்சியின்போது செய்த நீதி, நிலவரி, கல்வி, பொதுப்பணிச் சீர்திருத்தங்களைவிட பிரிட்டிஷ் இந்திய மேலாதிக்கத்தைப் பலப்படுத்துவதில் இவரது பங்கு பெரிது. நிலவரிச் சீர்திருத்தத்தைப் பொருத்தவரை சர் தாமஸ் மன்ரோ அறிமுகப்படுத்திய இரயத்துவாரி அல்லது நேர் குடிவார முறை (1820) குறிப்பிடத்தக்கது. ஹேஸ்டிங்ஸ் மேற்கொண்ட நேபாளப் போரின் (1814-16) விளைவாக சிம்லா, நைனிடால், முசோரி ஆகிய மலைவாசஸ்தலங்கள் ஆங்கிலேயர் வசம் வந்தன. பிண்டாரிப் போரின் (1817-18) பயனாக நாட்டில் சட்டம் ஒழுங்கு ஏற்பட்டது. மூன்றாம் மராட்டியப் போர் (1817-18) பேஷ்வாவின் ஆட்சிக்கு முடிவு கட்டியது; நிலவரிவாக்கம் செய்யப்பட்டது; துணைப்படைத்திட்டம் தீவிரப்படுத்தப்பட்டது.

1817லிருந்து 1823 வரை கோட்டா, உதய்பூர், பண்டி, கிஷன்கார், பிக்கானிர், ஜெய்பூர், ஜெய்சால்மர் ஆகிய ராஜபுத்திர அரசுகளுடன் உடன்படிக்கைகள் செய்துகொண்டு பிரிட்டிஷ் இந்தியப் பாதுகாப்பை மேலும் பலப்படுத்தினார். தனித்திருந்த ராஜபுத்திரர்களும் ஆங்கில ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டனர். ஹேஸ்டிங்ஸ் காலத்தில்தான் பிரிட்டிஷ் இந்தியப் பேரரசு இமயம் முதல் குமரி வரை சட்லெஜ்லிலிருந்து பிரம்மபுத்திரா வரை விரிவடைந்தது. அதனால்தான் இளைவ் போட்ட அடித்தளத்தின் மீது வாரன்ஹேஸ்டிங்ஸ், வெல்லஸ்லி போன்றோரால் எழுப்பப்பட்ட பிரிட்டிஷ் இந்திய மாளிகையை ஹேஸ்டிங்ஸ் கட்டி முடித்தார் என்று கூறப்படுகிறது.

டல்ஹௌசியின் பங்கு

கவர்னர் ஜெனரல் டல்ஹௌசியின் எட்டாண்டு கால (1848-1856) ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்ட தத்தெடுக்கும் உரிமை ரத்து அல்லது அவகாசியிலிக் கொள்கை (Doctrine of Lapse) மன்னர் மாநிலங்கள் பிரிட்டிஷ் ஆட்சியோடு இணைக்கப்படக் காரணமாக இருந்தது. இக்கொள்கையின்படி மன்னர் வாரிசு இல்லாமல் இறந்தால் 1. அவரது நாடு பிரிட்டிஷ் அரசின் ஒப்புதலின்றி வேறொருவருக்கு உடமையாகாது; 2. அந்த நாடு பிரிட்டிஷ் அரசைச் சாரும்; 3. வாரிசற்ற அரசர் பிரிட்டிஷ் அரசின் முன்அனுமதியோடு ஆண் வாரிசை சுவீகாரம் எடுத்துக் கொள்ளலாம்; 4. முன்அனுமதி கொடுப்பதற்கோ அல்லது மறுப்பதற்கோ அரசுக்கு அதிகாரம் உண்டு.

தத்தெடுக்கும் உரிமை ரத்துக் கொள்கையைச் சரியாகவும், தவறாகவும் நடைமுறைப்படுத்தி சதாரா (1848), நாகபுரி (1853), ஜான்சி (1853) ஆகிய பெரிய அரசுகள் பிரிட்டிஷ் ஆட்சியுடன் இணைக்கப்பட்டன. இவையன்றி ஜெய்ப்பூர், சம்பல்பூர், கத், உதய்பூர், சிக்கிம், பீரார், தஞ்சாவூர், அவுத் ஆகிய பகுதிகளும் இணைக்கப்பட்டன. அதேபோன்று இவரது முற்போக்கு சீர்திருத்த நடவடிக்கைகள் இந்தியப் பழமைவாதிகளின் எதிர்ப்பைத் தோற்றுவித்தது. இவர் பழைய இந்திய அமைப்பு முறையை அடியோடு மாற்றி புதிய பிரிட்டிஷ் முறையைப் புகுத்துகிறார் என்ற எண்ணம் மக்களிடையே பரவியது. சிப்பாய்களின் சீற்றம்பற்றி சர் சார்லஸ் நேப்பியர் (Sir Charles Napier) எச்சரித்ததை டல்ஹௌசி அலட்சியப்படுத்தினார். யாவற்றுக்கும் மேலாக இவரது இணைப்புக்கொள்கையே 1857 பெருங்கிளர்ச்சிக்குப் பெரிதும் காரணமாக இருந்தது.

2. தென்னிந்தியக் கிளர்ச்சி, 1800-1801

தென்னிந்தியக் கிளர்ச்சி, 1800-1801, இந்திய விடுதலைப் போராட்டப் பயணத்தின் தனித்தன்மை வாய்ந்த மாமுயற்சியின் துவக்கமாகும்.

- கே. ராஜய்யன்.

ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு

1600 டிசம்பர் 31ஆம் நாள் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி வர்த்தகத்திற்காக இந்தியாவினுள் நுழைந்தது. கூடாரத்துக்குள் நுழைந்த ஒட்டகம் போல படிப்படியாக வர்த்தகத்தோடு தன்னையும் வளர்த்துக் கொண்டது. பதினேழாம் நூற்றாண்டில் இந்திய மண்ணில் உறுதியாகக் காலூன்றியது அக்கம்பெனி. பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சென்னையில் தனது வர்த்தகக் கிடங்கை ஏற்படுத்தியது. அதைச்சுற்றி ஆங்கிலேயர் குடியேறினர். மூன்று கர்நாடகப் போர்கள் (1746-1763), நான்கு மைசூர்ப் போர்கள் (1767-1799) ஆகியவற்றின் விளைவாக ஆங்கிலேயர்கள் தென்னிந்தியாவில் தங்களது ஆதிக்கத்தை நிலைநாட்டினர்.

எனினும், கம்பெனியார் புதிதாகப் பெற்ற நிலப்பகுதிகளின் நிர்வாகத்தை நெறிப்படுத்தி, தங்களது கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டுவர முற்பட்டபோது பாளையக்காரர்களின் பகையையும் போராட்டங்களையும் சந்திக்க வேண்டியதாயிற்று. நெல்கட்டுஞ்செவல் பாளையத் தலைவரான புலித்தேவர்தான் முதன்முதலில் கம்பெனி ஆதிக்கத்துக்கெதிராக கூட்டணி கண்டு போர்க்கொடி உயர்த்தினார்; ஆங்கிலேயப் படைத்தலைவர் கர்னல் அலெக்ஸாண்டர் ஹெரானைப் புறங்கண்டார் (1755). எனினும், ஆங்கிலேயரின் ஆதரவோடு பெரும்படையுடன் வந்த கான்சாகிபிடம் தோல்வியுற்றார் புலித்தேவர் (1761). புலித்தேவரின் கிளர்ச்சி முளையிலேயே கிள்ளி எறியப்பட்டது.

புலித்தேவருக்குப் பின்னர் ஆங்கிலேய ஆதிக்கத்துக்கெதிராகக் கிளர்ச்சி செய்தவர் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையத் தலைவரான வீரபாண்டிய கட்டபொம்ம நாயக்கர் ஆவார். அவர் திருநெல்வேலிக் கூட்டணியைப் பலப்படுத்தி கம்பெனியோடு நீரத்துடன் போராடினார். ஆனால் அவர் மேஜர் பானர்மனிடம் தோற்க நேர்ந்தது (1796 செப்5). அவர் கயத்தாற்றில் தூக்கிலிடப்பட்டார் (அக்.17). கட்டபொம்மனது கிளர்ச்சியும் நசுக்கப்பட்டு விட்டது. கட்டபொம்மன் கொல்லப்பட்ட அடுத்த ஆண்டே பரவலான பெருங்கிளர்ச்சி ஏற்பட்டது. அதைப் பேராசிரியர் கு.ராஜய்யன் 'தென்னிந்தியக் கிளர்ச்சி' என்றும் 'முதல் சுதந்திரப்போர்' என்றும் வர்ணித்துள்ளார்.

Scanned by CamScanner

அரசியல் காரணங்கள்:

பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே துவக்கப்பட்டதே தென்னிந்தியக் கிளர்ச்சியாகும். முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு தென்னிந்தியா குழப்பத்துக்கும், கொந்தளிப்புக்கும் உள்ளாயிற்று. எனினும், அரசர்களும் பாளையக்காரர்களும் கிராமக் குடியாட்சி முறையும் அரசியல் கட்டுக்கோப்பும் குலையாது சமநிலையைப் பாதுகாத்தனர். அந்த அமைப்பு முறை ஆங்கிலேயரின் ஆக்கிரமிப்புக் கொள்கைக்கு இலக்கானபோது எதிர்ப்பு ஏற்பட்டது. ஆற்காடு நவாப் சந்தா சாகேப், தஞ்சாவூர் பிரதாப்சிங், மதுரை காள்சாகிப் ஆகியோர் கம்பெனி ஆதிக்கத்துக்கு அடிபணிந்தனர். மைசூர் மன்னர்களான ஹைதர் அலியும், திப்புசுல்தானும் அவ்வாதிக்கத்தை எதிர்த்து மடிந்தனர். கம்பெனியோடு உடன்படிக்கை செய்து கொண்ட மன்னர்கள் ஆங்கிலேய நிர்வாகத்தில் கருவிகளாக இருந்துகொண்டு மக்களைச் சுரண்டினர்; கொடுமைப்படுத்தினர். அரசர்கள் கம்பெனிக்கு அடங்கி மக்களை அடக்கியமையால் மக்களிடையே மனக்கசப்பு வளரலாயிற்று.

அரசர்களை அடக்கியது போன்று கம்பெனியால் பாளையக்காரர்களை அடிபணிய வைக்க முடியவில்லை. கர்நாடகத்திலும், மலபாரிலும், தமிழகத்திலும் கம்பெனி பல்வேறு உத்திகளைக் கையாண்டு அவர்களைப் பலவீனப்படுத்திற்று. எனினும் உறுதியான பாளையக்காரர்கள் ஒன்று சேர்ந்து கம்பெனி ஆட்சியை எதிர்க்கத் துணிந்தனர். கிராமங்களின் கேடயமாக இருந்த அவர்கள் தங்களது பாரம்பரிய உரிமைகளும் சலுகைகளும் பறிபோவதைக் கொஞ்சமும் விரும்பவில்லை. வழிவழியாக இருந்து வந்த கிராமப் பணிகளைக் கம்பெனி நிர்வாகம் மேற்கொண்டதால் கிராமக் குடியாட்சி முறை நிலைகுலைந்தது. கிராம மக்கள் பாளையங்களிலும் பணியாற்ற முடியவில்லை; கிராம நிர்வாகத்திலும் பங்கேற்க இயலவில்லை. பரம்பரைப் பழக்க வழக்கங்களைப் புனிதமாகக் கருதிய கிராம மக்கள் கம்பெனி கொண்டுவந்த மாற்றங்களால் ஏமாற்றமடைந்தனர். அரசியல் உரிமைப் பறிப்பையும், சுயாட்சி இழப்பையும் மக்கள் தலைவர்கள் எதிர்த்தனர். பிரான்சிலிருந்து மைசூருக்கு வந்த புரட்சியாளர்கள் தென்னிந்தியாவின் பல பகுதிகளுக்கும் சென்று, ஆங்கிலேயருக்கெதிராகப் பிரச்சாரம் செய்தார்கள். இவற்றின் கூட்டு விளைவாகத் தென்னிந்தியாவில் கிளர்ச்சி ஏற்படுவதற்கான அரசியல் சூழ்நிலை உருவாயிற்று.

பொருளாதாரக் காரணங்கள்:

அரசியல் அடக்குமுறையைப் போன்றே பொருளாதாரச் சுரண்டலும் தென்னிந்தியக் கிளர்ச்சிக்குக் காரணமாயிற்று. மக்கள் நலனைப் பேணுவதைவிடக் கம்பெனி தனது வருவாயைப் பெருக்குவதிலேயே குறியாக இருந்தது. வரிகளை வரம்பின்றி உயர்த்தியது. உதாரணமாக, திண்டுக்கல்லில் திப்புசுல்தான் வசூலித்ததற்கு மேலாக இருபத்தைந்து விழுக்காட்டுக்கு அதிகமாக வரி வசூலிக்கப்பட்டது. கன்னடப் பகுதி, சூன்டா, சேலம், கோயமுத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் தொண்ணூறு விழுக்காட்டுக்கு அதிகமாக வரி வசூல் செய்யப்பட்டது. தன்னிச்சைப்படி உயர்த்தப்பட்ட வரிகளால்

விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அதுமட்டுமல்ல, அவர்கள் அனுபவித்து வந்த பல சலுகைகள் பறிக்கப்பட்டன. விவசாய நிலங்களுக்கு விதிக்கப்பட்ட தீர்வை மிகவும் அதிகமாக இருந்தது. பல நேரங்களில் விளைச்சலைவிடத் தீர்வையே அதிகமாக இருந்தது. இவற்றை எதிர்த்தோர் நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டனர். பலர் வரியைக் கட்ட முடியாது, தங்களது நிலங்களை விற்றுவிட்டுக் கிராமங்களைவிட்டே வெளியேறினர்.

வரிகள் கடுமையாகவும் கொடுமையாகவும் வசூலிக்கப்பட்டன. இடைத்தரகர்களும் வருவாய்த்துறை ஊழியர்களும் மக்களைக் கசக்கிப் பிழிந்து வரி வசூலித்தனர். நிலத்தீர்வையை நிர்ணயிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும் விசாரணைகளும் மக்களிடையே அச்சத்தை அதிகரிக்கவே செய்தன. அரசர்கள் கம்பெனிக்குச் செலுத்த வேண்டிய தொகையையும் மக்களிடமிருந்தே வசூலித்தனர். அவ்வசூலுக்காக நியமிக்கப்பட்டவர்கள் கொடுத்த நிர்பந்தங்களும் மக்களைத் துன்புறுத்தின. அரசர்கள் ஆங்கிலேயரிடமிருந்து அதிக வட்டிக்குக் கடன்கள் வாங்கினர். தங்களுக்குச் சேர வேண்டிய நிலவரியை வசூலித்து கடனுக்குப் பதில் செலுத்தும் பொறுப்பைக் காரியக்காரர்களிடம் (Assignees) ஒப்படைத்தனர். அவர்கள் கம்பெனி ஊழியர்களுக்கு மேலாகத் தங்களைக் கருதிக் கொண்டு மக்களிடமிருந்து நிலுவைகளை ஈவிரக்கமின்றி வசூலித்தனர்.

அடிக்கடி கம்பெனி மேற்கொண்ட போர்களாலும் இராணுவ நடவடிக்கையாலும் வர்த்தகமும் தொழிலும் பெரிதும் பாதிக்கப்பட்டன. கம்பெனியின் கப்பல்களின் போட்டிக்கு முன், நாட்டுப் படகுகளால் ஈடுகொடுக்க முடியவில்லை. கம்பெனியின் வர்த்தகப் போட்டி, கம்பெனி ஊழியர்களின் சொந்த வியாபாரம், இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் ஆகியவை தென்னிந்தியாவின் கிராமக் குடிசைக் கைத்தொழில்களை நசித்துவிட்டன. அதனால் பல்லாயிரக்கணக்கான கைவினைஞர்கள் வேலை இழந்தனர். 1798ல் ஏற்பட்டக் கடுமையான பஞ்சத்தைப் பயன்படுத்திக் கொண்டு கம்பெனிக் காரியக்காரர்களும் நிர்வாகிகளும் உணவுப் பொருட்களைப் பதுக்கி வைத்துக்கொண்டு, அவைகளின் விலையை பன்மடங்கு உயர்த்தி விற்றுக் கொள்ளை இலாபம் பெற்றனர். இவற்றால் மனம் நொந்துபோன மக்கள் தங்களுடைய வெறுப்பை வெளிப்படுத்துவதற்கான தக்க தருணத்தை எதிர்பார்த்திருந்தனர்.

மருது பாண்டியன் கூறிய காரணம்

சிவகங்கை மருது பாண்டியன் தென்னிந்தியாவின் தாழ்ச்சிக்குரிய காரணத்தை அறிவுப்பூர்வமாக ஆய்ந்தறிந்து கூறினார். அவரின் ஆய்வின்படி அரசர்களின் அரசியல் சாதுர்யமற்ற கொள்கை, குழு கோஷ்டி மனப்பான்மை, ஆங்கிலேயரின் வஞ்சகத்தன்மை, மக்களின் ஒரு பகுதியினரின் அந்நிய அதிகாரத்துக்கு அடிபணியும் வழக்கமான போக்கு ஆகியவையே தென்னிந்தியரின் அரசியல் பலவீனத்துக்கான காரணங்களாகும். அரசர்கள் ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்து கொண்டு தன்மானக்குறைவான தாழ்ந்த நிலையை அடைந்ததை அவர் வன்மையாகக் கண்டித்தார். தென்னிந்தியர்களிடையே உள்ள ஒற்றுமையின்மையை ஆங்கிலேயர்களுக்கிடையே இருந்த ஒற்றுமையோடு ஒப்பிட்டுக் காட்டினார்.

Scanned by CamScanner

ஹைதராபாத்தில் நாஸிர் ஜங்கும், முஸபர் ஜங்கும், கர்நாடகத்தில் சந்தா சாகிப்பும், முகமது அலியும், தஞ்சாவூரில் பிரதாப் சிங்கும், சரபோஜியும், பரஸ்பர பொறாமையால் மோதிக் கொண்டதைக் கோடிட்டுக் காட்டினார் மருதுபாண்டியர். ஆங்கிலேயரின் ஆணைகளைச் சிரமேற்கொண்டு நிறைவேற்றி அவர்களின் ஆட்சியை உரமிட்டு வளர்த்த மக்களின் ஒரு பிரிவினரின் போக்குகண்டு அவர் கவலையுற்றார். தற்கொலைக்கொப்பான அந்நிலை நீடித்தால் இந்தியா முழுவதும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தின்கீழ் வந்துவிடும் என்று அவர் எச்சரித்தார். தமிழ்நாட்டுக்கு ஒரு வால்டேர், ஒரு ரூஸோ, ஒரு மான்டெஸ்க்யு இல்லாத குறையைத் தீர்த்து வைத்தவர் மருது பாண்டியர் என்றால் மிகையாகாது.

பிராந்தியக் கூட்டமைப்புகள் (Regional Leagues)

ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியின் விளைவாக தென்னிந்தியாவில் அரசியல் அடக்குமுறை, பொருளாதாரச் சுரண்டல், நிர்வாகக் கெடுபிடி போன்றவை அதிகரிக்கலாயிற்று. மக்கள் சொல்லொணா இன்னல்களுக்கு ஆட்பட்டனர். எதிர்ப்புணர்ச்சியே கிளர்ச்சிக்கு ஆணிவேர். ஆனால் வழிவமற்ற எதிர்ப்புணர்ச்சி வீண்முயற்சியாகும். விழலுக்கிறைத்த நீராகும். எனவே, மக்களின் எதிர்ப்புணர்ச்சிக்குப் பாதிக்கப்பட்ட பாளையக்காரர்களும் மக்கள் தலைவர்களும் உரிய வழிவம் கொடுத்தனர். அவ்வழிவம் முதலில் பிராந்தியக் கூட்டமைப்புகளாக உருவெடுத்தது. 1795 லிருந்து 1799 வரை இராமநாதபுரம், திருநெல்வேலி, திண்டுக்கல், மலபார்-கோயமுத்தூர் ஆகிய நான்கு பிராந்திய கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன.

இராமநாதபுரம் கூட்டமைப்பு

இக்கூட்டமைப்பின் கர்த்தா சிவகங்கை வெள்ளை மருதுபாண்டியன் ஆவார். இவரது இளவல் சின்னமருது. மருது சகோதரர்கள் சிவகங்கை மன்னரான முத்து வடுகநாதத் தேவரிடம் சாதாரண ஊழியர்களாகத் தங்களது பணியைத் துவங்கினர். தங்களது பயன் கருதாப் பணியாலும், நேர்மைத் திறத்தாலும் எஜமான பக்தி விசுவாசத்தாலும் கடுமையான உழைப்பாலும் உயர்ந்தனர்; அமைச்சர்களாயினர். அரசரின் மறைவுக்குப் பிறகு அரச குடும்பத்தைக் காத்த பெருமை இவர்களுக்குண்டு. சிவகங்கைக்கு அடுக்கடுக்காக வந்த சோதனைகளைச் சமாளித்தனர்.

ஆங்கிலேய ஆட்சியை அகற்றப் பிற பாளையக்காரர்களோடு கூட்டுசேர வேண்டிய இன்றியமையாமையை உணர்ந்தவர் மருதுபாண்டியன். மக்கள் ஒன்று சேர்ந்து அந்நிய ஆட்சிக்கெதிராகப் போரிட வேண்டுமென்றார் அவர். பக்கத்துப் பாளையங்களுக்கு உளவாளிகளை அனுப்பித் தன்முயற்சிக்கு ஆதரவு தேடினார் மருதுபாண்டியன். இராமநாதபுரத்தின் பிரமுகர்களான மேலப்பன், சிங்கம் செட்டி, முத்து சருப்ப தேவர் ஆகியோர் மருதுபாண்டியனின் முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்தனர். தஞ்சாவூர் ஞானமுத்துவும் சிவகிரி மாப்பிள்ளை வள்ளியனும் மதுரைக் கள்ளர்களும் மருது பாண்டியன் அமைத்த இராமநாதபுரம் கூட்டமைப்புக்கு ஆதரவளித்தனர். மருது பாண்டியனது தலைமையில் இக்கூட்டமைப்பு செயல்பட்டது.

திருநெல்வேலி கூட்டமைப்பு

மருதுபாண்டியனால் ஊக்குவிக்கப்பட்டு நாகலாபுரம் மன்னர் கோட்டை, போவாலி, கோலார்பட்டி, கொன்னல்குடி பாளையக்காரர்கள் சேர்ந்து உருவாக்கியதுதான் திருநெல்வேலிக் கூட்டமைப்பு. இக்கூட்டமைப்பில் சேர்ந்து அதற்கு புதுப்பொலிவையும் வலுவையும் கொடுத்தார் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரரான வீரபாண்டிய கட்டபொம்மன். மருதுபாண்டியனால் கவரப்பட்டு, அவரோடு நெருங்கிய தொடர்பு கொண்டு, அவரையே முன்மாதிரியாகக் கொண்டு செயல்பட்டார் கட்டபொம்மன். அவர் சாப்டூர், ஏழாயிரம் பண்ணை, காடல்குடி, குளத்தூர் பாளையக்காரர்களையும் கூட்டு சேர்த்துக்கொண்டு திருநெல்வேலி கூட்டமைப்பைப் பலப்படுத்தினார். செவத்தையா, வீரபாண்டிய நாயக்கர், வீரபத்திரபிள்ளை ஆகியோரை அனுப்பி மதுரைக் கள்ளர்களின் ஆதரவையும் பெற்றார் அந்தப் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரர். திருநெல்வேலி கூட்டமைப்புக்கு அவரே தலைமையேற்றார். ஆனால் தென்னிந்தியக் கிளர்ச்சியில் பங்கேற்கும் பேறு அவருக்குக் கிட்டவில்லை. கிளர்ச்சி துவங்குவதற்கு ஓராண்டுக்கு முன்னரே கட்டபொம்மன் ஆங்கிலேயரால் தூக்கிலிடப்பட்டார்.

திண்டுக்கல் கூட்டமைப்பு

திண்டுக்கல் கூட்டமைப்பை உருவாக்கியவர் கோபால நாயக்கர் ஆவார். விருப்பாட்சிப் பாளையக்காரரான கோபால நாயக்கர் சிறந்த ராஜதந்திரி; போர்க்களங்கள் பல கண்டவர்; நிறமையான அமைப்பாளர். அந்நிய அடக்குமுறை ஆதிக்கத்திடமிருந்து விடுபட எண்ணியோருக்கு அவரது தலைமை கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தது. திண்டுக்கல், மணப்பாறை கள்ளர்நாடு, கோயமுத்தூர், சேலம் ஆகிய இடங்களுக்குத் தனது தூதுவர்களை அனுப்பி ஆதரவு தேடினார் கோபால நாயக்கர். மணப்பாறை லட்சுமி நாயக்கர், டில்லி (Delhi) யாதுல் நாயக்கர் ஆகியோரோடு நெருங்கிய அரசியல் தொடர்பு கொண்டிருந்தார் அவர். யாதுல் நாயக்கர் மூலம் மங்களம் பாளையக்காரரின் ஆதரவைப் பெற்றார் கோபால நாயக்கர். பிற பாளையக்காரர்களும் கோபால நாயக்கரின் முயற்சிக்கு ஊக்கமளித்தனர். இராமநாதபுரம், திருநெல்வேலி, திண்டுக்கல் கூட்டமைப்புகள் கூடும் கேந்திரமாகக் கள்ளர்நாடு திகழ்ந்தது.

மலபார்-கோயமுத்தூர் கூட்டமைப்பு

இந்த அமைப்பு ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தவர் கேரளவர்மா ஆவார். மக்கள் செல்வாக்கு மிகப் பெற்றவர் இவர். பிற கூட்டமைப்புகள் உருவாகிக் கொண்டிருக்கையில் கம்பெனிப் படையோடு கடுமையாகப் போராடிக் கொண்டிருந்தவர் கேரளவர்மா. விவசாயிகளின் பக்கபலம் அவருக்கு எப்போதும் இருந்தது. கேரளவர்மா பிற பாளையக்காரர்களுக்கு அனுப்பிய ஓலைச் சுவடி கடிதங்கள் நல்ல பலனளித்தன; அவர்களின் ஆதரவு கிடைத்தது. வைநாடு, கோட்டயாட்டு, குரும்பரநாடு, பரப்பநாடு ஆகியவற்றின் தலைவர்களும் இருளி நாட்டு நம்பூதிரிகளும் சமோரின் குடும்பத்தினரும், மலபார் மாப்பிள்ளைகளும் கேரளவர்மாவை ஆதரித்தனர். ஆங்கிலேயர்களின் நோக்கும் போக்கும் பிடிக்காத கோயமுத்தூர் கவுண்டர்களும் மலபார் கிளர்ச்சிக்காரர்களோடு சேர்ந்த

Scanned by CamScanner

கொண்டனர். மலபார், திண்டுக்கல் கூட்டமைப்புகள் கூடும் மையமாக விளங்கியது கோயமுத்தூர்.

தென்னிந்தியக் கூட்டிணைப்பு (Peninsular Confederacy)

பிராந்தியக் கூட்டமைப்புகள் காலத்தின் கட்டாயத்தால் தன்னிச்சையாகத் தோன்றியவையாகும். இவ்வமைப்புகளின் இணைப்புப் பாலமாக விளங்கியவர் மருதுபாண்டியன். நான்கு கூட்டமைப்புகளுக்கும் பொதுவான குறிக்கோளாக இருந்தது. இவை தென்னிந்தியாவின் பரந்த நிலப்பகுதியில் செயல்பட்டன. அதைத் தங்களது செல்வாக்கின் கீழ் வைத்திருந்தன. திண்டுக்கல் மலபார் கூட்டமைப்புகள் மைசூர் திப்புகல்தானுடன் உடன்பாடு கொண்டிருந்தன. ஆனால் 1799ல் திப்புசுல்தான் வீழ்ச்சிக்குப் பின்னர் பிராந்தியக் கூட்டமைப்புகள் பலமிழந்தன. கேரளவர்மா கிளர்ச்சிப் பாதையினின்றும் விலகிக் கொண்டதால் மலபார்-கோயமுத்தூர் கூட்டமைப்பு வலுவிழந்தது. கட்டபொம்மன் கொல்லப்பட்டதால் திருநெல்வேலி கூட்டமைப்பு முன்னரேயே பலமிழந்திருந்தது.

அத்தகைய நெருக்கடியான நேரத்தில் மருது பாண்டியன் முனைப்புடன் முன்வந்து சீர்குலைந்து போய்க் கொண்டிருந்த கூட்டமைப்பு முறையைக் காப்பாற்றினார். காப்பாற்றியது மட்டுமல்ல, அதை இன்னும் விரிவுபடுத்தித் தென்னிந்தியக் கூட்டிணைப்பாக மாற்றினார். கன்னட- மராத்தியப் பகுதித் தலைவரான தூண்டாஜி வாக்கோடு (Doondaji Waug) கூட்டுச்சேர்ந்து அக்கூட்டிணைப்பை உருவாக்கினார் மருதுபாண்டியன். வேலூர் கோட்டையில் சிறைபட்டிருந்த திப்புசுல்தானின் மூத்த மகன் பட்டே ஹைதர் மைசூர் கிளர்ச்சிக்காரர்களுடன் இரகசியத்தொடர்பு கொண்டு அவர்களைத் தென்னிந்தியக் கூட்டிணைப்பில் சேருமாறு ஊக்கப்படுத்தினார். மலபார், கன்னட, பெல் நாட்டு மக்களும் இப்புதிய முயற்சிக்கு ஆதரவளித்தனர். கேரளவர்மா மீண்டும் மலபார் கிளர்ச்சிக்காரர்களின் தலைவரானார். மருது பாண்டியனும், தூண்டாஜி வாக்கும் தென்னிந்தியக் கூட்டிணைப்பின் முன்னணித் தலைவர்களாகத் திகழ்ந்தனர். கோபால நாயக்கர், கான்-இ-ஜஹான், கேரளவர்மா, கிருஷ்ணப்ப நாயக்கர் ஆகியோர் இரண்டாம் வரிசைத் தலைவர்களாக இருந்தனர். மக்களின் பக்க பலத்தோடு தென்னிந்தியக் கூட்டிணைப்பு ஆங்கிலேய ஆதிக்கத்துக்கெதிராகத் திட்டமிட்டு செயல்படத் துவங்கியது.

கிளர்ச்சியின் போக்கு

கிளர்ச்சித் திட்டம்

ஆங்கிலேயரது ஆட்சியை அகற்றி, நாட்டை அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுவிப்பதே தென்னிந்தியக் கூட்டிணைப்பின் குறிக்கோளாகும். இக்குறிக்கோளை நிறைவேற்றுவதற்கான திட்டத்தைத் தீட்டும்பொருட்டு கூட்டிணைப்புத் தலைவர்கள் விருப்பாட்சியில் கூடி சதியாலோசனை செய்தனர் (1800 ஏப்ரல்). விரிவான ஆலோசனைக்குப் பின்னர் அவர்கள் பின்வரும் மூன்று முக்கிய முடிவுகளை மேற்கொண்டனர்.

1. ஒரே சமயத்தில் பல பகுதிகளில் கிளர்ச்சியைத் துவக்குவது.
2. கிளர்ச்சிக்காரர்கள் ஒற்றுமையாக இருந்து போராடுவது.
3. ஆங்கிலேயப் படையோடு நேருக்கு நேராக மோதாமல், மறைந்திருந்து தாக்கும் கொரில்லா முறையைப் பின்பற்றல். மருது பாண்டியன் மதுரைப் பகுதியிலும், கோபால நாயக்கர் திண்டுக்கல் திருச்சி பகுதியிலும், கான்-இ-ஜஹான் கோயமுத்தூர்-சேலம் பகுதியிலும், கேரளவர்மா மலபார் பகுதியிலும், கிருஷ்ணப்ப நாயக்கர் மேற்கு மைசூர் பகுதியிலும், தூண்டாஜி வாக் கன்னட நாட்டின் வடக்குப் பகுதியிலும் கிளர்ச்சிக்குப் பொறுப்பேற்பது என்று முடிவாயிற்று. கோபால நாயக்கர் தலைமையில் கூடிய இக்கூட்டத்தில் 1800 ஜூன் மாதம் 3 ஆம் தேதி கோயம்புத்தூரைத் தாக்கிக் கைப்பற்றுவதென்றும், இங்கு லெப்டினெண்ட் கர்னல் கே.மக்காலிஸ்டர் தலைமையிலுள்ள குதிரைப்படையை அழித்து விடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது. தெளிவான திட்டம் தீட்டப்பட்டுவிட்டது. கிளர்ச்சிக்கான தேதியும் குறிப்பிடப்பட்டுவிட்டது.

கிளர்ச்சித் துவக்கம்

விருப்பாட்சி திட்டத்தைப்பற்றி ஏதும் அறியாத கம்பெனிப்படை கிருஷ்ணப்ப நாயக்கரின் கேந்திர மையமான பெல்லம் (Bellum) என்ற இடத்தைக் கைப்பற்ற முயன்றது (1800 மார்ச் 30). பொறுமை இழந்த தூண்டாஜி வாக் தனது படையினரை பெல்லத்துக்கு அனுப்பினார். அதோடு நிற்கவில்லை. அவரே கிளர்ச்சியைத் துவக்கிவிட்டார். அவரோடு அவரது சகாக்களும் கிளர்ச்சியிலீடுபட்டனர். கிளர்ச்சி திட்டமிட்டதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னரே துவக்கப்பட்டுவிட்டது. மே மாத துவக்கத்தில் கிளர்ச்சிக்காரர்கள் கோயமுத்தூரை நெருங்கினர். நரசிங்கராவின் தலைமையில் கோயமுத்தூர் வாசிகள் கிளர்ச்சிக்காரர்களுக்கு உற்சாக வரவேற்பளித்தனர்.

அதையறிந்த கோயமுத்தூர் தாசில்தார் இராணுவத்தை உஷார்படுத்தினார். கிளர்ச்சிக்காரர்கள் கோயமுத்தூரைத் தாக்குமுன்பே தாக்கப்பட்டு தோற்கடிக்கப்பட்டனர். கிளர்ச்சி துவங்குமுன்னரே முறியடிக்கப்பட்டுவிட்டது. கிளர்ச்சித் தலைவர்களில் பலர் கொல்லப்பட்டனர்; பலர் சிறையிலடைக்கப்பட்டனர்; எஞ்சியோர் தப்பிச் சென்றனர்.

தீரர்களின் வீரமரணம்

திட்டமிட்டதற்கு முன்னதாகவே கிளர்ச்சியில் இறங்கிய தூண்டாஜி வாக்கும், திம்மநாயக்கரும் மைசூர் பகுதிகளில் பல வெற்றிகளைப் பெற்றனர். ஆனால் ராமன் நாயரால் காட்டிக் கொடுக்கப்பட்ட திம்மநாயக்கர் பிடிபட்டுக் கொல்லப்பட்டார். கொனகல் என்ற இடத்தில் கர்னல் வெல்லஸ்லியிடம் தோல்வியுற்று வீரமரணமடைந்தார். தூண்டாஜி வாக் (செப். 10) மலபாரில் கேரளவர்மா, கிராமவாசிகள், மாப்பிள்ளைகள் ஆகியோரது துணைகொண்டு ஆங்கிலேயரை ஆட்டிப் படைத்தார். எனினும் அவரது நெருங்கிய நண்பர்களான ஏமன் நாயர், சட்டு நாயர் ஆகியோரால் காட்டிக் கொடுக்கப்பட்டதால் கேரள வர்மாவின் முயற்சி தோல்வியுற்றது. பல கிளர்ச்சிக்காரர்கள் பலியாயினர். தப்பிச் சென்ற கேரள வர்மா கிளர்ச்சிக்காரராகவே இருந்து 1805 நவம்பர் 30 ஆம் நாள் கொல்லப்பட்டார்.

Scanned by CamScanner

பாஞ்சாலங்குறிச்சிப் போர்கள்

200 கிளர்ச்சிக்காரர்கள் திருச்செந்தூர் செல்லும் பக்தர்கள் போன்று வேடமிட்டுச் சென்று பாளையங்கோட்டையில் சிறைப்பட்டிருந்த செவத்தையா, ஊமைத்துரை உள்ளிட்ட பலரை விடுவித்தனர். அவர்கள் மலைநாடு மலை வழியாகப் பாஞ்சாலங்குறிச்சியை அடைந்தனர். பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை புதிதாகக் கட்டப்பட்டது. மருது பாண்டியன் அனுப்பிய 30,000 கிளர்ச்சிக்காரர்கள் அவர்களுடன் சேர்ந்து கொண்டனர். மறவர்களும், பரவர்களும், நாடார்களும், தோட்டியான்களும் அவர்களுக்குக் கைகொடுத்தனர். ஊமைத்துரையின் தலைமையில் கிளர்ச்சிக்காரர்கள் செயல்பட்டனர். பாஞ்சாலங்குறிச்சிக்கும் ஸ்ரீவைகுண்டம் ஆழ்வார்திருநகரிக்கும் இடைப்பட்ட பகுதிகளை அவர்கள் ஆங்கிலேயரிடமிருந்து கைப்பற்றினர். வலிமைமிக்க கோமேரிக் கோட்டை கிளர்ச்சிக்காரர்கள் கைவசமாயிற்று. மேலப்பன் பல இடங்களை மீட்டார். சிவகங்கையிலிருந்து வந்த கிளர்ச்சிக்காரர்கள் நெட்டூரில் கம்பெனிப் படையைச் சிதறடித்தனர். எனினும் காலின் மெக்காலேயும், கர்னல் அக்னுவும் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை முற்றுகையிட்டனர். இரண்டாவது பாஞ்சாலங்குறிச்சிப் போரில் அக்கோட்டை வீழ்ந்தது. 1050 கிளர்ச்சிக்காரர்கள் உயிரிழந்தனர். பலர் பிடிபட்டுக் கொல்லப்பட்டனர் (1801 மே 24). எஞ்சிய கிளர்ச்சிக்காரர்கள் சிவகங்கைக்கும், இராமநாதபுரத்துக்கும் தப்பிச் சென்றனர். காயமுற்ற ஊமைத்துரை, இராமத்துக் கிழவியொருத்தியால் காப்பாற்றப்பட்டு மருதுபாண்டியனின் ஆதரவுடனும் அரவணைப்புடனும் சிறுவயலில் தங்கினார்.

காளையார்கோவில் கிளர்ச்சி

பாஞ்சாலங்குறிச்சியின் வீழ்ச்சிக்குப் பின்னர் சிவகங்கை காளையார்கோவில் காடு கிளர்ச்சி மையமாயிற்று. திருப்பத்தூர், நத்தம், திரும்வேலூர், மேலூர், வெரப்பூர் ஆகிய இடங்களில் கம்பெனிப் படை கடுந்தாக்குதலுக்கு இலக்காயிற்று. பொம்ம நாயக்கர் வெரப்பூரிலிருந்து கம்பெனிப் படையினரை விரட்டினார். ஊமைத்துரை பழைய நாட்டை விடுவித்தார். கள்ளர்கள் மதுரையின் மேற்குப் பகுதியை விடுவித்தனர். காளையார்கோவில் கிளர்ச்சிக்காரர்கள் வசமாயிற்று.

தஞ்சையில் கிளர்ச்சி

கிளர்ச்சி இராமநாதபுரத்திலிருந்து தஞ்சாவூருக்குப் பரவியது. செவத்த தம்பியின் தலைமையில் தஞ்சை மக்கள் கிளர்ந்தெழுந்தனர். புதுக்கோட்டை சுபா விடுவிக்கப்பட்டது. அறந்தாங்கியிலும், அரியக்குடியிலும் பாசறைகள் அமைக்கப்பட்டன. மாங்குடி கைப்பற்றப்பட்டது. கிளர்ச்சிக்காரர்கள் நாகூர் கடற்கரை வழியாகச் சென்று சீர்காழி, உடையார்பாளையம், அரியலூர் ஆகிய இடங்களில் நிலைகொண்டனர். அப்பகுதிகளிலிருந்து வருவாய்த்துறை ஊழியர்கள் விரட்டப்பட்டனர். கும்பகோணம் ஆட்சித் தலைவர் ஹாரிஸ் உயிருக்குப் பயந்து தப்பிச் சென்றார். கூட்டிணைப்புப் படையினர் கொள்ளிடத்தைக் கடந்து அதன் வடகரையைக் கைப்பற்றினர்.

திருச்சிப் பிரகடனம்

தென்னிந்தியக் கூட்டிணைப்புப் படையினர் வெற்றிவாகை சூடிக் கொண்டிருந்த சமயத்தில்தான் மருதுபாண்டியன் தனது வரலாற்று முக்கியத்துவமிக்க திருச்சிப் பிரகடனத்தை (Trichy proclamation) வெளியிட்டார். அப்பிரகடனம் திருச்சிக் கோட்டை நுழைவாய்க் கவற்றிலும், ஸ்ரீரங்கம் பெரியகோவில் கவற்றிலும் ஒட்டப்பட்டிருந்தது. சாதி, சமய, இன வேறுபாடின்றி இந்தியாவிலுள்ள அனைத்து மக்களுக்கும், அறைகூவல் விடுத்தது அந்தப் பிரகடனம். அது மக்களுக்குத் தன்னம்பிக்கையை அளித்தது; அவர்களின் ஆதரவைக் கோரியது; தேசிய உணர்வைப் பிரதிபலித்தது; அகில இந்தியக் கண்ணோட்டத்தில் அமைந்திருந்தது. அதில் எண்ணங்களும், விபரங்களும் இழையோடியிருந்தன. மண்ணின் மைந்தர்களிடையே காழ்ப்புணர்ச்சியும், பரஸ்பரப் பொறாமையும், விரோத மனப்பான்மையும் நீடித்தால் இந்தியா முழுவதும் ஆங்கிலேயரது ஆட்சிக்கு எளிதில் இரையாகி விடும் என்று அந்தப் பிரகடனம் எச்சரித்தது. கம்பெனியுடன் கூட்டு சேர்ந்தமைக்காக முகமது அலியையும் கர்நாடக நவாபையும் அது கண்டித்தது; பொதுமக்களின் அலட்சிய மனப்பான்மையையும் கண்டித்தது; ஆங்கிலேயரின் வஞ்சகத்தையும் ஆணவத்தையும் சாடியது; திருச்சிப் பிரகடனம் அன்றைய யதார்த்த நிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டிற்று. மருது பாண்டியனின் அரசியல் நீர்க்கதரிசனத்தின் சின்னமே திருச்சிப் பிரகடனமாகும்.

கிளர்ச்சியின் வீழ்ச்சி

கிளர்ச்சியை முறியடிக்க லெப்டினென்ட் கர்னல் அக்னு ஒரு மும்முனைத் தாக்குதல் திட்டத்தை வகுத்தார். இதன்படி, தென்கிழக்கே திருநெல்வேலியிலிருந்தும், வடமேற்கே திண்டுக்கலிலிருந்தும் வடகிழக்கே தஞ்சாவூரிலிருந்தும் கிளர்ச்சிக் கேந்திரங்களைத் தாக்கத் திட்டமிடப்பட்டது. 1801 மே 28 அன்று அக்னு நாகலாபுரம் சென்று பின்னர் பரமக்குடியைக் கைப்பற்றினார் (ஜூன் 11). அதன்பின் திருப்பத்தூர் அவர் வசமாயிற்று (ஜூலை 24). இதற்கிடையே தஞ்சாவூரில் அறந்தாங்கி, அடியார்குடி ஆகிய இடங்களில் நடந்த போர்களில் கிளர்ச்சிக்காரர்கள் தோற்கடிக்கப்பட்டனர். அக்னுவோடு கர்னல் இன்ஸ்லீம் சேர்ந்து கொண்டார். அவர்களது கூட்டுப்படை முக்கூர் வழியாகச் சென்று மருதுபாண்டியனின் கிளர்ச்சி மையமான சிறுவயலை அடைந்தனர் (ஜூலை 27). கிளர்ச்சிக்காரர்கள் காளையார்கோவில் காட்டுக்குள் சென்று விட்டதால் சிறுவயல் எளிதில் வீழ்ந்தது. தொண்டி குடாக்கடலில் கிளர்ச்சிக்காரர்களின் கடற்படை அழிக்கப்பட்டது.

புதுக்கோட்டை, எட்டையாபுரத்திலிருந்து வந்த படைகளோடு கம்பெனிப் படையும் சேர்ந்து காளையார்கோவிலை வளைத்துக் கொண்டனர் (செப்.30). கோவில் கடுந்தாக்குதலுக்கு இலக்காயிற்று. கிளர்ச்சிக்காரர்களில் பலர் உயிரிழந்தனர். மருதுபாண்டியனும் பிறரும் பல திக்குகளிலும் சிதறிச் சென்றனர். காளையார்கோவில் வீழ்ச்சியால் கிளர்ச்சியின் முதுகெலும்பு முறிந்தது எனலாம். சிதறிச் சென்ற கிளர்ச்சிக்காரர்கள் தளவாய்ப்பிள்ளையின் தலைமையில் ஒன்று சேர்ந்தனர். கள்ளர்நாடு, மறவர்கள் ராமத்தேவரின் தலைமையில் அவர்களோடு

Scanned by CamScanner

சேர்ந்து கொண்டனர். ஆனால் அவர்கள் அனைவரும் ஆட்சித் தலைவர் ஜூலியட்டால் தோற்கடிக்கப்பட்டனர். மீண்டும் மீண்டும் இன்னொரு தோற்கடிக்கப்பட்டார் (அக்.14). விருப்பாட்சி வீழ்ந்தது (அக் 16). மேஜர் டேலிடன் பிரான்மலையைக் கைப்பற்றினார் (அக்.17). மலை குலைந்தாலும் நிலைகுலையாத மீண்டும் மீண்டும் இளைஞர்களுக்குத் தலைமை தாங்கி திண்டுக்கல் பள்ளத்தாக்கை அடைந்தார். வத்தலக்குண்டில் நடந்த உக்கிரமான போரில் மீண்டும் அவரோடு அறுபத்தைந்து இளைஞர்களும் வீழ்ப்புண்பட்டு, வீர மரணமடைந்தனர். தப்பிய இளைஞர் தலைவர்களும் பிறரும் கம்பெனியால் கொடூரமாகத் தண்டிக்கப்பட்டனர்.

வீழ்ச்சிக்கான காரணங்கள்:

தென்னிந்தியக் கிளர்ச்சியின் வீழ்ச்சிக்குப் பல காரணங்கள் இருந்தன.

1. கிளர்ச்சித் திட்டம் செவ்வனே தீட்டப்பட்டாலும் அது திட்டமிட்டபடி செயல்படுத்தப் படவில்லை. தூண்டாஜிவாக் இரண்டு மாதங்களுக்கு முன்னரே கிளர்ச்சியைத் துவக்கிவிட்டார்;

2. கிளர்ச்சி பல இடங்களில் ஒரே நேரத்தில் துவக்கப்படவில்லை. பல பகுதிகள் கிளர்ச்சியில் தீவிரமாக ஈடுபடவில்லை;

3. பல சமயங்களில் 'கொரில்லா போர்' முறையைப் பின்பற்றாமல் நேரடி மோதலில் ஈடுபட்டனர்;

4. தூண்டாஜி வாக்கின் அகால மரணத்தால் பல மராத்தியத் தலைவர்களின் ஆதரவைக் கிளர்ச்சிக்காரர்கள் பெற முடியாது போயிற்று;

5. புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாங்கூர், மைசூர் மன்னர்கள், ஹைதராபாத் நிஜாம், பூனாவின் பேஷ்வா ஆகியோர் கம்பெனியின் ஆதரவாளர்களாக இருந்தனர்;

6. ஏமன்நாயர், சட்டுநாயர், ராமன் நாயர் போன்ற கருங்காலிகள் கிளர்ச்சித் தலைவர்களைக் காட்டிக் கொடுத்து விட்டனர்;

7. கிளர்ச்சித் தலைவர்களிடம் போதிய போர்த் தளவாடங்கள் இல்லை. அவர்களது போர் உத்திகளும் சிறப்பாயில்லை;

8. போராட்டத் தலைவர்களிடையே ஒற்றுமை இருந்தாலும், கிளர்ச்சிக்காரர்களிடையே ஒற்றுமை இல்லை;

9. பொதுமக்களின் ஆதரவு பூரணமாகக் கிடைக்கவில்லை;

10. யாவற்றுக்கும் மேலாக கம்பனியின் வலிமைமிக்க இராணுவம், நன்கு பயிற்சி பெற்ற திறமை மிக்கத் தளபதிகள், சிறப்பான போர் உத்திகள், ஆதார வசதிகள், கட்டுப்பாடான வீரர்கள், வலிமையான கடற்படை, தென்னந்திய அரசர்களின் ஆதரவு ஆகியவை கிளர்ச்சியை வீழ்ச்சியடையச் செய்ய உதவின.

வரலாற்றுச் சிறப்பு

தென்னிந்தியக் கிளர்ச்சி ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே மேற்கொள்ளப்பட்ட போராட்டம் ஆகும். அது அந்திய ஆட்சியை அகற்றுவது என்ற இடமான, தீர்க்கமான, தீவிரமான, உறுதிமிக்க எதிர்ப்பு முயற்சி. பின்வரும் போராட்டங்களுக்கு முன்மாதிரியாக அமைந்த நிகழ்ச்சி அது. அக்கிளர்ச்சியில் பிராந்தியத் தலைவர்களோடு

பொதுமக்களும் பங்குகொண்டனர். இராமநாதபுரம் மறவர்கள், மலபார் குறிச்சியர்கள், இந்துக்கள், முஸ்லீம்கள், தமிழர்கள், தெலுங்கர்கள், மலையாளிகள், கன்னடியர்கள், மராத்தியர்கள் ஆகியோர் இப்போராட்டத்தில் பங்கேற்றனர். கிளர்ச்சிக்காரர்கள் பெரிதும் காடுகளில் இருந்துகொண்டு, 'கொரில்லா' போரிட்டனர். பிராந்தியக் கூட்டமைப்புகளும் தென்னிந்திய கூட்டிணைப்பும் இக்கிளர்ச்சியின் சிறப்புக் கூறுகள் ஆகும். தென்னிந்தியக் கிளர்ச்சியில் பிவகங்கை மருதுசகோதரர்கள், பாஞ்சாலங்குறிச்சி மீனைத்துரை, திண்டுக்கல் கோபால்நாயக்கர், கொங்கு நாட்டு தான்டி ஜிஜூமான், மலபார் கேரளவர்மா, கர்நாடக தூண்டாஜிவாக், மைசூர் கிருஷ்ணப்ப நாயக்கர் ஆகியோர் முழுமூச்சுடன் ஈடுபட்டனர். கிளர்ச்சித் தலைவர்கள் ஆதரவற்ற ஆங்கிலேயக் குடும்பத்தினருக்கு கருணை காட்டினர். வீழ்ந்தோரிடம் மனிதாபிமானத்துடன் நடந்துகொண்டனர். கிளர்ச்சிக்குப்பின் கம்பெனி பல சீர்திருத்தங்களை மேற்கொண்டது. தென்னிந்தியாவில் கூடுதல் ஆட்சிக்குப் பதில் கம்பெனி ஆட்சி நிலைநாட்டப்பட்டது. புதிதாக சென்னை ராஜதானி உருவாக்கப்பட்டது. அது கம்பெனியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது.

மதிப்பீடு

தென்னிந்தியக் கிளர்ச்சியை எடைபோடுவது எளிதல்ல. ஒருபக்கம் இக்கிளர்ச்சி 'முதல் விடுதலைப்போர்' என்று வர்ணிக்கப்படுகிறது. மறுபக்கம் இதைப் பாளையக்காரர்களின் 'தன்னல தற்காப்புப் போர்' என்று விளக்கப்படுகிறது. ஓரளவு சுதந்திரமாகச் செயல்பட்டு வந்த பாளையக்காரர்கள் மக்கள் உரிமைகளை மதித்து, கிராமக் குடியாட்சிக்கு சிறப்பளித்து, நாட்டு நலனுக்காக உழைத்தவர்கள் என்று கூற இயலாது. அவர்களும் மக்களைச் சுரண்டி கொடுமைப்படுத்தியே வந்தனர். அவர்களுடைய நிலமானிய உரிமைகளும், செல்வாக்கும், சலுகைகளும் பறிபோய்விடும் என்ற நிலை ஏற்பட்டபோது அவர்கள் தேசிய உணர்வோடு அகில இந்தியக் கண்ணோட்டத்துடன் போராடவில்லை. மருதுபாண்டியனின் திருச்சிப் பிரகடனம் இந்திய உணர்வை பிரதிபலித்தாலும், அது டில்லியில் எதிரொலிக்கவில்லை. எனவே, இக்கிளர்ச்சியை 'முதல் விடுதலைப் போராட்டம்' என்றோ அல்லது 'இந்திய விடுதலைப் போராட்டத்தின் துவக்கம்' என்றோ கூற இயலாது. அதேபோன்று, இதை வெறும் பாளையக்காரர்களின் தற்காப்புப் போர் என்றும் ஒதுக்கிவிட முடியாது. குறிக்கோள், திட்டம், கூட்டிணைப்பு, போராட்டப் பகுதிகள் அந்திய ஆட்சியை அகற்றுவதில் காட்டிய தீவிரம் ஆகியவற்றைப் பார்க்கும்போது தென்னிந்தியக் கிளர்ச்சி ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முதல், பெரிய, பரவலான, வலிமைமிக்க வன்முறைப் போராட்டம் எனக் கூறலாம்.

Scanned by CamScanner

3. வேலூர்க் கிளர்ச்சி, 1806

1806 வேலூர்க் கிளர்ச்சி 1857
பெருங்கிளர்ச்சியின் ஒத்திகையாகும்
- வி.டி. சவார்க்கர்.

சாதகமான சூழ்நிலை

தென்னிந்தியக் கிளர்ச்சி அடக்கி ஒடுக்கப்பட்ட ஆறாண்டுக் காலத்தில் வேலூரில் மற்றொரு கிளர்ச்சி வெடித்தது. முந்தியக் கிளர்ச்சியில் கலந்துகொண்டு தப்பிவந்த பல கிளர்ச்சிக்காரர்களுக்கு வேலூர் பிறந்த கொத்தளமாகப் பயன்பட்டது. பாளையக்காரர்களிடம் பணியாற்றிய பல வீரர்கள் கம்பெனிப் படையில் சேர்ந்திருந்தனர். வேலூர்க் கோட்டையில் சிறைப்பட்டிருந்த திப்பு சுல்தானின் புதல்வர்கள், குறிப்பாக அவரது மூத்தமகன் பட்டே ஹைதர் ஆங்கிலேயருக்கெதிராகக் கிளர்ச்சி செய்வதற்கான தக்க தருணத்தை எதிர்பார்த்திருந்தார். கம்பெனியின் ஆக்கிரமிப்புக் கொள்கையால் பாதிக்கப்பட்ட ஹைதராபாத்தும், மைசூரும் கிளர்ச்சியை ஆதரிக்க விரும்பின. இச்சாதகமான சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு கிளர்ச்சி செய்தனர்.

கிளர்ச்சிக்கான காரணங்கள்

வேலூர் கிளர்ச்சிக்கான உண்மைக் காரணங்களைப்பற்றி ஒருமித்த கருத்தில்லை. ஒன்றுக்கொன்று மாறுபட்ட முரண்பட்ட காரணங்கள் கூறப்பட்டுள்ளன. எனினும் வேலூர்க் கிளர்ச்சி தோன்றியதற்கான கீழ்க்கண்ட விளக்கங்களைக் கூறலாம்.

1. ஆங்கிலேய ஆட்சியை அகற்றுவதே வேலூர்க் கிளர்ச்சியின் முக்கிய நோக்கமாகும். தென்னிந்தியக் கிளர்ச்சி முறியடிக்கப்பட்ட பின் எஞ்சித் தப்பிய கிளர்ச்சிக்காரர்களில் பலர் கம்பெனி இராணுவத்தில் சேர்ந்தனர். பலர் வேலூரைச் சுற்றிக் குடியேறினர். அவர்கள் அவ்வப்போது சந்தித்து, இரகசியமாகக் கருத்துப் பரிமாற்றம் செய்துகொண்டு, மீண்டும் ஒரு கிளர்ச்சி செய்து ஆங்கிலேய ஆட்சியை அகற்ற முடிவு செய்தனர். இக்கருத்தை பேராசிரியர் கு.ராஜய்யன் வலியுறுத்துகிறார்.

2. மைசூர் முடியாட்சியை மீட்க வேண்டும் என்று திப்பு சுல்தானின் வாரிசுகள் சதித் திட்டம் தீட்டினர். திப்பு இறந்தபின் அவரது பன்னிரண்டு பிள்ளைகளையும், ஆறு பெண்களையும் வேலூர் கோட்டையில் சிறை வைத்திருந்தனர். அவர்களில் குறிப்பாக திப்புவின் மூத்த மைந்தன் பட்டே ஹைதர் பிறரது துணையுடன் கிளர்ச்சி செய்யத் திட்டமிட்டார். அவரது முயற்சியால் கிட்டத்தட்ட 3000 கன்னடக் கிளர்ச்சிக்காரர்கள் வேலூரைச் சுற்றி குடியேறினர். கம்பெனி படைத்தளபதி ஜே.எப்.கிரடோக் மைசூரில் மீண்டும் முஸ்லீம் முடியாட்சியை ஏற்படுத்துவதே வேலூர்க் கிளர்ச்சியின் நோக்கம் என்று குறிப்பிட்டுள்ளார்.

3. ஆங்கிலேயரது ஆக்கிரமிப்புக் கொள்கையால் தன்னுடைய சுதந்திரத்தை இழந்த ஹைதராபாத் நிஜாம் மீண்டும் தனது ஆட்சியை நிலைநாட்ட நாட்டம் கொண்டிருந்தார். ஹைதராபாத், சிக்காகோல் மக்களும் மனவருத்தம் முற்றிருந்தனர். அவர்கள் கிளர்ச்சி செய்யத் துடித்துக் கொண்டிருந்தார்கள். வேலூரிலிருந்த கிளர்ச்சிக்காரர்கள் ஹைதராபாத் கிளர்ச்சிக்காரர்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர். அச்சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்ட ஹைதராபாத் நிஜாம் தனது ஆட்சியை மீட்க முயன்றார்.

4. கம்பெனிப் படையில் சேர்ந்த சிப்பாய்களுக்கு இராணுவக் கட்டுப்பாடு, போர்க்கருவிகள், பயிற்சிமுறை, போர் முறைகள், பழக்க வழக்கங்கள் ஆகிய அனைத்தும் புதுமையாயிருந்தன. அவற்றுக்கேற்பத் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டியிருந்தது. அது மட்டுமல்ல, சிப்பாய்கள் ஆங்கிலேய வீரர்களுக்கு சமமாக நடத்தப்படவில்லை. அது சிப்பாய்களிடையே இனவேற்றுமையை வளர்த்தது. அதன் காரணமாக அவர்கள் அந்நியரை அகற்ற வேண்டுமென்று விரும்பினர்.

5. 1806ல் சென்னை இராணுவப் பிரிவில் சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. சென்னை இராணுவத் தளபதியான சர் ஜான் கிரடோக், சென்னை கவர்னராக இருந்த வில்லியம் பெண்டிங் பிரபுவின் சம்மதத்தோடு சில மாற்றங்களைச் செய்தார். அதன்படி சிப்பாய்கள் ஐரோப்பிய படைவீரர்கள் அணிவது போன்ற தலைப்பாகையை அணிந்து கொள்ள வேண்டும், பணியில் இருக்கையில் சிப்பாய்கள் காதணிகளை அணிவதோ, நெற்றியில் திருநீறு அல்லது நாமம் போட்டுக் கொள்வதோ கூடாது; முகத்தை நன்கு மழித்துக் கொள்ள வேண்டும்; மீசையை நன்றாக நறுக்கப்பட்டிருக்க வேண்டும்; சிப்பாய்கள் சிலுவைச் சின்னம் கொண்ட பட்டையை அணிய வேண்டும். இச்சீர்திருத்தங்கள் சிப்பாய்களிடையே ஆங்கிலேயர் மீது வெறுப்புணர்ச்சியை ஏற்படுத்தின.

6. ஆங்கிலேயர்கள் தங்களை கிறித்துவ மதத்துக்கு மாற்ற முயற்சிக்கின்றனர் என்று சிப்பாய்கள் சந்தேகப்பட்டனர். அந்த நோக்கத்தோடு தான் இராணுவச் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன என்று அவர்கள் கருதினர். குறிப்பாக 'அக்னு குல்லா'வில் இருந்த முடிச்சு பசு, பன்றித் தோலால் ஆனது என்ற சந்தேகம் இந்து-முஸ்லீம் சிப்பாய்களிடையே கிளர்மூட்டியது. அக்குல்லாய்கள் கிறித்துவ மதத்துக்கு மாறியவர்கள் அணிந்ததைப் போன்றிருந்தன. சிலுவைச் சின்னமிட்ட அடையாளப் பட்டையை அணிய வேண்டுமென்ற உத்தரவு சிப்பாய்களிடையே இருந்த மதமாற்ற அச்சத்தை உறுதிப்படுத்துவதாக இருந்தது.

கிளர்ச்சித் திட்டம்

மேற்கண்ட காரணங்களால் கிளர்ச்சிக்காரர்களும் திப்புசுல்தான் மைந்தர்களும் சிப்பாய்களும் கிளர்ச்சிக்காகத் திட்டமிட்டனர். வேலூர்க் கிளர்ச்சிக்காரர்கள் ஆற்காடு, மைசூர், ஹைதராபாத் கலகக்காரர்களோடு தொடர்பு கொண்டனர். பிலிகொண்டா மக்களும், வாலாஜாபாத்தில் இருந்த சிப்பாய்களும் வேலூர் கிளர்ச்சிக்காரர்களுக்கு உதவ முன் வந்தனர். சித்தூர் சிப்பாய்களும் கிளர்ச்சியை ஆதரித்தனர். ஹைதராபாத், சிக்காகோல் சிப்பாய்கள் அப்பகுதி மக்களோடு இரகசியத் தொடர்பு கொண்டனர். ஹைதராபாத் கிளர்ச்சியை அடுத்து

Scanned by CamScanner

திக்காகோவில் கிளர்ச்சி செய்ய முடிவு செய்தனர். அச்சகித்திட்டத்தை நிறைவேற்றும் வரையில் இருந்து விட்டார். மனக்கசப்படைந்திருந்த மைசூர் மக்களும் கிளர்ச்சியில் கலந்து கொள்ளத் தயாராயிருந்தனர். 1806 ஜூலை 13ஆம் தேதி அதிகாலையில் வேலூர் கோட்டையை கைப்பற்றுவதென்றும் அதைத் தொடர்ந்து மைசூரிலும், ஹைதராபாத்திலும் கிளர்ச்சி துவக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கிளர்ச்சியின் போக்கு

புதிய குல்லாய்கள் புகுத்தப்பட்ட போதே கிளர்ச்சிக்கான அறிகுறிகள் காணப்பட்டன. துவக்கத்தில் சிப்பாய்கள் எதிர்ப்பை வெளிக்காட்டாது அணிந்து கொண்டனர். கோட்டைக்கு வெளியே கூடிய மக்கள் குல்லாயணிந்த சிப்பாய்களைக் கேலி செய்தனர். அவர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். எனினும் கூட்டத்தினர் செய்த கேலி சிப்பாய்களிடையே அடங்கிக் கிடந்த தன்மான உணர்வைத் தூண்டிவிட்டது. பல சிப்பாய்கள் கோபத்துடன் குல்லாய்களைக் கழற்றி வீசி எறிந்தனர். ஆனால் அந்த சிப்பாய்கள் தண்டிக்கப்பட்டு, ஒழுங்கு நிலைநாட்டப்பட்டது.

திட்டப்படி கிளர்ச்சி 1806 ஜூலை 13ஆம் தேதி துவக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ஐந்து நாட்களுக்கு முன்னரே துவக்கப்பட்டுவிட்டது. பல குதிரைப்படை வீரர்கள் பணியாட்களுடன் வேலூருக்குள் நுழைந்தனர் (ஜூலை 9). அடுத்த நாள் வேலூர்க் கோட்டையிலிருந்த சிப்பாய்கள் ஆங்கிலேயர்கள் வசித்த குடியிருப்புப் பகுதியை நோக்கிச் சுட்டனர். அவர்களது தளபதி கர்னல் பென்கோர்ட் (Col. Fencourt)டின் வீட்டைச் சூழ்ந்து கொண்டனர். அவரைச் சுட்டுக் கொன்றனர். அவரன்றி இராணுவ அதிகாரிகளான மெக்காரசும், மேஜர் ஆம்ஸ்ட்ராங்கும் கொல்லப்பட்டனர். பின்னர் படை இருப்பிடத்திலிருந்து பிற அதிகாரிகளையும் இராணுவத்தினரையும் கொல்ல முற்பட்டனர். கோட்டையின் பிரதான நுழைவாயிலில் பல ஆங்கிலேயர்களைக் கொன்று குவித்தனர். வெடிமருந்துக் கிடங்குக் காவலரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். பிரிட்டிஷ் தேசியக் கொடி இறக்கப்பட்டது. அதற்கு பதில் திப்பு பின்னணியில் பச்சைக் கோடுகள் போடப்பட்டு, மத்தியில் சூரியன் வடிவம் பொறிக்கப்பட்ட திப்புசுல்தானது கொடி ஏற்றப்பட்டது. திப்புசுல்தானது மூத்த மகனான பட்டே ஹைதர் அரசரென அறிவிக்கப்பட்டார்.

கிளர்ச்சியின் தோல்வி

வேலூர்க் கிளர்ச்சி திட்டமிடப்பட்டதற்கு முன்பாகவே துவக்கப்பட்டு விட்டதால் வலுவிழந்தது. மைசூரும், ஹைதராபாத்தும் ஒரே சமயத்தில் கிளர்ச்சி செய்யவில்லை. வேலூர் கோட்டையில் நடந்த கிளர்ச்சியைப் பற்றி அறிந்த கர்னல் இல்லெஸ்பி (Col Gillelspie) வலிமை வாய்ந்த மீட்புப் படையுடன் ஆற்காட்டிலிருந்து விரைந்து வந்தார். மூடப்பட்டிருந்த வேலூர் கோட்டையின் நுழைவாயிலை வெடிவைத்துத் தகர்த்துவிட்டு உள்நுழைந்தார் இவர். இல்லஸ்பி கோட்டைக்குள்ளிருந்த கிளர்ச்சிக்கார சிப்பாய்களை மூர்க்கமாகத் தாக்கினார். சிப்பாய்களும் துணிவுடன் போரிட்டனர். அம்மோதலில் 350 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். 113 ஐரோப்பியர் உயிரிழந்தனர். 500 கிளர்ச்சிக்காரர்கள்

கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர். வேலூர்க் கிளர்ச்சி முழுவதுமாக அடக்கப்பட்டது.

தோல்விக்கான காரணங்கள்

வேலூர்க் கிளர்ச்சிக்கான பொதுக்குறிக்கோள் எதுவுமில்லை. கிளர்ச்சி நன்கு கணிக்கப்பட்டு, திட்டமிடப்பட்டு, ஒருங்கிணைக்கப்பட்டு, திறமையாக நடத்தப்படவில்லை. வேலூர்க் கிளர்ச்சிக்காரர்களுக்கு மருதுபாண்டியன் போன்ற ஒரு ராஜதந்திரி கிடைக்கவில்லை. அதனால் அவர்கள் கூட்டமைப்பு எதையும் உருவாக்கவில்லை. கிளர்ச்சிக்கான தேதி குறிப்பிட்டாலும் குறிப்பிட்ட தேதிக்கு முன்னரே கிளர்ச்சி துவக்கப்பட்டுவிட்டது. வேலூர்க் கோட்டையைக் கைப்பற்றியது கிளர்ச்சிக்காரர்களின் துணிகரமான சாகசச் செயல்தான் என்பதில் ஐயமில்லை. எனினும் அது தனிப்பட்ட நிகழ்ச்சியாகவே இருந்துவிட்டது. வேலூர்க் கிளர்ச்சியையொட்டி மைசூரிலும், ஹைதராபாத்திலும் கிளர்ச்சிகள் தோன்றவில்லை. வேலூர்க் கிளர்ச்சிக்காரர்களுக்கு உரிய காலத்தில் போதிய உதவிகள் கிடைக்கவில்லை. பணம், பொருள், ஆயுத வசதிகளும் அவர்களுக்குக் குறைவு. மேலும் எல்லாச் சிப்பாய்களும் இக்கிளர்ச்சியில் கலந்து கொள்ளவில்லை; பலர் ஆங்கிலேய அதிகாரிகளுக்கு விசுவாசத்துடன் இருந்தனர். அக்று குல்லா அணிந்த சிப்பாய்களைக் கேலி செய்வதற்காகக் கூடிய கூட்டத்தைத் தவிர மக்கள் இக்கிளர்ச்சியில் பங்கு கொள்ளவில்லை. இல்லெஸ்பியின் கொடூரத் தாக்குதலுக்கு முன் கிளர்ச்சிக்கார சிப்பாய்களால் ஈடுகொடுக்க முடியவில்லை. எனவே சரணடைந்தனர்.

கிளர்ச்சியின் இயல்பும் சிறப்பும்

வேலூர்க் கிளர்ச்சியின் இயல்பைப் பற்றியும் சிறப்பைப் பற்றியும் பலவாறாகக் கூறப்பட்டுள்ளன. வேலூர்க் கிளர்ச்சி அடக்கப்பட்டபின் அதன் உண்மை நிலையைக் கண்டறிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஜி.ஹார்கோர்ட், ஆர்.கில்லெஸ்பி, ஐ.கென்டி, ஐ.மன்றோ ஆகியோர் கொண்ட விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. திப்பு சுல்தானின் மைந்தர்கள் சதி செய்து தூண்டிவிட்டதன் விளைவாகவே வேலூர்க் கிளர்ச்சி ஏற்பட்டது என்ற முடிவுக்கு வந்தது அந்த விசாரணைக் குழு. மேஜர் ஜெனரல் பேட்டர் தலைமையிலான சிறப்புக் கமிஷன் ஒன்றும் நியமிக்கப்பட்டது. புதிதாகப் புகுத்தப்பட்ட இராணுவச் சீர்திருத்தங்களும் திப்புவின் செல்வாக்கும் சேர்ந்தே கிளர்ச்சியைத் தோற்றுவித்தது என்று கண்டுபிடித்தது அந்தக் கமிஷன். முகலாய ஆட்சியே வேலூர்க் கிளர்ச்சிக்கான காரணமென்றார் ஜே.எப். கிரடோக். மதமாற்ற பயமே கிளர்ச்சிக்குக் காரணம் என்றார் சர்.தாமஸ் மன்றோ. இந்து முஸ்லீம்களின் சமய உணர்ச்சி புண்பட்டதால்தான் சிப்பாய்கள் கிளர்ச்சி செய்தனர் என்றார் வில்லியம்பெண்டிங் பிரபு. பல்வேறு கருத்துக்களையும் பரிசிலித்த இயக்குனர்கள் மன்றம் (Court of Directors) புதிய இராணுவ மாற்றங்களால் சிப்பாய்கள் அதிருப்தியுற்றனர். அந்த அதிருப்தியை வேலூர்க் கோட்டையில் சிறைப்பட்டிருந்த திப்புசுல்தானின் மைந்தர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர் என்ற முடிவுக்கு வந்தது.

Scanned by CamScanner

வேலூர்க் கிளர்ச்சி கம்பெனி ஆட்சிக்கெதிரான சிப்பாய் கலகமே என்கிறார் பேராசிரியர் ஜோசப்நிவியன். 1857 பெருங்கிளர்ச்சிக்கான ஒத்திகையே வேலூர்க் கிளர்ச்சி என்று எழுதியுள்ளார் வி.டி. சவார்க்கர். தென்னிந்தியக் கிளர்ச்சியால் ஊக்குவிக்கப்பட்டு கிளர்ச்சிக்காரர்கள் மேற்கொண்ட விடுதலைப் போராட்ட முயற்சியே வேலூர்க் கிளர்ச்சி என்பது பேராசிரியர் கு.ராஜய்யனது வாதம். வேலூர்க் கிளர்ச்சி தேசீர்க் கோப்பையில் எழுந்த புயலல்ல, மாறாக, அது பல வகையிலும் 1857 பெருங்கிளர்ச்சிக்கான முன்னோடியாகும் எனக் கருதுவதில் தவறில்லை.

விளைவுகள்

வேலூர்க் கிளர்ச்சி விளைவுகளற்ற வீழ்ச்சியன்று. அதன் விளைவாகப் பல மாறுதல்கள் ஏற்பட்டன. சென்னை கவர்னர் வில்லியம் பெண்டிங்பிரபுவும் சென்னை தளபதி சர் ஜான் கிரடோக்கும் பதவியினின்றும் விலக்கிக் கொள்ளப்பட்டது (1807) உடனடி விளைவாகும். புதிதாகப் புகுத்தப்பட்ட இராணுவ மாற்றங்கள் நீக்கப்பட்டன. வேலூர்க் கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்த திப்பு சுல்தானின் குடும்பத்தினர் வங்காளத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர். புதிய கவர்னராக வந்த பார்லோ (Barlow) மக்களின் சமய உணர்வுகளை மதிப்பதன் அவசியத்தை உணர்ந்து செயல்பட்டார். கம்பெனி அதிகாரிகள் கிறித்துவ சமயப் பிரச்சாரத்தில் ஈடுபடுவது கணிசமாகக் குறைந்தது. ஆயினும் பிரிட்டிஷ் மேலதிகாரிகள், பிரெஞ்சு பூர்பான் அரசர்களைப் போன்று, தென்னிந்திய வேலூர்க் கிளர்ச்சிகளிலிருந்து எந்தப் பாடத்தையும் கற்கவுமில்லை; மறக்கவுமில்லை!

4. ஆங்கிலேயருக்கு உட்புற எதிர்ப்புகள், 1808-1857

> வெறுப்பாலும், பேராசையாலும் உந்தப்பட்ட தலத்தலைவர்கள் தங்களது குறுகிய கண்ணோட்டத்தால் நிரந்தர சுதந்திரத்தை இழந்துவிட்டார்கள்.
>
> - மால்கம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஏற்பட்ட ஆங்கிலேய எதிர்ப்பு போராட்டங்களே தென்னிந்தியக் கிளர்ச்சியும் (1800-1801), வேலூர் கிளர்ச்சியும் (1806) ஆகும். அதன்பின் 1857ல் வெடித்த பெருங்கிளர்ச்சி வரை இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் ஆங்கிலேய ஆட்சிக்கெதிரான உட்புற எதிர்ப்புகள் பல ஏற்பட்டன. அவையாவும் பாதிக்கப்பட்ட பாளையக்காரர்கள், படைவீரர்கள், ஜமீன்தாரர்கள், விவசாயிகள், மலைவாழ் மக்கள் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டவையேயாகும். கிழக்கிந்தியக் கம்பெனி தல நிர்வாகத்தில் தலையிட்டது; பாரம்பரிய உரிமைகளையும், சலுகைகளையும் பறித்தது; சமூக சமயப் பழக்க வழக்கங்களைப் பாதித்தது; அநியாய வரி உயர்வு, அக்கிரம வரி வசூல் செய்தது ஆகியவை அவ்வெதிர்ப்புகளுக்குக் காரணங்களாகும்.

திருவாங்கூர் கலகம், 1808

திருவாங்கூர் திவான் வேலுத்தம்பி துவக்கத்தில் கம்பெனியின் ஆதரவாளராகத்தான் இருந்தார்,. ஆனால் கம்பெனி திருவாங்கூர் உள்நிர்வாகத்தில் தலையிட்டதால் வேலுத்தம்பி கம்பெனியின் எதிரியானார். அதேபோன்று கம்பெனியின்மீது கோபம்கொண்ட கொச்சின் திவான் பாலியத் அச்சன் வேலுத்தம்பியோடு சேர்ந்து கொண்டார். 1808-ல் இருவரும் இணைந்து ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்தனர். கொச்சின் கர்னல் மெக்காலேயின் முகாம் தாக்கப்பட்டது. அவர் மயிரிழையில் உயிர் தப்பினார்! பின் கம்பெனிப் படையோடு மோதி, பல ஐரோப்பியரைக் கொன்றனர். ஆனால் பாலியத் அச்சன் வேலுத்தம்பியைக் கடைசி நேரத்தில் கைவிட்டதால் கலகம் தோற்றது. நீரத்துடன் போரிட்ட வேலுத்தம்பி கொல்லப்பட்டார்.

ஆந்திரப் பகுதியில் எதிர்ப்பு

நிஜாமின் எதிர்ப்பு

1800ல் நிஜாம் அலியோடு செய்துகொண்ட துணைப்படைத் திட்டத்தின்படி கம்பெனியார் ஹைதராபாத் உள்நிர்வாகத்தில் தலையிட்டனர். ஆங்கிலேயரின் அத்துமீறிய குறுக்கீட்டால் நிஜாமும் மக்களும் அதிருப்தியுற்றனர். முன்னாள்

Scanned by CamScanner

நிஜாம் சிக்கந்தர்ஜாவிடம் பணியாற்றிய மகிபத்ராம் கம்பெனி ஆட்சிக்கெதிராக மக்களைத் திரட்டி ஷோரேப்பூர் என்னுமிடத்தில் கிளர்ச்சி செய்தார். 1839 பிப்ரவரி 12ல் கிளர்ச்சிக்காரர்கள் நிஜாமின் படையைத் தோற்கடித்தனர். கார்டன் (Gordon) உட்பட பல ஐரோப்பிய அதிகாரிகளைக் கொன்று விட்டனர். கர்னல் மாண்ட்ரேசர் (Col. Mentresser) தலைமையிலான கம்பெனிப்படை கிளர்ச்சியை முறியடித்தது. மகிபத்ராம் இந்தூருக்குத் தப்பிச்சென்று எவ்வித சிறப்புமின்றி இறந்தார்.

ஜமீன்தார் எதிர்ப்பு

1819ல் கோப்பால் ஜமீன்தார் வீரப்பா ஹைதராபாத் நிஜாமுக்கெதிராகக் கிளர்ச்சி செய்தார். கம்பெனிப் படையின் துணைகொண்டு நிஜாம் வீரப்பாவின் எதிர்ப்பை அடக்கிவிட்டார். வீரப்பா கம்பெனியிடம் சரணடைந்தார். 1835ல் கஞ்சம் மாவட்டத்திலுள்ள கும்ஸார் ஜமீன்தார் தனஞ்சய பஞ்சா, தான் கொடுத்த வேண்டிய வரிபாக்கியைக் கட்ட மறுத்து கம்பெனிக்கெதிராகக் கிளர்ச்சி செய்தார். கோண்டுகள் அவருக்குத் துணை நின்றனர். மரங்களை வெட்டிப் போட்டுப் பாதைகளை அடைத்தனர். கம்பெனிப் படை தனஞ்சய பஞ்சாவின் ஜமீன்தாரின் உரிமையைப் பறித்து, கும்ஸார் கோட்டையைக் கைப்பற்றி, இராணுவச் சட்டத்தைப் பிறப்பித்தது. கும்ஸார் கமிஷனராக நியமிக்கப்பட்ட எஸ்லல் 1837 பிப்ரவரி மாதம் இக்கிளர்ச்சியை அடக்கினார். பர்லாகிமேடி ஜமீன்தார் ஜகன்னாத் கஜபதி நாராயண் தேவா வரிபாக்கியைக் கட்டத் தவறியதால் அவரது ஜமீனும் பறிக்கப்பட்டது. எனவே அவர் மலைவாழ் மக்களின் துணைகொண்டு கம்பெனியை எதிர்த்தார். பர்லாகிமேடி மக்கள் ஜமீன்தார் தேவாவுக்கு ஆதரவாகக் கிளர்ச்சியிலீடுபட்டனர். கானகங்களில் ஒளிந்து கொண்டும், கோட்டைகளில் மறைந்துகொண்டும் அவர்கள் போரிட்டனர். கோட்டைகள் ஒவ்வொன்றாகக் கம்பெனிப் படைத்தாக்குதலால் வீழ்ந்தபோது அவர்களின் எதிர்ப்பு நிலைகுலைந்து போயிற்று.

பாளையக்காரர் எதிர்ப்பு

ஒப்படைக்கப்பட்ட மாவட்டங்களில் (Ceded Districts) 80 பாளையக்காரர்கள் இருந்தனர். தாமஸ் மன்றோ தலைமை ஆட்சியாளராக நியமிக்கப்பட்டவுடன் அவர் பாளையக்காரர்களைக் கம்பெனியின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வருவதில் தீவிரமாயிருந்தார். அதைப் பாளையக்காரர்கள் எதிர்த்தனர். 1846ல் கர்நூல் பாளையக்காரர் நரசிம்ம ரெட்டி கம்பெனிக்கெதிராகக் கிளர்ச்சி செய்தார். கம்பெனிச் சட்டங்களுக்கும் உத்தரவுகளுக்கும் அடிபணிய மறுத்தார். கோவில் குண்ட்லாவில் கஜானா சூறையாடப்பட்டது. தாசில்தார் கொல்லப்பட்டார். கம்பம் நோக்கிச் சென்ற நரசிம்ம ரெட்டியைப் பல ஜமீன்தார்களும், கம்பெனிக் கடைநிலை ஊழியர்களும் கிராம மக்களும் ஆதரித்தனர். கிளர்ச்சி வலுவடைந்தது. ஆனால் நரசிம்மரெட்டி தனது பணிப்பெண்ணால் காட்டிக் கொடுக்கப்பட்டு, பிடிபட்டு, 1847 பிப்ரவரி 22ஆம் நாள் கோவில் குண்ட்லாவில் தூக்கிலிடப்பட்டார். ராயலசீமைக் கிளர்ச்சி நசுக்கப்பட்டது.

மலைவாழ் மக்கள் எதிர்ப்பு

ஜமீன்தார்கள், பாளையக்காரர்கள் மட்டுமின்றி ஆந்திர மலைவாழ் மக்களும் கம்பெனி ஆட்சியை எதிர்த்தனர். 1835லிருந்து 1862 வரை அவர்கள் கம்பெனிக்குத் தீராத்தொல்லை கொடுத்தனர். விசாகப்பட்டினத்திலுள்ள கூடுகோண்டா மலைவாழ் மக்கள் கலகம் செய்தனர். பின்னபூபதி அவர்களது எதிர்ப்புக்குத் தலைமை தாங்கினார். கிளர்ச்சிக்காரர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு, அவர்களது கோரிக்கைகளைக் கம்பெனி ஏற்றுக் கொண்ட பின்னரே கிளர்ச்சி அடங்கிற்று. 1857-58ல் மீண்டும் அம்மலைவாழ் மக்கள் கிளர்ச்சி செய்தனர். ✓

மேற்கிந்தியாவில் எதிர்ப்பு

பில்லர்கள் எதிர்ப்பு

மேற்குத் தொடர்ச்சி மலைவாழ் மக்கள் பில்லர்கள் (Bhils). இவர்கள் கந்தேஷை நிலைக்களனாகக் கொண்டு கம்பெனி ஆட்சியை எதிர்த்தனர். 1819ல் அவர்களிடமிருந்து பரவலான எதிர்ப்பு இருந்தது. 1825இல் எதிர்ப்பு தீவிரமடைந்தது. செவ்ராம் என்ற கருமான் பல்லவா பில்லர்களைக் கிளர்ச்சி செய்யத் தூண்டினார். 1831ல் உச்சத் கிங் தலைமையில் தார் பகுதிப் பில்லர்கள் கலகம் செய்தனர். 1846 வரை பில்லர்களின் எதிர்ப்பு தொடர்ந்தது. கம்பெனிப் படைக்குச் சேதமேற்படுத்தினர். கம்பெனிப் குடியிருப்புகளை அழித்தனர். பல பில்லர்கள் இறந்தனர். பலருக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்பட்டது. கெடுபிடியாலும், சமரசத்தாலும் போர் மறவர்களான பில்லர்களின் எதிர்ப்பைக் கம்பெனி அடக்கிற்று.

மெர்வாரா மக்கள் கிளர்ச்சி

1820ல் மெர்வாரா மக்கள் கம்பெனி ஆதிக்கத்துக்குக் கட்டுப்பட மறுத்து கிளர்ச்சி செய்தனர். பல இடங்களில் போலீசார் தாக்கப்பட்டனர். 1824ல் கட்ச், கத்யவார் பகுதிகளில் கிளர்ச்சி ஏற்பட்டது. கட்சை ஆண்ட ராவ் பார்மல் (Rao Bharmal) கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கினார். கட்ச் தலைநகரான பூஜ்ஜைக் கம்பெனிப் படை கைப்பற்றியது. ராவ் பார்மல் பதவி நீக்கம் செய்யப்பட்டார். அவரது மகனைப் பதவியிலமர்த்தி கம்பெனி பாதுகாப்பாட்சியை நடத்தியது.

காட்காரிகள் எதிர்ப்பு

கோல்காப்பூர் காட்காரிகள் மராத்தியக் கோட்டைக் காவலர்கள். அவர்களது நிலஉடமைகளும் உரிமைகளும் பறிக்கப்பட்டபோது இவர்கள் கம்பெனி ஆட்சியை எதிர்த்தனர். 1844 செப்டம்பர் மாதம் காட்காரிகள் புதிதாக நியமிக்கப்பட்ட மம்லத்தார்களை உள்ளே நுழைய முடியாதபடி புதர்க்கு, சமன்கத் கோட்டைகளை மூடிவிட்டனர். தலப்படை வீரர்களும் அவர்களோடு சேர்ந்து கொண்டனர். ஆங்கிலேய ஆதரவாளர்களான டி.கே.பண்டிட்டும், பிறரும் பிடிபட்டனர். அண்டைப் பகுதிகள் தாக்கப்பட்டன. கடுமையான இராணுவ நடவடிக்கைக்குப்பின் நிலைமை கட்டுப்படுத்தப்பட்டது. கோல்காப்பூரை பின்பற்றி சவன்வாடியும் கிளர்ச்சி செய்தது. போண்ட் சமந்தும் அவரது எட்டு மைந்தர்களும் இக்கிளர்ச்சியில் தீவிரமாகப் பங்கு கொண்டனர். 1845 ஜனவரி 14ல் இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு எதிர்ப்பு அடக்கப்பட்டது.

Scanned by CamScanner

சூரத் மக்கள் எதிர்ப்பு

உப்பு வரியை ஒரேயடியாக உயர்த்தியதால் 1844 ஆகஸ்டு 24ல் சூரத்தில் மாபெரும் மக்கள் எதிர்ப்பு உருவாயிற்று. சூரத் மாஜிஸ்ட்ரேட்டிடம் விண்ணப்பம் கொடுப்பதற்காக மக்கள் ஊர்வலமாகச் சென்றனர். அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டுப் போலீசாரால் தாக்கப்பட்டனர். பிற பொருள்களின்மீதும் வரி உயர்த்தப்பட்டது என்ற வதந்தி நிலைமையை மோசமாக்கிவிட்டது. எனவே அதிகாரிகள் உப்பு வரியைப் பழைய நிலைக்கே குறைத்து விட்டனர். 1848ல் சூரத்தில் மீண்டும் எதிர்ப்பு எழுந்தது. வங்காள அளவு முறைகளைப் புகுத்தியதால் ஏற்பட்ட எதிர்ப்பு இது. பொருள் புறக்கணிப்பு, சாத்விகப் போராட்டம் ஆகியவற்றை மேற்கொண்டனர் சூரத் மக்கள். ஒரு வாரப் போராட்டத்துக்குப் பின்னர் அதிகாரிகள் மக்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டனர். சூரத் சாத்வீகப் போராட்டம் பின்னர் காந்தி மேற்கொண்ட சத்தியாகிரகங்களுக்கு முன்மாதிரியாக அமைந்தது எனலாம்.

மேற்கிந்தியாவில் எதிர்ப்பு

காலி மக்கள் கிளர்ச்சி

தேற்கு அஸ்ஸாமுக்கும் பிரமபுத்திரா பள்ளத்தாக்கிலுள்ள சில்ஹெட்டுக்குமிடையே காஸி மலைவாழ் மக்கள் வாழ்ந்து வந்தனர். 1765ல் சில்ஹெட் கம்பெனி ஆதிக்கத்தின்கீழ் வந்தது. அதன்பின் சில்ஹெட்டிலிருந்த காஸி மக்கள் வாழ்ந்த பகுதிகள் வழியாகப் பாதை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர் ஆங்கிலேயர். இதற்காகக் கம்பெனி காஸி மக்கள் தலைவர்களிடையே ஏமாற்று ஒப்பந்தங்கள் செய்து கொண்டது. அதன்படி பாதைபோடும் வேலையில் காஸி மக்கள் கட்டாயமாக ஈடுபடுத்தப்பட்டனர். இதை நுன்க்லோ காஸிகளின் தலைவரான திரட்சிங் எதிர்த்தார். அவரை பிற காஸி தலைவர்களும் ஆதரித்தனர். 1829 மே 5 ஆம் நாள் அவர்கள் நுன்க்லோவிலிருந்த ஒரு பங்களாவைத் தாக்கி அதிலிருந்த ஐரோப்பியர்களையும் வங்காளிகளையும் கொன்று விட்டனர். பங்களா நீக்கிரையாக்கப்பட்டது. பாதை போடுவதற்குக் கட்டாயமாகக் கொண்டு வரப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டனர். கிளர்ச்சி காட்டுத் தீ போல் பரவிற்று. அஸ்ஸாம் ஆட்டங்கண்டது. நான்காண்டுகள் கடுமையான போராட்டத்துக்குப் பின் 1833 ஜனவரி மாதம் திரட்சிங் சரணடைந்தார். காஸிக் கலகம் ஒய்ந்தது.

சிங்போக்கள் எதிர்ப்பு

மற்றொரு அஸ்ஸாம் மலைவாழ் மக்கள் பிரிவினரான சிங்போக்கள் (Singphos) கம்பெனியார் கொண்டுவந்த மாற்றங்களை எதிர்த்துப் போராடினர். பாதிக்கப்பட்ட நிலச்சுவான்தார்களும் அவர்களது எதிர்ப்பை ஊக்குவித்தனர். ருனுவா கோஹெய்ன் (Runua Gohain) தலைமையில் ஈட்டி, வாள், கைத்துப்பாக்கிகள் சகிதம் கம்பெனிப் படையினரைத் தாக்கினர் சிங்போக்கள். 1830, 1839, 1843 ல் நடந்த சிங்போக்களின் வன்முறை எதிர்ப்புகள் அனைத்தும் அடக்கப்பட்டன.

கோல் மக்கள் எதிர்ப்பு

சுதந்திர வாழ்க்கைப் பிரியர்களான சோட்டா நாக்பூர் கோல் மக்கள் கம்பெனி புகுத்திய கட்டுப்பாடுகளை எதிர்த்தனர். அதன் விளைவாக வெளியிலிருந்து வந்து குடியேறிய ஆயிரம் பேர் கோல்களால் கொல்லப்பட்டனர் (1831). இருதரப்பிலும் பலத்த சேதம் ஏற்பட்டது. இறுதியில் 1837ல் கோல்கள் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டனர். மெரய்யா என்ற நரபலிப் பழக்கத்தை கம்பெனி தடை செய்ததற்காக 1845ல் கோண்டுகள் கிளர்ச்சி செய்தனர். காப்டன் மெக்பர்சனின் முகாம் தாக்கப்பட்டது. சக்ரபிசோய் (Chakra Bisoi) கிளர்ச்சியை முன்னின்று நடத்தினார். கோண்டுகளின் கிளர்ச்சி 1857 பெருங்கிளர்ச்சி வரை நீடித்தது.

சாந்தல் கிளர்ச்சி 1855-56

மலைவாழ் மக்கள், மண்ணின் மைந்தர்கள்; ஆதிவாசிகள்; நிலத்துக்கு முன்னுரிமை பெற்றோர்; கானகத்துக்கும் காட்டு வளங்களுக்கும் சொந்தக்காரர்கள். சாந்தல் மலைவாழ் மக்கள் பீகாரில் பகல்பூர் மற்றும் ராஜ்மகால் மலைகளுக்கிடைப்பட்ட பகுதிகளில் வாழ்ந்தவர்கள். காலனி ஆட்சியின் ஆதரவோடு அவர்களை ஜமீன்தார்கள், வர்த்தகர்கள், லேவாதேவிக்காரர்கள், இடைத்தரகர், காவல் துறையினர் மற்றும் அரசாங்க அதிகாரிகள் ஆகியோரால் வஞ்சிக்கப்பட்டு, ஏமாற்றப்பட்டு, சுரண்டப்பட்டனர். அவர்களது பூர்வீக பூமியிலிருந்து அகற்றப்பட்டனர். 'திக்குகள்' என்று அழைக்கப்பட்ட 'வெளியாரின்' கெடுபிடி, கொடுமை, கட்டாய வரிவசூல், நில அபகரிப்பு, பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமை ஆகியவை அமைதியான சாந்தல் மலைவாழ் மக்களை ஆங்கிலேயருக்கு எதிராகக் கிளர்ந்தெழச் செய்தன.

1855 ஜூன் 30ம் நாள் சாந்தல் மலைவாழ் மக்களின் தலத்தலைவர்கள் பாகநிதி என்ற இடத்தில் கூடினர். அக்கூட்டத்தில் 400 கிராமங்களிலிருந்து வந்த 6000 சாந்தல் மக்கள் கலந்து கொண்டனர். 'அந்நியர்'களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்வது என்று அக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. 'வாய்மையின் ஆட்சி வேண்டும்' என்ற கோஷத்தோடு கிளர்ச்சியைத் துவக்கினர்.

சித்து மற்றும் கன்ஹு ஆகிய இருவரும் இறையருள் பெற்றதாகக் கூறிக்கொண்டு சாந்தல் கிளர்ச்சி (Santhal Rebellion) க்குத் தலைமை தாங்கினர். கிராமங்களுக்கிடையே பிரமாண்டமான பேரணி நடத்தப்பட்டது. ஜமீன்தார்களும், இடைத்தரகர்களும், அலுவலர்களும் தாக்கப்பட்டனர். அவர்களது வீடுகளும் சொத்துக்களும் சூறையாடப்பட்டன. காலனி ஆட்சியின் சின்னங்களாகக் கருதப்பட்ட காவல், தபால், மற்றும் ரயில் நிலையங்கள் தகர்க்கப்பட்டன.

சாந்தல் கிளர்ச்சியின் வீச்சையும், வேகத்தையும், வன்முறையையும் கண்டு அதிர்ந்துபோன காலனி அரசாங்கம் இராணுச் சட்டத்தை (Martial Law)ப் பிறப்பித்தது. கிளர்ச்சித் தலைவர்களைப் பற்றிய தகவல் கொடுப்போருக்குத் தக்க சன்மானம் அளிப்பதாக அறிவிக்கப்பட்டது.

Scanned by CamScanner

சாந்தல் கிளர்ச்சியின்போது 15,000 சாந்தல் மக்கள் கொல்லப்பட்டனர். ஏராளமான கிராமங்கள் அழிக்கப்பட்டன. 1855 ஆகஸ்டு மாதம் கித்து காட்டுக் கொடுக்கப்பட்டு, பிடிபட்டு, கொல்லப்பட்டார். 1866 பிப்ரவரி மாதம் கன்ஹூவும் கொல்லப்பட்டார். முரட்டு வீரத்தோடு கிளர்ச்சி செய்த சாந்தல் மலைவாழ் மக்கள் இறுதிவரை சரணடைய மறுத்தனர். அவர்களது வில்வலிமை ஆங்கிலேயரின் துப்பாக்கி வலிமைக்குமுன் வீழ்ந்தது. மக்களிடையே மனக்கசப்பை ஏற்படுத்திய சாந்தல் கிளர்ச்சி ஆங்கில ஆட்சிக்கு எதிரான உட்புற எதிர்ப்பின் உச்சகட்டமாகத் திகழ்ந்தது என்பதில் ஐயமில்லை.

தென்னிந்தியக் கிளர்ச்சி, வேலூர்க் கிளர்ச்சி, மற்றும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் ஆங்கிலேயர் ஆட்சிக்கெதிரான உட்புற எதிர்ப்புகளின் கூட்டுவிளைவே 1857 பெருங்கிளர்ச்சி ஆகும்.

5. 1857 பெருங்கிளர்ச்சி

இங்கிலாந்தின் இளைய தலைமுறையினர் இந்தியப் பெருங்கிளர்ச்சி (1857) பற்றிப் படித்து, அந்த அறிவை உள்வாங்கிக்கொள்ள வேண்டும். ஏனெனில், அதிலிருந்த படிப்பினைகளையும், எச்சரிக்கைகளையும் கற்றுக் கொள்ளலாம்.

- குரோமர் பிரபு

திருப்புமுனை

தென்னிந்தியக் கிளர்ச்சியும் (1800-1801), வேலூர்க் கிளர்ச்சியும் (1806) ஆங்கிலேய ஆட்சிக்கெதிரான போராட்டங்களாகும். 1806லிருந்து 1856 வரை இந்தியாவின் பல பகுதிகளிலும் ஆங்கிலேய ஆதிக்கத்துக்கெதிராகப் பல உள்நாட்டுக் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனி அக்கிளர்ச்சிகளையெல்லாம் தனது இராணுவ வலிமையால் அடக்கி ஒடுக்கிவிட்டது. எனிலும் ஆங்கிலேயரின் அடக்கு முறையும் ஆக்கிரமிப்புக் கொள்கையும் இந்திய ஆட்சியாளரிடையேயும் பிராந்தியத் தலைவர்களிடையேயும், மக்களிடையேயும் மனக்கசப்பை ஏற்படுத்தின. குறிப்பாக டல்ஹௌசி பிரபுவின் இணைப்பாதிக்கக் கொள்கையும், அது செயல்படுத்தப்பட்ட முறையும் மன்னர்களிடையே மனக்கலக்கத்தை உண்டாக்கியது. சுருங்கக்கூறின், ஆங்கிலேயரின் அரசியல் ஆதிக்கம், பொருளாதாரச் சுரண்டல், மனிதாபிமானமற்ற நிர்வாகம், சமுதாய அநீதி, மதமாற்றம், இராணுவ நெறிமுறைகள் ஆகியவை மக்களின் பல்வேறு பிரிவினரிடையே அந்நியருக்கெதிரான வெறுப்புணர்வையும் எதிர்ப்புணர்வையும் ஏற்படுத்திவிட்டன. அதன் கூட்டுவிளைவு 1857 பெருங்கிளர்ச்சியாகும். இக்கிளர்ச்சி இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் முக்கியத் திருப்பு முனையாகும்.

கிளர்ச்சிக்கான காரணங்கள்

அரசியல் காரணங்கள்

டல்ஹௌசியின் பங்கு

1857 பெருங்கிளர்ச்சி கவர்னர் ஜெனரல் கானிங் பிரபு (1856-1862) காலத்தில் நிகழ்ந்தது. ஆனால் அவருக்கு முன்பு அப்பதவியிலிருந்த டல்ஹௌசி பிரபு (1848-1856) அக்கிளர்ச்சிக்கு அடித்தளமிட்டார். அவர் தீவிரமாகப் பின்பற்றிய நில இணைப்புக் கொள்கை(Policy of Annexation) யும் அவகாசியிலிக் கொள்கை (Doctrine of Lapse) களால் பாதிக்கப்பட்ட இந்திய அரசர்களிடையே பாதுகாப்பின்மையையும், பயத்தையும், பரபரப்பையும் ஏற்படுத்தின. உதாரணமாக, நானாசாகிப், இலட்சுமிபாய், தாந்தியாதோபே, பகதூர்ஷா ஆகியோர்

Scanned by CamScanner

டல்ஹௌசியின் கொள்கைகளால் பாதிக்கப்பட்டு வெறுப்பின் எல்லைக்கே தூரத்தப்பட்டவர்கள். விவசாயிகளைத் திருப்திப்படுத்துவதற்காக அவர் மேற்கொண்ட நிலக்கொள்கை பரம்பரை பலமிக்கவர்களான தாலுக்தார்களை விரோதிகளாக்கியது. அவர் கொண்டுவந்த பல முற்போக்கு திர்திருத்தங்களை பிற்போக்கு மனப்போக்குடைய மக்களிடையே சந்தேகத்தையும் சஞ்சலத்தையும் ஏற்படுத்தின. எனவே, டல்ஹௌசி பிரபுவின் நிலஇணைப்பு, அவசரமாகிலும் சீர்திருத்த நிர்வாக இராணுவ நடவடிக்கைகள் 1857 பெருங்கிளர்ச்சிக்கு கணிசமான அளவுக்குக் காரணமாயிருந்தன என்பதில் சந்தேகமில்லை.

பகதூர் ஷா பட்ட அவமதிப்பு

இரண்டாவது அக்பரின் வாரிசாக வந்த இரண்டாம் பகதூர்ஷா (1837-1857) பெயரளவுக்கு முகலாயப் பேரரசராக இருந்தாலும் பொதுமக்களால் குறிப்பாக முஸ்லீம்களால், பெரிதும் மதிக்கப்பட்டார். அவருக்கு வயதாகிவிட்டது என்று காரணங்காட்டி அவரது வாரிசாக பக்ருதீன் நியமிக்கப்பட்டபோது பகதூர்ஷாவும், பொதுமக்களும் அதிர்ச்சியடைந்தனர். அதுமட்டுமல்ல, அவர் பல்வேறு கட்டுப்பாடுகளுக்கும் அவமானத்துக்கும் தன்மானக்குறைவான நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்பட்டார். அவருக்குக் கொடுக்கப்பட்டு வந்த சலுகைகள் நிறுத்தப்பட்டன. செலாவணி நோட்டுக்களிலிருந்து அவரது பெயர் நீக்கப்படடது. செங்கோட்டை (Red Fort) யிலிருந்து குத்தப் (Qutab)புக்குக் குடிபெயர்ந்து செல்லுமாறு கட்டளையிடப்பட்டார். பக்ருதீன் அகால மரணமடைந்தபோது புதிய வாரிசு அரச பட்டத்தைச் சூட்டிக் கொள்ளக் கூடாதென தடை விதிக்கப்பட்டது! அவர் டில்லியில் தங்கக்கூடாது என்றும் அறிவிக்கப்பட்டது. அந்நடவடிக்கை தைமூர் குடும்ப வழித்தோன்றல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. இவையாவும் முஸ்லீம்களிடையே மனக் கொந்தளிப்பை ஏற்படுத்தின. குமுறும் எரிமலை போன்றிருந்த பகதூர்ஷா ஆங்கிலேயர் மீது பழி தீர்த்துக் கொள்வதற்கான தக்க தருணத்தை எதிர்பார்த்திருந்தார்.

அந்நிய ஆட்சி

இந்தியர்களுக்கு அந்நிய ஆட்சி புதிதன்று. பல படிப்படியான படையெடுப்புக்களை சந்தித்த நாடு இந்தியா. ஆப்கானியரும், முகலாயர்களும் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக இந்தியாவை ஆட்சி செய்தனர். ஆனால் அவர்கள் அனைவரும் இந்தியரை வெற்றி கொண்டு, இந்தியாவில் நிலையாகத் தங்கி இந்தியரோடு இணைந்து இந்தியரின் நலனுக்காகவும் பாடுபட்டார்கள். ஆனால் ஆங்கிலேயர்கள் வர்த்தகர்களாக இந்தியாவுக்கு வந்து ஆட்சியாளர்களாக மாறித் தங்களது தாய்நாட்டின் வளர்ச்சிக்காக இந்தியாவைச் சுரண்டியவர்கள். இலண்டனைத் தலைமைப் பீடமாக வைத்துக்கொண்டு இந்தியாவை ஆட்சி செய்தவர்கள். இந்தியர்களின் சுகவாழ்வுக்குப் பதில் அவர்களைச் சுரண்டுவதையே அடிப்படைக் கொள்கையாகக் கொண்ட ஆங்கிலேய அந்நிய ஆட்சி மக்களிடையே வெறுப்புணர்ச்சியை வளர்க்கவே செய்தது.

திர்க்கதரிசனச் செய்தி

மக்கள் ஆங்கிலேய ஆட்சிக்கெதிரான வெறுப்பையும் கோபத்தையும் அச்சத்தையும் பலகாலம் அடக்கியே வைத்திருந்தனர். அவற்றை

வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புக்காகக் காத்திருந்தனர். வாய்ப்புகள் உருவாகும் போதெல்லாம் தங்களது எதிர்ப்பைக் காட்டத் தவறவில்லை. பிளாசிப் போருக்குப் பின் (1757) நூற்றாண்டு முடிவில் (1857) ஆங்கிலேய ஆட்சி வீழ்ச்சியடையும் என்ற தீர்க்கதரிசனச் செய்தி மக்களிடையே புதிய நம்பிக்கையைக் கொடுத்தது. அந்திய ஆட்சி முடிவுக்கு வருவதற்கான தருணத்தை எதிர்பார்த்தனர். மக்களும் ஆங்கிலேய ஆட்சியால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களும், அந்த எதிர்பார்ப்பு அரசியல் அதிருப்திக்கு உணர்ச்சிப் பரிமாணத்தைக் கொடுத்தது.

பொருளாதாரக் காரணங்கள்

வேலையின்மை

இங்கிலாந்து இழக்கிந்தியக் கம்பெனியின் பொருளாதாரக் கொள்கைகளும் நடவடிக்கைகளும் மக்களிடையே வேலையின்மையை என்றுமில்லா அளவுக்கு அதிகரித்துவிட்டது. ஆங்கிலேயரின் தொழில் கொள்கையால் கிராம குடிசைக் கைத்தொழில்கள் அனைத்தும் நலிந்து அத்தொழில்களில் முழுநேர வேலைசெய்த பல்லாயிரக்கணக்கான கைவினைஞர்களும் பிறரும் வேலையின்றி வாடினர். அதேபோன்று கம்பெனியின் விவசாயக் கொள்கை விவசாயிகளை வறியவர்களாக்கியது. நிலச்சுவான்தார்களின் நிலப்பட்டாக்கள் பரிசீலிக்கப்பட்டபோது பலர் பட்டா உரிமை எதுவுமின்றி நிலச் சொந்தக்காரர்களாக இருப்பது தெரிய வந்தது. அத்தகையோரது நிலங்கள் பறிக்கப்பட்டபோது அவர்கள் நிலமற்ற ஏழைகளாயினர். நூற்றுக்கணக்கான தாலுக்தார்கள் தரித்திர நாராயணர்கள் ஆனார்கள்! குத்தகையற்ற நிலங்களை அனுபவித்து வந்தோர் பலர். அவர்களது நிலங்கள் பறிக்கப்பட்டபோது அவர்களும் வேலையற்றோர் கூட்டத்தில் தள்ளப்பட்டனர். நாடுகள் இணைக்கப்பட்டவுடன் அரசர்களது படைகள் கலைக்கப்பட்டன. அதன் காரணமாகப் படை வீரர்கள் வேலை இழந்தனர். மேல்நிலை நிர்வாகப் பதவிகளில் இருந்தோரும் பதவிநீக்கம் செய்யப்பட்டனர். வேலையற்றோர் அனைவரும் கிளர்ச்சியில் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டனர்.

நில வருவாய்த் திட்டம்

நிலையான நில வருவாய்த் திட்டம் விவசாயிகளுக்கு நிலையான துன்பத்தைக் கொடுத்தது. இடைத் தரகர்களைத் தவிர்க்கவும், மக்களின் மகிழ்ச்சியைப் பெருக்கவும் கொண்டு வரப்பட்ட அத்திட்டம் தீராத் தொல்லைகளைத் தந்தது. காலப்போக்கில் நிலையான நிலவருவாய் திட்டம் தற்காலிக சுயநலத் திட்டமாயிற்று! நிலத்தின் மதிப்பு சுயாதீனமாய்த் தீர்மானிக்கப்பட்டது. தீர்வை கடுமையாக நிர்ணயிக்கப்பட்டது. அதைவிடக் கொடுமையாக வரி வசூலிக்கப்பட்டது. விவசாயிகளின் துயர்துடைப்பு நடவடிக்கைகள் அவர்களது துயரத்தை அதிகரிக்கவே செய்தன. விளைச்சலுக்கும் நிலவரித் தீர்வைக்கும் தொடர்பின்றி இருந்தது. நிலவரி பணமாக வசூலிக்கப்பட்டதால் மகசூல் பாதிக்கப்பட்ட சமயங்களில் விவசாயிகள் நிலவரி செலுத்த முடியாது நிலைகுலைந்து போயினர். பஞ்ச காலங்களில் விவசாயிகள் பஞ்சைகளாயினர். நிலமதிப்பீடு, நிலத்தீர்வை, நிலவரி வசூல் ஆகியவை கிராம மக்களைக் கிளர்ச்சிக்காரர்களாக்கின.

Scanned by CamScanner

வரிச்சுமை

மக்கள் வரிச்சுமையால் அவதியுற்றனர். கம்பெனியின் நிர்வாகச் செலவுகளை மக்களே ஏற்க வேண்டியிருந்தது. ஆங்கிலேயர் இந்தியாவில் மேற்கொண்டபோர்களுக்கான செலவும் மக்களின் தலைமீதே சுமத்தப்பட்டது. இந்தியாவில் வசூலிக்கப்பட்ட வரிதொகையில் பத்து விழுக்காடு இங்கிலாந்தில் செலவிடப்பட்டது. அதற்குப் பிரதிபலனாக நன்மைகள் இந்தியருக்குக் கிடைக்கவில்லை. பொது வரிகள் விஷம் போல் ஏறிக்கொண்டிருந்தன. கம்பெனியின் வட்டியோடு கூடிய கடன் மலையளவு வளர்ந்தது. கடனையும் வட்டியையும் வரிமூலம் கட்டியவர்கள் மக்கள்தான். கடனையும் ஆதிக்கக் கொள்கை அரசாங்கத்தின் பணப்பஞ்சுமை அதிகரிக்கச் செய்தது. அந்த பஞ்சு அனைத்தும் மக்களுக்கே மாற்றப்பட்டது. சுருங்கக்கூறின், வேலையில்லாத் திண்டாட்டம், நில வருவாய்த் திட்டம், வரிச்சுமை ஆகியவை மக்களிடையே வெறுப்பை வளர்த்து ஆங்கிலேய ஆட்சிக்கெதிராகக் கிளர்ச்சி செய்யத் தூண்டின.

நிர்வாகக் காரணங்கள்

நம்பிக்கையற்ற நிர்வாகம்

ஆங்கிலேயரது நிர்வாகம் இந்திய மக்களின் பாரம்பரியத்துக்கும் பண்பாட்டுக்கும் குணத்துக்கும் ஏற்றதாயில்லை. ஆங்கிலேயே நிர்வாகிகள் இந்தியாவில் தாமரை இலைத் தண்ணீரைப் போன்று பட்டும் படாமலும் இருந்தனர். அவர்களது நாட்டமெல்லாம் இங்கிலாந்திலேயே இருந்தது. எந்த சூழ்நிலையிலும் அவர்கள் தங்களது தனித்தன்மையை இழக்கத் தயாராயில்லை. அவர்களது இனப் பெருமையும் கர்வமும், உயர்வு மனப்பான்மையும் இந்தியர்களிடமிருந்து அவர்களை வேறுபடுத்தின. அவர்கள் காட்டிக்கு எளியரல்லர். பொதுமக்கள் அவர்களை எளிதில் நெருங்க முடியாது. மக்களின் அன்றாடப் பிரச்னைகளை நிர்வாகிகள் கவனிக்கவில்லை. நிலப் பரிவர்த்தனைகளில் அதிகாரிகளின் குறுக்கீடு ஆத்திரமூட்டக்கூடிய அளவுக்கிருந்தது. ஆங்கிலேயரது நலனுக்குப் பாதகமாக இருக்கக்கூடிய நிர்வாக முடிவுகளை ஆட்சித் தலைவர்கள் செயல்படுத்துவதில்லை. மக்களின் குறைகளைக் காலத்தே கண்டறிந்து களைவதில்லை. அதனால் மக்களுக்கும் நிர்வாகிகளுக்குமிடையே உள்ள தூரம் அதிகரித்தே வந்தது. மக்கள் நிர்வாகிகளை நம்பவில்லை!

திறமைக்கு இடமில்லை

கம்பெனியின் நாட்டினைப்புக் கொள்கையின் விளைவாகக் கல்வி அறிவுடைய, திறமைமிக்க இந்தியர்கள் உயர்பதவிகளை இழந்தனர். கம்பெனி அரசாங்க நிர்வாக அமைப்பில் இந்தியர்களுக்கு இடமில்லை. எனினில், முக்கிய பதவிகளெல்லாம் ஆங்கிலேயர்களுக்கே கொடுக்கப்பட்டன. முகலாயர் ஆட்சியின்போது பல்வேறு பதவிகளிலிருந்த முஸ்லீம்கள் கம்பெனி ஆட்சியின் போது அப்பதவிகளையெல்லாம் இழந்தனர். அவர்கள் நிர்வாகத்திலிருந்தும் ஒதுக்கி வைக்கப்பட்டனர். நிர்வாகத்தில் சாதர் அமீன், இராணுவத்தில் சுபேதார் ஆகியவைதான் இந்தியர்களுக்குக் கிடைத்த உயர்ந்த பதவிகள்! அப்படியே அப்பதவிகள் கிடைத்தாலும், அதற்கு மேல் பதவி உயர்வு கிடைப்பதற்கு

எவ்வித உத்திரவாதமுமில்லை. கல்வியும், தகுதியும் நிறமையுமுடைய இந்தியர்களுக்கு நிர்வாக உயர்பதவிக் கதவு மூடப்பட்டபோது அவர்கள் விரக்தியடைந்தனர். விரக்தி கிளர்ச்சிக்கான தீப்பொறியாகும்.

நீதியற்ற நீதி நிர்வாகம்

ஆங்கிலேய ஆட்சியின்கீழ் மக்கள் தங்களுடைய உயிர் உடைமை உரிமை பற்றிய பாதுகாப்பின்றி இருந்தனர். போலீஸ் நிர்வாகம் மக்களை அச்சுறுத்தவும் அடக்கியாளவுமே பயன்படுத்தப்பட்டது. நீதி, நிர்வாகம் அந்நியமாகவும் பணச்செலவு மிக்கதாகவும் காலதாமத மேற்படுத்துவதாகவும் இருந்தது. சமுதாயத்தில் அது சட்டத்தின் ஆட்சியை ஏற்படுத்தவில்லை. ஐரோப்பியர்கள் அதன் அதிகாரத்துக்கு உட்படவில்லை. செல்வந்தர்களும் செல்வாக்கு மிக்கவர்களும் பொய் சாட்சிகளையும் சாட்சியங்களையும் காட்டி நீர்பைத் தங்களுக்குச் சாதகமாகப் பெற்றுக் கொண்டனர். பாதிக்கப்பட்ட ஒரு விவசாயி தனது எஜமானருக்கு எதிராக வழக்கு தொடுப்பதென்பது நினைத்துக்கூட பார்க்க முடியாத ஒன்று. நீதி கிடைக்காத மக்கள் அந்நிய ஆட்சியை நீக்குவதில் நிலைத்து நின்றனர்.

சமுதாயக் காரணங்கள்

சமுதாயத் தனிமை

ஆங்கிலேயர்கள் இந்தியர்களுடன் இணைந்து வாழ இயலவில்லை. இந்திய நாட்டில் இந்தியர்கள் சமுதாயத் தனிமைப்படுத்தப்பட்டனர். அவர்கள் கீழ்த்தர மக்களாகக் கருதப்பட்டனர். பொது இடங்களில் மரியாதைக் குறைவாக நடத்தப்பட்டார்கள். பல நேரங்களில் பெண்கள் அவமானத்துக்குள்ளாயினர். ஆங்கிலேயரது பண்பாடு இந்திய சாதி, கூட்டுக்குடும்ப, கிராம சமூக அமைப்பு முறைக்கு முரண்பட்டிருந்தது. ஆங்கிலேயர்கள் சமுதாயப் பழக்கவழக்கங்களில் தலையிடுவதை இந்தியர்கள் விரும்பவில்லை. ஆங்கிலேயரது நீதிமுறை சாதிப் பஞ்சாயத்துக்களை சக்தியிழக்கச் செய்தது. ஐரோப்பியர்கள் சமுதாயச் சமத்துவத்துக்குக் கட்டுப்படவில்லை. இதனால் இந்தியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்குமிடையே சமுதாய முரண்பாடுகள் அதிகரித்த வண்ணமிருந்தன.

சமூகச் சட்டங்கள்

ஆங்கிலேயர்கள் கொண்டுவந்த சமூகச் சீர்திருத்தச் சட்டங்களை இந்தியப் பழமைவாதிகள் எதிர்த்தனர். உடன்கட்டை ஏறும் வழக்கத்தைத் தடை செய்தபோது (1829) மக்கள் அரசாங்கத்தை சந்தேகித்தனர். அதேபோன்று சாதி ஏற்றாதலை நீக்கச் சட்டம் (1850) இயற்றப்பட்டபோது தாழ்த்தப்பட்டோருக்கு சொத்துரிமை வழங்கிய அச்சட்டத்தை இந்துக்கள் சட்டத்துக்குப் புறம்பானதென்று எதிர்த்தனர். விதவை மறுமணச் சட்டமும் (1856) கடும் கண்டனத்துக்குள்ளாயிற்று. அச்சட்டம் மனு, யாக்ஞ வல்க்கியர் ஆகியோர் வகுத்த சட்டத்துக்கு விரோதமானதென்று கருதப்பட்டது. ஒருமுறைதான் பிறக்கிறோம், ஒரு

Scanned by CamScanner

முறைதான் மணம் செய்து கொள்கிறோம். ஒரு முறைதான் இறக்கிறோம் எனக்கூறி விதவைகளே அச்சட்டத்தை எதிர்த்தனர்! சமூகச் சடங்குகளிலும் சம்பிரதாயங்களிலும் பழக்க வழக்கங்களிலும் ஆங்கிலேயர் குறுக்கிடுவதை குறிப்பாக இந்துக்கள் விரும்பவில்லை.

சமுதாய மாற்றங்கள்

ஐரோப்பிய நாகரிகத்தைப் புகுத்தி இந்தியச் சமுதாய மாற்றத்தை ஏற்படுத்த ஆங்கிலேயர் எடுத்துக்கொண்ட முயற்சி இந்தியர்களிடையே அச்சத்தையும் அவநம்பிக்கையும் உண்டாக்கிற்று. புதிய கல்வித்திட்டம் பகையுணர்வை வளர்த்தது. புகைவண்டியும், கம்பியில்லாத தந்தியும் சூன்யவாதச் சதிச் செயல்களாகக் கருதப்பட்டன! சமுதாய மாற்றங்களால் குறிப்பாக பிராமணர்களும், புரோகிதர்களும் தங்களது பரம்பரைச் செல்வாக்கும், அதிகாரமும் அந்தஸ்தும் போய் விடுமோ என்றஞ்சினர். ஆங்கிலக் கல்வியும் உடன்கட்டை ஏறல் தடைச்சட்டமும், விதவை மறுமணச் சட்டமும் குழந்தைக்கொலைத் தடையும் புகைவண்டிகளில் அனைவரும் வேறுபாடின்றி அமர்ந்து பயணம் செய்ய ஏற்பாடு செய்ததும் பாரம்பரிய சமுதாயத்தை சீர்குலைத்துவிடுமோ என்று வைதீகர்கள் கவலையுற்றனர்.

மதக் காரணங்கள்

மதமாற்றம்

1813 பட்டயச் சட்டம் (The charter Act of 1813) கிறித்துவ மதப்பிரச்சாரகர்கள் இந்தியாவில் தங்குதடையின்றித் தங்களது பணியைச் செய்ய வழிவகுத்தது. அவர்களது சமயப் பிரச்சாரப் பணி இந்தியாவின் பட்டிதொட்டிகளெங்கும் பரவியது. பல நேரங்களில் மதப் பிரச்சாரக் கூட்டங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஆதரவில் நடைபெற்றன. மத ஏலாநிலைச் சட்டம் (1856) இந்துக்கள் கிறித்துவ மதத்திற்கு மாறுவதை ஊக்குவித்தது. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மேற்கொள்ளப்பட்ட மதபோதனை மதமாற்ற உள்நோக்கம் கொண்டது என்று சந்தேகிக்கப்பட்டது. மருத்துவ விடுதிகளிலும் இராணுவத்திலும்கூட கிறித்துவ மதப்பிரச்சாரம் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டது. யாவற்றுக்கும் மேலாக இந்துக்களின் தெய்வங்களையும் தெய்வ நம்பிக்கைகளையும் மதச் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் நடைமுறைகளையும் கேலியும் நிந்தனையும் செய்து மேற்கொள்ளப்பட்ட பிரச்சாரமும் வெளியிடப்பட்ட புத்தகங்களும் பிரகரங்களும் இந்துக்களின் மனதைப் புண்படுத்தின. கிறித்துவ மதபோதகர்கள் இந்தியாவையே கிறித்துவமயமாக்கி விடுவார்களோ என்ற சூழ்நிலை உருவாயிற்று. குறிப்பாக இந்துக்கள் அதை எதிர்க்கத் துணிந்தனர். இந்தியா முழுவதுக்கும் ஒரு இரயில்வேதான் உள்ளது. ஒரு கம்பியில்லாத் தந்தி முறைதான் உள்ளது. ஒரு சட்டமுறைதான் உள்ளது. அதேபோன்று ஒரே மதம்தான் இருக்க வேண்டும். அதுவே 'கிறித்துவ மதம்' என்ற அடிப்படையில் வெளியான 'எட்மாண்டின் கடிதங்கள்' (Edmond's lettes) எதிர்ப்பாளர்களைக் கிளர்ச்சிக்காரர்களாக்கின.

இராணுவக் காரணங்கள்

ஆங்கிலேயர்கள் தங்களது இராணுவ வலிமையால் தான் அவர்களது ஆட்சியையும் ஆதிக்கத்தையும் இந்தியாவில் நிலைநாட்டினர். அச்சூழ்நிலை ஏற்படுத்தி இந்தியர்களை அவர்கள் ஆட்டிப் படைத்தனர் ஆனால் ஆப்கானியப் போரில் (1841-1842) ஆங்கிலேயர்கள் 20,000 வீரர்களை இழந்து, 50 கோடி ரூபாய் செலவிட்டுத் தோல்வியுற்றது. அவர்களது இராணுவ வலிமையின்மீது விழுந்த பேரிடியாயிற்று. ஆங்கிலேயரது இராணுவம் வெல்ல முடியாதது என்ற மாயை விலகியது. அதேபோன்று கிரிமியப் போரில் (1854-55) ஆங்கிலேயர் தோல்வியுற்றதும் ஆங்கிலேய இராணுவத்தையும் தோற்கடிக்க முடியும் என்பதை உறுதிப்படுத்தியது. அத்தோல்விகள் இந்தியச் சிப்பாய்களிடையே புதிய நம்பிக்கையையும் உற்சாகத்தையும் கொடுத்தன.

இந்தியச் சிப்பாய்கள் தங்களது குறைந்த ஊதியம், பதவி உயர்விற்கான வாய்ப்பின்மை, பிற குறையுடைய பணிநிலைகள் பற்றி பெரிதும் அதிருப்தியுற்றிருந்தனர். நெருப்புச் சலுகைகள் எதுவுமின்றித் தொலை தூரங்களில் பணியாற்றுவதை அவர்கள் விரும்பவில்லை. கடல்தாண்டி அனுப்பப்படுவதை மேல்சாதி சிப்பாய்கள் வெறுத்தனர். அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த இலவச தபால் சலுகையை நிறுத்தியது (1854). வெளிநாடுகளில் நிறமைக் குறைவாகச் செயல்படும் சிப்பாய்களுக்கு ஓய்வூதியமில்லை என்று சட்டம் கொண்டு வந்தது (1856) போன்ற நடவடிக்கைகள் சிப்பாய்களிடையே வெறுப்பை வளர்த்தன. நிறமையுடன் பணியாற்றிய இந்திய இராணுவ அதிகாரிகளுக்குப் போதிய பதவி உயர்வுகள் அளிக்கப்படாமையால் அவர்களும் மனநிறைவின்றி இருந்தனர். சிப்பாய்களும் அதிகாரிகளும் தங்களிடையே மேற்கொள்ளப்பட்ட மதப்பிரச்சாரத்தாலும், மதமாற்ற முயற்சிகளாலும் சினமுற்றனர். இங்கிலாந்து மேற்கொண்ட பல போர்களின் விளைவாக ஆங்கிலேய இராணுவ வீரர்கள் இந்திய இராணுவத்திலிருந்து பிரிக்கப்பட்டுப் பிற இடங்களுக்கு அனுப்பப்பட்டனர். அதனால் ஒரு ஆங்கிலேய வீரருக்கு ஐந்து இந்திய சிப்பாய்கள் என்ற விகிதத்திலிருந்தனர். அது சிப்பாய்களுக்குத் துணிச்சலைத் தந்தது. டெல்லி, கான்பூர், அலகாபாத் போன்ற பகுதிகள் சிப்பாய்களின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தன. இவையாவும் சிப்பாய்கள் ஆங்கிலேய ஆட்சிக் கெதிராகக் கிளர்ச்சி செய்வதற்கான துணிவைத் தந்தன.

உடனடிக் காரணம்

1856ல் இந்திய இராணுவத்தில் புதிய என்பீல்டு துப்பாக்கிகள் (Enfield Rifles) அறிமுகப்படுத்தப்பட்டன. டம்டம், அம்பாலா, சியால்கோட் ஆகிய இடங்களில் அத்துப்பாக்கிகளைப் பயன்படுத்துவதற்கான பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டது. 1857ல் என்பீல்டு துப்பாக்கியில் செலுத்தப்படும் தோட்டாக்கள் பசு, பன்றி கொழுப்புக் கலவையால் பூசப்பட்டுள்ளன என்ற வதந்தி வங்காள இராணுவ சிப்பாய்களிடையே வேகமாகப் பரவிற்று. துப்பாக்கிக்குள் தோட்டா செலுத்தப்படுமுன் அதன் நுனிபாகத்தை வாயினால் கடிக்க வேண்டியிருந்ததால் இந்து சிப்பாய்களும் முஸ்லீம் சிப்பாய்களும் அருவருப்போடு வெறுத்தனர். பல்வேறு காரணங்களால் நாடு முன்னமேயே முற்றும் எரிமலையாக கொந்தளிக்கும் கடலாக இருந்தது. வெடி மருந்துக் கிடங்காயிருந்த சூழ்நிலையில்

Scanned by CamScanner

கொழுப்பு தடவப்பட்ட தோட்டா பற்றவைத்த நிக்குச்சியாய் அதில் விழுந்தது. இடங்கு வெடித்தது. கிளர்ச்சி துவங்கியது. எனவே 1857 பெருங்கிளர்ச்சி தன்னிச்சையால் எழுந்த தற்செயல் நிகழ்ச்சி அல்ல. மாறாக, அது ஆங்கிலேய ஆட்சிக்கெதிராக எழுந்த எதிர்ப்புணர்ச்சித் தேக்கத்தின் வடிகாலாகும். கொழுப்பு தடவப்பட்ட தோட்டா விவகாரம் அல்வடிகாலைத் திறந்துவிட்டது அவ்வளவே.

கிளர்ச்சியின் போக்கு

1857 ஜனவரி மாதம் கல்கத்தாவுக்கு அருகேயுள்ள டம்டம்மில் கொழுப்பு தடவிய தோட்டாக்கள் பற்றிய வதந்தி துவங்கியது. விரைவில் அது காட்டுத்தீ போல வங்காள சிப்பாய்களிடையே பரவியது. பெர்ஹாம்பூர் சிப்பாய்கள் முதலில் புதிய தோட்டாக்களை வாங்கிக் கொள்ள மறுத்தனர் (பிப்ரவரி 26). இராணுவ அதிகாரி மிட்செலால் (Mictchell) கண்டிக்கப்பட்ட அவர்கள் அன்று நள்ளிரவில் கூச்சலிட்டுத் தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்தனர். பின்னர் மங்கள் பாண்டே (Mangal Pandey) என்ற பிராமண சிப்பாய் சார்ஜண்ட் மேஜரை நோக்கிச் சுட்டார். லெப்டினன்ட் பௌ படுகாயமுற்றார் (மார்ச்29). பாண்டே மரண தண்டனை பெற்றார்.

பெர்ஹாம்பூருக்கடுத்து மீரட்டில் சிப்பாய்கள் கிளர்ச்சி செய்தனர் (ஏப்ரல் 24). 85 குதிரைப்படை வீரர்கள் தோட்டாக்களைத் தொட மறுத்தனர். அவர்களுக்கு பத்தாண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. அவர்களின் கைகளில் விலங்கிடப்பட்டுப் பயிற்சி மைதானத்தில் பொது மக்களுக்குத் தெரிய நடக்கவிடப்பட்டு அவமானப்படுத்தப்பட்டனர் (மே 9). அடுத்த நாள் அவமதிக்கப்பட்ட சிப்பாய்கள் இருந்த மூன்றாம் குதிரைப் படையினர் சிறைச்சாலையை உடைத்து கைதிகளை விடுவித்தனர். கர்னல் பின்னல் கொல்லப்பட்டார். சிப்பாய்களும் விடுவிக்கப்பட்ட குற்றவாளிகளும் ஐரோப்பியர்களைக் கொன்றனர். அவர்களது வீடுகளைக் கொளுத்தினர். அன்றிரவே கிளர்ச்சிக்கார சிப்பாய்கள் மீரட்டை விட்டுவெளியேறி அடுத்த நாள் காலை டெல்லியை அடைந்தனர்.

சுமார் 2000 ஆயுதம் தரித்த மீரட் குதிரைப் படை வீரர்கள் டெல்லியை அடைந்தபோது (மே 11) அவர்கள் உற்சாகமாக வரவேற்கப்பட்டார்கள்! 'அந்திய ஆட்சி வீழ்க', 'பேரரசர் பஹதூர்ஷா வெல்க' என்ற கோஷமிட்டனர் கிளர்ச்சிக்காரர்கள். டெல்லியிலிருந்த காலாட்படையினரும் மீரட் கிளர்ச்சிக்காரர்களுடன் சேர்ந்து கொண்டனர்! கர்னல் நிப்ளையும் பிற ஆங்கிலேய அதிகாரிகளும் கொல்லப்பட்டனர். ஆங்கிலேயரது பங்களாக்கள் தீக்கிரையாயின. செங்கோட்டை (Red Fort) கைப்பற்றப்பட்டது. பஹதூர்ஷா பேரரசரெனப் பிரகடனப்படுத்தப்பட்டார். உயிரினும் மேலான நாட்டையும் மதத்தையும் அந்திய ஆபத்தினின்றும் காப்பாற்றும்படிப் பேரரசர் பஹதூர் ஷாவும் ஒரு பிரகடனத்தை வெளியிட்டார். 1857 மே 16 அன்று பேரரசர் பஹதூர் ஷாவின் தலைமையில் முறைப்படி டில்லி விடுவிக்கப்பட்டது.

டில்லியின் வீழ்ச்சிக்குப் பிறகு கிளர்ச்சி சூறைக் காற்றென சுழன்றடித்தது. பிரோஸ்பூர், முஸபர்பூர், அலிகார், பஞ்சாப் ஆகிய இடங்களில் சிப்பாய்கள் கிளர்ச்சி செய்தனர். அயோத்தியிலும் வடமேற்கு மாநிலத்திலும் பல கிளர்ச்சிக்கார

சிப்பாய்கள் இருந்தனர். சிப்பாய்க் கிளர்ச்சியோடு பொது மக்களும் கிளர்ந்தெழுந்தனர். விரைவிலேயே லக்னோ, பரேலி, கான்பூர், ஆக்ரா, ஜான்சி, மத்திய இந்தியா, பத்தேல் கண்டு போன்ற பகுதிகளுக்குக் கிளர்ச்சி வேகமாகப் பரவியது. அங்கெல்லாம் ஆங்கிலேயர்கள் கொல்லப்பட்டனர். அவர்களது உடைமைகள் அழிக்கப்பட்டன.

கிளர்ச்சி ஒடுக்கப்படல்

டில்லியின் வீழ்ச்சி ஆங்கிலேயருக்கு அதிர்ச்சியைத் தந்தது. கிளர்ச்சி பரவிய வேகம் அவர்களுக்குக் கவலையைக் கொடுத்தது. கான்பூரில் ஆங்கிலேயரது குடும்பங்களைப் பாதுகாப்பதாக வாக்களித்து அவர்களை சமரசக்கமின்றிக் கொலை செய்த நானாசாகிப்பின் செயல் ஆங்கிலேய அதிகாரிகளின் கெஞ்சத்தைத் தூண்டியது. கிளர்ச்சியை ஒடுக்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டார் கவர்னர் ஜெனரல் காலிங் பிரபு. சீனா நோக்கிச் சென்று கொண்டிருந்த மீட்புப்படை கல்கத்தாவுக்குத் திருப்பப்பட்டது. பஞ்சாபிலிருந்த முதன்மைக் கமிஷனர் ஜான் லாரன்ஸ் முடிந்த அளவு சீக்கிய, ஐரோப்பிய வீரர்களை டில்லிக்கு அனுப்புமாறு கட்டளையிடப்பட்டார். போர் வீரர்களை அனுப்புமாறு இலங்கை ஆளுநரும் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

1857 மே மாத இறுதியில் சென்னையிலிருந்து வந்த கர்னல் ஜேம்ஸ் நீல் அடுத்த மாதமே பனாரஸையும், அலகாபாத்தையும் கிளர்ச்சிக்காரர்களின் பிடியினின்றும் மீட்டார். தளபதி ஹென்றி ஹேவ்லாக், நானாசாகிப்பைப் பல இடங்களில் தோற்கடித்தார். கான்பூருக்குள் நுழைந்து ஹேவ்லாக் இந்தியர்களைப் பழி வாங்கினார். பின்னர் லக்னோவிற்குச் சென்று பல வெற்றிகளைப் பெற்றார். (ஜூலை, ஆகஸ்டு) தளபதி ஜான் நிக்கல்ஸன் நான்கு நாட்கள் தாக்குதலுக்குப் பின்னர் டில்லியை மீட்டார் (செப். 20). பேரரசர் பஹதூர்ஷா சரணடைந்தார். டில்லியை மீட்ட ஐந்து நாட்களில் லக்னோ ஆங்கிலேயர் வசமாயிற்று. ஹேவ்லாக்கும், ஜேம்ஸ் உட்ரோமும் அச்சாதனை புரிந்தனர். பின்னர் பரேலி கைப்பற்றப்பட்டது. அயோத்தியின் உறுதியான எதிர்ப்பு நேபாளத்தின் துணையோடு சர்விகான் கேம்பல்லால் முறியடிக்கப்பட்டது.

மத்திய இந்தியாவில் கிளர்ச்சியை அடக்கும் பொறுப்பு சர் ஹுக்ரோஸ்லிடம் விடப்பட்டது. ராணி இலட்சுமிபாய், தாந்தியா தோபே, குன்வார்சிங் ஆகிய மூவரது கூட்டு எதிர்ப்பை ரோஸ் சந்திக்க நேர்ந்தது. ரோஸ் ஜான்சி நகரைக் கைப்பற்றியபோது (1858 ஏப்ரல் 3) ராணி இலட்சுமி பாய் கோட்டையைவிட்டு வெளியேறி கல்பி தாந்தியா தோபேயுடன் சேர்ந்து கொண்டார். கிளர்ச்சிக்காரர்களின் துணையுடன் அவர்கள் துணிகரமாகக் குவாலியரைக் கைப்பற்றி நானாசாகிப்பை பேஷ்வாவாகப் பிரகடனப்படுத்தினர்! நானாவும் அவரது ஆதரவாளர்களும் பதவிப் பிரமாணக் கொண்டாட்டங்களில் தங்களது நேரத்தையும் பணத்தையும் பொருளையும் வீணடித்துக் கொண்டிருக்கும்போது ஆங்கிலேயப் படைகள் குவாலியரைச் சூழ்ந்து கொண்டன. ராணி இலட்சுமிபாய் மட்டும் ஆணுடை அணிந்து கிளர்ச்சிக்காரர்களுடன் தீரத்துடன் போரிட்டார். ஆனால், அவரது குதிரை கால் இடறியபோது கீழே விழுந்தார். விழுந்தவர் எழவே இல்லை. அவரை யாரென்று அடையாளம் தெரியாத ஒருவன் வெட்டிக்கொன்று விட்டான்! கிளர்ச்சிக்காரர்களிலேயே இலட்சுமிபாய்தான் சிறந்த

Scanned by CamScanner

துலிச்சல் மிக்க இராணுவத் தலைவர் என்று ஆங்கிலேயத் தளபதி சொல்லும் புகழாரம் சூட்டினார். சம்பல் பள்ளத்தாக்குக்குத் தப்பிச் சென்ற தாந்தியா தோபே மான்சிங் என்பவரால் காட்டிக் கொடுக்கப்பட்டு, பிடிபட்டு தூக்கிலிடப்பட்டார். நானாசாகிப் தனது குடும்பத்தினரோடு நேபாளத்துக்குச் சென்று விட்டார். கிளர்ச்சி அடக்கப்பட்டது.

தோல்விக்கான காரணங்கள்

நன்கு துவக்கப்பட்ட கிளர்ச்சி மோசமாகத் தோல்வியடைந்ததற்குப் பல காரணங்கள் இருந்தன. முதலாவதாக, கிளர்ச்சிக்காரர்களுக்கிடையே பொதுவான குறிக்கோள் எதுவுமில்லை. சிப்பாய்களோ, தலைவர்களோ, மக்களோ நாட்டுப்பற்றால் உந்தப்படவில்லை. அவர்களுடைய நோக்கங்கள் பலவாகவும் முரண்பட்டவையாகவும் இருந்தன. இரண்டாவதாக, கிளர்ச்சிக்காரர்களுக்குத் தக்க, நிறமையான தலைமை அமையவில்லை. நானாசாகிப் ஆங்கிலேயரைப் பழிவாங்கும் கொடுமைக்காரராகவும் பதவிப் பித்தராகவும் இருந்தார். இலட்சுமிபாய் சிறந்த வீராங்கனை. ஆனால் கிளர்ச்சியை வழிநடத்த அவரால் முடியவில்லை. குன்வார் சிங்கும், தாந்தியா தோபேயும் சலியாது போரிட்டனர். ஆயினும் அவர்களால் கிளர்ச்சியை சரியான திசையில் கொண்டுபோக முடியவில்லை. மௌல்வி அப்துல்லா, பீஹாம், தாலுக்தார்கள் ஆகியோர் அயோத்தியில் தங்களுக்குள் ஒற்றுமையின்றி கிளர்ச்சிலீடுபட்டனர். சுருங்கக்கூறின், கிளர்ச்சியின் தலைவிதியைத் தீர்மானிக்கத்தக்க தலைவர் எவருமிலர். மூன்றாவதாக, நன்கிணைக்கப்பட்ட கிளர்ச்சித்திட்டம் எதுவுமில்லை. அதனால் கிளர்ச்சிகள் ஆங்காங்கே துவக்கப்பட்டனவேயொழிய அவை யாவும் ஒரு இலக்கு நோக்கிக் கொண்டு செல்லப்படவில்லை. நான்காவதாக, கிளர்ச்சி வடக்கு, மத்திய இந்தியாவோடு நின்றுவிட்டது. அங்கும் சிந்துவும், ராஜபுதனமும் கிளர்ச்சியில் கலந்து கொள்ளவில்லை. தென்னிந்தியக் கிளர்ச்சிக்கும் வேலூர் கிளர்ச்சிக்கும் நிலைக்களனாக இருந்த தென்னிந்தியா இக்கிளர்ச்சியால் பாதிக்கப்படவில்லை. கிளர்ச்சி நகரங்களில் நடைபெற்றதால் கிராமங்கள் ஈடுபாடு கொள்ளவில்லை. ஐந்தாவதாக, இந்திய அரசர்கள் பலர் ஆங்கிலேயரை விசுவாசத்துடன் ஆதரித்தனர். சிந்தியாவும் ஹோல்காரும் ஆங்கிலேயருக்குக் கேடயங்களாகப் பயன்பட்டனர். குவாலியரில் சர்தின் கர்ராவும், ஹைதராபாத்தில் சர் சலஸர் ஜங்கும் அமைதி காத்தனர். நல்ஹா, பாட்டியாலா, ஜிந்த், கபூர்தலா அரசர்கள் தங்களது பகுதிகளில் கிளர்ச்சிகள் தோன்றாதவாறு பார்த்துக் கொண்டனர். கிளர்ச்சிகளை அடக்க கூர்க்காக்கள் உதவினர். ஆப்கானிய தோஸ்த் முகமது நடுநிலை வகித்தார். எட்டாண்டுகளுக்கு முன் இணைக்கப்பட்ட பஞ்சாப்கூட கிளர்ச்சியை ஒடுக்க ஆங்கிலேயருக்குத் துணை நின்றது. இறுதியாக, ஆங்கிலேயரின் தெளிவான குறிக்கோள், பொதுத்திட்டம், மைய அமைப்பு, போர் முறை, வசதிகள், போர் வீரர்களிடையே இருந்த கட்டுப்பாடு, நிறமையான தளபதிகளின் சேவை போன்றவை துவக்கத் தோல்விகளை இறுதி வெற்றிகளாக்கின. லாரன்ஸ் சகோதரர்கள் லக்னோவில் ஹென்றி, பஞ்சாபில் ஜான், ராஜபுதனத்தில் ஜார்ஜ்-ஹேவ்லாக், ஜேம்ஸ், நீல், ஜேம்ஸ் உட்ராம், காலின் கேம்பல், ஜான் நிக்கல்சன், ஹக் ரோஸ் ஆகியோரின் இராணுவத் தலைமை கிளர்ச்சி அடக்கப்படப் பெரிதும் காரணமாயிருந்தது.

கம்பெனி நிர்வாகம் தந்திமூலம் செய்திகளைத் துரிதமாக அனுப்ப முடிந்தது கடலாதிக்கத்தால் தாய் நாட்டின் ஆதரவை எளிதில் பெற முடிந்தது. கிளர்ச்சி துவங்குவதற்கு முன்பே பாரசீகப் போர் முடிந்தது ஆங்கிலேயருக்கு அனுகூலமாயிற்று.

கிளர்ச்சியின் தன்மை

1857 பெருங்கிளர்ச்சியில் தன்மை, சிறப்பு பற்றிப் பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. அவை யாவும் இக்கிளர்ச்சியைப் பற்றிய மூன்று தன்மைகளைக் கோடிட்டுக் காட்டுவனவாக உள்ளன. அவையாவன:

1. சிப்பாய்க் கலகம்
2. மக்கள் கிளர்ச்சி
3. சுதந்திரப் போர்

சிப்பாய்க் கலகம்

1857 பெருங்கிளர்ச்சி 'பெருமைப்படுத்தப்பட்ட வேலூர் கலகம்' என்று வர்ணிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட அதிருப்தியுற்ற சிப்பாய்களின் எழுச்சியே 1857 கலகம் என்பது ஒரு சாராரது வாதம். இவர்கள் சமகால ஆதாரங்களின் அடிப்படையில் இந்த முடிவுக்கு வருகின்றனர். ஆரம்பத்திலிருந்து இறுதி வரை அது ஒரு சிப்பாய்க் கலகமே என்று எழுதியது 'எடின்பரோ ரிவ்யூ'. அதே கருத்தை சர் ஜான் லாரன்ஸ், சீலி போன்ற சமகாலத்தவர்கள் எழுதியுள்ளனர். கிஷோர் சந்த் மிஸ்ரா, சம்பு சந்திர முகோபத்தியாயா, ஹரீஸ் சந்திரமுகர்ஜி, சர் சயது அகமது, ஜீவன்லால் முன்ஷி, மைனுதின், துர்காதாஸ் பந்தோபாத்யாயா போன்ற சமகால இந்தியர்களும் இக்கருத்தையே வலியுறுத்தியுள்ளனர். பிரிட்டிஷ் இந்திய சங்கமும் கல்கத்தா முகமடன் சங்கமும் 1857 நிகழ்ச்சியைக் கண்டித்து தீர்மானங்கள் இயற்றின. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தாதாபாய் நௌரோஜி மக்கள் பங்கேற்காத சிப்பாய்க் கலகம் என்றே கூறினார். இந்திய விடுதலைப் போராட்டத்தைப் பற்றி விரிவாக ஆராய்ந்து எழுதிய ஆர்.சி. மஜும்தார்கூட ஓரளவு மக்கள் பங்கு பெற்ற, ஆனால் பெரிதும் சிப்பாய்களின் எழுச்சியே 1857 நிகழ்ச்சி என்ற முடிவுக்கு வந்தார்.

மக்கள் கிளர்ச்சி

1857-58ல் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பரங்கியருக்கெதிராகப் பொதுமக்கள் செய்த கிளர்ச்சியே என்பது மற்றொரு சாராரது வாதம். எங்கெல்லாம் ஆட்சி சீர்குலைந்ததோ அங்கெல்லாம் மக்கள் கிளர்ச்சி செய்தனர். கூஜார்கள், ரங்கார்கள், ஜாட்குல மக்கள் ஆகியோர் கிளர்ச்சியில் முக்கியப் பங்கேற்றனர். முஸபர் நகர், சஹாரன்பூர், புதௌன், அலிகார், மதுரா, பண்டா, ஹமீர்பூர் போன்ற இடங்களில் ஏற்பட்ட கிளர்ச்சிகளனைத்தும் மக்களால் மேற்கொள்ளப்பட்டவையே. சிப்பாய்க் கலகம் மக்கள் கிளர்ச்சியோடு ஜக்கியப்பட்டுவிட்டது. எனவே 1857ல் ஆங்கிலேய ஆட்சிக்குச் சவாலாக அமைந்த அது மக்கள் கிளர்ச்சியே என்று கூறப்படுகிறது.

Scanned by CamScanner

சுதந்திரப் போர்

1857 கிளர்ச்சி, இந்திய சுதந்திரப்போர் எனவும் வர்ணிக்கப்பட்டுள்ளது. ஜேம்ஸ் உட்ராம், எட்வர்டு தாம்ப்ஸன், பி.இ.ராபர்ட்ஸ், வி.டி.சவார்க்கர், எஸ்.சாட்டர்ஜி, அசோக மேத்தா, எஸ்.என்.சென் போன்றோர் இக்கருத்தைத் தெரிவித்துள்ளனர். 'இந்திய சுதந்திரப்போர்' என்ற தலைப்பில் சவார்க்கர் ஒரு பெரிய நூலையே எழுதியுள்ளார். குறிக்கோள், திட்டம், அமைப்பு, எதிலுமே ஆயுலை இருந்தமையால் 1857 நிகழ்ச்சியை சுதந்திரப் போராட்டம் எனக் கூறலாம் என்பது சவார்க்கர் போன்றோரது வாதம். இந்துக்களும் ஒன்று சேர்ந்து தங்களது நாட்டை அந்திய ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதே குறிக்கோள். பிப்பாய்கள் கொழுப்பு தடவிய தோட்டாக்களை வாய்க்க மறுத்தது, ஆங்கிலேய அதிகாரிகளைக் கொன்றது, சிறைச்சாலையை உடைத்து கைதிகளை விடுவித்தது, மீரட்டிலிருந்து புறப்பட்டு டில்லிக்கு வந்தது, டில்லையைக் கைப்பற்றியது, பஹதூர் ஷாவைப் பேரரசர் எனப் பிரகடனப்படுத்தியது, பிற இடங்களில் கிளர்ச்சியைத் தோற்றுவித்தது, ஆகியவை நன்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளாகும். சிப்பாய்களிடையே ஒழுங்கான அமைப்பிருந்தது. அவர்களது அமைப்பில் மக்கள் தலைவர்களும் சேர்ந்து கொண்டனர். மௌல்வி அஹமதுல்லா, நானாசாகிப், ராணி இலட்சுமிபாய் போன்றோர் கலந்துபேசிச் சதித்திட்டம் தீட்டினர். யாத்திரை என்ற பெயரில் நானாசாகிப் டில்லி, அம்பாலா, லக்னோ, கால்பி, சிம்லா ஆகிய இடங்களுக்குச் சென்று இரகசிய ஆலோசனைகள் நடத்தினார். பக்கிர்கள், மௌல்விகள், பண்டிட்டுகள், சன்யாசிகள் போன்றோர் இரகசியமாகப் பிரச்சாரம் செய்தனர். இலட்சுமிபாய் தனது குடும்பப் புரோகிதருக்கு கிளர்ச்சி பற்றிக் கடிதம் எழுதினார். தாமரைச் சப்பாத்திகள் சிப்பாய்களிடையேயும், மக்களிடையேயும், இரகசியமாக விநியோகிக்கப்பட்டன. டில்லி கைப்பற்றப்பட்ட உடனேயே பஹதூர்ஷா இந்தியப் பேரரசரெனப் பிரகடனப்படுத்தப்பட்டார். எனவே 1857 நிகழ்ச்சி இந்திய சுதந்திரப் போர்தான் எனப் பலர் வாதாடுகின்றனர்.

ஆர்.சி. மஜும்தார் போன்றவர்கள் இக்கூற்றைப் பலமாக மறுத்துள்ளனர். 1857 போராட்டம் முதல் போராட்டமல்ல; அதில் தேசியம் இல்லை; இந்திய விடுதலை அதன் நோக்கமன்று என்பதை மஜும்தார் சுட்டிக் காட்டியுள்ளார். அது, அடிப்படையில் ஒரு சிப்பாய் கலகம் அவ்வளவே. பாதிக்கப்பட்ட அரசர்கள், நிலச்சுவான்தார்கள், தாலுக்தார்கள் ஆகியோர் தங்களது சுயநலன்களைப் பாதுகாக்கவே கிளர்ச்சியில் ஈடுபட்டனர். மக்கள் தேசிய உணர்வால் உந்தப்பட்டு கிளர்ச்சியில் கலந்து கொள்ளவில்லை. வெள்ளையனை விரட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் கிளர்ச்சி செய்தாலும் அது மட்டும் சுதந்திரப் போராகி விடாது. கிளர்ச்சி இந்தியா முழுமைக்கும் பரவவில்லை. சிப்பாய்களும், பொதுமக்களும் ஒருங்கிணைந்து போராடவில்லை. பஹதூர் ஷாவின் பிரகடனமும் பிற பிரகடனங்களும் மதத்தின் அறிப்பை வலியுறுத்தினவேயன்றி நாட்டு விடுதலையைக் கோரவில்லை. போராட்டம் தெளிவான பொது நோக்கோடு, திட்டமிட்டு அமைப்பை ஏற்படுத்தி, பொதுத் தலைமையின்கீழ் நடைபெறவில்லை. பல இடங்களில் இந்து முஸ்லீம்களுக்கிடையே, விவசாயிகள் நிலச்சுவான்தார்களுக்கிடையே, வர்த்தகர்கள், வருவாய்த்துறை ஊழியர்களுக்கிடையே மோதல்கள்

ஏற்பட்டுள்ளன. பழைய நிலமானிய முறைக்கும் புதிய முன்னேற்ற முறைக்குமிடையே ஏற்பட்ட மோதலேயன்றி 1857 கிளர்ச்சி இந்திய சுதந்திரப் போராட்டமல்ல. இங்கிலாந்தியை எதிர்த்துவர்களுக்கெதிராக நடத்தப்பட்ட கலகம் என்றும் வெள்ளையருக்கும் கருப்பருக்குமிடையே ஏற்பட்ட இனக்கலவரம் என்றும் நாகரிகத்துக்கும் அநாகரிகத்துக்குமிடையே நடந்த மோதல் என்றும் பொருளாதாரச் சுரண்டலை எதிர்த்து விவசாயிகள் மேற்கொண்ட வர்க்கப் போராட்டம் என்றும் வாதிப்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதாயில்லை. 1857 கிளர்ச்சி வெறும் சிப்பாய்க் கலகம் மட்டுமன்று; அது இந்திய சுதந்திரப் போராட்டமுமன்று; ஆங்கிலேய ஆட்சியால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட பல்வேறு பகுதியினரும் அந்திய ஆதிக்கத்துக்கெதிராக பரவலாக மேற்கொண்ட போராட்டமாகும்.

கிளர்ச்சியின் விளைவுகள்

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் முக்கிய நிகழ்ச்சியான 1857 பெருங்கிளர்ச்சி கீழ்க்கண்ட விளைவுகளுக்குக் காரணமாயிருந்தது:

1. 1858 நவம்பர் முதல் தேதி போரசி விக்டோரியா வெளியிட்ட பிரகடனம் நிலவிணைப்பு, அவகாசியிலிக் கொள்கைகளைக் கைவிட்டு, பிரிட்டிஷ் பேரரசு இந்திய அரசுகளின் நில உரிமைகளை அங்கீகரித்தது. உதாரணமாக, இந்திய அரசர்களின் வாரிசுரிமைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதேபோன்று அவர்கள் கம்பெனியுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.
2. இந்தியா இங்கிலாந்தின் முடியாட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது
3. இந்திய மைய நிர்வாகம் மேலும் பலப்படுத்தப்பட்டது.
4. இந்திய இராணுவத்தில் பெரிய மாற்றங்கள் செய்யப்பட்டன. தனித்தனியாகச் செயல்பட்ட மன்னர் படைப்பிரிவும், கம்பெனிப் படைப்பிரிவும் ஒன்றாக இணைக்கப்பட்டன. ஐரோப்பியப் படைவீரர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. சீக்கியர் பிரிவு, ஜட் பிரிவு, கூர்க்கா பிரிவு என்று இந்தியச் சிப்பாய்கள் பிரிக்கப்பட்டனர்.
5. பேஷ்வா இரண்டாம் பாஜிராவின் வாரிசு நானாசாகிப் முகலாயப் பேரரசர் பஹதூர்ஷா போன்ற முரண்பாடுகள் நீக்கப்பட்டன.
6. மதசுதந்திரமும் அரசியல், சமூக, அரசியல், நிர்வாக, இனசமத்துவமும் வழங்கப்பட்டது.
7. நீதித்துறை சீர்திருத்தம் செய்யப்பட்டு, ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு உயர் நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டது.
8. ஆங்கிலேயர்களுக்கும் இந்தியர்களுக்குமிடையே மனக்கசப்பு மேலும் வளரலாயிற்று.
9. கிளர்ச்சியில் முஸ்லீம்கள் நிவிர பங்கேற்றனர் என்பதற்காக அவர்கள் கடுமையாக நடத்தப்பட்டனர். அதனால் அவர்களது முன்னேற்ற தடைப்பட்டது.
10. நிலவிணைப்புக் கொள்கையைக் கைவிட்ட இங்கிலாந்து, பொருளாதார சுரண்டல் கொள்கையைக் கட்டவிழ்த்துவிட்டது. இங்கிலாந்தின் புதிய கொள்கை இந்தியரிடையே தேசிய உணர்வுகளை ஊக்குவித்தது. தேசிய உணர்வுடன் இந்தியர்கள் நாட்டு விடுதலைக்குப் போராட அது வழிகோலியது.

Scanned by CamScanner

1800 1801ல் நடைபெற்ற தென்னிந்தியக் கிளர்ச்சியும், 1857-1858ல் நிகழ்ந்த பெருங்கிளர்ச்சியும் இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் இடம்பெறத்தக்க பெருமைக்குரிய நிகழ்ச்சிகள் என்பதில் ஐயமில்லை. இரண்டுமே ஆங்கிலேய ஆட்சி ஆதிக்கத்துக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட தீர்மானமான, தீவிர, வன்முறைக் கிளர்ச்சிகளாகும். இரண்டு கிளர்ச்சிகளும் கம்பெனி நிர்வாகத்தில் ஆக்கிரமிப்பு, கரண்டல் கொள்கையின் காரணமாக ஏற்பட்ட மக்களின் மலக்கசப்பின் விளைவுகளேயாகும். இரண்டுமே முடியாட்சி, நிலமானிய நிறுவன மீட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளாகும். இரு கிளர்ச்சிகளும் உட்புற வெளிப்புற நிகழ்ச்சிகளிலிருந்து ஊக்கம் பெற்றன. முதலாவது கிளர்ச்சி திப்பு சுல்தானிடமிருந்தும், பிரெஞ்சுப் புரட்சியாளரிடமிருந்தும் ஊக்கம் பெற்றது. இரண்டாவது கிளர்ச்சி பல்வேறு மலைவாழ் மக்கள் கிளர்ச்சிகள், ஆப்கானியக் கிளர்ச்சிக்காரர்களிடமிருந்து உற்சாகம் பெற்றது. இரண்டு கிளர்ச்சிகளுமே பரவலான பகுதிக்கு விரிவடைந்தது. தென்னிந்தியக் கிளர்ச்சிக்கு வெற்றிலை விநியோகம் அழைப்பு விடுத்ததைப் போன்று 1857 கிளர்ச்சிக்கு தாமரை சப்பாத்தி விநியோகம் அழைப்புக் கொடுத்தது. இரு கிளர்ச்சிகளுமே முதிராநிலையில் துவங்கப்பட்டுவிட்டன. ஒற்றுமையும் ஒருங்கிணைந்த தலைமையும் இன்மையால் இருகிளர்ச்சிகளும் தோல்வியடைந்தன. 1801ல் பல அரசர்கள் ஆங்கிலேயரை ஆதரித்தனர்; 1857ல் பல நிலமானிய சக்திகள் ஆங்கிலேயருக்குத் துணை போயின. இரண்டு கிளர்ச்சிகளும் தோல்வியுற்ற போதிலும் அவை வருங்கால சந்ததியினருக்கு சில சீர்திருத்தங்களையும் படிப்பினைகளையும் விட்டுச் சென்றன.

தென்னிந்தியக் கிளர்ச்சி, 1857 கிளர்ச்சி ஆகியவற்றுக்கிடையே ஒற்றுமைகள் இருந்ததைப் போன்றே வேற்றுமைகளும் இருந்தன. முதல் கிளர்ச்சி அடிப்படையிலேயே அரசியல், பொருளாதாரக் காரணங்களால் ஏற்பட்டது. இரண்டாவது கிளர்ச்சி அடிப்படையிலேயே இராணுவ மதக் காரணங்களால் துவக்கப்பட்டது. தலத்தலைவர்கள், விவசாயிகள் ஆகியோரின் துணையோடு பாளையக்காரர்கள் நடத்திய கிளர்ச்சி முன்னது. தாலுக்தார்களின் துணையோடு நிலமானிய சக்திகள் மேற்கொண்ட கிளர்ச்சி பின்னது. ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை மீட்பது, எஞ்சிய நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து காப்பதும் தென்னிந்தியக் கிளர்ச்சியின் நோக்கமாக இருந்தது. ஆங்கிலேயரை வெளியேற்றி தன்னாட்சியை ஏற்படுத்துவது 1857 கிளர்ச்சியின் குறிக்கோளாக இருந்தது. பிராந்தியக் கூட்டமைப்புகள், தென்னிந்தியக் கூட்டமைப்புகள், திண்டுக்கல் சதிபோன்று நன்கு அமைக்கப்பட்ட கட்டுக்கோப்போடு துவக்கப்பட்டது தென்னிந்தியக் கிளர்ச்சியாகும். ஆனால் அதுபோன்ற கூட்டமைப்பை வடஇந்திய கிளர்ச்சித் தலைவர்களால் உருவாக்க முடியவில்லை. 1801 கிளர்ச்சியில் பொதுமக்கள் பங்கேற்பு அதிகமாக இருந்தது. 1857 கிளர்ச்சியில் சிப்பாய்களின் பங்கே பிரதானமாயிருந்தது. தென்னிந்தியக் கிளர்ச்சியைவிட 1857 கிளர்ச்சி வன்முறையிலும், பழிவாங்கும் போக்கிலும், அழிவிலும் விஞ்சி நின்றது.

6. சமுதாய சமயச் சீர்திருத்த இயக்கங்கள்

இந்துக்கள் பின்பற்றும் மதமுறைகள் அவர்களது அரசியல் நலன்களைப் பாதுகாப்பதாயில்லை. அதேபோன்று சாதிவேறுபாடுகள் எண்ணிறந்த பிரிவுகளையும் உட்பிரிவுகளையும் ஏற்படுத்தி விட்டது. இது அவர்களிடையே நாட்டுப்பற்றை வளர விடாமல் செய்துவிட்டது.

- ராஜா ராம்மோகன் ராய்

1857 பெருங்கிளர்ச்சிக்குப்பின் ஐம்பதாண்டுகளில் இந்திய தேசிய உணர்ச்சி விரைவாக வளரலாயிற்று. பல சமுதாய, சமயச் சீர்திருத்தவாதிகள் தேசிய உணர்ச்சிக்கான அறிவு, ஆன்மீக உணர்ச்சி அடித்தளங்களை அமைத்துக் கொடுத்தனர். அவர்கள் அனைவருக்கும் சாதிமுறை, குழந்தைத் திருமணம், குழந்தைக் கொலை, விதவைகளை ஒதுக்கி வைத்தல், சமூக வேறுபாடுகள் ஆகிய சமுதாயக் கேடுகளைச் சாடினர். சமுதாயச் சீர்திருத்தம் வேண்டினர். சில சீர்திருத்தவாதிகள், சமுதாயக் கேடுகளுக்கும், கொடுமைகளுக்கும் வேதங்களிலும், உபநிடதங்களிலும் பரிகாரம் தேடினார்கள். வேறு சிலர் அறிவின் துணைகொண்டு, சமுதாய சமயப் பிரச்சினைகளைப் பகுத்தாராய்ந்து பரிகாரங் கூறினர். சீர்திருத்தம் (Reform) பழமை மீட்பு (Revival) பகுத்தறிவு (Rationalism) ஆகிய மூன்று வழிகளில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்திய சமுதாய சீர்திருத்தவாதிகள் தங்களது இயக்கங்களை நடத்தினர். பிரம்ம சமாஜம், பிரார்த்தனா சமாஜம், ஆரிய சமாஜம், ராமகிருஷ்ண இயக்கம், பிரம்மஞான சபை ஆகியவை இந்திய தேசிய உணர்வு அரும்ப அரும்பாடுபட்டன.

பிரம்ம சமாஜம்

ராஜா ராம்மோகன் ராய்

பிரம்ம சமாஜத்தைத் (Brahmo Samaj) தோற்றுவித்தவர் ராஜா ராம்மோகன் ராய் (1772-1883) ஆவார். வசதியான பிராமணக் குடும்பத்தில் பிறந்த ராம்மோகன் இளவயதிலேயே முற்போக்கு எண்ணங் கொண்டவராக இருந்தார். உருவ வழிபாட்டை எதிர்த்தார். அறியாமை, பொறையின்மை, மூடப்பழக்க வழக்கங்கள் ஆகியவற்றுக்கெதிராகப் போராடினார். உடன்கட்டை ஏறும் வழக்கத்திற்கு எதிராகப் போர் தொடுத்தார். சாதி முறையைச் சாடினார். பெண்கள் விடுதலைக்காகப் பாடுபட்டார். எண்ணச் சுதந்திரத்தையும் எழுத்துச் சுதந்திரத்தையும் இரு கண்களாகப் பாவித்தார். நிர்வாகத் துறையும் நிதித் துறையும் தனித்தனியே இருக்க வேண்டுமென்றார். மாபெரும்

Scanned by CamScanner

மனிதாபிமானியான ராஜா ராம்மோகன்ராய் அனைத்துத் துறைகளிலும் மனித விடுதலைக்காகப் பாடுபட்டார். பல கடவுட் கொள்கையைப் புறக்கணித்து ஒரே கடவுள் கொள்கையைப் போற்றினார். இறைவன் மனித குலத்துக்குப் பொதுவானவர்; அதேபோன்று சமயமும் மனித குலத்துக்குப் பொதுவாயிருக்க வேண்டும் என்பது அவரது கோட்பாடு. 'சர்வசமய சமரச சன்மார்க்கம்' ராஜா ராம்மோகன்ராய் காட்டிய ஆன்மிக வழியாகும். அவர் முற்போக்கு இந்தியாவின் முன்னோடித் தலைவர் ஆவார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமூதாய, சமயச் சீர்திருத்த இயக்கத்தின் தந்தை அவர். அதனால்தான் ராஜா ராம்மோகன்ராய் 'புதிய இந்தியாவின் விடிவெள்ளி' என்றும், 'முற்போக்கு ஆன்மிகக் கண்ட இந்தியக் கொலம்பஸ்' என்றும் போற்றப்படுகிறார்.

பிரம்ம சமாஜம்

1828 ஆகஸ்டு 20ஆம் நாள் பிரம்ம சமாஜம் ராஜா ராம்மோகன் ராயால் துவக்கப்பட்டது. 1830 ஜனவரி 23ஆம் நாளிலிருந்து அது முறைப்படி செயல்பட ஆரம்பித்தது. அது பிரம்ம சபை அல்லது ஒரே கடவுள் சங்கம் என்று அழைக்கப்பட்டது. பிரம்ம சமாஜம் பகுத்தறிவு சமூக சீர்திருத்தத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டது. இந்தியாவில் ஒரே கடவுள் கொள்கையை (Monotheism) நிலை நாட்டுவதே அதன் நோக்கம். பிரம்ம சமாஜத்தின் உறுப்பினர்கள் 'பிரமோக்கள்' (Brahmos) என்றழைக்கப்பட்டனர். இவர்கள் வழிபட்ட கடவுளுக்குப் பெயரோ, பட்டமோ, உருவமோ, திலையோ இடையாது. அனைவருக்கும் பொதுவான பரம்பொருளை வழிபட எல்லித வேறுபாடுமின்றி மக்கள் பிரம்ம சமாஜத்தில் அனுமதிக்கப்பட்டனர். கல்விபெற்ற மத்தியதர மக்கள் பெருவாரியாக பிரம்ம சமாஜத்தில் சேர்ந்தனர். ராஜா ராம்மோகன் ராயின் இம்முற்போக்கு ஆன்மிகப் பரிசோதனையை வங்கால வைதீகர்கள் கடுமையாக எதிர்த்தனர். பிரம்ம சமாஜத்துக்கெதிராகத் 'தர்ம சபை' (Dharma Sabha) என்ற போட்டி அமைப்பை அவர்கள் ஏற்படுத்தினர். இந்து சமுதாயம் கொந்தளிப்புக்குள்ளாயிற்று. முகலாயப் பேரரசர் அக்பரைப் போன்றே ராம்மோகன் ராயும் இந்திய மக்களை எளிய ஆன்மீக நம்பிக்கையால் ஒன்று சேர்த்துவிடலாம் என்று கனவு கண்டார்; அக்பரைப் போன்றே அவரும் மக்களிடையே இருந்த மூடநம்பிக்கையைக் குறைத்து மதிப்பிட்டு விட்டார் என்று வில்டூரண்ட் கூறியுள்ளார்.

ஆதிபிரம்ம சமாஜம்

ராஜா ராம்மோகன்ராய் இறந்த பின்னர் (1833) பிரம்ம சமாஜம் நலிவடைந்தது. ஆனால் அதன் நலிவைப் போக்கி இதற்குப் புதுப்பொலிவைக் கொடுத்த பெருமை தேவேந்திரநாத் தாகூரை (1817-1905) சாரும். அவர் 1859ல் துவக்கிய தத்துவபோதினி சபையை பிரம்ம சமாஜத்தோடு இணைத்தார் (1838). அவரது ஆதரவிலும் அரவணைப்பிலும் அச்சபை சிறந்த சமூகச் சீர்திருத்தக் கருவியாகப் பயன்பட்டது. பல அறிவொளிமிக்க இந்துக்கள் சங்கத்தில் சேர்ந்தனர். சங்கத்தில் கருத்துப் பிரச்சாரமும், சமூக சீர்திருத்த நடவடிக்கைகளும் கிராமங்களுக்கெல்லாம் ஊடுருவிச் சென்றன. சமூகச் சீர்திருத்தத்தில் தாகூர் போதிய தீவிரம் காட்டவில்லை என்பதால் அவரது பிரதம சீடரான கேசவ் சந்திரசென் (Keshab Chandra Sen) பிரம்ம சமாஜத்தை விட்டுப் பிரிந்து சென்றார்.

தாகூரின் தலைமையில் இயங்கிய சங்கம் ஆதி பிரம்ம சமாஜம் என்றழைக்கப்பட்டது.

முற்போக்கு பிரம்ம சமாஜம்

பிரம்ம சமாஜத்திலிருந்து பிரிந்துவந்த கேசவ் சந்திரசென் (1839-1884) முற்போக்கு பிரம்ம சமாஜத்தை தோற்றுவித்தார். பிரம்மோக்கள் சாதியைக் கைவிட வேண்டும், உருவ வழிபாட்டை அறவே விலக்க வேண்டும் என்றார் அவர். இறுதித்துவக் கோட்பாட்டால் பெரிதும் கவரப்பட்ட கேசவ் சந்திரா மக்களிடையே மூடப்பழக்கங்களையும், அறியாமையையும் பரப்பி வந்த புரோகிதர்களைப் பழித்தும் இழித்தும் பேசினார். சாதிக் கட்டுப்பாடுகள் தகர்த்தெறியப்பட வேண்டுமென்றார். மனிதனுக்கோ அல்லது புனித புத்தகத்துக்கோ அடிமையாவது பாவம் என்றார். பெண் கல்வி, மதுவிலக்கு, ஈகை மற்றும் சமூக ஒழுக்க மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்டார் கேசவ் சந்திர சென். அவரது தலைமையில் சமாஜம் சக்திமிக்கச் சாதனமாகத் திகழ்ந்தது. அவரது அகில இந்திய சுற்றுப் பயணம் அவரது சமாஜத்துக்கு இந்தியக் கண்ணோட்டத்தைக் கொடுத்தது. தேசிய ஒற்றுமையை வளர்த்தது. பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்களை ஒரே மேடையில் கூட்டுவித்தது. பின்னர் சுரேந்திரநாத் பானர்ஜி மேற்கொண்ட முயற்சிக்கு கேசவ் சென்னின் நடவடிக்கை முன்மாதிரியாக அமைந்தது. அவர் முதல் அகில இந்தியத் தலைவராகத் திகழ்ந்தார். அவர் இறந்தபோது (1884) இந்தியா அவருக்கு அஞ்சலி செலுத்தியது. பின்னர் இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டபின் அதில் பல பிரம்மோக்கள் பிரதான பங்கேற்றனர்.

பிரார்த்தனா சமாஜம்

கேசவ் சந்திர சென்னின் பம்பாய்ப் பயணத்தின் (1861) விளைவாகத் துவக்கப்பட்டதே பிரார்த்தனா சமாஜமாகும். அந்த சமாஜம் ஆத்மராம் பாண்டுரங்காவின் தலைமையில் 1867 மார்ச் 31ஆம் நாள் துவக்கப்பட்டது. மகாதேவ கோவிந்த ராணடே, ராமகிருஷ்ண கோபால் பந்தர்கார் போன்ற பிரமுகர்கள் பிரார்த்தனா சமாஜத்தில் சேர்ந்தனர். 'சத்யமேவ ஜெயதே' அல்லது 'வாய்மையே வெல்லும்' என்ற வாசகத்தை தனது குறிக்கோளுரையாகக் கொண்டது பிரார்த்தனா சமாஜம்.

ஒரே கடவுள் கொள்கையும் சமுதாய சீர்திருத்தமும் பிரார்த்தனா சமாஜத்தின் இரண்டு குறிக்கோளாகும். உருவமற்ற இறை வழிபாட்டை சமாஜம் பின்பற்றியது. இந்து சமயத்தில் புறையோடிப் போயிருந்த ஊழல்களை அது வன்மையாகக் கண்டித்தது. சமயச் சடங்குகளை எதிர்த்தது. புனித நூல்களில் கூறப்பட்டுள்ளவை அனைத்தும் உண்மை என்பதை ஏற்க மறுத்தது. கடவுள் அவதாரங்களையும் அற்புத அதிசயச் செய்கைகளையும் கண்டித்தது. பக்தர்களுக்கும் பரமனுக்குமிடையே உள்ள இடைத்தரகர்களுக்கு இச்சமாஜத்தில் இடமில்லை. பிரார்த்தனா சமாஜம் நூற்றுக்கணக்கான துவக்க இடைநிலைப் பள்ளிகள்; இரவுப் பள்ளிகள், அநாதை இல்லங்கள்; மகிளா சமாஜங்கள், தாழ்த்தப்பட்டோர் மிஷன் சங்கங்கள் ஆகியவற்றை நடத்திற்று. குழந்தைத் திருமண தடுப்பு, விதவை மறுமணம், கலப்புத் திருமணம் போன்ற சமூகச்

Scanned by CamScanner

சிந்தனைகளையும் இந்த சமாஜம் தீவிரமாக மேற்கொண்டது. எம்.ஜி. ரானடே அகில இந்தியச் சீர்திருத்த இயக்கத்திற்கான திட்டம் வகுத்தார். இந்திய தேசிய சமூக மாநாடு அவரது ஏற்பாடுதான். இந்திய தேசிய காங்கிரஸைத் தோற்றுவித்தவர்களில் அவரும் ஒருவர். பூத்தர்கார், நாராயணன் சந்தவர்க்கர், கோபால கிருஷ்ண கோகலே போன்றோர் பிரார்த்தனா சமாஜத்தில் இருந்து பிரமுகர்களாகத் திகழ்ந்தார்கள்.

ஆரிய சமாஜம்

சுவாமி தயானந்த சரஸ்வதி

தயானந்த சரஸ்வதி (1824-1883) ஒரு குஜராத்தி வைதிக பிராமண குடும்பத்தில் பிறந்தார். இளவயதில் அவர் மூல சங்கரர் என்றழைக்கப்பட்டார். உண்மை, அறிவு, வாய்மை, விவேகம் ஆகியவற்றைத் தேடி அலைந்தார். மேற்கத்திய அறிவாலும், பண்பாட்டாலும் சிறிதும் பாதிக்கப்படாதவர் தயானந்தர். அவர் ஒரு வேத வித்தகர், விவாத வல்லுநர், வேத சமய மீட்பாளர், சமூக சீர்திருத்தவாதி, 'வேதத்துக்குத் திரும்பு' என்பதை அவர் தாரக மந்திரமாகக் கொண்டார். வேதத்தில் இல்லாதது வேறெதிலும் இல்லை என்பது அவரது துணிபு. வேதம் அறிவுச் சுரங்கம். தற்கால விஞ்ஞான விளக்கங்கள் அனைத்தும் வேதங்களில் காணக்கிடக்கின்றன. சாதி வேறுபாடற்ற வர்ணாசிரம தர்மத்தை அவர் வரவேற்றார். பிறப்பு ஒருவனது சாதியை நிர்ணயிக்கிறது என்ற அளவுகோலை தயானந்தர் ஏற்கவில்லை. கிராமத்தை அடித்தளமாகக் கொண்டு அரசியலமைப்பு அமைய வேண்டுமென்றார். அரசியலில் தேவையான வன்முறையைப் பிரயோகிக்கலாம் என்றார். பரம்பரை சாதிமுறை, தீண்டாமை, பல கடவுள் கொள்கை, உருவ வழிபாடு, குழந்தை திருமணம், உடன்கட்டை ஏறல் போன்றவற்றுக்கு வேதங்களின் அனுமதி இல்லை என்று ஆணித்தரமாகக் கூறினார் தயானந்தர். இந்தியாவை 'ஆரிய வர்த்தா' எனக் கூறிய தயானந்தர் ஒரு தீவிர தேசியவாதி. தேசத்தின் ஒழுக்கத் தூய்மையின் இன்றியமையாமையை வலியுறுத்தினார். மக்களிடையே அச்சமின்மை, சுயசார்புடைமை, சுயமரியாதை ஆகியவற்றை பற்றிப் பிரச்சாரம் செய்தார்.

சமாஜம்

1875ஆம் ஆண்டு ஆரிய சமாஜம் சுவாமி தயானந்த சரஸ்வதியால் பம்பாயில் துவக்கப்பட்டது. அதே ஆண்டில் அந்த சமாஜம் பஞ்சாபிலுள்ள லாகூரிலும் தோற்றுவிக்கப்பட்டது. ஆரிய சமாஜம் பஞ்சாபில் வேகமாக வளர்ந்தது. வேதங்கள் தவறில்லாதவை என்பதும் மறுபிறப்பு உண்டு என்பதும் ஆரிய சமாஜத்தின் அடிப்படைக் கொள்கைகள். சமாஜ உறுப்பினர்கள் வேதங்களைக் கட்டாயமாகப் படிக்க வேண்டும். ஆரிய சமாஜம் இஸ்லாம், கிறித்துவ சமயங்களுக்கு எதிராகத் துவக்கப்பட்டதால் அது இந்து சமயத்தை வானுயரப் போற்றிப் புகழ்ந்தது. அது ஆண்-பெண் சமத்துவம், சமுதாயச் சமத்துவம், அனைவருக்கும் பொதுவாய்ப்புகள், எல்லோருக்கும் அன்புடன் கூடிய ஈகை ஆகியவை பற்றிப் போதித்தது. ஆரிய சமாஜம் ஒரு சமுதாயச் சமயச் சீர்திருத்த இயக்கமாகும்.

சமாஜத்தின் சாதனைகள்

மக்களுக்கு சிறப்பாகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தொண்டு செய்வதையே ஆரிய சமாஜம் தனது கடமையாகக் கொண்டது. அதன் ஆணிவேர். சமாஜம் திருமணத்துக் கெதிராகப் போர் தொடுத்தது 1929ல் 'சாரதா சட்டம்' நிறைவேற்றப்படுவதற்குக் காரணமாயிருந்த 'ஹர்பிலாஸ் சார்தா' (Harbilas Sarda) ஒரு ஆரிய சமாஜக்காரர் என்பது நினைவுகூறத்தக்கது. விதவை மறுமணத்துக்காக சமாஜம் தீவிரப் பிரச்சாரம் செய்தது. பெண் கல்விக்காகப் பள்ளிகளைத் துவக்கியது. முன்னேற்றத்துக்காக ஆரிய சமாஜம் புரட்சிகரமான பணிகளில் ஈடுபட்டது. சுத்தி (Shuddhi) முறையின் மூலம் இந்து மதத்துக்கு மாறிய பலரையிழக்கணக்காலோரை மீண்டும் இந்து மதத்துக்குக் கொண்டுவர ஆரிய சமாஜம் காரணமாயிருந்தது. காயத்ரி மந்திரம் ஜெபித்து, பூணூல் போட்டு தீண்டத்தகாதோர் எனக் கருதப்பட்டோர் பிற இந்துக்களுக்குச் சமமாகக் கொண்டு வரப்பட்டனர்! 'இந்திய மறுமலர்ச்சியின் தந்தை' எனக் கருதப்படும் சுவாமி தயானந்த சரஸ்வதி இந்திய அரசியல் விடுதலைக்கான விதையையும் விதைத்துச் சென்றார். தீவிர தேசியத்தின் முன்னோடி அவர். மகாத்மா ஹன்ஸ்ராஜ், சுவாமி சிரத்தானந்தா, லாலா லஜபதிராய், முன்ஷிராமா, ராமதேவா ஆகியோர் ஆரிய சமாஜத்தினரே. அவர்கள் இந்திய விடுதலைப் போராட்டத்தில் தீவிர பங்கு கொண்டோராவர்.

இராமகிருஷ்ண இயக்கம்

ராமகிருஷ்ண பரமஹம்சர்

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் (1836-1886) சுவாமி தயானந்த சரஸ்வதியின் சமகாலத்தவர். தயானந்தரைப் போன்றே ராமகிருஷ்ணரும் மேலைநாட்டு மோகத்தால் சிறிதும் பாதிக்கப்படாதவர். ராமகிருஷ்ணர் கடவுளைக் காளி வடிவில் கண்டவர். பன்னிரண்டாண்டு காலச் சாதனைக்குப்பின் கிருஷ்ணனும், அல்லாவும், ஏசுவும் ஒரே கடவுளின் பல்வேறு வடிவங்களே என்ற உண்மையை உணர்ந்தார் அவர். அனைத்துச் சமயங்களின் அடிப்படை ஒன்றே என்பதை ராமகிருஷ்ணர் கோடிட்டுக் காட்டினார். பல்வேறு சமயக்கோட்பாடுகள் அனைத்தும் ஒரே கடவுளை அடைவதற்கான பாதைகளே என்பதை அவர் வலியுறுத்தினார். சமயத்தின் பேரால் மக்கள் பிரிக்கப்பட்ட போது ராமகிருஷ்ணர் தனது இறை ஒருமைப்பாட்டு அணுகுமுறையால் மக்களை ஒருங்கிணைத்தார். ராமகிருஷ்ணர் படித்தவரல்லர்; ஆயினும் படித்தோரெல்லாம் அவரை நாடிச் சென்று ஆன்ம அமைதி பெற்றனர். அவர் ஒரு மறை மெய்யாளராக (Mystic) விளங்கியபோதும் மனித நலனில் ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்தார். மனித சேவையே மகேசன் சேவை எனக் கருதியவர் ராமகிருஷ்ணர். ஜீவனில் சிவனைக் கண்டவர் அவர். ஒரு மனிதனுக்கு உதவ முடியுமானால் இருபது பிறவிகள் எடுக்கத் தயாராயிருப்பதாகக் கூறினார். அதனால்தான் அவரால் மனிதனிடம் கடவுளைக் காணும் பொறுப்பைச் சுவாமி விவேகானந்தரிடம் ஒப்படைக்க முடிந்தது. தற்காலச் சூழ்நிலையில் ராமகிருஷ்ண பரமஹம்சரைப் புரிந்து கொள்வது கடினம்; அவர் இறையருள் பெற்றவர் என்பதைப் பலரும் ஏற்றுக் கொள்கின்றனர் என்று ஜவஹர்லால் நேரு குறிப்பிட்டுள்ளார்.

Scanned by CamScanner

சுவாமி விவேகானந்தர்

நரேந்திரநாத் தத்தா என்ற சுவாமி விவேகானந்தர் (1863-1902) ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருக்கு நேர்மாறாக இருந்தாலும் அவரது ஆன்மிக சாதனையால் ஈர்க்கப்பட்டவர். ராமகிருஷ்ணரது மறைவுக்குப்பின் (1886 ஆகஸ்டு) சுவாமி விவேகானந்தர் இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் செய்தார். 1893ல் அமெரிக்க நாட்டு சிக்காகோவில் நடைபெற்ற உலகச் சமய மாநாட்டில் ஆற்றிய உரை ஆன்மிக உலகை ஆட்கொண்டது. அந்த 'சூறாவளி இந்து' நெப்போலியன் தனது காந்தக் கருத்துக்களால் கோட்டையிடிப் பேச்சுக்களால் கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரை ஆன்மிக முடிசூடா மன்னராகத் திகழ்ந்தார். அவரது வீர உரைகள் உறங்கிக் கொண்டிருந்த இந்தியரை விழித்தெழச் செய்தன. மனிதனை மனிதனாக்கும் சமயமே, கல்வியே, கொள்கைகளே தற்கால இந்தியாவுக்குத் தேவை என்பதை வலியுறுத்தினார். மனிதருக்குள்ளே மறைந்து கிடக்கும் அளப்பரிய ஆற்றல்களை வெளிக்கொணர வேண்டுமென்றார். இளைஞர்கள் இந்தியாவின் பெருமை உணர்ந்து அதன் வீழ்ச்சிக்கான காரணங்களைக் கண்டறிந்து, நாட்டின் எழுச்சிக்காக ஓயாமல், ஒழியாமல் உழைக்க வேண்டுமென்றார் சுவாமி விவேகானந்தர். 'விழி, எழு, உழை' என்ற மந்திரத்தை அவர்களுக்குப் போதித்தார். பெண்கள் விடுதலைக்காகவும், பாமரர்களின் புனர்வாழ்வுக்காகவும் பாடுபட்டார். இந்திய தேசிய இயக்கத்தின் தோற்றுவாயை சுவாமி விவேகானந்தரின் வீரவார்த்தைகளில் காணலாம்.

ராமகிருஷ்ண மடமும் மிஷனும்

ராமகிருஷ்ண பரமஹம்சர் இறந்த பின்னர், சுவாமி விவேகானந்தர் ராமகிருஷ்ண மடத்தையும், மிஷனையும் தோற்றுவித்தார் (1887). மடம் ஆன்மீக மையம், அதில் சந்நியாசிகளுக்கு ஆன்மீகக் கல்வியும், பயிற்சியும் அளிக்கப்பட்டது. அவர்கள் மக்கள் நலம்பேணும் படையினர். மிஷன் பல்வேறு சமூக சேவை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்பாகும். வெள்ளம், புயல், வறட்சியால் மக்கள் பாதிக்கப்படும்போது மடத்தையும் மிஷனையும் சார்ந்தோர் தீயணைப்பு படையினரைப்போல் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று துயர்துடைப்புப் பணிகளில் ஈடுபடுவர். ராமகிருஷ்ண மடம், மிஷன் கிளைகள் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் நிறுவப்பட்டன. இவைகளின் கல்விப் பணியும், சுகாதார பொது நலப்பணிகளும் போற்றுதற்குரியன. காந்தி, நேரு, போஸ் போன்றவர்கள் விவேகானந்தரின் நாட்டுப்பற்றால் ஈர்க்கப்பட்டார்கள்.

பிரம்மஞான சபை

ஏ.பி.பிளாவட்ஸ்கி என்ற ரஷ்ய அம்மையாரும், கர்னல் எச்.எஸ். ஆல்காட் என்ற அமெரிக்கரும் இணைந்து நியூயார்க்கில் 1875 ஆம் ஆண்டு துவங்கிய சங்கமே பிரம்மஞான சபை (Theosophical Society) ஆகும். 1879ல் இந்தியாவுக்கு வந்த அவர்கள் சுவாமி தயானந்த சரஸ்வதியின் துணையோடு பிரம்மஞானசபையின் தலைமை மையத்தை அமெரிக்காவிலிருந்து சென்னை அடையாறுக்கு மாற்றினர். பிளாவட்ஸ்கி அம்மையார் தன்னை இந்து சமயத்தோடு ஐக்கியப்படுத்திக் கொண்டார். ஆன்மிகத் துறையில் இந்துக்கள்

ஐரோப்பியர்களைவிட ஆயிரம் மடங்கு உயர்ந்தவர்கள் என்று அவர் கூறினார். கர்னல் ஆல்காட் பண்டைய இந்திய ஆன்மிகப் பெருமையில் தனது மனதைப் பறிகொடுத்தார். இருவரும் இந்தியா புத்துயிர் பெறுவதில் பேராவல் காட்டினர். உலக சகோதரத்துவத்தை வளர்த்தல், பழங்கால ஆரிய சமயம், இலக்கியம், தத்துவம், விஞ்ஞானம் ஆகியவற்றை ஆழ்ந்து கற்றல், இயற்கை நியதிகளை ஆராய்ந்து மனிதனுக்குள்ளே மறைந்து கிடக்கும் ஆன்மிக ஆற்றல்களை வெளிக்கொணர்தல் ஆகியவை பிரம்மஞான சபையின் நோக்கங்களாகும்.

திருமதி டாக்டர் அன்னிபெசண்ட் அம்மையார் பிரம்மஞான சபையில் சேர்ந்து அதை மக்கள் செல்வாக்குப்பெற்ற இயக்கமாக்கினார். இந்து இதயம்கொண்ட ஐரிஷ் மாது அவர். இந்துவைப்போல் உடையணிந்து, இந்துவைப்போல் வாழ்ந்து இந்துக்களின் மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்டார். சேட்டார்ப் பணிக்குத் தகையவாய்க் கோரும் வேட்ப மொழியும் சொல்லாற்றல் மிக்கவர் அன்னிபெசண்ட் அம்மையார். பகவத் கீதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். சிறுமி திருமணத்தையும், விதவை முடக்கத்தையும் கண்டித்தார். 1898ல் காசியில் இந்து கல்லூரி துவக்கப்படுவதற்குக் காரணமாயிருந்தவர்களுள் இவரும் ஒருவராவார். இந்து மதம் இன்றேல் இந்தியா இல்லை என்று நம்பிய அன்னிபெசண்ட் அம்மையார் இந்திய தேசிய காங்கிரசில் சேர்ந்து, தன்னாட்சி சங்கத்தைத் தோற்றுவித்து சுதேசி இயக்கத்தை ஊக்குவித்து, இந்திய விடுதலைப் போராட்டத்தில் நெடுகப் பங்கேற்றார். இந்திய தேசியக் காங்கிரசைத் தோற்றுவித்த ஏ.ஓ.ஹியூம், பிளாவட்ஸ்கி அம்மையாரின் பிரதமக் கூட்டாளி என்பது குறிப்பிடத்தக்கது. சுருங்கக்கூறின், பிரம்மஞான சபை இந்திய தேசியத்தின் உந்து சக்தியாகவும், ஊக்கச் சக்தியாகவும் இருந்தது என்றால் மிகையாகாது.

அலிகார் இயக்கம்

சர் சயது அகமதுகான் (1817-98) இந்திய முஸ்லீம்களிடையே சமயச் சீர்திருத்தத்தையும் சமுதாயச் சீரமைப்பையும் ஒழுக்க விழிப்புணர்வையும் ஏற்படுத்தினார். இவர் இஸ்லாமிய போதனைகளை நவீன காலத் தேவைகளுக்கேற்ப இணக்குவிக்க முயன்றார். சமயக் கோட்பாடுகள் மாற்ற முடியாதவையல்ல என்று கூறினார். சமயம் சமுதாய முன்னேற்றத்துக்கு உதவ வேண்டுமேயன்றி முட்டுக்கட்டையாக இருக்கக்கூடாது என்பதை வலியுறுத்தினார். காலத்தில் தேவைகளைப்பூர்த்தி செய்யாத சமயம் இந்திய இஸ்லாம் போன்று பயனற்ற பழஞ்சின்னமாகிவிடும் என்று எச்சரித்தார். எல்லா நீர்க்கதரிகளும் ஒரே இறை நம்பிக்கையைத்தான் பிரதிபலித்ததாகக் கூறினார். இவரது பார்வை அறிவுபூர்வமான, சமயச்சார்பற்ற, மனிதாபிமானப் பார்வையாகும்.

சயத் அகமதுகான் இந்திய முஸ்லீம்கள் மூடப்பழக்க வழக்கங்களையும், சமயப் பொறையின்மையையும், சாரமற்ற சம்பிரதாயங்களையும் கைவிட்டு விஞ்ஞான மனப்பான்மையை வளர்த்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பினர். இவர் திருக்குரானை உருதுவில் மொழி பெயர்த்தார். அதுமட்டுமல்ல, அம்மறை நூலுக்கு அறிவியல் பூர்வமான விளக்கமளித்தார். இவர் பர்தா முறையைச் சாடினார். சமயக் கருத்து வேறுபாடுகள் தேச நலனுக்கு ஊறுவிளைவிக்கக்

Scanned by CamScanner

கூடாது என்பதை அடிக்கோடிட்டுக் காட்டினார். மக்களிடையே மத
வித்தியாசங்கள் இருப்பினும் அவைகளிடையேயும் ஒரு தேசபக்கம் எனும்
உணர்வு மேலோங்கி இருக்க வேண்டிய இன்றியமையாமையை வலியுறுத்தினார்.

சயத் அகமதுகான் ஆங்கிலக் கல்வியின் அவசியத்தை ஆதரித்தார்
மக்களிடையே குறிப்பாக முஸ்லீம்களிடையே ஆங்கிலக் கல்வியைப் பர
பல முயற்சிகளை மேற்கொண்டார். 1880களில் முஸ்லீம்களையும் இந்துக்களையும்
கொண்ட பல அறிவியல் கழகங்களை உருவாக்கினார். இவர் 1875ம் ஆண்டு
அலிகார் முஸ்லீம் ஆங்கிலோ ஓரியண்டல் கல்லூரியை நிறுவினார்.
முஸ்லீம்களையும் இந்துக்களையும் நாட்டின் இருகண்களாகக் கருதிய சயத்
அகமதுகான் இக்கல்லூரியில் இருசாராருக்கும் சம முக்கியத்துவம் கொடுத்தார்.
இந்தக் கல்லூரியே பின்னர் புகழ்பெற்ற அலிகார் முஸ்லீம் பல்கலைக் கழகமாக
விரிவடைந்தது. இவர் மேற்கொண்ட முயற்சியே அலிகார் இயக்கம் என்று
அறியப்படுகிறது.

சர் சயத் அகமதுகானுக்குப் பல இறையும் செல்வாக்குமிக்க பிரமுகர்களின்
ஆதரவு கிடைத்தது. இவர் கூட்டிய முஸ்லீம் கல்வி மாநாடு பல்வேறு
தொழில்களில் ஈடுபட்டிருந்த முஸ்லீம் நடுத்தர வர்க்கத்தினரை ஒன்று சே
வைத்தது. அகமதுகான் முஸ்லீம்களிடையே ஆங்கிலக்கல்வி பரவக் காரணமாக
இருந்தார். இவரது சமயச்சார்பற்ற, அறிவியல் ரீதியான பகுத்தறிவு அணுகுமுறை
அதிசயிக்கத்தக்கது. எனினும் காலின் முற்போக்கு சமய - சமுதாயச் சிந்தனைகள்
கருத்துகள் முஸ்லீம் மேல்தட்டு மக்களோடு நின்றுவிட்டன; அடித்தட்டு
மக்களைச் சென்றடையவில்லை. இவர் 'முஸ்லீம் மனதை அரசியல்
இயக்கத்திலிருந்து மனமாற்றம் செய்வதில் வெற்றி பெற்றார்' என்று புகழாரம்
சூட்டியுள்ளார் நேரு. சயத் அகமதுகான் சந்தேகத்துக்கு இடமின்றி 19ம்
நூற்றாண்டின் தலைசிறந்த இந்தியர்களில் ஒருவர்' என்று மதிப்பீடு செய்கிறார்
பிபன் சந்திரா.

சாதிச் சீர்திருத்தம்

சாதி அமைப்பு முறை இந்து கலாச்சாரத்தின் களங்கமாகும். தீண்டாமை
வருணாசிரம தர்மத்தின் விஷமித்தாகும். தீண்டாமைக்குக் காரணமான
வர்ணத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சாதி வரிசைப்படி முறை இந்திய
சமுதாய அமைப்பில் ஆழமாக வேருன்றிவிட்டது. உயர்சாதி இந்துக்கள்
தீண்டத்தகாதோரின் வருகையை முன்னறிவிப்பு செய்வதற்காக மணி அடித்துக்
கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார் இந்தியாவுக்கு வந்த சீனயாத்ரீகர் பாஹியான்.
சாதி அமைப்பு முறை சமுதாயத்தைப் பலவீனப்படுத்திவிட்டது; சாதி
வேறுபாடுகளை சாகவதமாக்கிவிட்டது; தேசப்பற்று தோன்றவிடாமல்
தடுத்துவிட்டது; சமுதாய சமத்துவ ஜனநாயகத்துக்குத் தடையாக இருந்தது.
எனவே, மக்களை மக்களாகக் கருதாமல் மேல்சாதியினர், கீழ்சாதியினர் என்று
பாகுபடுத்தி வேறுபடுத்திய சாதிமுறையைச் சீரமைக்க ராஜா ராம்மோகன்
ராய், தயானந்தர், சுவாமி விவேகானந்தர் போன்றோர் சாதிச் சீர்கேடுகளைக்
கடுமையாகச் சாடினர். சாதிச் சீர்திருத்தம் பற்றிப் பேசினர். கீழ்சாதித் தலைவர்கள்
சாதிச் சீர்திருத்தத்தை மேற்கொண்டனர்

ஜோதிபா பூலே, 1827-1890

ஜோதிபா 1827ம் ஆண்டு மராட்டிய மாநிலத்தில் பூனாவில் கீழ்சாதியாகக்
கருதப்பட்ட 'மாலி' வகுப்பில் பிறந்தார். இவர் பூந்தோட்டக்கும் குடும்பத்தில்
பிறந்தமையால் 'பூலே' என்று அழைக்கப்பட்டார். உயர்சாதியினராகக்
கருதிக்கொண்ட பிராமணர்கள் மதத்தின் பெயரால் பிற வகுப்பாரைக்
கொடுமைபடுத்தி அடிமைகளாக்கி விட்டனர் என்று கருதினார் ஜோதிபா.
எனவே, ஜோதிபா பிராமண ஆதிக்க எதிர்ப்பாளர் ஆனார். இவர் கல்வியின்
மூலம் தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேற்ற முடியும் என்று நம்பினார்; அதற்கான
முயற்சிகளை மேற்கொண்டார்.

ஜோதிபா பூலே 1848ம் ஆண்டு புத்வார்பேத் என்ற ஊரில் உயர்சாதியினரின்
எதிர்ப்பை எதிர்கொண்டு பெண்கள் பள்ளியைத் துவக்கினார். அதைத்தொடர்ந்து
பல ஊர்களிலும் பள்ளிகளை ஆரம்பித்தார். ஸ்காட்டிஷ் பள்ளியில் ஆசிரியராகச்
சேர்ந்த ஜோதிபா (1854) தன் மனைவியின் துணையுடன் இரவு நேரப் பள்ளி
ஒன்றையும் துவக்கினார். ஜோதிபாவின் கல்விப்பணியைப் பாராட்டி பிரிட்டிஷ்
அரசாங்கம் அவருக்கு ஆறு ஏக்கர் நிலம் கொடுத்து ஊக்கவித்தது (1857).

அரசாங்க ஆதரவால் ஊக்குவிக்கப்பட்ட ஜோதிபா சத்திய ஷோடக் சமாஜம்
அல்லது வாய்மையைத் தேடும் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கினார்
(1860). அனைத்துச் சாதியினருக்கும் பொதுவான அனாதை இல்லங்களைக்
கட்டினார். ஜோதிபாவின் சேவையைப் பாராட்டிய மக்கள் இவரை பூனா
நகராட்சி மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தனர் (1876). ஜோதிபா ஹண்டர்
கல்விக் கமிட்டியிடம் தாழ்த்தப்பட்டோருக்குக் கல்வி அளிக்கப்பட
வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார் (1882). தர்ம திரிதிய ரத்னா (புராணப்
புரட்டுகளைப் பற்றியது), இஷாரா (எச்சரிக்கை), சிவாஜி போன்ற நூல்களை
ஜோதிபா எழுதியுள்ளார். பெண் கல்வி, குழந்தைத் திருமணத்தடை, விதவைகள்
மறுமணம், சடங்குகளற்ற சீர்திருத்தத் திருமணம், அனாதைகள் பாதுகாப்பு,
தாழ்த்தப்பட்டோருக்குச் சம உரிமை ஆகியவற்றுக்காகத் தன்னை அர்பணித்துக்
கொண்ட ஜோதிபா பூலே 'மகாத்மா' என்று அழைக்கப்பட்டார்.

நாராயண குரு, 1854-1928

நாராயண குரு கேரளாவில் தீண்டத்தகாத கீழ்சாதியாகக் கருதப்பட்ட
ழவ வகுப்பைச் சேர்ந்தவர். இவர் வேதங்களிலும் உபநிடதங்களிலும்
புராணங்களிலும் பெரும்புலமை பெற்றவர். இவர் பிராமணர் ஆதிக்கத்துக்கு
எதிராகப் போர்கொடி உயர்த்தினார். பிராமணரல்லாதாரின் முன்னேற்றத்துக்காகப்
போராடினார்.

நாராயண குரு 'கீழ்சாதியினர் கோயிலுக்குள் நுழையக்கூடாது' என்ற
சமுகத்தடையை உடைக்க உறுதிபூண்டார். திருவனந்தபுரம் அருகே அருவிபுரம்
என்ற ஊரில் ஒரு கோயிலைக்கட்டி, அதில் சாதிவேறுபாடின்றி அனைவரும்
வழிபடச் செய்தார். சிறந்த சொற்பொழிவாளரான இவர் சாதிசமய வேறுபாட்ட
சமதர்ம சமுதாயத்தை உருவாக்கப் பிரச்சாரம் செய்தார், போராடினார். இவரும்,
இவரது சகாக்களும் தீண்டாமைக் கொடுமையைக் களைய முயன்றனர்.
திருமணம், சமய வழிபாடு, சவ அடக்கம் ஆகியவற்றுக்கான சடங்குகளை

Scanned by CamScanner

எனையோர்களுக்கு, சமத்துவ சமுதாயம் அமையப் பாடுபட்டார். யாவற்றுக்கும் மேலாக நாராயணகுரு 'மனித குலத்துக்கு ஒன்றே சமயம், ஒன்றே சாதி, ஒன்றே கடவுள்' என்ற கோஷத்தைக் கொடுத்தார். இவரது கூற்றான 'மனிதகுலத்துக்கு மதமில்லை, சாதியில்லை, கடவுளில்லை' என்ற புதிய மந்திரத்தைத் தந்தார்.

தூய இயக்கம், 1891

19ம் நூற்றாண்டில் பிற்பகுதியில் கேரள நாயர்கள் நம்பூத்திரி பிராமணர்களின் ஆதிக்கத்துக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தனர். நம்பூதிரி பிராமணர்கள் சமுதாய மற்றும் அரசியல் துறைகளில் ஆதிக்க ஆதாயம் பெறுவதை எதிர்த்தவர். வி.வி.ராமன் பிள்ளை என்பவர் 1891ம் ஆண்டு 'மலையாள தினைவைத் தின்னம்' ஒன்றை நிறுவினார். இவருடைய 'மார்த்தாண்டவர்மா' என்ற நாவல் நாயர்களின் வீரத்தையும், பழம்பெருமையையும் உயர்வாகக் காட்டியது. பத்மநாப பிள்ளை என்பவர் 'நாயர் சேவா சங்கம்' என்ற அமைப்பை ஏற்படுத்தினார்.

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ராஜா ராம்மோகன்ராய், தயானந்தர், சுவாமி விவேகானந்தர், ஜோதிபா பூலே, நாராயண குரு, வி.வி.ராமன் போன்றோரின் பங்களிப்பால் சாதிச் சீர்திருத்த இயக்கத்துக்கான அடித்தளம் அமைக்கப்பட்டது. இவர்கள் துவக்கிய இப்பணி 20ம் நூற்றாண்டில் அம்பேத்கார் சாதி ஒழிப்பு இயக்கமாக, நீதிக்கட்சியினரின் பிராமணரல்லாதார் முன்னேற்ற இயக்கமாக, நாடார் போராட்டமாக, வைக்கம் சத்தியாகிரகமாக, குருவாயூர் கோயில் நுழைவுப் போராட்டமாக, வோக்கலிகர் இயக்கமாக உருவெடுத்தது.

மதிப்பீடு

19ம் நூற்றாண்டு இந்தியா சமய மூடநம்பிக்கை, சமுதாய இருண்மை, மனமுட்டுக்கட்டை ஆகியவற்றின் பிடியில் சிக்கிக் கொண்டிருந்தது. இந்து சமயம் சம்பிரதாயச் சடங்குகளிலும், பொருளற்ற பழக்க வழக்கங்களிலும், தீண்டாமையை அடிப்படையாகக்கொண்ட சாதி வேறுபாடுகளிலும் தன்நிலை இழந்திருந்தது. இஸ்லாமிய சமயம் தேக்கநிலையில் தடுமாறியது. ஆங்கிலக் கல்விமூலம் அறிவியல் முற்போக்கு, மனிதாபிமானக் கருத்துக்களால் கவரப்பட்ட அறிவாளர்கள் சமுதாய சமயச் சீர்திருத்தத்தில் முழுவீச்சுடன் ஈடுபட்டனர்.

ராஜா ராம்மோகன் ராய் 'சதி'ப் பழக்கத்துக்கு சமய ஆதாரம் இல்லை என்பதை எடுத்துரைத்தார். வித்யாசாகர் விதவை மறுமணத்துக்கு திருநூல் எதுவும் தடையில்லை என்றார். தயானந்த சரஸ்வதி வேத ஆதாரங்களுடன் சாதிமுறைக்கு எதிராகப் பிரச்சாரம் செய்தார். அக்ஷைகுமார் இயற்கையை மீறிய விளக்கங்களை நிராகரித்தார். ஈஸ்வர சந்தர வித்யாசாகர் விண்ணுலகக் கடவுளைப்பற்றி விவாதிப்பதைவிட மண்ணுலகில் செய்ய வேண்டியது அதிகம் என்றார். சுவாமி விவேகானந்தர் கயநல மனப்பான்மையைக் கைவிட்டு ஏழை எளியோருக்கு நவீன கல்வி கொடுத்து அறியாமையையும் பசிபட்டினியையும் அகற்ற வேண்டும் என்று முழக்கமிட்டார். அன்னிபெசன்ட் அம்மையார் இந்துக்களிடையே மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும் என்றார். சமத் அகமதுகான் இஸ்லாமிய போதனைகளை நவீன யுகத்துக்கேற்ப மாற்ற முனைந்தார்.

சமுதாய சமயச் சீர்திருத்த இயக்கங்கள், பாரத்தூவு, பழமை மறுசீரமைப்பு, சீர்திருத்த ஆகிய பாடுகளில் பயனித்தன சமுதாய சமய மாற்றம், தாய்மொழி வளர்ச்சி, நவீன கல்வி முறை, இலக்கிய கலை, கலாச்சார மறுமலர்ச்சி, சமயப்பொதுநோக்கு, சமுதாய நீதிபற்றிய விழிப்புணர்வு, சுயமரியாதை, சுயசார்புடைமை, சுயமுயற்சி, மனிதாபிமான மனப்பான்மை போன்றவை இச்சீர்திருத்த இயக்கங்களின் வெளிப்பாடுகளாகும். இவை இந்திய தேசியம் வேரூன்றி வளரக் காரணமாக இருந்தன. இந்த இயக்கங்களால் ஊக்குவிக்கப்பட்டு, உந்தப்பட்ட பல தேசியத் தலைவர்கள் இந்திய விடுதலைக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டனர்.

Scanned by CamScanner

7. இந்திய தேசியத்தின் தோற்றம்

பிறரை ஒதுக்கிவைக்கும் விலக்கல் தேசியம் உடனடி அரசியல் ஆதாயங்களைத் தரலாம். ஆனால் அது நாட்டின் சமுதாய அமைப்பைச் சரிசெய்ய முடியாமல் சேதப்படுத்தி விடும்.

- ரொமிலா தாப்பர்.

தேசியம் என்பது தேசத்தைப் பற்றிய தன்னுணர்ச்சி விழிப்பாகும். அது மனிதனோடு உடன் பிறந்த பண்பல்ல. அவனது இயல்பான மனநிலையும் அல்ல அது. தேசியம் என்பது மனிதன் விரும்பி வளர்த்துக் கொள்ளும் உணர்ச்சியாகும். அரசியல், பொருளாதார, இன, மொழி, கலாச்சார, சமுதாய, சமயச் சூழ்நிலைகள் ஒரு நாட்டு மக்களைத் தேசிய உணர்வு கொள்ளச் செய்கிறது. இந்தியாவைப் பொறுத்தவரை தேசியம் என்பது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் எதிர்மறை விளைவாகும். ஆங்கிலேய ஆதிக்க எதிர்ப்பே இந்திய தேசியமாக வடிவெடுத்தது. அந்தியருக்கு அடிமைப்பட்டிருந்த மக்களிடையே விழிப்பை ஏற்படுத்தி, அவர்களுடைய விடுதலை வேட்கை தூண்டி விடப்பட்ட போது தேசியம் மலர்ந்தது. துவக்கத்தில் காலனி ஆதிக்க எதிர்ப்பே தேசியத்தின் இயல்பாக இருந்தது. காலப்போக்கில் ஆங்கிலேய ஆட்சிக்கெதிராகத் தோன்றிய தேசியம், அதோடு போராடி, போராட்டு இறுதியில் அதை இந்திய மண்ணிலிருந்தே அகற்றியது. இந்தியா விடுதலையடையக் காரணமாக இருந்தது.

காரணங்கள்

இந்திய தேசியம் ஒரே நாளில் உருவான உலக அதிசயங்களில் ஒன்றல்ல. மாறாக, அது நீண்ட காலமாகப் பல்வேறு காரணங்களின் ஒருமித்த விளைவால் தோன்றிய பொது உணர்ச்சியாகும். இந்திய தேசியம் தோன்றியதற்கு முக்கிய காரணங்களாவன.

அடிப்படை ஒற்றுமை

இந்திய தேசியம் பற்றிய எண்ணம் ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்கு வருவதற்கு நெடுங்காலத்துக்கு முன்பிருந்தே இந்தியர்களிடம் இருந்து வந்தது என்று கூறப்படுகிறது. இந்தியப் புவியியல் ஒருமை, பண்பாட்டுப் பொதுமை, இன ஒற்றுமை, பாரதவர்ஷா என்ற தாய்நாட்டுப் பற்று, சமய வழக்காறுகள், அரசியல் அனுபவங்கள், வரலாற்று விளைவுகள் ஆகியவை இந்தியரின் அடிப்படை ஒற்றுமையை உருவாக்கின. அந்த அடிப்படை ஒற்றுமை முகலாய ஆட்சியின்போது மங்கிப் போயிற்று. பதினேழாம் நூற்றாண்டில் மராத்தியரது எழுச்சியால் இந்தியரின் ஒற்றுமை உணர்வு மறுவாழ்வு பெற்றது. அந்த உணர்வே பத்தொன்பதாம் நூற்றாண்டில் பொது வடிவம் கண்டது; அரசியல் உருவம் கொண்டது.

நவீன நாட்டமைப்பு முறை

ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்கு வந்தபின்னர் நவீன நாட்டமைப்பு முறை (Modern State System) ஏற்படுத்தப்பட்டது. இந்தியா 'இந்திய இந்தியர்', பிரிட்டிஷ் இந்தியா என்று பிரிக்கப்பட்டது. அளவிலும், முக்கியத்துவத்திலும் வேறுபட்ட 562 இந்திய நாடுகளும் பிரிட்டிஷ் முடியாட்சியின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டன. இந்திய அரசர்களுக்கும் ஆங்கிலேய ஆட்சிக்குமிடையே ஏற்பட்ட தொடர்பால் இந்திய நாடுகளிடையே பொதுவான அரசியல் அமைப்பு முறை புகுத்தப்பட்டது. அதேபோன்று பிரிட்டிஷ் இந்தியப் பகுதிகளிலும் சட்டத்தின் ஆட்சி பிரதிநிதித்துவ முறை, நிதித்துறை, வருவாய்த்துறை போன்ற நவீன நாட்டமைப்புக் கூறுகள் புகுத்தப்பட்டன. இந்த நவீன நாட்டமைப்பு முறை ஆங்கிலேய ஆட்சி அகற்றப்படுவதற்கான தேசிய விதையைச் சுமந்திருந்தது.

மைய நிர்வாக முறை

இந்தியா முழுவதும் ஆங்கிலேய மைய நிர்வாக முறையின் கீழ்க்கொண்டு வரப்பட்டது. அகில இந்தியப் பொதுப் பணியும் (ICS) சட்டத் தொகுப்பும், சட்ட நிர்வாகமும் மக்கள் அனைவரும் ஒரு முறையின்கீழ் வாழ வேண்டும் என்று வலியறுத்தின. புகைவண்டி மூலம் மக்கள் இந்தியாவின் ஒரு கோடியிலிருந்து மறுகோடிக்கு விரைவாகச் சென்றனர். தபால் தந்தி மூலம் செய்திப் போக்குவரத்து துரிதப்படுத்தப்பட்டது. இவற்றால் நாட்டின் பல பகுதிகளுக்கிடையே பொருளாதார, சமுதாய அரசியல் இணைப்புகள் ஏற்பட்டன. மக்கள் இந்தியாவை நேசிக்கத் தலைப்பட்டனர். எல்லோரும் இந்நாட்டு மக்கள் என்ற பொதுமை எண்ணம் அவர்களிடம் எழுந்தது.

ஆங்கிலக் கல்வியின் தாக்கம்

இந்தியரிடையே தேசிய விழிப்புணர்ச்சிக்கு ஆங்கிலக் கல்வி முக்கிய காரணமாயிருந்தது. மேலைநாட்டு முற்போக்குக் கருத்துக்களும் தாராளக் கொள்கைகளும் இந்தியாவினுள் தங்குதடையின்றிப் பாய்வதற்கான மடையைத் திறந்துவிட்டது ஆங்கிலக் கல்விதான். ஆங்கிலக் கல்வி பெற்றோர் பெந்தம், லாக், ஹாப்ஸ், மில், ஸ்பென்ஸர், பகிர், ரஸ்கின், கார்லைல், வால்டேர், ரூஸோ, மாண்டஸ்கியு, டால்ஸ்டாய் போன்ற சிந்தனையாளர்களின் புரட்சிக் கருத்துக்களுக்கும் கொள்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் அறிமுகமாயினர். உரிமை, சமத்துவம், சகோதரத்துவம், விடுதலை, தேசியம், சுயாட்சி பற்றிய அரசியல் சித்தாந்தங்களால் கற்றோர் ஊக்குவிக்கப்பட்டனர். மேலைநாட்டு வரலாறு, இலக்கியம், தத்துவம், விஞ்ஞானம் ஆகியவை ஆங்கிலக் கல்வி பெற்றவர்களிடையே மனக் கிளர்ச்சியை ஏற்படுத்தின. அனைவருக்கும் பொதுவான ஆங்கிலக் கல்வி, பொது மனப்போக்கு, எண்ணங்கள், உணர்ச்சிகள் உருவாகக் காரணமாயிருந்தது. ஆங்கிலக் கல்வி பெற்றோரே நாடு தழுவிய விடுதலைப் போராட்டத்தைத் துவக்கினர்.

Scanned by CamScanner

மேலைப் பண்பாட்டின் செல்வாக்கு

பகுத்தறிவு, எண்ணச் சுதந்திரம், தனியுரிமை, தாராளக் கொள்கை ஆகியவற்றின்மீது அமைந்ததே மேலைப் பண்பாடாகும். அதன் செல்வாக்கால் வழக்காறு, மூடநம்பிக்கை, சீர்திருத்த எதிர்ப்பு ஆகியவற்றின்மீது அமைந்ததே மேலைப் பண்பாடாகும் அதன் செல்வாக்கால் வழக்காறு, மூடநம்பிக்கை, சீர்திருத்த எதிர்ப்பு ஆகியவற்றின்மீது அமைந்திருந்த இந்தியப் பண்பாடு மாற்றமடைந்து குருட்டு நம்பிக்கையைப் பகுத்தறிவு வென்றது. பரம்பரை ஆதிக்கச் சக்திகளின் பிடியிலிருந்து மனிதன் விடுபட்டான். சமுதாய நீதி, பொருளாதாரச் சமத்துவம், அரியல் உரிமைகள் பற்றிய புரட்சிகரமான சித்தாந்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலைப் பண்பாட்டின் செல்வாக்கால் சமயமும், சமுதாயக் கருத்துக்களும், நடைமுறைகளும் மாறத் தொடங்கின. சமுதாய, சமயச் சீர்கேடுகள் களையப்படுவதற்கான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்தியக் கல்வி, மொழி, இலக்கியம், சமுதாயம், சமயம் ஆகிய அனைத்துத் துறைகளும் மேலைப் பண்பாட்டால் பாதிக்கப்பட்டன. இவற்றின் விளைவாக, மக்களிடையே நாட்டுப்பற்றும் தேசிய உணர்வும் உண்டாயின.

சமுதாய சமய விழிப்புணர்வு

19ஆம் நூற்றாண்டில் மேலைப் பண்பாட்டுச் சவாலைச் சமாளிப்பதற்காக எழுந்தவையே சமுதாய, சமயச் சீர்திருத்த இயக்கங்கள் ஆகும். அவை அனைத்தும் தேசியத்தின் தோற்றத்தைத் துரிதப்படுத்தின. ராஜாராம் மோகன் ராய், கேசவ் சந்திரசென், சுவாமி தயானந்த சரஸ்வதி, சுவாமி விவேகானந்தர், டாக்டர் அன்னிபெசண்ட் அம்மையார் ஆகியோர் இந்தியாவின் பெருமையை மூலைமுடுக்கெல்லாம் பறைசாற்றினர். பாரதத்தின் பண்டைய பண்பாட்டின் பெருமையைப் புகழ்ந்தனர்; வேத, உபநிடத, இதிகாசச் சிறப்பை எடுத்துக் காட்டினர். மக்களிடையே வீரத்தையும் தன்னம்பிக்கையையும் சுயசார்புடைமையையும் உருவாகச் செய்தனர். தாய்நாட்டின்மீது தனிப்பற்றுக் கொள்ளக் காரணமாயிருந்தவர். பிரம்ம சமாஜம், பிரார்த்தனா சமாஜம், ஆரிய சமாஜம், ராம கிருஷ்ண இயக்கம், பிரம்ம ஞான சபை ஆகியவை சமய சமுதாய சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்திய மறுமலர்ச்சியை ஏற்படுத்தின.

அறிவு ஜீவிகளின் பங்கு

ஆங்கிலக் கல்வியின் பயனாக ஆயிரக்கணக்கான இந்திய அறிவு ஜீவிகள் உருவாயினர். வில்லியம் பெண்டிங் பிரபு ஆங்கிலத்தை ஊக்குவித்த ஐம்பதாண்டுகளில் இந்தியாவில் அறிவு ஜீவிகள் என்ற புதிய வகுப்பார் தோன்றினர். அவர்கள் நிர்வாகத்தின் உயர் பதவிகளில் அமர்ந்தனர். வாழ்வின் பல துறைகளிலும் பெருமைக்குரிய நிலை பெற்றனர். பொது இயக்கங்களை முன்நின்று நடத்தினர். கல்கத்தா, பம்பாய், சென்னை, பூனா போன்ற நகரங்களில் அவர்களது அறிவும் திறமையும் அமைப்பாற்றலும் கடர்விட்டுப் பிரகாசித்தன. அவர்கள்தான் பத்திரிகைகள் நடத்தினர். சமுதாயச் சீர்திருத்தச் சங்கங்களையும் அரியல் அமைப்புகளையும் ஏற்படுத்தி இந்திய தேசிய கடர்விளக்கைத் தூண்டி விட்டனர்.

புதிய பொருளாதார வகுப்பினர்

நிலத் தனியுடைமை, தொழிற்சாலை முறை, சுரண்டல் சாலை ப் போக்குவரத்து வசதிப் பெருக்கம் ஆகியவை தற்சார்புடைய தேக்கமுற்ற இயற்கைப் பொருளாதார முறையை மாற்றி அமைத்தன. மொத்த வியாபாரிகள், சில்லறை வியாபாரிகள், ஏஜண்டுகள், தரகர்கள், குத்தகைதாரர்கள், வங்கியாளர்கள், தொழிலதிபர்கள், பண்ணையார்கள், நிலக்கவான்தார்கள் ஆகிய புதிய பொருளாதார வகுப்பினர் தனித்தன்மையோடு தோன்றினர். ஆங்கிலேயரின் ஆதிக்க பொருளாதார கண்ணோட்டம் கொள்கைகளால் அவர்களது நலன்கள் பாதுக்கப்பட்டபோது இப்புதுப் பொருளாதார வகுப்பார் அந்நிய ஆட்சிக்கெதிராகத் திரும்பினர். அவர்கள் தங்களுக்குள் அமைப்புகளை ஏற்படுத்திக் கொண்டு தேசளவில் ஒன்றுபட்டு, ஆங்கில ஏகாதிபத்தியத்துக் கெதிரான இயக்கங்களை ஆதரித்தனர். அவர்கள் வங்காளம், பம்பாய், சென்னை போன்ற கடற்கரைப் பகுதிகளில் கறுகறுப்பாக இயங்கினர். இந்திய தேசிய எழுச்சிக்கு இப்புதிய பொருளாதார வகுப்பாரின் பணி பெரிது.

வரலாற்று ஆராய்ச்சியின் விளைவு

ஐரோப்பியரது வருகைக்கு முன் இந்தியர்கள், தாமரைத் தடாகத்துத் தவளைகள் போன்று தங்களது தாய்நாட்டின் பெருமை அறியாதிருந்தனர். மேலைநாட்டாரின் வரலாற்று ஆராய்ச்சியின் விளைவாக இந்தியாவின் புகழும் பெருமையும் வெளிப்பட்டன. சர் வில்லியம் ஜோன்ஸ், பிரிட்செப், கோல்புரூக், மாக்ஸ் முல்லர், மோனியர் வில்லியம்ஸ், வில்சன், பேர்கூலன் ஆகியோரது அயராத ஆராய்ச்சி முயற்சிகள் இந்தியாவின் பண்டையப் பெருமைகளை வெளிக்கொணர்ந்தன. ராஜேந்திரலால் மித்ரா, ராமகிருஷ்ணா, கோபால் பந்தர்கார், ஹர்பிரசாத் சாஸ்திரி, எம்.ஜி.ரானடே ஆகிய இந்திய வரலாற்று ஆராய்ச்சியாளர்களின் முயற்சியும் பாரதத்தின் பெருமையைப் பறைசாற்றின. அலெக்சாந்தர் கன்னிங்ஹாமின் தலைமையின்கீழ் மேற்கொள்ளப்பட்ட புதைபொருள் ஆராய்ச்சிகள் பழங்கால இந்தியா கிரேக்கத்துக்கும், ரோமுக்கும் எவ்விதத்திலும் குறைந்ததில்லை என்பதை உறுதிப்படுத்தியது. இவற்றால் இந்தியர்கள் தங்களது தாய்நாட்டின் பழங்காலப் பெருமையிலும் எதிர்கால வளர்ச்சியிலும் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் கொண்டனர்.

இந்திய இலக்கியத்தின் செல்வாக்கு

ஆங்கில இலக்கியத் தாக்கத்தால் இந்திய மொழிகளில் இலக்கிய மறுமலர்ச்சி ஏற்பட்டது. இலக்கிய மறுமலர்ச்சித் தென்றல் வங்காளத்தில் உருவாகிப் பின்னர் இந்தியாவின பிற பகுதிகளுக்குப் பரவியது. அன்றைய இலக்கிய உலகில் பக்கிம் சந்திர சாட்டர்ஜியின் 'ஆனந்த மடம்' பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது. அந்த நாவலில்தான் நாட்டுப் பற்றுமிக்க 'வந்தே மாதரம்' என்ற பாடல் இடம் பெற்றது. தீனபந்து மித்ராவின் புகழ்மிக்க நாடகமான 'நீலதர்பானா' அவுரிச் சாகுபடியாளர்களது அவலங்களைப் பிரதிபலித்தது. ஹேம் சந்திர பானர்ஜியின் உணர்ச்சிப் பாடல்கள் வங்காள இளைஞர்களிடையே எழுச்சியை ஏற்படுத்தின. பிரேம் சந்தின் படைப்புகள் சீர்திருத்தக் கருத்துக்களின் படையெடுப்புகள். ரவீந்திரநாத் தாகூர் தொடாத இலக்கியப் பிரிவே இல்லை. அவரது செல்வாக்கும்

Scanned by CamScanner

இலக்கியச் செல்வாக்கும் இந்தியரின் உள்ளங்களில் தேசிய விதைகளை விதைத்தன. தமிழ்நாட்டில் இராமலிங்க அடிகளாரின் திருஅருட்பா மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டன. டாக்டர் கால்டுவெல்லின் ஒப்பிலக்கணம், ஆண்டர்சனின் 'தமிழ் இலக்கண அடிப்படை' வில்லியம்ஸ்லோவின் ஆங்கில தமிழ் அகராதி, ஜி.யு.போப்பின் திருக்குறள், திருவாசகம், மணிமேகலை ஆங்கில மொழி பெயர்ப்புகள் தமிழின் மென்மை, மென்மை, தொன்மை ஆகியவற்றை வெளியுலகுக்கு அறிமுகம் செய்தன. தமிழர்கள் தலைநிமிர்ந்து நின்றனர்.

பத்திரிகைகளின் பங்கு

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியதேசியம் தோன்ற பத்திரிக்கைகள் பெரிதும் உதவின. ஒரே சமயத்தில் பத்திரிகைகளின் பல்லாயிரக்கணக்கான பிரதிகள் பல இலட்சக் கணக்கான வாசகர்களைச் சென்றடைந்தன. அமிர்த பஜார் பத்திரிகா, இந்தியன் மிரர், பாம்பே சமாச்சார், இந்து, சுதேச மித்திரன், ஆந்திர பத்திரிகா, கேரள பத்திரிகா போன்ற பத்திரிகைகள் மக்களுக்கு அரசியல் கல்வி அளித்தன. மக்களாட்சி, மக்கள் உரிமைகள், சுயாட்சி, சட்டத்தின் ஆட்சி போன்ற அரசியல் கோட்பாடுகளை மக்களுக்கு அவை அறிமுகம் செய்தன. அரசியல் அமைப்புகள், தலைவர்களின் நடவடிக்கைகள் விரிவாகப் பிரசுரிக்கப்பட்டன. மக்களின் பிரச்சனைகளும், கோரிக்கைகளும் எடுத்துக் கூறப்பட்டன. அரசாங்கத்தின் தவறான கொள்கைகளையும் போக்குகளையும் பத்திரிகைகள் அருமையாக விமரிசனம் செய்தன. இவையாவும் இந்தியரிடையே அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தின.

இந்து மேளா

1867ஆம் ஆண்டில் வங்காளத்தில் நிஷி ராஜ் நாராயண் போஸ் தேசிய உணர்ச்சிப் பெருக்கச் சங்கம் (Society for the Promotion of National Feeling) ஒன்றைத் துவக்கினார். அவரது முயற்சியால் உந்தப்பட்ட நபகோபால் மித்ரா 'இந்து மேளா'வை ஆரம்பித்தார் (1867), அவர் 'தேசிய நப கோபால்' என்றழைக்கப்பட்டார். இந்து மேளா ஒரு தேசியத் திறமைகளின் சங்கமமாகும். அந்த மேளாவில் நாட்டுப்பற்றைத் தூண்டக்கூடியக் கவிதைகள் பாடப்பட்டன; இந்திய அரசியல், பொருளாதார, சமுதாய, சமயநிலைகள் பற்றி சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன; இந்தியக் கலைகள், கைத்தொழில்கள் பற்றிய கண்காட்சிகள் வைக்கப்பட்டன; உடற்பயிற்சிகள் செய்து காண்பிக்கப்பட்டன. அவை இந்தியக் கண்ணோட்டத்தோடு வங்காள இந்துக்களால் நடத்தப்பட்ட இந்த இந்து மேளாக்கள் பின்னர் வெள்ளமெனப் பெருகிப் பிரவாகமெடுத்து இந்திய தேசிய நீரோட்டத்தில் இரண்டறக் கலந்தன.

வெளிநாட்டு விடுதலைப் போராட்டங்களின் பாதிப்பு

அமெரிக்க விடுதலைப் போராட்டம், பிரெஞ்சுப் புரட்சி பற்றி எழுதப்பட்ட நூல்கள் ஆங்கிலக் கல்வி பயின்றோரைக் காந்தக் கட்டிகளாய்க் கவர்ந்தன. 1822 லிருந்து 1830 வரை துருக்கி, ஸ்பெயின், போர்த்துக்கீசிய பேரரசுகளிடமிருந்து விடுதலை பெற்ற சுமார் பன்னிரண்டு நாடுகளின் போராட்டங்கள் இவர்களிடையே நாட்டுப்பற்றை அதிகரித்தன. குறிப்பாக கிரேக்கம், இத்தாலி

அயர்லாந்து விடுதலைப் போராட்டங்கள் இந்தியரிடையே தேசிய உணர்ச்சியை ஏற்படுத்தின. 1830லிருந்து 1848 வரை ஐரோப்பாவில் நடைபெற்ற புரட்சிகள் இந்தியரது இதயங்களில் எதிரொலித்தன. ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்ற இந்தியர்கள் அங்கு நடைபெற்ற தேசிய இயக்கங்களைப்பற்றி அறிந்துகொண்டு வந்து தங்களது அனுபவங்களைப் பிறருடன் பகிர்ந்து கொண்டனர். அதோடு ஐரோப்பிய அரசியல் அமைப்புகள் பற்றியும் அறிந்து வந்தனர். இவையாவும் இந்திய தேசியத்தை வலுப்படுத்த உதவின.

அந்நியப்பட்ட இந்திய இளைஞர்

கல்கத்தா, பம்பாய், சென்னை பல்கலைக் கழகங்கள் துவக்கப்பட்ட பின்னர் பல அறிவுக் கூர்மையும் திறமையும் ஆர்வமுமிக்க இளம் பட்டதாரிகள் உருவாயினர். தக்க வேலைவாய்ப்புகளின்மையால் அவர்கள் ஏமாற்றமுற்றனர். நிர்வாக உயர் பதவிகளெல்லாம் ஆங்கிலேயருக்கு ஒதுக்கப்பட்டிருந்தன. நிர்வாகக் கீழ்ப் பதவிகளிலும் ஆலோசனைப் பணிகளிலும் அமர்த்தப்பட்டோர் வகித்த உயர்வும் பதவி உயர்வுமின்றி மனக்கசப்படைந்தனர். 1833 பட்டயச் சட்டத்திலும் 1858 பேரரசியார் பிரகடனத்திலும் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டன. இந்திய உயர் நிர்வாகப் பதவி வகித்த சுரேந்திர நாத் பானர்ஜி அநியாயமாகப் பதவிநீக்கம் செய்யப்பட்டது, பல்கலைக் கழகப் பட்டதாரிகளுக்குப் பேரிடியாக இருந்தது. இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் செய்த பானர்ஜி அந்நியப்பட்டுப் போயிருந்த இளைஞர்களை ஒன்று சேர்த்து இந்திய சங்கத்தை தோற்றுவித்தார். அதன் விளைவாகத் தேசப்பற்றும் இந்திய விடுதலை வேட்கையும் கொண்ட இளைஞர் இயக்கம் உருவாயிற்று.

பொருளாதாரச் சுரண்டல் கொள்கை

வர்த்தகர்களாக இந்தியாவுக்கு வந்த ஆங்கிலேயர் சூழ்நிலைகளின் சதியால் ஆட்சியாளர்களானார்கள். இங்கிலாந்துக்கு மூலப்பொருள்களை ஏற்றுமதி செய்து, அந்நாட்டின் செய்பொருள்களை இறக்குமதிசெய்யும் நாடாக இந்தியா பயன்படுத்தப்பட்டது. இந்தியாவின் முக்கியச் சுரங்கங்கள், மில்கள், தொழிற்சாலைகள், காப்பி தேயிலைத்தோட்டங்கள் அனைத்தும் ஆங்கிலேயர் வசமிருந்தன. கப்பல், புகைவண்டிப் போக்குவரத்தும் வங்கிகளும் அவர்கள் வசம் இருந்தன. வளரத் தொழில்களில் பெருகத்தால் நிரமாக கைத்தொழில்கள் செயலற்றுப் போயின. பல்லாயிரக்கணக்கான கைவினைஞர்கள் வேலையிழந்தனர். விவசாயம் தேக்கமுற்றது. காட்டுச் சட்டங்கள் (Forest Laws) கடுமையாகச் செயல்படுத்தப்பட்டன. வரிகள் கடுமையாக விதிக்கப்பட்டுக் கொடுமையாக வசூலிக்கப்பட்டன. வீண் ஆடம்பரச் செலவும், கையூட்டு ஊழலும் தலைவிரித்தாடின. ஆங்கிலேயர்கள் ஏராளமான பணத்தை இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்தனர். அரசாங்கக் கடன் அத்துமீறி உயர்ந்தது. இப்பொருளாதாரச் சுரண்டலின் எதிர்விளைவே இந்திய தேசிய எழுச்சியாகும்.

இனஇறுமாப்பு

ஆக்கிரமிப்பால் கைப்பற்றிய இந்தியாவை ஆணவத்துடன் ஆண்டனர் ஆங்கிலேயர். இந்தியாவை நிர்வகிப்பது 'வெள்ளையரின் பணி'யாகக்

Scanned by CamScanner

கொண்டனர். இந்தியர் சொந்த நாட்டில் அந்நியர்களைப் போன்று நடத்தப்பட்டனர். புகைவண்டி நிலையங்கள், பூங்காக்கள், பொழுதுபோக்கு மைதானங்கள், பொது இடங்கள், அலுவலகங்கள் ஆகிய இடங்களில் இந்தியர் இழிவாக நடத்தப்பட்டனர். இந்திய அரசர்களும் ஆட்சியாளர்களும் அவமதிக்கப்பட்டனர். கற்றோரும் மற்றோரும் உதாசீனப்படுத்தப்பட்டனர். நீதிபதிகள் ரானடேயும் சந்தவர்க்கரும் சாதாரண ஆங்கிலேயப்படை வீரர்களால் புண்படுத்தப்பட்டனர். பொய்யர்கள், பொய்ச்சான்று கூறுவோர், கள்ளக் கையொப்பமிடுவோர், காட்டுமிராண்டிகள், பைத்தியக்காரர்கள் என்று வர்ணிக்கப்பட்ட இந்தியர்கள்தான் ஆங்கிலேய ஆட்சியாளர்கள், அதிகாரிகள், பணித்துறையாளர்களின் இன இறுமாப்புக் கொடுக்கால் கொட்டப்பட்டு தன்மானம் தலைதூக்க தேசிய உணர்வு பெற்று ஆங்கிலேய ஆதிக்கத்துக் கெதிராகக் கிளர்ந்தெழுந்தார்கள்.

லிட்டன் பிரபுவின் அடக்குமுறைக் கொள்கை

இந்திய வைசிராய் லிட்டன் பிரபு (1876-1880)வின் அடக்குமுறைக் கொள்கை எதிர்மறை விளைவைத் தந்தது. அரும்பாயிருந்த தேசியம் மலரத் துவங்கியது. நாடு கடுமையான பஞ்சத்தின் பிடியில் சிக்கிக்கிடந்தபோது லிட்டன் பிரபு படாடோபத்துடன் 'டெல்லி தர்பாரைக்' கோலாகலத்துடன் கொண்டாடினார் (1877). இரண்டாவது ஆப்கானியப் போர் (1878-80) இந்தியக் கருவூலத்தைக் காலி செய்தது. தாய்மொழி பத்திரிகைச் சட்டம் (Vernacular Press Act 1878) இந்திய ஆயுதச் சட்டம் (Indian Arms Act, 1878) ஆகிய இரு சட்டங்களும் இந்தியரின் ஏகோபித்த எதிர்ப்பை தேடித்தந்தன. இந்தியப் பொதுப்பணி (ICS)த் தேர்வுக்கான உச்ச வயது வரம்பை 21 லிருந்து 19 ஆகக் குறைத்தது பட்டதாரிகளின் எதிர்ப்பைக் கிளப்பியது. விஞ்ஞான பூர்வமான இந்திய எல்லையை வகுக்கப் பெரும் பொருள் செலவிடப்பட்டது. லங்காஷ்யர் துணி வியாபாரத்தை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு துணி இறக்குமதி வரியை நீக்கியது. இந்திய வணிகர்களின் கோபத்தைக் கிளறியது. லிட்டன் பிரபு செய்தவையும் செய்யாமல்விட்டவையும் இந்திய மக்களிடையே அரசாங்க எதிர்ப்புணர்ச்சியையும் தேசியத்தையும் வளர்த்துவிட்டன.

இல்பர்ட் மசோதா எதிர்ப்பு

ரிப்பன் பிரபு என்று அறியப்பட்ட ஜியார்ஜ் சாமுவேல் ராபின்சன் இங்கிலாந்தில் பல உயர் பதவிகளை வகித்தவர். இந்திய விவகாரச் செயலராக இருந்தவர் (1866). 1880ல் இவர் இந்தியாவின் வைசிராயாகப் பதவியேற்றார். ரிப்பன் பிரபு தாராளமனப்பான்மையுடைய ஜனநாயகவாதி, தலகயாட்டியில் மிகுந்த அக்கறை கொண்டவர். இந்தியர்களுக்கு தல சுயாட்சியில் பயிற்சி அளிக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் இந்தியாவுக்கு வந்தார். பல சீர்திருத்தங்களைச் செய்தார். குறிப்பாக இவருக்கு முன் இருந்த லிட்டன் பிரபு கொண்டுவந்த இந்தியரின் ஏகோபித்த எதிர்ப்புக்குள்ளான தாய்மொழிப் பத்திரிகைச் சட்ட (Vernacular Press)த்தைத் தள்ளுபடி செய்தார். இவரது நான்காண்டு கால ஆட்சிக் காலத்தில் (1880-84) இல்பர்ட் மசோதா (Ilbert Bill)வைக்கொண்டு வந்ததன்மூலம் இந்தியரின் ஆதரவையும் ஆங்கிலேயரின் எதிர்ப்பையும் பெற்றார்.

ரிப்பன் பிரபு கொண்டு வந்த இல்பர்ட் மசோதா துணிகரமான நிட்டமாகும். இம்மசோதாவை ஐ.சி.எஸ்.பர்ட் என்ற சட்டத்துறை உறுப்பினர் தயாரித்ததால் இப்பெயர் பெற்றது. இந்த மசோதாவின் மூலம் இந்திய மாஜிஸ்ட்ரேட்டுகளும் நீதிபதிகளும் ஐரோப்பியரை விசாரிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடு நீக்கப்பட்டது. அதாவது குற்றம்சாட்டப்பட்ட ஐரோப்பியர்கள் நீதிமன்றத்தில் விசாரித்துத் தண்டிக்கும் உரிமை இந்தியர்களுக்கு முதன்முறையாக வழங்கப்பட்டது. இது 'இன அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட வேறுபாட்டை நீக்குவதற்கான முயற்சி' என்று குறிப்பிட்டுள்ளார் பேராசிரியர் ஆர். சத்தியநாதய்யர். ஐரோப்பிய நீதிபதிகளுக்கு இணையாக இந்திய நீதிபதிகளுக்கு கொடுக்கப்பட்ட இந்த சமஅந்தஸ்து குளவிக் கூட்டில் கையிட்டது போலாயிற்று!

அறிவு பூர்வமான நியாயமான இல்பர்ட் மசோதா கல்கத்தாவிலும் இலண்டனிலும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. 'இந்தியாவை அடக்கி ஆளவேண்டுமென்ற இறைவனால் நிர்மாணிக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரின் உள்ளத்து உணர்வையும் இம்மசோதா அவமதிக்கிறது' என்று கூறினார் இந்திய அரசாங்க வெளியுறவுச் செயலரான செட்டான் கேர் (Seton Kerr). இந்தியருக்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்தால் ஆயாவை அறைந்ததாகப் பொய்க் குற்றம்சாட்டி ஒரு வெள்ளை இனப்பெண்ணை எதைக்கு அனுப்பிவிடுவர்' என்று மெரிடித் டௌன்ஷெண்டு (Meredith Townshend) என்பவர் 'ஸ்பெக்டேட்டர்' என்ற பத்திரிகையில் எழுதினார்.

இன உணர்வால் தூண்டப்பட்ட ஆங்கிலேயர் ரிப்பன் பிரபுவை ஆவேசத்துடன் விமர்சித்தனர். அரசாங்கப் பதவியில் இல்லாத ஐரோப்பியர் அவரைப் புறக்கணித்தனர். சூழ்நிலைக் கட்டாயத்தால் இல்பர்ட் மசோதாவில் மாற்றம் செய்யப்பட்டது. மாற்றம் செய்யப்பட்ட மசோதா அதன் மூல நோக்கத்தை நிறைவேற முடியாமல் செய்துவிட்டது. இல்பர்ட் மசோதா எதிர்ப்புமூலம் இந்தியர்களுக்கு ஒரு உண்மை தெளிவாகத் தெரிந்தது. அதாவது காலனி ஆட்சியில் இந்திய மக்களுக்கு நீதிகிடைக்காது என்பதைப் புரிந்து கொண்டனர். இந்திய தேசம் பலம்பெற இந்நிகழ்ச்சியும் பெரும் காரணமாக இருந்தது எனலாம்.

Scanned by CamScanner

8. காங்கிரசுக்கு முற்பட்ட அரசியல் சார்ந்த அமைப்புகள்

சிற்றாறுகள் சேர்ந்துதான் பேராறாகப் பெருக்கெடுக்கின்றது. அதேபோன்று சிறிய துவக்கங்களிலிருந்துதான் பெரிய திறுவனங்கள் தோன்றுகின்றன.

- பி. பட்டாபி சீத்தாராமையா.

இந்தியாவில் முந்தைய பத்து நூற்றாண்டுகளில் ஏற்பட்ட மாற்றங்களைவிடப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட மாற்றங்கள் அளவிலும், தன்மையிலும், விளைவுகளிலும் முக்கியமானவை. அவை இந்தியாவின் முகத்தையே மாற்றியமைத்தன. ஆங்கிலேய ஆட்சியினால் ஏற்பட்ட அரசியல், நிர்வாக மாற்றங்கள்; ஐரோப்பியப் பண்பாட்டுத் தாக்கத்தால் விளைந்த மனமாற்றம், பிரம்மசமாஜம், பிரார்த்தனா சமாஜம், ஆரிய சமாஜம், ராமகிருஷ்ண இயக்கம், பிரம்மஞான சபை ஆகிய மறுமலர்ச்சி இயக்கங்களால் கொண்டுவரப்பட்ட சமுதாய, சமய சீர்திருத்தங்கள்; தென்னிந்தியக் இளர்ச்சி, வேலூர்க் இளர்ச்சி, ஆங்கிலேய ஆட்சிக்கெதிரான உள்நாட்டு எதிர்ப்புகள் ஆகியவற்றின் விளைவுகள் யாவும் இந்திய தேசியம் உருவாக வழிவகுத்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்திய தேசியம் பல அரசியல் சார்ந்த அமைப்புகள் மூலம் தெளிவாக வெளிப்பட்டது. அந்த அமைப்புகள் வங்காள, பம்பாய், சென்னை ராஜதானிகளில் தோற்றுவிக்கப்பட்டன.

வங்காள ராஜதானியில் அரசியல் சார்ந்த அமைப்புகள்

டெரோலியர்கள்

ஹென்றி விவியன் டெரோலியோ (1808-31) கல்கத்தா இந்துக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். அவர் தனது முற்போக்குக் கருத்துக்களாலும், நாட்டுப் பற்றாலும், அச்சமற்ற நடவடிக்கைகளாலும், மாணவர்களின் அன்பையும், ஆதரவையும் பெற்றார். வங்காள இளைஞர்களுக்கு அவர் சாக்ரட்டீசாகக் காட்சியளித்தார். அவரைப் பின்பற்றியோர் 'டெரோலியர்கள்' (Derozians) என அழைக்கப்பட்டனர். தங்களது அறிவுத் திறத்தாலும், மரியாதையான நடத்தையாலும், நாட்டுப் பற்றாலும் அவர்கள் சமுதாயத்தின் நன்மதிப்பைப் பெற்றனர். டெரோலியர்கள் சொல்லாலும், எழுத்தாலும், செயலாலும் பத்திரிகைச் சுதந்திரம், தொழிற்கல்வி, உயர்பதவிகளில் இந்தியர்களை நியமிக்க வேண்டியதன் இன்றியமையாமை பற்றிப் பிரச்சாரம் செய்தனர். போலீஸ் ஊழல், நீதித்துறைச் சீர்கேடுகள், விவசாயிகளின் பிரச்சனைகள் பற்றிப் பொதுமக்களுக்கு எடுத்துக் கூறினர். வங்காளியரிடையே அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தினார். வங்காளத்தில் தேசிய இயக்கம் உருவாக டெரோலியர்கள் கால்கோள் நாட்டினர் எனலாம்.

பங்கபாஷா பிரகாசிக சபை

டெரோலியர்கள் செய்யத் தவறியதை ராஜா ராம்மோகன் ராயின் ஆதரவாளர்கள் செய்தனர். ராம்மோகன் ராய் மக்களின் குறைகளைத் துணிவுடன் எடுத்துக்காட்டி அவற்றைப் போக்குவதற்கான வழிமுறைகளைக் கோரிய முதல் இந்தியர் ஆவார். அவரது ஆதரவாளர்கள் 1836-ஆம் ஆண்டில் பங்கபாஷா பிரகாசிக சபை (Bangabhasha Prakasika Sabha) எனற முதல் அரசியல் சார்ந்த அமைப்பை ஏற்படுத்தினர். அந்த அமைப்பு அரசாங்கத்தின் கொள்கைகளை விவாதித்து விமரிசித்தது; நிர்வாகக் குறைபாடுகளைக் கண்டித்தது. வேண்டுகோள்கள், விண்ணப்பங்கள் மூலமாக மக்கள் பிரச்சனைகளுக்கு அரசாங்கப் பரிகாரம் தேடித்தது.

வங்காள நிலக்கவான்தார்கள் சங்கம்

கல்கத்தா, அதன் அண்டைப் பகுதிகளிலிருந்த நிலக்கவான்தார்கள் 1837 நவம்பர் 12-ஆம் நாள் இந்து கல்லூரியில்கூடி வங்காள நிலக்கவான்தார்கள் சங்கத்தைத் (Bengal Landholders Society) துவக்கினர். அடுத்த ஆண்டு அச்சங்கம் செயல்படத் துவங்கிற்று. நிலச் சொந்தக்காரர்கள் சாதி, சமய, இன வேறுபாடின்றி இச்சங்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அதன் கூட்டங்கள் வங்காளத்தில் பல பகுதிகளில் நடத்தப்பட்டன. அக்கூட்டங்களில் நில சம்பந்தப்பட்ட பிரச்சனைகளோடு, நீதிமன்றங்களில் வங்காள மொழியைப் பயன்படுத்தல், முத்திரை வரியைக் குறைத்தல், குற்ற வழக்குகளில் சாட்சியம் கூறுவோருக்கு நிதி உதவி செய்தல் போன்ற பொதுப்பிரச்சனைகளையும் விவாதித்தனர். துவாரகநாத் தாகூரின் ஆலோசனைப்படி இச்சங்கம் ராஜா ராம்மோகன் ராயின் முன்னுதாரணத்தைப் பின்பற்றித் தனது சார்பாளர்களை இலண்டனுக்கனுப்பி அரசியல் பிரச்சாரத்தைத் தொடர்ந்தது.

வங்காள பிரிட்டிஷ் இந்திய சங்கம்

ஸ்காட்லாந்தின் விடுதலைப் போராட்ட வீரரான ஜார்ஜ் தாம்ப்ஸன் (George Thompson) வங்காள நிலக்கவான்தார்கள் சங்க அலுவலகத்தை இலண்டனில் துவங்கியவர். அவர் துவாரகநாத் தாகூருடன் இந்தியாவுக்கு வந்தார் (1843). தாம்ப்ஸனின் பொறி பறக்கும் பேச்சுக்கள் வங்காள இளைஞர்களிடையே எழுச்சியை ஏற்படுத்தின. மக்கள் ஒன்றுபட்டால்தான் அவர்களுக்கு உண்டு வாழ்வு என்று முழங்கினார் அவர். அவருடைய பேச்சுக்கள் இந்தியப் பத்திரிகைகளில் விரிவாகப் பிரசுரிக்கப்பட்டன. 1843 ஏப்ரல் 20-ஆம் நாள் வங்காள பிரிட்டிஷ் இந்திய சங்கம் (Bengal British India Society) தோன்ற அவரே காரணமாக இருந்தார். இந்தியர்களைப் பற்றிய உண்மை நிலையைக் கண்டறிந்து கூறுவதும், மக்கள் நலனை அமைதியான சட்டப்பூர்வமான வழியில் பாதுகாப்பதும், அனைத்துப் பிரிவினரின் உரிமைகளையும் நலன்களையும் விரிவுப்படுத்துவதும் அச்சங்கத்தின் நோக்கங்களாக இருந்தன. மேலைநாட்டு முறையில் அமைக்கப்பட்ட ஓர் அரசியல் அமைப்பு வங்காள பிரிட்டிஷ் இந்திய சங்கமாகும்.

Scanned by CamScanner

இந்தியா லீக்

கிர் குமார் கோஷ் 1875 டிசம்பர் 23ஆம் நாள் இந்தியா லீக் (India League)ஐத் தோற்றுவித்தார். மக்களிடையே தேசிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த லீக்கின் நோக்கமாகும். இழக்கிந்திய மக்களிடையே அரசியல் உணர்வு ஏற்பட்டதற்கு இந்த லீக் காரணமாயிருந்தது. மாவட்ட அமைப்புகள் முடுக்கி விடப்பட்டன. வங்காளத்துக்கு வெளியே உள்ள அரசியல் சார்ந்த அமைப்புகளோடு தொடர்பை ஏற்படுத்துவதில் இவிர்க் கவனம் செலுத்திய முதல் அமைப்பு இந்தியா லீக் ஆகும். வங்காள, பம்பாய் அமைப்புகளுக்கிடையே இணைப்பை ஏற்படுத்தும் நோக்கத்தோடு கிர் குமார் கோஷ் பம்பாய் சென்றார்.

இந்தியக் கழகம்

சுரேந்திரநாத் பானர்ஜி 1876 ஜூலை 26ஆம் நாள் ஒல்கத்தா ஆல்பர்ட் மண்டபத்தில் இந்தியக் கழகத்தைத் தோற்றுவித்தார். இந்தியாவில் பலமிக்க பொதுமக்கள் கருத்தை உருவாக்குவது; அரசியல் நலன்கள், விருப்பங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் அனைத்துப் பிரிவினரையும் ஒன்றுசேர்த்தல்; இந்து-முஸ்லீம்களுக்கிடையே இணக்கமான நட்புறவை ஏற்படுத்தல்; பொது இயக்கங்களில் மக்களை ஈடுபடுத்துதல் ஆகியவையே இந்தியக் கழகத்தின் நோக்கங்கள்.

இந்தியப் பொதுப் பணித்துறை (ICS)த் தேர்வு எழுதுவதற்கான உச்சவயது வரம்பை 21லிருந்து 19 ஆகக் குறைத்த அரசாங்க நடவடிக்கைக் கெதிராக இந்தியக் கழகம் அகில இந்தியப் போராட்டத்தைத் துவக்கியது. இந்தியாவின் பல பகுதிகளில் செயல்பட்டுவந்த சங்கங்களுக்கும் தலைவர்களுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டன. 1877-78ல் சுரேந்திரநாத் பானர்ஜி இந்திய நகரங்களுக்குச் சுற்றாவளிச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அலகாபாத், கான்பூர், லக்னோ, மீரட், லாகூர் ஆகிய இடங்களில் இந்தியக் கழகத்தின் கிளைகளைத் துவக்கினார். வெறுக்கத்தக்க தாய்மொழி பத்திரிகைச் சட்டம், இந்திய ஆயுதச் சட்டம், தனி உரிமைச்சட்டம் ஆகியவற்றுக்கெதிராக இந்தியக் கழகம் தனது எதிர்ப்பைத் தெரிவிக்கத் தவறவில்லை. இரண்டாவது ஆப்காளியப் போரால் ஏற்பட்ட பணவியத்தைப் பற்றியும், துணிகளின் இறக்குமதி வரியைக் குறைத்ததால் ஏற்பட்ட விளைவுகளைக் குறித்தும், இந்தியாவில் பிரதிநிதித்துவ ஆட்சியின் முக்கியத்துவம் பற்றியும் இக்கழகம் பொதுமக்களுக்கு விளக்கியது. இல்பர்ட் மசோதா போராட்டத்தில் சுரேந்திரநாத் பானர்ஜிக்கு நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக விசாரிக்கப்பட்டு (1833) குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டு, சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது இந்தியர்களிடையே ஒருமனதான கண்டனத்தை தூண்டிவிட்டது. இந்தியர் கழகம் தனது முதல் தேசிய மாநாட்டை (1883) டிசம்பர் 29-30 தேதிகளில் கல்கத்தாவில் கூட்டியது. அதில் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் வந்த நூற்றுக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். பம்பாயில் இந்திய தேசிய காங்கிரஸ் கூடிய அதே நாட்களில் இந்தியக் கழகம் தனது இரண்டாவது தேசிய மாநாட்டை நடத்தியது.

பம்பாய் ராஜதானியில் அரசியல் சார்ந்த அமைப்புகள்

பம்பாய் கழகம்

பம்பாய் பிரமுகர்களால் 1852 ஆகஸ்டு 26ஆம் நாள் பம்பாய் கழகம் (Bombay Association) துவக்கப்பட்டது. பம்பாய் ராஜதானி மக்களின் தேவைகளைப் பற்றித் தெரிந்து கொள்வதும், நாட்டு நலனைப் பேணக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவ்வப்போது அரசாங்கத்துக்கு விண்ணப்பிப்பதும் பம்பாய் கழகத்தின் நோக்கங்கள். ஜகன்னாத் சங்கர்ஷெத், தாதாபாய் நௌரோஜி, வி என் மண்டலிக், நௌரோன்ஜி, சூர்தான்ஜி ஆகிய பிரபலஸ்தர்கள் அக்கழகத்தின் தலைவர்களாயிருந்தனர். 1853ல் பம்பாய் கழகம் இந்திய நிர்வாக முறையைக் கடுமையாக விமரிசித்துப் பிரிட்டிஷ் பாராளுமன்றத்துக்கு ஒரு விண்ணப்பத்தை அனுப்பியது. அவ்விண்ணப்பம் இலண்டனில் பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது.

பூனா சர்வஜனிக் சபை

பம்பாய் கழகத்தை முன்மாதிரியாகக் கொண்டு 1867ல் பூனா கழகம் துவக்கப்பட்டது. அதுவே மூன்றாண்டுகளுக்குப் பின்னர் பூனா சர்வஜனிக் சபை (Poona Sarvajanic Sabha) என்று பெயர் மாற்றம் பெற்றது. அரசாங்கத்துக்கும் மகாராஷ்டிர மக்களுக்குமிடையே இணைப்புப் பாலமாக செயல்படுவதே அச்சபையின் நோக்கம். ரானடே அச்சபையின் உயிர்நாடியாக இருந்தார். சர்வஜனிக் சபை தக்காணத்தில் கதேஷ்இயக்கத்தைத் துவக்கியது. 1872, 1876-78ஆம் ஆண்டுகளில் பஞ்ச நிவாரணப் பணியில் அது தீவிரமாக ஈடுபட்டது. பிரிட்டிஷ் பாராளுமன்றத்துக்கு அதன் தூதுக்குழுவை அனுப்பியது. இந்தியப் பிரதிநிதிகளைக் கொண்ட மாநாடுகளை அவ்வப்போது நடத்துவது பற்றி ஆலோசிக்க ஆதரவு திரட்ட அதன் தூதுக் குழுக்களை டில்லிக்கும், கல்கத்தாவுக்கும் அனுப்பியது. இல்பர்ட் மசோதா போராட்டத்தில் சர்வஜனிக் சபை ஆர்வத்துடன் பங்கேற்றது. சட்டமன்ற பொதுப்பணித்துறையில் இந்தியர்களுக்குப் பதவிகளளித்தல் பற்றிய சீர்திருத்தங்களை அச்சபை வலியுறுத்தியது. ரானடே, கோகலே, திலகர் போன்றோர் சர்வஜனிக் சபைப் பாசறையில் பயிற்சி பெற்ற அரசியல் போராட்டத் தலைவர்களாவர். அச்சபை 1885ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் கூடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முன்வந்தது.

பம்பாய் ராஜதானிக் கழகம்

1885 ஜனவரி 31ஆம் நாள் பம்பாய் ராஜதானிக் கழகம் (Bombay Presidency Association) துவக்கப்பட்டது. பத்ருதீன் தியாப்ஜி, பெரோஸ்ஷா மேத்தா ஆகியோர் அக்கழகம் தோன்றக் காரணமாயிருந்தனர். தீர்மானங்கள், விண்ணப்பங்கள், பொதுக்கூட்டங்கள்மூலம் நாட்டின் பொதுப்பிரச்னைகள் பற்றி மக்களின் கவனத்தைக் கவர்ந்தது பம்பாய் ராஜதானிக் கழகம். தேசியத் தந்திச் சங்கத்தை (National Telegraph Union) அமைப்பதற்கான முயற்சியை மேற்கொண்டது. இந்தியக் கழகம், சென்னை மகாஜன சபை, பூனா சர்வஜனிக் சபை ஆகியவற்றோடு சேர்ந்து பம்பாய் ராஜதானிக் கழகம் பிரிட்டிஷ்

Scanned by CamScanner

வாக்காளர்களுக்கு இந்தியநிலை பற்றி முறையிடு செய்தது. மூன்று தூதுக் குழுக்களை இங்கிலாந்துக்கனுப்பியது. இந்திய தேசிய காங்கிரஸ் பம்பாயில் கூடுவதற்கான ஏற்பாடுகளை பம்பாய் ராஜதானிக் கழகமே மேற்கொண்டது.

சென்னை ராஜதானியில் அரசியல் சார்ந்த அமைப்புகள்

சென்னைவாசிகள் சங்கம்

சென்னைவாசிகள் சங்கம் (Madras Native Association) வங்காள பிரிட்டிஷ் இந்தியக் கழகத்தின் இளையாகத் துவக்கப்பட்டது. 1852 பிப்ரவரி மாதம் 26ஆம் நாள் அது சுதந்திரமான தனிச் சங்கமாயிற்று. சென்னையிலிருந்த தமிழ், தெலுங்கு வியாபாரிகள் இச்சங்கம் தோன்றக் காரணமாக இருந்தனர். கி. ஏகாம்பர முதலியார் அதன் தலைவராக இருந்தார். ஜி. லஷ்மணராக செட்டி, பி. அப்பாசாமி பிள்ளை, பி. வீரபெருமாள் பிள்ளை, எ. ஆழ்வார் செட்டி, வி. சடகோபாசார்லு ஆகியோர் அதன் பிரதான உறுப்பினர்கள். மேற்கத்திய முறையில் தென்னிந்தியாவில் துவக்கப்பட்ட முதல் அரசியல் சார்ந்த அமைப்பு இதுவேயாகும். வரிக்குறைப்பு, வரி வசூலிப்புக் கடுமையைத் தளர்த்தல்; பாதைகள், பாலங்கள், நீர்ப்பாசனப் பணிகள், கல்வி ஆகியவற்றை விரிவுபடுத்துதல்; நிர்வாகத்தையும் நிதித்துறையையும் சீர்திருத்தல் ஆகியவைபற்றி இச்சங்கம் 1850களில் போராடியது. 1853ல் இச்சங்கம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்துக்கு இரண்டு விண்ணப்பங்களைச் சமர்பித்தது. 1856ல் வருவாய்துறை அதிகாரிகள் செய்ததாகக் கூறப்படும் தித்திரவதைகளைப்பற்றி விசாரணை செய்ய வேண்டுமெனக் கோரியது. 1858ல் திருநெல்வேலியில் ஏற்பட்ட சமயக் கலவரங்களைத் தல அதிகாரிகள் சரியாகக் கையாளவில்லை என்று குறை கூறியது. 1860ல் தஞ்சை மன்னரை மீண்டும் சிம்மாசனத்தில் அமர்த்த வேண்டுமென இச்சங்கம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்துக்கு விண்ணப்பித்தது. 1868ல் ஜி. லஷ்மணராக செட்டி இறக்கும்வரை சென்னைவாசிகள் சங்கம் தீவிரமாகச் செயல்பட்டது.

சென்னை மகாஜன சபை

1884 மே 16ஆம் நாள் சென்னை மகாஜன சங்கம் (Madras Mahajana Sabha) துவக்கப்பட்டது. ஆர். ரெங்கைய நாயுடு அதன் தலைவர். எம். விஜயராகவாச்சாரியும், பி. அனந்தாச்சார்லுவும் அதன் செயலர்கள். சென்னைவாசிகள் சங்கம் போலன்றி இச்சபை அரசாங்கச் சார்பற்ற கற்றோரை உறுப்பினர்களாகக் கொண்டிருந்தது. பிற ராஜதானிகளில் செயல்பட்ட பிற அமைப்புகளோடு இச்சபை தொடர்பு கொண்டது. சென்னை ராஜதானியிலிருந்த பிற மாவட்ட அமைப்புகளின் ஆதரவையும் பெற்றது. 1884ல் பம்பாயில் ரிப்பன் பிரபுவுக்குப் பாராட்டுரை வழங்குவதற்காக கூட்டப்பட்ட கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக இச்சபை ஒரு தூதுக்குழுவை அனுப்பியது. சென்னை தூதுக்குழுவினர் பம்பாய் தலைவர்களுடன் பொதுப் பிரச்னைகள் பற்றிக் கலந்துரையாடினர். இச்சபை சென்னையில் இரண்டு மாநாடுகளைக் கூட்டியது. பம்பாயில் கூடிய இந்திய தேசிய காங்கிரசுக்கு சென்னை மகாஜன சபை தனது பிரதிநிதிகளையும் அனுப்பி வைத்தது.

9. இந்திய தேசிய காங்கிரஸ், 1885-1905

காங்கிரஸ் இந்தியாவின் பழம்பெரும் அமைப்பாகும். இது உண்மையிலேயே ஒரு தேசிய நிறுவனம். காங்கிரஸ் ஒரு குறிப்பிட்ட வகுப்பாரையோ அல்லது ஒருசாராரின் நலன்களையோ காப்பதற்காக ஏற்பட்டதல்ல.

- மகாத்மா காந்தி

இந்திய தேசிய காங்கிரசின் தோற்றம் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியாகும். மேற்கத்தியப் பண்பாட்டுத் தாக்கம்; இந்திய சமுதாய, சமய மறுமலர்ச்சி, பத்திரிகை, இலக்கிய வளர்ச்சி, ஆங்கிலேய அதிகார வர்க்கத்தின் ஆதிக்கப் போக்கு; அரசாங்கத்தின் பொருளாதாரச் சுரண்டல் கொள்கை ஆகியவற்றின் விளைவாக இந்தியர்களிடையே தேசிய உணர்ச்சி உருவானது. வங்காளம், பம்பாய், சென்னை ராஜதானிகளில் துவக்கப்பட்ட அரசியல் சார்ந்த அமைப்புகள் இந்திய தேசியத்தின் வடிகால்களாக அமைந்தன. இப்போக்கின் இயல்பான விளைவே இந்திய தேசிய காங்கிரசின் தோற்றமாகும். காங்கிரஸ் துவக்கப்பட்ட பின்னர் இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது.

காங்கிரசின் தோற்றம்

இந்திய அரசியல் வானில் இந்திய தேசிய காங்கிரஸ் தோன்றியதற்கான சூழ்நிலைகள், காரணங்கள் பற்றிய ஒருமித்த கருத்தில்லை. வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் காங்கிரசின் தோற்றத்தைப் பற்றிப் பல்வேறு விளக்கங்களைக் கொடுத்துள்ளார்கள். அவற்றுள் முக்கிய விளக்கங்கள் வருமாறு:

இயல்பான தோற்றம்

காங்கிரசின் தோற்றம் இயல்பானது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவின் பல்வேறு இடங்களில் துவக்கப்பட்ட அரசியல் சார்ந்த அமைப்புகளின் தவிர்க்க முடியாத இயற்கையான விளைவே காங்கிரசின் தோற்றமாகும். ஆங்கிலேய ஆட்சியின் ஆதிக்கப் போக்கு, அதற்கெதிராக ஏற்பட்ட கிளர்ச்சிகள், இந்திய மறுமலர்ச்சி, தேசியம் பல்வேறு ராஜதானி அமைப்புகள் ஆகியவை காங்கிரஸ் தோன்றுவதற்கான சூழ்நிலையை உருவாக்கின. ரிப்பன் பிரபுவின் தாராளக் கொள்கைகளை ஐரோப்பியர்கள் தீவிரமாக எதிர்த்ததால் தேசிய உணர்வுமிக்க இந்தியர்கள் அகில இந்திய அரசியல் அமைப்பின் இன்றியமையாமையை உணர்ந்தனர். அத்தகைய அமைப்பைத் தோற்றுவித்தனர். காலத்தின் கட்டாயம் அது. அன்னை இந்தியா ஈன்றெடுத்த தேசியக் குழந்தையே காங்கிரஸ் ஆகும்.

Scanned by CamScanner

டஃபரின் பிரபுவின் பங்கு

காங்கிரஸ் தோன்றுவதற்கு இந்திய வைசிராய் டஃபரின் பிரபு (Lord Dufferin, 1884-88) பல காரணகர்த்தா என்று லாலா லஜபதிராய் கருதினார். காங்கிரஸ் அவரது 'கருத்துக் குழந்தை' என்றும், அவரே 'காங்கிரஸின் ஞானத் தந்தை' என்றும் கூறப்படுகிறது. அரசாங்கத்துக்கும் மக்களுக்குமிடையே ஒரு இணைப்புப் பாலமாக இருக்கக்கூடிய தேசிய அமைப்பை அமைக்குமாறு டஃபரின் பிரபு தன்னைக் கலந்தாலோசித்த ஆலன் ஆக்டேவியன் ஹியூம் (A.O. Hume) கூறியதாகவும், அந்த ஆலோசனையைச் சிரமேற்கொண்டு ஹியூம் இந்திய தேசிய காங்கிரசைத் தோற்றுவித்தார் என்றும் சொல்லப்படுகிறது. அத்தகைய அமைப்பின்மூலம் மக்களுக்கு அரசாங்கத்தின் கொள்கைகளையும் எடுத்துக்கூற முடியும் என்றும், அவை பற்றிய மக்களின் கருத்துக்களை அறியவும் உதவியாக இருக்கும் என்றும் கருதியதாலேயே அகில இந்திய அமைப்பு உருவானது என்பதே இந்த வாதத்தின் சாரமாகும்.

ஹியூமின் பங்கு

ஆலன் ஆக்டேவியன் ஹியூம்தான் காங்கிரஸ் தோன்றுவதற்கு முழு முதற்காரணம் என்று பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. காங்கிரஸின் முதல் தலைவரான டபிள்யு.சி. பானர்ஜி (W.C.Bonnerjee) ஹியூமைக் 'காங்கிரஸின் தந்தை' என்று வர்ணித்தார். இந்திய அரச பணியிலிருந்த ஹியூம் அரசாங்கச் சார்பற்ற ஆதாரங்களின் அடிப்படையில் இந்தியாவில் 1857ல் ஏற்பட்ட கிளர்ச்சியைவிட மோசமான கொந்தளிப்பு ஏற்படக்கூடும் என்று அறிந்து, அத்தகைய ஆபத்தைத் தவிர்க்கவே காங்கிரசைத் தோற்றுவித்தார் என்று கருதப்படுகிறது. 1877 பஞ்சத்துக்குப்பின் மக்களிடையே எழுந்த ஏமாற்றமும், கற்றோரின் அந்நியப்பட்ட நிலையும் அவரது முடிவை உறுதி செய்தன. மக்களின் பிற்றத்துக்குத் தக்க வடிகாலமைப்பதே பிரிட்டிஷ் பேரரசின் நலனுக்கு உகந்தது என்றுணர்ந்த ஹியூம் காங்கிரசைத் துவக்கினார். மேலும் அத்தகைய அமைப்பு இங்கிலாந்தில் உள்ளது போன்ற அரசாங்கத்தின் பொறுப்பான எதிர்க் கட்சியாகச் செயல்படலாமென்றும், இந்திய சமுதாயப் பிரச்னைகளை விவாதிக்கலாமென்றும் அரசாங்கச் சார்பற்றோருக்குமிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தலாமென்றும் ஹியூம் நினைத்தே காங்கிரசைத் தோற்றுவித்தார்.

ரஷ்யப் படையெடுப்புப் பயம்

டஃபரின் பிரபு இந்திய வைசிராயாகப் பொறுப்பேற்ற போது ரஷ்யா இந்தியாவை எந்த நேரத்திலும் தாக்கக்கூடும் என்ற பயமிருந்தது. ரஷ்யா ஹிராட்டைத் தாக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்தியர்கள் இந்தியாவிலிருந்து ஐரோப்பியர், பத்திரிகையாளர்கள் ரஷ்ய அபாயம் கண்டு அஞ்சினர் ரஷ்யத் தாக்குதலை முறியடிக்கத் தங்களது முழு ஆதரவை அரசாங்கத்துக்குத் தந்தனர். ரஷ்யப் படையெடுப்புக்கு எதிராக இந்தியாவில் 'தொண்டர் படை இயக்கம்' (Volunteer Corps Movement) தீவிரமாகத் துவக்கப்பட்டது. எனவே ரஷ்யப் படையெடுப்பு பற்றிய பயமே (Russophobia) காங்கிரஸ் தோன்றுவதற்கான உடனடியான உந்து சக்தியாக இருந்தது

கற்றறிந்தோர் அரசாங்கக் கூட்டு முயற்சி

1870களிலும், 1880 துவக்கத்திலும் இந்தியாவில் புரட்சி ஏற்படுவதற்கான சூழ்நிலை இருந்தது. ஆங்கிலேய அரசாங்கத்துக்கெதிராக மக்களும் மனக்கசப்படைந்திருந்தனர். கற்றோரும் வெறுப்புற்றிருந்தனர். இல்பர்ட் மசோதா பற்றிய போராட்டம் இந்தியாவில் பதட்ட நிலையைத் தோற்றுவித்திருந்தது. கற்றோர் கூட்டம் மக்கள் இயக்கத்துக்குத் தலைமை தாங்கிப் போராடினால் இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சி ஆட்டங் கண்டுவிடும் என்று அஞ்சிய அரசாங்கம் கற்றறிந்தோருடன் கூட்டுச் சேர்ந்து, காங்கிரஸ் துவக்கப்படுவதை ஆதரித்தது. அதாவது கற்றோர் கூட்டத்தைப் பாமரர்களிடமிருந்து பிரிக்கும் நோக்கத்துடனேயே காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டது. அம்முயற்சியில் அது வெற்றி பெறவும் செய்தது. அதனால்தான், துவக்க காலத்தில் காங்கிரஸ் மேல்தட்டு மக்களின் கருவியாகச் செயல்பட்டது எனலாம். இது ஒரு சாரரின் வாதம்.

பிரம்மஞான சபையின் பங்கு

இந்திய தேசிய காங்கிரஸ் தோன்றுவதற்குப் பிரம்மஞான சபை (Theosophical Society) பெரிதும் காரணமாக இருந்தது என்று வாதிக்கப்படுகிறது. அச்சபை இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பிரதிநிதிகளை ஒன்றுகூட்டி நாட்டின் பொதுப்பிரச்னைகளை விவாதித்தது என்பதில் ஐயமில்லை. 1884 டிசம்பர் மாதம் சென்னையிலிருந்து ராகுநாதராவின் இல்லத்தில் அத்தகைய ஒரு கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டமே இந்திய தேசிய காங்கிரஸ் பின்னர் பம்பாயில் கூடுவதற்குக் காரணமாயிருந்தது என்று உரிமை கொண்டாடப்படுகிறது. பிரம்ம ஞான சபையின் விளைவே காங்கிரஸ் என்று வாதிட்டார் அன்னிபெசண்ட் அம்மையார். பேராசிரியர் கு.ராஜய்யனும் இராகுநாத ராவ் இல்லத்தில் நடந்த கூட்டமே தேசியக் காங்கிரசைத் தோற்றுவிக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியதாக கருதுகிறார்.

மதிப்பீடு

தேசத்தின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகத் துவக்கப்பட்ட அமைப்பே இந்திய தேசிய காங்கிரஸ். அதற்குமுன் துவக்கப்பட்ட பல அரசியல் அமைப்புகளின் உச்சக்கட்டமாக உருவானது காங்கிரஸ். காங்கிரஸின் வரலாற்றை எழுதிய பி. பட்டாபி சீத்தாராமையா காங்கிரஸின் தோற்றம் ஒரு மர்மமாகவே உள்ளது என்று எழுதியுள்ளார். காங்கிரஸின் தோற்றத்தில் எவ்வித மர்மமும் இல்லை. தற்கால இந்திய வரலாற்றில் தவிர்க்க இயலாத இயல்பான விளைவே காங்கிரஸ். அகில இந்திய அமைப்பைத் துவக்கும் போட்டியில் ஹியூம் தனக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்திக் காங்கிரசைத் தோற்றுவிப்பதில் முந்திக் கொண்டார், அவ்வளவே.

ஹியூம் பிரிட்டிஷ் பேரரசுக்கும் விசுவாசமாயிருந்து கொண்டு இந்தியருக்கும் நன்மை செய்ய வேண்டும் என்ற இரண்டாத வித்தையை நிகழ்த்திப் பார்த்தார். இவ்விரண்டும் மணலும் சர்க்கரையும் போன்றவை; இரண்டறக் கலக்க முடியாது. எனினும், ஹியூமின் முயற்சியால்தான் காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டது என்பதில் இரு வேறு கருத்து இருக்க முடியாது. 1882ல்

Scanned by CamScanner

இந்திய அரசாங்கப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற ஹியூம் ஒரு அகில இந்திய அமைப்பைத் தோற்றுவிக்க அரும்பாடு பட்டார். 'முதியவரின் நம்பிக்கை' என்ற நூலில் இந்தியர்களின் இன்னல்களையும் இடர்பாடுகளையும் ஆங்கிலேய ஆட்சி அகற்ற செய்யக்கூடாதென எச்சரித்தார். வைசிராய் டஃபரினைச் சந்தித்து அரசியல் சார்ந்த அமைப்பை ஏற்படுத்துவதுபற்றி ஆலோசனை நடத்தினார். 1883 மார்ச் முதல் தேதி கல்கத்தா பல்கலைக் கழகப் பட்டதாரிகளுக்கு எழுதிய கடிதத்தில் கடுகு விதைகளைப்போன்று ஐம்பது தன்னலங்கருதாத, தியாகம் செய்யக்கூடிய இந்தியர்களைக் கொண்ட அமைப்பை ஏற்படுத்த வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்தினார். இந்தியத் தலைவர்களுடன் தொடர்பு கொண்டார். 1885 டிசம்பர் மாதம் இந்தியப் பிரதிநிதிகளைக் கொண்ட கூட்டத்தைக் கூட்டுவதென மார்ச் மாதமே முடிவு செய்தார். இதற்கிடையே ஹியூம் இங்கிலாந்து சென்று ரிப்பன் பிரபு, ஜான் பிரைட், ஆர்.டி.ரீட் போன்றோரைச் சந்தித்துத் தன் முயற்சிக்கு அவர்களது ஆதரவை நாடினார். இந்தியாவில் நடக்கவிருந்த மாநாடுபற்றிய விவரங்களை இங்கிலாந்தின் பத்திரிகைகளில் பிரகரிக்க ஏற்பாடுகளைச் செய்தார். இந்தியா திரும்பிய ஹியூம் வெற்றிகரமாக இந்திய தேசிய காங்கிரசைத் துவக்கினார். எனவே காங்கிரஸ் தோன்றுவதற்கு ஹியூம் தனிப் பொறுப்பேற்றார் என்பதில் சந்தேகத்துக்கிடமில்லை. காங்கிரசின் தோற்றத்துக்காகக் கூறப்படும் பிற காரணங்கள் அனைத்தும் தேசிய அரசியல் அமைப்பு ஏற்படுவதற்கான சூழ்நிலையையும், பின்புலத்தையும் ஏற்படுத்திக் கொடுத்தன.

காங்கிரசின் முதல் கூட்டம், 1885

இந்திய தேசிய யூனியன் (Indian National Union) என்ற பெயர் தாதாபாய் நௌரோஜியின் யோசனைப்படி இந்திய தேசிய காங்கிரஸ் (Indian National Congress) என்று மாற்றப்பட்டது. அதன்முதல் கூட்டம் 1885 டிசம்பர் 28ம் நாள் பம்பாய் கோகுல்தாஸ் தேஜ்பால் சமஸ்கிருதக் கல்லூரியின் மண்டபத்தில் துவக்கப்பட்டது. கல்கத்தாவின் பிரபல வழக்கறிஞராக உமேஷ் சந்திர பானர்ஜி (W.C. Bonnerjee) காங்கிரசின் முதல் தலைவராக ஒரு மனதுடன் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆலன் ஆக்டேவியன் ஹியூம் அதன் பொதுச் செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டார். அப்பதவியில் அவர் 1906 வரை நீடித்தார். காங்கிரசின் முதல் கூட்டத்தில் ஆங்கிலத் தேர்ச்சி பெற்ற 72 'நேர்மையான, விவேகமுள்ள, அக்கறையுள்ள' இந்தியப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். தேசப்பற்று மிக்க இந்தியர்களின் முதல் மகாசபை அது.

காங்கிரஸ் உறுப்பினர்களிடையே நட்புறவை ஏற்படுத்துதல்; தேசிய உணர்ச்சிகளை ஒருங்கிணைத்தல்; இந்தியாவின் முக்கியப் பிரச்னைகள் பற்றிய இந்தியத் தலைவர்களின் கருத்துக்களை சேகரித்தல்; காங்கிரசின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளைத் தீர்மானித்தல் ஆகியவை காங்கிரசின் குறிக்கோள்களாயிருந்தன.

வரலாற்றுச் சிறப்பு

காங்கிரசின் தோற்றம் இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் ஒரு முக்கிய மைல் கல்லாகும். வைசிராய் டஃபரின் பிரபுவின் ஆசீர்வாதத்துடன் ஹியூமால்

துவக்கப்பட்ட காங்கிரஸ் அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்றதில் வியப்பில்லை. சர் ஹென்றி காட்டன், சர் வில்லியம் வெடர்பர்ன் போன்ற இந்திய அரசின் உயர்அதிகாரிகள் காங்கிரசின் முதல் கூட்டத்தில் கலந்து கொண்டனர். அதிகார வர்க்கத்தின் எதிர்ப்பையும் மீறி ஆங்கிலேய அரசாங்கம் காங்கிரசின் தோற்றத்தை அங்கீகரித்தது. இந்தியாவிலிருந்து அனைத்து அரசியல் அமைப்புகளின் பிரதிநிதிகளும் காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்டனர். வழக்கறிஞர்கள், வர்த்தகர்கள், வங்கியதிபர்கள், தொழிலதிபர்கள், மருத்துவர்கள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், பத்திரிகை அதிபர்கள், சட்டமன்ற உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் அக்கூட்டத்தில் பங்கேற்றனர். இந்துக்கள், முஸ்லீம்கள், கிறித்துவர்கள், சீக்கியர்கள், பார்சிக்கள் என்ற வேறுபாடின்றி காங்கிரஸ் துவக்க விழாவில் கலந்து கொண்டனர். உண்மையிலேயே காங்கிரஸ் ஒரு தேச அமைப்பாகத் திகழ்ந்தது. காங்கிரசின் வருகையால் மக்களிடையே மிகுந்த உற்சாகம் ஏற்பட்டது. கதிரவனைக் கண்ட பின்மீன்கள் போன்று காங்கிரசின் தோற்றத்துக்குப் பின்னர் பிற அரசியல் சார்ந்த அமைப்புகளெல்லாம் செல்வாக்கிழந்தன. காங்கிரசோடு ஐக்கியமாயின.

காங்கிரசின் வளர்ச்சி, 1885-1905

காங்கிரஸ் கூட்டங்கள்

1885 விருந்து 1905 வரை காங்கிரஸ் ஆண்டுக் கூட்டங்கள் இந்தியாவின் முக்கிய நகரங்களில் நடைபெற்றன. பம்பாய் (1885, 1889, 1904), கல்கத்தா (1886, 1890, 1896, 1901), சென்னை (1887, 1894, 1898,1903), அலகாபாத் (1888,1892), நாக்பூர் (1891), லாகூர் (1893, 1900), பூனா (1895) அம்ரோஹி (1897), லக்னோ (1899) அகமதாபாத் (1902), பனாரஸ் (1905) ஆகிய நகரங்களில் காங்கிரஸ் கூடியது. ஆண்டுதோறும் கிறித்துமஸ் விழாவையொட்டி மூன்று அல்லது நான்கு நாட்கள் கூட்டம் நடக்கும். இந்தியாவின் பொதுப் பிரச்னைகள் விவாதிக்கப்பட்டு, தீர்மானங்கள் நிறைவேற்றப்படும். அக்கூட்டங்கள் 'ஆண்டு தமாஷா', 'ஆண்டுக் கொண்டாட்டம்', 'மூன்று நாள் அதிசயம்' என்று விமர்சிக்கப்பட்டது. கற்றோர்கள் ஆண்டுதோறும் ஓரிடத்தில்கூடி தங்களிடமிருந்த விலையுயர்ந்த உடைகளை அணிந்து கொண்டு, விடுமுறை ஒய்வெடுத்து, ஊர் சுற்றிப் பார்த்து, நண்பாகளைக் கண்டுபேசி, விவாதங்கள் பலசெய்து, உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் பரிசுப் பொருள்களை வாங்கிக்கொண்டு தங்கள் ஊர்களுக்குத் திரும்பிச் சென்றனர் என்று லாலா லஜபதிராய் காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்டோரைப்பற்றி வர்ணித்தார். 1901 கல்கத்தா காங்கிரஸ் கூட்டத்தில் கலந்துகொண்ட காந்தி மூன்று நாட்கள் கூடிப்பின் தூங்கச் சென்றுவிடும் அமைப்பே காங்கிரஸ் என்று கூறினார்.

தேசிய அமைப்பு

காங்கிரஸ் உண்மையான தேசிய அமைப்பாகத் திகழ்ந்தது. சர் பெரோஸ்ஷா மேத்தா, தாதாபாய் நௌரோஜி போன்ற பாரசீகர்களும், பத்ருதின் தியாப்ஜி போன்ற முஸ்லீம்களும், டபிள்யு.சி. பானர்ஜி போன்ற கிறித்துவர்களும் காங்கிரசின் தூண்களாக இருந்தனர். பம்பாய் ராஜதானிக் கழகம், பூனா சர்வஜனிக் சபை, சென்னை மகாஜன சபை, இந்தியக் கழகம் போன்ற பிராந்திய அமைப்புகள் காங்கிரசோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தன. சுரேந்திரநாத்

Scanned by CamScanner

பானர்ஜியின் தலைமையில் செயல்பட்ட இந்தியக் கழகம் 1885ல் காங்கிரசோடு இணைந்தது. இந்தியாவின் செல்வாக்குமிக்க தலைவர்கள் காங்கிரசில் சேர்ந்தனர். காங்கிரஸ் தோன்றிய நாளிலிருந்து இந்திய தேசியத்தைத் தனது குறிக்கோளாகக் கொண்டிருந்தது.

காங்கிரஸ் தலைமை

காங்கிரஸ் துவக்கப்பட்டபின் இருபதாண்டு காலத்துக்கு மேட்டுக்குடி மக்களால் ஆங்கிலக் கல்வி பெற்ற செல்வரும் செல்வாக்கு மிக்கவர்களால் தலைமையேற்று நடத்தப்பட்டது. அவர்களனைவரும் பிராந்திய அரசியல் பக்குவமும் அனுபவமும் பெற்றவர்கள். அவர்களில் மிகப் பெரும்பான்மையோர் நகரங்களைச் சேர்ந்தவர்கள். அவர்கள்தான் காங்கிரஸ் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கினர். முக்கியப் பதவிகளை வகித்தனர். இங்கிலாந்துக்குச் சென்ற தூதுக்குழுக்களில் இடம் பெற்றனர். காங்கிரசுக்கும் அரசாங்கத்துக்குமிடையே நடைபெற்ற சமரசப் பேச்சுக்களில் பங்கேற்றனர். மிதவாதிகளான காங்கிரஸ் தலைவர்கள் தங்களது ஆழ்ந்த அறிவாற்றலாலும், பழுத்த அனுபவத்தாலும், நடைமுறைத் திறமையாலும், சமூகச் செல்வாக்காலும் காங்கிரசை வழிநடத்திச் சென்றனர். எனினும் துவக்க கால காங்கிரசில் விவசாயிகள், கிராமக் கைவினைஞர்கள், தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்டோர் ஆகியோருக்குத் தலைமை பீடத்தில் இடமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

காங்கிரசின் கோரிக்கைகள்

இருபதாண்டு கால (1885-1905) காங்கிரஸ் கூட்ட விவாதங்களையும், தீர்மானங்களையும் பரிசீலித்துப் பார்த்தால் பின்வரும் கோரிக்கைகளுக்கு காங்கிரஸ் முக்கியத்துவம் கொடுத்ததைக் காணலாம்:

1. வைசிராய், கவர்னர் ஆகியோரது ஆட்சிக்குழுக்களை விரிவுப்படுத்தி அவற்றில் இந்தியர்களுக்கு அதிக இடங்களைக் கொடுத்தல்;
2. இராணுவச் செலவைக் குறைத்தல்;
3. இந்திய விவகாரச் செயலர் பதவியை நீக்கல்;
4. இந்திய நிர்வாகத்தைப்பற்றி மதிப்பீடு செய்ய ஒரு 'ராயல்கமிஷனை' நியமித்தல்;
5. பொதுப்பணித் தேர்வுகளை இங்கிலாந்திலும், இந்தியாவிலும் ஒரே சமயத்தில் நடத்துதல்;
6. பொதுப் பணிகளில் இந்தியர்களுக்கு அதிக இடங்களை ஒதுக்குதல்;
7. சுயாட்சி நிறுவனங்களுக்கு அதிகமான அதிகாரங்களைக் கொடுத்தல்;
8. ஆட்சித் துறையிலிருந்த நீதித்துறையைப் பிரித்தல்;
9. துணைக்கேள்விகளை எழுப்பவும், வரவுசெலவுத் திட்டத்தை விவாதிக்கவும் உரிமைபெற்ற பிரதிநிதித்துவச் சட்ட மன்றத்தை ஏற்படுத்துதல்;
10. மிதமான வரிகள்;
11. நட்புறவான போலீஸ்;
12. பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இந்தியப் பிரதிநிதிகளுக்கு இடமளித்தல்;
13. இந்தியத் தொழிற்சாலைகளுக்கு ஊக்கமளித்தல்;
14. கல்வி மற்ற வேலைவாய்ப்புகளை அதிகரித்தல்;
15. நிலவரியைக் குறைத்தல்;

16. பத்திரிக்கைச் சுதந்திரத்தைப் பாதுகாத்தல்;
17. கிராம வங்கிகளை ஏற்படுத்தல்;
18. நிலக்கவாளதார்களின் கரண்டலிலிருந்து விவசாயிகளைப் பாதுகாத்தல்;
19. உப்பு வரியைக் குறைத்தல்;
20. பொதுவாக மக்களின் பொருளாதார நிலையை உயர்த்தல்.

அரசாங்கத்தின்போக்கு

இந்திய தேசிய காங்கிரஸ் வைசிராய் டஃபரின் பிரபுவின் வாழ்த்துக்களோடுதான் துவக்கப்பட்டது. இரண்டாவது காங்கிரஸ் கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதிநிதிகளை வைசிராய் அரக இல்லத்தில் தோட்ட விருந்துக்களைத்து சிறப்பித்தார் (1886). அதே போன்று சென்னை கவர்னர் கன்னிமாரா பிரபுவும் சென்னைக் காங்கிரசில் கலந்துகொண்ட பிரதிநிதிகளுக்கு வரவேற்பளித்தார் (1887). பிரபல ஆங்கிலேயர்கள் காங்கிரஸ் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கினர். ஆனால் காங்கிரசின் செல்வாக்கு விரைந்து வளர்ந்தபோது அரசாங்கம் தனது போக்கை மாற்றிக்கொள்ளத் துவங்கியது. வைசிராய் டஃபரினே அதை 'அரக துரோக அமைப்பு' என்று கண்டித்தார்! ஒரு சில கற்றவர்களின் கூட்டம் அது என்று காங்கிரசை உதாசினப்படுத்தினார் அவர். வடமேற்கு மாநில லெப்டினன்ட் கவர்னராயிருந்த சர் ஆக்லண்டு கோல்வின் காங்கிரசை 'அபாயகரமான அமைப்பு' என்று நிந்தித்தார். இந்தியச் செயலராயிருந்த ஹாமில்டன் காங்கிரஸ்காரர்களை 'அரசாங்கத்துக்கெதிரான இரட்டை இயல்பு கொண்டவர்கள்' என்று குற்றம் சாட்டினார். அதிகார வர்க்கத்தினர் காங்கிரஸ்காரர்களை 'வன்முறை வில்லன்கள்' என்று வர்ணித்தனர். கர்ஸன்பிரபு காங்கிரசைத் 'தள்ளாடிக் கொண்டிருக்கும் அகந்தமான அமைப்பு' என்று சாடினார். அரசாங்கமும் அதிகார வர்க்கமும் இந்தியரைப் பிரிக்கச் சூழ்ச்சி செய்து, காங்கிரஸ் வளராமல் இருப்பதற்குப் பல தடைகளையும் ஏற்படுத்தின.

காங்கிரசின் சாதனைகள்

இந்தியர்களை ஒன்று சேர்த்து மக்களுக்கு அரசியல் கல்வி அளித்து அவர்களின் தேசிய உணர்ச்சிகளைப் பிரதிபலித்த ஒரே தேசிய அமைப்பு காங்கிரஸ்தான். 1885லிருந்து 1905 வரை காங்கிரஸ் நிறைவேற்றிய தீர்மானங்களின் மூலம் இந்தியாது தேவைகளையும் விருப்பங்களையும் குறைபாடுகளையும் அரசாங்கத்துக்கு எடுத்துக் கூறியது. அரசாங்கத்தின் மக்கள் விரோத கொள்கைகளையும், நடவடிக்கைகளையும், சட்டங்களையும் கண்டிக்கவும் எதிர்க்கவும் தவறவில்லை. காங்கிரசின் சட்டமுறையான போராட்டத்தின் விளைவாகத்தான் 1892ல் இந்திய மன்றங்கள் சட்டம் இயற்றப்பட்டது. அரசாங்கப் பொதுப்பணிக்கான தேர்வுகள் ஒரே சமயத்தில் இங்கிலாந்திலும் இந்தியாவிலும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டது. இந்திய அரசியல் அமைப்பு முறையில் மாற்றங்கள் ஏற்படுவதற்குச் சாதகமாக இங்கிலாந்து மக்களின் ஆதரவைத் திரட்டும் பொருட்டு காங்கிரஸ் இங்கிலாந்துக்கு அனுப்பிய தூதுக்குழுக்கள் சிறந்த பணியாற்றின. காங்கிரசின் கோரிக்கையின் விளைவாக அரசாங்க நிர்வாகப் பணிகளில் இந்தியர்களுக்கு இடங்கள் அளிக்கப்பட்டன. காங்கிரஸ்

Scanned by CamScanner

கற்றோரால் கட்டுப்படுத்தப்படுகிறது என்று குறை கூறப்பட்டபோது 'கற்றவர்கள் இன்று நினைப்பதை மற்றவர்கள் நாளை நினைப்பர்' என்று பதிலடி கொடுத்தார் கோகலே. அப்போதைய சூழ்நிலையில் காங்கிரசின் சாதனைகள் போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியவையே. துவக்க கால காங்கிரஸ் சாதிக்காததற்கும், சாதிக்க முடியாததற்கும், சாதிக்க முயலாததற்கும் அதைக் குறை கூறுவதில் பயனில்லை.

ஆலன் ஆக்டேவியன் ஹியூம், 1829-1912

'காங்கிரசின் தந்தை' என்று அழைக்கப்படும் ஆலன் ஆக்டேவியன் ஹியூம் (Allen Octavian Hume) இந்தியாவில் பல்வேறு அரசாங்கப் பதவிகளை வகித்தவர். இவர் ஒன்பதாண்டு காலம் (1870-79) இந்திய அரசாங்கத்தின் வருவாய், விவசாயம் மற்றும் வர்த்தகத் துறைச் செயலராகப் பணியாற்றியபோது இந்தியாவது நிலை பற்றியும் அவர்களது நினைப்பு குறித்தும் 30,000 இரகசிய அறிக்கைகள் அடங்கிய 7 தொகுப்புக் கோப்புகளைப் பார்க்கக்கூடிய வாய்ப்பு அவருக்கு ஏற்பட்டது. அதேபோன்று 1881ம் ஆண்டு மேடம் பிளவட்ஸ்கி மூலம் இந்தியாவது மனநிலை பற்றிய தனது கணிப்பு சரியானதே என்பது உறுதியாயிற்று. இவற்றிலிருந்து ஹியூம் மக்களிடையே 'கொதித்துக் குமுறும் கோபம்' இருப்பதையும், அடித்தட்டு மக்கள் வன்முறைக் கிளர்ச்சி மூலம் பிரிட்டிஷ் ஆட்சியை அகற்றுவதற்குத் தயாராக உள்ளனர் என்ற முடிவுக்கு வந்தார். அத்தகைய சூழ்நிலை உருவாகாமல் இருப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்.

1882ம் ஆண்டு அரசாங்கப் பணியிலிருந்து விலகிக்கொண்ட ஹியூம் : 1. இந்தியர்கள் அரசியலில் பங்கேற்க வேண்டும் 2. இவர்கள் சமுதாயப் பிரச்னைகளால் பிளவுபடக் கூடாது என்று வெளிப்படையாகப் பேசினார். 'முதியவரின் நம்பிக்கை' என்ற நூலில் இந்தியரின் இன்னல்களையும், இடர்ப்பாடுகளையும் பிரிட்டிஷ் அரசாங்கம் புறக்கணிக்கக்கூடாது என்றும், 'பயமுறுத்திய பேரபாயம்' பற்றியும் எச்சரித்தார். 1883 மார்ச் முதல் தேதி கல்கத்தா பல்கலைக் கழகப் பட்டதாரிகளுக்கு எழுதிய கடிதத்தில் 'கடுகு விதைகளைப்போன்று ஐம்பது தன்னலம் கருதாத 'நியாக மனப்பான்மையுடைய இந்தியர்களைக்கொண்ட அமைப்பை' ஏற்படுத்த வேண்டியதன் இன்றியமையாமையை அடிக்கோடிட்டுக் காட்டினார். இந்தியத் தலைவர்களோடு தொடர்பு கொண்டார்.

ஹியூம் இங்கிலாந்து சென்று ரிப்பன் பிரபு, ஜான் பிரைட், டி.ரீட் போன்ற பிரபலங்களைச் சந்தித்துத் தன் முயற்சிக்கு ஆதரவு கோரினார். இந்தியாவில் நடக்கவிருந்த மாநாடு பற்றிய தகவல்களைப் பிரிட்டிஷ் பத்திரிகைகளில் பிரசுரிக்க ஏற்பாடுகளைச் செய்தார். இந்தியா திரும்பிய ஹியூம் இந்திய தேசிய காங்கிரசை அமைக்கும் பணியில் ஈடுபட்டார். ஹியூமின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய வில்லியம் வெடர்பர்ன் (William Wedderburn) அச்சுறுத்தும் அபாயத்தைத் தடுப்பதற்காகவே ஹியூம் காங்கிரசைத் தோற்றுவித்தார் என்று குறிப்பிட்டுள்ளார். அதேபோன்று 1886ல் 'இந்திய அரசியல்' என்ற பத்திரிகையில் டபுள்யு. சி. பானர்ஜி வெளியிட்ட அறிக்கையில் ஹியூம் 1884லேயே இந்தியாவின்

முன்னணித் தலைவர்களைக்கூட இந்திய விவகாரங்கள்பற்றி விவாதிக்கத் திட்டமிட்டிருந்ததாகக் கூறியிருந்தார்.

ஹியூம் 1885 டிசம்பர் 28ம் நாள் பம்பாயில் துவக்கப்பட்ட அகில இந்திய காங்கிரசில் முதல் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றார். அவர் அப்பதவியில் 1907 வரை நீடித்தார். காங்கிரசின் கோட்பாடுபற்றி மக்களிடையே பிரச்சாரம் செய்ய ஹியூம் ஆண்டுதோறும் அவரது சொந்த செலவில் இந்தியாவின் பல பகுதிகளுக்கும் பயணம் செய்தார். 'ஹியூமுடன் தொடர்புகொண்ட செயலாற்றலற்ற மக்களைக்கூட செயலாக்க முள்ள மக்களாக மாற்றக்கூடிய வியத்தகு ஆற்றல் அவரிடமிருந்தது' என்று 'பெருங்கிளர்ச்சிக்குப்பின் இந்திய அரசியல்' நூலாசிரியர் வி.ஒய். சிந்தாமணி புகழாரம் சூட்டியுள்ளார்.

நாட்டுப்பற்றும் அறிவாற்றலும் அனுபவ விவேகமும் மிக்க இந்தியத் தலைவர்கள் பலர் இருக்க ஹியூம் காங்கிரசைத் தோற்றுவிக்க முனைப்பார்வம் காட்டியது ஏன்? ஹியூம் பிறப்பால் ஆங்கிலேயரேயன்றி, உள்ளத்தாலும் உணர்வாலும் மனிதாபிமானத்தாலும் ஜனநாயக நம்பிக்கையாலும், இந்தியாவது முன்னேற்றத்தில் ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்தார். அதனால் அவர் அன்றைய தலைவர்களால் பெரிதும் மதிக்கப்பட்டார். ஹியூம் காங்கிரசைத் துவக்கினால் பிரிட்டிஷ் அரசாங்கம் சந்தேகக் கண்கொண்டு பார்க்காது, கோரிக்கைகளைப் பரிவுடன் பரிசிலிக்கும் என்று அவர்கள் நம்பினர், அவருடன் ஒத்துழைத்தனர். பிபன் சந்திரா கூறுவதைப்போன்று இந்தியத் தலைவர்கள் ஹியூமை இடதாங்கியாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

பம்பாய் - 1885, 1889, 1904
கல்கத்தா - 1886, 1890, 1896, 1901
சென்னை - 1887, 1894, 1898, 1903
அலகாபாத் - 1888, 1892,

நாக்பூர் - 1891
லாகூர் - 1893, 1900
பாட்னா - 1895
அமிர்தசரஸ் - 1897
மும்பை - 1899
அகமதாபாத் - 1902
மதராஸ் - 1905

K.THARMENDIRA, M.Sc., M.Phil.,
Lecturer,
P.G. & Research Department of
Zoology & Wild Life Biology,
A.V.C. College (Autonomous),
Mannampandal-609 305.

Scanned by CamScanner

காங்கிரஸ் மிதவாதிகள்

துவக்கத்தில் காங்கிரசின் சாதனைகள் குறைவாகத்தான் இருக்கும்... தோல்விகள் ஏமாற்றம் அளிக்கக்கூடியவையாக இருக்கலாம். தோல்விகளிலிருந்துதான் பெரிய சாதனைகளை சாதிக்கக்கூடிய பலம் கிடைக்கும்.

- கோபால கிருஷ்ண கோகலே.

இந்திய தேசிய காங்கிரசின் தோற்ற, வளர்ச்சியைப் பற்றி ஆராய்ச்சி செய்த வரலாற்று வல்லுனர்கள் துவக்க கால காங்கிரஸ்காரர்களை மிதவாதிகள் (Moderates) என்றும், தீவிரவாதிகள் (Extremists) என்றும் பாகுபடுத்திக் கூறியுள்ளனர். எ.வால்போர்ட் (A.Walport) எ.திரிபாதி (A.Tripathi), ஜி.ஜான்சென் (G.Johnson), டி.ஆர்க்கோவ் (D.Argov) போன்ற ஆராய்ச்சியாளர்கள் மிதவாத தீவிரவாத முரண்பாடுபற்றி ஆராய்ந்துள்ளனர். மிதவாதிகள், தீவிரவாதிகள் ஆகிய இரு சாராருமே நேர்மையான, நாணயமான, நாட்டுப்பற்று மிக்க காங்கிரஸ்காரர்கள்தான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியைப்பற்றிய நோக்காலும், போக்காலும் துவக்க கால காங்கிரஸ்காரர்கள் மிதவாதிகளாகவும், தீவிரவாதிகளாகவும் அடையாளம் காட்டிக் கொண்டனர்.

மிதவாதிகள் என்போர் யார்?

எப்போதிலிருந்து காங்கிரஸ்காரர்கள் மிதவாதிகளாகவும், தீவிரவாதிகளாகவும் பிரிந்தனர் என வரையறை செய்வது கடினம். காங்கிரஸ் தோன்றியதிலிருந்தே காங்கிரஸ்காரர்களிடையே கருத்து வேறுபாடுகள் இருந்திருக்க வேண்டும். பல்வேறு வகையினரை உள்ளடக்கிய காங்கிரஸ் கதம்பக் கூட்டமைப்பில் கருத்து முரண்பாடுகள் உருவானது இயல்பே. 1893 லேயே அரவிந்தர் காங்கிரஸ் செயல்படும் முறைபற்றிக் குறை கூறினார். திலகர் அதை எதிரொலித்தார். 1901ல் லாலா லஜபதிராய் காங்கிரஸ் கூட்டங்களைக் கிண்டல் செய்தார். எனினும் 1905 வங்கப் பிரிவினையின் போதுதான் தீவிரவாதிகள் யாரென்று தெளிவாகத் தெரிந்தது. எனவே 1885லிருந்து 1905 வரை காங்கிரசைக் கட்டுப்படுத்தி, நெறிப்படுத்தியவர்களை மிதவாதிகள் எனக் கூறலாம்.

மிதவாதிகள் அரசியல் சீர்திருத்தவாதிகள், அவர்கள் புரட்சிக்காரர்கள் அல்லர். அவர்கள் அனைவரும் ஆங்கிலம் கற்ற இந்திய தேசியவாதிகளின் விருப்பு, வெறுப்புகளை, எதிர்பார்ப்புகளை ஆங்கிலேய அரசாங்கத்துக்கு எடுத்துக் கூறியவர்கள்.

மிதவாதிகள் அனைவரும் தேசியவாதிகள். அவர்கள் சாதி, சமய, இன, சமூக, பிராந்திய வேறுபாடின்றிச் செயல்பட்டனர். இந்து, முஸ்லீம், கிறித்துவ,

சீக்கிய, பார்சி, ஆங்லோ இந்தியப் பாகுபாடும் அவர்களுக்கில்லை. இந்தியர் அனைவருக்கும் அவர்கள் பாடுபட்டனர்.

மிதவாதிகள் பிரிட்டிஷ் விசுவாசிகள். அவர்களது விசுவாசத்துக்குக் காரணம் ஆங்கிலேயர்களால் தான் இந்தியாவுக்கு விடிவுகாலம் ஏற்பட்டது என்று அவர்கள் மனப்பூர்வமாக நம்பியதுதான். ஆங்கிலேய ஆட்சிதான் ஆங்கிலேயக் கல்வியைப் பரப்பியது, சட்ட, ஒழுங்கு, அமைதி, பாதுகாப்பை ஏற்படுத்தியது, மக்களுக்கு அரசியல் அடிப்படை உரிமைகளை வழங்கியது; யாவற்றுக்கும் மேலாக காங்கிரஸ் துவக்கப்படுவதை அனுமதித்து, ஆண்டுதோறும் இந்தியர் பிரச்னைகளைப்பற்றி விவாதிக்க வாய்ப்பளித்தது ஆங்கிலேய ஆட்சி.

மிதவாதிகள் யதார்த்தவாதிகள். அவர்கள் நடைமுறைச் சாத்தியமானவற்றைப் பற்றியே சிந்தித்தனர், செயல்பட்டனர். அவர்கள் கனவுலகக் கற்பனைவாதிகளல்லர். அவர்கள் ஒழுங்கான, கட்டுப்பாடான, சட்ட வரம்புக்குட்பட்ட வளர்ச்சியில் நம்பிக்கையுடையவர்கள். மிதவாதிகள் பிரிட்டிஷாரின் நீதி நியாய உணர்வு, நேர்மை, தாராள மனப்பான்மை ஆகிய பெருந்தன்மைகளைப் போற்றியவர்கள். செயற்கையான மாற்றத்தைவிட, இயற்கையான முன்னேற்றத்தைக் காண விழைந்தவர்கள். கரேந்திரநாத் பானர்ஜி கூறியதைப்போன்று 'விடுதலையின் வெற்றி ஒரு நாளில் இடைக்கக் கூடியதன்று'.

மிதவாதிகள் அரசாங்க விமர்சகர்கள். அவர்கள் அரசாங்க ஆதரவாளர்களாக இருந்த போதிலும் நியாயமற்ற அரசாங்க நடவடிக்கைகளைக் கடுமையாகக் கண்டித்தனர். அரசாங்க நிர்வாகம், அதிகார வர்க்கம், பொதுப்பணி, பொருளாதாரக் கொள்கை, நீதி நிர்வாகம், அத்துமீறிய அரசாங்கச் செயல்கள், சட்டமன்றச் சீர்திருத்தம் பற்றி அவர்கள் தங்கள் வழியில் அரசாங்கத்தை எதிர்த்தார்கள்.

மிதவாதிகள் சட்டரீதியான போராட்டக்காரர்கள். வேண்டுகோள்கள், விண்ணப்பங்கள், நிர்மானங்களோடு மட்டும் அவர்கள் திருப்தி அடையவில்லை. வன்முறை தவிர்த்துச் சட்டப்படி போராடினார்கள். உதாரணமாக, இறக்குமதிப் பொருள்களின்மீது காப்பு வரிகள் (Tariffs) விதிக்கப்பட்ட போதும், பருத்தியின்மீது ஆயத்தீர்வை சுமத்தப்பட்ட போதும் மிதவாதிகள் அகில இந்திய அளவில் போராட்டத்தை நடத்தினர்.

மிதவாதிகளின் சாதனைகள்

இந்திய தேசிய காங்கிரஸ் நாற்றங்கால் பருவத்தே இருந்தபோது மிதவாதிகள் தேசியப் பயிர் பட்டுப்போகாமல் பாதுகாத்தனர். மிதவாதம், இணைக்கப்படுதல், விட்டுக்கொடுப்பு, முறையான முன்னேற்றம், நியாயமான அதே சமயம் உறுதியான கோரிக்கை, சீரான சட்ட அமைப்புச் சீர்திருத்தம் ஆகிய பொறுக்கு விதைகளை விதைத்து தேசிய நாற்றுக்களைக் கருத்தோடு வளர்த்தனர். மக்களிடையே அரசியல் உரிமைகள், தாராளக் கொள்கை, மக்களாட்சி பற்றி அறியச் செய்து அரசியல் கல்வி கொடுத்தனர். மிதவாதிகள் யாசிக்கவில்லை, யோசித்துச் செயல்பட்டனர். "நாங்கள் பிச்சைக்காரர்களல்லர், எங்கள் கட்சி இரந்து உயிர்வாழும் கட்சியன்று; நாங்கள் மக்களின் தூதுவர்கள்" என்றார்

Scanned by CamScanner

கோகலே. அரியல் சிந்திருத்த முன்னோடிகளாக இருந்த மிதவாதிகள் முயற்சியால் பல அரியல் அமைப்பு மாற்றங்கள் ஏற்பட்டன. அவர்கள் போட்ட அடித்தளத்தின் மீதுதான் தன்னாட்சி, சுயராஜ்யம், இந்திய விடுதலை என்ற மாளிகை அடுக்கடுக்காகக் கட்டப்பட்டது. யாவற்றுக்கும் மேலாக ஆங்கில ஆட்சியின் உண்மைத் தன்மையை அம்பலப்படுத்தி, அதிகாரிகளின் ஆணவப் போக்கையும் அரசாங்கத்தின் கரண்டல் கொள்கையைப் பற்றியும் மக்கள் நன்கு அறிந்து கொள்வதற்கான வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தவர்கள் மிதவாதிகள். இந்திய நிர்வாகம் பற்றிய பாராளுமன்ற விசாரணை, 1892 இந்திய மன்றங்கள் சட்டம், அரசாங்க அதிகாரிகள் காங்கிரஸ் கூட்டங்களில் பார்வையாளர்களாகக்கூட கலந்து கொள்ளக் கூடாது என்று வங்காள அரசாங்க ஆணை ரத்து செய்யப்பட்டது (1890), வழக்கறிஞர்களின் கதந்திரத்தைப் பாதிக்கும்வகையில் அரசாங்கம் மேற்கொண்ட முயற்சியை முறியடித்தது (1896) ஆகியவை மிதவாதிகளின் நேரடிச் சாதனைகளாகும்.

மிதவாதிகளின் குறைபாடுகள்

மிதவாதிகள் காங்கிரஸ் நிலைவாதிகளின் கடுமையான கண்டனத்துக்காளானார்கள். மிதவாதிகள் ஆங்கிலக் கல்வி பெற்ற அரியல் புறாக்களாக இருந்ததால் அவர்களால் எவ்வித நேரடி நடவடிக்கையிலும் ஈடுபட முடியவில்லை. மிதவாதிகள் அரசாங்கத்திடமிருந்து ஒப்புதல்களையும் சலுகைகளையும் எதிர்பார்த்தனரேயன்றி அரியல் தன்னாட்சியையும் உரிமைகளையும் கோரிப் பெறவில்லை. அவர்கள் பிரார்த்தனைகள், விண்ணப்பங்கள், சத்தற்ற எதிர்ப்புகளை காட்டினார்களேயொழிய அரியல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவில்லை. பிபின் சந்திரபால் குறிப்பிட்டது போன்று மிதவாதிகள் யாசகத்துக்குப் போராட்டம் என்று பெயர் சூட்டினர். இருபதாண்டுகால முயற்சியால் மிதவாதிகள் ஆங்கிலேய அரியமைப்பிலிருந்து ரொட்டிக்கு பதில் கல்லையே பெற்றனர் என்றார் வாலா லஜபதி ராய். மிதவாதிகள் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் விசுவாசமாக இருந்துகொண்டு மக்கள் உரிமைகளுக்காகவும் போராடினர். கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை என்ற நிலை அது. ஆங்கிலேயரது குறிக்கோள்களும் இந்தியர்களது இலட்சியங்களும் எதிர்மறையானவை என்பதை மிதவாதிகள் புரிந்து கொள்ளவில்லை. பிரிட்டிஷாரைத் திருப்திப்படுத்தும் மிதவாதிகளின் முயற்சியில் தேசிய இயக்கத்துக்குத் தேவையான அடிப்படைக் கூறுகள் இல்லை. வங்கப் பிரிவினை (1905) மிதவாதிகள் ஆங்கிலேயரின் நீதி நியாய உணர்வில்மீது வைத்திருந்த நம்பிக்கையில் பேரிடியாக விழுந்தது. ஆங்கிலேயக் காலனி ஆதிக்கத்தின் உண்மைத்தன்மையை மிதவாதிகள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. அதனால்தான் அவர்கள் மலையளவு சிந்திருந்ததை எதிர்பார்த்து எலி அளவு சாதித்தார்கள்.

மிதவாதிகளின் சட்டமன்றப் பணி

மிதவாதிகளின் முயற்சி

காங்கிரஸ் மிதவாதிகளின் சட்டமன்றப் பணி சிறப்பானது. போற்றுதற்குரியது. காங்கிரஸ் தோற்றுவிக்கப்படுவதற்கு முன்பே இந்தியச்

கவுன்சில் சட்டம் 1861ன்படி உருவாக்கப்பட்ட இம்பீரியல் சட்டமன்றத்தில் சேர அகமதுகான் (1878 இ) கிறிஸ்டோ நாரன் (1885), மி என் மாண்டிக் (1904-07), கே என் நல்கர் (1890-91), ராவ் பிகாரிகோஷ் (1892) போன்றோர் அரசாங்கத்துடன் ஒத்துப்போனாலும் கம்பெனி நிர்வாகம்பற்றி இந்தியரின் எண்ணங்களையும் எதிர்ப்பார்புகளையும் எடுத்துரைக்கத் தவறியதில்லை.

காங்கிரஸ் துவங்கப்பட்ட பிறகு கொண்டுவரப்பட்ட இந்தியக் கவுன்சில் சட்டம் 1892 மத்திய, மாநில சட்டமன்றங்களின் நியமன உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்தியது. இவர்களில் சிலர் முனிசிபல் கமிட்டிகள், மாவட்ட மன்றங்கள், போன்ற அமைப்புகளால் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1909 வரை செயல்பட்ட இம்மன்றம் 'சிந்திருத்தப்பட்ட மன்றம்' என்று அழைக்கப்பட்டது. இம்மன்றத்துக்கு வங்காளம், ஐக்கிய மாகாணம், பம்பாய், மதராஸ், மத்திய மாகாணம் ஆகிய மாகாணங்களிலிருந்து பிரதிநிதிகள் அனுப்பப்பட்டனர். சென்னையிலிருந்து பி.அனந்தாசார்லு, சி.சங்கரன் நாயர், விஜயராகவாச்சாரியார் ஆகியோர் சென்றனர். இப்பிரதிநிதிகள் 1893 லிருந்து 1909 வரை மத்திய மாநில சட்ட மன்றங்களில் சிறப்பாகச் செயல்பட்டனர். இவர்களுள் பெரோஸ்ஷா மேத்தாவும், கோகலேயும் குறிப்பிடத்தக்க காங்கிரஸ் மிதவாதப் பிரதிநிதிகள் ஆவர்.

பெரோஸ்ஷா மேத்தா

பெரோஸ்ஷா மேத்தா காங்கிரஸ் மிதவாத மேதை. தாதாபாய் நௌரோஜியின் தீடர். இலண்டனில் சட்டம் பயின்றவர். பம்பாய் பிரெசிடென்சி ஆசோசியேஷன் நிறுவனர்களில் ஒருவர். இவர் அகில இந்திய காங்கிரஸ் தோற்ற கர்த்தாக்களில் ஒருவர் என்பது நினைவுகூறத்தக்கது. மேத்தா கேட்போர் பிணிக்கும் பேச்சாளர். இவருடைய பேச்சுகளில் துணிவு, தெளிவு, எளிமை, கூர்மை, நகைச்சுவை, உடனெதிர் மொழிதல், இலக்கியத்திறன் இழையோடிருக்கும். 1895 ஜனவரி மாதம் கொண்டுவரப்பட்ட போலீஸ் சட்டத்தைக் கடுமையாக விமர்சித்தார். ஜேம்ஸ் வெஸ்ட்லாண்ட் என்ற நீதி உறுப்பினர் மேத்தா சட்ட மன்றத்தில் 'புதிய உணர்வைக் கொண்டு வருகிறார், அரசுக்கு விரோதமாகப் பேசுகிறார், சட்டமன்றத்தின் நடைமுறையை அடியோடுமாற்ற முனைகிறார், மன்றத்தை மாசு படுத்துகிறார்' என்று குற்றம் சாட்டினார்.

மேத்தா அரசாங்கத்தின் கல்விக்கொள்கை, விவசாயிகளின் வறுமை, நிலஉரிமை, கடன்சுமை, நீர்வை வரி பற்றிக் குத்தலாகவும், கிண்டலாகவும், கேலியாகவும் அதேசமயம் கடுமையாகவும் பேசினார். இவரது சட்டமன்ற உரைகள் அதிகாரிகளைச் சிற்றமடையச் செய்தாலும், அரசாங்கத்தை நிந்திக்க வைத்தது.

கோபால கிருஷ்ண கோகலே

கோகலே மேத்தாவைப்போன்று நாவன்மை படைத்த பேச்சாளரல்லர். ஆனால் அவரது அறிவாற்றல், பிரச்சனைகள் பற்றிய தகவல்களைத் திரட்டிக் கையாண்ட உத்தி, மென்மையாக அதேசமயம் உறுதியாக விவாதித்தவிதம், கூர்மையான குற்றச்சாட்டுகள், விடாப்பிடி உறுதி, கடமை தவறிய அரசாங்கத் தலைவர்களை கட்டிக்காட்டல் போன்றவை கோகலேயை சிறந்த சட்டமன்றப்

Scanned by CamScanner

பங்களிப்பவராக்கியது. கோகலேயின் அரசாங்க வரவுசெலவு பற்றிய பேச்சுக்கள் சட்டமன்ற விவாதப் பேச்சுக்கு இலக்கணமாகும். குறிப்பாக, 1902 மார்ச் 26ஆம் தேதி இவர் நிகழ்த்திய வரவுசெலவுப் பேருரை இவரை எதிர்ப்போராளியாக பாராட்டப்பட்டது. 'பிரதிநிதித்துவமின்றேல் வரி விதிப்பில்லை' என்ற இவரது குரல் நாடெங்கும் எதிரொலித்தது. கோகலேயின் சட்டமன்ற உரைகளை பத்திரிகைகள் பிரதானமாகப் பிரசுரித்தன.

கோகலேயின் பத்தாண்டு கால சட்டமன்றப் பேச்சுகள் நாட்டின் நிதி நிலை, இந்தியத் தொழில்வளர்ச்சியில் அரசாங்கத்தின் அக்கறையின்மை, விவசாயம் மற்றும் ஏழை எளியோரின் வறுமை, வரிச்சுமை, கல்வி, சுகாதாரம், மருத்துவ வசதி போன்ற மக்கள் நலத்திட்டங்களின் முக்கியத்துவம், பத்திரிகை சுதந்திரம், இந்தியப் பொருளாதாரப் பின்னடைவு, வேலைவாய்ப்புகளை அதிகரித்தல் போன்ற மக்கள் பிரச்னைகளை மையப்படுத்தியதாக இருந்தன. கோகலே சட்டமன்றத்தில் எதிர்க்கட்சிக்கு தலைவராகச் செயல்பட்டார் என்றால் மிகையாகாது. இவரது சட்டமன்றச் சாதனைகள் வரலாற்றுச் சிறப்புமிக்கவை. பத்திரிகைகள் பாராட்டின. மக்கள் போற்றினர். காங்கிரஸ் மிதவாதத் தலைவரான கோகலே இறந்தவுடன், தீவிரவாதத் தலைவரான திலகர் கூறினார் "இந்தியாவின் வைரம், மகாராஷ்டிரத்தின் அணிகலன், உழைப்பாளிகளின் இளவரசர் கோகலேயைப் பின்பற்ற முயற்சி செய்யுங்கள்".

விடுதலைப் போராட்டத்தில் கோகலேயின் பங்கு

ஆலன் ஆக்டேவியன் ஹியூம், உமேஷ் சந்திர பானர்ஜி, சுரேந்திர நாத் பானர்ஜி, தாதாபாய் நௌரோஜி, பெரோஸ்ஷா மேத்தா, மகாதேவ கோவிந்த ரானடே, கோபால கிருஷ்ண கோகலே, ராஸ் பிஹாரி கோஸ், மதன் மோகன் மாளவியா போன்றோர் புகழ்மிக்க மிதவாதத் தலைவர்களாகத் திகழ்ந்தார்கள். அவர்களுள் கோகலே ஒப்பற்ற தலைவராக விளங்கினார். 1866 மே 9ஆம் நாள் மகாராஷ்டிரத்தில் உள்ள கோல்ஹாப்பூரில் ஒரு ஏழை சித்பவன் பிராமண குடும்பத்தில் பிறந்தார் கோகலே. பம்பாய் எல்பின்ஸ்டன் கல்லூரியில் மேல்படிப்பு பெற்றார். பூனா பெர்கூஸன் கல்லூரியில் வரலாற்றுப் பேராசிரியராகப் பணியாற்றி, அக்கல்லூரியின் முதல்வராகப் பதவி உயர்வு பெற்று 1902ல் பதவி ஓய்வு பெற்றார். 1905ல் இந்திய இளைஞர்களை தேசசேவைக்காகப் பயிற்சியளிக்கும் பொருட்டு "இந்திய ஊழியர்கள் சங்கத்தை" (Servants of India Society) த் துவக்கினார். அந்த ஆண்டே பனாரசில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார். 1907ல் சூரத்தில் ஏற்பட்ட காங்கிரஸ் பிளவு குறித்து மனம் வருந்தினார். இந்திய சட்டமன்ற உறுப்பினராகவும், இந்தியப் பொதுப்பணி பற்றி ஆராய்ந்து இஸ்லிங்டன் கமிஷன் (Islington Commission) உறுப்பினராகவும் பணியாற்றினார். காந்தியின் அழைப்பின் பேரில் 1912ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்கா சென்று அங்குள்ள இந்தியரது பிரச்னை தீர பாடுபட்டார். 1915 பிப்ரவரி 19ஆம் நாள் தனது நாற்பத்தொன்பதாம் வயதில் உயிர் நீத்தார்.

கோகலே தனது பத்தொன்பதாம் வயதிலிருந்தே பொதுமக்கள் சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். ரானடே, அகர்கர் ஆகியோருடன் சமூக சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டார். கோகலே அரசியலில்

மிதவாதியெனினும் சமூக சீர்திருத்தத்தில் தீவிரவாதி. பெனாரஸ் காங்கிரஸ் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய கோகலே வங்கப் பிரிவினையைக் கண்டித்து, கர்ஸன் பிரபுவை முகலாய மன்னன் அவுரங்கசீப்போடு ஒப்பிட்டுப் பேசினார். வங்காளிகளின் தீரத்தைப் பாராட்டினார். அவர்கள் துவக்கிய சுதேசி இயக்கத்தை போற்றினார். அதன்பின் மிதவாதிகளோடு முரண்பட்டு நின்று தீவிரவாதிகளோடு சமரச முயற்சியில் ஈடுபட்டார். அவரது இணைப்பு முயற்சி தோல்வியுற்றதால் காங்கிரஸ் பிளவுபட்டது (1907). சூரத் காங்கிரஸ் பிளவால் மனந்தளராத கோகலே தன் காரியத்திலேயே கண்ணாயிருந்தார்.

கோகலே ஒரு சிறந்த சட்டமன்ற உறுப்பினர். தனது 22வது வயதில் பம்பாய் சட்டமன்றத்துக்கும், 36வது வயதில் இந்திய சட்டமன்றத்திற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார். மத்தியச் சட்ட மன்றத்தில் அவரது வரவு செலவு திட்டத்தைப் பற்றிய பேச்சுக்கள் பிரசித்தமானவை. 1911ல் கட்டாய துவக்கக் கல்விபற்றிய மசோதாவைக் கொண்டு வந்தார். மனிதாபிமானமற்ற செயல்களுக்காக வைசிராய் கர்சன் பிரபுவைக் கடுமையாக விமர்சனம் செய்தார். அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளைக் கண்டித்தார்.

கோகலே பலமுறை இங்கிலாந்து சென்றார். தனது குணநலன்களாலும் ஆழ்ந்த அறிவாலும், நயமான அணுகுமுறையாலும் அங்கிருந்த அரசியல் தலைவர்களைக் கவர்ந்தார். கோகலே இந்திய விவகார காரியதரிசி ஜான்மார்லியுடன் நடத்திய விவாதத்தின் விளைவாக இந்தியாவில் மின்டோ-மார்லி சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. ஆனால் அச்சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட விதத்தின்மீது மிகுந்த மனவருத்தமடைந்தார்.

அப்பழுக்கற்ற தேசிய வாதியான கோகலே காங்கிரசின் ஒற்றுமையை நிலைநாட்ட அரும்பாடுபட்டார். பிரிந்துநின்ற மிதவாதிகளையும் தீவிரவாதிகளையும் ஒன்றுசேர்க்கப் பெரிதும் விரும்பினார் கோகலே. சென்னை மிதவாதத் தலைவர்களான அன்னிபெசன்ட் அம்மையாரும், ஜி.சுப்பிரமணிய அய்யரும், பி.பி.ராமசாமி அய்யரும், சுப்பராவும் இது சம்பந்தமாக கோகலேக்கு உதவிசெய்ய முன் வந்தனர். அவர்களின் துணையோடு 1914ஆம் ஆண்டு மாண்டலே சிறையிலிருந்து விடுதலையாகி வந்த திலகரோடு இருமுறை முயற்சி செய்தார் கோகலே. ஆனால் பெரோஸ்ஷா மேத்தா போட்ட முட்டுக்கட்டையால் கோகலேயின் ஆசை நிராசையாயிற்று. ஆயினும் கோகலே விதைத்த மிதவாத தீவிரவாத காங்கிரசார் இணைப்பு விதைகள் 1916ஆம் ஆண்டு பலன்தந்தது. பிளவுபட்டிருந்த காங்கிரஸ் ஒன்றுபட்டது. ஆனால் அந்த அரிய காட்சியைக் காண கோகலே உயிருடன் இல்லை!

தாதாபாய் நௌரோஜி, 1825-1917

மராத்திய மைந்தர்

மராத்திய மைந்தரான தாதாபாய் நௌரோஜி 1825 செப்டம்பர் 4ம் நாள் பிறந்தார். அறிவாற்றல்மிக்க அவர் பம்பாய் எல்பின்ஸ்டன் கல்லூரியில் கணிதப் பேராசிரியராக பணியாற்றிக் கொண்டே சமுதாயப் பணியிலும் ஈடுபட்டார். பின்னர் அவர் பரோடாவின் திவானாகவும் (1874), பம்பாய் சட்டமன்ற நியமன உறுப்பினராகவும் (1885) பணியாற்றினார். நௌரோஜி கோமா கம்பெனி

Scanned by CamScanner

(Cama & Company)யில் பிரதிநிதியாக இங்கிலாந்து சென்று திரும்பினார்.

இங்கிலாந்தில் இந்தியப் பணி

நாட்டுப் பற்றுமிக்க நௌரோஜியின் உடல் இங்கிலாந்தில் இருந்தாலும் அவரது உள்ளம் இந்தியாவில் இருந்தது. இவர் இழக்கு இந்தியக் கழகம் (East India Association) மற்றும் இலண்டன் இந்தியர் சங்கம் (London Indian Society) என்ற இரண்டு அமைப்புகளை ஏற்படுத்தி இந்தியர்களின் கோரிக்கைகள் பற்றிப் பிரச்சாரம் செய்தார். இங்கிலாந்தில் (Voice of India) என்ற பத்திரிகை நடத்தி பத்திரிகை சுதந்திரத்துக்காக போராடினார். திலகர் கைது செய்யப்பட்டபோது (1879 ஜூலை 27) பிரிட்டிஷ் அரசாங்கத்தில் அடக்குமுறை தற்கொலைக்குச் சமமானது என்று எச்சரித்தார். இங்கிலாந்து நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று மக்களவை உறுப்பினராக இந்திய தேசியத்தின் குரலாகச் செயல்பட்டார் (1892). இவர் இங்கிலாந்தில் இருந்தாலும் இந்தியாவுடன் இடையறாது தொடர்பு கொண்டிருந்தார்.

காங்கிரஸ் தலைவர்

தாதாபாய் நௌரோஜி மூன்றுமுறை காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் (1886, 1893, 1906) என்பது குறிப்பிடத்தக்கது. 1906 ஆண்டு கல்கத்தா காங்கிரஸ் கூட்டத்துக்குத் தலைமை தாங்கி ஆற்றிய உரையில் 1. இந்தியர்களின் எதிர்காலம் இந்தியர்களின் கையில்தான் உள்ளது; நீதிநாட்டமும், நியாய உணர்வும் கொண்ட ஆங்கிலேயர் மக்கள் குறுகிய செவிசாய்ப்பர்; 3. மக்கள் தலைவர்கள் சலுகைகளைக் கேட்பதற்கு பதில் நீதி கோர வேண்டும்; 4. ஆங்கிலேயர் அனுபவிக்கும் உரிமைகள் இந்தியர்களுக்கும் வழங்கப்படுதல் வேண்டும் 5. சுயராஜ்யமே இந்தியரின் இதய நாதமாகும் என்று முழக்கமிட்டார்.

நௌரோஜி காங்கிரஸ் மிவாதிகள் மற்றும் தீவிவாதிகளின் ஒருமித்த ஆதரவைப் பெற்றிருந்தார். இவர் காங்கிரசின் நோக்கிலும் போக்கிலும் புதிய திருப்பத்தை ஏற்படுத்தினார். மக்கள் இறைமை (Sovereignty of the People) பற்றிய விழிப்புணர்வை எழுப்பினார். அரசியல் ஜனநாயகத்தின் ஆணிவேராகக் கருதப்படும் 'மக்களுக்காக ஆட்சியாளர்களேயன்றி ஆட்சியாளர்களுக்காக மக்களில்லை' என்ற கருத்தை வலியுறுத்தினார். வெற்றிகரமான வர்த்தகராக நௌரோஜி ஈட்டிய பொருளையெல்லாம் இந்திய தேசிய இயக்கத்துக்காகவே செலவிட்டார்.

வடிகால் கொள்கை வகுத்தவர்

நௌரோஜி இந்தியாவின் வறுமைபற்றி அறிவுபூர்வமாக ஆராய்ச்சி செய்தார். வறுமையின் வேர்களைக் கண்டறிந்தார். ஆதாரங்களின் அடிப்படையில் 1867 ஆண்டு தனது 'வடிகால்கொள்கை (Drain Theory)யை வெளியிட்டார். பின்னர் அதுவே அவர் எழுதிய 'வறுமையும் பிரிட்டனுக்கொவ்வாத இந்திய ஆட்சியும்' (Poverty and Un-British Rule in India, London, 1901) என்ற நூலின் கருப்பொருளாயிற்று.

பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இந்தியாவை வடிகாலாகப் பயன்படுத்தி இந்தியாவின் செல்வத்தை இங்கிலாந்துக்குக் கொண்டு செல்வதால்தான் மக்கள் வறுமையின் பிடியில் சிக்கினர் எனப்தே 'வடிகால் கொள்கை'யின் சாராம்சமாகும். இக்கொள்கையைத் தக்க ஆதாரங்களோடும் புள்ளிவிவரங்களோடும் விளக்கினார். பிரிட்டிஷ் பொருளாதாரக் கொள்கையின் வக்கிரப்போக்கையும், பொருளாதார நியதிகளின் நெறிபிறழ்ந்த முறைகேடுகளையும் அம்பலப்படுத்தினார்.

வடிகால்கொள்கைப்படி இந்தியா இரண்டு வழிகளில் சுரண்டப்பட்டது. 1. இந்திய அரசாங்க மற்றும் நிர்வாகச் செலவு அதாவது ஆங்கில ஆட்சியாளர்களும், அதிகாரிகளும், அலுவலர்களும் சம்பளமாகவும் ஓய்வூதியமாகவும் சேமிப்பாகவும் லாபத்துக்காகவும் இங்கிலாந்துக்கு அனுப்பிய பணம். அதேபோன்று இங்கிலாந்திலிருந்து இந்தியாவை ஆட்சி செய்ததற்கான செலவு 2. அதிகாரபூர்வமற்ற ஆங்கில வர்த்தகர்கள், தொழிலதிபர்கள், வியாபாரிகள், தோட்ட முதலாளிகள் சம்பாதித்து அனுப்பிய பணம்.

இவ்வாறு பல வழிகளிலும் இந்தியச் செல்வம் இங்கிலாந்துக்குக் கொண்டு செல்லப்பட்டதால் இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு முதலீடு செய்வதற்குத் தேவையான மூலதனம் இல்லாமல் போயிற்று. இந்தியாவிலிருந்து கொண்டு சென்ற பணத்தை, மூலதனமாக மீண்டும் இந்தியாவுக்கே கொண்டுவந்து, ஏகபோக வர்த்தகம் செய்து கொள்ளை இலாபம்பெற்று அதையும் தாய்நாட்டுக்கே கொண்டு சென்றனர். இவ்விருவழிச்சுரண்டல் இந்தியப் பொருளாதாரத்தைப் பெரிதும் பலவீனப்படுத்தி வறுமைக்கு வழி வகுத்துவிட்டது.

அறிவு இழப்பு

பொருளாதாரச் சுரண்டலோடு அறிவு இழப்பும் ஏற்பட்டதாகக் கூறினார் நௌரோஜி. ஆங்கிலேயர்களே உயர் பதவிகளை வகித்தனர். இவர்களோடு இந்தியாவில் பணியாற்றிய விஞ்ஞானிகள், பொறியாளர்கள், மருத்துவர்கள், தொழில்நுட்ப வல்லுனர்கள் போன்றோர் பணிஓய்வு பெற்றபின் இங்கிலாந்துக்கே திரும்பிவிட்டதால் அவர்களது அறிவும், ஆற்றலும், அனுபவமும் இந்திய முன்னேற்றத்துக்குப் பயன்படாமல் போய்விட்டது.

விடுதலைக்கான வழி

நௌரோஜி இந்தியா வறுமைப் பிடியிலிருந்து விடுபடுவதற்கான வழிகளையும் காட்டினார்: 1. 1858ல் விக்டோரியா மகாராணி வெளியிட்ட பிரகடனத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்; 2. 1833ம் ஆண்டு சட்டச் சரத்துக்களை நடைமுறைப்படுத்த வேண்டும்; 3. உயர்பதவிகளில் இந்தியர்களுக்கு இடமளிக்க வேண்டும்; 4. நிர்வாகத்தில் இந்தியரின் பங்கேற்பும், கட்டுப்பாடும் அதிகரிக்க வேண்டியது அவசியம்; 5. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட சட்ட மன்றங்கள் அமைக்கப்பட வேண்டும், 6. இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்குமிடையேயான நீதித் தொடர்புகள் நியாயமானதாக இருத்தல் வேண்டும். அதாவது முடிவைப் போன்றே மார்க்கமும் உண்மையாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

Scanned by CamScanner

மதிப்பீடு

தாதாபாய் நௌரோஜி அகில இந்திய காங்கிரஸ் துவக்கப்பட்டபோது பிரபலமாக இருந்த இந்தியர்களுள் ஒருவர் ஆவார். 'ஈதல் இசைபட வாழ்தல்' என்ற வாக்குக்கேற்ப வாழ்ந்தவர். இவர் நாட்டு பற்று மிக்க சமயச்சார்பற்ற தேசியவாதி. இந்தியாவைப் பற்றியே சிந்தித்துச் செயல்பட்டவர். இந்திய விடுதலைக்காக இங்கிலாந்தில் இருந்துகொண்டு ஆங்கிலேயரின் மனதைப் பக்குவப்படுத்துவதில் முனைப்புடன் பணியாற்றினார். இந்திய தேசியத்திற்கு பொருளாதார அடிப்படையை அமைத்துக் கொடுத்தவர். பிற தலைவர்களை அரசியலை மையமாகக்கொண்டு செயல்பட்டபோது நௌரோஜி இந்திய தேசிய எழுச்சிக்கான பொருளாதாரப் பரிமாணத்தைக் காட்டினார். இந்தியாவின் செல்வம் கண்ணுக்குத் தெரியாமல் அமைதியாக, நுட்பநுணுக்கத்தோடு இந்தியாவைவிட்டு கொண்டு செல்லப்பட்டதன் விளைவாக மக்கள் வறுமையில் பிறந்து, வறுமையில் வசித்து, வறுமையில் இறந்தனர் என்று எடுத்துக்காட்டி காலனி ஆட்சியின் இயல்பை வெளிப்படுத்தினார். இவர் காங்கிரசுக்கு மூன்று முறை தலைமைப் பொறுப்பேற்று இந்திய சுயராஜ்யத்துக்காக உரக்கக் குரல் கொடுத்தார். நௌரோஜி 'இந்தியாவின் பெருமைக்குரிய பெரியவர்' (Grand Old Man of India) என்று போற்றப்பட்டது பொருத்தமேயாகும்.

உமேஷ் சந்திர பானர்ஜி

காங்கிரசின் முதல் தலைவர்

உமேஷ் சந்திர பானர்ஜி 1885 டிசம்பர் 28ம் நாள் பம்பாயில் கூடிய முதல் அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார். இவர் இக்கூட்டத்தில் காங்கிரசின் குறிக்கோள்களைப் பின்வருமாறு வரையறுத்தார்: 1. நாட்டு நலனில் அக்கறை கொண்ட அனைவரிடையேயும் நெருங்கிய நட்புணர்வையும், தொடர்பையும் ஏற்படுத்தல்; 2. நாட்டை நேரிப்போரிடையே இன, மத, பிராந்தியப் பற்றுகளையும் பிடிப்புகளையும் போக்கி, தேச ஒற்றுமை உணர்வை முழுமையாக வளர்த்து வலுப்படுத்தல்; 3. நாட்டின் முக்கிய சமுதாயப் பிரச்னைகள் பற்றிய கற்றோர் வகுப்பாரின் முதிர்ந்த கருத்துக்களை முறையாகப் பதிவு செய்தல். கருங்கக்கூறின் மக்களிடையே தேச உணர்வையும், ஒற்றுமையையும் உருவாக்குவதே காங்கிரசின் தலையாய பணி என்பதை அடிக்கோடிட்டுக் காட்டினார் பானர்ஜி.

பாதுகாப்பு - ஊடிதழ் கோட்பாடு

மக்களின் மலக்குமுறலுக்குப் பாதுகாப்பான, அமைதியான, சட்டபூர்வமான வடிகாலை அமைத்துக் கொடுத்தல் 'பாதுகாப்பு - ஊடிதழ் கோட்பாட்டின் (Safety-Valve Theory) மூலக் கருத்தாகும். உமேஷ் சந்திர பானர்ஜி 1898ல் 'இந்திய அரசியல்' என்ற நூலுக்கு எழுதிய முன்னுரையில் இக்கோட்பாட்டுக்கு விரிவுரை கொடுத்தார். அதில் காங்கிரஸ் துவக்கப்பட்டதற்கு டஃப்ரினும், ஆலனும் காரணம் என்றும், 1884லிலேயே டஃப்ரின் இந்திய அரசியல் தலைவர்களை ஆண்டுக்கொருமுறை கூட்டி 'சமுதாய விவகாரங்களை' விவாதித்து மக்கள் உணர்ச்சிகளுக்கு வடிகால் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்றும் கூறியதாகக் குறிப்பிட்டிருந்தார். இக்கருத்து காங்கிரசின் துவக்க காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தாலும், இன்றைய ஆராய்ச்சி ஆதாரங்கள் பாதுகாப்பு - ஊடிதழ்க் கோட்பாட்டுக்கு ஆதரவாக இல்லை.

பகுதி - II

11. வங்கப் பிரிவினையும் சுதேசி இயக்கமும், 1905

சுதேசி இயக்கம் நம்முடைய சுயசார்பை, தற்சார்புடைமை, சுயஉதவி ஆகியவற்றை உயர்த்தி, நமது வளங்களையும், திறமைகளையும் இன, நிற, சாதி வேறுபாடின்றிப் பயன்படுத்திக் கொள்ளக் கற்பிக்கின்றது.

- லாலா லஜபதிராய்

வங்கப் பிரிவினை

வங்காளம், ஒரிஸ்ஸா, பீஹார், சோட்டா நாச்பூர் ஆகிய பகுதிகள் சேர்ந்தே வங்காள ராஜதானியாக அமைந்திருந்தது. பரப்பளவில் பெரிதும் நிர்வாகத்துக்குக் கடினமாகவும் இருந்த அப்பெரிய ராஜதானியைப் பிரிப்பதற்கான முயற்சிகள் நாற்பதாண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு எவ்வித முடிவுக்கும் வராமல் இருந்தது ஆங்கிலேய அரசாங்கம். ஆனால் கர்சன் பிரபு வைசிராயாக வந்த உடனேயே (1899-1905) பிற நடவடிக்கைகளோடு வங்காளத்தைத் துண்டாக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார். ஆழ்ந்த ஆலோசனைகளுக்குப்பிறகு தனது வங்கப்பிரிவினைத் திட்டத்தை 1905 டிசம்பர் மாதம் வெளியிட்டார் கர்சன் பிரபு.

காரணங்கள்

வங்காள ராஜதானி திறமையாக நிர்வகிக்க முடியாத அளவுக்குப் பெரிதாக இருந்தது. அதன் காரணமாக அரசியல் மாற்றங்களைச் செய்ய இயலவில்லை; கிழக்கு வங்காளம் வளர்ச்சி குன்றிப்போய்விட்டது; அதன் முன்னேற்றத்துக்குச் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டியதிலை. இத்தகைய காரணங்களைக் காட்டி வங்கப் பிரிவினைக்கான திட்டம் தயாரிக்கப்பட்டது. ஆனால் உண்மையான காரணம் வங்காளத்தில் இருந்த இந்திய தேசிய உற்றை அடைத்துவிட வேண்டும் என்பதுதான். வங்காள இந்து முஸ்லீம்களுக்கிடையே பிளவை ஏற்படுத்திவிட்டால் அக்காரியம் எளிதில் நிறைவேறிவிடும் என்ற நிர்மானத்தோடு தான் கர்சன்பிரபு வங்கப்பிரிவினைத் திட்டத்தை துரிதப்படுத்தினார். தனது பிரிவினைத் திட்டத்துக்கு ஆதரவு திரட்டும் பொருட்டு கர்சன்பிரபு கிழக்கு வங்காளத்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது (1904) அங்கிருந்த முஸ்லீம்களுக்கு பல சலுகைகளை வழங்கினார். வங்கப்பிரிவினையின் விளைவாக அசாம் கிழக்கு வங்க மாநிலத்தில் முஸ்லீம்களே பெரும்பான்மையினராயிருப்பர் என்றும்; அதன் தலைநகரான டாக்கா முஸ்லீம்களின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்குமென்றும்; தனி மாநிலத்தில் முஸ்லீம்கள் தங்களது சமயத்தையும் பண்பாட்டையும் சிதையாமல், சிதறாமல்

Scanned by CamScanner

பாதுகாத்துக்கொள்ள முடியுமென்றும், முகலாயரது ஆட்சிக் காலத்தில் அனுபவித்த உரிமைகளையும் சலுகைகளையும் முஸ்லீம்கள் மீண்டும் பெறலாமென்றும்; பாவற்றுக்கும் மேலாக மேற்கு வங்க இந்துக்களின் ஆதிக்கத்திலிருந்து நிரந்தரமாக விடுதலையடையலாமென்றும் கர்சன் பிரபு கிழக்கு வங்க முஸ்லீம்களுக்கு உத்தரவாதமளித்தார்.

எதிர்ப்பு

கர்சனின் வங்கப் பிரிவினைத் திட்டத்தை வங்கத் தலைவர்கள் துவக்கத்திலிருந்தே எதிர்த்து வந்தனர். பொதுக்கூட்டங்கள்போட்டு பிரிவினைத் திட்டத்துக்கெதிரான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சூரைகைகள் எழுத்து கொள்ளப்பட்டன. வைசிராய்க்கு எதிர்ப்பு விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. வங்கப் பிரிவினைக்கு எதிராக 60,000 பேர் கையொப்பமிட்ட மனு ஒன்று இந்திய விவகார செயலரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த மனுவில் இந்திய விவகாரச் செயலர் உடனடியாகத் தலையிட்டுப் பிரிவினைத் திட்டத்தை தடுத்து நிறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார். வங்கப் பிரிவினையைப் பத்திரிகைகள் கண்டித்தன. எவ்விதப் பயனுமில்லை. எதிர்ப்புகளைப் பொருட்படுத்தாத கர்சன் பிரபு வங்கப் பிரிவினை பற்றிய முடிவை 1905 ஜூலை 19ஆம் நாள் அறிவித்தார். அக்டோபர் 16ஆம் நாள் வங்கம் துண்டிக்கப்பட்டது. இந்திய தேசியத்தின் தோற்றுவாயாக இருந்ததற்காகத் தண்டிக்கப்பட்டது. 'பிரிட்டிஷாரின் பிரித்தாளும்' கொள்கைக்கு (Divide and impera) வங்கப் பிரிவினை முதல்தர முன்னுதாரணம் என்று கூறியுள்ளார் ஆர்.பி.குரோனின்.

சுதேசி இயக்கம்

துக்க தினம்

வங்காளம் பிரிக்கப்பட்ட நாளான 1905 அக்டோபர் 16 தேசிய துக்கதினமாக வங்காளம் முழுவதும் கொண்டாடப்பட்டது. அன்று மக்கள் உண்ணா விரதமிருந்தனர். கல்கத்தாவில் 'அர்த்தால்' அனுஷ்டிக்கப்பட்டது. அன்று பாடுவதற்கென பிரத்யேகமாக இரவீந்திரநாத் தாகூரால் புனையப்பட்ட பாடலை மக்கள் பாடினர். ஊர்வலமாகச் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் பங்கிம் சந்திரின் 'வந்தே மாதரம்' பாடலைப் பாடிச் சென்றனர். ஆண்களும் பெண்களும் 'ரட்சா பந்தனம்' கட்டுக் கொண்டனர். ஆனந்தமோகன் போஸ் வங்காளிகளின் ஒற்றுமையின் அடையாளமாக 'இணைப்பு மண்டபத்தின்' அடிக்கல் நாட்டினார். ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள், தீர்மானங்கள் நிறைவேற்றல், விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல், எதிர்ப்புக் கோஷங்களை முழக்கமிடல் போன்ற எதிர்ப்பு நடவடிக்கைகளோடு மட்டும் திருப்தியடையவில்லை. அவர்கள் நேரடி நடவடிக்கைகளில் இறங்க முடிவு செய்தனர். 'சுதேசி இயக்கம்' பிறந்தது.

சுதேசி ஆதரவு

இந்தியப் பொருள்களைப் பயன்படுத்தல், தற்சார்புடைமை, சுய உதவி ஆகியவை சுதேசி இயக்கத்தின் நோக்கங்களாகும். அது ஒரு அரசியல், பொருளாதார, ஆன்மிக ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டது. பொதுக்கூட்டங்களில் சுதேசியப் பொருள்களையே உபயோகிப்பது என்றும், விதேசிப் பொருள்களைப் புறக்கணிப்பதென்றும் உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது. நிர்மாணப்

பணியைக் கவனித்துக் கொள்வதற்கென 'சுதேசி சமாஜ்' என்ற அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. தொண்டர்கள் சுதேசி வேலைத் திட்டங்களை மேற்பார்வையிட்டனர். சுதேசி நெசவாலைகள், சோப்பு, தீப்பெட்டித் தொழிற்சாலைகள், வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக் கம்பெனிகள் துவக்கப்பட்டன. இவ்வியக்கத்தை வளர்க்க ஏராளமான நிதி திரட்டப்பட்டது. சுதேசி இயக்கம் ஒரு இயக்கமாக மலர்ந்தது.

விதேசிப் புறக்கணிப்பு

சுதேசி இயக்கத் தலைவர்கள் விதேசிப் பொருள்களைப் புறக்கணிப்பதன்மூலம் இந்தியர்களை ஆங்கிலேயரது பொருளாதாரச் சுரண்டலிலிருந்து விடுவிக்க எண்ணினர். இங்கிலாந்து துணியுடன் ஆங்கிலத்தையும் புறக்கணித்தல்; அரசாங்க கவுரவப் பட்டங்களை துறத்தல், சட்ட மன்றங்கள், உள்ளாட்சி மன்றங்களிலிருந்து விலகல், விதேசிப் பொருள்களை வாங்குவோரை சமூகப் பிரஷ்டம் செய்தல் ஆகியவை இப்பொருள் புறக்கணிப்புத் திட்டத்தில் அடங்கும். வெளிநாட்டு மருந்துகளைப் பயன்படுத்த நோயாளிகள் மறுத்துவிட்டனர். மான்செஸ்டர் துணிகளும் வெளிநாட்டு சிகரெட்டுகளும் பொது இடங்களில் கொளுத்தப்பட்டன.

தேசியக் கல்வி

சுதேசி இயக்கத் தலைவர்கள் விதேசிப் பொருள்களோடு விதேசிக் கருத்துக்களையும் புறக்கணித்தனர். மேற்கத்திய கல்விமுறை இகழப்பட்டது. மாறாக இந்தியப் பண்பாடு, தத்துவம், மரபு வாழ்க்கை வழி ஆகியவை புகழப்பட்டது. கடந்த காலப் பெருமை பேசினர். இளைஞர்களிடையே தேசிய உணர்ச்சியை ஏற்படுத்த தேசிய கல்விக்கூடங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஏட்டுக்கல்வி, தொழிற்கல்வி, உடற்பயிற்சிக் கல்வி ஆகியவை இந்நிலையங்களில் போதிக்கப்பட்டன; இவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டது 'விடிவெள்ளிக் கழகங்கள்' (Dawn Societies) தேசியத்தின் நாற்றங்கால்களாகத் திகழ்ந்தன. மாணவர்களிடையே நாட்டுப்பற்றும், சுயசார்புடைமையும் இயல்பாக மனப்பான்மையும் வளர்க்கப்பட்டன. 1906ஆகஸ்டு 15ல் ஒரு தேசியக் கல்வி மன்றம் (National Council of Education) ஏற்படுத்தப்பட்டது.

சாத்வீக எதிர்ப்பு

வங்கப் பிரிவினை 'முடிந்த முடிவு' என்று மார்லி பிரபு அறிவித்தவுடன் தீவிரவாதிகள் 'சாத்வீக எதிர்ப்பை' (Passives Resistance)த் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டனர். மாணவர்கள் அரசாங்கப் பள்ளிகளையும், கல்லூரிகளையும் புறக்கணிக்க வேண்டும். அதேபோன்று நீதிமன்றங்கள், சட்டமன்றங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள், அலுவலகங்கள் ஆகியவையும் புறக்கணிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டனர். அரசாங்கத்துடன் ஒத்துழைக்காததன் மூலம் நிர்வாகத்தை முடக்கிவிட வேண்டும் என்பதே சாத்வீக எதிர்ப்பின் நோக்கமாகும். சாத்வீக எதிர்ப்பியக்கத்திற்குத் தலைமை தாங்குவதற்காக அரவிந்தர் தனது வேலையைத் துறந்துவிட்டு பரோடாவிலிருந்து வங்காளத்திற்கு வந்தார். பாலகங்காதர திலகர், லாலா லஜபதிராய் போன்றோர் சுதேசி இயக்கத்தில் மிகுந்த அக்கறை காட்டி அதை ஒரு அகில இந்திய இயக்கமாக்கினர்.

Scanned by CamScanner

அடக்குமுறை

சதேசி இயக்கத்தில் வெற்றி கண்டு அரசாங்கம் தினங்கொண்டது. அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டது. கூட்டங்கள் கலைக்கப்பட்டன. ஆர்ப்பாட்டக்காரர்கள் மூர்க்கத் தனமாகத் தாக்கப்பட்டனர். தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். பேச்சுச் சுதந்திரம் பறிக்கப்பட்டது. கூட்டங்கள், ஊர்வலங்கள் ஆர்ப்பாட்டங்கள் தடை செய்யப்பட்டன. சதேசி இயக்கத்தில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு அரசாங்கப் பணிகளில் இடமில்லை என்று அறிவிக்கப்பட்டது. வெளிநாட்டுச் சர்க்கரையில் செய்யப்பட்ட இனிப்புப் பண்டங்களை எதிர்த்தமைக்காக மாணவர்கள் கைது செய்யப்பட்டு, சிறைக்கு அனுப்பப்பட்டனர். வீடுகளில் புகுந்து சோதனையிடுவதும் உளவு பார்ப்பதும் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதும் அன்றாட வழக்கமாயின. வங்காளத்தில் சுரேந்திரநாத் பானர்ஜி, பிபின் சந்திர பால், அரவிந்தரும், பஞ்சாப்பில் லாலா லஜபதிராயும், மகாராஷ்டிரத்தில் திலகரும், தமிழ்நாட்டில் வ.உ.சிதம்பரம் பிள்ளையும், ஆந்திராவில் ஹரிசர்வோத்தம ராவும் பிறரும் கைது செய்யப்பட்டனர். பல கட்டுப்பாட்டுச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டன.

விளைவுகள்

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் வங்கப் பிரிவினைக்கெதிராக எழுந்த சதேசி இயக்கம் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. வங்காளத் தீவிரவாதிகள் விண்ணப்பம், வேண்டுகோள் முறையோடு நேரடி நடவடிக்கையில் ஈடுபட்டனர். அவர்களது நோக்கங்கள் தெளிவாக்கப்பட்டன. மக்களுக்குச் சுயசார்புடைமை, தன்னம்பிக்கை, தன்மானம், சுயஉதவி பற்றிய உணர்வுகள் உண்டாயின. இந்திய எதிர்ப்பு யாசிக்கும் நிலையிலிருந்து (mendicancy) நேரடிப் போராட்ட (militancy) நிலைக்கு மாறியது. சுதேசிய இயக்கம் வங்காளத்துக்கு வெளியேயும் பரவி அகில இந்திய ஆதரவைப் பெற்றது. வங்காளத்தில் மக்கள் இலக்கியம் விரைந்து வளர்ந்தது. மக்களுக்கு போலீஸ், சிறை ஆகியவற்றின் மீதிருந்த அச்சம் அகன்றது. தாக்கப்படுவதும் சிறை செல்வதும் தேசத்தொண்டாகக் கருதப்பட்டன. துன்பத்தாலும் தியாகத்தாலும் மட்டுமே ஆங்கிலேய அரசாங்கத்தை அடிபணிய வைக்க முடியும் என்ற புதிய பாடத்தைத் தலைவர்களும் மக்களும் புரிந்து கொண்டனர். 'ஐக்கிய இந்தியாவின் பொதுச் சமயம்' என்று லாலா லஜபதிராயால் கருதப்பட்ட சுதேசி இயக்கத்தின் விளைவாக வங்கப்பிரிவினை 1911ஆம் ஆண்டு விலக்கிக் கொள்ளப்பட்டது.

மதிப்பீடு

சதேசி இயக்கம் இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்கியது என்பதில் ஐயமில்லை. எனினும் அவ்வியக்கத்தில் சில குறைபாடுகள் காணப்பட்டன. முதலாவதாக சதேசி இயக்கம் வங்காளத்தில் மேல்மட்ட 'பத்ரலோக்' (Bhadralok) இந்துக்களால் முனைப்பார்வத்துடன் முன்னின்று நடத்தப்பட்டது. அதனால் அப்போராட்டத்துக்கு இன முலாம் பூசப்பட்டது. இரண்டாவதாக, அது இந்து சமய அடிப்படையிலும் இந்து சமுதாய சம்பிரதாயங்களையொட்டியும் மேற்கொள்ளப்பட்டது. எனவே, அச்சமயச் சார்புடைய விடுதலைப் போராட்டம் சமயச் சார்பின்மைத் தன்மையைப் பாதித்தது. மூன்றாவதாக, சதேசி இயக்கத்தில் முஸ்லீம்களும், விவசாயிகளும், பிறரும் பெருவாரியாகப் பங்கேற்கவில்லை. நான்காவதாக, தீவிரவாதிகளின் சதேசி, சுயராஜ்யக் கோரிக்கை காரிய சாத்தியமற்றது. அதற்கான பக்குவத்தை

பெறவில்லை. தலைவர்களுக்குள்ளேயே இலை பற்றிய கருத்து வேறுபாடுகள் இருந்தன. ஐந்தாவதாக, சாத்வீகப் போராட்டமும் வர்த்தகப் போரும் நடைமுறைச் சாத்தியமற்றவை. அதனால்தான் விதேசிப் பொருள் புறக்கணிப்பு தோல்வியுற்றது. இறுதியாக, போதிய முன்னேற்பாடுகளின்றி அரசாங்கப் பணிகள் சட்டமன்றங்கள், நீதிமன்றங்கள், கல்விக் கூடங்கள் ஆகியவற்றைப் புறக்கணித்து நாட்டின் வளர்ச்சியை குறிப்பாக வங்காளத்தின் வளர்ச்சியைத் தேக்கமுறச் செய்தது.

சதேசி இயக்கம் அரசாங்கத்தால் அடக்கப்பட்டாலும் அந்த நேரத்துக்குத் தோல்வியுற்றது போல் தோன்றினாலும் அது விதைத்த சதேசி, சுயராஜ்ய விதைகள் வீண்போகவில்லை. கர்சனின் காட்டு தர்பாரால் தேசிய உணர்வை ஒடுக்க முடியவில்லை. 1906ல் கல்கத்தாவில் கூடிய மிதவாத காங்கிரஸ்கூட சதேசி இயக்கத் திட்டங்களை ஆதரித்துத் தீர்மானங்களை நிறைவேற்றியது. அக்கூட்டத்துக்குத் தலைமை வகித்த தாதாபாய் நௌரோஜி 'சுயராஜ்ய' கோஷத்தை எழுப்பினார். அவரது வார்த்தைகள் சுயராஜ்ய இலக்கை நோக்கி மக்கள் நடைபோடுவதற்கான வேட்கையையும் உந்து சக்தியையும் தந்தன. ஆறாண்டுகளுக்குப்பின் வங்கப் பிரிவினை ரத்து செய்யப்பட்டது சதேசி இயக்கத்துக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

சுரேந்திரநாத் பானர்ஜி 1848-1925

சுரேந்திரநாத் பானர்ஜி தனது 20வது வயதில் ஐ.சி.எஸ். பதவிக்குத் தகுதிபெற்ற முதல் இந்தியர் ஆவார். இனப்பாகுபாட்டால் பதவிநீக்கம் செய்யப்பட்ட இவர் பொதுவாழ்க்கையில் ஈடுபட்டார். 1876ல் மெட்ரோபோலிட்டன் கல்லூரியில் பேராசிரியராகச் சேர்ந்தார். பானர்ஜி துவக்கிய பள்ளி பின்னர் ரிப்பன் கல்லூரியாக விரிவடைந்தது. பெங்காலி என்ற பத்திரிகையின் பதிப்பாசிரியராகப் பணியாற்றி மக்களிடையே அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தினார். இவர் ஆனந்த மோகனுடன் சேர்ந்து இந்தியன் அசோஷியேஷன் என்ற அமைப்பைத் துவக்கினார். சுரேந்திரநாத் வங்காள சட்ட மன்றத்துக்கு நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டார் (1894, 1896, 1898, 1900) இவர் இரண்டு முறை காங்கிரஸ் தலைவராகப் பொறுப்பேற்றார் (1895, 1902).

வங்கப் பிரிவினை சுரேந்திரநாத் பானர்ஜியின் வாழ்க்கையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. அதை எதிர்த்து வங்காளி பத்திரிகையில் கடுமையாக விமரிசித்து எழுதினார். சதேசி இயக்கத்தில் ஆர்வத்துடன் பங்கேற்றார். ஆனந்தமோகன், போசுடன் சேர்ந்து இரண்டு பிரமாண்டமான பொதுக்கூட்டங்களில் உரையாற்றினார். தேசிய இயக்கத்தின் துவக்ககாலப் போராட்டத்தில் மிகவும் அதிகமாகப் பொதுமக்கள் பங்கேற்ற கூட்டங்கள் அவை என்பது குறிப்பிடத்தக்கது.

சூரத் காங்கிரஸ் கூட்டத்தில் (1907) மிதவாதிகளுக்கும், தீவிரவாதிகளுக்கு மிடையே ஏற்பட்ட மோதலின்போது வீசப்பட்ட செருப்பு மேடையில் பெரோஸ்ஷா மேத்தாவுடன் வீற்றிருந்த சுரேந்திரநாத் பானர்ஜியின்மீது விழுந்தது! சென்னையில் அன்னிபெசண்ட் அம்மையார் கைது செய்யப்பட்டபோது (1917) சுரேந்திரர் சுயாட்சி இயக்கத்தில் சேர்ந்தார். 1919-1920ல் காங்கிரஸ் நடத்திய ஒத்துழையாமை இயக்கத்தை எதிர்த்து இவரும் சுத்திரபால் டெஜ்பகதூர் சாப்ரு, சி.சங்கரன் நாயர், ஜின்னா ஆகியோருடன் சேர்ந்து காங்கிரசைவிட்டு வெளியேறினார். இந்தியன் லிபரல் பெடரேஷன் என்ற அமைப்பைத் துவக்கினார்.

Scanned by CamScanner

சுரேந்திரநாத் பானர்ஜி, கோகலே, மாளவியா போன்று காங்கிர
மிதவாதியாவார். ஆங்கில அரசாங்கத்தை அகற்றாமல் இந்தியர் நலனுக்கா
நிர்வாகத்தைச் சீர்திருத்த வேண்டும் என்று விரும்பினார். வங்கப் பிரிவினைக்
கதேசி இயக்கமும், கலாட்டிப் போராட்டமும், சுரேந்திரரின் நோக்கில்
போக்கிலும் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தின. இத்தாலியின் விடுதலை
போராட்ட வீரர் மாஜினியின் வாழ்க்கையாலும் வாக்காலும் கவரப்பட்ட இவ
வங்காள அமைதியின்மையின் தந்தை' (Father of Unrest in Bengal) என்று
அறியப்பட்டார்.

சுரேந்திரர் ஒரு தேசிய வரலாற்று விவேகி. இவர் காலனி ஆதிக்கத்தின்
சுரண்டல்தன்மையை மையப்படுத்தி சிந்தித்தவர்; செயல்பட்டவர். தேசி
உணர்ச்சியின் வெளிப்பாடே தேசிய இயக்கம் என்று கருதியவர். தேசிய இயக்க
மக்கள் இயக்கமாக மலர வேண்டும் என்று எதிர்பார்த்தார். நௌரோஜி, திலக
போன்றே இந்தியரது ஒற்றுமையே இந்திய தேசத்தின் இதயம் என்று
எண்ணியவர். இந்தியா ஒரு தேசமாக உருவெடுத்து வருவதைக் கண்டவர்.

சுரேந்திரநாத் பத்திரிகையைப் பிரச்சாரக் கருவியாகப் பயன்படுத்தினார்.
அவர் நடத்திய பெங்காலி பத்திரிகை மூலம் பொருளாதார சுதந்திரத்தின்
முக்கியத்துவம்பற்றி எழுதினார். அரசியல் சுதந்திரம் தற்காலிகமானது;
பொருளாதார சுதந்திரமே நிலையானது என்பதை அடிக்கோடிட்டுக் காட்டினார்.
அரசியல் உரிமைகளைக் கோருவதற்காக தேசியவாதிகள் ஒன்று சேரவும்,
ஆனால் இந்த உரிமைகளைப் பெற்றவுடன் அந்த ஒற்றுமை மறைந்துவிடும்;
பொருளாதார உரிமைகளுக்காக ஒன்று சேர்வதே நீடித்து நிற்கும் என்று தேசிய
தீர்க்கதரிசனத்துடன் சுரேந்திரநாத் தெளிவுபடுத்தினார். இவர் பத்திரிகைச்
சுதந்திரத்துக்காகப் போராடினார். சுரேந்திரநாத் பத்திரிகை ஆசிரியராக, நீதிமன்றக்
குற்றத்துக்காக இந்தியாவில் முதல்முறையாகச் சிறை சென்றார். நிலைநாட்டிய
கருத்து மாறுபாடு கொண்ட இவர் 1897 அம்ராவதி காங்கிரஸ் கூட்டத்தில்
திலகரை நினைவுகூர்ந்து அவர் பெற்ற தண்டனைக்காக 'நாடே கண்ணீர்
வடித்தது' என்று கூறியபோது அவையோர் அனைவரும் எழுந்துநின்று கரவொலி
எழுப்பினர்.

சுரேந்திரநாத் பானர்ஜி சிறந்த பேச்சாளர். இவரது சட்டமன்றப் பேச்சுகள்
அதிகார வர்க்கத்தின் குறைபாடுகள்; அரசாங்கக் கொள்கையில் குறுகிய நோக்கம்,
பொதுநீதி, நிர்வாகச் சீர்கேடு ஆகியவற்றை அம்பலப்படுத்தின; தூங்கிக்கிடந்த
சட்டமன்றம் துள்ளி எழுந்தது. இவர் 'கேட்டார்ப் பிணிக்குந் தகைய வாய்க்
கோளாரும் மொழிவதாம்' சொல்வல்லன். கிரேக்கத்துக்கு டெமாஸ்தனஸ்,
இத்தாலிக்கு சிசிரோ, இந்தியாவுக்கு சுரேந்திரநாத் பானர்ஜி.

பிபின் சந்திர பால், 1858-1932

பிபின் சந்திர பால் அஸ்ஸாம் சில்ஹெட் மாவட்டத்தில் பிறந்தார்.
ஆசிரியராக வாழ்க்கையைத் துவங்கிய இவர் தனது அறிவாற்றலாலும்,
நாவன்மையாலும், எழுத்துத் திறமையாலும், தேசத் தலைவரானார். பிபின்
சந்திரர் 1887ல் சென்னையில் கூடிய காங்கிரஸ் மாநாட்டின்போது தேசிய
இயக்கத்தில் சேர்ந்தார். 1903ல் முதன்முதலாக இந்திய அரசியலில் தீவிரவாதக்
குரல் தெளிவாகக் கேட்டபோது பிபின் சந்திரர் 'நியூ இந்தியா' என்று அவர்
பதிப்பித்து வெளியிட்டு வந்த வார இதழில் அக்குரலைப் பிரதிபலித்தார்.

மிதவாதிகளின் 'அரசியல் வாசகப் போராட்ட உத்தியைக் கண்டித்து எழுதினார்.
பால கங்காதர திலகர், லாலா லஜபதிராய், பிபின் சந்திர பால் (Bal-Lal-Pal)
ஆகிய மூவரும் தீவிரவாத முன்னோர்த்திகளாகத் திகழ்ந்தனர்.

பால் சுதேசி இயக்கத்தில் தீவிர பங்கேற்றார். 1903 டிசம்பர் மாதம் வங்கப்
பிரிவினைத் திட்டம்பற்றித் தெரிந்த உடனேயே எதிர்ப்பு கிளம்பியது. பின்னர்
1905 ஜூலை 19ம் நாள் வங்கப் பிரிவினை முறையாக அறிவிக்கப்பட்டபோது
அந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்ட இயக்கமாக உருவெடுத்தது. பிபின் சந்திரர் சுதேசி
இயக்கத்தை அகில இந்திய இயக்கமாக விரிவுபடுத்த விரும்பினார். சுதேசி,
விதேசிப்பொருள் புறக்கணிப்பு போன்ற போராட்ட உத்திகள் இந்திய
விடுதலைக்கான வழிகளாக, முறைகளாக மாற வேண்டும், மக்கள் இயக்கமாக
மலர வேண்டும் என்று வாதிட்டார். பின்னர் பிபின் சந்திரர் அரவிந்தரைப்
போன்று அரசியலிலிருந்து விலகிக் கொண்டார்.

பிபின் சந்திரர் அரசியலைவிட்டு விலகினாரேயன்றி காங்கிரசைவிட்டு
வெளியேறவில்லை. 1911ல் இவர் பிரிட்டன், அயர்லாந்து, எகிப்து, இந்தியா
உள்ளிட்ட டொமினியன்கள் சேர்ந்து 'இம்பீரியல் பெடரேஷன்' (Imperial
Federation) என்ற கூட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்தைக்
கூறினார். பிரிட்டனுக்கும், இந்தியாவுக்கும் இடையேயான தொடர்பு
ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்கும் உள்ள உறவாக இல்லாமல் சமசுதந்திர
நாடுகளுக்கிடையேயான நட்பாக இருக்க வேண்டும் என்றார்.

1917-18ல் ரஷ்யாவில் ஏற்பட்ட மக்கள் புரட்சி பிபின் சந்திர பாலின்மீது
பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியது. இப்புரட்சியை எதேச்சிகாரத்தின் வீழ்ச்சியாகக்
கருதினார் பால். அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்ட மக்கள் புதிய சக்தியாக
உருவெடுக்க வேண்டும், மேல்வகுப்பாரின் கரன்டவிலிருந்து விடுபட்டு
சுதந்திரமாக வாழ வேண்டும், சமத்துவ சமுதாயம் அமைய வேண்டும் என்ற
கருத்துக்களைப் பற்றிப் பேசினார், எழுதினார். 1919-1920ல் காந்தி துவங்கிய
சாத்வீகப் போராட்டத்தை எதிர்த்து இவர் காங்கிரசைவிட்டு வெளியேறினார்.

சிந்தனையாளர் பால் அந்நிய மூலதனம் ஆபத்தானது; வறுமைக்கான வழி;
இந்தியரது வாழ்க்கையையோ, வளத்தையோ பெருக்காது; பொருளாதார
வளர்ச்சியை முடக்கிவிடும் என்று எச்சரித்தார். ஜி.சுப்பிரமணிய ஐயரைப்
போன்றே இவரும் வலிமைமிக்க முதலாளிகளிடமிருந்து எளியோரான
தொழிலாளிகளைக் காப்பாற்ற வேண்டும் என்று குரல் எழுப்பினார். பேனாவைப்
போர் வாளாகப் பயன்படுத்தினார். 'நியூ இந்தியா', 'வந்தே மாதரம்'
பத்திரிகைகளில் எழுச்சிக் கட்டுரைகள் எழுதினார். பிபின் சந்திரபால் 'மாபெரும்
தேசிய தீர்க்கத்தரிசிகளில் ஒருவர்' என்று புகழாரம் சூட்டினார் அரவிந்தர்.

Scanned by CamScanner

II. காங்கிரஸில் தீவிரவாதிகளின்

அரசியல் உரிமைகளைப் போராடித்தான் பெற வேண்டும்.

- பாலகங்காதர திலகர்.

1905 லிருந்து 1919 வரையான காலக்கட்டத்தைத் 'தீவிரவாதிகளின் காலம்' (Era of the Extremists) என அழைக்கலாம். மிதவாதிகளைப் போன்றே தீவிரவாதிகளும் நாட்டுப்பற்று மிக்க காங்கிரஸ்காரர்கள்தான். காங்கிரஸில் மிதவாதிகளின் ஆதிக்கத்தின்கீழ் இருந்தவரை (1885-1905) தீவிரவாதிகளால் தலைதூக்க முடியவில்லை. வங்கப் பிரிவினையின்போது (1905) தீவிரவாதிகள் சுதேசி இயக்கத்தின் மூலம் தங்களைத் தெளிவாக அடையாளம் காட்டிக் கொண்டனர். அரசியல் குறிக்கோள்; அக்குறிக்கோளை அடைவதற்கான வழிமுறைகள்; மக்களின் ஆதரவோடுகூடிய இயக்கம் ஆகிய மூன்று விஷயங்களிலும் மிதவாதிகளும் தீவிரவாதிகளும் முரண்பட்டு நின்றனர்.

தீவிர தேசியத்தின் தோற்றம்

அரவிந்த கோஷ் (1872-1950)

இவர் இங்கிலாந்திலிருந்து இந்தியா திரும்பியவுடன் (1893) இந்திய தேசிய அரசியலில் தீவிரவாத விதைகளை விதைத்தார். பம்பாயிலிருந்து வெளியான ஒரு பத்திரிகையில் முதியோருக்கு புதிய விளக்குகள் (New Lamps for old) என்ற தலைப்பில் கட்டுரைகள் எழுதினார். அவற்றில் காங்கிரசையும் காங்கிரஸ் தலைமையையும் குறை கூறினார். காங்கிரசை 'ஒரு மத்திய தர வகுப்பாரின் கருவி' என வர்ணித்தார். சிறுசிறு சீர்திருத்தங்களுக்காகத் தங்களது ஆற்றலை விரயம் செய்வதாகக் காங்கிரஸ்காரர்களைச் சாடினார். தேசவிடுதலை, மக்கள் ஆதரவைத் திரட்டல், புரட்சியின்மூலம் மாற்றத்தை ஏற்படுத்துவது பற்றியெல்லாம் அரவிந்தர் எழுதினார். அதனால்தான் அவரை 'தீவிர இயக்கத்தின் தீர்க்கதரிசி' (Prophet of militant nationalism) எனக் கரன்சிங் வர்ணித்தார்.

தீவிர தேசியம் தோன்றக் காரணங்கள்

இந்திய தேசிய இயக்கத்தில் தீவிர தேசியம் தோன்ற பல காரணங்களும் சூழ்நிலைகளும் இருந்தன.

1. 1858ல் வெளியிடப்பட்ட பேரரசியின் பிரகடனம் ஏட்டுச் சுரைக்காயாகவே இருந்தது. அதில் கொடுக்கப்பட்ட உறுதிமொழிகள் செயல்படுத்தப்படவில்லை. 1861, 1892 சுவுன்சில் சட்டங்கள் மக்களுக்கு ஏமாற்றத்தையே அளித்தன. மிதவாதிகள் மதிப்பிழந்தனர்.

2. 1896-97ல் தலைவிரித்தாடிய பஞ்சத்தைக் கட்டுப்படுத்தவோ, பஞ்சத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணமளிக்கவோ அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை

எடுக்கத் தவறிவிட்டது. குறிப்பாக பம்பாய் ராஜதானியில் பரவிய கொள்ளைநோயை கட்டுப்படுத்த அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் மக்களைச் சினங்கொண்டு எழச் செய்தன. திலகர் அதிகாரிகளின் போக்கைச் சாடினார். பூனாவில் கொள்ளை நோய்க் கமிஷனர் ராண்டும் (Rand) அவரது உதவியாளர் லெப்டினண்ட் அயர்ஸ்டும் (Ayerst) கட்டுக் கொல்லப்பட்டனர்.

3. மக்கள் பஞ்சத்தாலும், கொள்ளை நோயாலும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கையில் அரசாங்கம் விக்டோரியா மகாராணியாரின் பட்டமளிப்பின் வைரவிழாவைக் கொண்டாடுவதில் பணவிரயம் செய்தது. அது கண்டு மக்கள் ஆத்திரமடைந்தனர்.

4. அமெரிக்கா, கனடா, பிரிட்டிஷ் கொலம்பியா, தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் ஒப்பந்தக் கூலிகளாகவும், பிழைப்புக்காகவும் சென்று தங்கிய இந்தியர்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்கள் பற்றி ஆங்கிலேய அரசாங்கம் அசட்டையாக இருந்தது. இந்தியத் தலைவர்கள் திலரது கோபத்தைக் கிளறிவிட்டது.

5. இத்தாலியை அபிசீனியா தோற்கடித்தது (1896), ஜப்பான் ரஷ்யாவை வென்றது (1905) போன்ற நிகழ்ச்சிகளும்; சீனா, துருக்கி, எகிப்து, அயர்லாந்து ஆகிய நாடுகளில் ஏற்பட்ட புரட்சிகளும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய மாயையை அகற்றின. இந்திய இளைஞர்கள் எழுச்சி பெற்றனர். தீவிரவாதம் தூண்டிவிடப்பட்டது.

6. மிதவாதிகள் ஆங்கிலேயப் பண்பாடு, புகழ், அரசியல் அமைப்புகள் பற்றி புகழ்பாடிக் கொண்டிருக்கையில், பாலகங்காதர திலகர், பிபின் சந்திரபால், லாலா லஜபதிராய், அரவிந்தர், அன்னிபெசண்ட் அம்மையார் போன்றோர் இந்தியாவின் கடந்தகாலப் பெருமையின் அருமை கண்டு அதனடிப்படையில் வருங்கால இந்தியாவை உருவாக்க முனைந்தனர். மராட்டிய மாவீரர்களையும், 1857 கிளர்ச்சித் தலைவர்களையும் முன்மாதிரியாகக் கொண்டனர்.

7. பிரிட்டிஷாரின் இந்திய எதிர்ப்புக் கொள்கை தீவிர எண்ணங்கொண்ட தேசியவாதிகளுக்கு எரிச்சலூட்டியது.

8. மேலை நாடுகளில் எழுந்த விடுதலை இயக்கங்களும், கரிபால்டி, மாஜினி போன்ற போராட்டத் தலைவர்களின் தியாகச் செயல்களும் புரட்சிக் கருத்துகளும் எழுச்சியை ஏற்படுத்தின.

9. ஆங்கில அரசின் காலனி ஆதிக்கப் பொருளாதாரச் சுரண்டல் கொள்கையில் தீவிரவாத தேசியவாதிகளுக்குச் சற்றும் உடன்பாடில்லை. திலகர் கைது செய்யப்பட்டதால் 1908ல் ஏற்பட்ட பம்பாய் தொழிலாளர் வேலைநிறுத்தம், தேசியக் காற்று எத்திசை நோக்கி அடிக்கிறது என்பதைக் காட்டியது.

10. இந்திய வைசிராய் கர்சன் பிரபுவின் கொள்கை குளவிக் கூட்டில் கைவிட்ட கதையாயிற்று! தீவிரவாதம் தேசிய அங்கீகாரம் பெற்றது.

Scanned by CamScanner

தீவிரவாதிகள் என்பவர்கள் யார்?

ஆங்கிலேய ஆதிக்க அடக்குமுறைக் கொள்கையால் [illegible] மிதவாதிகளின் தோல்வியால் ஏமாற்றமுற்ற காங்கிரஸ்காரர்கள் தீவிரவாதிகளாயினர். காங்கிரசின் நோக்கிலும் போக்கிலும் அடிப்படை மாற்றம் ஏற்பட வேண்டுமென்று வற்புறுத்தினர். ஆங்கிலேயரது ஆட்சி இந்தியாவை நீடிப்பதைத் தீவிரவாதிகள் எதிர்த்தனர். ஆங்கிலேயர்கள் அளிக்கும் சிறு சலுகைகளை ஏற்றுக் கொண்டால் தேசிய இயக்கத்தின் தீவிரம் தளர்ந்து விடும் என்று அவர்கள் அஞ்சினர். சுயராஜ்யமே (Swaraj) அவர்கள் குறிக்கோளாக இருப்பதால் சுயாட்சி முறையே சிறந்த அரசியல் முறையெனத் தீவிரவாதிகள் கருதினர். தன்னாட்சி அமைப்பில்தான் மக்கள் தங்களது திறமைகளை சுயமரியாதையை, தன்னம்பிக்கையை, தற்சார்புடைமையை, தேசிய மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள முடியுமென அவர்கள் நம்பினர். சுயராஜ்யம், விதேசிப் பொருள் புறக்கணிப்பு, தேசியக்கல்வி ஆகியவை அவர்களது திட்டங்களாக இருந்தன. பாலகங்காதர திலகர், பிபின் சந்திரபால் ஆகியோர் பெருமைக்கும், புகழுக்குமுரிய தீவிரவாதத் தலைவர்களாகத் திகழ்ந்தனர்.

4 **சூரத் காங்கிரஸ் பிளவு, 1907**

காசி காங்கிரஸ் 1905

மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே இருந்த மாறுபாடுகளும் முரண்பாடுகளும் வளர்ந்துகொண்டே சென்றனவேயன்றிக் குறையவில்லை. அவர்களுடைய மனப்பான்மையும், அணுகுமுறையும், போராட்ட முறைகளும் இருசாராரையும் இருதுருவங்களாக்கிவிட்டன. அவர்களுக்கிடையே இருந்த இடைவெளி காங்கிரசை இரண்டாகப் பிளவுபடுவதைத் தவிர்க்க முடியாததாக்கிவிட்டது. வங்காளத்தில் சுதேசி இயக்கம் சூடுபிடித்து சுழன்றடித்துக் கொண்டிருக்கையில்தான் காசியில் காங்கிரஸ் கூடியது (1905). அக்கூட்டத்துக்கு கோகலே தலைமை தாங்கி சுதேசி இயக்கத்தின் பெருமை பற்றிப் புகழ்ந்துபேசிய போதிலும், தாதாபாய் நௌரோஜி, சுரேந்திரநாத் பானர்ஜி, பெரோஸ்ஷா மேத்தா போன்ற பிற மிதவாதத் தலைவர்கள் காலத்தின் மாற்றத்துக் கேற்பத் தங்களை மாற்றிக் கொள்ளத் தயாராயில்லை. திலகர் 'சாத்வீகப்போராட்டம்' பற்றிக் கொண்டுவந்த தீர்மானம் மிதவாதிகள், தீவிரவாதிகளிடையே பலத்த சர்ச்சையை ஏற்படுத்திவிட்டது. ஆனால் நெருக்கடியை உத்தேசித்து மோதலைத் தவிர்த்தனர்.

5 **கல்கத்தா காங்கிரஸ், 1906**

அடுத்த ஆண்டு (1906) காங்கிரஸ் கல்கத்தாவில் கூடியது. அதற்குமுன் வங்கப் பிரிவினை 'முடிந்த முடிவு' என்ற மார்லி பிரபுவின் அறிவிப்பு தீவிரவாதிகளை வெகுண்டெழச் செய்தது. அதேபோன்று வங்கப் பிரிவினையை எதிர்த்த ஆர்ப்பாட்டக்காரர்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அடக்குமுறை மக்களிடையே மனக்குமுறலை ஏற்படுத்தியது. அப்பின்னணியில் தான் கல்கத்தா காங்கிரஸ் கூடியது. திலகரே அக்காங்கிரசின் தலைவராக வேண்டுமென தீவிரவாதிகள் விரும்பினர். ஆனால் அதை மிதவாதிகள் எதிர்த்தனர்.

'காங்கிரஸ் தாத்தா' தாதாபாய் நௌரோஜி தலைமை தாங்க ஒப்புக்கொண்டதால் தலைமை பற்றிய சிக்கல் தீர்ந்தது. நௌரோஜி ஆங்கிலேய அரசாங்கத்தின் 'காட்டுமிராண்டிக் கொடுங்கோலாட்சியைக்' கண்டித்தார். சுயராஜ்யமே காங்கிரசின் குறிக்கோளாக இருக்க வேண்டும் என்றார். கதேசி, விதேசிப் பொருள் புறக்கணிப்பு தேசியக் கல்வி பற்றிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தீவிரவாதிகளுக்குக் கிடைத்த வெற்றி அது.

சூரத் காங்கிரஸ், 1907

எனினும் மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே இருந்த இடைவெளி குறையவில்லை. இரு பிரிவினரும் தங்களது பலத்தை நிரூபித்துக் கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர். காங்கிரஸ் நாகபுரியில் (Nagpur) கூடுவதாக இருந்தது. நாகபுரி தீவிரவாதிகளின் கோட்டை எனவே, காங்கிரஸ் கூடுமிடம் மிதவாதிகளின் அரணான சூரத் (Surat)துக்கு மாற்றப்பட்டது. சூரத் காங்கிரஸ் 1907 டிசம்பர் 26ஆம் நாள் கூடுறது. அக்கூட்டம் குருஷேத்திரப் போர்க்களமாகக் காட்சியளித்தது. திலகர் மூன்று முக்கிய கோரிக்கைகளைக் சூரத் காங்கிரசின் பரிசீலனைக்குக் கொண்டு வந்தார்:

1. கடந்த ஆண்டு கல்கத்தா காங்கிரசின் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அனைவரும் பின்பற்ற வேண்டும்.

2. விஷயாலோசனைக்குழு (Subjects Committee) உறுப்பினர்கள் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

3. காங்கிரஸ் கூட்டத் தலைவரைப் பிரதிநிதிகளே தேர்ந்தெடுக்க வேண்டும்.

திலகரின் அம்மூன்று கோரிக்கைகளையும் மிதவாதிகள் நிராகரித்து விட்டனர். டாக்டர் ராஷ்பிஹாரி கோஷின் (Dr. Rash Behari Ghose) பெயர் முன்மொழியப்பட்டது. தீவிரவாதிகள் அதிர்ச்சியடைந்தனர். எஸ்.எஸ்.பானர்ஜி கோஷின் பெயரை வழிமொழியச் சென்றபோது கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது. கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது.

அடுத்த நாள் (27 டிசம்பர்) காங்கிரஸ் கூடியபோது எஸ்.எஸ். பானர்ஜி தனது பேச்சை விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தார். காங்கிரஸ் கூட்டத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்ட முறை பற்றிப் பேச விரும்பினார். ஆனால் அவர் பேச அனுமதிக்கப்படவில்லை! தன் பேச்சுரிமையை நிலைநாட்ட மேடைக்குச் சென்ற திலகரைப் பேசவிடவில்லை. எனவே கூட்டத்தில் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டன. மிதவாதிகளும், தீவிரவாதிகளும் மோதிக்கொண்டனர். நாற்காலிகள் தூக்கி எறியப்பட்டன! செருப்புகள் வீசப்பட்டன! ஒரு செருப்புமேடையில் வீற்றிருந்த சுரேந்திரநாத் பானர்ஜி, பெரோஸ்ஷா மேத்தா ஆகியோரை உரசிச் சென்றது என்று பி.பட்டாபி சீத்தாராமையா எழுதியுள்ளார்!! போலீசார் பந்தலுக்குள் நுழைந்து நிலைமையைக் கட்டுப்படுத்தி அமைதியை ஏற்படுத்தினர். மறுநாள் (28 டிசம்பர்) மிதவாதிகள் டாக்டர் ராஷ் பிஹாரி கோஷின் தலைமையிலும், தீவிரவாதிகள் அரவிந்த் கோஷின் தலைமையிலும் தனித்தனியாகக் கூடித் தீர்மானங்களை நிறைவேற்றிக் கொண்டனர். காங்கிரஸ் பிளவுபட்டது. இதுவே 'சூரத் பிளவு' (Surat Split) என்றழைக்கப்படுகிறது.

Scanned by CamScanner

மதிப்பீடு

சூரத் காங்கிரசுக்குப் பின் காங்கிரஸ் மீடு இரண்டுபட்டது. ஒரு பிரிவினர் மோகலேயின் தலைமையிலும், மற்றுமொரு பிரிவினர் திலகரின் தலைமையிலும் செயல்பட்டனர். காங்கிரசின் நோக்கிலும் போக்கிலும் தெளிவு உண்டாக இது பெரிய வழி வகுத்தது. இரு அணிகளிலும் இருந்தோரின் பிறந்த நிறைகளை வெளிவர வாய்ப்புண்டாயிற்று. இந்திய அரியலில் இரு கட்சி அமைப்புமுறை (Two party system) உருவாயிற்று. இருப்பினும் சூரத் பிளவு காங்கிரசையும் தேசிய இயக்கத்தையும் பலவீனப்படுத்திவிட்டது. தேசிய சக்தி தெளிவு போயிற்று. ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் தானே. ஆங்கிலேய அரசு இப்பிளவைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டது. அது மிதவாதிகளை ஆதரித்து தீவிரவாதிகளை அடக்கியது. லாலா லஜபதிராயும், அஜித் சிங்கும், திலகரும் கைது செய்யப்பட்டு பர்மாவிலுள்ள மாண்டலே சிறைக்கனுப்பப்பட்டனர். பல அடக்குமுறைச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. பிரிந்த காங்கிரஸ்காரர்கள் மீண்டும் 1916 லக்னோ காங்கிரசில் ஒன்று கூடினர்.

தமிழ்நாட்டில் தீவிரவாதம்

பொதுவாகத் தமிழ்நாடு மிதவாதிகளின் பூங்காவாகக் காட்சியளித்தது. பூங்காவுக்குள் புகுந்த புயலாக வந்தார் பிபின் சந்திரபால் (1907). சூறாவளிச் சுற்றுப்பயணம் செய்தார். வீரமுழக்கமிட்டார். சென்றவிடமெல்லாம் தீவிரவாத விதைகளைத் தூவிச் சென்றார். பல தமிழர்கள் நீண்ட உறக்கத்திலிருந்து மீண்டனர். தீவிரவாதிகளாயினர். வ.உ.சிதம்பரம் பிள்ளையும் அவரது நண்பர் சுப்பிரமணிய சிவாவும் தமிழ்நாட்டில் தீவிரவாத இயக்கத்துக்குத் தலைமையேற்று நடத்தினர். குறிப்பாக வ.உ.சிதம்பரம் பிள்ளை சுதேசி கப்பல் கம்பெனி (Swadeshi Navigation Company) யை ஆங்கிலேயர் நடத்திய 'இந்திய நீராவி கப்பல் கம்பெனி (Indian Steam Navigation)க்குப் போட்டியாகத் துவங்கினார். தொழிலாளர் நலனில் அக்கறை கொண்ட அவர் 'கோரல் தொழிற்சாலை' (Coral mill) நிர்வாகிகளுடன் பேசித் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாகத் தீர்த்து வைத்தார். சிறைமீண்ட பிபின் சந்திர பாலரைப் பாராட்டும் பொருட்டு தடையை மீறிப் பொதுக்கூட்டத்தில் பேசியதற்காக வ.உ.சி. கைது செய்யப்பட்டு (1908 மார்ச் 8) நான்காண்டுகளுக்குப் பின் விடுதலை செய்யப்பட்டார். 'தமிழ்நாட்டுத் திலகர்' என்றழைக்கப்பட்ட வ.உ.சியைப் போன்றே சுப்பிரமணிய சிவாவும், வ.வே.சுப்பிரமணிய ஐயரும், வாஞ்சிநாதனும், சுப்பிரமணிய பாரதியாரும் தங்கள் சொல்லாலும், செயலாலும் தமிழ்நாட்டில் தீவிரவாதத்தை நிலைகொள்ளச் செய்தனர்.

மதிப்பீடு

எரிமலை வெடித்துச் சிதறியதைப்போன்று தீவிரவாதிகள் இந்திய தேசிய இயக்கத்தில் பிரவேசித்தனர். அவர்களுடைய பிரவேசம் விடுதலைப் போராட்டத்துக்கு வேகத்தையும், அழுத்தத்தையும், அவசரத்தையும் உருவாக்கிக்கொடுத்து, வகுப்பு (Class) இயக்கமாக இருந்த காங்கிரஸ் மக்கள் (Mass) இயக்கமாக மாறியதற்குத் தீவிரவாதிகளே காரணமாயிருந்தனர். இவர்கள் இந்தியாவில் தீவிர தேசியத்தைப் பரப்பினார்கள். எனினும் தீவிரவாதம் இந்திய

மண்ணில் வேரூன்றவில்லை. தீவிரவாத இயக்கத்தை அரசாங்கம் தனது அடக்குமுறை நடவடிக்கைகளால் ஒடுக்கிவிட்டது. தீவிரவாதத் தலைவர்கள் விளங்கிய திலகர் 1908ல் கைது செய்யப்பட்டு பர்மாவிலுள்ள மாண்டலே சிறைக்கனுப்பப்பட்டு 1914ஆம் ஆண்டு தான் விடுதலை செய்யப்பட்டார். மிதவாதிகள் தீவிரவாதிகளிடம் விரோத மனப்பான்மையுடனேயே நடந்து கொண்டார்கள். மக்கள் தீவிரவாதிகளின் திட்டங்களில் அனுதாபம் காட்டினார்களேயன்றி, வெளிப்படையாக வந்து ஆதரிக்கவில்லை. தலைவர்களெல்லாம் சிறைக்கூடத்தில் அடைக்கப்பட்டு விட்டதால் தீவிரவாத இயக்கம் தலைமையின்றித் தவித்தது. திலகர் விடுதலை பெற்றுத் தாயகம் திரும்பியவுடன் தீவிரவாத இயக்கம் 'சுயாட்சி இயக்கமாக (Home Rule Movement) உருவெடுத்தது.

மிதவாதிகளும் தீவிரவாதிகளும்: ஒப்பீடு

மிதவாதிகள் துவக்க காலக் காங்கிரஸ் தேசியவாதிகள். அவர்கள் 1885லிருந்து 1916 வரை காங்கிரசில் ஆதிக்கம் செலுத்தினார்கள். தீவிரவாதிகள் பிற்கால காங்கிரஸ் முற்போக்கு தேசியவாதிகள். வங்கப் பிரிவினை எதிர்ப்புப் போராட்டத்தின்போது (1905) தலைதூக்கி சூரத் பிளவுக்குக் காரணமாயிருந்தது (1907). காந்தி இந்திய விடுதலைப் போராட்டத்துக்குத் தலைமையேற்கும் வரை (1919) தேசிய இயக்கத்தில் கொடிகட்டிப் பறந்தவர்.

மிதவாதிகள் பிரிட்டிஷ் முடியாட்சியின் விசுவாசிகள். இந்தியா இவ்வாக, பரிணாம வளர்ச்சி பெறவேண்டுமாயின் ஆங்கிலேய ஆதரவு இன்றியமையாதது என்று மனப்பூர்வமாக நம்பியவர்கள். இங்கிலாந்து இந்தியாவை ஆக்கிரமித்து ஆட்சி செய்வது ஆண்டவன் கட்டளை என்று கருதினார்கள்; பிரிட்டிஷாரின் நீதி நியாய உணர்வின்மீது தங்களது எதிர்ப்புகளை வளர்த்துக் கொண்டவர்கள் மிதவாதிகள். மாறாக, தீவிரவாதிகள், ஆங்கிலேய ஆட்சியைச் சாபக்கேடாகக் கருதினார்கள், சாத்தான் ஆட்சியாகவே பார்த்தார்கள். பிரிட்டிஷாரை ஆதரிப்பது அவர்களுக்கு நாட்டுப்பற்றற்ற செயலாகப்பட்டது. அந்நிய ஆட்சி ஆதரவும், சுயாட்சி முறையும் என்றுமே ஒன்றுபட முடியாது என்று தீவிவாதிகள் முடிவு கட்டினர்.

கனடா, ஆஸ்திரேலியா போன்று இந்தியாவும் பிரிட்டிஷ் பேரரசின் டொமினியனாகத் (Dominion) திகழ வேண்டுமென்பதே மிதவாதிகளின் குறிக்கோள். பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ், இந்திய அரசியல் சட்ட அமைப்புமுறையில் மாற்றங்களை ஏற்படுத்தி இந்தியரது நலனைக் காக்க வேண்டுமென்று முயன்றார்கள் மிதவாதிகள். மாறாக இங்கிலாந்தின் ஆதிக்கத்திலிருந்து விடுபடுவதே தீவிரவாதிகளின் இலட்சியமாக இருந்தது. சுயராஜ்யம் தங்களது பிறப்புரிமை என்று பறைசாற்றியவர்கள் அவர்கள். மிதவாதிகள் நோயின் அறிகுறிகளைப் போக்க முனைந்தார்களென்றால் தீவிரவாதிகள் நோய்நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்புச் செய்வதில் வல்லவர்களாய் இருந்தனர்.

Scanned by CamScanner

இருசாராரும் தங்கள் மேற்கொண்ட முறைகளில் மாறுபட்டனர். மிதவாதிகள் சமரசத்திலும், சமாதானத்திலும் சலுகைகளைப் பெறுவதிலும் நம்பிக்கை இருந்தனர். சட்ட வரம்புக்குட்பட்ட எதிர்ப்பே மிதவாதிகளுடையது. விதிகளின்படி அரசியல் விளையாட்டை விளையாடினார்கள். அவர்கள் பேச்சுவார்த்தைகளாலும், பிரார்த்தனைகளாலும் விண்ணப்பங்களாலும் வேண்டுகோள்களாலும் துதுக் குழுக்களின் மூலமாகவும் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று செயல்பட்டார்கள் மிதவாதிகள். ஆனால் தீவிரவாதிகளோ நேரடிப் போராட்டத்தில் நம்பிக்கை கொண்டவர்கள். வன்முறையில் ஈடுபடாவிட்டாலும், ஆட்சியை ஸ்தம்பிக்க வைத்து தங்களது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளத் தயங்காதவர்கள். வீடு பற்றி எரியும்போது விதியின் நின்று கொண்டு வெட்டிப்பேச்சில் ஈடுபட மறுத்தவர்கள் தீவிரவாதிகள். மிதவாதிகள் விவேகத்துடன் செயல்பட்டனர்; தீவிரவாதிகள் வேகத்துடன் காரியத்தில் ஈடுபட்டனர்.

மிதவாதிகளும் தீவிரவாதிகளும் காங்கிரசின் தன்மைபற்றிக் கருத்து வேறுபாடு கொண்டிருந்தனர். ஆங்கிலம் பயின்று, ஆங்கிலேய ஆட்சியில் விசுவாசிகளான மேல்தட்டு மக்களாகிய மிதவாதிகள் காங்கிரசை வகுப்பு அமைப்பாகவே (Class organisation) வைத்திருந்தனர். செல்வந்தரும், செல்வாக்குமிக்கோருமே காங்கிரசில் இடம் பெற்றிருந்தனர். மிதவாதிகள் மண்ணில் நடக்காது விண்ணில் மிதந்து கொண்டிருந்தவர்கள். வகுப்பு அமைப்பாக இருந்த காங்கிரஸ், 'மக்கள் இயக்கமாக' மாற்ற முனைந்தார்கள் தீவிரவாதிகள். மக்களே தங்களுடைய தலைவிதியைத் தீர்மானித்துக் கொள்ளவேண்டும். எனவே அவர்கள்தான் காங்கிரஸ் இயக்கத்தில் பங்குகொள்ள வேண்டியது இன்றியமையாதது என்று வற்புறுத்தினார்கள். மக்கள் ஆதரவு என்ற அடித்தளத்தைக் காங்கிரசுக்குத் தேடித்தந்தவர்கள் தீவிரவாதிகள்தான்.

காங்கிரசைத் தங்கள் கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்க மிதவாதிகளும், தீவிரவாதிகளும் போட்டியிட்டனர். மிதவாதிகள் துவக்க காலத்திலிருந்து 1916 வரை காங்கிரஸ் கோட்டையைத் தங்களது ஆதிக்கத்தின்கீழ் வைத்திருந்தனர். மிதவாதிகளின் நோக்கிலும் நடைமுறையிலும் நம்பிக்கையிழந்த தீவிரவாதிகள் கோட்டைக்குள்ளிருந்தே காங்கிரசைக் கைப்பற்ற முனைந்தனர். அம்முயற்சி தோல்வியடைந்தபோது காங்கிரஸ் பிளவுபட்டது (1907). தீவிரவாதிகள் வெளியிலிருந்தவாறு காங்கிரஸ் கோட்டையைக் கைப்பற்றும் தருவாயில் பிரிந்திருந்த இருசாராரும் ஒருங்கிணைந்தனர் (1916).

சுயாட்சிக்கு இந்தியர்கள் தகுதியுடையவர்கள்தானா என்பதுபற்றி மிதவாதிகளும், தீவிரவாதிகளும் மாறுபட்டனர். இந்தியர்கள் சுயாட்சிக்குத் தேவையான தகுதிகளைப் பெற்றிருக்கவில்லை. எனவே அவர்களுக்கு அரசியல் கல்வியும், பயிற்சியும், பொறுப்பும் கொடுத்து சுயாட்சிக்குத் தயார் செய்ய வேண்டும் என்று எண்ணினார்கள் மிதவாதிகள். இந்தியர்களின் திறமையின்மை, ஒற்றுமையின்மை, நாட்டுப்பற்றின்மை, கல்வி அறிவின்மை, மூடக் கருத்துக்கள், இன, சமய,சாதி, பிராந்திய காழ்ப்புணர்ச்சிகள் ஆகியவை ஆங்கிலேய ஆட்சி இந்தியாவில் ஏற்படவும், நிலைபெறவும் காரணமாக இருந்தமையால் அக்குறைபாடுகளையெல்லாம் களைந்த பின்னர் சுயாட்சி முறைக்காகப்

போராடலாம் என்பது மிதவாதிகளின் கணிப்பு. அந்தக் கணிப்பைத் தீவிரவாதிகள் ஒப்புக் கொள்ளவில்லை. குறைபாடுகளுடனும் அந்திய ஆட்சியைவிடக் குறைபாடுடைய சுயாட்சியே சிறந்ததென வாதிட்டனர் தீவிரவாதிகள். சுயாட்சியை நடத்துவதற்கான இயல்பான திறமைகள் இந்தியர்களுக்குண்டு என்று சாதித்தார்கள் அவர்கள்.

விடுதலைப் போராட்டத்தில் திலகரின் பங்கு

பால கங்காதர திலகர் (1856-1920) இந்தியத் தீவிரவாத இயக்கத்தின் தந்தை ஆவார். தீவிர தேசியத்தின் மொத்த உருவமாகத் திகழ்ந்தவர் திலகர். பம்பாய் பல்கலைக் கழகத்தில் சட்டப் பட்டதாரியாயிருந்தும்கூட திலகர் அரசுப் பணியில் சேராமல் தேச சேவையில் ஈடுபட்டார். பூனா நவீன ஆங்கிலப் பள்ளி, தக்காண கல்விக் கழகம், பெர்குசன் கல்லூரி ஆகியவை துவக்கப்பட திலகர் உதவி செய்தார். மராத்தி வார ஏடு 'கேசரி' (The Kesari) யும், ஆங்கிலப் பத்திரிகை 'மராத்தா' (The Mahratta) திலகரால் துவக்கப்பட்டவையாகும். கோகலே, அகார்கர் போலன்றி திலகர் சமூக சேவையைவிட அரசியல் சுதந்திரமே முக்கியமென்று கருதினார். எனினும் அரசாங்கம் சமுதாயப் பழக்கவழக்கங்களில் தலையிட்டபோது திலகர் எதிர்க்கத் தவறவில்லை.

மக்களிடையே தேசியத்தை வளர்க்கத் திலகர் சமயப் பண்டிகைகளை நன்கு பயன்படுத்தினார். பொதுக் கூட்டங்களைவிட பண்டிகைகள்மூலம் மக்களை தேசிய இயக்கத்தில் ஈடுபடுத்தலாம் என்றெண்ணிய திலகர் 1893ஆம் ஆண்டு கணபதி பண்டுகையைத் (Ganapathi Festival) துவக்கினார். பல நாட்கள் கொண்டாடப்பட்ட அப்பண்டிகையின்போது வீதிகள் வழியே பெரிய கணபதி உருவச் சிலைகள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன. துதிப் பாடல்களைப் பாடிக்கொண்டு இளைஞர்கள் அணிவகுத்துச் சென்றனர். இந்து சமயத் தத்துவங்கள் பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. இரண்டாண்டுகளுக்குப் பின்னர் 'சத்ரபதிசிவாஜி பண்டிகை' (Sivaji Festival) கொண்டாடப்பட்டது (1895). மக்களிடையே மிகுந்த செல்வாக்குப்பெற்ற இப்பண்டிகைகள் மகாராஷ்டிரத்தின் மூலை முடுக்கெல்லாம் பரவின. இவையன்றி பசுவதை எதிர்ப்புச் சங்கங்கள் (anti-cow killing societies), லாத்தி சங்கங்கள் (lathi clubs) போன்றவையும் துவக்கப்பட்டன. இவற்றின்மூலம் மறைமுகமாக அரசியல் நடவடிக்கைகளை மக்களிடையே குறிப்பாகக் கிராம மக்களிடையே புகுத்தினார் திலகர். இவற்றின் அடிப்படையில் எழுந்தவையே மேளாக்கள் (Melas) என்ற இரகசிய இளைஞர் கழகங்களாகும். திலகரால் கவரப்பட்ட இளைஞர்களே மேளாக்களில் சேர்ந்தனர். அஞ்சா நெஞ்சங்களான அவர்கள் போர்ப்பயிற்சி பெற்றார்கள். பல்வந்த இராமச்சந்திர நட்டு, ஹரி இராமச்சந்திர நட்டு என்ற 'நட்டு சகோதரர்கள்' மேளா இயக்கத்தை முன்னின்று நடத்தினர். அவர்கள் திலகரின் கூட்டாளிகள். வழக்காறு, சமயம், அரசியல் ஆகியவற்றைக் கலந்து தனது தீவிர தேசியத்துக்குப் பயன்படுத்தினார் திலகர்.

1897ல் பூனாவில் கொள்ளை நோய் பரவியபோது அதன் நிவாரணப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார் திலகர். அப்போது அதிகாரிகளின் அத்துமீறிய போக்கை வன்மையாகக் கண்டித்தார். அரசாங்கம் திலகர்மீது அரசத் துரோகக்

Scanned by CamScanner

குற்றம்சாட்டி பதினெட்டு மாத சிறைதண்டனை வழங்கியது. மக்கள் அவரை 'லோகமான்யர்' என்றழைத்தனர். சிறையிலிருந்து விடுதலை பெற்றபின் திலகர் தேசிய அரசியலில் தீவிரமாக ஈடுபட்டார். வங்கப் பிரிவினைக் கெதிராகத் துவக்கப்பட்ட சுதேசி இயக்கத்தை முழுமனதுடன் ஆதரித்தார் (1905). திலகர் தனது தீவிரவாதத்தால் காங்கிரஸ் மிதவாதிகளின் விரோதத்தைத் தேடிக் கொண்டார். பனாரஸ் காங்கிரசில் தீவிரவாதிகள் தங்கள் பலத்தைக் காண்பித்தனர். கல்கத்தா காங்கிரசில் தீவிரவாதத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சூரத்தில் காங்கிரஸ் பிளவுபட்டது (1907). திலகர் மீண்டும் அரசதுரோகக் குற்றம் சுமத்தப்பட்டு (1908) ஆறாண்டு கடுந்தண்டனை பெற்று பர்மாவிலுள்ள மாண்டலே சிறைக்கனுப்பப்பட்டார். அச்சிறை வாசத்தின் போதுதான் திலகர் தனது 'கீதா இரகசியம்' (Gita Rahasya) என்ற நூலை எழுதினார்.

மாண்டலே சிறையிலிருந்து விடுதலையடைந்த திலகர் (1914 ஆகஸ்டு 30) மீண்டும் தீவிர அரசியலில் ஈடுபட்டார். சுயாட்சி சங்கத்தை (Home Rule League)த் துவக்கினார் (1916). தேசிய அரசியலில் நிலவிய மந்தநிலையைப் போக்கினார். லக்னோ காங்கிரசில் திலகரின் தலைமையில் தீவிரவாதிகள் மீண்டும் காங்கிரஸ் பாசறைக்குத் திரும்பினார்கள். காங்கிரஸ் முஸ்லீம் லீக் உடன்பாடு (Congress - League Pact) ஏற்படுவதற்கு திலகர் பெரிதும் காரணமாக இருந்தார். 1919 செப்டம்பர் மாதம் திலகர் இங்கிலாந்து சென்று சுயாட்சிக்கு ஆதரவாகச் சூறாவளிச் சுற்றுப்பயணம் செய்தார். ஈ.எஸ். மாண்டேகு திலகரைச் சந்தித்துத் தனது சீர்திருத்தத் திட்டங்களுக்கு அவரது ஆதரவைக் கோரினார்! 1920 கல்கத்தா காங்கிரசுக்குத் திலகர் தலைமை தாங்குவதாக இருந்தது. ஆனால் அதற்கு முன்னரே திலகர் இயற்கை எய்தினார் (1920 ஆகஸ்டு 1).

திலகர் ஒரு பிறவிப் போராட்ட வீரர். தீவிர தேசியத்துக்காகத் தன் வாழ்நாள் முழுவதும் போராடிய நியாக சீலர் அவர். பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு போராடினார். காங்கிரஸ் மிதவாதிகளோடு போராடினார். அவர் மீது வீண்பழி சுமத்திய வாலண்டின் சிரோலுக் (Valentin Chirol)கெதிராக இங்கிலாந்து நீதிமன்றத்தில் போராடினார். திலகர்மீது அடுக்கடுக்காகத் தொடுக்கப்பட்ட அரசத் துரோகக் குற்றச்சாட்டு வழக்குகளுக்கெதிராகப் போராடினார். யாவற்றுக்கும் மேலாக "சுயராஜ்யமே நமது பிறப்புரிமை; அதை அடைந்தே தீருவோம்" என்று பேரி முழக்கமிட்டு விடுதலைக்காகப் போராடினார் திலகர்.

13. பயங்கரவாதிகள்

ஆயுதப்புரட்சி ஒரு கருவிதான் அதற்குப் பின்னால் பொருளாதார முறையையும், அரசாங்க அதிகாரத்தையும் மாற்ற முடியும் என்ற மக்களின் மனஉறுதி உள்ளது. மனிதனை மனிதன் சுரண்டும் ஆட்சியை அகற்றி, சுயாட்சி பெறும் முழு உரிமையையும் நாம் பெற வேண்டும்

- சர்தார் பகத் சிங்

பயங்கரவாதிகள் யார்?

தென்னிந்தியக் கிளர்ச்சி (1800-1801), வேலூர்க் கிளர்ச்சி (1806), உட்புற எதிர்ப்புகள் (1806-1857), பெருங்கிளர்ச்சி (1857) ஆகிய அனைத்தும் ஆங்கிலேய ஆட்சிக்கெதிரான வன்முறைக் கிளர்ச்சிகளேயாகும். அக்கிளர்ச்சிகளெல்லாம் இராணுவ வலிமையால் கொடுமையாக அடக்கப்பட்டு கிளர்ச்சிக்காரர்கள் கொடூரமாகத் தண்டிக்கப்பட்டதன் விளைவாக இந்திய இளைஞர்களது இதயங்களில் அந்திய ஆட்சிக்கெதிரான தீ மூண்டது. மகாராஷ்டிரத்தில் ஏற்பட்ட கொள்ளைநோயும், வங்கப்பிரிவினையும் இந்திய தேசிய இயக்கத்தில் தீவிரவாதிகளைத் தலைதூக்கச் செய்தன. அதேபோன்று சுதேசி இயக்கமும், சாத்வீகப் போராட்டமும் ஒடுக்கப்பட்டமை பயங்கரவாதிகள் (Terrorists) அல்லது புரட்சிவாதிகள் (Revolutionaries) விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொள்ளக் காரணமாயிருந்தது. தங்களுக்குள்ளே மாறுபட்டு முரண்பட்டாலும் மிதவாதிகளும், தீவிரவாதிகளும் வன்முறையில் ஈடுபடவில்லை. அவர்கள் காங்கிரஸ் வீட்டுக்குள்ளேயே இருந்துகொண்டு போராடிய அரசியல் பங்காளிகள்! ஆனால் பயங்கரவாதிகள் காங்கிரசுக்கு வெளியே இருந்துகொண்டு வன்முறை வழிகளில் அரசியல் கொலைகள் செய்து போராடிய தேசியவாதிகள்.

நோக்கம்

பயங்கரவாதிகளின் நோக்கம் இந்தியாவைப் பிரிட்டனின் பிடியிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதேயாகும். ஆங்கிலேயர்கள் இந்தியாவை வன்முறையால் ஆக்கிரமித்து வஞ்சகத்தால் அவர்களது ஆட்சியை நிலைநிறுத்தினார்கள். அந்திய ஆட்சி இந்திய உடலில் குத்திய முள்ளாக இருந்தது. அந்த முள்ளை வன்முறையாலும் வஞ்சகத்தாலும் நீக்க நினைத்தார்கள் பயங்கரவாதிகள். ஆங்கிலேயர்களை இந்திய மண்ணிலிருந்து அகற்றினால்தான் அரசியல், பொருளாதார, சமுதாய, சமத்துவம் காண முடியும் என்று அவர்கள் நம்பினார்கள். வன்முறை தேசியத்தை மக்களிடையே வளர்த்து, இந்தியாவை அடிமைத் தளையிலிருந்து விடுவித்து, சுதந்திரம், சமத்துவம், நீதி ஆகியவற்றின்மீது நாட்டின் அமைப்பை மாற்றியமைப்பதே பயங்கரவாதிகளின் குறிக்கோளாகும்.

Scanned by CamScanner

வன்முறை வழி

பயங்கரவாதிகள் 'துப்பாக்கித் தத்துவத்தில்' நம்பிக்கை கொண்டவர்கள். வன்முறை வழியைப் பின்பற்றியவர்கள் குருதி கொட்டுவதை தெய்வ வழிபாடாகச் செய்தவர்கள். பயங்கரவாதிகள் நன்கு திட்டமிட்டு செயல்பட்டார்கள். இராணுவத்தில் குறுக்கிட்டு குழப்பம் விளைவித்தார்கள். 'கொரில்லாப் போரில்' ஈடுபட்டார்கள். தலைமறைவாக இயங்கினார்கள். இரகசியக் கழகங்கள் அமைத்துக் கொண்டார்கள். போர்க் கருவிகளையும், வெடி மருந்துகளையும் கள்ளக்கடத்தல் மூலம் பெற்றனர். இரக்கமற்ற ஆங்கிலேய அதிகாரிகளைக் கொலை செய்யவும், அரசாங்கச் சொத்தை அழிக்கவும், கருவூலகங்களைக் கொள்ளையடிக்கவும் அவர்கள் தயங்கவில்லை. நாட்டு விடுதலைக்காகத் தங்களது இன்னுயிரை இழக்கவும் அவர்கள் அஞ்சவில்லை. சுருங்கக்கூறின் வன்முறைக் கிளர்ச்சியை ஊக்குவித்தல், ஆட்சிக்கெதிராக கிளர்ந்தெழல், அரசியல் கொலை, கொரில்லாப் போர், அரசாங்கச் சொத்தை அழித்தல், அரசாங்கக் கலிழ்ப்பு ஆகியவையே பயங்கரவாதிகள் பின்பற்றிய வன்முறை வழிகளாகும்.

அரசியல் கொலைகள்

ஆங்கிலேய ஆட்சியாளர்களை அச்சுறுத்துவதற்காகப் பயங்கரவாதிகள் அரசியல் கொலை முயற்சிகளை மேற்கொண்டனர். 'அரசியல் கொலைகள்' (Political Murders) செய்ய முயன்றனர். வங்காள லெப்டினண்ட் கவர்னர் சர் ஆண்ரு பிரேசர் (Sir Andrew Fraser) பயணம் செய்த புகை வண்டியை வெடிகுண்டு வைத்துத் தகர்ப்பதற்கான முயற்சி செய்யப்பட்டது (1907 டிச. 6). டாக்கா மாவட்ட மாஜிஸ்ட்ரேட் பி.ஜி. ஆலன் (B.C. Allen) கைத் துப்பாக்கியால் சுடப்பட்டு படுகாயமடைந்தார் (டிச.23). வங்காள ராஜதானி மாஜிஸ்ட்ரேட் கிங்ஸ் போர்டை (Kings Ford)ஐக் கொலை செய்வதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடு தவறுதலாக ஆங்கில வழக்கறிஞர் பிங்லே கென்னடி (Pingle Kennady) அவரது மனைவி, மகள் ஆகியோர் இறப்பதற்கு காரணமாயிற்று (1908 ஏப்ரல் 30). புகைவண்டித் தகர்ப்பு முயற்சியிலிருந்து தப்பிய சர் ஆண்ரு பிரேசரை ஜிதேந்திர நாத் ராய் சௌத்ரி (Jitendra Nath Rai Chowdary) என்ற மாணவன் கொடூரமாகத் தாக்கினான் (நவம்பர்). கணேஷ் சவார்கர் (Ganesh Savarkar) கைது செய்யப்படக் காரணமாக இருந்த சர்.டபிள்யூ. கர்சன் வில்லி (Sir W Curzon Wyllie) ஐ இந்திய பயங்கரவாதி மதன் லால் திங்ரா (Madan Lal Dhingra) இலண்டனில் கொலை செய்தார் (1901 ஜூலை 1). இந்திய வைசிராய் மின்டோ பிரபு (Lord Minto)வும் அவரது மனைவியும் அகமதாபாத்தில் கோச்ச வண்டியில் சென்று கொண்டிருந்தபோது அவர்கள்மீது 'தேங்காய் குண்டுகள்' வீசப்பட்டன (நவ 9). நாசிர் கலெக்டர் ஜாக்சன் (Jackson) ஒரு பிராமண இளைஞனால் சுட்டுக் கொல்லப்பட்டார் (டிசம்பர்). அதே மாதம் அம்பாலா துணைக் கமிஷனருக்கு ஒரு வெடிகுண்டு பார்சல் அனுப்பப்பட்டது.

வங்காளக் குற்றத்துறை மாவட்டத் துணைப் போலீஸ் அதிகாரியாயிருந்த கான்பகதூர் ஷம்சுல் ஆலம் (Khan Bahadur Shamsul Alam) கல்கத்தா உயர்நீதி மன்றத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார் (1910 ஜனவரி). தமிழ்நாட்டில் மணியாச்சி ரயில் நிலையத்தில் திருநெல்வேலி மாவட்டக் கலெக்டர் ஆஷ் துரையை வாஞ்சிநாத

ஐயர் சுட்டுக் கொன்றார் (1911 ஜூன் 11). புதிய வைசிராய் ஹார்டிங் பிரபு (Lord Hardinge) இந்தியாவில் புதிய தலைநகரான டெல்லியில் நகரில் யானை மீதமர்ந்து நுழைந்தபோது அவர்மீது வெடிகுண்டு வீசப்பட்டது. அவரது உதவியாளர் கொல்லப்பட்டார். வைசிராய் காயத்தோடு உயிர் பிழைத்தார். பயங்கரவாதிகளின் வன்முறை அரசியல் கொலை முயற்சிகளால் ஆங்கிலேய அதிகாரிகள் பீதியடைந்தனர்.

இரகசிய அமைப்புகள்

பயங்கரவாதிகள் தலைமறைவாக இருந்துகொண்டு செயல்பட்டதால் அவர்கள் பல இரகசிய அமைப்புகளை (Secret Societies) ஏற்படுத்திக்கொண்டு போராடினார்கள். இளைஞர்களிடையே வன்முறை தெய்வ உணர்ச்சியை ஏற்படுத்துதல்; ஆங்கிலேய ஆட்சிக் கெதிராக வன்முறைக் கிளர்ச்சியை ஊக்குவித்து நடத்தல்; ஆயுதத் தாக்குதல்களை மேற்கொள்ளல் ஆகியவையே இந்த இரகசிய அமைப்புகளின் நோக்கங்களாகும். இந்த அமைப்புகள் குறிப்பாக வங்காளத்திலும் மகாராஷ்டிராவிலும் நிறைவாகச் செயல்பட்டன.

அபினவ பாரத சங்கம்

வி.டி.சவார்க்கர் (1883-1966) 1904ம் ஆண்டு அபினவ பாரத சங்கத்தைத் தோற்றுவித்தார். இது மகாராஷ்டிரத்தில் பிரதான இரகசிய அமைப்பாகும். சவார்க்கரின் இளைய சகோதரர் கணேஷ் சவார்க்கர் இத்தாலி விடுதலைப் போராட்ட வீரரான மாஜினியின் சுயசரிதையின் 2000 பிரதிகள் எடுத்து மக்களிடையே விநியோகம் செய்தார். வீரசவார்க்கர் இலண்டனில் இருந்துகொண்டு தானியங்கி கைத்துப்பாக்கிகளை இரகசியமாக இந்தியாவுக்கு அனுப்பி வைத்தார். கணேஷ் சவார்க்கர்மீது எதிர்குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டார். அதுவே புகழ்பெற்ற நாசிக் சதிவழக்கு ஆகும்.

குவாலியரில் இயங்கிவந்த நவபாரத் சங்கமும் வன்முறைக் கிளர்ச்சியின்மூலம் இந்திய விடுதலைக்காகப் போராடி வந்தது. அதன் 22 பிராமண உறுப்பினர்கள்மீது வழக்கு தொடரப்பட்டது; பலர் தண்டிக்கப்பட்டனர். இச்சங்கம் அபினவ பாரத சங்கத்தோடு சேர்ந்து செயல்பட்டது. மகாராஷ்டிரா மற்றும் வங்காள இரகசிய சங்கங்களோடு தொடர்புகொண்ட அமைப்புகள் பஞ்சாப், ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம், தென்னிந்தியா பகுதிகளிலும் செயல்பட்டன.

அனுசீலன் சமிதி

அனுசீலன் சமிதியும், யுகாந்தர் கட்சியும் வங்காளத்தின் பலம்வாய்ந்த இரகசிய அமைப்புகளாகும். அனுசீலன் சமிதியின் குறிக்கோள் 'இந்திய விமோசனம்' ஆகும். பி. மித்தரால் துவக்கப்பட்ட இச்சங்கம் டாக்காவைத் தலைமை மையமாகக் கொண்டு 500 கிளைகளுடன் செயல்பட்டது. முராரிபுகார் தோட்ட இல்லத்தில் வெடிகுண்டு மற்றும் வெடிமருந்து மையம் துவக்கப்பட்டது. இந்த சங்கத்தைச் சேர்ந்தவர்கள் புதிதாக உருவாக்கப்பட்ட மேற்கு, கிழக்கு வங்க லெப்டினண்ட் கவர்னர்களைக் கொல்லத் திட்டமிட்டனர். பிரபுல்ல சக்கியும், குதிராமும், முசாபர்பூர் தலைமை மாநில நீதிபதி கிங்ஸ்போர்டைக்

Scanned by CamScanner

கொல்ல வெடிகுண்டை வீச, குறிதவறி கென்னடியின் மனைவியும், மகளும் கொல்லப்பட்டனர். கைது செய்யப்பட்ட பிரபுல்ல சக்கி தற்கொலை செய்து கொண்டார். குதிராம் போல் கைது செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டார் (1908). வ்ரல் 37). அலிப்தகோஷ் உள்ளிட்ட 34 பேர் மீது சதிக்குற்றம் சாட்டப்பட்டது. வழக்கு விசாரணையின்போது அரசாங்க வக்கீலும், போலீஸ் அதிகாரியும் திலமன்ற வளாகத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டனர். புரட்சியாளர்களை காட்டிக்கொடுத்த நரேந்திர கோசேல், களைலால் தத்தா, சத்யன் போல் ஆகியோர் றைவளாகத்தில் கொல்லப்பட்டனர்.

யுகாந்தர் கட்சி

யுகாந்தர் கட்சி கல்கத்தாவை நிலைக்களனாகக் கொண்டு செயல்பட்டது. அரவிந்த கோஷின் இளைய சகோதரரான பரீந்திரகுமார் கோஷ் இக்கட்சியில் தீவிர பங்கேற்றார். ஹேமசந்திர தாஸ் இக்கட்சியின் சார்பாக மேலை ஐரோப்பாவிற்குச் சென்று நாடு கடத்தப்பட்ட ரஷ்யப் புரட்சியாளர்களோடு தொடர்பு கொண்டு வெடிகுண்டுகளை உற்பத்தி செய்யும் முறைகளை அறிந்து வந்தார். அதன்பின் இரகசிய சங்கங்களிடையே 'வெடிகுண்டு வழிபாடு' பரவலாயிற்று.

பயங்கரவாதிகள் இயக்கம் நசுக்கப்படல்

பயங்கரவாதிகள் இந்திய இராணுவத்தினரைக் கிளர்ச்சி செய்யுமாறு தூண்டினர். கல்கத்தாவிலிருந்த பஞ்சாப் படைப்பிரிவினரைக் கலகம் செய்யுமாறு ஊக்குவித்தனர். 1915ல் வட இந்தியாவின் ஐந்து இடங்களில் இராணுவக் கிளர்ச்சிக்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. ராஷ்பிஹாரி போஸ் தான் அம்முயற்சியில் தீவிரமாக இருந்தார். ஆனால் அத்திட்டம் அதிகாரிகளுக்குக் காட்டிக் கொடுக்கப்பட்டதால் வெற்றி பெறவில்லை. இராணுவக் கிளர்ச்சி முயற்சியினால் கிலி பிடித்த ஆங்கிலேய அரசு பயங்கரவாதிகளின் தேசிய இயக்கத்தைக் கூண்டோடு ஒழிக்கத் தீர்மானித்தது. இரகசியச் சங்கங்களின் முக்கியத் தலைவர்களான பி.கோஷ், டி.தத், ஹேமசந்திர தாஸ், யு.என்.பானர்ஜி, ஜே.பானர்ஜி, பி.பி.தாஸ், பி.பி.நாக், சவார்க்கர் சகோதரர்கள், வ.உ.சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா, வ.வே.சுப்பிரமணிய ஐயர் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். கொடுமையாக நடத்தப்பட்டனர். இரகசிய அமைப்புகள் அனைத்தும் நசுக்கப்பட்டபோதிலும் சதிச்செயல்கள் தொடரவே செய்தன. எனினும் மக்களின் ஆதரவின்மை, நன்கு தீர்மானிக்கப்பட்ட ஒருங்கிணைந்த செயல் திட்டமின்மை, போதிய நிதி வசதியின்மை, தலைவர்கள் கைது செய்யப்பட்டமை, அரசாங்க அடக்குமுறை ஆகிய காரணங்களால் பயங்கரவாதிகளின் தேசிய இயக்கம் தோல்வியடைந்தது. அதனால் இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் பயங்கரவாதிகளின் தியாகத்தைக் குறைத்து மதிப்பிட முடியாது.

வெளிநாடுகளில் இந்திய விடுதலைப் போராட்டம்

இரகசிய சங்கங்கள்

இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்தே மிதவாதிகளும் தீவிரவாதிகளும் பயங்கரவாதிகளும் தங்களது இயக்கங்களுக்கு ஆதரவு தேடும் பொருட்டு

வெளிநாடுகளுடன் தொடர்பு கொண்டனர். பயங்கரவாதிகள் இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, அமெரிக்கா, ஜப்பான், ரஷ்யா ஆகிய நாடுகளுக்குச் சென்று இரகசியச் சங்கங்களை அமைத்து இந்திய விடுதலை போராட்ட வெற்றிக்காகப் பாடுபட்டனர். வெளிநாடுகளில் குடியேறிய இந்தியர்கள் இதில் தீவிர பங்கேற்றனர்.

இந்திய சுயாட்சி சங்கம்

ஷ்யாமஜி கிருஷ்ண வர்மா இலண்டனில் இந்திய சுயாட்சிக் சங்கத்தை (Society of Indian Home Rule)த் தோற்றுவித்தார் (1905). அவர் இந்திய சமூகவியலாளர் (The Indian Sociologist) என்ற பத்திரிக்கையை நடத்தினார். வர்மாவுடைய 'இந்திய இல்லம்' (Indian House) பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்களின் இந்திய மாணவர்களுக்குப் புகலிடமாக இருந்ததோடன்றி பயங்கரவாதிகளின் புரட்சிமையமாகவும் பயன்பட்டது. இந்தியாவிலிருந்து மேல்படிப்புக்காக இங்கிலாந்து சென்ற வி.டி.சவார்க்கர் இந்திய இல்லத்தில் சேர்ந்து வர்மாவின் நெருங்கிய கூட்டாளியானார். வீரேந்திரநாத் சட்டோபாத்தியாயா, எஸ். ரவபாய்ராணா, மதன்லால் திங்ரா, வ.வே.சு. ஐயர் போன்றோர் பிற பிரமுகர்களாவர். இலண்டன் போலீசாரின் கெடுபிடி தாங்காமல் அவர்கள் பிரான்சுக்குச் சென்றுவிட்டனர்.

பாரிஸ் குழு

பிரான்சுக்குச் சென்ற இந்தியப் பயங்கரவாதிகள் 'பாரிஸ் குழு' (Paris Group) என்ற அமைப்பை ஏற்படுத்திக்கொண்டு செயல்பட்டனர். ரஷ்யப் புரட்சியாளர்களுடனும் இந்திய இரகசிய அமைப்புகளோடும் தொடர்பு கொண்டிருந்தனர். ஏராளமான பயங்கரவாதப் பிரசுரங்கள் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இந்தியப் பயங்கரவாதிகள் ஜெர்மனியிலும் சுறுசுறுப்பாக இயங்கினர். 1907ல் அவர்கள் நடத்திய சர்வதேசச் சமூகவியலாளர் மாநாட்டில் (International Sociologists Conference) காமா அம்மையாரும் (Madam R. Gama) சர்தார் சிங்ராணாவும் (Sardar Singh Rana) பாரிசிலிருந்து போய்க் கலந்து கொண்டனர். அம்மாநாட்டில்தான் இந்திய தேசியக் கொடியை ஏற்றிவைத்து உரையாற்றினார் காமா அம்மையார். உலகெங்குமுள்ள விடுதலை விரும்பிகள் இந்திய விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார் காமா அம்மையார். இந்திய விடுதலைக்காக நாற்பதாண்டு காலம் உழைத்தவர். பெர்லினில் இந்திய விடுதலைக் குழு (Indian Independence Committee) ஒன்றும் அமைக்கப்பட்டது. வீரேந்திரநாத் சட்டோபாத்தியாயாவும், ஹர்தயாளும் அக்குழுவின் தீவிர உறுப்பினர்களாவர். முதல் உலகப்போரின் போது இந்தியப் பயங்கரவாதிகள் இங்கிலாந்துக்கெதிராக ஜெர்மனியின் உதவியை எதிர்பார்த்தனர்; கிடைக்கவில்லை.

கதார் இயக்கம்

'கதார்' (Ghadar) என்றால் 'கிளர்ச்சி' என்று பொருள். கதார் இயக்கம் வட அமெரிக்காவை நிலைக்களனாகக் கொண்டு இயங்கியது. பகவான் சிங்கும், லாலா ஹர்தயாளும் இந்த இயக்கத்தின் இரு தூண்களாவர். பகவான்சிங் ஒரு சீக்கிய மதகுரு. இவர் பஞ்சாபை விட்டுச்சென்று ஹாங்காங்கிலும், மலாய் நாடுகளிலும் கனடாவிலும் ஆயுதக் கிளர்ச்சியின் மூலம் இந்தியாவிலிருந்து

Scanned by CamScanner

பிரிட்டிஷ் ஆட்சியை அகற்ற வேண்டும் என்று பிரச்சாரம் செய்தார். லாலா ஹர்தயால் நாடு கடத்தப்பட்டவர். இவர் 1911 ஏப்ரல் மாதம் கலிபோர்னியா சென்று, பின்னர் ஸ்டான்போர்டு பல்கலைக் கழகத்தில் ஆசிரியராகப் பணியாற்றினார். 1912 டிசம்பர் 23ம் நாள் இந்திய வைசிராய் ஹார்டிஞ்ச் கொலை செய்யப்பட்ட திகழ்ச்சி இவரை வெகுவாக பாதித்தது. இந்நிகழ்ச்சியைப் பாராட்டி 'யுகாந்தர் சர்க்குலர்' (Yugandar Circular) என்ற துண்டுப் பிரகரம் அச்சிட்டு வெளியிட்டார்.

ஆயுதக் கிளர்ச்சித் திட்டம்

அமெரிக்காவின் மேற்கக் கடற்கரைப் பகுதியில் ஹர்தயால் தலைமையில் இந்தியாவுக்கு ஆதரவாக வன்முறைப் புரட்சி இயக்கம் கூடபிடித்தது. 1913 மே மாதம் போர்ட்லாந்தில் 'இந்தி சங்கம்' (Hindi Association) துவங்கப்பட்டது. இச்சங்கத்தின் முதல் கூட்டம் கான்ஷிராம் என்பவரது இல்லத்தில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் ஹர்தயால் தனது ஆயுதக் கிளர்ச்சித் திட்டத்தை அறிவித்தார்: 1. அமெரிக்கா அளிக்கும் சுதந்திரத்தைப் பயன்படுத்திக் கொண்டு பிரிட்டனுக்கு எதிராகப் போரிட வேண்டும்; 2. இந்தியா விடுதலை அடைந்தால்தான் அமெரிக்காவில் இந்தியர் சமமாக நடத்தப்படுவர்; 3. இந்தியாவின் வறுமைக்குக் காரணமான பிரிட்டிஷ் ஆட்சியை ஆயுதக் கிளர்ச்சிமூலம் அகற்ற வேண்டும்; 4. இத்திட்டத்தை இந்திய மக்களிடையேயும், இந்திய இராணுவ வீரர்களிடையேயும் பரப்பி அவர்களின் ஆதரவையும், பங்கேற்பையும் பெற வேண்டும்.

ஹர்தயாலின் ஆயுதக் கிளர்ச்சித் திட்டம் அமெரிக்காவாழ் இந்தியக் குடியேறிகளிடம் உற்சாக வரவேற்பைப் பெற்றது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஒரு 'செயற்குழு' அமைக்கப்பட்டது. பிரச்சாரம் செய்வதற்காக 'கதார்' (The Ghadar) என்ற வாரஇதழ் துவங்கப்பட்டு, இலவசமாக விநியோகிக்கப்பட்டது. பிரான்சிஸ்கோவில் யுகாந்தர் ஆசிரமம் நிறுவப்பட்டது. இந்த நகரமே கதார் இயக்கத்தின் தலைமையகமாகத் திகழ்ந்தது. பல அமெரிக்க நகரங்களில் கதார் இயக்க விளக்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இந்த இயக்கம் குறிப்பாக சீக்கியர்களிடையே மிகுந்த செல்வாக்கைப் பெற்றது.

கதார் வார இதழ்

அமெரிக்காவிலிருந்து வெளியிடப்பட்ட கதார் வார இதழ் வெளிநாடுகளிலிருந்து இயங்கிவந்த ஆயுதப் புரட்சி இயக்கத்தின் பிரச்சார பீரங்கியாகப் பயன்பட்டது. 1919 நவம்பர் முதல் தேதி கதார் இதழ் உருது மொழியிலும் டிசம்பர் 9ம் நாள் குர்முகியிலும் வெளியிடப்பட்டது. பிரிட்டிஷ் இந்திய ஆட்சியை விரோதியாகக் கருதி, அதன் அடக்குமுறையை அம்பலப்படுத்தி அந்த ஆட்சியை அகற்றுவதே கதார் இதழின் தலையாய நோக்கமாக இருந்தது. பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகக் கூறப்பட்ட குற்றச்சாட்டுகளைத் தொகுத்து ஒவ்வொரு இதழிலும் வெளியிட்டது.

கதார் இதழ் வடஅமெரிக்காவில் வாழ்ந்த இந்தியர்கள் மட்டுமல்லாது பிலிப்பைன்ஸ், ஹாங்காங், சீனா, மலாய் நாடுகள், சிங்கப்பூர், டிரினிடாட், ஹோண்டுராஸ் மற்றும் இந்தியாவிலிருந்து இயங்கிய புரட்சியாளர்களைச்

சென்றடைந்தது. இவர்களில் பலர் ஆயுதக் கிளர்ச்சியின் மூலம் இந்தியாவிலிருந்து அந்திய ஆட்சியை அகற்றவும், சீக்கியம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது குறிப்பாக பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு விசுவாசமாக இருந்த சீக்கிய இராணுவ வீரர்களை அரசாங்க விரோதிகளாக மாற்ற உதவியது. இந்தியாவை விரைவில் விடுவிக்கும் உத்வேகத்தை தொழிலாளர்களிடையே உருவாக்கியது. ஆயுதக் கிளர்ச்சியின் குறிமையமாக இருந்த ஹர்தயால் 1914 மார்ச் 25ம் நாள் கைது செய்யப்பட்டு பின்னர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். அவர் அமெரிக்காவை விட்டு வெளியேறினார்.

காமகட்டாமாறு நிகழ்ச்சி

காமகுட்டாமாறு (Komagatamaru) என்ற பெயருடைய கப்பல் இந்தியக் குடியேறிகளை ஏற்றிக்கொண்டு 1914 மார்ச் மாதம் கட்டாமாறு வான்கூவர் துறைமுகத்தை அடைந்தது. குர்தித் சிங் (Gurdit Singh) என்ற சிங்கப்பூரில் வாழ்ந்த இந்திய ஒப்பந்தக்காரர் மேற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இருந்த இந்தியர்களை ஒன்றுதிரட்டி வான்கூவருக்கு அனுப்பவதற்காக இக்கப்பலை ஒப்பந்தம் செய்தார்.

376 இந்தியப் பயணிகளுடன் சென்ற காமகட்டாமாறு வான்கூவர் துறைமுகத்தை அடையக் கனடா அரசாங்கம் தடை செய்தது. அந்நிகழ்ச்சி கனடா வாழ் இந்தியரிடையே பெரும் பதட்டத்தை ஏற்படுத்தியது. இந்தியப் பயணிகளின் உரிமைக்காகப் பல கண்டனக் கூட்டங்கள் போடப்பட்டன. நிதி திரட்டப்பட்டது. அமெரிக்கா வாழ் இந்தியர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எதிராகப் போராடத் தயாராக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். இதன் விளைவாக இந்தியாவில் ஆயுதக்கிளர்ச்சி பரவக்கூடிய ஆபத்து ஏற்பட்டது. எனவே காமகட்டாமாறு வான்கூவர் துறைமுகத்தை விட்டு வெளியேற்றப்பட்டது.

வான்கூவர் துறைமுகத்தைவிட்டு வெளியேற்றப்பட்ட காமகட்டாமாறு கல்கத்தாவை அடுத்த பட்ஜ் பட்ஜ் (Budge Budge) என்ற இடத்தை அடைந்தபோது பயணிகளுக்கும் காவல் படையினருக்குமிடையே மோதல் ஏற்பட்டது. அதில் 18 பயணிகள் கொல்லப்பட்டனர்; 202 பேர் கைது செய்யப்பட்டனர்; எஞ்சியோர் தப்பிச் சென்றனர். இதற்கிடையே முதல் உலகப்போர் துவங்கிவிட்டதால் ஆயுதப் புரட்சியாளர்கள் புதுத்திட்டம் தீட்டினர்.

கிளர்ச்சியின் வீழ்ச்சி

கதார் இயக்கத் தலைவர்கள் இந்தியாவுக்குத் திரும்பி இந்திய இராணுவ வீரர்களின் துணைகொண்டு பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக ஆயுதப்புரட்சி செய்யத் திட்டமிட்டனர். அதன்படி வெளிநாடுகளில் வாழ்ந்த இந்தியப் புரட்சியாளர்கள் தாய்நாடு திரும்பலாயினர். இத்திட்டத்தை முன்கூட்டியே அறிந்த இந்திய அரசாங்கம் இந்தியா திரும்பியோரை விழிப்புடன் கண்காணித்தது. பஞ்சாபுக்குள் நுழைந்த புரட்சியாளர்களுக்கு எதிர்பார்த்த ஆதரவு கிடைக்கவில்லை. அந்த இக்கட்டான கட்டத்தில் வங்காளப் புரட்சியாளர் ராஷ் பிகாரி போஸ், பஞ்சாபுக்கு வந்த கதார் இயக்கத்துக்குத் தலைமை தாங்க முன்வந்தார் (1915 ஜனவரி)

Scanned by CamScanner

பிரிட்டிஷ் ஆட்சியை அகற்ற வேண்டும் என்று பிரச்சாரம் செய்தார். லாலா ஹர்தயால் நாடு கடத்தப்பட்டவர். இவர் 1911 ஏப்ரல் மாதம் கலிபோர்னியா சென்று, பின்னர் ஸ்டான்போர்டு பல்கலைக் கழகத்தில் ஆசிரியராகப் பணியாற்றினார். 1912 டிசம்பர் 23ம் நாள் இந்திய வைசிராய் ஹார்டிஞ்ச் பிரபு கொலை செய்யப்பட்ட நிகழ்ச்சி இவரை வெகுவாக பாதிக்கவித்தது. அந்நிகழ்ச்சியைப் பாராட்டி 'யுகாந்தர் சர்க்குலர்' (Yugandar Circular) என்ற துண்டுப் பிரசுரம் அச்சிட்டு வெளியிட்டார்.

ஆயுதக் கிளர்ச்சித் திட்டம்

அமெரிக்காவில் மேற்கக் கடற்கரைப் பகுதியில் ஹர்தயால் தலைமையில் இந்தியாவுக்கு ஆதரவாக வன்முறைப் புரட்சி இயக்கம் சூடுபிடித்தது. 1913 மே மாதம் போர்ட்லாந்தில் 'இந்தி சங்கம்' (Hindi Association) துவங்கப்பட்டது. இச்சங்கத்தின் முதல் கூட்டம் கான்ஷிராம் என்பவரது இல்லத்தில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் ஹர்தயால் தனது ஆயுதக் கிளர்ச்சித் திட்டத்தை அறிவித்தார்: 1. அமெரிக்கா அளிக்கும் சுதந்திரத்தைப் பயன்படுத்திக் கொண்டு பிரிட்டனுக்கு எதிராகப் போரிட வேண்டும்; 2. இந்தியா விடுதலை அடைந்தால்தான் அமெரிக்காவில் இந்தியர் சமமாக நடத்தப்படுவர்; 3. இந்தியாவின் வறுமைக்குக் காரணமான பிரிட்டிஷ் ஆட்சியை ஆயுதக் கிளர்ச்சிமூலம் அகற்ற வேண்டும்; 4. இத்திட்டத்தை இந்திய மக்களிடையேயும், இந்திய இராணுவ வீரர்களிடையேயும் பரப்பி அவர்களின் ஆதரவையும், பங்கேற்பையும் பெற வேண்டும்.

ஹர்தயாலின் ஆயுதக் கிளர்ச்சித் திட்டம் அமெரிக்காவாழ் இந்தியக் குடியேறிகளிடம் உற்சாக வரவேற்பைப் பெற்றது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஒரு 'செயற்குழு' அமைக்கப்பட்டது. பிரச்சாரம் செய்வதற்காக 'கதார்' (The Ghadar) என்ற வாரஇதழ் துவங்கப்பட்டு, இலவசமாக விநியோகிக்கப்பட்டது. பிரான்சிஸ்கோவில் யுகாந்தர் ஆசிரமம் நிறுவப்பட்டது. இந்த நகரமே கதார் இயக்கத்தின் தலைமையகமாகத் திகழ்ந்தது. பல அமெரிக்க நகரங்களில் கதார் இயக்க விளக்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இந்த இயக்கம் குறிப்பாக சீக்கியர்களிடையே மிகுந்த செல்வாக்கைப் பெற்றது.

கதார் வார இதழ்

அமெரிக்காவிலிருந்து வெளியிடப்பட்ட கதார் வாரஇதழ் வெளிநாடுகளிலிருந்து இயங்கிவந்த ஆயுதப் புரட்சி இயக்கத்தின் பிரச்சார பீரங்கியாகப் பயன்பட்டது. 1919 நவம்பர் முதல் தேதி கதார் இதழ் உருது மொழியிலும் டிசம்பர் 9ம் நாள் குர்முகியிலும் வெளியிடப்பட்டது. பிரிட்டிஷ் இந்திய ஆட்சியை விரோதியாகக் கருதி, அதன் அடக்குமுறையை அம்பலப்படுத்தி அந்த ஆட்சியை அகற்றுவதே கதார் இதழின் தலையாய நோக்கமாக இருந்தது. பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகக் கூறப்பட்ட குற்றச்சாட்டுகளைத் தொகுத்து ஒவ்வொரு இதழிலும் வெளியிட்டது.

கதார் இதழ் வடஅமெரிக்காவில் வாழ்ந்த இந்தியர்கள் மட்டுமல்லாது பிலிப்பைன்ஸ், ஹாங்காங், சீனா, மலாய் நாடுகள், சிங்கப்பூர், டிரினிடாட், ஹோண்டுராஸ் மற்றும் இந்தியாவிலிருந்து இயங்கிய புரட்சியாளர்களைச்

சென்றடைந்தது. இவர்களிடம் ஆயுதக் கிளர்ச்சியின் மூலம் இந்தியாவிலிருந்து அந்திய ஆட்சியை அகற்றிவிட முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது. குறிப்பாக பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு விசுவாசமாக இருந்த சீக்கிய இராணுவ வீரர்களை அரசாங்க விரோதிகளாக மாற்ற உதவியது. இந்தியாவை விரைவில் விடுவிக்கும் உத்வேகத்தை இளைஞர்களிடையே உருவாக்கியது. ஆயுதக் கிளர்ச்சியின் குவிமையமாக இருந்த ஹர்தயால் 1914 மார்ச் 25ம் நாள் கைது செய்யப்பட்டு பின்னர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். அவர் அமெரிக்காவை விட்டு வெளியேறினார்.

காமகட்டாமாறு நிகழ்ச்சி

காமகட்டாமாறு (Komagatamaru) என்ற பெயருடைய கப்பல் இந்தியக் குடியேறிகளை ஏற்றிக்கொண்டு 1914 மார்ச் மாதம் கட்டாமாறு வான்கூவர் துறைமுகத்தை அடைந்தது. குருதித் சிங் (Gurdit Singh) என்ற சிங்கப்பூரில் வாழ்ந்த இந்திய ஒப்பந்தக்காரர் கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இருந்த இந்தியர்களை ஒன்றுதிரட்டி வான்கூவருக்கு அனுப்பவதற்காக இக்கப்பலை ஒப்பந்தம் செய்தார்.

376 இந்தியப் பயணிகளுடன் சென்ற காமகட்டாமாறு வான்கூவர் துறைமுகத்தை அடையக் கனடா அரசாங்கம் தடை செய்தது. அந்நிகழ்ச்சி கனடா வாழ் இந்தியரிடையே பெரும் பதட்டத்தை ஏற்படுத்தியது. இந்தியப் பயணிகளின் உரிமைக்காகப் பல கண்டனக் கூட்டங்கள் போடப்பட்டன. நிதி திரட்டப்பட்டது. அமெரிக்கா வாழ் இந்தியர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எதிராகப் போராடத் தயாராக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். இதன் விளைவாக இந்தியாவில் ஆயுதக்கிளர்ச்சி பரவக்கூடிய ஆபத்து ஏற்பட்டது. எனவே காமகட்டாமாறு வான்கூவர் துறைமுகத்தை விட்டு வெளியேற்றப்பட்டது.

வான்கூவர் துறைமுகத்தைவிட்டு வெளியேற்றப்பட்ட காமகட்டாமாறு கல்கத்தாவை அடுத்த பட்ஜ் பட்ஜ் (Budge Budge) என்ற இடத்தை அடைந்தபோது பயணிகளுக்கும் காவல் படையினருக்குமிடையே மோதல் ஏற்பட்டது. அதில் 18 பயணிகள் கொல்லப்பட்டனர்; 202 பேர் கைது செய்யப்பட்டனர்; எஞ்சியோர் தப்பிச் சென்றனர். இதற்கிடையே முதல் உலகப்போர் துவங்கிவிட்டதால் ஆயுதப் புரட்சியாளர்கள் புதுத்திட்டம் தீட்டினர்.

கிளர்ச்சியின் வீழ்ச்சி

கதார் இயக்கத் தலைவர்கள் இந்தியாவுக்குத் திரும்பி இந்திய இராணுவ வீரர்களின் துணைகொண்டு பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக ஆயுதப்புரட்சி செய்யத் திட்டமிட்டனர். அதன்படி வெளிநாடுகளில் வாழ்ந்த இந்தியப் புரட்சியாளர்கள் தாய்நாடு திரும்பலாயினர். இத்திட்டத்தை முன்கூட்டியே அறிந்த இந்திய அரசாங்கம் இந்தியா திரும்பியோரை விழிப்புடன் கண்காணித்தது. பஞ்சாபுக்குள் நுழைந்த புரட்சியாளர்களுக்கு எதிர்பார்த்த ஆதரவு கிடைக்கவில்லை. அந்த இக்கட்டான கட்டத்தில் வங்காளப் புரட்சியாளர் ராஷ் பிகாரி போஸ், பஞ்சாபுக்கு வந்த கதார் இயக்கத்துக்குத் தலைமை தாங்க முன்வந்தார் (1915 ஜனவரி).

Scanned by CamScanner

இவர்தான் பின்னர் கபால் சந்திரபோகக்கு இந்திய தேசிய இராணுவத்தின் தளபதிப் பொறுப்பைக் கொடுத்தவர்.

ராஷ் பிகாரிபோஸ் ஆயுதக் கிளர்ச்சிக்காக கதார் இயக்கத்துக்கு அமைப்பு வடிவம் கொடுத்தார். அவர்கள் பல பகுதிகளிலிருந்து இராணுவ முகாம்களுடன் தொடர்பு கொண்டார். 1915 பிப்ரவரி 19ம் நாள் ஆயுதக் கிளர்ச்சி செய்யத் திட்டமிட்டிருந்தார். ஒற்றர்மூலம் தகவல் அறிந்த காலனி அரசாங்கம் பல கதார் இயக்கத் தலைவர்களைக் கைது செய்தது. பிகாரிபோஸ் தப்பிவிட்டார். சதிக்குற்றத்துக்காக 45 கிளர்ச்சிக்காரர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. 200 பேருக்கு நிறை தண்டனை கொடுக்கப்பட்டது. கதார் கிளர்ச்சி வீழ்ச்சியடைந்தது.

மதிப்பீடு

கதார் இயக்கம் ஒடுக்கப்பட்டாலும் அது இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்றள்ளது. இதற்குப் பல காரணங்கள் உண்டு : 1. கதார் வார இதழ்மூலம் பிரிட்டிஷ் ஆட்சி விரைவில் அகற்றப்பட வேண்டியதன் இன்றியமையாமையைப் படித்தோரும், பாமரரும் உணர்ந்தனர் 2. பெரும்பான்மையான கதார் இயக்கத் தலைவர்களும் தொண்டர்களும் சீக்கியர்களாக இருந்தபோதிலும் இயக்கத்தின் நோக்கும் போக்கும், இலக்கும் சமயச்சாயம் பூசப்படாமல் இருந்தது குறிப்பிடத்தக்கது 3. நாட்டுப்பற்றுடன் 'வந்தே மாதரம்' சொல்லி வணக்கம் செய்யும் பழக்கத்தை இயக்கத்தினரிடையே உருவாக்கியது. 4. இயக்கத்தினர் அனைவரும் இந்தியர்களாக, இந்திய விடுதலைக்காக உயிர்த்தியாகம் செய்தனர், செய்யத்தயாராக இருந்தனர். 5.இவர்கள் ஆயுதப் புரட்சி செய்யத் திட்டமிட்டிருந்தாலும் சுதந்திர இந்தியா ஜனநாயக நாடாகத் திகழவேண்டும் என்பதில் குறியாக இருந்தனர். 6. கதார் இயக்கத் தலைவர்கள் அனைவரும் உலகக் கண்ணோட்டத்துடன் செயல்பட்டனர். இவர்களது இலட்சியம் உலகில் பல்வேறு நாடுகளில் வாழ்ந்த இந்தியர்களைச் சென்றடைந்தது. முதல் உலகப் போரின்போது இந்தியாவில் சுயாட்சி இயக்கம் (Home Rule Movement) நடந்து கொண்டிருக்கும்போது, கதார் இயக்கம் அமெரிக்காவை நிலைக்களமாகக் கொண்டு ஆயுதக் கிளர்ச்சி மூலம் இந்திய விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்தது.

14. முஸ்லீம் லீக், 1906

இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் ஆட்சி அணைவதில் இந்துக்கள், முஸ்லீம்கள்மீது ஆதிகம் செலுத்துவர். நமது உயிருக்கும் உடைமைக்கும் மானத்துக்கும் அபாயம் உண்டாகும்.

- விகார்-உல்-முல்க்

தேக்கமுற்ற சிறுபான்மையினர்

ஆறு நூற்றாண்டுகளாக இந்தியாவை ஆட்சிசெய்த பரம்பரையினரின் வழித்தோன்றல்களே முஸ்லீம்கள். அவுரங்க சீப்புக்குப் பின்னர் முகலாயப் போக்கு திதிப் போயிற்று. முகலாயர்களது இடத்தை ஆங்கிலேயர்கள் கைப்பற்றியபோது முஸ்லீம்கள் ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்தனர். அந்த எதிர்ப்பு 1857 கிளர்ச்சியின்போது நிரமாக வெளிப்பட்டது. அக்கிளர்ச்சி அடக்கப்பட்டவுடன் ஆங்கிலேய அரசு முஸ்லீம்களைப் பழி வாங்கிற்று. முஸ்லீம்கள் பாகுபாடு செய்யப்பட்டனர். அவர்கள் இராணுவத்திலிருந்தும் அரசுத் துறைகளிலிருந்தும் ஒதுக்கி வைக்கப்பட்டனர். அதன் காரணமாக முஸ்லீம்கள் பொருளாதாரத்திலும் கல்வியிலும் மிகவும் பின்தங்கிப் போயினர். தேசிய நீரோட்டத்திலிருந்து விலக்கப்பட்ட அவர்கள் தனித்திவாக இருந்து தேக்கமுற்றனர்.

தூண்டப்பட்ட சிறுபான்மையினர்

முஸ்லீம்களின் இந்தத் தேக்கநிலை நெடுநாள் நீடிக்கவில்லை. அவர்களுடைய நிலையில் மாற்றமேற்படத் துவங்கியது. சர் வில்லியம் ஹண்டர் (Sir William Hunder) என்பவர் எழுதிய இந்திய முஸல்மான்கள் (1671) என்ற நூலில் இந்திய முஸ்லீம்களின் அவல நிலையைப் பற்றியும் அவர்களது முன்னேற்றத்தில் ஆங்க காட்ட வேண்டிய அக்கறையின் இன்றியமையாமை பற்றியும் விரிவாக எழுதினார். ஹண்டரின் கருத்துக்கள் அரசாங்கத்தின் கவனத்தைக் கவர்ந்தது. முஸ்லீம்களின் முன்னேற்றத்துக்கான சூழ்நிலை உருவாயிற்று. அதை நன்கு பயன்படுத்திக் கொண்டவர் சையத் அகமதுகான் (Syed Ahmed Khan) ஆவார். அவர் அலிகாரில் முகமதிய ஆங்கிலோ ஓரியண்டல் கல்லூரி (Mohammedan Anglo-Oriental College) யை நிறுவினார். அதன்மூலம் முஸ்லீம்களுக்கு இஸ்லாமைப் பற்றிய அறிவோடு, ஆங்கிலேயக் கல்வியும் அளிக்கப்பட்டது. ஆங்கிலேயர்கள் அக்கல்லூரியை அக்கறையோடு ஆதரித்தனர். அலிகார் கல்லூரி முஸ்லீம் அரசியலுக்கும் 'அலிகார் இயக்கத்'துக்கும் மையமாகத் திகழ்ந்தது.

சையத் அகமதால் ஊக்குவிக்கப்பட்ட அலிகார் முஸ்லீம்கள், முஸ்லீம் கல்வி காங்கிரஸ் (Muslim Educational Congress) என்ற அமைப்பை

Scanned by CamScanner

ஏற்படுத்தினர். அதுவே பின்னர் 'முஸ்லீம் கல்வி மாநாடு' (Muslim Educational Conference) என்று அழைக்கப்பட்டது. இது இந்திய தேசியக் காங்கிரசுக்கு நிகரி நேர் அமைப்பாகும். முஸ்லீம் லீக் அமைக்கப்படுவதற்கு முன்னால் இதுதான் முஸ்லீம்களின் நலனுக்காகப் பாடுபட்டது. காங்கிரஸ் கூடும் போதெல்லாம் முஸ்லீம் கல்வி மாநாடும் கூடுவது வழக்கமாயிற்று. இதுவன்றி 1888 ஆகஸ்டு மாதம் சையத் அகமது அலிகாரில் 'ஐக்கிய இந்திய நாட்டுப் பற்றுடையோர் சங்கம்' (United Indian Patriotic Association) என்ற அமைப்பையும் ஏற்படுத்தினார். சட்ட மன்றங்களிலும், உள்ளாட்சி நிறுவனங்களிலும் முஸ்லீம்களுக்குப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்றும், இந்நிறுவனங்களுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்குப் பிரத்தியேகமாக முஸ்லீம் தனித்தொகுதிகள் வேண்டும் என்றும் கோரினார் சையத் அகமது. எனவே முஸ்லீம் லீக் துவக்கப்படுவதற்கு முன்னரே முஸ்லீம் பிரிவினை வாதத்துக்குரிய விதை விதைக்கப்பட்டது.

வங்கப் பிரிவினையும் முஸ்லீம்களும்

வங்கப் பிரிவினைத் திட்டம் அறிவிக்கப்பட்டபோது (1905) வங்காள முஸ்லீம்கள் அதில் ஆர்வம் காட்டவில்லை. முஸ்லீம் தலைவர்கள் இந்தத் தலைவர்களுடன் இணைந்து வங்கப் பிரிவினையை எதிர்த்தனர். ஆனால் கர்சன் பிரபு முஸ்லீம் பெரும்பான்மையினரைக் கொண்ட தனிநிலத்துக்கு வங்காள மாநிலம் பிரிவதால் முஸ்லீம்களுக்கேற்படும் நன்மைகளை எடுத்துக்கூறி, முஸ்லீம் இன உணர்வைத் தூண்டிவிட்டு வங்கப் பிரிவினைக்கு ஆதரவாக வங்காள முஸ்லீம்களைத் திசை திருப்பினார். அதில் வெற்றியும் பெற்றார். டாக்காவிலிருந்த முஸ்லீம் நிலச்சுவான்தார்களும், கற்றோரும், அரசாங்கப் பதவிகளில் இருந்தோரும் வங்கப் பிரிவினையை ஆதரித்தனர். கிழக்கு வங்காள அஸ்ஸாமின் லெப்டினண்ட் கவர்னராயிருந்த பி.புல்லர் (Bampfylde Fuller) வங்கப் பிரிவினையை எதிர்த்த இந்துக்களை அடக்கி, பிரிவினையை ஆதரித்த முஸ்லீம்களை ஊக்குவித்து, இந்து முஸ்லீம் இன சச்சரவுக்கு உரமூட்டினார். முஸ்லீம் பெரும்பான்மையினரைக் கொண்ட தனி கிழக்கு வங்காள மாநிலம் உருவாக்கப்பட்டது.

சிம்லா தூதுக்குழு

1906 ஆம் ஆண்டு இந்திய விவகாரச் செயலர் மார்லி பிரபு இந்திய சட்டமன்றங்கள் சீர்திருத்தப்படப் போவதைப்பற்றி அறிவித்தார். அந்த அறிவிப்பு காங்கிரசின் மக்களாட்சி கோரிக்கைக்குக் கொடுக்கப்பட்ட சலுகையென முஸ்லீம் தலைவர்கள் கருதினார்கள். முஸ்லீம்களுக்குப் போதிய சட்டப் பாதுகாப்பு அளிக்கப்படாவிடில் இந்துக்கள் பெரும்பான்மையினராயுள்ள சமுதாயத்தில் முஸ்லீம்களுக்கு நீதி கிடைக்காது என்று அவர்கள் அஞ்சினர். எனவே சையத் முகமது கான் முன்பு கோரிய பிரத்யேகப் பிரதிநிதித்துவத்தை மீண்டும் வலியுறுத்தத் துவங்கினர். முஸ்லீம் தலைவர்கள், ஆகாகான் (His Holiness Agakhan) தலைமையில் செல்வாக்குமிக்க முஸ்லீம் தலைவர்களின் தூதுக்குழுவொன்று இந்திய வைசிராய் மார்லி பிரபுவை சிம்லாவில் சந்தித்து பின்வரும் கோரிக்கைகளை அவரது பரிசீலனைக்கு வைத்தனர்:

1. தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு அமைக்கப்படும் நிறுவனங்களில் முக்கியத்துவத்துக்கேற்ப அவைகளில் முஸ்லீம்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படல் வேண்டும். அவர்களது எண்ணிக்கைக்கேற்ப அல்ல;

2. முஸ்லீம்களுக்கென தனித்தொகுதிகளை ஏற்படுத்துதல்;

3. அரசாங்கப் பணிகளில் முஸ்லீம்களுக்கெனப் போதிய இட ஒதுக்கீடு செய்தல்;

4. புதிதாக முஸ்லீம் பல்கலைக் கழகங்களை ஏற்படுத்தப்போதிய நிதியை அரசாங்கம் தருதல்;

5. வைசிராயின் ஆட்சிக்குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கையில் முஸ்லீம்களுக்கு முன்னுரிமை தர வேண்டும். முஸ்லீம் தூதுக் குழுவினரின் கோரிக்கைக்கு மின்டோபிரபு உற்சாகமான வரவேற்பும் நம்பிக்கையும் கொடுத்தார்.

முஸ்லீம் லீக்

இந்திய வைசிராயைச் சந்தித்த தூதுக் குழுவினரில் ஒருவரான நவாப் சலிமுல்லா (Nawab Salimullah) ஒரு கற்றறிக்கையை வெளியிட்டார் (படம்.6). அதில் அவர் அகில இந்திய முஸ்லீம் மாநாடு (All India Muslim Conference) அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியிருந்தார். இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து முஸ்லீம் பிரதிநிதிகள் டாக்காவில் கூடி சலிமுல்லா கூறிய யோசனையைப் பரிசீலித்தனர். அதன்விளைவாக அகில இந்திய முஸ்லீம் லீக் (All India Muslim League) 1906 டிசம்பர் 30ஆம் நாள் துவக்கப்பட்டது. முஸ்லீம் லீக்கின் நோக்கங்களாவன:

1. முஸ்லீம்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு விசுவாசமாக இருக்குமாறு ஊக்குவித்தல்;

2. முஸ்லீம்களின் தேவைகளையும் விருப்பங்களையும் அரசாங்கத்துக்கு எடுத்துக்கூறல்;

3. முஸ்லீம்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்;

4. முஸ்லீம்களுக்கும் பிற சமுதாயத்தினருக்குமிடையே நட்புறவை வளர்த்தல்;

முஸ்லீம் லீகின் முதல் மாநாடு அமிர்தசரசில் கூடியது (1907). சர் சையது அலி இமாம் அதற்குத் தலைமை தாங்கினார். லீக்கின் அரசியல் அமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது. துவக்கத்தில் 400 உறுப்பினர்களே லீக்கில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று நிர்மாணிக்கப்பட்டது. சட்டமன்றங்களிலும் அரசாங்கப் பணிகளிலும் முஸ்லீம்களுக்கு இட ஒதுக்கீடு, வைசிராயின் ஆட்சிக் குழுவில் பெரும்பான்மை சமூகத்துக்குச் சமமான இடங்கள் முஸ்லீம்களுக்கு கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை அம்மாநாட்டில் கலந்து கொண்ட தலைவர்கள் வற்புறுத்தினர். ஆகாகான் முஸ்லீம் லீக்கின் நிரந்தரத்

Scanned by CamScanner

தலைவர் என்று அறிவிக்கப்பட்டது. லீக்கின் கிளைகள் பிற மாநிலங்களில் துவக்கப்பட்டன. இலண்டனிலும் அதன் கிளை துவக்கப்பட்டது. 1909ஆம் ஆண்டின் சட்டமன்றச் சட்டம் முஸ்லீம்களுக்குத் தனியான தேர்தல் பிரதிநிதித்துவம் வழங்கியதும் முஸ்லீம் லீக்கின் முதல் வெற்றியாகக் கருதப்பட்டது.

தேசிய முஸ்லீம்கள்

இந்திய முஸ்லீம் தலைவர்கள் அனைவரும் முஸ்லீம் லீக்கை ஆதரிக்கவில்லை. அவர்கள் தேசிய முஸ்லீம்கள் (Nationalist Muslims) என்றழைக்கப்பட்டனர். உதாரணமாக முகமது அலி ஜின்னா லீக்கில் சேரவில்லை. இந்து முஸ்லீம் ஒற்றுமையை வலியுறுத்திய அவர் முஸ்லீம்களுக்குப் பிரத்யேகப் பிரதிநிதித்துவம் என்ற லீக்கின் கோரிக்கையைக் கடுமையாக எதிர்த்தார். நவாப் சையது முகமது, மவுலானா ஷிப்லி நுஎமானி, மவுலானா முகமது அலி, மவுலானா அபுல்கலாம் ஆசாத், சையத் வாலிர், ஹாலன் இமாம், ஹகிம் அஜ்மல் கான் ஆகியோர் முஸ்லீம் லீக்கில் சேராத பிரபல முஸ்லீம் தலைவர்களாவர். அதுமட்டுமல்ல; ஜமைத் உல்லாமா ஹிந்த் (Jamit-ululema Hind) என்ற ஒரு போட்டி அமைப்பை ஏற்படுத்தி அதன்மூலம் முஸ்லீம்களைக் காங்கிரஸில் சேர்க்க முயற்சிக்கப்பட்டது.

முஸ்லீம் லீக்கும் காங்கிரசும்

முஸ்லீம் லீக் துவக்கப்பட்டபோது அது காங்கிரசின் அரசியல் விரோத அமைப்பாகவே காட்சியளித்தது. ஆனால் விரைவில் தனது போக்கை மாற்றிக்கொண்டது லீக். அரசாங்கம் வங்கப் பிரிவினையை வாபஸ் வாங்கியது (1911) முஸ்லீம் லீக்குக்குப் பேரிடியாக இருந்தது. அதோடு தேசிய முஸ்லீம் தலைவர்களின் செல்வாக்கு, ஜமைத் உல்லாமா ஹிந்தின் நடவடிக்கைகள் ஆகியவை முஸ்லீம் லீக்கின் நோக்கிலும், போக்கிலும் மாற்றத்தை ஏற்படுத்தின. லீக்கின் அரசியல் அமைப்பில் மாற்றங்கள் செய்யப்பட்டன (1913). தன்னாட்சியே இந்தியாவின் குறிக்கோள் என்பதை லீக் ஏற்றுக் கொண்டது. அதையே காராச்சி காங்கிரஸ் (1913) திரும்ப வலியுறுத்தியது. துருக்கி, இத்தாலிய போரிலும் பால்கன் போரிலும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் போக்கில் அதிருப்தியடைந்த லீக் முஸ்லீம்கள் காங்கிரசுடன் மேலும் நெருக்கமாக வந்தனர். 1916ல் லக்னோ காங்கிரசில் செய்து கொள்ளப்பட்ட காங்கிரஸ்-லீக் உடன்பாட்டில் அவ்விரு அமைப்புக்களுக்கிடையேயான இணக்கம் மேலும் அதிகரித்தது. மூன்றாண்டுகளுக்குப் பின் (1919) ஒத்துழையாமை இயக்கம் துவக்கப்பட்டபோது இந்து-முஸ்லீம் ஒற்றுமை அதன் உச்சகட்டத்தை எட்டியது.

பிரிட்டிஷாரின் பொறுப்பு?

முஸ்லீம் லீக் அமைக்கப்பட்டது பிரிட்டிஷாரின் பிரித்தாளும் கொள்கை (Divide et Impera)க்குக் கிடைத்த முதல் வெற்றி என்று கூறப்படுகிறது. அப்படிக் கூறப்படுவதற்குக் காரணம் அலிகார் கல்லூரியின் முதல்வராக இருந்த

ஆர்ச்பால்டு (Archbuld) என்பவரும், வைஸ்ராய் மிண்டோ பிரபுவின் அந்தரங்கச் செயலராயிருந்த டன்லப் ஸ்மித் (Dunlop Smath) என்பவரும் எடுத்துக் கொண்ட முயற்சியால்தான் ஆகாகான் தலைமையில் முஸ்லீம் தலைவர்களின் தூதுக்குழு வைஸ்ராயை சிம்லாவில் சந்தித்துப் பேசினர். வைஸ்ராய் தூதுக் குழுவின் கோரிக்கைகளுக்கு ஆதரவாக இருந்தார்; அறுபத்து இரண்டு மில்லியன் முஸ்லீம்கள் அரசதுரோக இந்துக்களிடமிருந்து பிரிக்கப்பட்டுவிடுவர் என்பதில் திருப்தியடைந்தார் எனவும் கருதப்படுகிறது.

இதற்கு மாறாக, பிரிட்டிஷாரின் தூண்டுதலால் முஸ்லீம் லீக் தோற்றுவிக்கப்படவில்லை என்று கூறுவோருமுண்டு. இந்து முஸ்லீம்களிடையே நிலவிய அடிப்படையான கலாச்சார, சமய, சமுதாய, வரலாற்று, அரசியல் வேறுபாடுகளின் விளைவே லீக்கின் தோற்றம் என்று கருதப்படுகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலேயே முஸ்லீம்களின் பிரிவினை வாதத்துக்குரிய வித்து ஆழமாக ஊன்றப்பட்டுவிட்டது. அது வேர்விட்டு துளிர்விட்டு முஸ்லிம் லீக் என்ற செடியாக வளர்ந்தது அவ்வளவே. திலகர், பிபின் சந்திர பாலர், லாலா லஜபதிராய், அரவிந்தர் ஆகியோரது தீவிர இந்து சமயச் சார்புடைமை முஸ்லீம் பிரிவினைப்போக்கை ஊக்குவித்தது. வேறுவிதமாகக் கூறவேண்டுமெனில் இந்து ஆதிக்கச் சவாலுக்கான (Challenge) சமாளிப்பே (Response) முஸ்லீம் லீக்கின் தோற்றமாகும். முஸ்லீம் லீக் தோன்றிய அதே ஆண்டு அகில இந்திய இந்து மகாசபையும் அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. எனவே இயல்பாக உருவாகி இருந்த இந்து-முஸ்லீம் முரண்பாட்டையும் மாறுபாட்டையும் பிரிட்டிஷார் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனரேயன்றி அவர்கள் உருவாக்கவில்லை.

Scanned by CamScanner

15. மார்லி-மிண்டோ சீர்திருத்தங்கள், 1909

கோகலே 1906ல் கோரியதைவிட மார்லி சுயாட்சிப் பாதையில் அதிக தூரம் பயணித்துள்ளார்.

- எஸ்.ஏ வால்பெர்ட்

இந்திய வைசிராய் கர்சன் பிரபு (1898-1905) மேற்கொண்ட நடவடிக்கைகள், குறிப்பாக வங்கப் பிரிவினை, சும்மாயிருந்த சங்கை ஊதிக்கெடுத்த கதையாயிற்று! வங்கப் பிரிவினையால் வெகுவாகச் சீற்றமுற்ற வங்காளத் தீவிரவாதிகள் சுதேசி இயக்கத்தைத் துவக்கினர். வங்காளத்திற்கு வெளியேயிருந்த தீவிரவாதிகள் வங்காளிகளின் போராட்டத்தால் எழுச்சியுற்றனர். சுதேசி சாத்வீகப் போராட்டம் அடக்கப்பட்டதால் பயங்காவாதிகள் தேசிய இயக்கத்தில் ஈடுபட்டு அரசியல் கொலைகள் செய்தனர். ஆயுதப் புரட்சியில் இறங்கினர். கர்சன் பிரபுவுக்கு அடுத்து வைசிராயாக வந்த மிண்டோ பிரபு (1905-1910) தீவிரவாதிகளையும், பயங்கரவாதிகளையும் ஒடுக்கத் தீர்மானித்தார். நெருக்கடிச் சட்டம் (1907), வெடி மருந்துச்சட்டம், பத்திரிகைச் சட்ட குற்றச் சட்டம் (1908), இந்தியப் பத்திரிகைச் சட்டம் (1910) ஆகிய சட்டங்களால் பேச்சு, செயல் சுதந்திரத்தை தடை செய்தார்.

அடக்குமுறை

மேற்கண்ட சட்டங்களால் தீவிரவாதிகளும், பயங்கரப் புரட்சிவாதிகளும் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். சுவாமி விவேகானந்தரின் சகோதரரும், 'யுகாந்தர்' பத்திரிகை ஆசிரியருமான பூபேந்திர நாத் தத்தா நீண்டகாலச் சிறைத் தண்டனை பெற்றார். அரவிந்தரும் முஸாபர்பூர் சதி வழக்கில் சம்பந்தப்பட்டுக் (1908) கைது செய்யப்பட்டார். நிரபராதி என்று தீர்ப்பளிக்கப்பட்டாலும் அரவிந்தர் அதிகாரிகளின் தொல்லைகளுக்கு ஆளானார். அரவிந்தர் அரசியலைத் துறந்து, பாண்டிச்சேரி சென்று துறவியானார்! பிபின் சந்திரபாலர் அரச துரோகக் குற்றம் சாட்டப்பட்டு, சிறையிலடைக்கப்பட்டார். போலீஸ் தொல்லை தாங்காது அவரும் அரசியல் துறவறம் பூண்டார்! பாலகங்காதர திலகர் வன்முறையைத் தூண்டிவிட்டார் என்று குற்றம் சாட்டப்பட்டு ஆறாண்டுகள் மாண்டலே சிறையிலடைக்கப்பட்டார். ஆந்திராவின் ஹரிசர்வோத்தமராவும் தமிழ்நாட்டின் வ.உ.சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா, வ.வே.சுப்பிரமணிய ஐயர் ஆகியோரும் சிறைவாசம் சென்றனர். பஞ்சாபி, இந்து சுவராஜ், விஹாரி, இந்தியா, இந்துஸ்தான், வந்தே மாதரம், சந்தியா, யுகாந்தர், கேசரி, ட்ரிபியூன், இந்து, அமிர்த பஸார் பத்திரிகா, பம்பாய் க்ரோனிகிள், ஓரிந்த்வாஸி போன்ற பத்திரிகைகள் தடை செய்யப்பட்டன. இவ்வாறாக தீவிரவாத, பயங்கரவாத எதிர்ப்பு முறியடிக்கப்பட்டது.

சீர்திருத்தங்கள்

தீவிரவாதிகளையும் பயங்கரவாதிகளையும் அடக்கிய ஆங்கிலேய அரசு மிதவாதிகளை ஆதரித்துப் பரிசளித்தது அப்பரிசே மார்லி மிண்டோ சீர்திருத்தங்கள் (Morely - Minto reforms) ஆகும். ஜான்மார்லி இங்கிலாந்து பிரதமர் கிளாட்ஸ்டனது அமைச்சரவையில் இந்திய விவகாரச் செயலராக இருந்தார். மிண்டோ பிரபு இந்திய வைசிராய் மிண்டோவுடன் கலந்தாலோசித்துக் கூறிய சீர்திருத்தங்களின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டதே 1909 ஆம் ஆண்டு இந்தியக் கவுன்சில் சட்டமாகும். மத்திய மாநிலச் சட்ட மன்றங்கள், வங்காளம், பம்பாய், சென்னை ராஜதானிகளின் கவர்னர்களின் ஆட்சிக் குழுக்கள் ஆகியவற்றின் உறுப்பினர்களது எண்ணிக்கை உயர்த்தப்பட்டன. மாநில சட்ட மன்றங்களில் அரசாங்கச் சார்பற்ற பிரதிநிதிகள் பெரும்பான்மையினராக இருப்பதற்கு வழி வகுக்கப்பட்டது. அதிலும் அரசாங்க சார்பற்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான ஏற்பாடு முதன்முறையாகச் செய்யப்பட்டது. சட்டமன்ற உறுப்பினர்கள் வரவுசெலவு திட்டத்தை விவாதிக்கும் உரிமையையும் துணைக் கேள்விகள் எழுப்பும் உரிமையையும் பெற்றனர். சட்டமன்ற நடவடிக்கைகளும் விரிவுபடுத்தப்பட்டன. இளவாரிப் பிரதிநிதித்துவ முறை ஏற்றுக் கொள்ளப்பட்டது. முஸ்லீம்களுக்குத் தனித்தொகுதிகள் பிரித்துக் கொடுக்கப்பட்டன. சட்ட மன்றங்களிலும் பொதுப் பணியிலும் அவர்களுக்கு இடஒதுக்கீடு செய்யப்பட்டது.

சிறப்பு

மார்லி-மிண்டோ சீர்திருத்தங்கள் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டு வராவிட்டாலும் இந்தியா சுயாட்சியை அடைவதற்கான முதல்கட்டத்தை அடைந்தது என்கிறார் ராலின்சன் (Rawlinson). கோகலே 1906ல் மார்லியைக் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இந்திய சுயாட்சிக்கான சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன எனக் கருதினார் லால்பெர்ட் (L.S.Walpert). 1909 கவுன்சில்கள் சட்டம் 1892 சட்டத்தை விடச் சிறந்தது என்பதில் ஐயமில்லை. உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் ஜனநாயக முறைக்கு அங்கீகாரம் கிடைத்துவிட்டது. அவர்கள் பெற்ற சட்டமன்ற உரிமைகளும் முக்கியமானவையே. கே.ஜி. குப்தே (K.G.Gupte)யும், சையது ஹுசைன் பில்கிராமி (Syed Hussain Bilgrami)யும் இந்திய விவகாரச் செயலர் ஜான் மார்லியின் குழுவில் இடம் பெற்றனர். அதேபோன்று ஹெச்.பி. சின்ஹா வைசிராயின் ஆட்சிக் குழுவில் அமர்த்தப்பட்டார். சுருங்கக்கூறின் மார்லி-மிண்டோ சீர்திருத்தங்கள் அதிகார வர்க்கத்துக்கும் ஜனநாயகத்துக்கும் செய்து வைக்கப்பட்ட திருமணமாகும்!

குறைபாடுகள்

மார்லி-மிண்டோ சீர்திருத்தங்களில் பல குறைபாடுகள் இருந்தன. அவை இந்தியாவில் பாராளுமன்ற முறையை ஏற்படுத்தத் தவறிவிட்டன. வாக்குரிமை விரிவாகவும், ஒரே மாதிரியாகவும் வழங்கப்படவில்லை. கற்றோரைவிடப் பணம்படைத்தோரே அதனால் அதிகப் பயனைப் பெற்றனர். தேர்வுமுறையும் நியமன முறையும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு நின்றன. உறுப்பினர்கள் பெற்ற சட்டமன்ற உரிமைகள் யானைப் பசிக்கு சோளப் பொரி போட்டது போலிருந்தது.

Scanned by CamScanner

அலை இந்தியர்களுக்குச் செல்வாக்கைக் கொடுத்தனவேயன்றி, அதிகாரங்களை வழங்கவில்லை. இந்தியா மக்கள் பிரதிநிதிகளால் ஆளப்படுகின்றது என்ற மாயையை ஏற்படுத்தியதேயன்றி உண்மையான பொறுப்பாட்சியை ஏற்படுத்தவில்லை. இச்சீர்திருத்தங்களுக்குப் பின்னரும் மாநிலங்கள் மத்திய அரசாங்கத்தின் கைப்பாவைகளாகவே இருந்தன. அதிகாரவர்க்கம் கொண்டு வந்த விதிமுறைகள் சீர்திருத்தச் சட்டத்தின் சாரத்தைச் சத்தற்றதாக்கிவிட்டன. இச்சீர்திருத்தங்கள் சுயாட்சிக்கான கோரிக்கையை எவ்விதத்திலும் குறைக்கவில்லை என்கிறார் ஏ.பி.கீத் (A.B Keith) முஸ்லீம்களுக்குத் தனித்தொகுதிகள் வழங்கியது 1909 ஏற்பாட்டின் மிகப் பெரிய தடையை ஏற்படுத்திவிட்டது என்று எழுதியுள்ளார் ஜவகர்லால் நேரு. அந்தச் சலுகை 'பண்டோராவின் பெட்டியைத்' திறந்துவிட்டது போலாகிவிட்டது! பிற சிறுபான்மை வகுப்பாரும் அத்தகைய சலுகையைத் தங்களுக்கும் வழங்க வேண்டுமெனக் கேட்கத் துவங்கினர். முஸ்லீம்களுக்கு அளிக்கப்பட்ட அச்சிறு துளிச் சலுகை பெருவெள்ளமாகிப் பாகிஸ்தான் பிரிவினைச் சக்திகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

சீர்திருத்தத்தின் தோல்வி

இந்திய தேசிய இயக்கத் தலைவர்களின் எதிர்பார்ப்புகள் இச்சீர்திருத்தங்களாலும் அவை செயல்பட்ட விதத்தாலும் ஏமாற்றங்களாயின. கற்றோருக்கு சட்ட மன்றங்களில் போதிய இடங்கள் கிடைக்கவில்லை. பொதுப்பணியில் மேல்நிலைப் பதவிகள் கிடைக்காமையால் பட்டதாரிகள் வெறுப்படைந்தனர். அதிகாரத்தில் போதிய பங்கு கிடைக்கவில்லையேயென்று மிதவாதிகளே கோபமுற்றனர். இந்தியர்களால் பொறுப்பற்ற எதிர்க்கட்சியாகச் செயல்பட முடிந்ததேயொழிய அரசாங்கக் கொள்கைகளை வகுத்தளிக்கும் பொறுப்புமிக்க மக்கள் பிரதிநிதிகளாக இயங்க இயலவில்லை. மிதவாதிகள், தீவிரவாதிகள் என்ற வேறுபாடின்றிக் காங்கிரஸ்காரர்கள் அனைவரும் முஸ்லீம்களுக்குத் தனித்தொகுதி கொடுக்கப்பட்டதை மன்னிக்கத் தயாராயில்லை. கோகலே, சுரேந்திரநாத் பானர்ஜி, மதன்மோகன் மாளவியா, மோதிலால் நேரு போன்றவர்கள் முஸ்லீம்களுக்கு வழங்கப்பட்ட அச்சலுகையைச் சந்தேகத்துக்கிடமின்றிச் சாடினாகள். இந்திய ஒற்றுமைக்கு உலை வைத்துவிட்ட சாத்தானின் செயலாக அவர்கள் கருதினார்கள். முஸ்லீம்கள் காங்கிரசின் தயவை எதிர்பாராமல் நேரடியாக அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு தங்களது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்ற துணிவை அவர்களுக்குக் கொடுத்தது. தீவிரவாத இந்துக்களும் தனியே பிரிந்து தங்களது நலன்களை உறுதிசெய்து கொள்ளும் முயற்சியில் ஈடுபடத் துவங்கினர். மார்லி-மிண்டோ சீர்திருத்தங்கள் இந்து-முஸ்லீம் இனவேறுபாட்டை ஊக்குவிக்கும் அரசியல் சூதாட்டமாயிற்று. எனவே காங்கிரஸ் இச்சீர்திருத்தங்களை முழுமூச்சுடன் எதிர்த்தது. அதனால் அவை தோல்வியுற்றன. அத்தோல்வியே இந்திய தேசிய இயக்கம் மேலும் தீவிரமாக வளர்வதற்கு வழி செய்தது.

மூன்றாம் தர்பார், 1911

மார்லி-மிண்டோ சீர்திருத்தங்கள் தோல்வியடைந்தது பற்றி பிரிட்டிஷ் அரசு கவலை கொண்டது. வங்கப் பிரிவினை வங்காளிகளின் தேசிய இயக்கத்தின் முதுகெலும்பை முறிப்பதற்குப் பதில் பிரிட்டனுக்கும் இந்திய தேசியத் தலைவர்களுக்குமிடையே உள்ள தொடர்பில் குத்தப்பட்ட முள்ளாகவே இருந்தது. எனவே வருத்தத்தையும் வலிமையையும் கொடுத்துக் கொண்டிருந்த இந்த முள்ளை நீக்கிவிட நினைத்தது பிரிட்டிஷ் அரசு. அதற்கான வாய்ப்பை டில்லி தர்பார் நல்கியது. ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் இந்தியப் பேரரசராக முடிசூட்டிக் கொள்வதற்காக டில்லியில் ஏற்பாடு செய்யப்பட்ட தர்பாரில் (1911 டிச.15) மன்னர் இரண்டு முக்கிய அறிவிப்புகளைச் செய்தார். ஒன்று, வங்கப் பிரிவினையை இரத்துச் செய்தது. இரண்டாவது, இந்தியத் தலைநகரை கல்கத்தாவிலிருந்து டில்லிக்கு மாற்றியது.

வங்கப் பிரிவினை இரத்து செய்யப்பட்டதன் மூலம் கர்சன் பிரபு இந்திய தேசிய இயக்கத்திற்கு ஏற்படுத்திய தடை நீக்கப்பட்டது. காங்கிரசும் போக்கப்பட்டது. தீவிரவாதிகளுக்கும் அவர்கள் நடத்திய சாத்வீகப் போராட்டமான சுதேசி இயக்கத்திற்கும் கிடைத்த மாபெரும் வெற்றி அது. ஆனால் முஸ்லீம்கள் ஆங்கிலேயர்கள் தங்களை ஏமாற்றிவிட்டதாக எண்ணிக் கோபமுற்றனர். திடீரென உருவாக்கப்பட்ட இஸ்லாமிய மாநிலம் திடீரென மறைந்தது. முஸ்லீம்கள் இந்திய தேசிய நீரோட்டத்திலிருந்து அந்நியப்பட்டுப் போனார்கள். இதனால் ஏற்பட்ட பகை உணர்ச்சி பின்னர் பயங்கர விளைவுகளை ஏற்படுத்தின. இதேபோன்று தலைநகரை கல்கத்தாவிலிருந்து டில்லிக்கு மாற்றியது வங்காளிகளின் வெறுப்பைத் தேடித் தந்தது. வைசிராய் ஹார்டிஞ்ச பிரபு வெற்றிப் பெருமிதத்தோடு புதிய தலைநகரான டில்லிக்குள் நுழைந்தபோது ராஜ் பிஹாரி போஸ் அவர்மீது வெடிகுண்டு வீசினார் (1912 டிச. 23).

Scanned by CamScanner

16. முதல் உலகப்போரும் சுயாட்சி இயக்கமும், 1914-1918

உயிர் மூச்சு உள்ளவரை சுதந்திரக் கொடியை உயர்த்திப் பிடியுங்கள்! வாழ்ந்து விடுதலையைப் பெற முடியாவிடில் அதை இறந்தாவது வெற்றி கொள்ளுங்கள்.

- அன்னிபெசண்ட்

போருக்கு ஆதரவு

முதல் உலகப் போர் 1914 ஆண்டு ஆகஸ்ட்-செப்டம்பரில் ஆரம்பித்தது. அந்த நெருக்கடியான நேரத்தில் இந்தியா இங்கிலாந்தை ஆதரித்தது. சென்னையில் கூடிய காங்கிரஸ் கூட்டத்திற்குத் (1914) தலைமை தாங்கிய சர் சத்யேந்திர சின்ஹா இந்தியா இங்கிலாந்துடன் தோளோடு தோள் நின்று போரிடுவதைப் பற்றிப் பெருமைப்படுவதாகப் பேசினார். காங்கிரஸ் பிரிட்டனுக்கு விசுவாசத்துடன் இருப்பதாகத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. ஒவ்வொரு இந்தியரும் தன்னாலியன்ற அளவுக்கு அரசாங்கத்தை ஆதரிக்க வேண்டுமென்று தீவிரவாதிகளின் தலைவரான திலகர் கேட்டுக் கொண்டார். மிதவாதிகளின் போர் ஆதரவு அபரிமிதமாக இருந்தது. சோதனைக் காலத்தே பிரிட்டனோடு ஒத்துழைப்பது இந்தியாவின் கடமையென இங்கிலாந்திலிருந்த மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி கருதினார்.

பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட இந்திய வீரர்கள் உலகின் பல்வேறு போர்க் களங்களிலும் போரிட்டனர். அவ்வீரர்களுக்கான செலவுகள் அனைத்தையும் இந்திய அரசே ஏற்றது. போர்ப் பிரச்சாரமும் பட்டாளத்துக்கு ஆட்சேர்க்கும் முயற்சியும் மக்களிடையே மிகுந்த உற்சாகத்தை ஏற்படுத்தின. மக்கள் சுயநம்பிக்கையும் சுயமரியாதை உணர்வும் பெற்றனர். அவர்களிடையே அரசியல் விழிப்புணர்வு அதிகரித்தது. தங்களுடைய ஆதரவு பிரிட்டனுக்கு தேவையாக இருப்பதை எண்ணி மக்கள் பெருமைப்பட்டனர். தொழில் வளர்ச்சி அதிகரித்ததால் தொழிலதிபர்கள் காங்கிரசுக்கு அதிகமாக நிதியுதவி செய்ய முடிந்தது. மேலும் சலுகைகளை எதிர்பார்த்து மிதவாதிகள் முதல் உலகப் போருக்கு ஆதரவளித்தனர். தங்களது சுயாட்சிக் கோரிக்கைக்கு பிரிட்டன் செவிமடுத்தால் தீவிரவாதிகள் போர் முயற்சிக்கு ஆதரவு கொடுக்கத் தயாராக இருந்தனர். பிரிட்டனுக்கேற்பட்ட நெருக்கடியை பயன்படுத்திக் கொண்டு ஆயுதப் புரட்சி செய்து விடுதலை பெற்றுவிடலாம் என்று பயங்கரவாதிகள் எண்ணியிருந்தனர். போரால் மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே

இருந்த இடை வெளி குறைந்ததால் தீவிரவாதிகள் காங்கிரசைக் கைப்பற்றி இந்திய விடுதலை போராட்டத்தை வேகமாக நடத்த வழி ஏற்பட்டது.

சுயாட்சி இயக்கம்

சுயாட்சி

1914ஆம் ஆண்டு அயர்லாந்து சுயாட்சி சட்டம் (Irish Home Rule Act) நிறைவேற்றப்பட்டு அயர்லாந்து விடுதலை பெற்றது. சுயாட்சி (Home Rule) என்ற சொல்லால் கவரப்பட்ட அன்னிபெசண்ட் அம்மையார் அச்சொல்லையே இந்திய தேசிய போராட்டத்தின் தாரக மந்திரமாகப் பயன்படுத்திக் கொள்ள விரும்பினார். அயர்லாந்து விடுதலைப் போராட்ட வீரர்களின் உயிர் மூச்சாக இருந்ததோடு மட்டுமல்லாது, அச்சொல் ஆங்கிலேயர்களுக்கு நன்கு அறிமுகமான சொல்லுமாகும். பிரிட்டானியப் பேரரசுக்குட்பட்ட சுயாட்சியை அது குறித்தது. சுயராஜ்யம் (Swaraj) என்ற சொல் பிரிட்டானியப் பேரரசிலிருந்து இந்தியா பிரிந்து செல்வதைக் குறிப்பதாக ஆங்கிலேயர்கள் கருதக்கூடும் என்றெண்ணிய அன்னிபெசண்ட் 'சுயாட்சி' என்ற சொல்லையே பயன்படுத்தினார்.

பெசண்டின் பங்கு

முதல் உலகப்போர் துவக்கப்படுவதற்கு முன்பே இங்கிலாந்திலிருந்த அன்னிபெசண்ட் இந்தியா சுயாட்சி பெறுவதற்கான முயற்சியை மேற்கொண்டார். பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் 'இந்தியக் கட்சி' (Indian Party)யை உருவாக்க முனைந்தார். இலண்டனில் 'சுயாட்சி சங்கம்' (Home Rule League) ஒன்றைத் துவக்கினார். இந்தியா திரும்பிய அம்மையார் 'சென்னை ஸ்டான்டர்டு' (Madras Standard) என்ற பத்திரிகையை வெளியிட்ட நிறுவனத்தை விலைக்கு வாங்கி, அப்பத்திரிகைக்கு 'நியு இந்தியா' (New India) என்று மாற்றம் செய்து, சுயாட்சி பற்றிய தனது கருத்துக்களை வெளியிட்டார் (1914 ஜூன்). மிதவாதிகளையும் தீவிரவாதிகளையும் ஒன்று சேர்க்கும் முயற்சியில் வெற்றிபெற முடியாமையால் அன்னிபெசண்ட் தன் சுயாட்சி சங்கம் அமைப்பது பற்றிய விருப்பத்தை வெளியிட்டார். சுயாட்சி பற்றிய தீர்மானமொன்றைப் பம்பாயில் கூடிய காங்கிரசில் கொண்டு வந்தார் (1915 டிசம்பர்). ஆனால் அத்தீர்மானம் நிராகரிக்கப்பட்டது!

திலகரின் சுயாட்சி சங்கம்

மாண்டலே சிறையிலிருந்து விடுதலை பெற்று வந்த திலகர் (1914 ஜூன் 16) தனது ஆதரவாளர்களைக் கொண்டு மாநிலக் கூட்டமொன்றைக் கூட்டி (1915 மே) 'தேசிய சங்கம்' ஒன்றை அமைக்கும் தனது திட்டத்தைப்பற்றி விவாதித்தார். 1916 ஏப்ரல் 23ஆம் நாள் திலகர் சுயாட்சி சங்கத்தை (Home Rule League) துவக்கினார். பூனா அதன் தலைமையகமாயிற்று. இந்தியாவுக்கு சுயராஜ்யத்தைப் பெற்றுத் தருவதே அச்சங்கத்தின் குறிக்கோள். அன்னிபெசண்ட் அம்மையாரின் பாதிப்பால் திலகர் தான் துவக்கிய சங்கத்துக்கு சுயராஜ்ய சங்கம் என்று பெயர் சூட்டாது 'சுயாட்சி சங்கம்' என்றே பெயரிட்டார்!

Scanned by CamScanner

அகில இந்திய சுயாட்சி சங்கம்

அதே ஆண்டு செப்டம்பர் 3ஆம் நாள் அன்னிபெசன்ட் அம்மையார் சென்னை கோகலே மண்டபத்தில் தனியே ஒரு சுயாட்சி சங்கத்தைத் தோற்றுவித்தார். அடையாறு அதன் தலைமையகமாயிற்று. அச்சங்கத்தின் நோக்கங்களாவன:

1. சட்டரீதியான முறைகளை மேற்கொண்டு இந்தியாவுக்குச் சுயாட்சியைப் பெற்றுத் தருதல்;
2. சுயாட்சி பெற்ற பின்னரும் பிரிட்டிஷ் பேரரசுடன் தொடர்பு கொண்டிருத்தல்;
3. காங்கிரசை ஆதரித்துப் பலப்படுத்தல்;
4. இந்தியாவுக்குச் சுயாட்சி வேண்டியதன் அவசியம் பற்றித் தொடர்ந்து பிரச்சாரம் செயதல்.

திலகரும் பெண்டும் தனித்தனியே சுயாட்சிச் சங்கங்களைத் துவக்கியதேன்? சுயராஜ்யம், சுயாட்சி பற்றிய கருத்து மாறுபாடு கொண்டவர்கள் இருதரப்பிலும் இருந்தனர். எனவே அவர்கள் அனைவரையும் தேசிய இயக்கத்தில் ஈடுபடவைக்கவே இரு சங்கங்களையும் ஆரம்பித்து இருவரும் இணைந்து போராடுவதென முடிவு செய்ததாக அன்னிபெசண்ட் விளக்கமளித்தார்.

சுயாட்சிப் போராட்டம்

திலகர் வடஇந்தியாவில் இந்திய சுயாட்சிக்காகத் தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டதைப் போன்று அன்னிபெசண்ட் அம்மையார் தென்னிந்தியாவில் சுறாவளிச் சுற்றுப்பயணம் செய்தார். ஆந்திரப் பகுதியில் மட்டும் சுயாட்சிச் சங்கத்தின் ஐம்பது கிளைகள் துவக்கப்பட்டன. சென்னை ராஜ்யத்தின் வட்டாரப் பகுதிகளுக்கெல்லாம் சுயாட்சி இயக்கம் பரவியது. மிதவாதிகளும் இவ்வியக்கத்தை ஆதரித்தனர்! ஏராளமான பிரகரங்கள் வெளியிடப்பட்டன. பொதுக்கூட்டங்களில் இந்தியாவுக்கு சுயாட்சிகோரி சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. சென்னையில் புகைவண்டியில் ஐரோப்பியர்களுக்கென தனியே ஒதுக்கீடு செய்வதை எதிர்த்து மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர் (1916 ஜூலை 24). கோட்டை புகைவண்டி நிலையத்தில் மாணவர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. சென்னை கவர்னர் பெண்ட்லண்டு பிரபு (Lord Pentland) அதிர்ச்சியடைந்தார். சுயாட்சி இயக்கம் மக்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்றது. முதல் உலகப்போரின்போது காங்கிரஸ் முடங்கிக் கிடந்தபோது திலகரும், அன்னிபெசண்ட் அம்மையாரும் இந்திய தேசிய இயக்கத்தின் இரட்டைக் குழல் துப்பாக்கியாக இருந்து முழக்கமிட்டனர்.

உலகப் போரில் மூழ்கிக் கிடந்த பிரிட்டன் இந்தியாவில் சுயாட்சி இயக்கம் காட்டுத்தீ போல பரவுவதைக்கண்டு பதட்டமடைந்தது. அவ்வியக்கத்தை அடக்கத் தீர்மானித்தது. சுயாட்சிச் சங்கக் கூட்டங்களுக்குச் செல்லக்கூடாது

என்றும் மாணவர்கள் தடை செய்யப்பட்டனர். சட்டத்தை மீறுவோர் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். விரும்பத்தகாத அந்நியர்கள் இந்தியாவினுள் நுழையாமல் தடுக்கப்பட்டனர். சுயாட்சி பற்றிய பிரச்சாரம் கட்டுப்படுத்தப்பட்டது. பத்திரிகைக் கருத்துரிமை பறிக்கப்பட்டது. திலகர்மீது அரசத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டது. நன்னடத்தைக்காக அவரிடமிருந்து ரூ.20,000 பணையப் பணமாகக் கோரப்பட்டது. திலகரும், பெசண்டும் பஞ்சாபுக்குள் செல்ல தடை செய்யப்பட்டனர்.

'புதிய இந்தியா'வில் அரச விரோதக் கட்டுரைகள் எழுதினார் எனக் குற்றம் சுமத்தி அன்னிபெசண்ட் அம்மையாரை ரூ.2000 பாதுகாப்புப் பணமாகக் கட்டுமாறு கட்டளையிட்டது சென்னை அரசு. கட்டப்பட்ட அத்தொகையை பறிமுதல் செய்துகொண்டு மேலும் ரூ.10,000 கட்டுமாறு பணித்தது. அத்தொகையையும் கட்டினார் பெசண்ட். சென்னை அரசின் அக்கிரமத்தை இந்தியாவில் பலரும் கண்டித்தனர். மாளவியா, சாப்ரு, சிந்தாமணி, ஜின்னா போன்றோர் அரசாங்க அடக்குமுறையைக் கடுமையாக எதிர்த்தனர். சென்னை ராஜதானியின் பல இடங்களில் கண்டனக் கூட்டங்கள் போடப்பட்டன. 'புதிய இந்தியா பாதுகாப்பு நிதி' திரட்டப்பட்டது. அரசுக்கெதிராக அன்னிபெசண்ட் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தார். வெற்றி பெறவில்லை. ஆனால் அவ்வழக்கு அவருக்கு மாபெரும் விளம்பரத்தைத் தேடித் தந்தது. பெசண்டும் அவரது இரு சகாக்களான அருண்டேலும், வாடியாவும் ஊட்டியில் காவலில் வைக்கப்பட்டனர். அது எரியும் நெருப்பில் எண்ணெயை வார்த்தது போலாயிற்று. இந்தியா முழுவதிலும் எதிர்ப்பு எழுந்தது. பொதுமக்களின் சீற்றத்துக்குத் தலைவணங்கி அவர்களை விடுவித்தது சென்னை அரசு. 1917ல் அன்னிபெசண்ட் அம்மையார் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்திய விவகாரச் செயலர் மாண்டேகுவின் ஆகஸ்டு பிரகடனத்துக்குப் பின் சுயாட்சி இயக்கம் செல்வாக்கிழந்தது.

சாதனைகள்

சுயாட்சி இயக்கம் பல சாதனைகளை ஏற்படுத்தியது.

1. இந்திய தேசிய இயக்கத்துக்கு ஒரு புதிய பாதையை காட்டியது சுயாட்சி இயக்கம். 'சுயாட்சி' என்ற தெளிவான, திட்டவட்டமான செயல்திட்டத்தை நாட்டுக்களித்தது.

2. கோகலே, பெரோஷா மேத்தா போன்ற அரசியல் மேதைகள் இல்லாத குறையைநீக்கி, காங்கிரஸ் பிளவுபட்டதால் ஏற்பட்ட பலவீனத்தைப்போக்கி, ஆங்கிலேய ஆட்சிக்கு ஒருமித்த எதிர்ப்பைக் கொடுத்தது சுயாட்சி இயக்கம்.

3. இவ்வியக்கம் யாசகப் போக்கை விடுத்து, பிரச்சார, பத்திரிகைகள் சுதந்திர, நீதிமன்றப் போராட்டத்தில் இறங்கியது. பேச்சுச் சுதந்திரத்துக்காகத் திலகர் மேற்கொண்ட பிரச்சாரமும் பத்திரிகை சுதந்திரத்துக்காக பெசண்ட் தொடுத்த வழக்கும் சுயாட்சிக்கு சாதகமாக பொதுமக்கள் கருத்து உருவாகக் காரணமாயிருந்தன.

Scanned by CamScanner

4. இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் இந்திய சுயாட்சிக்கு ஆதரவைத் தேடித் தந்தது இவ்வியக்கம். 1918 செப்டம்பரில் திலகரே இங்கிலாந்துக்கு ஒரு தூதுக்குழுவை அழைத்துச் சென்றார். அமெரிக்காவில் லாலா லஜபதி ராய், ஹார்திகர், கே.டி.சாஸ்திரி போன்றோர் சான்பிரான்சிஸ்கோவில் சுயாட்சி சங்கத்தின் கிளையைத் துவக்கிப் பல அமெரிக்கர்களின் ஆதரவைப் பெற்றனர்.

5. இந்தியர்களை அதிகமாக நிர்வாகத்தில் பங்குபெறச் செய்து தன்னாட்சி நிறுவனங்களை வளர்ப்பது பற்றிய மாண்டேகுவின் ஆகஸ்டு பிரகடனம் வெளியிடப்படுவதற்குச் சுயாட்சிப் போராட்டம் பெரிதும் காரணமாயிருந்தது.

6. மக்களின் அமோக ஆதரவைப் பெற்ற திலகரும், பெசண்டும் காங்கிரசைக் கைப்பற்றினர்.

7. அன்னை ராஜதானி சுயாட்சி இயக்கத்தின் மையமாயிற்று. அன்னிபெசண்ட் தேசிய இயக்கத்துக்குப் புதிய உந்து சக்தியைக் கொடுத்தார். தனி ஆந்திர மாநிலம் அமைவதற்கான உணர்வை அவர் ஏற்படுத்தினார்.

8. திலகரின் தியாக வாழ்க்கையின் பெருமைக்குரிய தொண்டாகத் திகழ்ந்தது சுயாட்சி இயக்கம். சுயராஜ்யம் பிறப்புரிமையை நிலை நாட்டியது சுயாட்சிச் சங்கம். திலகர் விதைத்தார். காந்தி பின்னர் அறுவடை செய்தார்.

மீண்டும் ஒன்று கூடிய காங்கிரஸ், 1916

சூரத் பிளவு (1907)க்குப் பின்னர் காங்கிரஸ் கோட்டை இரண்டுபட்டது. மிதவாதிகளும், தீவிரவாதிகளும் மீண்டும் ஒன்று சேரவே விரும்பினர். எனினும் திலகரும், கோகலேயும் மேற்கொண்ட ஒற்றுமை முயற்சிகள் வெற்றி பெறவில்லை. திலகர் சிறையிலிருந்தபோது தீவிரவாதிகள் செயலிழந்து நின்றனர். மிதவாதிகள் சக்தியற்றுப் போயினர். ஹீயூமும் பிற தேசியவாதிகளும் கட்டிக்காத்த காங்கிரஸ் சிதறிப்போவது கண்டு கோகலே கலங்கினார். ஒரே ஆண்டில் கோகலேயும் (1915 பிப்.19), பெரோஸ்ஷா மேத்தாவும் (நவம்பர்) மறைந்தனர். காங்கிரஸ் குறைக்கேட்டையாகி (Rum up) விட்டதேயென்று லாலா லஜபதி ராய் வருந்தினார். தீன்ஷா வாச்சா, சுரேந்திரநாத் பானர்ஜி, மாளவியா, சீனிவாச சாஸ்திரி போன்றோரால் அவர்களது இடங்களை நிரப்ப இயலவில்லை. காங்கிரஸ் 'தளபதி இல்லாத பட்டாளம்' போல் இருந்ததாக குறிப்பிட்டுள்ளார் பட்டாபி சீத்தாராமய்யா.

லக்னோ காங்கிரஸ், 1916

1916 டிசம்பர் மாதம் அம்பிகா சிரண் மஜூம்தார் தலைமையில் காங்கிரஸ் கூட்டம் லக்னோவில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் திலகர் மற்றும் அன்னிபெசண்ட் அம்மையார் தலைமையில் தனித்தனியே செயல்பட்டு வந்த சுயாட்சிக் கட்சியினர் முறைப்படி காங்கிரசில் சேர்ந்தனர். 1916ல் மாண்டலே சிறையிலிருந்து விடுதலையான திலகர் மக்களிடையே மிகுந்த செல்வாக்கு

பெற்றிருந்தார் காங்கிரஸ் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய மஜூம்தார் இட்டத்தட்ட பத்து ஆண்டுகால அரசியல் வனவாசத்துக்குப் பிறகு இவர்கள் மீண்டும் காங்கிரஸ் பேரியக்கத்தில் பங்கேற்பதை மனநிறைவோடு வரவேற்றார். திலகரும், அன்னிபெசண்ட் அம்மையாரும் ராஷ்பிகாரி கோஷ், சுரேந்திரநாத் பானர்ஜி ஆகியோருடன் ஒரே மேடையில் வீற்றிருந்தது கண்கொள்ளாக் காட்சியாகும்.

காங்கிரஸ் கூட்டம் நடைபெற்ற இடத்துக்கு அருகாமையிலேயே முஸ்லீம் லீக்கின் கூட்டமும் கூடியது. 1916ம் ஆண்டு முஸ்லீம் லீக்கில் தலைமைப் பொறுப்பேற்ற முகமது அலி ஜின்னா அக்கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார். அந்த காலகட்டத்தில் ஜின்னா அகில இந்திய கண்ணோட்டத்தோடு சமயச்சார்பற்ற நாட்டுப்பற்றுமிக்க தேசியவாதியாக இருந்தார். தன்னைப்போன்றே பிற முஸ்லீம் தலைவர்களையும் சமயச் சார்பற்ற மனப்பான்மையுடையவர்களாக மாற்ற முனைந்தார்.

காங்கிரஸ் கூட்டமும் முஸ்லீம் கூட்டமும் லக்னோவில் தனித்தனியே நடைபெற்றதாலும் இரு இயக்கத் தலைவர்களும் இக்கூட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. காங்கிரசும் முஸ்லீம் லீக்கும் ஒரே மன அலை வரிசையில் இருந்தது எனக் கூறலாம். காங்கிரசில் இணைந்த திலகர் காங்கிரசையும் முஸ்லீம் லீக்கையும் ஒருங்கிணைக்கும் பணியில் முனைப்புடன் செயல்பட்டார். இந்து முஸ்லீம் ஒற்றுமையின்மூலமே இந்திய விடுதலையைப் பெற முடியும் என்று கருதிய திலகர் அம்முயற்சியில் இறங்கினார். "இந்திய இந்துக்களின் பிரதிநிதியாகக் கூறுகிறேன். எதிரியோடு போரிடும்போது அனைவரும் இன, மத, அரசியல் வேறுபாடின்றி ஒன்றுபட்டுப் போராட வேண்டியதுதான் முக்கியம்" என்று கூறினார் திலகர். பெரும்பான்மையினரின் மேலாதிக்கம் பற்றிய சிறுபான்மையினரின் அச்சத்தைப் போக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். லக்னோ உடன்பாடு ஏற்படுவதற்கு திலகர் பெரிதும் காரணமாக இருந்தார்.

முக்கியத்துவம்

லக்னோ காங்கிரஸ் பன்முறை முக்கியத்துவம் வாய்ந்தது: 1. திலகரின் சுயாட்சி இயக்கத்தினர் காங்கிரசில் மீண்டும் சேர்ந்து தங்களது செல்வாக்கை நிலைநாட்டிக் கொள்வதற்கான வாய்ப்பைப் பெற்றனர் 2. இந்திய சுயாட்சியைப் பெறுவதற்காக மேலும் அதிகமான அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் இன்றியமையாதது என்று இக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது 3. காங்கிரசின் தீர்மானங்களையும் திட்டங்களையும் அன்றாட நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்து நடைமுறைப்படுத்துவதற்காக ஒரு செயற்குழு (Working Committee)வை அமைக்க வேண்டும் என்ற கருத்தைக் கூறினார் திலகர். அக்கருத்தை அப்போது மிதவாதிகள் ஏற்காவிட்டாலும் நான்காண்டுகள் கழித்து (1920) அதற்கு செயல்வடிவம் கொடுத்தார் காந்தி 4. காங்கிரஸ் பிரதிநிதிகள் சிறப்பு ரயிலில் சென்று ஆண்டுக் கூட்டத்தில் கலந்து கொள்ளும்வழக்கம் இந்தக்

Scanned by CamScanner

கூட்டத்திலிருந்துதான் ஆரம்பித்தது 5. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சர்வைக்குரிய காங்கிரஸ் முஸ்லீம் லீக், லக்னோ உடன்பாடு ஏற்பட்டது இந்த கூட்டத்தில் தான் 6. லக்னோ காங்கிரஸ் காலனி ஆட்சியாளர்களின் பிற்போக்கை இளப்பியது. அன்னிபெசண்ட் அம்மையாரும் அவரது சகாக்களும் கைது செய்யப்பட்டனர். அதனால் நாடு தழுவிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. விடுதலைப் போராட்டம் புத்தூக்கம் பெற்றது.

லக்னோ உடன்பாடு

லக்னோ காங்கிரஸின் மாபெரும் சாதனை இந்திய அரசியல் சீர்திருத்தங்கள் பற்றி காங்கிரசுக்கும் முஸ்லீம் லீக்குக்குமிடையே ஏற்பட்ட உடன்பாடாகும். இதுவே காங்கிரஸ் லீக் திட்டம் (Congress League Scheme) அல்லது லக்னோ உடன்பாடு (Lucknow Pact) என்றழைக்கப்படுகிறது. இவ்வுடன்பாட்டின் விதிகளாவன.

இந்தியா பிரிட்டிஷ் பேரரசின் சுயாட்சி பெற்ற நாடாக வேண்டும்; பல்வேறு மன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவோர் மொத்த எண்ணிக்கையில் ஐந்தில் நான்கு பகுதி இருத்தல் வேண்டும்; தேர்ந்தெடுக்கப்பட்டு அமைக்கப்படும் நிறுவனங்களில் சிறுபான்மையினருக்கும் போதிய தனிப்பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டும்; ஒரு இனத்தை பாதிக்கக்கூடிய தீர்மானத்தை எந்த அரசாங்கச் சார்பற்ற உறுப்பினரும் கொண்டு வரக்கூடாது; கவர்னரால் இரத்து செய்யப்படாத ஒவ்வொரு மசோதாவும் நிறைவேற்றப்படல் வேண்டும்; நிதி விவகாரங்களைக் கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டும்; வைசிராய்க்கும், கவர்னருக்கும் வெட்டதிகாரம் (Veto Power) கொடுக்கப்படலாம்; வைசிராயின் ஆட்சி குழுவின் உறுப்பினர்களில் பாதி பேர் மத்தியச் சட்ட மன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாயிருத்தல் அவசியம்; மாநிலங்களுக்கு அதிக தன்னாட்சியுரிமை வழங்கப்படல் வேண்டும்; மத்தியச் சட்டமன்ற உறுப்பினர் எண்ணிக்கை 150 ஆக உயர்த்தப்பட்டு, அதில் மூன்றில் ஒரு பகுதியினர் முஸ்லீம் பிரதிநிதிகளாக இருத்தல் வேண்டும்; இந்திய விவகாரச் செயலரின் 'இந்திய கவுன்சில்' கலைக்கப்படல் வேண்டும்; பிரிட்டிஷ் பேரரசுக்குள் இந்தியர் பிறருக்குச் சமமாக நடத்தப்படல் வேண்டும்; பேரரசு சம்பந்தமான விஷயங்களை விவாதிக்கும் அமைப்புகளில் இந்தியருக்குச் சமவாய்ப்பளிக்க வேண்டும்; இராணுவ, கடற்படைப் பணிகளுக்கு இந்தியர்கள் தகுதியானவர்கள் என்று ஏற்கப்படல் வேண்டும்; அதிகார வர்க்கத்தினரிடமிருந்து நீதி சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் பிரிக்கப்படல் வேண்டும்.

முக்கியத்துவம்

'லக்னோ காங்கிரஸின் பெரிய சாதனையே காங்கிரஸ் லீக் உடன்பாடு' என்கிறார் பட்டாபி சீத்தாராமையா. தேசியப் பிரச்னைக்கும் இந்து-முஸ்லீம் பொது அணுகுமுறைக்கும் வழி வகுத்தது இந்த உடன்பாடு. சுயாட்சியே இந்திய தேசிய இயக்கத்தின் குறிக்கோள் என்பதை லீக் ஏற்றுக் கொண்டதன்

மூலம் இந்துக்களோடு இணைந்து பொதுநோக்கத்துக்காகப் போராடுவதற்கு முஸ்லீம்கள் முன்வந்தார்கள். அதேபோன்று முஸ்லீம்களுக்கான தனித்தொகுதி இனப் பிரதிநிதித்துவத்தை ஏற்றுக்கொண்டது முஸ்லீம்களின் அரசியல் பாதுகாப்பில் இந்துக்களுக்கிருந்த அக்கறையை வெளிப்படுத்தியது. இந்திய முஸ்லீம்களின் சார்பாகப் பேசக்கூடிய அமைப்பு முஸ்லீம் லீக் என்பதைக் காங்கிரஸ் ஏற்றுக் கொள்வதிலும், காங்கிரசுக்குச் சமமாக லீக் கருதப்பட்டதிலும் முஸ்லீம்கள் மனமகிழ்ச்சியடைந்தனர். முஸ்லீம்கள் அனைவரும் இந்திய தேசிய போராட்டத்தில் பங்கேற்பதற்கான சூழ்நிலையை இந்த உடன்பாடு ஏற்படுத்திக் கொடுத்தது. தேசிய ஒருமைப்பாட்டுக்கு போடப்பட்ட பலமிக்க அடித்தளமே லக்னோ உடன்பாடாகும். இந்தியாவின் இருபெரும் அரசியல் சார்ந்த அமைப்புகளின் கோரிக்கைகளை உள்ளடக்கிய உடன்பாடே அது. லக்னோ உடன்பாட்டுக்குத் திலகரே முக்கிய காரணம் என்றும் அன்னிபெசண்ட் அம்மையாரின் செல்வாக்கால் தான் காங்கிரஸ் லீக் திட்டம் உருவானதென்றும் கூறப்படுகின்றது. யார் காரணமாக இருப்பினும் இவ்வுடன்பாடு இந்து-முஸ்லீம் இணைப்பு முயற்சியில் முக்கிய மைல்கல் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

மதிப்பீடு

லக்னோ உடன்பாடு இந்து முஸ்லீம்களின் விட்டுக்கொடுக்கும் மனப்போக்குக்கான சிறப்பான எடுத்துக்காட்டாகும். எனினும் முஸ்லீம்களை திருப்திப்படுத்துவதற்கான முயற்சியின் துவக்கமே இது என்பதைப் பின்னர் நடந்த நிகழ்ச்சிகள் நிரூபித்தன. முஸ்லீம்களும் இந்துக்களும் ஒரு தாய் மக்கள், ஒரு நாட்டின் குடிகள் என்ற காங்கிரஸின் தேசியக் கோட்பாடு இவ்வுடன்பாட்டால் அடிபட்டுப் போயிற்று. லக்னோ உடன்பாட்டால் ஊன்றப்பட்ட விதைதான் பின்னர் பாகிஸ்தான் என்ற மரமாக வளர்ந்தது எனக் கருதுகிறார் ஆர்.பி. மஜூம்தார். ஆங்கிலேயரின் மீதிருந்த ஆத்திரத்தால்தான் லீக் இவ்வுடன்பாட்டுக்கு வந்ததேயன்றி இந்திய தேசியத் தத்துவத்தை ஏற்றுக் கொண்டதால் அல்ல என்ற முடிவுக்கு வருகிறார் ஆர்.சுந்தரலிங்கம். சென்னையிலிருந்த விகவாச முஸ்லீம்கள் லக்னோ உடன்பாட்டை ஏற்றுக் கொள்ளாமல் போட்டி முஸ்லீம் லீக்கைத் துவக்கினர். தனித்தொகுதிச் சலுகை லீக்கியர்களுக்கு அளிக்கப்படாமையால் அவர்கள் ஏமாற்றமடைந்தனர். பிற சிறுபான்மை சமூகத்தினரும் சிறப்புச் சலுகைகள் கோரத் தலைப்பட்டனர். லக்னோ உடன்பாடு உருவாக்கிய, இந்து-முஸ்லீம் இணைப்புக் காட்சி, கானல் நீராயிற்று. எனினும் அவ்வுடன்பாட்டு முயற்சி பாராட்டுக்குரிய செயலேயாகும்.

மாண்டேகுவின் ஆகஸ்டுப் பிரகடனம், 1917

சூழ்நிலைகள்

மிதவாதிகளும் தீவிரவாதிகளும் தங்களுக்குள்ளே இருந்த முரண்பாடுகளைக் கைவிட்டு தேசநலன் கருதி, மீண்டும் லக்னோ காங்கிரஸ் கூட்டத்தில் ஒன்று

Scanned by CamScanner

கோந்தலர் (1916). காங்கிரசும் முஸ்லீம் லீக்கும் தேசப் பிரச்னை பற்றிய பொது உடன்பாட்டுக்கு வந்தன. சுயாட்சி இயக்கம் அரசுக்கெதிராகத் தனது ஒருமித்த எதிர்ப்பைக் காட்டியது. மெசபடோமியாவில் துருக்கிக்கெதிராகத் தோல்வியடைந்ததற்கான 'மெசபடோமியா குழப்பத்தை' (Mesopotamian Muddle) விவாதித்த பாராளுமன்றக் குழு இந்திய அரசாங்கத்தை குறை கூறியது. நிர்வாகத்தில் இந்தியர்களுக்கு அதிக வாய்ப்பளிக்க வேண்டுமென்ற யோசனையையும் தெரிவித்தது. அதனால் இந்திய விவகாரச் செயலரான ஆல்டுள் சேம்பர்லின் பதவி விலக நேர்ந்தது. அவருக்கடுத்து அப்பதவிக்கு வந்த எட்வின் சாமுவேல் மாண்டேகு (Edwin Samuel Montague) இந்தியரின் உணர்வுகளை நன்கு புரிந்து கொண்டவர். பயங்கரவாதிகள் வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்களைத் தருவித்து வன்முறைப் புரட்சி செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதையும் அறிந்தார். மாண்டேகு தனது தளர்ந்திறமையால் அத்தகைய நிலை ஏற்படாதவாறு தடுத்தார் என்கிறார் கே.டி.பால் (K.T. Paul). 1917 ஆகஸ்டு 20 அன்று பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் காலத்தின் கட்டாயத்தை உணர்ந்த மாண்டேகு தனது பிரகடனத்தை வெளியிட்டார்.

முக்கிய கொள்கைகள்

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாண்டேகுவின் ஆகஸ்டு பிரகடனத்தில் காணப்பட்ட முக்கியக் கொள்கைகள் வருமாறு:

1. நிர்வாகத்தின் ஒவ்வொரு துறையிலும் இந்தியர்கள் அதிகமாகப் பங்கேற்க வாய்ப்பளிக்க வேண்டும்;

2. தன்னாட்சி நிறுவனங்கள் முறையாக வளர்க்கப்பட வேண்டும்;

3. அதன்நோக்கம் பிரிட்டிஷ் பேரரசின் பிரிக்க முடியாத பகுதியாக உள்ள இந்தியா படிப்படியாகப் பொறுப்பாட்சியைப் பெறுவதாக இருக்க வேண்டும்;

4. பிரிட்டிஷ் பாராளுமன்றமும், இந்திய அரசும் ஒவ்வொரு கட்டத்திலும் இதை கண்காணிக்கும்;

5. இம்மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்;

6. இவற்றைச் செய்யும்போது பொறுப்பான இந்தியத் தலைவர்களும், அவர்களுக்குள்ள பொறுப்பேற்கும் தகுதியும் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படும்.

முக்கியத்துவம்

மாண்டேகுவின் ஆகஸ்டு பிரகடனம் பிரிட்டனின் இந்திய நிலை பற்றி சந்தேகத்திற்கிடமின்றி அறிவித்தது. பொறுப்பாட்சியை (Responsible Government) வழங்குவதே இங்கிலாந்தின் இறுதி இலட்சியம் என்பது ஆணித்தரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இந்தியா கோரிய சுயராஜ்ய உரிமை ஏற்றுக் கொள்ளப்பட்டது. யதேச்சதிகார ஆட்சிக்கு பதில் சட்ட அமைப்பு

ஆட்சிகொண்டு வருவதற்கான உத்திரவாதம் வழங்கப்பட்டுவிட்டது. இதை இந்திய அரசியல் அமைப்பு வரலாற்றில் ஒரு அத்தியாயம் முடிந்து அடுத்த அத்தியாயம் எழுதப்பட்டதற்கு ஒப்பாகும் என்று சிறப்பித்துக் கூறுகிறார் எஸ்.ஆர்.சர்மா (S.R.Sharma). மாண்டேகுவின் அறிவிப்பு காலத்தின் தேவையாக இப்பிரகடனத்தை இந்தியாவின் 'மாக்னா கார்டா' (Magna Carta) எனக் கருதினர். தீவிரவாதிகள் தங்களது சுயராஜ்யக் கோரிக்கை நிறைவேறுவதற்கான அறிகுறியே இது என்று எண்ணினர். இந்திய சுதந்திரப் போராட்டத் தலைவர்கள் பொறுப்பாட்சியை நோக்கி நடை போடத் துவங்கினர். இந்திய தேசிய அரசியலில் புதிய சகாப்தம் துவக்கப்பட்டது. திருப்பு முனையை ஏற்படுத்தியது. அறிவிப்பை அடுத்து மாண்டேகு இந்திய அரசியல் நிலையை நேரில் கண்டறிய வந்தார் (1917 நவ.10). தலைவர்களைக் கலந்தாலோசித்தார். வைசிராய் செம்ஸ்போர்டு (Lord Chelmsford)டன் விவாதித்தபின் மாண்டேகு செம்ஸ்போர்டு கூட்டறிக்கை (Joint Report) வெளியிடப்பட்டது (1918 ஜூலை 8). இதுவே 'மாண்ட்போர்டு திட்டம் (Montford Scheme) என்றழைக்கப்பட்டது. அந்த கூட்டறிக்கையின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டதே 1919 இந்தியச் சட்டமாகும். அதுவே மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களாகும்.

Scanned by CamScanner

17. ரௌலட் சத்தியாக்கிரகம், 1919

மக்களால் வெறுக்கப்பட்ட இச்சட்டத்தை எதிர்த்து நடத்தப்பட்ட தன்னியல்பான தேசிய ஆர்ப்பாட்டத்தைக் கண்டு அதிகாரிகள் அதிர்ந்து விட்டனர். இதுதான் கிளர்ச்சி.

- ஜே.பி. கிருபளானி.

காந்தியின் பிரவேசம்

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியின் பிரவேசம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. அவரது வருகை இந்திய தேசிய இயக்கத்தின் போக்கையே மாற்றி அமைத்தது. தனது தென்னாப்பிரிக்கச் சத்தியாகிரகப் போராட்டத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு இந்தியா திரும்பிய காந்தி பம்பாய் (1915), லக்னோ (1916), காங்கிரஸ் கூட்டங்களில் கலந்து கொண்டார். பின்னர் சம்பரான் (1917), கெட்டா (1917 நவ.) அகமதாபாத் (1918 பிப்.) குட்டிச் சத்தியாகிரகங்கள் அவுரிச் சாகுபடியாளர்கள், விவசாயிகள், மில் தொழிலாளர்கள் ஆகியோருக்காக நடத்தப்பட்டவையாகும். வாய்மை, அகிம்சை, மார்க்கம் முடிவு, தூய்மை ஆகிய அறநெறிகளின்படி மேற்கொள்ளப்படுவதே சத்தியாகிரகம் ஆகும். தென்னாப்பிரிக்காவில் காந்தி பெற்ற பயிற்சியை, படிப்பினையை இந்தியச் சூழலுக்கேற்பக் குறிப்பிட்ட இடங்களில் சோதனை செய்து பார்த்த பின்னர் தேசஅளவில் பயன்படுத்தத் துணிந்தார். நான்காண்டு கால சுத்தியாக்கிரகப் பரிசோதனைக்குப் பின்னர் காந்தி அகில இந்தியத் தலைவராக அங்கீகரிக்கப்பட்டார். அந்த அங்கீகாரத்துக்கான வாய்ப்பை ரௌலட் சட்டம் அவருக்களித்தது.

ரௌலட் சட்டம்

முதல் உலகப்போர் முடிந்தவுடனேயே இந்தியத் தீவிரவாதிகளையும், பயங்கரப் புரட்சிக்காரர்களையும் அடக்கும் நோக்கத்துடன் முடியவிருந்த இந்தியப் பாதுகாப்புச் சட்ட (Defence of India Act) த்துக்கு பதில் புதிய சட்டத்தை கொண்டுவர இந்திய அரசு முயன்றது. சிட்னி ரௌலட் (Sydney Rawltt) என்ற ஆங்கிலேய நீதிபதியைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவை அமைத்து இந்தியாவில் அரசவிரோத நடவடிக்கைகள்பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அக்குழு சமர்பித்த அறிக்கை (1918 ஏப்.15) யில் கூறப்பட்ட சிபாரிசுகளின் அடிப்படையில் இரு மசோதாக்கள் தயாரிக்கப்பட்டன. அவை ரௌலட் மசோதாக்கள் (Rowlatt) என்றழைக்கப்பட்டன. அம்மசோதாக்களின்படி,

1. அரசாங்கம் சோதனை ஆணை (Warrant) ஏதுமின்றி எவரையும் கைது செய்யலாம்;

2. 'அபாயகரமான ஆட்கள்' என்ற காரணத்தைக்கூறி எவ்வித விசாரணையுமின்றிக் காலவரையின்றி காவலில் வைக்கலாம்;

3. அரச விரோதக் குற்றங்களில் ஈடுபட்டார்கள் என கருதப்படுவோரைக் குறிப்பட்ட இடங்களில் காவலில் இருக்குமாறு கட்டாயப் படுத்தப்படலாம்;

4. நடுவர்களின் (Juries) துணையின்றியே மூன்று உயர் நீதிமன்ற நீதிபதிகள் அரசுத் துரோக வழக்குகளை விசாரிக்கலாம்; அவர்களுடைய தீர்ப்பே இறுதியானது.

இந்தக் 'கருப்பு மசோதாக்களை' (Black Bills) இந்தியத் தலைவர்கள் கடுமையாகக் கண்டித்தனர். அம்மசோதாக்கள் மத்தியச் சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்டபோது அரசாங்கச் சார்பற்ற உறுப்பினர்களான எஸ்.எஸ்.பானர்ஜி, வி.எஸ்.சீனிவாச சாஸ்திரி, டெஜ் பகதூர் சாப்ரு, வி.ஜே.பட்டேல், ராமசுவாமி அய்யங்கார் ஆகியோர் ரௌலட் மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டால் நாட்டில் வேண்டாத விளைவுகள் ஏற்படும் என்று அரசாங்கத்தை எச்சரித்தார்கள். பல ஊர்களில் கண்டனக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. அந்த மசோதாக்களுக்கெதிராகப் பலரும் சீற்றங் கொண்டனர். புதிதாக உருவான அச்சீற்றம் புதிய தலைவரைத் தந்தது என்கிறார் பெர்சிவெல் ஸ்பியர் (Percival Spear) என்ற வரலாற்று அறிஞர். அப்புதிய தலைவரான காந்தி ரௌலட் மசோதாக்கள் விலக்கிக் கொள்ளப்படாவிடில் சத்தியாக்கிரகத்தைத் துவக்குவதைத் தவிர தனக்கு வேறு வழியில்லையென்று அரசாங்கத்துக்கு இறுதி எச்சரிக்கை விடுத்தார். அந்த எச்சரிக்கையையும் மீறி அரசாங்கம் குழப்பவாத புரட்சிக் குற்றச் சட்டத்தை (Anarchical and Revolutionary Crime Act) நிறைவேற்றியது. அதுவே ரௌலட் சட்டம் என்று பெயர் பெற்றது.

சாத்விகப் போராட்டம்

ரௌலட் சட்டம் மனித உரிமைக்கும் நீதிக்கும் உலைவைக்கும் சட்டம் எனக்கருதினார் காந்தி. அச்சட்டம் சவுக்கைக் கொண்டு அரசாங்கத்துக்கு ஆகாத எவரையும் எப்படியும் அடிக்கலாம் என்பதை நன்குணர்ந்த காந்தி அந்தச் சாத்தான் சட்ட (Satanic Act) த்தை முழுமூச்சுடன் எதிர்க்கத் தீர்மானித்தார். 1919 மார்ச் மாதம் பம்பாயில் சத்தியாக்கிரக சபை (Satyagraha Sabha) தோற்றுவிக்கப்பட்டது. சத்தியாக்கிரகச் சபதம் (Satyagraha Pledge) எடுத்துக் கொள்ளப்பட்டது. சத்தியாக்கிரகச் சபையின் கிளைகள் நாட்டின் பல பகுதிகளிலும் துவக்கப்பட்டன. 1919 மார்ச் 30ஆம் தேதியை சத்தியாக்கிரக நாளாக (Satyagraha Day) நாடெங்கும் அனுசரிக்கப்பட வேண்டும் என்று காந்தி மக்களைக் கேட்டுக் கொண்டார். ஆனால் அவர் சென்னை சென்றபோது (மார்ச் 17) சி. ராசகோபாலாச்சாரியார், எஸ். கஸ்தூரிரங்க அய்யங்கார், சி.விஜயராகவாச்சாரியார் ஆகியோரது ஆலோசனையின்படி சத்தியாக்கிரக நாளை ஏப்ரல் 6க்குத் தள்ளிவைத்து விட்டார் காந்தி.

Scanned by CamScanner

சத்தியாக்கிரக தினம் தள்ளி வைக்கப்பட்ட செய்தி அறியாத புல்லி மக்கள் 1919 மார்ச் 30 அன்று பூரண அர்த்தால் அனுசரித்தனர். டெல்லி பொதுவாழ்க்கை அன்று நின்று போயிற்று. ஆனால் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் போலீசாருக்குமிடையே ஏற்பட்ட மோதலில் பலர் இறந்தனர். மேலும் பலர் காயமுற்றனர். 1919 ஏப்ரல் 6ஆம் தேதி காந்தியின் குரலுக்குச் செவிமடுத்த நாடு அமைதியாக அகிம்சை வழிநின்று சத்தியாகிரக நாளைப் பக்தி சிரத்தையோடு கொண்டாடியது. ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், கடையடைப்பு, உண்ணாவிரதம் பொதுக்கூட்டங்கள், பிரார்த்தனைகள் ஆகிய அனைத்தும் எவ்வித அசம்பாவிதமுமின்றி நடைபெற்றன!

ஆனால் அரசாங்கத்தின் விவேகமற்ற போக்கால் வன்முறை வெடித்தது. சுவாமி சிரத்தானந்தரின் அவசர அழைப்பின்பேரில் காந்தி டெல்லிக்குப் புறப்பட்டுச் சென்றார் (1919 ஏப்ரல் 7). அவர் மதுரா (Mathura) வை அடைந்தபோது மேற்கொண்டு செல்லக்கூடாதெனத் தடுக்கப்பட்டார். தடையை மீறிப் பயணம் செய்த காந்தியைப் பஞ்சாபின் எல்லையிலிருந்த பால்வால் (Palwal) என்ற சிற்றூரின் புகை வண்டி நிலையத்தில் கைதுசெய்து பம்பாய்க்குக் கொண்டு சென்றுவிட்டனர். அகமதாபாத், பம்பாய், டில்லி, அமிர்தசரஸ் ஆகிய இடங்கள் வன்முறைக் கேந்திரங்களாயின. ஆங்கிலேயர்களும் அரசாங்க அதிகாரிகளும் தாக்கப்பட்டார்கள், கொல்லப்பட்டார்கள், பொதுச் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. போலீஸ் உத்தரவுகளும் தடைகளும் மீறப்பட்டன. துப்பாக்கிச் சூடுகள் நடந்தன. இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அகிம்சை ஆயுதத்தைச் சரியாகப் பயன்படுத்தக்கூடிய பயிற்சியையும் பக்குவத்தையும் மக்கள் இன்னும் சரியாகப் பெறவில்லை என்பதை அறிந்தார் காந்தி. இமாலயத் தவறு (Himalayan Miscalculation) செய்துவிட்டதாகக் கருதினார் காந்தி. ரௌலட் சத்தியாக்கிரகத்தை துவக்கியவர் காந்தி, காங்கிரஸ் அல்ல, அவரே நிறுத்தினார்.

ஜாலியன் வாலாபாக் படுகொலை

காந்தி ரௌலட் சத்தியாக்கிரகத்தை நிறுத்தினார். ஆனால் அரசாங்கம் தன் அடக்குமுறையை நிறுத்தவில்லை. டாக்டர் சைபுதீன் கிட்சலு (Dr. Saifudin Kitchlew)வும், டாக்டர் சத்யபாலும் (Dr. Satyapal) அமிர்தசரசின் மக்கள் செல்வாக்குமிக்க காங்கிரஸ் தலைவர்கள். முன்னவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற முஸ்லீம் வழக்கறிஞர், பின்னவர் இந்து மருத்துவர். இவ்விருவரையும் துணைக்கமிஷனர் தனது பங்களாவுக்கு வரச்சொல்லி கைது செய்து தரம்சாலா என்ற மலைநகருக்குக் கொண்டு சென்றுவிட்டார்! பஞ்சாபின் லெப்டினண்ட் கர்னலாயிருந்த மைக்கேல் ஓட்வியர் (Michael O'Dwyer) அவ்விருவரையும் நாடுகடத்த உத்தரவிட்டார்! முன்னரேயே ரௌலட் சட்டத்தாலும், காந்தி கைது செய்யப்பட்டதாலும் சினங்கொண்டிருந்த பஞ்சாபியர் தங்களது அபிமானத் தலைவர்கள் இருக்குமிடம்கூடத் தெரியாது மறைத்து வைக்கப்பட்டதால் ரீற்றம் கொண்டனர். ரயில் எழுந்தனர். துணைக்கமிஷனர் பங்களாவை நோக்கிப் புறப்பட்டனர். அவர்களை ஒரு புகைவண்டிப் பாலத்தருகே தடுத்து நிறுத்தப்பட்டபோது வன்முறை நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. இருபத்தைந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். பதிலுக்கு ராபின்சன் என்ற சரக்குகிடங்கு காவலர் அடித்துக் கொல்லப்பட்டார். மின்சாரக்

கம்பிகளும் தந்திக் கம்பிகளும் அறுத்தெறியப்பட்டன. புகைவண்டிப் பாலம் பெயர்க்கப்பட்டது. வங்கிகளும், வங்கி அதிகாரிகளும் தாக்கப்பட்டனர். செல்வி மெர்செல்லா ஷெர்வுட் என்ற சமயப் பரப்பு ஊழியர் மோசமாகத் தாக்கப்பட்டார். பல பொதுக் கட்டிடங்கள் கொளுத்தப்பட்டன. அல்லது தரைமட்டமாக்கப்பட்டன. அமிர்தசரஸ் வன்முறை ஆர்ப்பாட்ட மையமாயிற்று.

அரசாங்க அடக்குமுறைக்குப் பலியானோருக்கு இரங்கல் கூட்டம் போடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. 1919 ஏப்ரல் 13 அன்று ஜாலியன்வாலா பாக் (Jallianwallah Bagh)இல் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. அன்றுதான் சீக்கியர்களுக்குப் புனிதமான பைசாகி தினம் (Baisakh Day). தங்கள் கோவிலில் வழிபடப் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வந்திருந்தார்கள். 'பாக்' என்றால் தோட்டம் என்று பொருள். அங்கு தோட்டம் எதுவும் இல்லை. ஜாலியன் வாலாபாக் என்பது நெடிய கவர்களால் சூழப்பட்டு, ஒரே குறுகிய நுழைவாயிலையுடைய நீண்ட சதுர மைதானம். அதில் சுமார் 20,000 பேர் கூடி இருந்தனர். அறிவித்தபடி இரங்கல் கூட்டம் சரியாக மாலை 4.30 மணிக்குத் துவங்கிற்று. அங்கு கூடியிருந்தோருக்குப் பிரிகேடியர் ஜெனரல் ரெஜினால்டு டயர் (Reginald Dyer) என்று காலை பிறப்பித்த கூட்டம் தடை உத்தரவு பற்றி எதுவும் தெரியாது. தனது ஆணையை மீறி கூடிவிட்டனரே என்று கோபமுற்ற டயர் படைவீரர்களுடன் ஜாலியன் வாலாபாக் சென்று முன்னறிவிப்பு ஏதுமின்றி, தோட்டாக்கள் தீரும் வரைக் கூட்டத்தினரைப் பார்த்துச் சுடுமாறு உத்தரவிட்டார். அவ்வாறே பத்து நிமிடங்கள் நிறுத்தாமல் சுட்டனர். 1650 சுற்றுச் சுட்டதால் 1500 அப்பாவி மக்கள் மாண்டனர். கவனிக்கப்படாமையால் காயம்பட்ட மேலும் பலரும் மடிந்தனர். இரங்கல் கூட்டத்துக்குச் சென்றோர் இறந்துபட்ட கோரக்காட்சி அது.

இராணுவச் சட்ட நடவடிக்கைகள்

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல ஜாலியன்வாலாபாக் படுகொலை போதாதென்று, அமிர்தசரசிலும், லாகூரிலும் இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது (ஏப்ரல் 15). அமிர்தசரசில் மக்கள் ஆங்கிலேய அதிகாரிகளைப் பார்க்கும் போதெல்லாம், கைதூக்கி வணக்கம் செய்யுமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். மறுப்போர் கசையடிக்கு உள்ளாயினர். புகை வண்டியில் பயணம் செய்ய மக்கள் அனுமதிக்கப்படவில்லை. மாணவர்கள் யூனியன் ஜாக் கொடிக்கு வணக்கம் செய்யுமாறு வற்புறுத்தப்பட்டனர். இந்துக்களும் முஸ்லீம்களுடன் ஜோடியாகச் சேர்ந்து விலங்கிடப்பட்டனர். டயரின் ஊர்ந்து செல்லும் உத்தரவு (Crawling Order) கொடுமையின் சிகரமாக இருந்தது. செல்வி ஷெர்வுட் தாக்கப்பட்ட வீதியில் செல்வோர் அனைவரும் தரையில் படுத்து மார்பால் ஊர்ந்து செல்லுமாறு உத்தரவிடப்பட்டனர். அவ்வீதியில் சவுக்கடிச் சதுக்கம் (Wipping Square) ஒன்று கட்டப்பட்டு அதில் குற்றவாளிகள் நிறுத்தி வைக்கப்பட்டுக் கசையடி கொடுக்கப்பட்டார்கள். செல்வி ஷெர்வுட்டைத் தாக்கியதாகச் சந்தேகப்பட்ட ஆறு இளைஞர்கள் அச்சதுக்கத்துக்கு கொண்டுவரப்பட்டு ஆளுக்கு 30 கசையடிகள் கொடுக்கப்பட்டன. லாகூர், கசூர், குஜ்ரான்வாலா, ஷேகுபூரா ஆகிய இடங்களிலும் இராணுவச் சட்ட நடவடிக்கைகள் அரக்கத்தனமாக அமல் செய்யப்பட்டன. எடுத்துக்காட்டாக,

Scanned by CamScanner

லாகூரில் இராணுவச் சட்டம் பற்றிய கவரொட்டிகளை வீட்டுச் சுவர்களில் ஒட்டுவதோடு மட்டுமன்றி அவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பையும் விட்டுச் சென்றுக்கார்கள் எற்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். சூரில் மக்கள் குவிந்து நெற்றியால் தரையைத் தொடுமாறு தண்டிக்கப்பட்டனர். குஜ்ரன் வாலாவில் பள்ளிகள் ஆகாய விமானத்திலிருந்து தாக்கப்பட்டன. சுருங்கக்கூறின் இராணுவச் சட்டத்தின் துணைகொண்டு பஞ்சாப் மக்கள் மாக்களாக நடத்தப்பட்டனர்.

ஹண்டர் விசாரணைக்குழு

பஞ்சாப் படுகொலை நாட்டில் பதட்டத்தை ஏற்படுத்தியது. கண்டனக் குரல்கள் இளம்பின. பஞ்சாபில் நடைபெற்ற பயங்காத்தைப் பற்றிய முழுவிபரங்கள் தெரியவில்லை. மாளவியா போன்றோர் மத்தியச் சட்டமன்றத்தில் இதுபற்றிய கேள்விக் கணைகளைத் தொடுத்தனர். படுகொலை நடைபெற்ற இடத்தைப் பார்வையிடுவதற்கு காந்திக்கு அனுமதி மறுக்கப்பட்டது. அந்தச் சூழ்நிலையில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி பஞ்சாப் படுகொலைபற்றி உடனடியாக விசாரணை நடத்த வேண்டுமெனக் கோரியது. அதுமட்டுமல்ல, மோதிலால் நேரு, சி.ஆர்.தாஸ், பண்டுலுல் ஹக், அப்பாஸ் தியாப்ஜி, காந்தி, கே.சந்தானம் ஆகியோர் கொண்ட ஒரு விசாரணைக் குழுவையும் நியமித்தது. அந்த காங்கிரஸ் விசாரணைக் குழு பஞ்சாப் படுகொலை பற்றிய பல திடுக்கிடக்கூடிய தகவல்களைத் தந்தது. அதோடு ரௌலட் சட்டம் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும்; வைசிராய் மைக்கேல் ஒட்வியர், தளபதி டயர் போன்றோர் பதவி விலக வேண்டும்; சம்பந்தப்பட்ட தள அதிகாரிகள் விசாரிக்கப்பட வேண்டும் போன்ற யோசனைகளையும் அக்குழு தெரிவித்தது.

எதிர்ப்பு உருவாவதைக் கண்ட பிரிட்டிஷ் அரசாங்கம் ஒரு ஒழுங்கின்மை விசாரணைக் குழுவை (Disorders Enquiry Committee) நியமித்தது. நீதிபதி ஹண்டர் பிரபு (Lord Hunter) அதன் தலைவர். இராணுவச் சட்டத்தின்கீழ் பஞ்சாப் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள்பற்றி விசாரிப்பதே அக்குழுவின் நோக்கம். 1919 நவம்பர் மாதம் பஞ்சாபுக்கு வந்த அவ்விசாரணைக்குழு, லாகூரில் விசாரணையைத்துவக்கி 1920 மே மாத இறுதியில் அதன் அறிக்கையைச் சமர்ப்பித்தது. குழுவிலிருந்த ஆங்கிலேயர்களுக்கும், இந்தியர்களுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தமையால் அறிக்கை பெரும்பான்மையினர் அறிக்கை (Majority Report) சிறுபான்மையினர் அறிக்கை (Minority Report) என்று இரு பகுதிகளாக எழுதப்பட்டது.

பெரும்பான்மையினர் அறிக்கை எச்சரிக்கையின்றி சுட்டதற்காகவும், தோட்டாக்கள் நீருமட்டும் சுட்டதற்காகவும், தளபதி ரெஜினால்டு டயரைக் கண்டித்தது. டயரின் சமயோசிதச் செயல் பஞ்சாபைக் காப்பாற்றியது, மற்றொரு 1857 கிளர்ச்சியைப் போன்ற கொந்தளிப்பு ஏற்படாதவாறு தடுத்தது என்ற வாதத்தை நிராகரித்தது. அதேபோன்று மற்றப் பகுதிகளுக்கும் பாடமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் பஞ்சாப் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்ற கருத்தையும் அந்த அறிக்கை ஏற்க மறுத்தது. சிறுபான்மையினர் அறிக்கை பஞ்சாப் படுகொலையை 1914ல் பிரான்சிலும், பெல்ஜியத்திலும் நடைபெற்ற கொடுமைகளோடு ஒப்பிட்டுக் காட்டியது. ஜாலியன்வாலா பாக்குக்கு வெளியே

நிறுத்தப்பட்டிருந்த இரு இராணுவ வாகனங்களும் உள்ளே கொண்டு வரப்பட்டிருந்தால் தானியங்கித் துப்பாக்கிகளும் உபயோகப்பட்டிருக்கும் எனக் கூறியமைக்காகவும், காயமுற்றோரைக் கவனியாதுவிட்டமைக்காகவும் தளபதி டயரை இராக்கமற்ற அக்கள் என்று அந்த அறிக்கை வர்ணித்தது. இரு அறிக்கைகளுமே முகாந்திரமின்றிக் கட்டளையும், இராணுவச் சட்டநடவடிக்கைகளையும், பிற தண்டனைகளையும் கண்டித்தன. ஹண்டர் அறிக்கை எட்வின் மாண்டேகுவின் பஞ்சாப் நிகழ்ச்சியைப் பற்றிய நீண்ட குறிப்பையும் கொண்டிருந்தது. அக்குறிப்பில் ஊர்ந்துசெல்லும் உத்தரவு நாகரிக அரசாங்கத்தின் நெறிமுறையை மீறிய செயல் என்று இந்திய விவகாரச் செயலர் குறிப்பிட்டிருந்தார்.

ஹண்டர் விசாரணைக்குழு அறிக்கையைப் பரிசீலித்த இந்திய அரசாங்கம் பஞ்சாபில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகள் தவிர்க்கப்பட்டிருக்கலாம் என்று கருதியது. குறிப்பாக பஞ்சாபில் திவில் திர்வாகம் கைவிடப்பட்டது சரியல்ல என்றும், டயர் ஏப்ரல் 13 அன்று பிறப்பித்த பொதுக்கூட்டத் தடை உத்தரவை மக்கள் நன்கு அறியச் செய்திருக்க வேண்டுமென்றும், சுடுவதற்கு முன்னர் மக்களை எச்சரித்திருக்க வேண்டுமென்றும் அரசாங்கம் நினைத்தது. அதே சமயம் நல்ல நோக்கத்தோடுதான் டயர் செயல்பட்டார் என்ற கருத்தையும் தெரிவித்தது. பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் பிரபுக்கள் அவை பிரிட்டிஷ் ஆட்சியை இந்தியாவில் பாதுகாத்தமைக்காக டயரைப் பாராட்டியது! இந்திய விவகாரச் செயலரின் கண்டனத்துக்காளான தளபதி டயர் பதவி விலகினார் (1920 மார்ச் 27). அவருக்கு வீரனுக்குரிய மரியாதையுடன் ஆங்கிலேயர் வழியனுப்பு விழா நடத்தினர். இந்தியாவிலிருந்த ஐரோப்பிய மாதர்கள் டயருக்கு ரூ.20,000 கொண்ட பண முடிப்பையும் வீரவாளையும் பரிசாகக் கொடுத்தனர்.

ரௌலட் சட்டம்

டாக்டர் கிட்சலு, சத்யபாலைச் சிறையிலிட்டது, ஜாலியன் வாலாபாக் படுகொலை, இராணுவக்கட்ட நடவடிக்கைகள், அமிர்தசரஸ் தலைவர்களைத் தண்டித்தது, ஹண்டர் குழுவின் ஒரு சார்பான விசாரணை, காங்கிரஸ் விசாரணைக்கு சோதனைகளை உதாசீனப்படுத்தியது, பிரிட்டிஷ் பாராளுமன்றம் டயரைப் பாராட்டியது ஆகியவை காந்தியிடம் மாபெரும் மனமாற்றத்தை ஏற்படுத்தின. விளைவு? ஒத்துழையாமை இயக்கம்.

மதிப்பீடு

ரௌலட் சத்தியாக்கிரகம் காந்தி மேற்கொண்ட முதல் அகில இந்தியப் போராட்டமாகும். அப்போராட்டத்தின் மூலமாகக் காந்தி தேசத் தலைவரானார். இந்திய மக்கள் சத்தியாக்கிரக போராட்டத்துக்கு அறிமுகமானார்கள். அவர்களிடையே அரசியல் விழிப்புணர்வு ஏற்பட்டது. பஞ்சாப் படுகொலை தங்களுக்கேற்பட்ட துன்பம் எனப் பிற பகுதி மக்களும் எண்ணத் தலைப்பட்டனர். ரௌலட் சட்டம் விலக்கிக் கொள்ளப்படாமையாலும், வன்முறை நிகழ்ச்சிகளைக் காந்தியால் தடுக்க முடியவில்லை என்பதாலும் ரௌலட் சத்தியாக்கிரகம் தோல்வியடைந்தது எனக் கூறலாம். சத்தியாக்கிரகம் சூடுபிடித்துத் தீவிரமடைந்த நேரத்தில் காந்தி அதை நிறுத்தியது சரியல்ல

Scanned by CamScanner

என்று வாதிடுவோருமுள்ளனர். வாய்மையையும், அகிம்சையையும், அறநெறியையும் பலி கொடுத்துப் போராட்டம் வெற்றி பெறுவதை விரும்பவில்லை காந்தி. ரௌலட் சத்தியாக்கிரகத்தை நிறுத்தியது காந்தியின் தலைமையையோ அல்லது செல்வாக்கையோ எந்த விதத்திலும் பாதிக்கவில்லை. மாறாகக் காந்தியின்மீது மக்களுக்கிருந்த நம்பிக்கை வளரவே செய்தது. மேலும், ரௌலட் சட்டம் விலக்கிக் கொள்ளப்படவில்லையேயன்றி, அது செயல்படுத்தப் படவுமில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் பார்க்கும்போது ரௌலட் சத்தியாக்கிரகம் வெற்றிபெற்றது என்றே கூற வேண்டும்.

18. மாண்ட்- போர்டு சீர்திருத்தங்களும் இரட்டை ஆட்சியும், 1919

இந்தியாவை பிரிட்டிஷ் பேரரசின் ஒருங்கிணைந்த பகுதியாக்கும் நோக்கத்துடன் படிப்படியாக தொறுப்பான அரசாங்கத்தை ஏற்படுத்துவதற்காக இந்தியர்களை நிர்வாகத்தின் ஒவ்வொரு அங்கத்தோடும் பங்கேற்கவைப்பதே பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கொள்கையாகும்.

- மாண்டேகு பிரகடனம்

மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள்

முதல் உலகப் போரால் இந்திய விடுதலைப் போராட்டத்தில் புதிய திருப்பம் ஏற்பட்டது. மக்களின் பேராதரவைப்பெற்ற சுயாட்சி இயக்கம் (Home Rule Movement) விரைவாகப் பரவியது. போர்க் காலத்தில் பயங்கரப் புரட்சிக்காரர்கள் ஆயுதக் கிளர்ச்சி செய்யும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். முஸ்லீம் லீக் காங்கிரசோடு கைகோர்த்துக் கொண்டு 'லக்னோ உடன்படிக்கை' (Lucknow Pact) செய்து கொண்டது. இந்தியர்களின் போர்க் காலச் சேவைகளை மறந்து ஆங்கிலேய அரசு உரிமைப் பறிப்பு ரௌலட் சட்டத்தைக் (Rowlatt Act) கொண்டு வந்தது. புஞ்சாப் படுகொலை நாட்டில் பதட்டத்தை ஏற்படுத்தியது. மக்கள் மனக் கொதிப்படைந்திருந்த வேளையில் புண்ணுக்குப் புனுகு பூசுவதைப்போன்று இந்திய விவகாரச் செயலர் மாண்டேகு தனது ஆகஸ்டுப் பிரகடனத்தை (August Declaration) வெளியிட்டார். இந்தியர்களின் கருத்தறிய அவர் இந்தியா வந்து தேசியத் தலைவர்களைச் சந்தித்தார். இந்திய வைசிராய் செம்ஸ்போர்டு பிரபுவுடன் ஆலோசனை செய்த பின்னர் 'மாண்ட் போர்டு திட்டம்' (Montford Scheme) வெளியிடப்பட்டது. அத்திட்டத்தின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டதே 1919 இந்திய அரசாங்கச் சட்டம் அல்லது மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் ஆகும்.

இரட்டை ஆட்சி

1919 இந்திய அரசாங்கச் சட்டம் நாற்பத்தேழு விதிகளைக் கொண்ட ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அச்சட்டத்தின் முகவுரை (Preamble) மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களுக்குப் பின்புலமாக இருந்த அடிப்படைக் கொள்கைகளைப்பற்றி சுருக்கமாகக் கூறியது. இந்திய விவகாரச் செயலரின் அதிகாரங்கள், வைசிராயின் நிர்வாகக் குழு, மத்திய சட்ட மன்றம், மாநில சட்ட மன்றம் ஆகியவற்றில் செய்யப்பட்ட மாற்றங்களைப்பற்றி அச்சட்டம் விரிவாகக் கூறியது. இந்திய ஹைகமிஷனர் பதவி புதிதாக உருவாக்கப்பட்டது.

Scanned by CamScanner

இலை மாவற்றிலும் அடிப்படையான மாற்றம் மாநிலங்களில் இரட்டை ஆட்சி (Dyarchy) முறை புகுத்தப்பட்டதேயாகும்.

3

இரட்டை ஆட்சி என்றால் என்ன?

மாநிலத்தின் நிர்வாகப்பொறுப்பு இரு கூறுகளாகப் பிரிக்கப்பட்டு ஆட்சி செயல்படுத்தப்பட்டதால் இப்புதிய மாற்றத்துக்கு 'இரட்டை ஆட்சி' என்று பெயரிடப்பட்டது. பிரிக்கப்பட்ட பொறுப்புகள் முறையே மாற்றப்பட்ட துறைகள் (Transferred Subjects) என்றும், ஒதுக்கப்பட்ட துறைகள் (Reserved Subjects) என்றும் அழைக்கப்பட்டன. கல்வி, பொதுப்பணிகள், விவசாயம், மீன், வளத்துறை, தல சுயாட்சி, ஆயத்தீர்வை, பொதுக்கட்டாரம், மருத்துவ நிர்வாகம், தொழில்நுணுக்கக் கல்வி, தொழிற்சாலை வளர்ச்சி, தொழில் ஆராய்ச்சி ஆகியவை மாற்றப்பட்ட துறைகளாகும். அவற்றை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களிலிருந்து கவர்னரால் நியமிக்கப்பட்ட அமைச்சர்கள் நிர்வகித்தனர். மாறாக, காவல், நீதி, நிர்வாகம், நிலவருவாய், நீர்பாசனம், பஞ்ச நிவாரணம், பத்திரிகை, அச்சகம், புத்தகக் கட்டுப்பாடு, விவசாயக் கடன்கள், வனங்கள், சிறைகள், தொழில் தகராறு, நீர்த்தல் போன்ற தேச அபிவிருத்தித் துறைகள் (Nation Building departments) கவர்னரால் அவரது நிர்வாகக் குழு உறுப்பினர்களின் துணைகொண்டு நிர்வகிக்கப்பட்டன. இவ்வாறு இருவேறு அதிகார அமைப்புக்களைக் கொண்ட மாநில நிர்வாகச் சீர்திருத்தமே இரட்டை ஆட்சி என்று அழைக்கப்பட்டது.

இரட்டை ஆட்சி செயல்பட்ட முறை

4

1921 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து சென்னை, வங்காளம், பம்பாய், ஐக்கிய மாகாணம், பஞ்சாப், பீகார், மத்திய மாகாணம், அசாம் ஆகிய எட்டு மாநிலங்களில் இரட்டை ஆட்சி அமல் செய்யப்பட்டது. அதன்பின் பர்மாவுக்கும் வடமேற்கு எல்லை மாகாணத்திற்கும் இவ்வாட்சி விரிவுபடுத்தப்பட்டது. இரட்டையாட்சி முறை 1920லிருந்து 1937 வரை செயல்பட்டது. இவ்வாட்சியின் முதல் சட்டமன்றத்துக்கான தேர்தல்கள் 1920-21ல் நடைபெற்றன. ஒத்துழையாமை இயக்கத்தின் காரணமாக காங்கிரஸ் தேர்தலில் கலந்து கொள்ளவில்லை. எனினும் லிபரல் கட்சியினர் தேர்தலில் போட்டியிட்டனர்! 1923 தேர்தலில் சுயராஜ்யக் கட்சியினர் (Swarjists) தேர்தலில் கலந்து கொண்டு வியத்தகு வெற்றியடைந்தனர்.

சட்ட மன்றத்துக்குள்ளிருந்து கொண்டு ஒத்துழையாமை இயக்கத்தை நடத்தச் சென்ற சுயராஜ்யக் கட்சியினர் அரசாங்கத்துக்குத் தீராத தலைவலியாக இருந்தனர். மாற்றப்பட்ட துறைகள் செயல்பட்ட, செயல்பட முடியாத நிலைபற்றிக் கடுமையாக அவர்கள் விமர்சித்தனர். மத்திய மாகாணச் சட்டமன்றத்தில் சுயராஜ்யக் கட்சியினர் பெரும்பான்மை பலம் பெற்றிருந்ததால் அங்கு நிர்வாகத்தை நடைபெற முடியாதவாறு முடக்கிவிட்டனர். வங்காள சட்டமன்றத்தில் அவர்கள் சுயேச்சைத் தேசியவாதிகளுடன் சேர்ந்து கொண்டு தேக்கநிலையை உண்டாக்கிவிட்டனர். ஐக்கிய மாகாணத்தில் சுயராஜ்யக் கட்சியில் கொள்கை பல ஆதரவாளர்களைப் பெற்றுத் தந்தது. பம்பாய் சட்ட மன்றத்தில் உறுப்பினர்கள் 'அரசாங்க ஆதரவாளர்கள்', 'சுயராஜ்ய

எதிர்க்கட்சியினர்' எனப் பிரிந்து விவாதப் போட்டிகள் பலநாள்களும், அல்லாமலும் சுயராஜ்யக் கட்சியினர் நிறுவன்மையினாக ஒற்றுமையால் அரசாங்கத்தாருக்கு முட்டுக்கட்டையாக இருக்க முடியவில்லை.

சென்னை ராஜதானியில் இரட்டை ஆட்சி வெற்றிகரமாக வேலைசெய்தது. அதற்குக் காரணம் நீதிக்கட்சி (Justice Party) அரசாங்கத்தை ஆதரித்து, ஆட்சியைப் பிடித்து, மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தின்கீழ் சமுதாய நீதியை வழங்க வேண்டும் என்று திர்மானமாக செயல்பட்டதுதான். 1920 டிசம்பரில் நடந்த சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்ட நீதிக்கட்சி 98 இடங்களை வென்று ஆட்சியை அமைத்தது. முதல் சட்டசபைக் கூட்டம் ஜன 12ல் இரண்டாவது சட்டமன்றத் தேர்தலில் (1923) 44 இடங்களையே பெற்ற நீதிக்கட்சியால் மூன்றாவது தேர்தலில் (1926) 22 இடங்களை மட்டுமே வெல்ல முடிந்தது. சுயராஜ்யக் கட்சி 41 இடங்களில் வெற்றி பெற்றது. எனினும் அக்கட்சி அமைச்சரவையை அமைக்க சம்மதிக்காததால் முன்னாள் நீதிக்கட்சித் தலைவரான டாக்டர். பி.சுப்பராயன் தலைமையில் கவேச்சை அமைச்சரவை அமைக்கப்பட்டது. 1934 தேர்தலில் காங்கிரஸ் போட்டியிட்டு நீதிக்கட்சியைத் தோற்கடித்தபோதிலும்கூட அக்கட்சி அமைச்சரவைப் பொறுப்பை ஏற்க மறுத்ததால் நீதிக்கட்சியே ஆட்சிபீடத்தில் அமர்ந்தது! 1937ல் ராஜகோபாலாச்சாரியார் அமைச்சரவை ஏற்படும்வரை நீதிக்கட்சியே ஆளும்கட்சியாக நீடித்தது! இரட்டை ஆட்சிக் காலத்தில் மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தம் சென்னை மாநிலத்தில் முழுவெற்றியடைய நீதிக்கட்சி துணைபுரிந்தது. சென்னை ராஜதானி தேசிய நீரோட்டத்திலிருந்து பிரிந்து செயல்பட்டது ஒரு விதிவிலக்காகும்.

சாதனைகள்

பதினாறாண்டு காலம் நடைமுறைப் படுத்தப்பட்ட இரட்டை ஆட்சிப் பரிசோதனை பல சாதனைகளைப் புரிந்ததெனலாம். இந்திய அரசியல் அமைப்பு வரலாற்றில் இரட்டை ஆட்சிக் கொண்டுவரப்பட்டது ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்தது எனக் கூறலாம். மக்கள் பிரதிநிதிகள் மாநில நிர்வாகத்தில் நேரடியாய் பங்கேற்றதால் அவர்களுக்கு சட்டமன்ற முறையில் நல்ல பயிற்சியும், தேர்ச்சியும் கிடைத்தது. சட்டமியற்றும் கலையில் இந்திய அரசியல்வாதிகளுக்கு நல்ல அனுபவம் ஏற்பட்டது. அரசாங்கம் செயல்படும் முறையைக் கவனிக்கவும், அரசாங்கச் செயல்முறைகளைத் திறனாய்வு செய்யவும் அவர்களுக்கு வாய்ப்பேற்பட்டது. ஆங்கிலேய வல்லாட்சிக்கும் மக்களின் பொறுப்பாட்சிக்குமிடையே உள்ள இணைப்புப் பாலமாகப் பயன்பட்டது இரட்டை ஆட்சி முறை. அது மாநில சுயாட்சி முறைக்கு வழி வகுத்துக்கொடுத்தது. எதிர்க்கட்சியாகப் பணியாற்றிய சுயராஜ்யக் கட்சியினர் அரசாங்கத்தின் தேச விரோதக் கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் அம்பலப்படுத்தினர். அவர்களுடைய எதிர்ப்புக்கு அஞ்சி கவர்னரும், அவரது ஆலோசகர்களும் செயல்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. முதல்முறையாக அதிகாரவர்க்கத்தினர் மாற்றப்பட்ட துறைகளுக்குப் பொறுப்பான அமைச்சர்களின் கீழ் பணியாற்றினர்! அதனால் அதிகாரிகளின் மனப்பான்மையும்,

Scanned by CamScanner

அணுகுமுறையில் நல்ல முறையில் மாறத் தொடங்கியது. அமைச்சர்களால் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை செயல்படுத்த முடிந்தது. பொறுப்பாட்சிக்கு இந்தியர்கள் தகுதியானவர்களே என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டது.

இரட்டை ஆட்சியின் தோல்வி

இரட்டை ஆட்சியால் பல நன்மைகள் ஏற்பட்டாலும்கூட அப்பரிசோதனை தோல்வி அடைந்தது. மாநில நிர்வாகத்தை மாற்றப்பட்ட துறைகள் ஒதுக்கப்பட்ட துறைகள் என்று பிரித்தது தவறானது. இயற்கைக்கு முரணானது நடைமுறைக்கு ஒவ்வாதது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் கவர்னரால் நியமிக்கப்பட்டோரும் சேர்ந்து செயல்பட்டது எலியும் தவளையும் கால்களைக் கட்டிக்கொண்டு இணற்றுக்குள் குதித்த கதையாயிற்று. கவர்னரைச் சுற்றியே இரட்டை ஆட்சிமுறை சுழன்றது. அவரால் தேர்வு செய்யப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களே அமைச்சர்களாயிருந்தமையால் அவர்களால் சுதந்திரமாகச் செயல்பட முடியவில்லை. கவர்னரின் தயவை நாடியே அவர்கள் செயல்பட வேண்டியிருந்தது. அமைச்சர்கள் கவர்னருக்கு ஆலோசகர்கள் போன்றே இருந்தனர். சட்டமன்றம், கவர்னர் ஆகிய இரண்டு எஜமானர்களுக்கும் அமைச்சர்கள் கட்டுப்படவேண்டியதாயிற்று. அவர்கள் இரு தலைக்கொள்ளி எறும்பு போலாயினர். அவர்களால் இரண்டு குதிரைகளின் மீதும் ஒரே சமயத்தில் சவாரிசெய்ய முடியவில்லை! யாவற்றுக்கும் மேலாக அமைச்சர்களுக்கு நிதி அதிகாரம் எதுவுமில்லை. ஆனால் அவர்களது பொறுப்பிலிருந்த துறைகள் மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே கவனிக்கப்பட்டன. இந்திய விவகாரச் செயலரின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்ட அகில இந்திய பொதுப்பணி அதிகாரிகள் (I.C.S.) அமைச்சர்களுக்கு அடங்கி நடக்க வேண்டிய அவசியமில்லாமல் போயிற்று.

நாடு பஞ்சாப் படுகொலையைக் கண்டித்தும், இங்கிலாந்து துருக்கிக்குச் செய்த துரோகத்திற்கும் எதிராகப் போராடிக் கொண்டிருந்த வேளையில் இரட்டை ஆட்சிமுறை கொண்டு வரப்பட்டது. மக்களுக்கு அது பெரிய ஏமாற்றத்தையே அளித்தது. சுயராஜ்யக் கட்சியினர் இரட்டை ஆட்சிமுறையை தோற்கடிப்பதெனச் சூளுரைத்துச் செயல்பட்டனர். மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களைக் காங்கிரஸ் துவக்கத்திலிருந்தே எதிர்த்து வந்தது. சட்டமன்றத் தேர்தல்களிலும் அது கலந்து கொள்ளவில்லை. இங்கிலாந்தில் ஆட்சிக்கு வந்த கன்சர்வேடிவ் கட்சியினர் இரட்டை ஆட்சி சலுகையைக்கூட நீடிக்க விரும்பவில்லை! அதன் செயல் வேகத்தைக் குறைத்துவிட்டனர். தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட கிலாபத், ஒத்துழையாமை, சட்ட மறுப்பு இயக்கங்கள் இரட்டை ஆட்சி முறையை செயலிழக்கச் செய்துவிட்டன. 1937ல் மாநில சுயாட்சியை ஏற்படுத்தியதுதான் இரட்டை ஆட்சியின் சவப் பெட்டியில் அடிக்கப்பட்ட ஆணியாகும். இரட்டை ஆட்சி பரிசோதனை படுதோல்வி அடைந்தது. இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள் புதுப்பலத்துடன் தங்களது கிளர்ச்சியைத் தொடர்ந்தனர்.

19. கிலாபத் இயக்கம், 1919-1922

இந்திய இராணுவம் எனபது மகாத்மா காந்தியின் இராணுவம்தான். இந்தியப் போலீஸ் எனபது மகாத்மா காந்தியின் போலீஸ்தான் ஒவ்வொரு மனிதனும் காந்தி மதம், நாடு ஆகியவற்றின் பக்கம் இருக்கிறான் எனறு உறுதியாகக் கூறுகிறேன்

- முகமது அலி

கிலாபத் பிரச்சனை

'கலிபா' என்ற சொல்லின் அடிப்படையில் வந்ததே 'கிலாபத்'. கலிபா என்பவர் நீர்க்கதரின் முகமதுவின் (Prophet Mohammad) வழித்தோன்றல் ஆவார். அவர் முஸ்லீம் உலகத் தலைவராகக் கருதப்பட்டார். இந்திய முஸ்லீம்களும் கலீபாவைத் தங்களது சமயத் தலைவராகவே ஏற்றுக்கொண்டனர். ஆனால் முதல் உலகப்போரில் துருக்கி கல்தானான கலீபா ஜெர்மனிக்கு ஆதரவாக இருந்து கொண்டு பிரிட்டனுக்கு எதிராகப் போரிட்டமையால் இந்திய முஸ்லீம்களுக்குத் துருக்கி சுல்தானை ஆதரிப்பதா அல்லது பிரிட்டனுக்கு விசுவாசமாக இருப்பதா என்ற பிரச்னை எழுந்தது. அவர்கள் துருக்கி சுல்தானை அதாவது கிலாபத்தை ஆதரிப்பதென முடிவு செய்தனர். போர் முயற்சிகளில் இந்திய முஸ்லீம்களின் ஆதரவைப் பெரும்பொருட்டு பிரிட்டிஷ் பிரதமர் லாயிட் ஜார்ஜ் (Lloyd George) துருக்கி அனுதாபத்துடன் கவனிக்கப்படுமென்றும், சிறிய ஆசியா (Asia Minor)வில் துருக்கிக்குச் சொந்தமாக உள்ள புனிதத்தலங்களுக்கு எதிராக எதுவும் செய்யப்பட மாட்டாதெனவும், துருக்கியப் பேரரசு பாதுகாக்கப்படுமென்றும் உறுதி கூறினார் (1916 ஜனவரி 5) . அந்த உறுதியை நம்பி இந்திய முஸ்லீம்கள் போர் முயற்சிகளில் இங்கிலாந்துக்கு முழு ஆதரவையும் நல்கினர். ஆனால் போரின் முடிவில் நேநாடுகளுக்கெதிராகப் போரிட்ட மைய நாடுகளோடு துருக்கியும் தோல்வியுற்றதால் அதன் தலைவரான சுல்தானின் அதிகாரங்கள் பறிக்கப்பட்டதோடு துருக்கிப் பேரரசும் துண்டாடப்பட்டது! இதை நம்பிக்கைத் துரோகமாக, செய்நன்றி கொன்ற செயலாகக் கருதிய இந்திய முஸ்லீம்கள் தங்களது எதிர்ப்பைத் தெரிவித்து இங்கிலாந்துக்கெதிராகப் போராடத் தீர்மானித்தனர்.

கிலாபத் கிளர்ச்சி

நோக்கம்

கிலாபத் கிளர்ச்சியின் நோக்கங்கள் இரண்டு:

1. முதல் உலகப்போர் துவக்கப்பட்டபோது இருந்த நிலையில் துருக்கியப் பேரரசின் எல்லைகள் பாதுகாக்கப்பட வேண்டும்;

Scanned by CamScanner

2 துருக்கி சுல்தானின் ஆட்சி அதிகாரமும் சமயத் தலைமையும் முன்பிருந்தவாறே உறுதி செய்யப்பட வேண்டும். இவ்விரு நோக்கங்களையும் நிறைவேற்றும் பொருட்டு இந்திய முஸ்லீம்கள் கிலாபத் இயக்கத்தை துவக்கினர்.

அமைப்பு

அவ்வியக்கத்தை வழி நடத்துவதற்கென அகில இந்திய கிலாபத் குழு (All India Khilafat Committee), ஜமாத் அல்உலாமா இ ஹிந்த் (Jamat al-ulama-e- Hind) ஆகிய இரு அமைப்புகளையும் ஏறபடுத்தினர். முகமது சொட்டானி (Mahammad Chottani)யைத் தலைவராகக் கொண்ட கிலாபத் குழு பம்பாயில் அமைக்கப்பட்டது (1919 மார்ச் 20). அதன் கிளைகள் இந்தியா முழுவதும் துவக்கப்பட்டன. கிலாபத் பிரச்னை பற்றி முஸ்லீம்களிடையே பிரச்சாரம் செய்வதும் முஸ்லீம்களின் உணர்ச்சிகளுக்குச் செயல்வடிவம் கொடுப்பதும் கிலாபத் குழுவின் பொறுப்பாகும். அதற்கொத்த சமயப்பகுதியாக இயங்குவதே ஜமாத்தின் பொறுப்பாகும். முஸ்லீம் உலாமாக்களிடையே இணைப்பை ஏற்படுத்துவது, இஸ்லாமியர் சட்டப்படி தலைமையை உருவாக்குவது வெளியுலக இஸ்லாமியரோடு தொடர்பு கொள்வது, இந்தியாவிலுள்ள முஸ்லீம்களல்லாதாரோடு நட்புறவை வளர்த்தல் ஆகியவை ஜமாத்தின் கடமைகளாகும். சுருங்கக்கூறின் கிலாபத் குழுவும், ஜமாத்தும் கிலாபத் இயக்கத்தின் அரசியல், சமயக் கரங்களாக பயன்பட்டன.

கிலாபத் மாநாடு

முதல் கிலாபத் மாநாடு 1919 செப்டம்பர் 21 ஆம் நாள் லக்னோவில் நடைபெற்றது. அதில் இந்தியாவின் பல பகுதிகளிலுமிருந்தும் வந்த 400 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அலி சகோதரர்களும் - முகமது அலி, ஷவுக்கத் அலி - மௌலானா அபுல்கலாம் ஆசாத்தும் அம்மாநாட்டில் முக்கியப் பங்கேற்றனர். கிலாபத் இயக்கத்தைக் காந்தி முழுமனதுடன் ஆதரித்தார். இந்து முஸ்லீம் ஒற்றுமையின் அடிப்படையில்தான் இந்திய சுயராஜ்யத்தை அடைய முடியும், அடைய வேண்டும் என்று உறுதியாக நம்பிய அவர் அத்தகைய ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான அரிய வாய்ப்பாக கிலாபத் இயக்கத்தைக் கருதினார். அக்டோபர் 17ஆம் நாளைக் கிலாபத் தினமாக (Khilafat Day) நாடு முழுவதும் கொண்டாடப்பட வேண்டுமென்று கிலாபத் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. அதன்பின் அலி சகோதரர்களும் காந்தியும் பிரச்சார பிரயாணத்தை மேற்கொண்டு கிலாபத் தினத்தை அனுசரிப்பதற்கு ஆதரவு திரட்டினர்.

கிலாபத் தினம்

கிலாபத் மாநாட்டில் முடிவு செய்தவாறு அக்டோபர் 17ஆம் நாளன்று நாடு முழுவதிலும் கிலாபத் தினம் அனுசரிக்கப்பட்டது. கிலாபத் தினம் அமைதியாக, யார்மீதும் எவ்விதக் காட்டாயமுமின்றி உண்ணாநோன்பிருந்து பிரார்த்தனைக் கூட்டத்தோடு தக்க முன்னேற்பாட்டுடன் அர்த்தால் செய்து கொண்டாடப்படல் வேண்டுமென டாக்டர் அன்சாரி (Dr. Ansari) இந்திய முஸ்லீம்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். அதேபோன்ற வேண்டுகோளை இந்துக்களுக்கு காந்தி

விடுத்தார். கிலாபத் நாளன்று பூரண அர்த்தால் அனுசரிக்கப்பட வேண்டுமென ஹஸ்ரத் மொஹானி (Hasrat Mohani) கேட்டுக் கொண்டார்.

தலைவர்கள் விடுத்த வேண்டுகோளின்படி கிலாபத் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பம்பாய் முஸ்லீம்கள் நடத்திய சிறப்பு வழிபாட்டில் காந்தி கலந்து கொண்டார். கிலாபத் தலைவர்களோடு சேர்ந்து பொதுக்கூட்டத்தில் பேசினார். லக்னோ உடன்பாட்டின் 1916 முக்கியத்துவம் பற்றி மக்களுக்கு நினைவூட்டப் பெற்றது. சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தில் 20,000க்கும் மேற்பட்ட இந்துக்களும் முஸ்லிம்களும் கலந்து கொண்டனர். கல்கத்தாவிலும் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக இருந்த பிற பகுதிகளிலும் கிலாபத் பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. டில்லியில் 50,000க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்ட கூட்டத்தில் டாக்டர் அன்சாரி, மப்பு சுபாயத்துல்லா, ஆசப்அலி, சுவாமி சிரத்தானந்தா ஆகியோர் உரையாற்றினர். இந்துவில் தலித்தலைவர்கள் இராமங்களில் இங்கிலாந்திற் கெதிரான கண்டனக் கூட்டங்களை நடத்தினர். எல்லா இடங்களிலும் முஸ்லிம்களே பெரும்பான்மையாகக் கலந்துகொண்டாலும்கூட கிலாபத் தினம் முழுவெற்றி பெற்றது என்றே கூற வேண்டும்.

கிலாபத் தூதுக்குழு

டில்லியில் கூடிய இரண்டாவது கிலாபத் மாநாடு (நவ 23, 24) கிலாபத் இயக்கத்திற்கான செயல்திட்டத்தைத் தீர்மானித்தது. அதன்படி டிசம்பர் மாதம் அரசாங்கம் நடத்தவிருந்த வெற்றி விழாக் கொண்டாட்டத்தைப் புறக்கணிப்பதென்றும், அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதில்லையென்றும் தீர்மானித்தது. பொருள்களைப் புறக்கணிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது. மாநாட்டின் இரண்டாம் நாள் கூட்டத் தலைவராகக் காந்தி ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சுவாமி சிரத்தானந்தா, மாளவியா, நேரு போன்றோரும் அக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். கிலாபத் இயக்கத்துக்கு இந்துக்களின் முழுஆதரவுண்டு எனக் காந்தி பேசினார். டிசம்பர் மாதம் காங்கிரஸ், முஸ்லீம் லீக், கிலாபத் குழு ஆகிய மூன்று அமைப்புகளும் கிலாபத் இயக்கத்துக்குத் தங்களது ஒருமித்த ஆதரவைத் தெரிவிப்பதற்காக கூடின. இங்கிலாந்து, அமெரிக்கா, கான்ஸ்டான்டிநோபிள் ஆகிய நாடுகளுக்குக் கிலாபத் தூதுக் குழுக்களை அனுப்புவதென்றும் பத்து இலட்சம் ரூபாய் கிலாபத் நிதி திரட்டுவதென்றும், கிலாபத் அமைப்பை விரிவுபடுத்துவதென்றும் கிலாபத் குழு முடிவு செய்தது.

கிலாபத் குழு மேற்கொண்ட முடிவின்படி அலி சகோதரர்களும் பிறரும் இங்கிலாந்து சென்றனர் (1920 பிப்). அங்கு மாண்டேகுவின் துணைச் செயலரான எச்.எ.எல்.பிஷருடன் அத்தூதுக் குழு கிலாபத் பிரச்னை பற்றி விவாதித்தது (மார்ச் 2). தூதுக்குழுவினர் பிரதமர் லாயிட் ஜார்ஜையும் சந்தித்துப் பேசினர் (மார்ச் 17). பின்னர் தூதுக்குழு பாரீஸ் சென்றது. அங்கு அமைதி மாநாட்டுக்கு (Peace Conference) வந்திருந்த பிரதிநிதிகளிடம் கிலாபத் பற்றித் தூதுக் குழுவினர் எடுத்துக் கூறினர். அதிகாரிகளுடன் விவாதித்தனர். பொதுக் கூட்டங்களில் பேசினர். பிறகு ரோமாபுரிக்கு (Rome)ச் சென்று போப் பாண்டவரைச் சந்தித்து

Scanned by CamScanner

உரையாடினர். இவ்வாழ்த்தும் பிறகு வெளியான செவ்ரெஸ் உடன்படிக்கை (Treaty of Sevres)யும் (1920 மே) அதைத் துருக்கி ஏற்றுக் கொண்டது இலாபத் தூதுக்குழுவுக்குப் பெரிடியாக இருந்தது. அவர்கள் வெறுங்கையோடு ஊர் திரும்பினர்.

கிலாபத் இயக்கம்

இலாபத் தூதுக்குழு இங்கிலாந்திலும் ஐரோப்பிய நாடுகளிலும் கற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த சமயத்தில் இந்தியாவில் கிலாபத் இயக்கம் திக்குத் தெரியாமல் சென்று கொண்டிருந்தது. கிலாபத் மாநாடு பம்பாயில்கூடி (1920 பிப்ரவரி) கிலாபத் அறிக்கை (Khilafat Manifesto)யையும், கிலாபத் குழுக்கான அரசியல் அமைப்பை (Constitutionfor the Khilafat Committee)யும் வெளியிட்டது. வங்காள மாநில கிலாபத் குழு கல்கத்தாவில் கூடி (பிப்.28,29) மார்ச் 19ஆம் நாளைக் கிலாபத் தினமாகக் கொண்டாடுவதென அறிவித்தது. காந்தி தனது அகிம்சைத் தத்துவத்தையும் ஒத்துழையாமைத் திட்டத்தையும் உள்ளடக்கிய அறிக்கையை (Gandhiji's Manifesto) வெளியிட்டார் (மார்ச் 10). மார்ச் 19 அன்று இந்தியாவின் பெரிய நகரங்களிலெல்லாம் கிலாபத் தினம் அனுசரிக்கப்பட்டது. பொதுக்கூட்டங்கள், நிறப்பு வழிபாடுகள், வேலைநிறுத்தங்கள் ஆகியவை அன்று நடத்தப்பட்டன. மீரட்டில் நடைபெற்ற ஐக்கிய மாகாண கிலாபத் குழுக்கூட்டத்தில் காந்தி ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டார். அதாவது இந்துக்களும் முஸ்லீம்களும் டில்லியில்கூடி ஒரு நான்கு அம்ச ஒத்துழையாமைத் திட்டத்தை முடிவு செய்திருப்பதாக அறிவித்தார். கவுரவப் பட்டங்களைத் துறத்தல், அரசாங்கப் பணியிலிருந்து விலகல், போலீஸ் இராணுவப் பணியிலிருந்து விலகல், வரிகொடாமை ஆகியவையே அந்த நான்கம்ச ஒத்துழையாமைத் திட்டமாகும்.

பஞ்சாப் படுகொலை பற்றிய ஹண்டர் குழு அறிக்கை வெளியானதும் காந்தி அதை உடும்புப்பிடியாகப் பிடித்துக் கொண்டு அதோடு கிலாபத் பிரச்னையையும் சேர்த்துக்கொண்டு தனது ஒத்துழையாமை இயக்கத்தை (Non-Cooperation Movement) வலுப்படுத்தத் துவங்கினார். முஸ்லீம்களின் கிலாபத் கோரிக்கைகளுக்கு காந்தி காட்டிய அனுதாபத்திற்கு இந்துக்களிடையே போதிய ஆதரவின்மையால்தான் அவர் ஆங்கிலேய அரசாங்கத்துக் கெதிரான ஒத்துழையாமை இயக்கத்தைத் தனியே துவக்கினார் என்று ஜெயில் மீனால்ட் (Gail Minault) என்ற கிலாபத் இயக்க ஆராய்ச்சியாளர் கருதுகிறார். கிலாபத் குழு ஏற்பாடு செய்த பம்பாய்க் கூட்டத்தில் கலந்து கொண்டுபேசிய காந்தி அகிம்சை வழியில் ஒத்துழையாமைத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டிய இன்றியமையாமை பற்றி உணர்ச்சியோடு பேசினார். அகில இந்திய கிலாபத் குழு நியமித்த 'ஒத்துழையாமைக் குழு' ஒரு அறிக்கையை வெளியிட்டது (ஜூன் 2). அதில் ஆகஸ்டு முதல் தேதியன்று ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்குவதற்கான செயல்திட்டத்தை அறிவித்தது. கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் சிறப்புக்கூட்டம் (செப் 4-6) காந்தி கொண்டு வந்த ஒத்துழையாமைத் தீர்மானத்தை

அங்கீகரித்தது. அதன்பின் முஸ்லீம்கள் துவக்கிய கிலாபத் இயக்கமும், காந்தி துவக்கிய ஒத்துழையாமை இயக்கமும் ஒன்றாக இணைந்து ஆங்கிலேய ஆட்சிக்கெதிரான பொதுப் போராட்டமாயிற்று. அப்பொதுப் போராட்டம் காந்தியின் தலைமையில் நடைபெற்றது. கிலாபத் குழுவும், காங்கிரசும் காந்தி காட்டிய வழியில் வெல்லப்பட்டன.

கிலாபத் இயக்கத்தின் தோல்வி

காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தோடு கிலாபத் இயக்கமும் வேகமாக வளர்ந்தது. ஆனால் வெளிவேறு சம்பவத்தையடுத்து காந்தி தனது ஒத்துழையாமை இயக்கத்தைத் திடீரென நிறுத்தியவுடன் 1922 பிப்ரவரி 12 கிலாபத் இயக்கம் வலுவிழந்தது. வலுவுந்த நிலையிலும் அவ்வியக்கம் தொடர்ந்தது. ஆயினும் துருக்கிய ஆட்சியை முஸ்தபா கமால் பாட்சா கைப்பற்றியவுடன் துருக்கிய கல்தானின் முடியாட்சிக்கு முடிவு கட்டப்பட்டது. துருக்கி குடியரசாயிற்று. கிலாபத் பதவி நீக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிகள் கிலாபத் இயக்கத்தின் அடிப்படையையே தகர்த்தெறிந்துவிட்டன. கிலாபத் இயக்கம் தோல்வியுற்றது. கிலாபத் தலைவர்கள் தேசிய முஸ்லீம்கள் என்றும், கிலாபத் முஸ்லீம்கள் என்றும் இரு பகுதியினராகப் பிரிந்தனர். டாக்டர் அன்சாரி, அபுல்கலாம் ஆசாத், ஹகிம் அஜ்மல்கான், யாகூப்ஹாசன் போன்ற தேசிய முஸ்லீம்கள் காங்கிரசுடன் இணைந்தனர். அலி சகோதர்களும் பிறரும் தேசிய இயக்கத்திலிருந்து ஒதுங்கி மறைந்தனர்.

மதிப்பீடு

கிலாபத் இயக்கம் அடிப்படையிலேயே ஒரு சமயச் சார்புடைய இயக்கமாகும். இந்திய எல்லைக்கப்பாற்பட்ட உலக இஸ்லாமியத் தொடர்புடைய (Pan-Islamic) இயக்கம் அது. பிரிட்டிஷ் அரசாங்கம் துருக்கி சுல்தானுக்கிழைத்த அநீதிக்கெதிராகத் துவக்கப் போராட்டமே கிலாபத் இயக்கமாகும். இந்து-முஸ்லீம் ஒற்றுமையை ஏற்படுத்தி அதன்பின் சுயராஜ்யத்துக்காகப் போராடுவதற்காக கிலாபத் இயக்கத்தைப் பயன்படுத்திக் கொள்ளப் பார்த்தார் காந்தி! முஸ்லீம்களின் இன ஒற்றுமையை காந்தியின் மூலம் உறுதிப் படுத்திக்கொள்ள முயன்றனர் முஸ்லீம்கள்! எது எவ்வாறாயினும் இந்துக்களும் முஸ்லீம்களும் தங்களுக்கிடையே எவ்வித வேறுபாடுன்றிப் போராடினர். அவர்களுக்கிடையே இருந்த மாறுபாடுகளனைத்தும் முழுவதுமாக மறைந்துவிட்டது போலத் தோன்றியது என்கிறார் சந்தியா சௌத்ரி. கிலாபத் இயக்க மின்றேல் முஸ்லீம்களின் அமோக ஆதரவு ஒத்துழையாமை இயக்கத்துக்குக் கிடைத்திருக்காது என்பது பி.ஆர் நந்தாவின் கணிப்பாகும். 1857க்குப் பிறகு கிலாபத் இயக்கத்தின் போதுதான் முஸ்லீம்கள் ஆங்கிலேய ஆட்சிக்கெதிராகப் போராடினார்கள். இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றிலேயே ஆங்கிலேய ஆதிக்கத்துக்கெதிராக இந்துக்களும் முஸ்லீம்களும் இணைந்து இந்த அளவுக்கு இதற்கு முன்போ அல்லது பின்போ போராடியதில்லை.

Scanned by CamScanner

கிலாபத் இயக்கத்தின் நோக்கம் துருக்கி கல்தானின் நிர்வாக சமயத் தலைமை பாதுகாக்கப்பட வேண்டுமென்பதே தவிர இந்து முஸ்லிம் ஒற்றுமையை வளர்ப்பதோ அல்லது இந்தியாவை அந்திய ஆதிக்கத்திலிருந்து விடுவிப்பதோ அல்ல. கிலாபத் இயக்கத்தின்போது முஸ்லிம் மௌல்விகளும் பிற முஸ்லிம் சமயத் தலைவர்களும் பெருவாரியாக ஈடுபட்டமையால் இந்திய தேசிய போராட்டத்துக்குச் சமயச் சாயம் பூசப்பட்டது. காந்தி நல்ல எண்ணத்தோடு சமயத்தை அரசியலில் புகுத்தினார். ஆனால் அது பாகிஸ்தான் பிரிவினையில் போய் முடியும் என்பதை அவர் உணரவில்லை என்கிறார் எம்.எம். சங்கர் சமயச் சார்புடையதாக இருந்தமையால் அன்னிபெசண்ட், பிபின் சந்திர பால், ஜின்னா போன்றோர் கிலாபத் இயக்கத்தை எதிர்த்தனர். கிலாபத் இயக்கத்தின்மூலம் இந்தியத் தேசிய அரசியலில் சமயம் புகுத்தப்படுவதை ஜின்னா வன்மையாகக் கண்டித்தார். மேலும் போருக்குப்பின் துருக்கிப் பேரரசிலிருந்து பிரிக்கப்பட்ட பகுதிகளில் வாழ்ந்த அரேபியர்கள் போர் நடக்கையில் கல்தானின் அடக்குமுறையைக் கண்டித்து துருக்கிக்கெதிரான பிரிட்டனை ஆதரித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. கமால் பாட்சா கலீபாவையே ஒழித்துவிட்டார். மலபார் மாப்பிள்ளைகள் கிளர்ச்சி, இந்து-முஸ்லீம் ஒற்றுமை வெறும் கானல்நீர் என்பதை நிரூபித்தது. கிலாபத்-ஒத்துழையாமை இயக்கத்துக்குப் பின்னர் இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கு மிடையே பரஸ்பர அவநம்பிக்கையும் சந்தேகமும் வளரவே செய்தன. கிலாபத் இயக்கத்தின்போது ஏற்பட்ட இந்து-முஸ்லீம் ஒற்றுமை செயற்கையான, போலியான ஒற்றுமையேயன்றி உண்மையான மனமாற்றத்தால் ஏற்பட்ட ஒற்றுமையல்ல என்பதைப் பின்னர் நடந்த நிகழ்ச்சிகள் தெளிவாகக் காட்டின.

20. ஒத்துழையாமை இயக்கம், 1920-22

ஒத்துழையாமை இயக்கம் மக்களை புதிய நம்பிக்கையோடு புதிய எதிர்பார்ப்போடு சுதந்திரத்துக்காகப் போராடும் ஆற்றலைப் பெறுவதற்கான புனித தூவக்கமாகும்

- ஆர்.சி. மகும்தார்

சூழ்நிலைகள்

ஆங்கிலேய அரசாங்க விசுவாசியாக இருந்த காந்தி அரசாங்க விரோதியானார். முதல் உலகப்போரின்போது அரசாங்கத்தின் போர் முயற்சிகளுக்காக முன்னின்று ஒத்துழைப்பு நல்கிய காந்தி போர் முடிந்த பின்னர் ஆட்சிக்கெதிராகப் போராட்டத்தைத் துவக்கினார். காந்தியின் நோக்கிலும் போக்கிலும் ஏற்பட்ட இந்த அடிப்படை மாற்றத்திற்குப் பல காரணங்கள் இருந்தன. போர்க் காலத்தில் இங்கிலாந்து இக்கட்டான நிலையில் இருந்தபோது இந்திய மக்கள் காலத்தால் உதவி செய்தனர். ஆனால் செய்நன்றி கொன்ற அரசு அவர்களைப் பாராட்டுவதற்குப் பதில் ரௌலட் சட்டத்தை இயற்றித் தண்டிக்கத் துடித்தது. பஞ்சாப் படுகொலையும் அதையொட்டிப் பிறப்பிக்கப்பட்ட இராணுவச் சட்ட நடவடிக்கைகளும் காந்தியின் உள்ளத்தில் வேதனை வடுக்களை உண்டாக்கின. பஞ்சாப் நிகழ்ச்சிகளைப் பற்றி விசாரித்த ஹண்டர் குழு அறிக்கையும், அதுபற்றி பிரிட்டிஷ் பாராளுமன்ற விவாதங்களும் பாதிக்கப்பட்ட இந்தியருக்கு நீதி வழங்குவதற்கான நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை. பிரிட்டிஷ் அரசாங்கம் துருக்கிச் சுல்தானுக்கிழைத்த நம்பிக்கை துரோகம் காந்தியை அதிர்ச்சியடையச் செய்தது. இத்தகைய சூழ்நிலையில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நீதி நியாய உணர்வில் காந்திக்கிருந்த நம்பிக்கை அற்றுப் போயிற்று. எனவே, இந்த அநீதிகளுக்கெல்லாம் தீர்வு காண ஆத்ம ஆற்றலை அடிப்படையாகக் கொண்ட சாத்வீக ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்கத் தீர்மானித்தார் காந்தி.

ஒத்துழையாமைத் தீர்மானம்

1918 மார்ச் மாதத்திலேயே பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கெதிரான இந்திய முஸ்லீம்களின் மனக்கசப்பில் இந்திய சுயராஜ்யத்துக்கான இறவுகோலைக் கண்டார் காந்தி என்று ஜெயில் மினால்ட் (Gail Minault) குறிப்பிட்டுள்ளார். இந்து-முஸ்லீம் ஒற்றுமையை உறுதி செய்து கொண்டு ஆங்கிலேய ஆட்சியோடு மோத வேண்டாம் என்ற எண்ணத்தில்தான் காந்தி கிலாபத் இயக்கத்தை தீவிரமாக ஆதரித்தார். அதற்கு பிரதிபலனாக முஸ்லீம்கள் காந்தி துவக்கிய ரௌலட் சத்தியாக்கிரகத்துக்கு ஆதரவளித்தனர். 1920 மார்ச் 10ஆம் நாள் கிலாபத் மாநாடு பின்பற்றுவதற்கான செயல்திட்டம் பற்றிய அறிக்கையை (Gandhiji's

Scanned by CamScanner

Manifesto) வெளியிட்டார் காந்தி. அந்த அறிகையில்தான் காந்தி முதன்முதலாகத் தனது ஒத்துழையாமை இயக்கம் பற்றிய திட்டத்தை விரிவாகக் கூறியதாக பி பட்டாபி சீதாராமையா கருதுகிறார். காந்தியின் அறிக்கையில் அடிப்படையில்தான் இலாபத் மாநாடு நியமித்த குழு ஒத்துழையாமைத் திட்டத்தைப் பற்றிய தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது (1920 ஜூன் 2). அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தபடி ஒத்துழையாமைத் திட்டம் ஆகஸ்டு முதல் தேதியன்று செயல்படுத்தப்பட்டது. அந்த முக்கியத் திட்டத்தைப்பற்றி முடிவெடுக்க லாலா லஜபதிராய் தலைமையில் சிறப்பு காங்கிரஸ் கல்கத்தாவில் கூடியது (செப்.4-9). அக்கூட்டத்தில் ஒத்துழையாமை இயக்கத்தைப் பற்றிய தீர்மானத்தைக் காந்தி முன்மொழிய டாக்டர் கிட்சலு வழிமொழிய மோதிலால் நேருவும், அலி சகோதரர்களும் ஆதரித்தனர். சி.ஆர்.தாஸ், பி.சி.பால், எம்.எம்.மாளவியா போன்றோர் அத்தீர்மானத்தைக் கடுமையாக எதிர்த்தனர். எனினும் ஒத்துழையாமைத் தீர்மானம் 1655க்கு 873 என்ற வித்தியாசத்தில் நிறைவேற்றப்பட்டது. சிறப்பு காங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட அத்தீர்மானத்தை நாகபுரி காங்கிரஸ் (1920 டிசம்பர்) அங்கீகரித்தது. நாகபுரியில் கூடிய காங்கிரஸ் தான் காங்கிரஸின் அரசியலமைப்பு திருத்தப்பட்டு அதன் குறிக்கோள் தெளிவாக்கப்பட்டு மக்கள் அமைப்பாக மாற்றப்பட்டது. நாகபுரி காங்கிரஸில்தான் அரசியல் விடுதலைக்கான அகில இந்திய ஒத்துழையாமை இயக்கத்தின் தன்னிகரற்ற தலைவராக காந்தி அங்கீகரிக்கப்பட்டார்.

இயக்கத் திட்டம்

1920 மார்ச் 10ஆம் நாள் வெளியிடப்பட்ட காந்தியின் அறிக்கையில் அடிப்படையில் உருவாக்கப்பட்டதுதான் நாகபுரி காங்கிரஸில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒத்துழையாமைத் தீர்மானம். அத்தீர்மானம் இரண்டு அம்ச ஒத்துழையாமைத் திட்டத்தை அங்கீகரித்தது; ஒன்று எதிர்மறை (Negative)த் திட்டம்; மற்றது உடன்பாட்டு (Positive)த் திட்டம். சட்டமன்ற, நீதிமன்ற கல்வி நிலைய, போலீஸ், இராணுவப் புறக்கணிப்பு, வெளிநாட்டுப் பொருள் விலக்கம், வரி கொடாமை ஆகியவை எதிர்மறைத் திட்டத்தில் அடங்கும். சுதேசி, கதர் நூற்றல், நெய்தலை ஊக்குவித்தல், தீண்டாமை நீக்கம் மூலம் சமுதாயச் சமத்துவம், இந்து-முஸ்லீம் ஒற்றுமை ஆகியவை உடன்பாட்டுத் திட்டத்தில் அடங்கும்.

சட்டமன்றப் புறக்கணிப்பு

இந்தியச் சட்டமன்றங்களை களங்கப்பட்ட அமைப்புகளாகக் கருதினார் காந்தி. அவை அரசியல் தூய்மையைக் கெடுப்பதாகக் கருதினார் அவர். எனவே சட்டமன்றங்களைப் புறக்கணிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளப்பட்டது. 1920 நவம்பரில் நடக்கவிருந்த சட்டமன்றத் தேர்தலையொட்டி ஒத்துழையாமை இயக்கம் துவக்கப்பட்டதால் ஆபேட்சகர்கள் போட்டியிட வேண்டாம் என்றும், போட்டியிடும் வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டாம் என்றும் போட்டி பிரச்சாரம் செய்யப்பட்டது. காங்கிரஸ் இலாபத் தலைவர்கள் சட்டமன்ற புறக்கணிப்புக்கு ஆதரவாக சுறாவளிச் சுற்றுப் பயணங்களை மேற்கொண்டனர். பஞ்சாப், பம்பாய், பிகார், ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம் ஆகியவற்றில் சட்டமன்றப் புறக்கணிப்பு நல்ல பயனைத் தந்தது. சில இடங்களில்

வாக்குப்பெட்டிகள் காலியாகவே இருந்தன. இத்தேர்தலில் காங்கிரஸ் கூட்டுப்பாட்டை மீறி மிதவாதிகளும், மிதவாத கட்சியினரும் போட்டியிட்டனர். ஒரு சில இடங்களைத் தவிர சட்டமன்றப் புறக்கணிப்பு முழு வெற்றியைத் தந்ததாகக் கூறியுள்ளார் ஜே.பி.கிருபளானி.

நீதிமன்றப் புறக்கணிப்பு

நீதிமன்றங்களை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் எச்சங்களாகவும், சிக்கேட்டின் சதுப்பு நிலங்களாகவும் கருதினார் காந்தி. நீதிமன்றங்களை புறக்கணித்து, மக்களின் வழக்குகளைப் பஞ்சாயத்து மன்றங்களின்மூலம் தீர்த்துக் கொண்டால் ஆங்கிலேய ஆதிக்கத்தைத் தாங்கிக் கொண்டிருக்கும் தூண்களில் ஒன்று வீழ்ந்துவிடும் என்று எண்ணினார் அவர். அதன்படி நூற்றுக்கணக்கான வழக்கறிஞர்கள் தங்களது தொழிலைத் துறந்தனர். தமிழ்நாட்டில் வக்கீல் தொழிலை விட்டவர்கள் தான் ஒத்துழையாமை இயக்கத்தில் தீவிரப் பங்கு கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார் எஸ்.கோபாலகிருஷ்ணன். புகழ்பெற்ற பிரபல வழக்கறிஞர்களாகத் திகழ்ந்த லாலா லஜபதிராய், சி.ராஜகோபாலாச்சாரி, டி.பிரகாசம் போன்றோர் அதிக வருவாய் தரக்கூடிய வக்கீல் தொழிலைவிட்டு நீதிமன்றங்களைப் புறக்கணித்தனர். வக்கீல் வேலையை விட்டதால் துன்புறுவோருக்கு உதவ சேத் ஜம்னாலால் பஜாஜ் நிதி சேர்த்துக் கொடுத்தார். பல வழக்குகள் பஞ்சாயத்து நீதிமன்றங்களில் தீர்த்துக் கொள்ளப்பட்டன. அரசாங்கத்தின் முத்திரை வருவாய் (Income from Stamps) கணிசமாகக் குறைந்தது.

கல்விக்கூடப் புறக்கணிப்பு

அரசாங்கக் கல்விக் கூடங்களில் கல்வி கற்பது பாவம் எனக் கருதினார் காந்தி. ஆங்கிலக் கல்வி நஞ்சு கலந்த பால் போன்றது என்று வர்ணித்தார் அவர். காந்தியின் கட்டளைக்கிணங்க அலிகார் எம்.எ.ஓ.கல்லூரி மாணவர்கள் கூட்டம் போட்டுக் கல்லூரியைப் புறக்கணித்து ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபடுவதென முடிவெடுத்தனர். கல்லூரியை விட்டு வெளியேறினர். பல அரசாங்கப் பள்ளிகள் மூடிக்கிடந்தன. காசி இந்து பல்கலைக் கழகம் மாணவர்களின் வேலை நிறுத்தத்தால் செயலிழந்தது. வங்காளத்தில் அனைத்து அரசாங்கக் கல்விக் கூடங்களும் மூடப்படுவதற்கு சி.ஆர்.தாஸ், அபுல் கலாம் ஆசாத் போன்றோர்களின் பிரச்சாரம் காரணமாயிருந்தது. நான்கு மாதங்களுக்குள் அலிகார் தேசிய முஸ்லீம் பல்கலைக் கழகம், குஜராத் வித்யாபீத், பிஹார் வித்யாபீத், காசி வித்யாபீத், வங்காள தேசியப் பல்கலைக் கழகம், இலகர் மகாராஷ்டிரா வித்யாபீத் மற்றும் நூற்றுக்கணக்கான தேசியப் பள்ளிகளும் நாடெங்கும் துவக்கப்பட்டன.

விதேசித் துணிப் புறக்கணிப்பு

வெளிநாட்டுத் துணியைத் தொட்டாலே தீட்டுப்பட்டு விடும் எனக் கருதியவர் காந்தி. இந்தியத் துணித் தொழில் நலிந்து போனதற்குக் காரணமே மேலைநாட்டுத் துணி இறக்குமதியேயாகும். எனவே விதேசித் துணியைக் கொளுத்துவதன் மூலம் எதிர்ப்பைக் கூறுவதற்கான நாளும் குறிப்பிடப்பட்டது. பம்பாயில் நடைபெற்ற சொக்கப் பனையில் (Bonfire) காந்தியும் கலந்து கொண்டார்.

Scanned by CamScanner

அலகாபாத்தில் ஐவகர்லால் நேருவின் தூண்டுதலால் அந்நியத் துணியை வாங்குவதில்லையெனத் துணி வியாபாரிகள் சபதமெடுத்தனர். விதேசி துணிப் புறக்கணிப்பை வெற்றிகரமாகச் செயல்படுவதை உறுதி செய்வதற்கென 'வியாபாரி மண்டல்' எனும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. வங்காளத்திலும், ஐக்கிய மாகாணத்திலும் விதேசித் துணி விற்பனை செய்யும் கடைகளைக் காங்கிரஸ்காரர்களும், கிலாபத் தொண்டர்களும் மறியல் செய்தனர். தமிழ்நாட்டில் பல இடங்களில் துணி வியாபாரிகளே அந்நியத் துணி எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு ஆதரவாக இருந்தனர்.

போலீஸ் இராணுவப் புறக்கணிப்பு

புறக்கணிப்புப் போராட்டத்திலேயே மிகவும் தீவிரமானதெனக் கருப்பட்டது போலீஸ், இராணுவப் பணிப் புறக்கணிப்பேயாகும். ஒத்துழையாமைத் திட்டத்தில் இதுபற்றித் தெளிவாகக் கூறப்படவில்லையாயினும் காந்தி உரிய நேரத்தில் விளக்கமும் செயல் திட்டமும் தருவார் என எதிர்பார்க்கப்பட்டது. காந்தியும் காங்கிரசும் இதுபற்றித் தயங்கிக் கொண்டிருந்த போது கிலாபத் முஸ்லீம்கள் தீவிரமாகச் செயல்பட்டனர். அவர்கள் போலீஸ், இராணுவப் பணித் துறப்பில் குறியாக இருந்தனர். இராணுவத்தில் பணிபுரிவதோ அல்லது பட்டாளத்துக்கு ஆள்ச் சேர்க்க உதவி செய்வதோ இஸ்லாமிய நம்பிக்கைக்கும், சட்டத்திற்கும் விரோமானதென்று 1921 ஜூலை மாதம் அகில இந்திய கிலாபத் குழு அறிவித்தது. இராணுவத்தில் பணிபுரியும் முஸ்லீம்கள் இஸ்லாமிய சட்டங்களை மீறியவர்களாவர் என சமயக் கட்டளையும் (Fatwa) பிறப்பிக்கப்பட்டது. இதுபற்றிய முஸ்லீம் இராணுவ வீரர்களிடையே பிரச்சாரம் செய்யும்பொருட்டு அலிகார் பல்கலைக் கழக மாணவர்கள் பஞ்சாபுக்கும் எல்லைப்புறப் பகுதிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர். இது சம்மந்தமாக அலி சகோதரர்கள் கைது செய்யப்பட்டபோது அவர்களை ஆதரித்த காந்தி 'எந்த இந்தியனும் இராணுவத்திலும் அரசுத் துறையிலும் பணியாற்றுவது பாவம்' என்று கூறினார். போலீஸ் படையிலிருந்து குறிப்பாக ஐக்கிய மாகாணம், வங்காளம், பம்பாயில் நிறுத்தப்பட்டிருந்த போலீஸ் படைகளிலிருந்து பல முஸ்லீம்கள் பதவி விலகினர்.

சுதேசி நிர்மாணத் திட்டம்

இதைச் செய்யக்கூடாதெனக் கட்டளையிட்ட காந்தி இவற்றைச் செய்ய வேண்டுமென்றும் வலியுறுத்தத் தவறவில்லை. ஒத்துழையாமை இயக்கத்தின்போது சுதேசி நிர்மாணத் திட்டம் தேசம் முழுவதும் பின்பற்றப்பட்டது. வங்கப் பிரிவினையை எதிர்த்துத் துவக்கப்பட்ட சுதேசி இயக்கத்தைப் பின்பற்றி காந்தி இந்நிர்மாணத் திட்டத்தைப் பொருளாதார நல நடவடிக்கையாக மட்டும் கொள்ளாமல் சமயக் கடமையாகவும் கருதினார். ராட்டையில் கதர் நூல் நூற்றலும், கதர் நெசவும் மக்களிடையே பரப்பப்பட்டன. கதர்நூல் நூற்பதும், கதராடை அணிவதும் நாட்டுப் பற்றுமிக்க தேசியப் போராட்ட வீரரின் சின்னமாயிற்று. அரசியல் தொண்டர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள் ஆகிய அனைவரும் கதர் நூல் நூற்கவும், கதராடை அணியவும் முற்பட்டனர். கிராமக் குடிசைக் கைத்தொழில்கள் ஊக்குவிக்கப்பட்டன. ஒரு கோடி ரூபாய்க்கு மேல் சேர்ந்த திலகர் நிதி, கதர்

அபிவிருத்திக்கும், ராட்டை விநியோகத்துக்கும் பயன்படுத்தப்பட்டது. கதரியக்கத்தில் நேரடி இலட்சம் தொண்டர்களுக்குமேல் சேர்ந்தனர். இலட்சக்கணக்கான ராட்டைகள் விநியோகிக்கப்பட்டன. அதேபோல் பொருள்களை விற்பனை செய்வதற்காக 'சுதேசிக் கடைகள்' திறக்கப்பட்டன.

கன்னாட் கோமகன் வருகைப் புறக்கணிப்பு

மான்டேகு செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தத்தின்படி அமைக்கப்பட்ட சட்டமன்றத்தைத் துவக்கி வைப்பதற்காக வேல்ஸ் இளவரசர் வருவதாக இருந்தது. ஆனால் இந்தியாவில் அரசியல் சூழ்நிலை சரியாக இல்லாமையால் அவருக்குப் பதில் கன்னாட் கோமகன் (Duke of Connaught) வருகை புரிந்தார். கடந்த காலத் தவறுகளை மறந்து மன்னிக்குமாறு அவர் மக்களைக் கேட்டுக் கொண்டார். எனினும் மக்கள் மறக்கவோ மன்னிக்கவோ தயாராயில்லை. முதலில் சென்னைக்கு வந்த கன்னாட் கோமகனை (1921 ஜனவரி 10) மக்கள் புறக்கணித்தனர். கடைகள் அடைக்கப்பட்டன. அன்று மாலை நடைபெற்ற மெரீனா கடற்கரைக் கூட்டத்தில் கோமகனது வருகை கண்டிக்கப்பட்டது. கடற்கரையின் மற்றொரு பக்கத்தில் நீதிக் கட்சியினர் அவருக்கு வரவேற்பளித்தனர். இரண்டு நாட்களுக்குப் பின்னர் கோமகன் சென்னை சட்டமன்றத்தைத் துவக்கி வைத்தார். கல்கத்தா (ஜனவரி 28), டெல்லி (பிப்.8-9), பம்பாய் (பிப்.23) ஆகிய நகரங்களிலும் கோமகனது வருகை புறக்கணிக்கப்பட்டது. கன்னாட் கோமகன் மிக்க மனவருத்தத்துடன் பம்பாயை விட்டுப் புறப்பட்டு (பிப்.28) இங்கிலாந்து சென்றார்.

வன்முறை நிகழ்ச்சிகள்

1921 மார்ச் மாதம் நான்காவது குருத்துவாராவில் 195 சீக்கிய யாத்திரிகர்கள் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அந்த நான்காவ படுகொலை (Nankana Massacre)யை பெஜவாடாவில் கூடிய காங்கிரஸ் (ஏப்ரல்) வன்மையாகக் கண்டித்து, சீக்கியர்களுக்கு அதனுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்தது. அஸ்ஸாமில் டி.ஆர்.தாகம் அவரது சகாக்களும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களிடையே அமைதியின்மையை ஏற்படுத்தினர். அதனால் தொழிலாளர்கள் குடிபெயர்ந்து சென்றதோடு வன்முறை நிகழ்ச்சிகளும் ஏற்பட்டன. கல்கத்தாவில் போக்குவரத்துத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திலும் வன்முறை ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டனர். சென்னையில் 800 ஆதிதிராவிடத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்துக் கெதிராக பக்கிங்காம் மில்லுக்கு வேலைக்கு திரும்பியதால் (ஜூன் 27) தொழிலாளரிடையே அமைதியின்மையும் வன்முறை நிகழ்ச்சிகளும் ஏற்பட்டன. அதேபோன்று ஐக்கிய மாகாணத்தில் கிசான் கிளர்ச்சிகள் துப்பாக்கிச் சூட்டில் முடிந்தன. தமிழ்நாட்டில் கள்ளுக்கடை மறியல் போராட்டம் பல வன்முறை நிகழ்ச்சிகளுக்கு வழிகோலியது. வன்முறை நிகழ்ச்சிகளுக்கெல்லாம் சிகரம் வைத்தது போலிருந்தது மலபார் மாப்பிள்ளைகள் கிளர்ச்சி.

மலபார் மாப்பிள்ளைகள் கிளர்ச்சி, 1921

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் மலபாரில் வந்து தங்கிய அரேபிய வியாபாரிகள் வழித்தோன்றல்களே 'மலபார் மாப்பிள்ளைகள்' (Malabar Mappillas) அவர்கள்

Scanned by CamScanner

இல்லாமிய சமய உணர்வுமிக்கவர்கள். கிலாபத் இயக்கத்தின்போது மலபார் மாப்பிள்ளைகள் எழுச்சி பெற்றனர். 1921 பிப்ரவரி 16ஆம் நாள் யாகூப் ஹாசன், மாதவ மேனன், கோபால மேனன், மொய்தின் கோயா போன்ற கிலாபத் காங்கிரஸ் தலைவர்கள் கைது செய்யப்பட்டபோது மாப்பிள்ளைகள் ஆர்ப்பாட்டம் செய்தனர். பத்து நாட்களுக்குப் பிறகு வைப்புப் பணம் கட்டத் தவறியமைக்காக எட்டு மாப்பிள்ளைகள் கைது செய்யப்பட்டனர். கிறித்துவ ஆட்சியாளருக்கு அடிபணியக் கூடாது எனக் கூறிய பிரசுரம் வெளியிடப்பட்டது. பதட்டமுற்ற சென்னை அரசாங்கம் அதைத் தடை செய்தது. அலி முஸலியார் (Ali Musaliar) என்ற திருநாக்காடி சமயத் தலைவர் அரசாங்கத்துக்கெதிராகக் கிளர்ச்சி செய்வதற்காக இரகசிய ஏற்பாடுகளைச் செய்து வந்தார். ஆப்காலிஸ்தான் அமீர் காந்தி, அலி சகோதரர்கள் ஆகியோரின் துணையோடு இந்தியாவின்மீது படையெடுக்கப் போகிறார் என்ற வதந்தி காட்டுத்தீ போல பரவியது! அந்தச் சமயத்தில் போலீசார் மேகப்பள்ளி மசூதியை உடைத்து உள்ளே சென்று ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றதா என்று சோதனையிட்டு அது சம்பந்தமாக மூவரைக் கைது செய்தபோது கிளர்ச்சி வெடித்தது.

அரசாங்கத்துக்கெதிராக எழுந்த அக்கிளர்ச்சியின்போது நிர்வாகம் செயலிழந்தது. கஜானாக்கள் உடைக்கப்பட்டன. ஆவணங்கள் கொளுத்தப்பட்டன. அரசாங்கக் கட்டிடங்கள் தீக்கிரையாயின. அரசாங்க அதிகாரிகள் உயிருக்கஞ்சி ஓடி ஒளிந்தனர். போலீஸ் நிலையங்கள் தாக்கப்பட்டன. பல ஐரோப்பியர்கள் கொல்லப்பட்டனர். கிலாபத் ராஜ்யம் ஏற்படுத்தப்பட்டதாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. அலி முஸலியார் கிலாபத் அரசன் என்று அறிவிக்கப்பட்டார்! (1921 ஆகஸ்டு 21). ஏரநாடும், வள்ளுவநாடும் கிலாபத் அரசுகளாக அமைக்கப்பட்டன. கிலாபத் கொடி பறக்க விடப்பட்டது. கிலாபத் நாணயம் வெளியிடப்பட்டது. அலி முஸலியார் அமைச்சர்களை நியமித்துக் கொண்டு, தனியே இராணுவத்தையும் ஏற்படுத்திக் கொண்டு கிலாபத் ராஜ்ய பரிபாலனம் செய்யத் துவங்கினார்.

அரசாங்கம் இரும்புக்கரம் கொண்டு மாப்பிள்ளைகள் கிளர்ச்சியை முறியடித்தது. கிளர்ச்சிக்கார மாப்பிள்ளைகள் அருகேயிருந்த காடுகளுக்குச் சென்று மறைந்து கொண்டனர். கிலாபத் ராஜ்யம் அமைக்கப்பட்டதிலிருந்து இந்துக்கள் மாப்பிள்ளைகளை ஆதரிப்பதை நிறுத்திக் கொண்டனர். அரசாங்கத்துக் கெதிராகப் போராடிக் கொண்டிருக்கும் மாப்பிள்ளைகளின் உதவிக்கு வரவில்லையே என்ற கோபத்தில் கிளர்ச்சிக்கார மாப்பிள்ளைகள் இந்துக்களுக்கெதிராகத் திரும்பினர். சமய வெறியர்களும் சந்தர்ப்பவாதிகளும் சமூக விரோத சக்திகளும் வன்முறையில் இறங்கினர். இந்துக்கள் கூட்டாகக் கொலை செய்யப்பட்டனர். கட்டாயமாக மதமாற்றம் செய்யப்பட்டனர். கோயில்கள் இடிக்கப்பட்டன. இந்துப் பெண்கள் மான பங்கப்படுத்தப்பட்டுக் கற்பழிக்கப்பட்டனர். இந்துக்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. இராணுவத்தின் துணைகொண்டு அரசாங்கம் மாப்பிள்ளைகள் கிளர்ச்சியை அடியோடு அடக்கியது. கிளர்ச்சிக்காரர்கள் கொடுமையாகத் தண்டிக்கப்பட்டனர்.

ஒத்துழையாமை இயக்கத்தின் ஒரு பகுதியாக செயல்பட்ட கிலாபத் இயக்கம் மலபாரில் மாப்பிள்ளைகள் கிளர்ச்சியில் முடிந்தது. அரசாங்கத்துக்கெதிராகத்

காந்தி கூறிய ஓராண்டுக்குள் சுயராஜ்யத்தைப் பெற்றுவிடலாம் என்ற ஆர்வத்தில் மக்கள் கிளர்ச்சி செய்ய மிகுந்த ஆர்வத்துடன் இருந்தனர். மக்களின் மனநிலையைப் புரிந்து கொண்ட காந்தி வைசிராய் ரீடிங் பிரபுவுக்கு எழுதிய கடிதத்தில் இறுதி எச்சரிக்கை விடுத்தார். 1922 பிப்ரவரி1. வைசிராய்க்கு அக்கடிதம் கிடைத்த ஏழு நாட்களுக்குள் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டோர் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் பத்திரிகை சுதந்திரம் பூரணமாக வழங்கப்பட வேண்டுமென்றும், கிலாபத், பஞ்சாப் அநீதிகளுக்கெதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்யக் கூடாதென்றும் அரசாங்கம் இவற்றுக்குச் சம்மதிக்காவிடில் பர்தோலியில் சட்டமறுப்பு இயக்கத்தைத் துவங்கப் போவதாகவும் எச்சரித்திருந்தார். காந்தியின் எச்சரிக்கைக்கு வைசிராய் செவி சாய்க்கவில்லை. எனவே காந்தி சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்கத் தயாரானார். ஆனால் சௌரி சௌராவில் நடந்த நிகழ்ச்சி அதற்கு முற்றுப்புள்ளி வைத்தது.

சௌரி சௌரா நிகழ்ச்சி (1922)

ஐக்கிய மாகாணத்தில் கோரக்பூரிலிருந்து இருபத்தைந்து கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கிராமமே சௌரிசௌரா. அங்கு மதுவிலக்குப் பொருள் புறக்கணிப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கையில் ஒரு போலீஸ்காரர் தொண்டர்கள் சிலரைத் தாக்கிவிட்டார். அதையடுத்து 500 தொண்டர்களும் கிராமத்தார் புடைசூழ காவல் நிலையத்துக்குச் சென்று அதிகாரியை சந்தித்து முறையிட்டனர். சமரசமேற்பட்டு அக்கூட்டத்தினர் திரும்பி வந்து கொண்டிருக்கையில் பின்னால் பெருங்கூக்குரல் எழுந்தது. அமைதியாகத் திரும்பிக் கொண்டிருந்த மக்களைப் போலீசார் மோசமாகத் தாக்கிக் காயப்படுத்தியதாகக் கூறப்பட்டது. கோபமுற்ற கூட்டத்தினர் கல்வீச்சில் ஈடுபட்டனர். போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் இறங்கியது. தோட்டாக்கள் தீர்ந்ததும் போலீஸாரைப் பிடித்துக் காவல் நிலையத்துக்குள் தள்ளித் தீ வைத்து விட்டனர். 12 போலீசாரோடு காவல்நிலையம் தீக்கிரையாயிற்று! வேல்ஸ் இளவரசரின் பம்பாய் வருகையின்போது வன்முறைக் கலகங்கள் ஏற்பட்ட நான்கு மாதங்களுக்குள் சௌரிசௌராவில் வெடித்த வன்முறை நிகழ்ச்சி காந்தியைக் கலக்கமுறச் செய்தது.

போராட்டம் நிறுத்தப்பட்டது

ஒத்துழையாமை இயக்கம் கட்டுக்கடங்காமல் போய்க் கொண்டிருந்த அகிம்சைப் போராட்டம் வன்முறை நிகழ்ச்சிகளுக்குக் காரணமா இருக்கக்கூடாது எனக் கருதினார் காந்தி. அகிம்சைப் போராட்டத்துக்கு முழுப்பயிற்சியையும் மக்கள் பெறவில்லை. போராட்டத் தலைவர்கள் பல நிறைக்குள் இருந்தனர். வன்முறை நிகழ்ச்சிகளைக் காரணமாகக் கொ அரசாங்கம் அடக்கு முறையைத் தீவிரப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்ட மக்களின் உடலுக்கும் உயிருக்கும் ஏற்படக்கூடிய இழப்பை எண்ணிப்பா காந்தி சிறைக்கு வெளியேயிருந்த காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர்களே கலந்துபேசி ஒத்துழையாமைப் போராட்டத்தை நிறுத்தி விட்டார் (1922 பி மக்களிடையே செல்வாக்கு பெறுவதைப் பெரிதாகக் கருதாது, சந்தர்ப்பத்துக்கேற்ப நடந்துகொண்டு புகழ் பெறுவதைத் தவிர்த்து, கொள்

Scanned by CamScanner

துவக்கப்பட்ட அந்தக் கிளர்ச்சி இந்துக்களுக்கெதிராகத் திசை திரும்பியது. நாட்டுப் பற்றைவிடச் சமய வெறியே மலபார் முஸ்லீம்களை ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபடச் செய்தது என்பது தெளிவாயிற்று. நம்பிக்கை அவநம்பிக்கையாயிற்று. இந்து-முஸ்லீம்களிடையே பரஸ்பர துவேஷமும் சந்தேகமும் வளரத் துவங்கின. தமிழ்நாட்டில் ஒத்துழையாமை, கிலாபத் இயக்கம் பலவீனப்பட்டது. காந்தி கட்டிய இந்து-முஸ்லீம் ஒற்றுமைக் கப்பல், மலபார் மாப்பிள்ளைகள் கிளர்ச்சி என்ற பாறைமீது மோதி நொறுங்கியது.

வேல்ஸ் இளவரசர் வருகைப் புறக்கணிப்பு

அரசாங்கத்துக்கும் மக்களுக்குமிடையே நல்லெண்ணத்தை வளர்ப்பதற்காக வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு வந்தார். அவரது வருகையை வெற்றிகரமாகக் கொண்டாடுவதில் அரசாங்கம் ஆர்வமாக இருந்தது. ஆனால் காங்கிரஸ் அவரது வருகையை வெற்றிகரமாகப் புறக்கணிப்பதில் குறியாக இருந்தது. இளவரசர் பூம்பாய் வந்தபோது (1921 நவ.17) அவரை வேலை நிறுத்தமே வரவேற்றது. போலீசுக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு மிடையே மோதல் ஏற்பட்டது. சத்தியாகிரகிகளுக்கும் விசுவாசிகளுக்குமிடையே கைகலப்பு நடந்தது. கடைகளை மூட மறுத்த பார்சிகள் தாக்கப்பட்டனர். காந்தி, சரோஜினி நாயுடு போன்றோர் அங்கிருந்து கூட்டத்தைக் கட்டுப்படுத்தவோ வன்முறையைத் தவிர்க்கவோ முடியவில்லை. ஐந்து நாட்களுக்கு வன்முறை தொடர்ந்தது! 58 பேர் இறந்தனர். 381 பேர் காயமுற்றனர். கல்கத்தாவில் தி.ஆர்.தாஸ் அவரது மனைவி, மகன் மற்றும் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வேல்ஸ் இளவரசர் வருகைப் புறக்கணிப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதற்காகக் கைது செய்யப்பட்டனர். ஐக்கிய மாகாணத்தில் மோதிலால் நேரு, ஜவஹர்லால் நேரு, கோவிந்த வல்லபந்த் ஆகியோரும், பஞ்சாபில் லஜபதி ராயும் பிறரும் கைதானார்கள். சென்னையில் நடந்த கல்வீச்சில் பல வாகனங்கள் தேமடைந்தன. வெல்லிங்டன் தியேட்டர் தாக்கப்பட்டது. அதன் உரிமையாளர் கூட்டதில் ஒருவர் இறந்தார். இருவர் காயமுற்றனர். ஒரு கூட்டம் சர் தியாகராய செட்டியின் வீட்டைச் சூழ்ந்துகொண்டு அவரைச் சட்டமன்றக் கூட்டத்துக்குச் செல்ல முடியாதபடி தடுத்தது. டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன், சிங்காரவேலு செட்டி போன்ற காங்கிரஸ் தலைவர்களால் வன்முறையைத் தவிர்க்க முடியவில்லை (1922 ஜனவரி 13)).

காந்தியின் இறுதி எச்சரிக்கை

வேல்ஸ் இளவரசரின் சுற்றுப்பயண வெற்றியில் நாட்டம் கொண்ட வைசிராய் ரீடிங் பிரபு (Lord Reading) சமாதான முயற்சியை மேற்கொண்டார். கே.என்.குன்ஸ்ரு, ஜம்னாதாஸ், துவாரக தாஸ், டெஜ் பகதூர், அன்னிபெசன்ட், மாளவியா போன்றோர் அம்முயற்சியில் ஈடுபட்டனர். அலி சகோதரர்களை விடுவிக்காத வரை எந்த சமரசப்பேச்சிலும் கலந்துகொள்ள காந்தி தயாராயில்லை. சி.சங்கரன் நாயரின் முயற்சியில் ஏற்பாடு செய்யப்பட்ட அனைத்துக் கட்சி கூட்டமும் வெற்றி பெறவில்லை. வரிகொடா இயக்கத்தை துவக்குவது பற்றி காந்தி தீவிரமாகத் திட்டமிட்டு வந்தார். அப்போது ஆந்திராவில் கொண்ட வெங்கடப்பையா வரிகொடா இயக்கத்தைத் துவங்கிவிட்டார். அதனால் வன்முறை நிகழ்ச்சிகளும் அதைத் தொடர்ந்து அடக்கு முறையும் நிகழ்ந்தன.

பேரதைத் துவங்கி வைத்தபோது கூடியிருந்த மக்கள் வன்முறை வடிவத்தில் காண்பது மிகவும் அரிது எனக் குறிப்பிட்டார் வில் டியூரண்ட் (Will Durant) ஒத்துழையாமைப் போராட்டத்தைக் கைவிடும் காந்தி தீர்மானத்தை மேற்கொள்ளச் சொல்ல காந்தியை அணுகியும் கைது செய்தது (மார்ச் 10). விசாரணையின்போது பம்பாய், கெய்டா, சௌரிசௌரா மற்றும் பிற இடங்களில் ஏற்பட்ட வன்முறைச் செயல்களுக்கு முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார் காந்தி. காந்தியின் விரோதிகட்கு அவரது உயர்ந்த இலட்சியங்களையும், நேர்மையான ஒழுக்க நடவடிக்கைகளையும் பாராட்டி 'மகாத்மா' எனக் கூறிய நீதிபதி புரூம்பீல்டு (Broomfield) காந்திக்கு ஆறாண்டுகள் சிறை தண்டனை விதித்தார். எனினும் உடல் நலக்குறைவேற்பட்டதால் காந்தி 1924 பிப்ரவரி மாதம் விடுதலை செய்யப்பட்டார்.

சில குறைபாடுகள்

காந்தி ஒத்துழையாமைப் போராட்டத்தைத் திடீரென நிறுத்தியதைப் பலரும் கண்டித்தனர். கல்லியாகுமரியில் ஒரு கிராமம் வன்முறையில் ஈடுபட்டது என்பதற்காக இமாலயத்தின் அடிவாரத்திலுள்ள ஒரு கிராமம் வன் தண்டிக்கப்பட வேண்டுமென்று கேட்டார் மோதிலால் நேரு. ஒத்துழையாமை இயக்கம் வெற்றிபெற வேண்டிய நேரத்தில் உணர்ச்சி வயப்பட்டு காந்தி நிறுத்திவிட்டார் எனக் குறைபட்டுக் கொண்டார் தி.ஆர்.தாஸ். போராட்டத்தின் எல்லாமுனைகளிலும் முன்னேறிக் கொண்டிருக்கையில் ஒத்துழையாமை இயக்கத்தைப் பலப்படுத்துவதற்குப் பதில் காந்தி அதை நிறுத்திவிட்டதை அறிந்து கோபமுற்றதாகக் குறிப்பிட்டுள்ளார் ஜவஹர்லால் நேரு. சில வன்முறை நிகழ்ச்சிகளுக்காக பிரப்புரிமைப் போராட்டத்தை காந்தி நிறுத்தியிருக்கக் கூடாதென்றார் தி. ராஜகோபாலாச்சாரியார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியும் காந்தியைக் கண்டித்தது (1922 பிப்.24). காந்தியின் செயல்கண்டு கிலாபத் இயக்கத்தில் ஈடுபட்டிருந்த முஸ்லீம்கள் கடுங்கோபம் கொண்டனர். தங்களை நட்டாற்றில் விட்டுவிட்ட சர்வாதிகாரி காந்தி என்று அவர்கள் ஆத்திரப்பட்டனர். சிறையில் அடைபடாதிருந்திருந்தால் காந்தியின் முடிவை மீறி போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தியிருப்பேன் என்று முகமது அலி தெரிவித்தார்.

ஒத்துழையாமை இயக்கத்தில் சில குறைபாடுகள் காணப்பட்டன. கிலாபத் பிரச்னையையும், பஞ்சாப் படுகொலைப் பிரச்னையையும் இணைத்தது சரியல்ல. முஸ்லீம்கள் கிலாபத்துக்காகப் போராட இந்துக்கள் ஓராண்டில் சுயராஜ்யத்தை அடையப் பாடுபட்டனர்! சட்டமன்ற தேர்தல்களில் கல்விக்கூட புறக்கணிப்பின் வெற்றி மத்தியதர வகுப்பாரின் ஆதரவைப் பொறுத்திருந்தமையால் அப்போராட்டம் எதிர்பார்த்த அளவு வெற்றி பெறவில்லை. ஒத்துழையாமைப் போராட்டத்தில் தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் உரிய பங்கில்லாமல் போய்விட்டது. தி.ஆர்.தாஸ், மோதிலால் நேரு, மாளவியா, கஸ்தூரி ரங்க அய்யங்கார் போன்ற தலைவர்களுக்கு காந்தியில் ஒத்துழையாமைத் திட்டத்தில் நம்பிக்கை இல்லை. பம்பாய், சென்னை, பீகார், தார்வார், காச்சி, மலபார், அஸ்ஸாம், கல்கத்தா, சௌரிசௌரா ஆகிய இடங்களில் ஏற்பட்ட வன்முறை நிகழ்ச்சிகள் சாத்வீகப் போராட்டத்தில் அடிப்படையையே தகர்த்துவிட்டன. இஸ்லாமிய நிறுத்தம் இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்குமிடையே

Scanned by CamScanner

அலுமினியக்கையை எற்படுத்தியது. அரசாங்க அடக்குமுறையை ஊக்குவித்தது. போராட்டம் நிறுத்தப்பட்டவுடன் காங்கிரசுக்கு மேற்கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் போய்விட்டது. தொடர்ந்து நீண்டகாலப் போராட்டத்துக்கு மக்களைத் தயார் செய்யாமல் ஒத்துழையாமை இயக்கம் துவக்கப்பட்டது. கிலாபத்தை அங்கீகரிக்கச் செய்தல், பஞ்சாப் அநீதிக்குப் பரிகாரம் காணல், ஓராண்டில் சுயராஜ்யம் பெறல் போன்ற அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான அறிகுறியே தென்படவில்லை. யாவற்றுக்கும் மேலாகப் போராட்டத்தை முன்னறிவிப்பின்றி நிறுத்தியது ஒத்துழையாமை இயக்கத்தின் வெற்றியைப் பெரிதும் பாதித்துவிட்டது.

வரலாற்றுச் சிறப்பு

ஒத்துழையாமை இயக்கத்தில் சில குறைபாடுகள் காணப்பட்டாலும், போராட்டம் நிறுத்தப்பட்டது கடுமையாகக் கண்டிக்கப்பட்டாலும், இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒத்துழையாமை இயக்கத்தின் வரலாற்றுச் சிறப்பைக் குறைத்து மதிப்பிட முடியாது. முதன்முறையாக காங்கிரஸ் காந்தியின் தலைமையில் இந்திய சுதந்திரத்துக்காக நாடு தழுவிய தீவிரப் போராட்டத்தில் ஈடுபட்டது. நாட்டின் எட்டு திக்குகளும் ஒரே குரிக்கோளை ஒரே கோஷத்தை எதிரொலித்தது. சட்டமன்ற, நீதிமன்ற, கல்விக்கூட, இதேதிப் பொருள் புறக்கணிப்பு, கதேசி நிர்மாணத் திட்டம் போன்ற தெளிவான திட்டங்களின் அடிப்படையில் போராட்டம் நடத்தப்பெற்றது. அரசாங்க எதிர்ப்புப் போராட்டத்தில் மட்டுமின்றி காந்தியின் ஆக்கப்பூர்வமான நிர்மாணத் திட்டங்களிலும் மக்கள் பயிற்சி பெற்றனர். வெல்வ் சிமான்கள், வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், வியாபாரிகள், தொழிலதிபர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், அலுவலர்கள், எழுத்தாளர்கள் ஆகிய சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரும் பொது நோக்கத்துக்காக இப்போராட்டத்தில் பங்கேற்றனர். மக்களுக்கு அந்நிய ஆட்சியின் அடக்கு முறையின் மீதிருந்த அச்சம் அகன்றன. சிறைக்குச் செல்வது அரசியல் புனிதப் பயணமாகக் கருதப்பட்டது. காங்கிரஸ் கட்டுக்கோப்புடன் கூடிய மக்கள் இயக்கமாயிற்று. சத்தியாக்கிரகம் என்ற அகிம்சை ஆயுதம் மேலும் கூராக்கப்பட்டது. நகர மக்கள், கிராம மக்கள் என்று வேறுபாடின்றி அரசியல் கல்வியும் பயிற்சியும் பெற்றனர். கிலாபத் பிரச்னையையும் பஞ்சாப் பிரச்னையையும் ஒன்று சேர்த்ததால் இந்தியாவின் இருபெரும் சமூகத்தினரையும் பொதுப் போராட்டத்தில் ஒன்றாக இணைத்த பெருமை காந்தியைச் சேரும். ஒத்துழையாமை இயக்கத்தின்மூலம் காந்தி ஒரு சத்தியகிரகியாக கொள்கைப் பிடிப்புள்ள பிடிவாதக்காரராக, ஈடுயிணையற்ற அகிம்சைப் போராட்டத் தலைவராக மக்களின் உள்ளங்களில் என்றும் நீங்கா இடம் பெற்றார்.

பகுதி - III

21. சுயராஜ்யக் கட்சி, 1923-1926

சட்டமன்றப் புறக்கணிப்பின் நோக்கம் சுயராஜ்யத்தை அடைவதற்கான தடையை நீக்குவதாகும். அதற்கேற்றபடி சட்டமன்றத்தை வளைக்க வேண்டும் அல்லது ஒழிக்க வேண்டும்.

- சி.ஆர்.தாஸ

சட்டமன்ற நுழைவு

வன்முறை நிகழ்ச்சிகளை அடுத்து ஒத்துழையாமை இயக்கம் காந்தியால் நிறுத்தப்பட்டது. காந்தியும் பிற தலைவர்களும் கைது செய்யப்பட்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டனர். தேசிய இயக்கம் திடீரென நிறுத்தப்பட்டதால் மக்கள் ஏமாற்றமடைந்தனர். காந்தி கைது செய்யப்பட்டமையால் காங்கிரஸ் தலைமையின்றித் தவித்தது. கெல் வேகமுள்ள தலைமைக்காக நாடு ஏங்கியது. 1922 ஜூன் மாதம் லக்னோவில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியால் மேற்கொண்டு என்ன செய்வது என்பது பற்றி முடிவெடுக்க முடியவில்லை. எனினும் இதுபற்றிய பரிந்துரை வழங்குவதற்காக சட்டமறுப்பு விசாரணைக்குழு (Civil Disobedience Enquiry Committee) ஒன்றை அமைத்தது அக்கமிட்டி. ஹகிம் அஜ்மல் கான் தலைமையில் அமைக்கப்பட்ட அக்குழு அக்டோபர் மாதம் அதனுடைய அறிக்கையை சமர்ப்பித்தது. அவ்வறிக்கையில் காணப்பட்ட பரிந்துரைகளில் மிகவும் முக்கியமானது பஞ்சாப் படுகொலை, கிலாபத் அநீதி ஆகியவற்றைக் கண்டித்து ஒத்துழையாமை இயக்கத்தினர் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடலாம்; சட்டமன்றத்தினுள் நுழைந்து ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடரலாம் என்பதாகும். விசாரணைக் குழுவின் இந்த முடிவும் ஒரு மனதான முடிவன்று! சட்டமன்றப் புறக்கணிப்பை எக்காரணம் கொண்டும் தளர்த்துவதோ அல்லது கைவிடுவதோ கூடாதெனக் கருதியோர் அக்குழுவில் இருந்தனர். எனவே சட்டமன்ற நுழைவு பற்றிய இம்முரண்பாட்டை நவம்பரில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியும், டிசம்பரில் கயாவில் கூடிய காங்கிரசும் விவாதித்தன. இறுதியில் சட்டமன்றப் புறக்கணிப்பு பற்றிய காந்தியவாதிகளின் முடிவே நிலைத்தது. ஒத்துழையாமை இயக்கத்தில் ஒரு தெய்வீக அம்சமான சட்டமன்றப் புறக்கணிப்பைத் தொடர்வதென முடிவு செய்யப்பட்டது. எனவே சட்டமன்ற நுழைவுக்காக வாதாடிய சித்தரஞ்சன்தாஸ் தனது காங்கிரஸ் தலைமைப் பதவியிலிருந்து விலகிப் புதுக்கட்சியைத் துவக்கினார். சூரத் பிளவுக்குப் பிறகு காங்கிரஸ் இரண்டாவது தடவையாக இருகூறாகப் பிரிந்தது. புதிதாக அமைக்கப்பட்ட அமைப்பே சுயராஜ்யக் கட்சியாகும்.

Scanned by CamScanner

மாற்றம் விரும்பியோர்

காங்கிரசில் கொள்கையான சட்டமன்றப் புறக்கணிப்பில் மாற்றம் வேண்டும் என்று கோரியவர்கள் மாற்றம் விரும்பியோர் (Pro-Changers) என்றழைக்கப்பட்டனர். சித்தரஞ்சன்தாஸ், மோதிலால் நேரு, ஹகிம் அஜ்மல்கான், வித்தல்பாய் ஜே.படேல் ஆகியோர் மாற்றம் விரும்பிய முன்னணித் தலைவர்களாவர். சீர்திருத்தப்பட்ட சட்டமன்றம் என்பது அதிகார வர்க்கத்தினர் அணிந்து கொண்டுள்ள முகமூடியாகும். அதை விலக்க வேண்டும் என்று கூறினார் சி.ஆர்.தாஸ். சட்டமன்ற நுழைவு, ஒத்துழையாமை இயக்கத்துக்கு முரணானதன்று என்றும், ஒத்துழையாமை இயக்கத்தை சட்டமன்றத்துக்குள்ளேயும் கொண்டு செல்வதே தங்களது நோக்கமென்றும் அப்படிச் செய்வதும் நேர்மையான வழியேயென்றும் அவர்கள் வாதிட்டனர். சட்டமன்றங்களைக் கைப்பற்றி அவற்றை இயங்கவிடாமல் செய்து, அரசாங்கத்தைச் செயல்படாது முடக்குவதே மாற்றம் விரும்பியோரின் விழைவாகும்.

மாற்றம் விரும்பாதோர்

சட்டமன்றப் புறக்கணிப்பில் எவ்வித மாற்றத்தையும் ஏற்றுக் கொள்ளாதவர்கள் மாற்றம் விரும்பாதோர் (No Changers) என்றழைக்கப்பட்டனர். எம்.ஏ.அன்சாரி, இ.கே.ரெங்கசுவாமி அய்யங்கார், சி.ராஜகோபாலாச்சாரி ஆகியோர் மாற்றம் விரும்பாத முன்னணித் தலைவர்களாவர். சட்டமன்ற நுழைவு ஆழம் தெரியாமல் காலை விடுவதைப் போன்றது. சட்டமன்றத்துக்குள் இருந்து கொண்டு அதை இயங்கவிடாமல் செய்வதென்பது முன்னுக்குப்பின் முரணானது. அச்செயல் இந்திய விடுதலைப் போராட்டத்தின் வேகத்தைக் குறைத்து விடும் என மாற்றம் விரும்பாதோர் வாதிட்டனர். நிபந்தனையற்ற சட்டமன்றப் புறக்கணிப்பே நாட்டை ஒத்துழையாமை இயக்கத்தின் அடுத்த கூட்டத்துக்குக்கொண்டு செல்ல வல்லது என்று அவர்கள் நம்பினர். காந்தி கூறியது போன்று சட்டமன்ற நுழைவு மிட்டாய் வழங்கியது போல இருக்குமேயன்றி, ரொட்டி தின்றதுபோல் ஆகாது. சட்டமன்றத்தைச் செயலற்றதாக்க சட்டமன்றத்துக்குள் நுழைவதென்ற முடிவை அவர்கள் கொள்கை அடிப்படையில் எதிர்த்தனர். சட்டமன்ற நுழைவென்பது ரங்காட்டினம் சுழல்வதைப் போல வேடிக்கையாக இருக்குமேயன்றி விடுதலைப் போராட்டத்துக்கு மக்களை ஒன்று திரட்டும் இயக்கமாக இருக்க முடியாதென மாற்றம் விரும்பாதோர் கருதினர். எனவே அவ்விருசாராரும் ஒத்துப்போவதற்கான வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

சுயராஜ்யக் கட்சி

தோற்றம்

ஒத்துழையாமை இயக்கம் திடீரென விலக்கிக் கொள்ளப்பட்டதன் விளைவே சுயராஜ்யக் கட்சியாகும். அவ்வியக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டபோது அலிப்பூர் சிறையிலிருந்த சித்தரஞ்சன் தாஸ், மோதிலால் நேரு போன்றோர் ஒத்துழையாமை நிறுத்தப்பட்டதால் ஏற்பட்ட சூனியத்தை நிரப்புவதற்காகச் சட்டமன்ற நுழைவு பற்றி சிந்தித்தனர். ஒத்துழையாமை இயக்கத்தை சட்டமன்றத்திற்குள்ளிருந்து

கொண்டே நடத்தினால் என்ன? அவர்கள் எண்ணினர். 1922 ஆகஸ்ட மாதம் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட [illegible] ஆண்டு காலம் மக்களைக் கைப்பற்றுவது பற்றிய தனது எண்ணத்தை வெளியிட்டார். அவ்வாண்டு டிசம்பர் மாதம் கயாவில் கூடிய காங்கிரஸ் கூட்டத்தில் தனது தலைமை உரையில் தாஸ் அதுபற்றி தனது திட்டமான முடிவை வெளியிட்டார். ஆனால் காந்தி, மோதிலால் நேருவும் சட்டமன்ற நுழைவுக்குச் சாதகமான ஆதரவைப் பெறமுடியவில்லை. எனவே கயா காங்கிரசில் தோல்வியுற்ற அவர்கள் 1923 ஜனவரி முதல் நாளன்று சுயராஜ்ய கட்சியை தொற்றுவித்தனர். சித்தரஞ்சன் தாஸ் அக்கட்சியின் தலைவராகவும், மோதிலால் நேரு அதன் செயலாராகவும் இருந்து செயல்பட்டனர்.

நோக்கம்

1924 ஆகஸ்டு 16, 17 தேதிகளில் கல்கத்தாவில் கூடிய சுயராஜ்யக் கட்சியின் பொதுக் குழுக் கூட்டத்தில் அதன் அரசியல் அமைப்புத் திட்டம் தீர்மானிக்கப்பட்டது. அதில் தெளிவாக்கப்பட்ட சுயராஜ்யக் கட்சியின் நோக்கங்களாவன:

1. எல்லாவித சட்டபூர்வமான சாத்வீக வழிகள் மூலமாகவும் இந்திய மக்கள் சுயராஜ்யத்தைப் பெறல்;
2. மத்திய, மாநில சட்டமன்றங்களில் அரசாங்கத்தின் சார்பில் கொண்டுவரப்படும் அனைத்து சட்டமுயற்சிகளையும் முறியடித்தல்;
3. உள்நாட்டு சுயாட்சி பரவல்முறை; நிர்வாகம், மக்கள் பிரதிநிதிகளுக்கு அரசாங்க அதிகாரிகள் கட்டுப்பட்டிருத்தல் ஆகியவற்றுக்காகப் பாடுபடுதல்;
4. பொதுமக்களின் நலனுக்காகப் பாடுபடுதவதன்மூலம் அரசாங்க அதிகாரம் பாதிக்காமல் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளல்;
5. சமதர்மக் கொள்கைக்கும் சுதந்திரத் தனிமனித உணர்ச்சிக்குமிடையே உள்ள இடைவெளியைக் குறைத்தல்;
6. இந்தியாவின் இயல்பான சுயமரியாதையை வலியுறுத்தி நாட்டின் பெருமையை நிலைநாட்டல்.

திட்டம்

சுயராஜ்யக் கட்சியின் செயல் திட்டத்தை சட்டமன்றத்துக் குள்ளேயான பணிகள், சட்டமன்றத்துக்கு வெளியேயான பணிகள் என இருவகையாகப் பிரிக்கலாம். சட்டமன்றத்துள்ளே சுயராஜ்யக் கட்சி அரசாங்க வரவு-செலவுத் திட்டத்துக்கு அனுமதி வழங்காது; அரசாங்கம் கொண்டுவரும் சட்ட மசோதாக்களை நிராகரிக்கும்; எந்தவித அரசாங்கப் பதவிகளையும் ஏற்காது; தேசிய நலன்களைப் பற்றிய தீர்மானங்களைக் கொண்டுவரும். ஆதரிக்கும்; காங்கிரசின் நிர்மாணப் பணிகளுக்காக வாதாடும்; இந்தியாவில் வளம் விரையமாவதைத் தடுப்பதற்கான பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றும்; நிலச்சுவான்தாரர்கள், குத்தகைதாரர்கள், முதலாளிகள் தொழிலாளிகள் ஆகியோரிடையே இணக்கமான தொடர்பை உருவாக்கப் பாடுபடும்.

Scanned by CamScanner

சட்டமன்றத்துக்கு வெளியே சுயராஜ்யக் கட்சி முஸ்லீம்களுக்கிடையேயுள்ள வேறுபாடுகளை நீக்கல்; பல்வேறு சமுதாயங்களுக்கிடையே ஒற்றுமையை வளர்த்தல்; பிராமணர்கள் பிராமணரல்லாதாரிடையே உள்ள பிணக்கைப் போக்கல்; தீண்டாமையைப் போக்கித் தாழ்த்தப்பட்டோரின் நிலையை உயர்த்தல்; கிராம நிறுவனங்களை ஏற்படுத்தல்; விவசாயிகளையும் ஆலைத் தொழிலாளர்களையும் அமைப்பினடிப்படையில் ஒன்று சேர்த்தல், காந்தியின் நிர்மாணத் திட்டத்தை செயல்படுத்தல், குறிப்பிட்ட பிரிட்டிஷ் பொருள்களைப் புறக்கணித்தல்; இந்தியாவின் நிலைகுறித்து வெளிநாடுகளில் பிரச்சாரம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்; ஆகிய நாடுகளின் இணையமைப்பை ஏற்படுத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளுதல்.

சுயராஜ்யக் கட்சியினரின் சாதனைகள்

தேர்தல் அறிக்கை

1923 அக்டோபர் 14ஆம் நாள் சுயராஜ்யக் கட்சி தனது தேர்தல் அறிக்கை (Election Manifesto) யை வெளியிட்டது. அவ்வறிக்கையில் சுயராஜ்யக் கட்சி காங்கிரசின் அங்கமாகவே செயல்படும் என்பது தெளிவாக்கப்பட்டது. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சுரண்டல் கொள்கையும் மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் என்ற பெயரால் பொறுப்பாட்சி வழங்கப்பட்டது போலித்தனமானது என்பதையும் அவ்வறிக்கை அம்பலப்படுத்தியது. மக்களின் துணைகொண்டு அந்நிய ஆட்சியை சாத்வீக ஒத்துழையாமை இயக்கத்தின் மூலம் அகற்றுவது என்ற தனது நோக்கத்தை வலியுறுத்தியது. அதிகாரம், அதிகாரவர்க்கத்திடமிருந்து மக்கள் கைக்கு மாற வேண்டும் என்றும் சட்டமன்றத்துக்குள் நுழைந்து அரசாங்கத்தை மக்களே கட்டுப்படுத்த வேண்டும் என்பதை வற்புறுத்தப் போவதாகவும் விவசாயிகள் தொழிலாளர்கள் ஆகியோரது நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் சுயராஜ்யக் கட்சியின் தேர்தல் அறிக்கை கூறியது. அந்த அக்டோபர் அறிக்கை நல்ல விளைவுகளைத் தந்த, சிறந்த நடவடிக்கை என்று கூறியுள்ளார் ஜே.கி. ஜோஹாரி.

தேர்தலில் வெற்றி

1923ல் நடைபெற்ற மத்திய, மாநில சட்ட மன்றங்களுக்கான பொதுத் தேர்தலில் சுயராஜ்யக் கட்சி மாபெரும் வெற்றியைப் பெற்றது. மத்திய சட்டமன்றத்தில் அக்கட்சி 145 இடங்களைக் கைப்பற்றியது. மத்திய மாகாணத்தில் அதற்கு அறுதிப் பெரும்பான்மை பலம் கிடைத்தது. வங்காள சட்டமன்றத்தில் அதுவே பெரிய கட்சியாகத் திகழ்ந்தது. பம்பாயில் நடந்த தேர்தலில் தங்களை எதிர்த்தோரையெல்லாம் சுயராஜ்யக் கட்சியினர் தோற்கடித்தனர். பீகார் சட்டமன்றத்தின் ஒரு இடம் தவிர பிற இடங்களையெல்லாம் சுயராஜ்யக் கட்சியே வென்றது. ஐக்கிய மாகாணத் தேர்தலிலும் அதே சாதனைதான். பஞ்சாப், ஒரிஸ்ஸா, சென்னை ஆகிய மாநிலங்களில் தான் அக்கட்சிக்குப் பெரும்பான்மை பலம் கிடைக்கவில்லை. சுயராஜ்யக் கட்சியின் அந்த அபரிமிதமான வெற்றி ஒத்துழையாமை இயக்கம் விலகிக் கொள்ளப்பட்டதால் ஏமாற்றமடைந்திருந்த மக்களிடையே எழுச்சியை

ஏற்படுத்தியது. தேசிய இயக்கத்தில் ஒரு சுறுசுறுப்பை உண்டாக்கியது சுயராஜ்யக் கட்சியின் சட்டமன்றப் பிரவேசம்.

மத்திய சட்டமன்றத்தில்

மத்திய சட்டமன்றத்தில் மோதிலால் நேரு சுயராஜ்யக் கட்சியின் தலைவராக இருந்து பாராளுமன்ற விதிகளின்படி செயல்பட்டார். எதிர்கட்சித் தலைவரான மோதிலால் நேரு கிடைத்த வாய்ப்புகளையெல்லாம் நன்கு பயன்படுத்திக் கொண்டு தேசத்தின் கோரிக்கைகளை அரசாங்கத்தின் முன்வைத்து, தேசவிரோத அரசாங்க நடவடிக்கைகள் அனைத்தையும் எதிர்த்தார். ஏவாடா சிறையில் நோயால் வாடிக் கொண்டிருந்த காந்தியை உடனடியாக விடுவிக்க வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார் மோதிலால் நேரு. அத்தீர்மானம் கொண்டுவரப்பட்ட அன்றே காந்தி விடுதலை செய்யப்பட்டார் (1926 பிப் 5)). விசாரணைக் கைதிகளாக உள்ள கைதிகள் அனைவரையும் விடுவிக்க வேண்டுமென்றும் நாடு கடத்தப்பட்டு வெளிநாடுகளிலுள்ள இந்தியர்கள் அனைவரும் தாயகம் திரும்புவதற்கு வழிசெய்ய வேண்டுமென்ற தீர்மானத்தையும் அவர் கொண்டு வந்தார். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தைத் தயாரிப்பதற்கென ஒரு வட்டமேஜை மாநாட்டைக் கூட்ட வேண்டுமென மற்றொரு தீர்மானத்தின்மூலம் கேட்டுக் கொண்டார் மோதிலால் நேரு. பின்தங்கியோர் நல்வாழ்வுக்கான பல தீர்மானங்களை அவர் கொண்டு வந்தார். அதேசமயம் அரசாங்கச் செலவினக் கோரிக்கைகளை நிராகரித்தார்.

அரசாங்க மசோதாக்கள் சுயராஜ்யக் கட்சியினர் கடுமையான கண்டனத்துக்கும் எதிர்ப்புக்கும் உள்ளாயின. இந்திய நிதி மசோதாவும், எஃகுத் தொழிற்சாலைப் பாதுகாப்பு மசோதாவும் எதிர்ப்புக்குள்ளாயின. இந்திய குற்றச் சட்டத்திருத்த மசோதாவும், நுழைவுச் சட்டத்திருத்த மசோதாவும், இந்தியத் தீர்வை மசோதாவும் நிராகரிக்கப்பட்டன. அதேபோன்று ஒத்திவைப்புத் தீர்மானங்கள்மூலம் அரசாங்கத்தின் தேசவிரோதச் செயல்கள் சாடப்பட்டன. தேசத் தலைவர்களைக் கைது செய்தது, இங்கிலாந்தின் இன ஒதுக்கல் கொள்கை; ஐரோப்பியர், ஆங்கிலோ-இந்தியர் நடத்திய நிறுவனங்களுக்களிக்கப்பட்ட சலுகைகள், ஆர்ப்பாட்டக்காரர்களை அச்சுறுத்தி அடக்கல், பாராளுமன்ற நடைமுறைகள் மீறப்படுதல் ஆகியவை பற்றிய வினாக்களை எழுப்பியதன் மூலம் சுயராஜ்யக் கட்சியினர் அரசாங்கத்தின் பல்வேறு குறைகளையும் மக்கள் அறியுமாறு செய்தனர்.

மாநில சட்டமன்றங்களில்

மாநில சட்டமன்றங்களிலும் சுயராஜ்யக் கட்சியினர் அரசாங்கத்துக்கு நேராத தலைவலியாக இருந்தனர். மத்திய மாகாணத்தில் பி.எஸ்.மூஞ்சையும் பிறரும் இரட்டை ஆட்சி செயல்பட முடியாதவாறு செய்து விட்டனர். வங்காள சட்டமன்றத்தில் சி.ஆர். தாஸ் சுயராஜ்யக் கட்சியின் தலைவராக இருந்து அரசாங்கத்தை ஆட்டிப் படைத்தார். அங்கும் இரட்டை ஆட்சி முடக்கப்பட்டுவிட்டது. ஐக்கிய மாகாணத்தில் அக்கட்சி கட்டுப்பாட்டோடு செயல்பட்டது. பம்பாய் சட்டமன்றம் அரசாங்கக் கட்சி, சுயராஜ்ய எதிர்க்கட்சி,

Scanned by CamScanner

அமைச்சர்கள் கட்சி ஆகிய மூன்று கட்சிகளையே சிக்கித் தவித்தது. சென்னை சட்டமன்றத்தில் எஸ். சத்தியமூர்த்தியின் தலைமையில் இயங்கிய சுயராஜ்யக் கட்சி ஆட்சி பீடத்திலிருந்த நீதிக் கட்சிக்குப் பெரிய சவாலாக இருந்தது. இரண்டாவது சட்டமன்றம் கூடியபோது (1923 டிச.23) நீதிக்கட்சிக்கெதிராக டி.ஆர்.ரெட்டி கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை சத்தியமூர்த்தி ஆரவாரத்தோடு ஆதரித்தார். மூன்றாவது சட்டமன்றத்துக்கான தேர்தலில் சுயராஜ்யக் கட்சி நீதிக்கட்சியை விட அதிக இடங்களைக் கைப்பற்றினாலும்கூட கட்சிக் கட்டுப்பாட்டின்படி அமைச்சரவையை அமைக்கும் பொறுப்பை நிராகரித்தது. தீர்மானங்கள், ஒத்திவைப்புப் பிரேரணைகள், வெட்டுத் தீர்மானங்கள், அரசாங்கக் கோரிக்கைகளை நிராகரித்தல், வெளிநடப்பு போன்ற பல்வேறு பாராளுமன்ற முறைகளைப் பின்பற்றி சென்னை சட்டமன்றத்தில் சுயராஜ்யக் கட்சியினர் அரசாங்கம் செயல்படுவதைத் தடைசெய்ய முயன்றனர். எனினும் சென்னையில் நீதிக்கட்சி அரசாங்கத்தோடு ஒத்துப் போனதால் இரட்டை ஆட்சி செயல்படுவதை சுயராஜ்யக் கட்சியால் நிறுத்த முடியவில்லை.

சுயராஜ்யக் கட்சியின் சரிவு

மூன்றாண்டு கால சட்டமன்ற நுழைவு முயற்சிக்குப்பின் சுயராஜ்யக் கட்சியினர் ஓய்ந்து போய்விட்டனர். அவசரமும், ஆத்திரமும், அனுபவமின்மையும் அவர்களை சட்டமன்ற நுழைவு முயற்சியில் தீவிரமாக ஈடுபடச் செய்தன. ஆனால் அனுபவம் அவர்களை அடங்கச் செய்தது. சட்டமன்றங்களில் அடிக்கடி அவர்கள் வெளிநடப்புச் செய்ததை அக்கட்சிக்காரர்களே பலர் குறை கூறினர். சுயராஜ்யக் கட்சியினர் ஏற்படுத்திய சட்டமன்றத் தடைகளையும்மீறி இரட்டை ஆட்சிமுறை செயல்பட்டுக் கொண்டுதான் இருந்தது. அக்கட்சியால் சட்ட மன்றத்துக்குள் இருந்துகொண்டு அரசாங்கத்தை வளைக்கவோ முறிக்கவோ முடியவில்லை. சூழ்நிலைகளின் கட்டாயத்தால் அவர்கள் தங்களது சட்டமன்ற நுழைவு பற்றிய கொள்கையை மறுபரிசீலனை செய்யத் துவங்கினர். தங்களது நிபந்தனையற்ற, விடாப்பிடியான அரசாங்க எதிர்ப்பைத் தளர்த்தத் துவங்கினர். தேசபந்து சித்தரஞ்சன் தாஸின் மறைவுக்குப் பின்னர் (1925 ஜூன் 16) அந்த எதிர்ப்பும் மங்கி மறைந்தது.

சட்டமன்றத்துக்குப் போகும் எந்த சுயராஜ்யக் கட்சியினரும் அரசாங்கப் பதவியை ஏற்கக்கூடாதென்பது கட்சிக் கொள்கை. ஆனால் கட்சித் தலைவர்களே அக்கொள்கைக்குப் புறம்பாகச் செய்கின்றனர். மத்திய மாகாண சட்டமன்ற சுயராஜ்யக் கட்சித் தலைவரான எஸ்.பி. தம்பே கவர்னரின் ஆட்சிக் குழு உறுப்பினரானார். வி.ஜே.படேல் மத்திய சட்ட மன்றத்தின் சபாநாயகராக இருக்க ஒப்புக் கொண்டார். இராணுவத்தை இந்திய மயமாக்குவது பற்றிய பரிசீலிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஸ்கீன் குழு (Skeen Committee)வின் உறுப்பினராக இருக்க மோதிலால் நேரு சம்மதித்தார். சுயராஜ்யக் கட்சியினிடையே இருந்த கருத்துவேறுபாடுகள் நாகபுரியில் கூடிய அக்கட்சியின் செயற்குழு கூட்டத்தில் (1925 நவ) கருத்துமோதலில் முடிந்தது. அதன் விளைவாக ஜெயகர், கேல்கர், முஞ்சே போன்றோர் கட்சியை விட்டுப் பிரிந்து வந்து இணக்கக் கட்சி (Responsivist Party) என்றும், லாலா லஜபதிராய் மதன்மோகன்

மாளவியா போன்றோர் தேசியக் கட்சி (National Party) என்று தனிக்கட்சிகள் அமைத்தனர். இவர்களையெல்லாம் மீண்டும் ஒன்று சேர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட சமரச முயற்சி (1926 மார்ச்) தோல்வியிற்று. சுயராஜ்யக் கட்சி பிளவுபட்டதால் 1926ல் நடந்த சட்டமன்றத் தேர்தலிலும் அதன் பின்னர் அக்கட்சியால் நீடித்து நிலைக்க முடியவில்லை. மேலும் காங்கிரஸ் (1926) தனது சட்டமன்றப் புறக்கணிப்பினாலும் அரசாங்கப் பதவிகளை ஏற்பதில்லை என்ற முடிவிலும் உறுதியாக இருந்தது. அது சுயராஜ்யக் கட்சியை மேலும் பலவீனப்படுத்தியது. நிதானமுள்ள சுயராஜ்யக் கட்சி இந்திய தேசிய அரசியலிலிருந்து படிப்படியாக மறைந்தது.

மதிப்பீடு

சுயராஜ்யக் கட்சி தேய்ந்து மறைந்தாலும் அது இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஆற்றிய பணி பாராட்டுதற்குரியது. ஒத்துழையாமை இயக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டு மக்களது உள்ளங்களில் இருள் சூழ்ந்திருந்தபோது சுயராஜ்ய கட்சி நம்பிக்கை ஒளிவிளக்கை ஏற்றி வைத்தது. ஒத்துழையாமை இயக்கத்தை சட்டமன்றத்துக்குள் கொண்டுசென்று தேசிய இயக்கத்துக்கு நல்ல தலைமையை வழங்கியது. தனது சட்டமன்ற நடவடிக்கைகளால் அரசாங்கத்தின் தேசவிரோத போக்கை மக்களுக்கு அடையாளம் காட்டியது அக்கட்சி. உள்ளாட்சி நிறுவனங்கள் சுயாட்சி பெறவும், பரவல்முறை நிர்வாகத்துக்கும், கல்விச் சீர்திருத்தத்துக்கும் பாடுபட்டது. உப்புவரி, புகைவண்டிக் கட்டணக் குறைப்பு, மாநில அரசாங்கங்கள் செலுத்த வேண்டிய தொகை குறைப்பு, துணித்தீர்வை விலக்கு, எஃகு, பேப்பர் தொழிற்சாலைகள் பாதுகாப்பு, மக்கள் உரிமைகள் பாதுகாப்பு, அரசியல் குற்றவாளிகளை விடுவித்தல் போன்ற தேசிய நலநடவடிக்கைகளை சுயராஜ்யக் கட்சி மேற்கொண்டது. அதன் தூண்டுதலால் இரட்டை ஆட்சி செயல்படும் முறையை விசாரிப்பதற்காக முடிமன் குழு (Muddiman Committee) அமைக்கப்பட்டு முடிவில் இரட்டை ஆட்சி முறையே கைவிடப்பட்டது. தேசியப் போராட்டத்துக்குக் கற்றோரின் ஆதரவு சுயராஜ்யக் கட்சிக்கும் அதன் மூலமாக காங்கிரசுக்கும் அதிக அளவில் கிடைத்தது. போராட்டத்தின் அடுத்த கட்டமான மாநில சுயாட்சி (Provincial Autonomy)கோரிக்கைக்கு நாட்டை தயார் செய்தது சுயராஜ்யக் கட்சிதான். இந்திய தேசிய இயக்கத்தில் தொய்வு விழுந்திருந்த நேரத்தில், மக்கள் நம்பிக்கை இழந்திருந்த சமயத்தில் சுயராஜ்யக் கட்சி மூன்றாண்டு காலத்துக்கு (1923-26) நாட்டு மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகப் பிரகாசித்தது. மக்கள் எழுச்சியும் விழிப்புணர்ச்சியும் பெற்றனர். சட்டமன்றங்களுக்குள்ளே சலசலப்பை ஏற்படுத்தியதன் மூலம் சுயராஜ்யக் கட்சியினர் நாட்டு விடுதலைப் போராட்ட உணர்வை நாட்டின் ஒரு கோடியிலிருந்து மறுகோடி வரை உலராது காத்து வந்தனர். இவர்கள் சட்டமன்றத்துக்குச் செல்லாமல் ஒதுங்கியிருந்தால் மக்களிடையே ஏற்பட்டிருந்த சோர்வு அதிகரித்திருப்பதோடு அரசாங்கத்தின் காத்தையும் பலப்படுத்தியிருக்கும் என காந்தியே சுயராஜ்யக் கட்சியினரின் சாதனைக்கு புகழாரம் சூட்டி மகிழ்ந்தார். சைமன் குழு (Simon Commission) அமைக்கப்படுவதற்கு சுயராஜ்யக் கட்சி உடனடியான காரணமாக இருந்தது.

Scanned by CamScanner

22. சைமன் குழு, 1927-1929

சுதந்திரம் என்பது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து முழுவதுமாக விடுபடுவதுதான். அப்படி விடுபட்டால்தான் இந்தியா காமன்வெல்த் அமைப்பின் சமமான உறுப்பினராக முடியும்.

- ஜவகர்லால் நேரு

இந்திய அரசியல் வானில் 1923லிருந்து 1926 வரை சுயராஜ்யக் கட்சியினர் கோலோச்சினர். அந்தக் காலகட்டத்தில் காங்கிரஸ் தலைமையின்றி, செயல் திட்டமின்றிப் பின்னணிக்குப் போய்விட்டது. பல குழுக்களாகப் பிரிந்திருந்த காங்கிரசை ஒருங்கிணைக்கவும், சுயராஜ்யம் பெறுவதற்கான திட்டமொன்றைத் தயாரிக்கவும் 1924 நவம்பர் மாதம் காந்தியின் ஆலோசனைப்படி பம்பாயில் ஒரு அனைத்துக் கட்சி மாநாடு கூட்டப் பெற்றது. ஜவஹர்லால் நேரு, சுபாஸ் சந்திரபோஸ், எஸ்.சீனிவாச அய்யங்கார், பி.சாம்பமூர்த்தி, எஸ்.சத்தியமூர்த்தி ஆகியோர் இந்தியாவுக்கு முழுச் சுதந்திரம் வேண்டுமென்றனர். காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த எஸ்.சீனிவாச ஐய்யங்காரைச் (1926) சட்டமறுப்பு இயக்கத்தைத் துவக்குமாறு எஸ்.சத்தியமூர்த்தி கேட்டுக் கொண்டார். திருப்திகரமான தீர்வு காணாதவரைஅரசாங்கப் பதவி எதையும் ஏற்பதில்லை என்று கௌகாத்தி காங்கிரஸ் (1926) தன் முடிவை மீண்டும் வலியுறுத்தியது. சுயராஜ்யக் கட்சியினர் இரட்டை ஆட்சிக்கெதிராகச் சட்ட மன்றத்துக்குள் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டிருந்தனர். அந்தச் சூழ்நிலையில் சைமன்குழு (Simon Commission) அமைக்கப்பட்ட செய்தி அறிவிக்கப்பட்டது.

சைமன் குழு அமைக்கப்படல்

இந்தியாவில் உருவாகி வந்த அரசியல் சூழ்நிலையைக் கவனித்த பிரிட்டிஷ் பாராளுமன்றம் இந்தியர்களது விருப்பத்தை ஓரளவாவது பூர்த்திசெய்ய வேண்டும் என்று விரும்பியது. இங்கிலாந்தில் விரைவாகப் பரவி வந்த தீவிரவாதத் தொழிலாளர் இயக்கத்தினர் இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து அளிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வந்தனர். மேலும் நடக்கவிருந்த பொதுத் தேர்தலில் தொழிலாளர் கட்சி வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு உருவாகி வந்தது. காங்கிரசின் இளைய தலைமுறையினர் இந்தியா முழுச்சுதந்திரம் அடைய வேண்டுமெனக் கேட்கத் துவங்கினர். மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தம் செயல்படுவதில் காணப்பட்ட குறைகளைக் களைவதும் அவசியமாகக் கருதப்பட்டது. இத்தகைய சூழ்நிலைகளின் கட்டாயத்தால் 1919 இந்திய அரசாங்கச் சட்டப்படி பத்தாண்டு முடிவில் அமைக்கப்பட வேண்டிய இந்த ராயல் கமிஷன் 1927 நவம்பர் 26ஆம் தேதியே அமைக்கப்பட்டுவிட்டது.

இக்குழுவின் தலைவராக பிரிட்டிஷ் லிபரல் கட்சியைச் சேர்ந்த சர் ஜான்

சைமன் (Sir John Simon) நியமிக்கப்பட்டார். அக்குழுவில் மேலும் ஏழு உறுப்பினர்கள் இடம் பெற்றனர். அவர்கள் அனைவரும் ஆங்கிலேயர்களே! 1919 சட்டப்படி உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்பு எவ்வாறு செயல்படுகின்றதென்பதையும், இரட்டை ஆட்சியின் நிறைகுறைகளைப்பற்றி அறிவதும் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட நிறுவனங்கள் எவ்வாறு இயங்குகின்றன என்பதைப் பற்றி தெரிவிப்பதும், அந்நிறுவனங்களுக்கு மேலும் பொறுப்பாட்சியை வழங்குவது விரும்பத்தக்கதா என்பதைப் பற்றிப் பரிந்துரை செய்வதும் இக்குழுவின் நோக்கங்களாகும். சருங்கக்கூறின், இரட்டை ஆட்சி செயல்படுவதை ஆராய்ந்து மேலும் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்களை பற்றி சிபாரிசு செய்வதும் சைமன் குழுவின் பொறுப்பாகும்.

சைமன் குழு புறக்கணிப்பு

சைமன் குழுவில் இந்தியர் எவருக்கும் இடம் கொடுக்காதது இந்தியத் தலைவர்களுக்கு வருத்தத்தையும், ஏமாற்றத்தையும் கோபத்தையும் உண்டாக்கிற்று. பிரிட்டிஷ் பிரபுக்கள் அவையின் உறுப்பினரான இந்தியர் சின்ஹா பிரபு (Lord Sinha)கூட இக்குழுவில் இடம் பெறவில்லை. இந்தியாவில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளுக்கும் இடம் கொடுத்தால் சைமன் குழு அளவுக்கு மீறி பெருத்துவிடும் என்று இந்திய விவகாரச் செயலர் பிர்கன் ஹெட் பிரபு (Lord Birkenhead) கூறியது இந்தியத் தலைவர்களை மேலும் சினங்கொள்ளச் செய்தது. அப்போது இங்கிலாந்திலிருந்த மோதிலால் நேரு சைமன் குழுவை ஒரு கண்துடைப்பு என வர்ணித்தார். 1927 டிசம்பர் மாதம் சென்னையில் கூடிய காங்கிரஸ் முழுவதும் ஆங்கிலேயர்களைக் கொண்டே அமைக்கப்பட்ட சைமன் குழுவைக் கடுமையாகக் கண்டித்தது. காங்கிரஸ் தலைவரான டாக்டர் அன்சாரி இந்தியாவுக்கு எத்தகைய அரசியல் சீர்திருத்தத்தை வழங்குவது என்பதை எந்தப் புத்தி சுவாதீனமுள்ள சுயமரியாதையுடைய இந்தியனும் ஏற்றுக் கொள்ளமாட்டான் என்றார். சென்னை காங்கிரசில்தான் சைமன் கமிஷன் புறக்கணிப்பது தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சைமன் கமிஷனின் வருகையின்போது மக்கள் அதைப் புறக்கணிக்க வேண்டுமென்றும், அப்புறக்கணிப்புக்குச் சாதகமாக மக்களின் ஆதரவைப் திரட்ட வேண்டுமென்றும் அக்குழுவோடு யாரும் ஒத்துழைக்கலாகாது என்றும் அத்தீர்மானம் கேட்டுக் கொண்டது. சைமன் கமிஷன் புறக்கணிப்பு பற்றி முஸ்லீம் லீக் உறுப்பினர்களிடையே ஒருமித்த கருத்து இல்லாவிட்டாலும்கூட முகமது அலி ஜின்னாவும் பிற முக்கிய தலைவர்களும் சைமன் கமிஷனை ஏற்றுக் கொள்ளவில்லை.

சைமன் குழு பம்பாய்க்கு வந்தபோது (1928 பிப். 3) கருப்புக் கொடி பிடித்து 'சைமனே திரும்பிப் போ' என்ற கோஷத்தோடு புறக்கணிக்கப்பட்டது. அன்றைய தினம் இந்தியா முழுதும் அர்த்தால் அனுசரிக்கப்பட்டது. சென்னையில் கலவரம் ஏற்பட்டது. துப்பாக்கிச் சூட்டில் சிலர் இறந்தனர்; பலர் காயமுற்றனர். சென்னை உயர்நீதி மன்றக் கட்டிடத்தில் வைக்கப்பட்டிருந்த ஒரு தியாகியின் உடலைப் பார்த்து அஞ்சலி செலுத்தச் சென்ற டி.பிரகாசத்தைப் போலீஸ் தடுத்தபோது அவர் போலீஸ் துப்பாக்கி முன் தனது திறந்த மார்பை தீரத்தோடு காட்டி நின்றார்; அதனால் அவர் 'ஆந்திரகேசரி' என்று அழைக்கப்பட்டார்

Scanned by CamScanner

கல்கத்தாவில் பிரத்தானந்தர் பூங்காவில் கூடிய பிரமாண்டமான கூட்டத்தில் பிரிட்டிஷ் பொருட்கள் புறக்கணிக்கப்பட்டதன் மூலம் சைமன் குழுவுக்குத் தங்களது எதிர்ப்பைத் தெரிவித்தனர். மாணவர்களுக்கும் போலீசுக்குமிடையே அடிக்கு மோதல் ஏற்பட்டது. டில்லியில் மூர்க்கமான ஆர்ப்பாட்டம் செய்யப்பட்டது. லாகூரில் லாலா லஜபதிராயின் தலைமையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடந்தபோது எவ்வித முகாந்திரமும் இன்றி லாலா போலீஸ் அதிகாரி சாண்டர்ஸ் (Saundars) என்பவரால் கொடூரமாகத் தாக்கப்பட்டார். அதுவே அவரது மரணத்துக்குக் காரணமாயிற்று (1928 நவ.17). லக்னோவில் ஜவஹர்லால் நேருவும் பிற தொண்டர்களும் போலீசாரால் தாக்கப்பட்டனர். பாட்னாவில் பலத்த ஆர்ப்பாட்டம் செய்யப்பட்டது. சென்னை, டில்லி, லாகூர், லக்னோ, பாட்னா ஆகிய இடங்களில் ஏற்பட்ட வன்முறை நிகழ்ச்சிகள் தவிரப் பிற இடங்களில் சைமன் குழு அமைதியாகவே சென்று வந்தது. 1929 மார்ச் 31 ஆம் நாள் பம்பாயை விட்டுப் புறப்பட்டுச் சென்றது சைமன்குழு.

சைமன் குழு அறிக்கை

சைமன் குழுவின் அறிக்கை 1930 மே மாதம் இரண்டு தொகுதிகளாக வெளியிடப்பட்டது. முதல் தொகுதியில் சைமன் குழுவுக்கு முக்கியமெனப்பட்டவற்றைப் பற்றிய மதிப்பீடு காணப்பட்டது. இரண்டாவது தொகுதியில் அக்குழுவின் பரிந்துரைகளும் அவைகளுக்குப் பின்னணியாக இருந்த கொள்கைகளும் விவரிக்கப்பட்டிருந்தன. சைமன் குழுவின் சிபாரிசுகளில் முக்கியமானவை வருமாறு:

1. இரட்டை ஆட்சிக்கு பதில் (Dyarchy) மாநில சுயாட்சி (Provincial Autonomy) கொண்டுவரப்பட வேண்டும்;

2. மாநில நிர்வாகத்தில் மக்கள் பிரதிநிதிகளான அமைச்சர்களுக்கு மேலும் அதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்;

3. மாநிலச் சட்ட மன்றங்கள் விரிவுபடுத்தப்பட வேண்டும்;

4. மாநிலச் சட்ட மன்றத்தில் அரசாங்க சார்புடைய நியமன உறுப்பினர்கள் இருக்கக்கூடாது;

5. முஸ்லீம்களுக்குச் சிறப்பான போதிய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்;

6. உயர்நீதி மன்றங்கள் மத்திய அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்க வேண்டும்;

7. மத்தியில் பிரிட்டிஷ் இந்திய பகுதிகளும் மன்னர் மாநிலப் பகுதிகளும் ஒன்றாக இணைந்த கூட்டாட்சி (Federation) ஏற்பட வேண்டும்;

8. பத்தாண்டுகளுக்கொரு முறை அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பரிசீலனை செய்யும் சட்டக் கட்டுப்பாட்டுக்குப் பதில் தேவையானபோது பரிசீலனை செய்வதற்குரிய வகையில் புதிய சட்டம் இயற்றப்பட வேண்டும்;

9. இந்தியாவிலிருந்து பர்மாவைத் தனிநாடாகப் பிரித்துவிட வேண்டும்;

10. வடமேற்கு எல்லை மாநிலத்தில் சட்டமன்றம் அமைக்கப்பட வேண்டியது அவசியம்.

மதிப்பீடு

சைமன் குழுவின் நோக்கம் நன்றாக இருந்தாலும் அதில் இந்தியர் எவருக்கும் இடம்கொடாமல் போனது மாபெரும் அரசியல் தவறாகும். அதனால் தான் அனைத்துக் கட்சிகளும் சைமன் குழுவைப் புறக்கணித்தன. சைமன் குழுவின் வருகையின்போது காங்கிரஸ் ஒத்துழையாமை இயக்கத்தைக் கையிட்ட பின்னர் தேசம் தழுவிய புறக்கணிப்பு இயக்கத்தை நடத்தியது. சைமன் குழு அறிக்கையும் எதிர்பார்த்த அளவுக்குத் தலைவர்களைத் திருப்தி செய்யவில்லை. கவர்னருக்கும் வைசிராய்க்கும் கொடுக்கப்பட்ட அதீத அதிகாரங்கள் மாநில சுயாட்சித் திட்டத்தைக் கேலிக் கூத்தாக்கிவிட்டது. ஒத்துழையாமை இயக்கம் சுயராஜ்யக் கட்சியினரின் போராட்டம் ஆகியவற்றால் ஏற்பட்ட புதிய சூழ்நிலைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளத் தவறிவிட்டது சைமன்குழு. அதன் காரணமாக இந்தியத் தலைவர்கள் பூரண சுயராஜ்யக் கோரிக்கையை எழுப்புவதற்கான கட்டாயம் ஏற்பட்டது. இந்திய விடுதலைப் போராட்டம் தீவிரவாதிகளின் துணையுடன் புதுவேகத்துடன் மேற்கொள்ளப்பட்டது.

நேரு அறிக்கை

சைமன் குழு நியமிக்கப்பட்டதைப்பற்றி பிரிட்டிஷ் பிரபுக்கள் சபையில் பேசிய இந்திய விவகாரச் செயலாளரான பிர்கன் ஹெட்பிரபு இந்தியர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தக்கதொரு அரசியல் சட்டத்தை உருவாக்கித் தருமாறு கடந்த மூன்றாண்டுகளில் இருமுறை இந்தியத் தலைவர்களைக் கேட்டுக் கொண்டதாகவும் அவர்களை மீண்டும் ஒருமுறை கேட்டுக் கொள்வதாகவும் அறிவித்தார். அதை இந்தியத் தலைவர்களுக்கு விடப்பட்ட சவாலாக ஏற்றுக் கொண்டதன் விளைவே நேரு அறிக்கையாகும். 1928 மே 19ஆம் நாள் பம்பாயில் கூடிய மூன்றாவது அனைத்துக் கட்சி மாநாட்டில் இந்திய அரசியல் சட்டத்தை எழுதும் பொறுப்பை மோதிலால் நேருவின் தலைமையின்கீழ் அமைக்கப்பட்ட குழுவிடம் ஒப்படைத்தது. மோதிலால் நேருவைச் சேர்த்துப் பத்து பேர் அடங்கிய நேரு குழு (Nehru Committee) தனது அறிக்கையை 1928 ஆகஸ்டு 10ஆம் நாள் சமர்ப்பித்தது. இந்த அறிக்கையே நேரு அறிக்கை (Nehru Report) என்றழைக்கப்படுகிறது.

சிறப்பு அம்சங்கள்

நேரு அறிக்கையில் காணப்பட்ட சிறப்பு அம்சங்களாவன

1. டொமினியன் அந்தஸ்து உடனடியான குறிக்கோளாகவும், பூரண சுயராஜ்ய இறுதி இலட்சியமாகவும் இருக்க வேண்டும்;

2. இந்தியாவின் அனைத்துப் பகுதிகளும் இணைந்த கூட்டாட்சி அரசாங்க முறை (Federation) அமைக்கப்பட வேண்டும்;

3. தனியான வகுப்புவாரித் தேர்தல் தொகுதி முறை நிராகரிக்கப்பட்டது. அதற்குப்பதில் இடஒதுக்கீடு செய்யப்பட்ட கூட்டுத் தொகுதி முறை (Joint

Scanned by CamScanner

Electorate) பரிந்துரைக்கப்பட்டது;

4. ஐந்து தனி மாநிலமாக உருவாக்கப்பட வேண்டும். வடமேற்கு எல்லை மாகாணம், பிற மாநிலங்களுக்குச் சமமாகக் கருதப்படல் வேண்டும்;

5. பத்தொன்பது அடிப்படை உரிமைகள் (Fundamental Rights) அங்கீகரிக்கப்பட வேண்டும்;

6. மத்திய சட்டமன்றம் இரு அவைகளை (Bicameral) கொண்டதாயிருக்க வேண்டும். அப்போதுதான் மக்களுக்கும் மாநிலங்கட்கும் போதிய அளவில் பிரதிநிதித்துவம் கிடைக்கும்;

7. பிரிட்டிஷ் அரசர் வைசிராய், பிரதம மந்திரி மற்றும் ஆறு அமைச்சர்கள் மூலமாகத் தனது அதிகாரங்களைச் செலுத்துவார். அவர்கள் அனைவரும் அரசியல், சட்டம் மற்றும் பாராளுமன்ற சட்டங்களுக்கு கட்டுப்பட்டே செயல்பட வேண்டும்;

8. இந்திய உச்ச நீதிமன்றமே (Supreme Court) இறுதி மேல் முறையீட்டு மன்றமாக இருக்க வேண்டும்;

9. மன்னர் மாநிலங்கள் அனைத்தும் பாராளுமன்ற அதிகார எல்லைக்குட்பட்டே இயங்க வேண்டும். ஒரு மன்னர் மாநிலத்துக்கும், பாராளுமன்ற முடிவுக்குமிடையே சிக்கல் ஏற்படுமாயின் அதை உச்ச நீதிமன்றமே தீர்த்து வைக்க வேண்டும்;

10. இந்தியாவின் பாதுகாப்பை ஒரு பாதுகாப்புக் குழு (Defence Committee) கவனித்துக் கொள்ளும்.

நேரு அறிக்கை பற்றி காங்கிரசின் நிலை

நேருவின் அறிக்கை இந்தியர்களின் அறிவுப்பூர்வமான விழைவுகளை பூர்த்தி செய்வதாக உள்ளது என்றார் காந்தி. லக்னோவில் கூடிய அனைத்துக் கட்சி மாநாடு (1928 ஆண்டு 28-30) நேரு அறிக்கையை நிபந்தனையின்றி ஏற்றுக் கொண்டது. டில்லியில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி (1928 நவம்பர் 4-5) நேரு அறிக்கை இந்திய அரசியல் வளர்ச்சியில் முக்கிய அடியெடுத்து வைத்துள்ளதெனக்கூறி அதன் வகுப்புவாதப் பிரதிநிதித்துவம் பற்றிய பரிந்துரையைப் பாராட்டியது. ஆனால் ஜவஹர்லால் நேரு, சுபாஷ் சந்திர போஸ் போன்ற இளைய தலைமுறையினர் இந்தியாவுக்கு உடனடியாக முழுச்சுதந்திரம் வேண்டுமெனக் கோரினர். கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் கூட்டத்திலும் (1928 டிசம்பர்) அவர்களது வாதத்தை வலியுறுத்தினர். காங்கிரஸ் மீண்டும் பிளவுபட்டுப் போகுமோ என்ற நிலை ஏற்பட்டது. ஆனால் காந்தியின் சமரச முயற்சியால் அந்நிலை தவிர்க்கப்பட்டது. ஓராண்டுக்குள் அதாவது 1926 டிசம்பர் 31ஆம் தேதிக்குள் இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்படாவிடில் முழுச் சுதந்திரத்துக்காகப் போராடலாம் என்ற காந்தியின் சமரசத் தீர்வை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். இந்திய அரசியல் சட்டச் சீர்திருத்தம் சம்பந்தமாக இந்தியாவின் முழுச் சுதந்திரம் பற்றிப் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு இறுதி எச்சரிக்கை விடுப்பது இதுவே முதல் தடவை எனக்

குறிப்பிட்டுள்ளார் எம்.வி. நடராஜன்.

நேரு அறிக்கை பற்றி முஸ்லீம்களின் நிலை

நேரு அறிக்கை பற்றி முஸ்லீம்களிடையே ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. அவர்களுக்குள் நான்கு வகையான கருத்துக்கள் நிலவின

1. மௌலானா அபுல் கலாம் ஆசாத், டாக்டர் அன்சாரி, டி.ஏ.கே. ஷெர்வானி போன்ற தேசிய முஸ்லீம் தலைவர்கள் நேரு அறிக்கையை அப்படியே ஏற்றுக் கொண்டனர்;

2. சர்முகமது ஷபியும் அவரது ஆதரவாளர்களும் அவ்வறிக்கையை எதிர்த்தனர்;

3. ஆகாகானும் அவரது ஆதரவாளர்களும் முஸ்லீம்களுக்குத் தனித்தொகுதி வழங்கப்படுவதை ஏற்றுக் கொண்டு லக்னோ உடன்பாடு மதிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினர்;

4. ஜின்னாவும் அவரது ஆதரவாளர்களும் காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தை எதிர்த்தாலும் கூட்டுத்தொகுதி முறையை ஆதரித்தனர்.

ஜின்னாவின் 14 அம்சத் திட்டம்

நேரு அறிக்கைபற்றி முஸ்லீம்களுக்கிடையே உள்ள கருத்து வேறுபாடுகளைத் தீர்க்கும்பொருட்டு ஜின்னா ஒரு முஸ்லீம் அனைத்துக் கட்சிகள் மாநாட்டை டெல்லியில் கூட்டினார் (1928 டிச. 31). முஸ்லீம்களின் பல பிரிவினரின் கருத்துக்களை அறிந்து அதன் அடிப்படையில் ஒரு திட்டத்தை வகுத்துக் கொடுக்குமாறு அம்மாநாட்டில் ஜின்னா கேட்டுக் கொள்ளப்பட்டார். அதன்படி உருவானதுதான் ஜின்னாவின் 14 அம்சத் திட்டமாகும். அத்திட்டத்தில் காணப்பட்ட 14 அம்சங்களாவன:

1. இந்தியாவுக்குக் கூட்டாட்சி வேண்டும்; எஞ்சிய அதிகாரங்கள் மாநிலங்களுக்கு அளிக்கப்பட வேண்டும்;

2. மாநில சுயாட்சி எல்லா மாநிலங்களுக்கும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும்; எவ்வித வேறுபாடும் கூடாது;

3. ஒவ்வொரு மாநிலத்திலும் சிறுபான்மையினர் சட்டமன்றத்திலும் உள்ளாட்சி மன்றங்களிலும் போதிய அளவில் பிரதிநிதித்துவம் பெற வேண்டும்;

4. மத்தியச் சட்ட மன்றத்தில் மூன்றில் ஒரு பகுதி இடங்கள் முஸ்லீம்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும்;

5. எல்லா வகுப்பாருக்கும் தனித்தொகுதிகளின் அடிப்படையில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்;

6. எல்லைகள் பிரிக்கப்படும்போது பஞ்சாப், வங்காளம், வடமேற்கு எல்லை மாகாணம் ஆகியவற்றில் முஸ்லீம்களின் பெரும்பான்மை பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும்;

7. அடிப்படை உரிமைகள் அனைத்துச் சமுதாயங்களுக்கும் பொதுவாக

Scanned by CamScanner

இருக்க வேண்டும்;

8. ஒரு மசோதாவோ அல்லது தீர்மானமோ நிறைவேற்றப்பட வேண்டுமானால் சம்பந்தப்பட்ட சமுதாய உறுப்பினர்களின் நான்கில் மூன்று பகுதியினரின் சம்மதத்தைப் பெற வேண்டும்;

9. சிந்து, பம்பாய் ராஜதானியிலிருந்து பிரிக்கப்பட வேண்டும்;

10. சீர்திருத்தங்கள் கொண்டு வரப்படும்போது பலுசிஸ்தானம், வடமேற்கு எல்லை மாகாணம் ஆகியவற்றுக்கிடையே எவ்வித வேறுபாடும் காட்டக்கூடாது;

11. அரசுப் பணிகள் அனைத்திலும் முஸ்லீம்களுக்குப் போதிய இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும்;

12. முஸ்லீம் பண்பாடு, சமயம், கல்வி போன்றவற்றுக்கு அரசாங்க உதவியளித்து, போதிய பாதுகாப்பு கொடுத்து அவற்றைப் போற்றி வளர்க்க வேண்டும்;

13. மத்திய, மாநில அமைச்சரவைகளில் குறைந்தது மூன்றில் ஒரு பகுதி இடங்களாவது முஸ்லீம்களுக்குக் கிடைக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்;

14. இந்தியக் கூட்டாட்சியின் உறுப்புக்களின் சம்மதமின்றி எந்த அரசியல் சட்ட மாற்றத்தையும் மேற்கொள்ளக் கூடாது.

டெல்லியில் நடைபெற்ற முஸ்லீம் சிறப்புக் கூட்டத்தில் (1929 மார்ச் 28) ஜின்னாவின் 14 அம்சத் திட்டம் பரிசீலிக்கப்பட்டது. ஜின்னாவே அக்கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார். எனினும் இந்தியாவின் வருங்கால அரசியல் திட்டம் பற்றிய ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. அக்கூட்டத்தில் நேரு அறிக்கை கடுமையாக விமரிசிக்கப்பட்டது. முஸ்லீம்களின் சாவாணை என்று அது வர்ணிக்கப்பட்டது. தேசிய முஸ்லீம்கள், முஸ்லீம் லீக்கை விட்டு வெளியேறி தேசிய முஸ்லீம் கட்சி (National Muslim Party)யைத் துவக்கினர் (1929 ஜூலை). ஜின்னா தேச ஒற்றுமையைக் கைவிட்டு முஸ்லீம் இன ஒற்றுமைக்காகவும், முஸ்லீம்களுக்கென தனிநாடு தேடுவதிலும் தீவிரமாக ஈடுபடத் துவங்கினார். எனவே நேரு அறிக்கையை எல்லாக் கட்சியினரும் ஏற்றுக் கொள்ளவில்லை. அதேபோன்று ஜின்னாவின் 14 அம்சத் திட்டத்தையும் அனைத்து முஸ்லீம் பிரிவினரும் அங்கீகரிக்கவில்லை. ஆங்கிலேய ஆட்சியாளர் நேரு அறிக்கையையும், ஜின்னாவின் திட்டத்தையும் நிராகரித்தனர்!

பூர்ண சுயராஜ்யம்

சைமன் குழு புறக்கணிப்பு, நேரு அறிக்கை, கல்கத்தா காங்கிரஸ் இறுதி எச்சரிக்கை, ஜின்னாவின் 14 அம்சத் திட்டம் ஆகியவை இந்தியத் தேசிய இயக்கத்தை வேகம் குறையாமல் இருக்கச் செய்தன. இவற்றோடு பயங்கரவாதிகளின் செயல்களும் சேர்ந்து கொண்டன. பகத்சிங் (Bhagat Singh)கும் அவருடைய நண்பர்களும், லாலா லஜபதிராய் இறப்பதற்குக் காரணமான போலீஸ் அதிகாரி சாண்டர்ஸைச் சுட்டுக்கொன்று பழிதீர்த்துக் கொண்டனர். மத்தியச் சட்டமன்றக் கட்டிடத்துக்குள் குண்டு வீசப்பட்டது. வங்காளம், பூனா, அகமதாபாத், பஞ்சாப், மத்திய மாகாணம், சென்னை ஆகிய இடங்களில்

தீவிர இளைஞர் சங்கங்கள் தோன்றலாயின. தொழிலாளர்களிடையே அமைதியின்மை தோன்றியது. போராட்டத்தின் அடுத்த கட்டத்திற்கு மக்களைத் தயார் நிலையில் வைக்கும்பொருட்டு காந்தி சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அந்நிலையில் இங்கிலாந்தில் தொழிற்கட்சி ஆட்சியைப் பிடித்தது (1929 மே). புதிய பிரதமர் ராம்சே மெக்டொனால்டு (Ramsay MacDonald) டொமினியன் உருவாக இருப்பது பற்றிக் குறிப்பிட்டார். வைசிராய் இர்வின் பிரபு (Lord Irwin) இந்தியாவுக்குப் பொறுப்பாளியும், டொமினியன் அந்தஸ்தும் வழங்குவது பற்றிய பிரகடனத்தை (Irwin's Proclamation) வெளியிட்டார் (1929 அக்.31). பொதுவான சமரசம் ஏற்பட வேண்டும், எல்லா அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும், காங்கிரஸ் பெரிய பலம் வாய்ந்த கட்சியாக இருப்பதால் அதற்கு நடக்கவிருக்கும் வட்ட மேஜை மாநாட்டில் (Round Table Conference) மேம்பட்ட இடமளிக்க வேண்டுமென்றும் கோரி காந்தி, மோதிலால் நேரு, ஜவஹர்லால் நேரு, வல்லபாய் பட்டேல், டெஜ்பகதூர் சாப்ரூ, வி.சீனிவாச சாஸ்திரி, மௌலானா ஆசாத், டாக்டர் அன்சாரி, டாக்டர் மூஞ்சே, மாளவியா, சரோஜினி நாயடு, அன்னிபெசன்ட் ஆகியோர் கையொப்பமிட்ட டில்லி அறிக்கை (Delhi Manifesto) வெளியிடப்பட்டது (நவ 1). காந்தியும் காங்கிரஸ் தலைவர்களும் இர்வின் பிரபுவை சந்தித்து (டிச.23) இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து கொடுக்கப்படும் என்ற அடிப்படையில் வட்ட மேஜை மாநாடு கூட்டப்படும் என்பதற்கான உறுதிமொழியைக் கேட்டனர். அத்தகைய உறுதிமொழியைக் கொடுக்க வைசிராய் மறுத்துவிட்டார்!

1929ஆம் ஆண்டு இறுதியில் லாகூருக்கு அருகாமையில் ரவி ஆற்றின் கரையில் காங்கிரஸ் கூடியது. ஜவஹர்லால் நேரு தலைமையேற்றார். அந்த காங்கிரஸ் கூட்டத்தில்தான் பூரண சுயராஜ்யத்தைப் பெறச் சட்டமறுப்பு இயக்கத்தைத் துவக்குவதற்கான துரித முன்னேற்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு காங்கிரஸ்காரர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26ஆம் நாளை பூரண சுயராஜ்ய தினமாக (Purna Swaraj)க் கொண்டாடுவதென முடிவு செய்யப்பட்டது. 1929 டிசம்பர் 31 நள்ளிரவோடு கல்கத்தா காங்கிரஸ் ஆங்கிலேய அரசுக்கு விடுத்த எச்சரிக்கை முடிவுற்றது. அந்நேரத்தில்தான் பூரண சுயராஜ்யம் பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்திய சுதந்திரக் கொடி பறக்க விடப்பட்டது. இந்திய விடுதலைப் போராட்டத்தின் அடுத்த கட்டத்தைத் துவக்குவதற்கான பச்சைக்கொடி காட்டப்பட்டுவிட்டது.

Scanned by CamScanner

23. சட்டமறுப்பு இயக்கம், 1930-1934

நாம் நமது கோட்பாட்டில் உறுதியாகவும், தீர்மானத்தில் திடமாகவும் இருப்போம். சத்தியாக்கிரகத்தை நடத்தும்போது தற்காலிகப் பின்னடைவு ஏற்படலாம்; ஆனால் அது தோல்வி அல்ல. தோல்வியே ஏற்படினும் அதுவே பெரிய வெற்றியாகும்.

- ராஜேந்திர பிரசாத்.

ஒத்துழையாமை இயக்கத்துக்குப் பின்னர் சட்டமறுப்பு இயக்கத்தை (Civil Disobedience Movement) துவக்குவதற்கான சூழ்நிலை உருவாயிற்று. லாகூர் காங்கிரஸ் (1929) பூரண சுயராஜ்யத்துக்காகப் போராடுவதெனத் தீர்மானித்தது. இங்கிலாந்தில் புதிதாகப் பதவிக்கு வந்த தொழிற்கட்சி அரசாங்கமும் இந்தியப் பிரச்னையைத் தீர்க்கும் என்ற நம்பிக்கை தலைவர்களுக்கு ஏற்படவில்லை. மக்கள் அரசாங்கத்தின் அடக்குமுறையை வெறுத்தனர். விவசாயிகளும், தொழிலாளர்களும் பிறரும் விஷம்போல் ஏறிய விலைவாசியால் பெரிதும் அவதியுற்றனர். காந்தியின் கட்டளையின்றியே விவசாயிகள் வரிகொடா இயக்கத்தைத் துவக்கி விடுவதற்கான வாய்ப்பிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார் ஜே.பி.கிருபளானி. தொழிலாளர் இயக்கம் தீவிரமடையத் துவங்கியது. இளைஞர்கள் பொறுமையிழந்து வன்முறைச் செயல்களில் ஈடுபடத் துவங்கினர். லாகூர் காங்கிரசில் தீர்மானித்தபடி 1930 ஜனவரி 26ஆம் நாள் நாடெங்கிலும் சுதந்திர தினமாகக் கொண்டாடப்பட்டது. அதனால் ஊக்கம்பெற்ற காந்தி தனது 11 அம்சக் கோரிக்கையை வெளியிட்டார். அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையில் மாற்றத்தை வேண்டிய காந்தியின் அக்கோரிக்கைக்கு வைசிராய் இர்வின் பிரபு செவிமடுக்காமையால் இறுதிவரை போராட (Fight to the finish) முடிவு செய்தார்.

உப்புச் சத்தியாக்கிரகம்

காங்கிரஸ் செயற்குழு சபர்மதி ஆசிரமத்தில் கூடியது (1930 பிப்ரவரி 14-16). அக்கூட்டத்தில் சட்டமறுப்பு இயக்கத்தைத் தலைமையேற்று நடத்துவதற்கான முழு அதிகாரமும் காந்திக்கு கொடுக்கப்பட்டது. காந்தி உப்புச் சட்டத்தை (Salt Tax) மீறிச் சட்ட மறுப்பு இயக்கத்தை நடத்தப்போவதாக அறிவித்தார். அடித்தட்டு மக்களின் அடிவயிற்றைத் தொட்ட உப்பு வரி எதிர்ப்பை ஆயுதமாகக் கொண்டு ஆங்கிலேய அரசுடன் மோதத் துணிந்த காந்தியை அப்போது பலரும் எள்ளி நகையாடினர். கோலியாத்தை எதிர்க்க வந்த டேவிட் போலக் காட்சியளித்தார் காந்தி. மார்ட்டின் லூதரின் மறுப்பை மதிக்காத பழங்காலப் போப்பாண்டவரைப் போன்று காந்தியின் உப்புச் சத்தியாக்கிரகத்தையும் தேளீர்க்

ண்ணத்தில் எழுந்த புயல் (Storm in a Tea Cup) எனக் கருதினார் வைசிராய் இர்வின் பிரபு. அதிகாரவர்க்கம் அதை இண்டர் காண்டினென்டலாகக் கருதியது. ஒரு கோப்பையில் கடல் நீரைக் காய்ச்சுவதால் பிரிட்டிஷ் பேரரசைப் பதவியிறக்கம் செய்ய முடியாது எனக் கேலி பேசினர். அரைப் பைத்தியத்தின் கற்பனைப் போராட்டமே இது என்று அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் உதாசீனப்படுத்தினர். காங்கிரஸ் தலைவர்களில் பலரும் உப்புக்கும் சுதந்திரப் போராட்டத்துக்கும் என்ன தொடர்பு எனக் கேட்டனர். உண்ணாவிரதம், சர்க்கா போன்று இதுவும் காந்திக்கு ஒரு ஒய்வு நேர விளையாட்டு என்றே மோதிலால் நேரு கருதினார்.

தண்டி யாத்திரை

ஆனால் காந்தி அப்படி நினைக்கவில்லை. உப்புச் சத்தியாக்கிரகத்தை மிகவும் வலிமைவாய்ந்த அறப்போர் ஆயுதமாகக் கருதினார். முன்னமேயே அறிவித்தவாறு 1930 மார்ச் 12ஆம் நாள் 78 தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரமச் சீடர்களுடன் சபர்மதியிலிருந்து 385 கிலோ மீட்டர் தொலைவிலிருந்த தண்டுக்குப் பாதயாத்திரையாகப் புறப்பட்டார் காந்தி. அந்தச் சத்தியாக்கிரக யாத்திரை செல்லும்போது அவரது பாதம்பட்ட இடத்திலெல்லாம் போராட்டப் பொறி உண்டாயிற்று எனக் கூறியுள்ளார் ஜவஹர்லால் நேரு. காந்தி மேற்கொண்டது வெறும் பாதயாத்திரை மட்டுமல்ல; அது ஒரு பெரும் போராட்டப் பயணம் என்பது போகப் போகத்தான் தெளிவாயிற்று. தம்புராவே போர் முரசாகவும், பக்திப் பாடலே யுத்த தேமாகவும் இருந்ததென்று கூறியுள்ளார் ஜே.பி.கிருபளானி. காந்தி கடந்து சென்ற கிராமங்களிலெல்லாம் அவருக்கு உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது. நாளுக்குநாள் காந்தியின் பின்னால் சென்ற கூட்டம் பெருகிக் கொண்டிருந்தது. கிராம அதிகாரிகள் வேலையைவிட்டு விலகிப் போராட்டத்தில் ஈடுபடலாயினர். 24 நாட்கள் நடைப் பயணத்துக்குப் பின்னர் ஏப்ரல் 5ஆம் நாள் காலை காந்தி தண்டி கடற்கரையை அடைந்தார். அடுத்த நாள் காலை பிரார்த்தனைக்குப் பிறகு உப்பை அள்ளி உப்புச் சட்டத்தைமீறி சத்தியாக்கிரகத்தைத் துவக்கினார். அவர் விடுத்த அறிக்கையில் ஏப்ரல் 13ஆம் நாள் வரையுள்ள காலத்தை தேசிய வாரமாகக் கொண்டாட வேண்டுமென்றும் அப்போது உப்புச் சத்தியாக்கிரகத்தை மக்கள் மேற்கொள்ள வேண்டுமென்றும் அப்படி அதில் கலந்து கொள்ள முடியாதவர்கள் விதேசித் துணிப் புறக்கணிப்பு, கதரைப் பயன்படுத்தல் பற்றிய பிரச்சாரப் பணியில் ஈடுபட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

மக்கள் இயக்கம்

காந்தி மேற்கொண்ட தண்டி யாத்திரை மாபெரும் மக்கள் இயக்கமாக உருவெடுத்தது. உப்பு வரிச் சட்டத்தை மீறல், அரசாங்கப் பணிகளிலிருந்தும், கல்விக் கூடங்களிலிருந்தும் விலகல், மதுக்கடை மறியல், விதேசித்துணிப் புறக்கணிப்பு, கதர்ப் பிரச்சாரம், வரி கொடாமை ஆகிய பல்வேறு முறைகளில் சட்டமறுப்பு இயக்கம் மேற்கொள்ளப்பட்டது. பம்பாய் மக்கள் உப்புக் காய்ச்சியதோடு நில்லாது உப்பை வரியின்றி விற்றனர். உப்பு கிடங்குகளைத் தாக்கினர். பிகாரில் வரிச்சட்டங்கள் மீறப்பட்டன. விதேசித் துணி புறக்கணிக்கப்பட்டது. கள்ளுக்கடைகள் மறியல் செய்யப்பட்டன.

Scanned by CamScanner

வங்காளத்திலும், குஜராத்திலும் வரிகொடா இயக்கம் துவக்கப்பட்டது. மோதிலால் நேருவும், ஜவஹர்லால் நேருவும் வீதிகளில் உப்பு விற்றுச் சட்டத்தை மீறினர்.

தமிழ்நாட்டில் சி. ராஜகோபாலாச்சாரியும் நூறு தொண்டர்களும் திருச்சியிலிருந்து வேதாரண்யத்துக்குப் பாதயாத்திரையாகச் சென்று இரண்டு நாள் முகாமிட்டு உப்பு வரிச் சட்டத்தை மீறினர் (1930 ஏப்ரல் 13.28). இவர்கள் வேதாரணியம் நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் பி. பிரகாசமும், கே. நாகேஸ்வரராவும் மெரீனா கடற்கரையில் உப்புக் காய்ச்சினர். சி. ராஜகோபாலாச்சாரி கைது செய்யப்பட்டார். பிரகாசத்துக்கும், நாகேஸ்வரராவுக்கும் அபராதம் விதிக்கப்பட்டது. அதைக் கட்ட மறுத்ததால் அவர்களுடைய கார்கள் அரசாங்கத்தால் கைப்பற்றப்பட்டன. அச்செயலைப் பத்திரிகைகள் பலமாகக் கண்டித்தன. அர்த்தால் அனுசரிக்கப்பட்டது (ஏப்ரல் 22). பெண்கள் பெருவாரியாகக் கலந்து கொண்டனர். அவர்கள் அனைவரும் போலீசின் தடியடிப் பிரயோகத்துக்கு ஆளாயினர். கடற்கரையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டம் (ஏப்ரல் 27) ஆயுதம் தாங்கிய போலீசாரால் கலைக்கப்பட்டது. துப்பாக்கிச் சூட்டில் மூன்று பேர் இறந்தனர்; இவர் படுகாயமுற்றனர். அனைத்துக் கட்சிகளும் போலீஸ் அத்துமீறலைக் கண்டித்தன. சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் அடங்கிய தூதுக்குழு ஊட்டிக்குச் சென்று கவர்னரிடம் கண்டன மனுவைச் சமர்ப்பித்தது. துப்பாக்கிச் சூடு பற்றி விசாரித்த சென்னை மகாஜன சபை வன்முறைக்குக் காரணம் போலீசாரே என்ற முடிவுக்கு வந்தது. சென்னை நகராட்சி மன்றம் கட்சி வேறுபாடின்றித் துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து தீர்மானமொன்றை நிறைவேற்றியது. இவ்வாறு உப்புச் சத்தியாக்கிரகம் மக்கள் இயக்கமாக விரிவடைந்தது.

அர்த்தால்

உப்புச் சத்தியாக்கிரகம் உப்புசப்பற்ற கிளர்ச்சியாகி விடும் என்ற எதிர்பார்த்த அரசாங்கம் போராட்டம் தீவிரமடைந்ததைக் கண்டு கலவரமடைந்தது. அடக்குமுறையில் போராட்டத்தை ஒடுக்க முற்பட்டது. 1930 மே 4ஆம் நாள் நள்ளிரவில் காந்தி கைது செய்யப்பட்டு புனாவிலுள்ள எரவாடா சிறையிலடைக்கப்பட்டார். காந்தி கைது செய்யப்பட்டதை அறிந்த மக்கள் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபடலாயினர். பம்பாயில் முழு அர்த்தால் அனுசரிக்கப்பட்டது. ஹர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்து போராட்டத்தில் கலந்து கொண்டதால் 40 மில்கள் மூடப்பட்டன. பூனாவில் அர்த்தால் முழுவெற்றி பெற்றது. ஷோலாப்பூரில் போலீஸ் நிலையம் கொளுத்தப்பட்டதை அடுத்து நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டில் 25 பேர் இறந்தனர். நூறு பேருக்கு மேல் காயமுற்றனர். கல்கத்தாவில் ஏற்பட்ட கலவரம் துப்பாக்கிச் சூட்டில் முடிந்தது. காந்தி கைது செய்யப்பட்டபின் சத்தியாக்கிரகத்துக்குத் தலைமையேற்ற அப்பாஸ் தியாப்ஜி கைது செய்யப்பட்டார். சூரத் மாவட்டத்திலுள்ள தர்சனா (Dharsana) என்ற இடத்திலிருந்த அரசாங்க உப்பு மண்டியை சரோஜினி நாயுடுவின் தலைமையில் தொண்டர்கள் தாக்கினார்கள். சரோஜினி கைது செய்யப்பட்டார். தொண்டர்கள் அடித்து நொறுக்கப்பட்டார்கள். கர்னாடகத்தில் சானிகட்டா என்ற

இடத்திலிருந்த உப்பு மண்டியைப் பெரிய கூட்டமொன்று தாக்கியது. வடமேற்கு எல்லை மாகாணத்தில் காந்தி அப்துல் கபார்கான் தலைமையில் சாத்விக ஆர்ப்பாட்டம் செய்த சத்தியாக்கிரகிகளை போலீசார் தொடர்ந்து கட்டினர். ஒரு கட்டத்தில் கார்வால் இராணுவப் பிரிவினர் நிராயுதபாணியான அம்மனைத் தொண்டர்களைச் சுட மறுத்துவிட்டனர். கான் கைது செய்யப்பட்டார்.

விதேசித் துணிப் புறக்கணிப்பு

சட்ட மறுப்பு இயக்கத்தின் ஒரு அம்சமான விதேசித்துணிப் புறக்கணிப்பு பல இடங்களில் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டது. பம்பாயில் இப்புறக்கணிப்பு மக்களின் பேராதரவைப் பெற்றது. தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் நெசவாளர்கள் விதேசித் துணிக்கடைகளுக்கு முன் மறியல் செய்தனர். சேலத்தில் ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் வீடுவீடாகச் சென்று விதேசித் துணிக்கெதிராகப் பிரச்சாரம் செய்தனர். கோயமுத்தூரில் நெசவாளர்கள் விதேசித் துணிக்கடைகளையும், கள்ளுக் கடைகளையும் மறியல் செய்தனர். தூத்துக்குடியில் நெசவாளர்கள் பெருங்கூட்டமாகச் சென்று போலீசாரைத் தாக்கி, மாஜிஸ்ரேட் அலுவலகத்தில் அவர்களைச் சூழ்ந்து கொண்டனர். மதுரையில் சௌராஷ்டிரா மக்களின் தனிப் பெருந்தலைவராகத் திகழ்ந்த என்.எம்.ஆர்.சுப்பராமன் விதேசித் துணிப் புறக்கணிப்பை வெற்றிகரமாகச் செய்தார். அவர் கைது செய்யப்பட்ட பின்னரும் 2,000 நெசவாளர்கள் கள்ளுக்கடை மறியல் செய்தனர். இப்புறக்கணிப்பு தமிழ்நாட்டில் சென்னை, சேலம், வேலூர், மதுரை, வேதாரண்யம், ஆந்திரா பகுதியில் ராஜமகேந்திரவரம், பெர்ஹாம்பூர், காக்கினாடா, எல்லூர், கேரளாவில் பாலக்காடு, கள்ளிக்கோட்டை, கர்நாடகப் பகுதியில் மங்களூர், பெல்லாரி, உடுப்பி ஆகிய இடங்களில் தீவிரமாகவும் நடைபெற்றது.

வரிகொடாக் கிளர்ச்சி

குஜராத்திலும், ஐக்கிய மாகாணத்திலும் வரிகொடா கிளர்ச்சி உத்வேகத்துடன் நடத்தப்பட்டது. 1928ல் வல்லபாய் படேல் பர்தோலியில் வரிகொடா இயக்கத்தை வெற்றிகரமாக நடத்திய பின்னர் அப்போராட்டம் சட்டமறுப்பு இயக்கத்தின்போது பிற மாவட்டங்களுக்கும் பரவியது. அகமதாபாத், கெட்டா, பூரோச், சூரத் ஆகிய இடங்கள் வரிகொடா கிளர்ச்சிக் கேந்திரங்களாகத் திகழ்ந்தன. அக்கிளர்ச்சியை அடக்க அரசாங்கம் அடக்குமுறையைக் கையாண்டது. விவசாயிகளிடமிருந்து நிலங்கள் பறிக்கப்பட்டன. கிளர்ச்சியில் ஈடுபட்டோர் கடுமையாகத் தாக்கப்பட்டனர். ஐக்கிய மாகாணத்தில் வரிகொடுக்க மறுத்த ஜமீன்தார்களும், விவசாயிகளும் அரசாங்கத்தால் கொடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். ரேபரேலியில் அரசாங்கத்தோடு ஒத்துழைத்த ஜமீன்தார்கள் விவசாயிகளால் தாக்கப்பட்டனர். மத்திய மாகாணத்தில் வரி குறைப்புக் கிளர்ச்சியும் வலுச்சட்ட மீறலும் நிகழ்ந்தன. சென்னை ராஜதானியில் கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர், நெல்லூர் ஆகிய ஆந்திர மாவட்டங்களில் மட்டுமே வரிகொடா கிளர்ச்சி நடைபெற்றது.

மதிப்பீடு

காந்தியின் உப்புச் சத்தியாக்கிரகம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும். குறிப்பாக காந்தி மேற்கொண்ட தண்டி யாத்திரை இந்தியாவின் இதயத்தையே தொட்டது எனலாம். இந்தியாவே அடித்தளத்திலிருந்து

Scanned by CamScanner

இளைத்தெழுந்தது எனக் குறிப்பிட்டுள்ளார் கே.எம்.முன்ஷி. எல்பா தீவிலிருந்து வந்த நெப்போலியன் பாரீசுக்குச் சென்றது போல, முலோலினி ரோமுக்குச் சென்றதுபோல இருந்தது காந்தி சபர்மதியிலிருந்து தண்டிக்குச் சென்றது என ஒப்பிட்டுக் காட்டியுள்ளார் ஜே.எம். பிரௌன். உப்புச் சத்தியாக்கிரகத்தின்போது உப்பு வரிச் சட்டத்தைமீறி 70,000 பேர் சிறைச்சாலைகளுக்குச் சென்றனர். தமிழ்நாடு, பம்பாய், ஐக்கிய மாகாணம் ஆகிய இடங்களில் இப்போராட்டம் அமோக வெற்றியைப் பெற்றது. இப்போராட்டத்தின்போது காந்தியின் தீர்மானத்திட்டம் மிகுந்த ஊக்கத்துடன் செயல்படுத்தப்பட்டது. விதேசித் துணிப் புறக்கணிப்பு கள்ளுக்கடை மறியல், வரிகொடாக் கிளர்ச்சி ஆகியவை போராட்டத்தைக் கிராமங்களுக்கெல்லாம் கொண்டு சென்றன. பல தலைவர்கள் இருந்தமையால் தலைவர்கள் கைது செய்யப்பட்டாலும் சட்டமறுப்புப் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

சட்டமறுப்பு இயக்கம், குறிப்பாக உப்புச் சத்தியாக்கிரகம் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வங்காளத்தில் சுபாஷ் சந்திர போஸ் கோஷ்டிக்கும், சென்குப்தா கோஷ்டிக்குமிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தமையால் இயக்கம் பலவீனப்பட்டது. வங்காள முஸ்லீம்களும் தாழ்த்தப்பட்ட மக்களும் இவ்வியக்கத்திலிருந்து ஒதுங்கியே இருந்தனர். உப்பு மண்டித் தாக்குதல்களும் அதனால் ஏற்பட்ட போலீசாரின் தடியடிப் பிரயோகமும் துப்பாக்கிச் சூடும் உப்புச் சத்தியாக்கிரகத்தை மேற்கொண்டு பரவ விடாமல் செய்துவிட்டன. வரிகொடாக் கிளர்ச்சி குஜராத் ஐக்கிய மாகாணத்தில் இருந்தது போன்று பிற இடங்களில் இல்லை. தமிழ்நாட்டில் இதற்கு ஆதரவே இல்லாமல் போனது வியப்பைதரும் விஷயமே. பீஹாரில் வரிகொடா கிளர்ச்சி செய்த தலக் காங்கிரஸ் தலைவர்கள் அனுமதி கொடுக்கவில்லை; சில இடங்களில் சட்ட மறுப்பு இயக்க விதிகள் மீறப்பட்டன. கட்டாக், மத்திய மாகாணத்தில் காங்கிரஸ் தொண்டர்கள் பள்ளிகளையும், கல்லூரிகளையும் மறியல் செய்ததோடு பொது சொத்துக்களையும் அழித்தனர். அரசாங்க ஊழியர்களின் குடும்பங்கள் பல தொல்லைகளுக்குள்ளாயின. மறியலின்போது பல பெண்களும் பாமர மக்களும் போலீசாரின் வன்முறைத் தாக்குதல்களுக்கு இலக்காக நேரிட்டது. அரசாங்கத்தின் அடக்குமுறையால் சட்டமறுப்பியக்கத் தொண்டர்கள் பலமிழந்தனர். அதேசமயம் அடக்குமுறையால் மட்டும் இயக்கத்தை ஒடுக்க முடியாதென்பதை அரசாங்கமும் உணர்ந்தது.

வட்டமேஜை மாநாடுகள்

முதல்வட்டமேஜை மாநாடு, 1930

சட்டமறுப்பு இயக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே முதல் வட்டமேஜை மாநாடு (Round Table Conference) லண்டனில் 1930 நவம்பர் 12 முதல் 1931 ஜனவரி 19 வரை நடைபெற்றது. அம்மாநாட்டில் கலந்து கொள்ள காந்தியும் காங்கிரஸ் தலைவர்களும் மறுத்து விட்டனர். எனினும் பிரிட்டிஷ் இந்தியா, மன்னர் மாநிலங்கள், இங்கிலாந்தின் அரசியல் கட்சிகள் ஆகியவற்றில் 89 பிரதிநிதிகள் அதில் கலந்து கொண்டனர். பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே

மக்டொனால்டு (Ramsay Macdonald) அம்மாநாட்டுக்குத் தலைமை தாங்கினார். இந்தியக் கூட்டாட்சி, கூட்டாட்சியின் ஆட்சித் துறை, சட்டத் துறை, அதிகாரப் பொறுப்பாக்கல், பொறுப்பாட்சியின் அடிப்படையில் மாநில அரசாங்கங்களைத் திருத்தி அமைத்தல் ஆகியவை பற்றி விவாதிக்கப்பட்டன. கூட்டாட்சி (Federation) பற்றி ஒருமித்த கருத்து ஏற்பட்டது. ஆனால் சிறுபான்மை வகுப்புவாதப் பிரச்னை பற்றிக் கருத்து மாறுபாடுகள் தோன்றின. மேலும் காங்கிரஸின் கருத்தறியாமல் எவ்வித முடிவையும் மேற்கொள்ள முடியவில்லை. எனவே முதல் வட்டமேஜை மாநாடு ஒத்திப் போடப்பட்டது.

காந்தி இர்வின் ஒப்பந்தம்

வட்டமேஜை மாநாடு மூலம் இந்தியத் தலைவர்களைக் கலந்தாலோசிப்பது என்ற ஆங்கிலேயரின் கண்துடைப்பு முயற்சியைக் காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளவில்லை. மேலும் பிரிட்டிஷ் பிரதமர் மக்டோனால்டின் கொள்கை விளக்கமும் தெளிவில்லாமல் இருந்தது. எனவே, காங்கிரஸ் சட்டமறுப்பு இயக்கத்தைத் தீவிரமாகத் தொடர்ந்து நடத்துமாறு மக்களைக் கேட்டுக் கொண்டது. காங்கிரஸ் தலைவர்களெல்லாம் சிறைக்கூடங்களில் இருந்தபோதும் போராட்டத்தைத் தொடர்வதற்கான ஏற்பாடுகள் ஆர்வத்துடனும் வேகத்துடனும் மேற்கொள்ளப்பட்டன. நிலைமையின் தீவிரத்தை உணர்ந்த வைசிராய் இர்வின் பிரபு காந்தியும் பிற காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர்களும் விடுதலை செய்யப்படுவர் என்று அறிவித்தார் (1931 ஜனவரி 25). அவ்வறிப்பின்படி காந்தியும் பிற காங்கிரஸ் தலைவர்களும் விடுவிக்கப்பட்டனர். காங்கிரஸ்மீது விதிக்கப்பட்டிருந்த தடை விலக்கிக் கொள்ளப்பட்டது. சாப்ரு, ஜெயகர், சீனிவாச சாஸ்திரி ஆகியோரின் சமரச முயற்சியால் காந்தி வைசிராய் இர்வின் பிரபுவை சந்திக்கச் சம்மதித்தார். அவ்விருவரின் சந்திப்புக்கள் 1931 பிப்ரவரி 17 விருந்து மார்ச் 5 வரை தொடர்ந்தன. அச்சந்திப்புக்களின் விளைவாகக் காந்திக்கும் இர்வினுக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டது. அதுவே காந்தி-இர்வின் ஒப்பந்தம் (Gandhi Irwin Pact) என்றழைக்கப்படுகிறது.

காந்தி இர்வின் ஒப்பந்தத்தில் காணப்பட்ட முக்கிய விதிகளாவன:

1. அரசியல் சட்ட சீர்திருத்தங்கள் பற்றி எல்லைகள் தெளிவாக வரையறுக்கப்படும்;

2. வட்டமேஜை மாநாட்டில் காங்கிரஸ் கலந்து கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்;

3. சட்டமறுப்பு இயக்கம் விலக்கிக் கொள்ளப்படும்;

4. சுதேசித் தொழிற்சாலைகளை ஊக்குவிக்க அரசாங்கம் ஒப்புக்கொண்டதால் விதேசிப் பொருள் புறக்கணிப்பு கைவிடப்படும்;

5. கள்ளுக்கடை மறியல் அமைதியாக நடைபெறும்;

6. போலீஸ் அத்துமீறல் பற்றிய விசாரணை வலியுறுத்தப்பட மாட்டாது;

7. சட்டமறுப்பு இயக்கம்பற்றி அரசாங்கம் பிறப்பித்த ஆணைகள் அனைத்தும் விலக்கிக் கொள்ளப்படும்;

Scanned by CamScanner

8. குற்றச்சட்டத் திருத்தச் சட்டம் கைவிடப்படும்;

9. அரசியல் வழக்குகள் வாபஸ் பெற்றுக் கொள்ளப்படும்;

10. சட்டமறுப்பு இயக்கம் சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டோர் அனைவரும் விடுதலை செய்யப்படுவர்;

11. அபராதத் தொகை வசூலிக்கப்பட மாட்டாது;

12. ஆர்ப்பாட்டக்காரர்களை தண்டிப்பதற்காக கொண்டுவரப்பட்ட போலீசார் விலக்கிக் கொள்ளப்படுவர்;

13. கைப்பற்றப்பட்ட நகரும் சொத்துக்களும் திருப்பியளிக்கப்படும்;

14. பிற நகராட்சி சொத்துக்களும் திரும்ப வழங்கப்படும்;

15. பதவியைத் துறந்தோர் மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளப்படுவர்;

16. உப்பு வரிச்சட்டம் விலக்கிக் கொள்ளப்பட மாட்டாது. ஆனால் கடலோரப்பகுதி மக்கள் வீட்டுத் தேவைக்கான உப்பை உற்பத்தி செய்து கொள்ளலாம்;

17. இந்த ஒப்பந்தத்தைக் காங்கிரஸ் கடைபிடிக்கத் தவறினால் பொது மக்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கலாம்.

காந்தி-இர்வின் ஒப்பந்தம் பரஸ்பர நம்பிக்கையின்மீது செய்து கொள்ளப்பட்ட சமரசமான உடன்பாடாகும். முதன்முறையாக ஆங்கிலேய அரசாங்கம் காங்கிரசைத் தனக்குச் சமமாக மதித்து, அதன் பிரதிநிதியான காந்தியுடன் செய்து கொண்ட சீரிய உடன்படிக்கையாகும். இந்தியாவின் சார்பாகப் பேசக்கூடிய அந்தஸ்தையும், அதிகாரத்தையும் அரசு காங்கிரசுக்கு இவ்வுடன்படிக்கையின்மூலம் வழங்கியதென்றும், வருங்காலப் பேச்சுவார்த்தைகளிலும் தனது கருத்துக்களைக் கூறுவதற்கான உரிமையும் காங்கிரசுக்கிருப்பதை ஒத்துக் கொண்டது என்றும் ஆர்.சி. மஜும்தார் குறிப்பிட்டுள்ளார். இவ்வுடன்படிக்கை காந்திக்கு கிடைத்த வெற்றி என்று பலரும் கூறினர். ஆனால் காந்தியோ இது இருவருக்கும் கிடைத்த வெற்றி என்றார். இந்திய அரசியல் சட்ட வளர்ச்சி வரலாற்றில் இவ்வொப்பந்தம் ஒரு குறிப்பிடத்தக்க மைல் கல்லாகும். இந்த ஒப்பந்தத்தின் விளைவாக அரசாங்க அடக்குமுறை தற்காலிகமாக நின்றது. சட்டமறுப்பு இயக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டது. காங்கிரஸ் போராடுவதற்கான புதுப்பலம் பெற்றது. காங்கிரசின் ஏகப்பிரதிநிதியாக காந்தி இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொண்டார்.

காந்தி-இர்வின் ஒப்பந்தத்துக்குப் பரவலான வரவேற்பு இருந்தபோதிலும் ஜவஹர்லால் நேரு, சுபாஷ் சந்திரபோஸ் போன்றவர்கள் இவ்வுடன்பாட்டால் இந்தியாவின்மீது இங்கிலாந்துக்கிருந்த கட்டுப்பாடு எவ்வகையிலும் குறையவில்லை என்று குறை கூறினர். பகத்சிங் மற்றும் அவரது கூட்டாளிகள் மீது விதிக்கப்பட்டிருந்த மரண தண்டனையைக் குறைக்க இந்த ஒப்பந்தம் வழி செய்யவில்லை என்று கூறப்பட்டது. சட்டமறுப்பு இயக்கத்தின்போது

நடைபெற்ற போலீஸ் இராணுவ அத்துமீறல்களைப் பற்றிய விசாரணையை வலியுறுத்தத் தவறிவிட்டார் காந்தி என்பதில் பலருக்கு வருத்தமேற்பட்டது. இந்தச் சமரச முயற்சியில் காந்தி அதிகமாகவே விட்டுக் கொடுத்துவிட்டார் எனக் குறிப்பிட்டுள்ளார் ஜே.பி. கிருபளானி. காங்கிரஸ்காரர்கள் தங்களது மனதுக்குள் இந்த ஒப்பந்தத்தை எப்போதும் ஏற்றுக் கொண்டதில்லை எனக் கூறியுள்ளார் சி.ஒய். சிந்தாமணி. இருப்பினும் காங்கிரஸில் கூடிய காங்கிரஸ் (1931 மார்ச்) காந்தி இர்வி ஒப்பந்தத்தை அங்கீகரித்தது. அதுமட்டுமல்ல, காந்தியைத் தனது ஏகப்பிரதிநிதியாக இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொள்ள அனுப்பி வைத்தது காங்கிரஸ்.

இரண்டாவது வட்டமேஜை மாநாடு, 1931

இரண்டாவது வட்ட மேஜை மாநாடு 1931 செப்டம்பர் 7 லிருந்து டிசம்பர் 7 வரை நடைபெற்றது. மாநாடு துவங்கி ஐந்து நாட்களுக்குப் பிறகு (செப்.12) காந்தி கலந்து கொண்டார். மொத்தம் 107 பிரதிநிதிகள் அம்மாநாட்டில் பங்கேற்றனர். பிரிட்டிஷ் பிரதமர் தலைமையேற்றார். இந்தியாவின் வருங்கால அரசியல் சட்ட அமைப்பும் சிறுபான்மையினரின் வகுப்புவாரி பிரதிநிதித்துவமும் பிரதானமாக விவாதிக்கப்பட்டன. இவ்விரண்டில் வகுப்புவாதப் பிரதிநிதித்துவத்தைப் பற்றி விவாதிப்பதிலேயே பெரும்பான்மையான பிரதிநிதிகள் ஆர்வத்துடன் இருந்தனர். இந்தியாவுக்குச் சுயாட்சி வழங்குவதற்குமுன் சிறுபான்மையினரின் வகுப்புவாத பிரச்னை தீர்க்கப்பட்டாக வேண்டுமென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பில் வலியுறுத்தப்பட்டது. ஆனால் காந்தி அந்த வாதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. பிரிட்டிஷார் இந்தியாவைவிட்டு வெளியேறாத வரை வகுப்புவாதப் பிரச்னை தீராது எனக் காந்தி வாதிட்டார். 'தீண்டத்தகாதோர்' எனக் கருதப்பட்டோருக்கும் தனித்தொகுதி வழங்கப்படுவதைப் பற்றிய பிரிட்டிஷ் அரசின் திட்டம் வகுப்புவாதப் பிரச்னையை மேலும் சிக்கலுடைய தாக்கிற்று. அப்படியாயின் தீண்டாமை நிரந்தரமாக்கப்பட்டுவிடும் என்று கருதிய காந்தி அத்திட்டத்தை அடியோடு எதிர்த்தார். ஆனால் அம்பேத்காரும், ஜின்னாவும் தனித்தொகுதித் திட்டத்தை ஆதரித்தனர். இந்தியத் தலைவர்களுக்கிடையே இதுபற்றிய கருத்துடன்பாடு இன்மையால் சிறுபான்மையினருக்கு அளிக்க வேண்டிய பாதுகாப்புகள் பற்றி பிரிட்டிஷ் அரசாங்கமே முடிவு செய்யும் என்று அறிவித்தார் பிரதமர் ராம்சே மாக்டொனால்டு. அதன் விளைவே வகுப்புத் தீர்வு (Communal Award) ஆகும். தனது மகத்தான முயற்சியில் தோல்விகண்ட காந்தி, தோல்வியை ஏற்றுக்கொண்டு வெறுங்கையோடு இந்தியா திரும்பினார் (1931 செப். 28). காந்தியின் தோல்வியை மகத்துவமான தோல்வி (Magnificent failure) என்று வர்ணித்துள்ளார் சி.எப்.ஆன்ட்ரூஸ் (C.F. Andrews).

முதல் வட்டமேஜை மாநாட்டைவிட, இரண்டாவது வட்டமேஜை மாநாடு மோசமான விளைவுகளை ஏற்படுத்தியது. மும்மாநாடு துவங்கியபோது முற்போக்கு தொழிற்கட்சி அரசாங்கத்துக்கு பதில் பிற்போக்கு டோரி கட்சி ஆட்சியில் இருந்தது. புதிதாக நியமிக்கப்பட்ட வைசிராய் வில்லிங்டன் பிரபு காங்கிரசை ஒடுக்கி, காந்தி-இர்வின் ஒப்பந்தத்தை உதாசீனப்படுத்தினார். அதேபோன்று இந்திய விவகாரச் செயலர் சாமுவேல் ஹோர் வகுப்புப் பிரச்னை

Scanned by CamScanner

(Communal Problem) யை மேலும் சிக்கலாக்கினார். காந்தி மட்டும் காங்கிரஸ் தனிப்பிரதிநிதியாகக் கலந்து கொண்டதால் அவருக்கும் பிரதிநிதித்துவ பலம் இல்லாமல் போய்விட்டது. இம்மாநாட்டில் முதல் பெண்மணியாகக் கலந்துகொண்ட சரோஜினி நாயுடுவும், மாளவியாவும் வைசிராயின் நியமன உறுப்பினர்கள். தனிப்பிரதிநிதியாகக் கலந்து கொண்டது காந்தி செய்த தவறு என்று குறிப்பிட்டுள்ளார் சி.ஒய்.சிந்தாமணி. முதல் மாநாட்டின் முடிவில் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டனர்; போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது. ஆனால் இரண்டாவது மாநாட்டுக்குப்பின் சட்ட மறுப்பு இயக்கம் மீண்டும் துவக்கப்பட்டது; மேலும் கடுமையாக ஒடுக்கப்பட்டது.

மீண்டும் போராட்டம்

இர்வின் பிரபுவுக்குப் பின் வைசிராயாக வந்த விலிங்டன் பிரபு (Lord Willington, 1931-36) காந்தி-இர்வின் ஒப்பந்தத்தைக் கைவிட்டார். அடக்குமுறையைக் கையாண்டார். ஐக்கிய மாகாணத்தில் வரிகொடாக் கிளர்ச்சியில் ஈடுபட்ட நேரு, ஷெர்வானி, புருஷோத்தம்தாஸ், தாண்டன் போன்றோர் கைது செய்யப்பட்டனர். வங்காளத்தில் சுபாஷ் சந்திரபோஸ் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட அரசாங்க எதிர்ப்பு நடவடிக்கைகள் கடுமையாக அடக்கப்பட்டன. வடமேற்கு எல்லை மாகாணத்தில் கால்அப்துல் கபார்கான் கமிஷனர் நடத்திய தர்பாரில் கலந்து கொள்ளவில்லை என்பதற்காக கைது செய்யப்பட்டார்! அதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த அவரது தொண்டர்கள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டனர். ஈவிரக்கமின்றிச் சுடப்பட்டனர். இவையாவும் காந்தி லண்டனில் வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொண்டிருந்தபோது நிகழ்ந்தவையாகும்.

காந்தி இந்தியா திரும்பியவுடன் (1931 டிசம்பர் 28) இந்தியாவில் நடந்த அத்துமீறல்கள் பற்றி அறிந்தார். அவர் வைசிராயைச் சந்திக்க மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. வைசிராய் காந்தியை சந்திக்க விரும்பவில்லை. எனவே, காந்தி சட்டமறுப்பு இயக்கத்தை மீண்டும் துவக்கத் தீர்மானித்தார். 1932 ஜனவரி 3ஆம் நாள் போராட்டம் திரும்பவும் துவக்கப்பட்டது. அரசாங்கம் நான்கு நெருக்கடிச் சட்டங்களைப் பிறப்பித்துப் போராட்டத்தை அடக்கத் துணிந்தது. போராட்டம் புதுப்பிக்கப்பட்ட மறுநாளே (ஜன. 4) காந்தி கைது செய்யப்பட்டு எரவாடா சிறையிலடைக்கப்பட்டார். காங்கிரஸ் சட்ட விரோதமான அமைப்பு என்று அறிவிக்கப்பட்டது. கஸ்தூரிபாயும் கைது செய்யப்பட்டார்! அலகாபாத்தில் ஊர்வலத்தில் கலந்து கொண்ட ஜவஹர்லால் நேருவின் தாயார் சொருபராணி போலீசாரால் தாக்கப்பட்டு தலையில் காயமுற்றார். காங்கிரஸின் சொத்துக்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டன. காங்கிரஸ்காரர்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டன அல்லது கைப்பற்றப்பட்டன. சென்னை ரட்டன் கடைத் தெருவில் (Rattan Bazaar) அமைதியாக அந்நியத் துணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்த திருமதி ருக்மணி லட்சுமிபதி போலீசாரால் தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டார். கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் கூட்டம் போலீசாரால் கலைக்கப்பட்டது. கூட்டத்துக்குத் தலைமை வகித்த திருமதி நெல்லி சென்குப்தா கைது செய்யப்பட்டு ஆறு மாதச் சிறைத்தண்டனை பெற்றார். பல பிரதிநிதிகளும் கைது செய்யப்பட்டனர். போராட்டம் துவங்கிய ஆறு மாதங்களில் 1,20,000

பேர் கைதானார்கள்! அரசாங்கத்தின் அக்கிரமமான அடக்குமுறையையும்மீறி மக்கள் சட்ட மறுப்புப் போராட்டத்தில் தீரத்துடன் ஈடுபட்டனர்.

வகுப்புவாரித் தீர்வு

இந்தியாவில் சட்டமறுப்பு இயக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மக்டொனால்டு தனது வகுப்புவாரித் தீர்வை (Communal Award) 1932 ஆகஸ்டு 17 ஆம் நாள் அறிவித்தார். இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பற்றி இந்தியத் தலைவர்கள் ஒருமுடிவுக்கு வராமையால் பிரிட்டிஷ் பிரதமர் தன்னிச்சையாக இத்தீர்வை வழங்கினார். அவ்வகுப்புவாரித் தீர்வின்படி:

1. முஸ்லீம்கள், இந்தியாவிலுள்ள ஐரோப்பியர், சீக்கியர்கள் ஆகியோருக்குத் தனித்தொகுதிகள் ஒதுக்கப்படும்;

2. தனித்தொகுதிகள் இடம்பெறாத பிற தகுதியுடைய வாக்காளர்கள் பொதுத் தொகுதியில் வாக்களிப்பர்;

3. பம்பாயில் பலவகை உறுப்பினர் தொகுதிகள் (Plural Member Constituencies) நிலவற்றில் மராத்தியர்களுக்கென ஏழு இடங்கள் ஒதுக்கப்படும்;

4. தாழ்த்தப்பட்டோருக்கான (Depressed Classes) தனித்தொகுதிகள் ஒதுக்கப்படும்;

5. ஆங்கிலோ-இந்தியர்கள் தங்களது வகுப்புவாரியாகவே வாக்களிப்பர்.

6. வர்த்தகம், தொழில், தோட்டத்தொழில் ஆகியவற்றுக்குப் பிரத்யேகப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படும்.

பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மக்டொனால்டு வழங்கிய வகுப்புத் தீர்வு இந்திய சமுதாயங்களுக்கிடையே புகுத்தப்பட்ட வெறுப்புத் தீர்வாகும்; அதாவது பரஸ்பர வெறுப்பையும் அவநம்பிக்கையையும் வளர்க்கக்கூடிய தீர்வாகும்; இத்தீர்வின்படி தாழ்த்தப்பட்ட மக்கள் இந்துக்களிடமிருந்து நிரந்தரமாகப் பிரிக்கப்பட்டு விடுவர். சமயம், வகுப்பு, இனம், தொழில் ஆகியவற்றின் அடிப்படையில் நாடு பிரிக்கப்பட்டால் இந்தியாவின் ஒருமைப்பாடும் பல வகுப்பாரிடையே நிலவ வேண்டிய ஒற்றுமையும் சீர்குலைந்துவிடும். தனிப்பிரதிநிதித்துவம் கோராத கிறித்துவர்களுக்கும் பெண்களுக்கும்கூட இட ஒதுக்கீடு செய்தது விஷமத் தனமானது. முஸ்லீம்களுக்கும், ஐரோப்பியர்களுக்கும் தனித்தொகுதிகள் அளிக்கப்படுவதால் வங்காளத்தின் மண்ணின் மைந்தர்கள் வெகுவாகப் பாதிக்கப்படுவர். இத்தகைய அச்சங்கள் இந்தியர்களிடையே எழுந்தன. வங்காளத்திலும் பஞ்சாபிலும் சிறுபான்மையினராக இருந்த இந்துக்களுக்கு இந்த வகுப்புத் தீர்வு மாபெரும் அநீதியை இழைத்துவிட்டது எனக் குறிப்பிட்டுள்ளார் சி.ஒய்.சிந்தாமணி. இந்த வகுப்புத் தீர்வு நடைமுறைப் படுத்தப்படுமானால் சிறுபான்மையினருக்கும் பிறருக்குமிடையே பெரிய பிளவை ஏற்படுத்திவிடும் என்று அஞ்சப்பட்டது. சுருங்கக்கூறின், பிரதமர்

Scanned by CamScanner

மக்டொனால்டின் வகுப்புத் தீர்வு நாட்டுப் பிரிவினையில் விளைவடைந்ததற்கு தானே காரணம் என்று கருதினார்.

பூனா உடன்பாடு

மெக்டொனால்டின் வகுப்புத் தீர்வு இந்தியர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. எரவாடா சிறையிலிருந்த காந்தி தனது உயிரைப் பணயம் வைத்தாவது வகுப்புத் தீர்வை எதிர்ப்பதென்று முடிவு செய்தார். காந்தி பிரிட்டிஷ் பிரதமருக்கு எழுதிய கடிதத்துக்கு (1932 ஆக.18) வந்த பதிலில் தாழ்த்தப்பட்ட மக்களைபற்றி காந்தி எடுத்திருக்கும் முடிவு உள்நோக்கமுடையது என்று குறிப்பிடப்பட்டிருந்தது (செப். 12). இந்துக்களிடமிருந்து நிரந்தரமாகப் பிரிக்கும் நோக்கத்தோடு தாழ்த்தப்பட்டோருக்குத் தனித்தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. இது தவிர்க்கப்பட வேண்டிய தீமைப்பு எனக் கருதிய காந்தி அதற்கெதிராகச் சாகும்வரை உண்ணாவிரதத்தை (Fast Unto Death)த் துவக்கினார் (செப்டம்பர் 20). காந்தியின் உண்ணாவிரதம் மில்லியன் கணக்கான இந்தியர்களின் உள்ளங்களையெல்லாம் உருக்கியது. மாளவியாவின் முயற்சியால் பிரதான இந்துத் தலைவர்கள் பூனாவில் கூடினர். மாளவியா, சாப்ரு, ராஜேந்திர பிரசாத், அம்பித்கர், தக்கர், ராஜகோபாலாச்சாரி, பிர்லா, வல்லபாய் பட்டேல், சரோஜினி நாயுடு, குல்சந்த், அம்பேத்கார், எம்.சி.ராஜா போன்றோர் விரிவாக விவாதித்த பின்னர் ஒரு உடன்பாட்டுக்கு வந்தனர். அந்த உடன்பாடே பூனா உடன்பாடு(Poona Pact) என்றழைக்கப்படுகிறது. காந்தி தாழ்த்தப்பட்டோர் தலைவர்கள், பிரிட்டிஷ் அரசாங்கத்தினர் ஆகியோருக்கு உடன்பாடான பூனா உடன்பாடு ஒரே சமயத்தில் லண்டனிலும், டெல்லியிலும் 1932 செப்டம்பர் 26ஆம் நாள் அறிவிக்கப்பட்டது. அன்று சரியாக மாலை 5.15 மணிக்கு காந்தி தனது உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார்.

பூனா உடன்பாட்டின் படி.

1. தாழ்த்தப்பட்ட மக்களுக்கென தனித்தொகுதிகள் இருக்காது;

2. பிற இந்துக்களைப் போலவே பொதுத் தொகுதிகளில் வாக்களிப்பர்;

3. பொதுத் தொகுதிகளில் தாழ்த்தப்பட்டோருக்கென குறிப்பிட்ட இடங்கள் ஒதுக்கப்படும்;

4. ஒவ்வொரு ஒதுக்கப்பட்ட இடத்துக்கும் தாழ்த்தப்பட்டோர் நான்கு வேட்பாளர்களை தங்களுக்குள்ளிருந்து தேர்ந்தெடுப்பர்;

5. தாழ்த்தப்பட்டோருக்கு அளிக்கப்படும் வேட்பாளர் தேர்வு பற்றிய தொடக்கத் தேர்தல்கள் (Primary Election) ஐந்தாண்டுகளுக்கு நீடிக்கும்;

6.தாழ்த்தப்பட்டோருக்கு உள்ளாட்சி மன்றங்களிலும், பொதுப்பணிகளிலும் போதிய இடங்கள் அளிக்கப்படும்.

அப்போதையச் சூழ்நிலையில் பூனா உடன்பாடு பாராட்டத்தக்க சமரசச் சாசனமாகும். நாட்டு மக்களிடையே அது பரவலான வரவேற்பைப் பெற்றது. காந்தி மரணத்தின் பிடியிலிருந்து காப்பாற்றப்பட்டார். தாழ்த்தப்பட்ட மக்களின் உயர்வுக்காக காந்தி எழுப்பிய குரலுக்கு இந்துக்கள் செவி சாய்த்தனர்.

தீண்டத்தகாதோர் என்று கருதப்பட்ட தாழ்த்தப்பட்டோர் இந்தியாவில் அரிஜன் (Harijans) கடவுளின் குழந்தைகள் என்று அழைக்கப்பட்டனர். தீற்றுக்கணக்கான கோயில்கள் அவர்களுக்காகத் திறந்துவிடப்பட்டன. அவர்களது உயர்வுக்காகப் பாடுபடுவதற்கென அரிஜன சேவா சங்கம் (Harijan Sevak Sangh) தோற்றுவிக்கப்பட்டது. தீண்டாமை ஒழிப்பு பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டது. அரிஜன் என்ற பெயரில் காந்தி ஒரு பத்திரிகையைத் துவக்கினார்.

எனினும் பூனா உடன்பாட்டில் காணப்பட்ட சில குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டன. உதாரணமாக, வகுப்புத் தீர்வின்படி தாழ்த்தப்பட்டோருக்கென 71 இடங்கள் தான் கிடைக்க வேண்டும். ஆனால் பூனா உடன்பாட்டின்படி அவர்களுக்கு 148 இடங்கள் ஒதுக்கப்பட்டன. இவ்வுடன்பாட்டின் விளைவாகத் தனித் தொகுதிகளுக்கு முடிவுகட்டப்படவில்லை; மாறாக அவை ஏதோ ஒரு வடிவில் நிலைபெறவே செய்தன. இந்திய விடுதலைப் போராட்டத்துக்கு நேரடித் தொடர்பில்லாத வகுப்புப் பிரதிநிதித்துவத்துக்காக காந்தி சாகும்வரை உண்ணாவிரதமிருந்து போராட்டத்தைத் திசை திருப்பியிருக்க வேண்டாம் என்றும் சிலர் கருதினர். தாழ்த்தப்பட்டோருக்குத் தனித் தொகுதிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டதால் இந்துக்களின் அரசியல் சக்தி குறைந்துவிட்டது. எனவே நோயைவிட அதற்களிக்கப்பட்ட சிகிச்சை மோசமானது என்று கூறப்பட்டது. தாழ்த்தப்பட்ட மக்களைத் திருப்திப்படுத்துவதற்காகச் செய்து கொள்ளப்பட்ட சமனற்ற சமரசம் (Unequal Compromise) என்ற குற்றச்சாட்டுக்குள்ளாயிற்று. வங்காளத்திலும் பஞ்சாபிலும் பெரும்பான்மையினராக இருந்த இந்துக்கள் இந்த உடன்பாட்டால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டனர். இந்து சமுதாயம் முழுதுமே இவ்வுடன்பாட்டால் பாதிக்கப்பட்டது. காந்தியின் உயிரைக் காப்பாற்றுவதற்காக இது பயன்பட்டதைத் தவிர வேறொன்றுமில்லை என்று கூறியுள்ளார் டி.ஜி.டெண்டுல்கர் (D.G.Tendulkar).

மூன்றாவது வட்டமேஜை மாநாடு, 1932

இந்தியத் தலைவர்கள் வகுப்புவாதச் சிக்கலைத் தீர்ப்பதிலும் பலவீனப்பட்டுப்போன சட்டமறுப்பு இயக்கத்தை நடத்துவதிலும் ஈடுபட்டிருந்தபோது மூன்றாவது வட்டமேஜை மாநாடு கூட்டப்பட்டது. அது 1932 நவம்பர் 17 லிருந்து டிசம்பர் 24 வரை நடைபெற்றது. அம்மாநாட்டிற்கு 46 தெரிந்தெடுக்கப்பட்ட பிரிட்டிஷ் அரசாங்க விசுவாசிகள் மட்டுமே பிரதிநிதிகளாக அழைக்கப்பட்டிருந்தனர். காங்கிரஸ் இதில் கலந்து கொள்ளவில்லை. இரண்டாவது வட்டமேஜை மாநாட்டின் போது அமைக்கப்பட்ட துணைக்குழுக்களின் அறிக்கைகள் பற்றியே விவாதம் நடைபெற்றது. குறிப்பாக பாதுகாப்பு விதிகள் கூட்டாட்சியில் மன்னர் மாநிலங்கள் இணைக்கப்படுவதற்கான நிபந்தனைகள், ஒஞ்சியுள்ள அதிகாரங்களை எவ்வாறு பகிர்ந்தளிப்பது ஆகிய பிரச்சனைகள் விரிவாக விவாதிக்கப்பட்டன. மூன்று வட்ட மேஜை மாநாடுகளும் வீண் முயற்சிகள் என கூற முடியாது. இந்தியக் கூட்டாட்சி, கூட்டாட்சிச் சட்டமன்றம், நீதிமன்றம், மன்னர் மாநிலங்கள் இணைவது போன்ற பல அரசியல் சட்டப் பிரச்சனைகள் பற்றிய முடிவுகள்

Scanned by CamScanner

எடுக்கப்பட்டன. இம்முடிவுகளையெல்லாம் உள்ளடக்கிய வெள்ளை அறிக்கை (White Paper) தயாரிக்கப்பட்டு 1933 மார்ச் மாதம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த வெள்ளை அறிக்கையின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டதுதான் 1935 இந்திய அரசாங்கச் சட்டமாகும்.

போராட்டம் நிறுத்தப்பட்டது

அரசாங்கத்தின் அடக்குமுறையையும் மீறிச் சட்டமறுப்பு இயக்கம் நீடித்தது. போராட்டம் மீண்டும் துவக்கப்பட்ட ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்டது (1933 ஜன.4) தொண்டர்கள் தாக்கப்பட்டார்கள், கைது செய்யப்பட்டார்கள். கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் போலீஸ் தாக்குதலோடு கலைக்கப்பட்டது (மார்ச் 31). சிறைக்குள்ளிருந்த காந்தி சுயகத்திற்கு 21 நாள் உண்ணாவிரதத்தை துவக்கினார் (மே 8). உண்ணாவிரதத்தைத் துவக்கிய அன்றே அவர் விடுவிக்கப்பட்டார். போராட்டத்தை மூன்று மாதங்களுக்குத் தள்ளி வைத்தார் காந்தி. காங்கிரஸ் தலைவர்கள் காந்தியை பூனாவில் சந்தித்துப் பேசினர் (ஜூலை 12). வைசிராயைச் சந்திக்க முடியாமையால் தனிமனித சத்தியாக்கிரகத்தை (Individual Satyagraha)த் துவக்குவதென முடிவு செய்தனர். காந்தி மீண்டும் கைது செய்யப்பட்டதை (ஆக. 1)த் தொடர்ந்து 1933 ஆகஸ்டிலிருந்து 1934 மார்ச் வரை நாடு முழுவதிலும் ஆயிரக்கணக்கானோர் தனிமனித சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுக் கைதாயினர். அவர்கள் அனைவரும் போலீஸ்காரின் கொடூரமான தாக்குதல்களுக்கு உள்ளாயினர். தனிமனித சத்தியாக்கிரகமும் வலுவிழந்ததால் காங்கிரஸ் 1934 மே 20 ஆம் நாள் சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்திவிட்டது. காந்தி காங்கிரசை விட்டுவிலகிக் கொள்ளத் தீர்மானித்தார். அகிம்சை, கதர், தீண்டாமை, நூற்பு, வாக்குரிமை, அரசியல் பிரச்னைகளுக்கு அறமுறைகளைப் பின்பற்றல் ஆகியவை பற்றிக் காந்திக்கும் பிற முக்கிய காங்கிரஸ் தலைவர்களுக்குமிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் காங்கிரசைவிட்டு விலகிச் செல்ல முடிவு செய்தார். பம்பாயில் ராஜேந்திர பிரசாத்தின் தலைமையில் கூடிய காங்கிரஸ் காந்தியின் அந்த முடிவை ஏற்றுக்கொண்டது (1934 அக். 26-28). எனினும் காங்கிரஸ் காந்தியின் ஆலோசனைகளைக் கேட்டே செயல்பட்டது.

மதிப்பீடு

சட்டமறுப்பு இயக்கம் (1930-34) இறுதி வரைப் போராடுவதற்காகத் துவக்கப்பட்டது. ஆனால் இடையிலேயே நிறுத்தப்பட்டுவிட்டது. உப்புச் சத்தியாக்கிரகம் உண்மையான மக்கள் இயக்கமாக மலர்ந்தது. இந்திய விடுதலைப் போராட்டத்துக்கு உவர்ப்புச் சத்தைக் கொடுத்தது. காந்தி-இர்வின் ஒப்பந்தம் நம்பிக்கையை வளர்த்த அளவுக்கு நடைமுறைச் சாத்தியமாக வில்லை. தற்காலிகமாக அரசாங்க அடக்குமுறை ஓய்ந்ததும், போராட்டம் நிறுத்தப்பட்டதும், காந்தி இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொண்டதும் தான் அதன் சாதனைகளாயின. தனியே வட்டமேஜை மாநாட்டில் கலந்துகொண்ட காந்தியால் வகுப்புவாதப் பிரச்னைக்கும் நிர்வாக முடியவில்லை. அரசியல் சட்டச் சலுகைகளையும் பெற இயலாமல் போயிற்று. இர்வினுக்குப்பின் வைசிராயாக வந்த விலிங்டன் பிரபு கட்டவிழ்த்துவிட்ட

அடக்குமுறையின் விளைவாகக் காந்தி மீண்டும் சட்டமறுப்பு இயக்கத்தைத் துவக்க வேண்டியதாயிற்று. மக்களவையின் வகுப்புத்திர்வு தேசிய ஒருமைப்பாட்டுக்கு வைக்கப்பட்ட வேட்டாயிற்று. பூனா உடன்பாடு தேசிய இயக்கத்தைத் நிலை நிருப்ப உதவித்தேயொழிய வகுப்புவாதப் பிரச்னையைத் தீர்க்கவில்லை. மூன்று வட்ட மேஜை மாநாடுகளின் தனிப்பெரும் சாதனை 1935 இந்திய அரசாங்கச் சட்டத்துக்கான அடிப்படையை அமைத்துக் கொடுத்ததாகும். அதே சமயம் அம்மாநாடுகள் இந்திய வகுப்பு வாதச் சிக்கலுக்குத் தரமிட்டதையும் மறப்பதற்கில்லை. தொண்டிக் கொண்டிருந்த சட்டமறுப்பு இயக்கத்தை தனிமனிதச் சத்தியாக்கிரகமும் காப்பாற்ற முடியாத நிலையில் காங்கிரஸ் போராட்டத்தை நிறுத்தியது காந்தி காங்கிரசை விட்டு விலகினார். அதனால் சட்டமறுப்பு இயக்கத்தை விளைவேதுமற்ற தோல்வி எனக் கூறலாமா? எந்த இயக்கமும் போராட்டமும் வீண் முயற்சியல்ல. விளைவற்ற தோல்வியுமன்று. அவற்றில் வெளிப்படையான வெற்றியைவிட உள்முகத் தாக்கமே நீடித்தது நிலைக்கக் கூடியது. சட்டமறுப்பு இயக்கம் அடக்கப்பட்டது. ஆனால் மக்களின் விடுதலைப் போராட்ட உணர்வு அடங்கவில்லை, அடக்கப்படவுமில்லை. அடங்கி ஒடுக்கி வைக்கப்பட்ட போராட்ட உணர்வே 'வெள்ளையனே வெளியேறு' இயக்கமாக (Quit India Movement) விசுவரூபமெடுத்தது.

Scanned by CamScanner

24. இடதுசாரிகள் இயக்கம்

இடதுசாரி இயக்கத்தில் தேச விடுதலைப் போராட்ட நதியும், அடக்கி ஒடுக்கி கரண்டப்பட்ட மக்களின் பொருளாதார சுதந்திர நதியும் சங்கமித்தன.

- பிபன் சந்திரா

இடதுசாரிகள் யார்?

அகில இந்தியக் கண்ணோட்டத்தோடு தேசப்பிரச்னைகளை அணுகுவதற்காகவும் தீர்ப்பதற்காகவும் துவக்கப்பட்ட இயக்கமே அகில இந்திய காங்கிரஸ் ஆகும். காங்கிரஸ் துவக்கப்பட்டதிலிருந்தே அதன் நோக்கு, போக்கு, இலக்கு பற்றி காங்கிரஸ் தலைவர்களிடையே கருத்து வேறுபாடுகள் நிலவி வந்தன. துவக்க காலத்தில் இவர்கள் மிதவாதிகள் என்றும் தீவிரவாதிகள் என்றும் அறியப்பட்டனர். இவர்களைப் பொதுவாக வலதுசாரிகள், இடதுசாரிகள் என்றும் குறிப்பிடலாம். காலப்போக்கில் காங்கிரசுக்கு உள்ளேயும், வெளியேயும் சோஷலிஸ்டுகள் மற்றும் கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு அதிகரிக்கலாயிற்று. அதன்பின் முதலாளித்துவ ஆதரவாளர்கள் வலதுசாரிகள் என்றும் கம்யூனிஸ்டுகளும், சோஷலிஸ்டுகளும் இடதுசாரிகள் என்றும் முத்திரை குத்தப்பட்டனர்.

தோற்றம்

1917 நவம்பர் 7ம் நாள் வி.ஐ. லெனின் தலைமையில் போல்ஷ்விக் கம்யூனிஸ்டு கட்சி நிகழ்த்திய ரஷ்ய புரட்சி இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது என்றால் மிகையாகாது. காரல்மார்க்சின் சோஷலிச சித்தாந்தமும், போல்ஷ்விக் கட்சி மக்கள் பங்கேற்புடன் மேற்கொண்ட போராட்ட முறைகளும் காங்கிரசிலிருந்த தீவிரவாதிகள், முற்போக்குச் சிந்தனையாளர்கள், புரட்சிக் செயல்வீரர்களிடையே பெரிய பாதிப்பை ஏற்படுத்தின. இந்திய அரசியல், பொருளாதார, சமுதாயப் பிரச்னைகளுக்குப் புதிய தீர்வு காணத் துடித்தனர். அதன் விளைவாக இந்திய விடுதலைக்காகப் போராடி வந்த காங்கிரஸ் மக்களின் சுரண்டலற்ற பொருளாதார சமுதாய விடுதலைக்காகவும் போராட வேண்டும் என்ற எண்ணம் தீவிரமடைந்தது. மக்களின் போராட்ட உணர்வை ஊக்குவித்து, சமுதாயத்தில் அடித்தட்டு மக்களை ஒருங்கிணைத்து, காலனி ஆதிக்கத்துக்கு எதிராகத் தொடர்ந்த புரட்சிப் போராட்டம் நடத்த வேண்டும் என்று கோரியோர் இடதுசாரிகள் (Leftists) என்று அழைக்கப்பட்டனர்.

மக்களே முக்கியம்

இந்திய விடுதலைப் போராட்டத்தில் மக்களைப் பயன்படுத்தாமல், மக்களை மையப்படுத்தி, தேசிய புரட்சியை மக்களுக்காக புரட்சியாக மாற்ற வேண்டும் என்ற முனைப்புடன் இடதுசாரிகள் செயல்பட்டனர். மக்களின் மாபெரும் ஆற்றலை ஒருமுகப்படுத்தி, ஏகாதிபத்தியமும், முதலாளித்துவமும், நிலக்கிழார்களும் கூட்டாகச் சுரண்டல் வகுப்பாருக்கு எதிராகத் திருப்பிவிட வேண்டும் என இவர்கள் போராடினர். காங்கிரஸ் இயக்கத்துக்குள் இருந்துகொண்டே, தங்கள் செல்வாக்கைப் பெருக்கிக்கொண்டு, காங்கிரசைக் கைப்பற்றி, அதன்நோக்கிலும் போக்கிலும் அடிப்படை மாற்றம் செய்து, இளைஞர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோரை ஒன்றுதிரட்டி, வெகுஜனப் புரட்சி செய்து அந்திய ஆட்சியை அகற்றி இந்தியாவுக்கு விரைவில் விடுதலை பெற்றுத்தர வேண்டுமென்று இடதுசாரிகள் அரும்பாடுபட்டனர். 'மக்களே முக்கியம்' என்பது இடதுசாரி இயக்கத்தின் இதயமாக, அடிநாதமாக, வெடிமருந்தாக இருந்தது.

இடதுசாரி இரட்டையர்

ஜவஹர்லால் நேருவும், சுபாஷ் சந்திர போசும் இடதுசாரி இயக்கத்தின் ஒட்டிப்பிறந்த இலட்சிய சயாமிய இரட்டையர் (Siamese Twins) போன்று செயல்பட்டனர். இருவரும் மார்க்சிய சோஷலிச சித்தாந்தத்தால் பெரிதும் கவரப்பட்டனர். பொருளாதார சுதந்திரமற்ற அரசியல் விடுதலை பொருளற்றது, பயனற்றது என்று இருவரும் கருதினர். அரசியல் விடுதலை, பொருளாதார சமத்துவம், சமுதாய நீதி பற்றிய மனப்பான்மை இருவருக்கும் பொதுவாக இருந்தது. நேருவும், போசும் 'புரட்சிகரமான தீவிரவாதிகள்' என்று கருதப்பட்டனர்

சைமன் கமிஷன் புறக்கணிப்புப் போராட்டத்தின் போது (1927) நேருவும், போசும் இளைஞர் தலைவர்களாகத் திகழ்ந்தனர். 1928ல் இருவரும் சேர்ந்து இந்திய சுதந்திர லீக் (Indian Independence League) என்ற அமைப்பைத் துவக்கினர். இளைஞர் சங்கங்களைத் தோற்றுவித்தனர். இளைஞர் மாநாடுகளில் கலந்து கொண்டனர். இந்தியாவுக்கு 'டொமினியன் அந்தஸ்தைப்' பரிந்துரைத்த மோதிலால் நேரு 'அறிக்கையை' இருவரும் எதிர்த்தனர். 1928 டிசம்பர் மாதம் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் இவ்விருவரும் 'பூரண சுயராஜ்யம்' பற்றிய தீர்மானம் கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்தினர். 1929ல் நேருவின் தலைமையில் நடைபெற்ற லாகூர் காங்கிரஸ் கூட்டத்தில் பூரண சுயராஜ்யத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 1934ல் 'காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சி' அமைக்கப்பட்டதில் இருவருக்கும் பெரும்பங்கு உண்டு. 1938ல் போஸ் காங்கிரஸ் தலைவர் பொறுப்பேற்றுக் கொண்டபோது சோஷலிச சமுதாயம் அமைப்பதை நோக்கமாகக் கொண்டு நேருவின் தலைமையில் 'தேசிய இட்டக்குழு'வை அமைத்தார்.

Scanned by CamScanner

இந்திய கம்யூனிஸ்டு கட்சி, 1925

1920களில் பல்வேறு மாணவர்கள், இளைஞர்கள், விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் அமைப்புகளும் இயக்கங்களும் இயங்கி வந்தன. நேருவும், போகும் இவ்வமைப்புகளிலும் இயக்கங்களிலும் உற்சாகத்துடன் பங்கேற்று வந்தனர். சந்திரசேகர், ஆசாத், சர்தார் பகத்சிங் போன்ற புரட்சிகர பயங்கரவாதிகள் சோஷலிச கருத்துக்களால் கவரப்பட்டிருந்தனர். எம்.என்.ராய் போன்றோர் வெளிநாட்டிலிருந்து இந்திய சோஷலிசப் புரட்சிக்கு உதவி வந்தனர். அவர் தலைமையில் சில இந்தியப் புரட்சி தேசியவாதிகள் ஒன்று சேர்ந்து ரஷ்ய நகரமான தாஷ்கந்த் (Tashkant)இல் கூடி இந்திய கம்யூனிஸ்டு கட்சியை ஆரம்பித்தனர்!

அதன் பின்னர் 1925 டிசம்பர் மாதம் இந்தியாவில் இயங்கிவந்த இடதுசாரி இளைஞர், விவசாயிகள், தொழிலாளர்கள் அமைப்புகள் கான்பூரில் கூடி இந்திய கம்யூனிஸ்டு கட்சியைத் தோற்றுவித்தனர். இக்கட்சி காங்கிரசின் இடதுசாரி அங்கமாக இருந்து கொண்டு, தீவிர தேசியவாதிகளுடன் ஒத்துழைத்து, காங்கிரசை வெகுஜனத் தீவிர இயக்கமாக உருமாற்றம் செய்ய வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. இந்திய கம்யூனிஸ்டு கட்சியினர் காங்கிரசோடு இணைந்து இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றனர். இவர்களை 'காங்கிரஸ் கம்யூனிஸ்டுகள்' என்று அழைக்கலாம்.

காங்கிரஸ் கம்யூனிஸ்டுகள் இந்தியா முழுவதும் இடதுசாரி விவசாயிகள், தொழிலாளர் கட்சிகளை ஏற்படுத்தினர். சென்னையில் இந்துஸ்தான் தொழிலாளர் கிசான் கட்சி (1923), வங்காளத்தில் தொழிலாளர் சுயராஜ்ய கட்சி (1925), பம்பாயில் காங்கிரஸ் தொழிலாளர் கட்சி (1926), பஞ்சாபில் கிர்தி கிசான் கட்சி போன்ற கட்சிகள் துவக்கப்பட்டன. 1928ல் மாநில இடதுசாரி அமைப்புகள் ஒருங்கிணைந்து தொழிலாளர், விவசாயிகள் கட்சி (Workers and Peasants Party) என்ற இந்திய இடதுசாரி கூட்டமைப்பை உருவாக்கின. மாநிலக் கிளைகளைக் கொண்ட இந்த அமைப்பும் காங்கிரசின் ஒரு உறுப்பாகவே இருந்தது. இது இந்தியா முழுவதும் தொழிற் சங்கங்களை ஏற்படுத்துவதில் முனைப்புடன் செயல்பட்டது. இக்கூட்டமைப்பு நேரு, போஸ் போன்ற செல்வாக்குமிக்க தலைவர்களின் ஆதரவோடு காங்கிரசுக்குள் ஒரு பலமிக்க இடதுசாரிப் பிரிவை ஏற்படுத்த முழுமூச்சுடன் முயன்றது.

மீரட் சதி வழக்கு, 1929

வெகுவிரைவாகப் பெருகிவந்த கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கை முளையிலேயே கிள்ளிவிடத் தீர்மானித்தது காலனி அரசாங்கம். 1922-24ல் ரஷ்யாவிலிருந்து இந்தியாவுக்குள் நுழைந்த அவர்கள்மீது சதி வழக்குகள் போட்டு, எஸ்.ஏ.டாங்கே, முசாபர் அகமது, நளினி குப்தா, ஷவுகத் உஸ்மானி போன்ற தலைவர்களுக்கு நீண்டகால தண்டனை கொடுத்து சிறையில் அடைத்தது. 1929 மார்ச் மாதம் 20ம் நாள் வெளிநாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வந்த 32 தீவிர தொழிற்சங்கவாதிகள் கைது செய்யப்பட்டு மீரட்டில் விசாரிக்கப்பட்டனர். இதுவே வரலாற்றுப் புகழ்பெற்ற மீரட் சதி வழக்கு ஆகும்.

இந்த வழக்கில் நேரு, எம்.ஏ.அன்சாரி, எம்.சி.சக்லா போன்றோர் குற்றம் சாட்டப்பட்டோர் சார்பாக வாதாடினர். காந்தி இதைக்குச் சென்று 'குற்றவாளிகளை' சந்தித்துப் பேசினார். இவையாவும் பத்திரிகைகளில் விரிவாக வெளியிடப்பட்டன. தொழிலாளர் தலைவர்கள் கைது செய்யப்பட்டதை காந்தி உள்ளிட்ட பல தலைவர்கள் கண்டித்தனர். இளைஞர் அமைப்புகள் கண்டனப் பேரணிகள் நடத்தின. 1929 ஏப்ரல் சில தேதி பகத்சிங்கும், பட்டு கேஷ்வர் தத்தும் மத்திய சட்டமன்றத்துக்குள் வெடிகுண்டுகளை வீசினர்; கைது செய்யப்பட்டனர். இந்நிகழ்ச்சிகள் இந்தியாவில் போராட்ட உணர்வை நீவிரப்படுத்தியது. மீரட் சதிவழக்கு இந்தியாவில் இடதுசாரி இயக்கம் செல்வாக்குபெற உதவியது.

புத்துயிர் பெற்றது

கம்யூனிஸ்டு மற்றும் தொழிற்சங்கத் தலைவர்கள் சிறையிலடைக்கப்பட்டதால் இடதுசாரி இயக்கம் பலவீனப்பட்ட கம்யூனிஸ்டு கட்சி இருபெரும் தவறுகளைச் செய்தது: 1. காங்கிரசைவிட்டு விலகி காங்கிரஸ் தலைவர்களை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் எடுபிடிகள் என்றும், பூர்ஷுவாக்களின் பிரதிநிதிகள் என்றும், ஆயுதப் புரட்சியால் மட்டுமே இந்திய விடுதலையைப் பெற முடியும் என்றும் பிரச்சாரம் செய்தது; 2. தொழிலாளர் - விவசாயிகள் கட்சி கலைக்கப்பட்டது. இவ்விரு தவறுகளால் இரண்டு விரும்பத்தகாத விளைவுகள் ஏற்பட்டன: ஒன்று, இந்திய கம்யூனிஸ்டு கட்சி தேசிய நீரோட்டத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்டது; இரண்டு, கம்யூனிஸ்டுகள் சிதறிப் போயினர். இடதுசாரி இயக்கம் சரிவுப்பாதையில் சென்றது.

பி.சி.ஜோஷி இடதுசாரி இயக்கத்தைப் பேரழிவிலிருந்து காப்பாற்றினார் (1935). இவர் இந்திய கம்யூனிஸ்டு கட்சியை மீண்டும் காங்கிரசோடு இணைத்தார். ஆறாண்டு கால வனவாசத்துக்குப்பின் இந்திய கம்யூனிஸ்டு கட்சி காங்கிரசுடன் சேர்ந்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கெதிரான போராட்டத்தில் கலந்து கொண்டது. வகுப்புப் போராட்டம் இந்திய விடுதலைப் போராட்டத்தின் பகுதியே என்ற எண்ணத்தில் செயல்பட்டது. ஜோஷியின் முயற்சியின் விளைவாக இடதுசாரி இயக்கம் புத்துயிர்பெற்றது (1936-ஆ). எனினும் இரண்டாம் உலகப்போரில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி பாசிசத்தை எதிர்த்துப் போரிட்ட பிரிட்டனை ஆதரித்ததால் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை எதிர்த்தனர்; கம்யூனிஸ்டுகள் அந்தப் போராட்டத்தில் பங்கேற்கவில்லை. ஆனால் 1946 பிப்ரவரி 18ம் நாள் ராயல் இந்தியக் கடற்படையினர் வேலைநிறுத்தம் செய்ததை ஆதரித்தது. இந்திய தேசிய இராணுவ அதிகாரிகள் தண்டிக்கப்பட்டதை எதிர்த்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களில் இடதுசாரி இயக்கத்தினர் தீவிர பங்கேற்றனர்.

Scanned by CamScanner

காரல் மார்க்சின் சோஷலிச சித்தாந்தத்தால் ஈர்க்கப்பட்ட காங்கிரஸ் சோஷலிஸ்டுகள் காங்கிரஸ் மீதும் கம்யூனிஸ்டு கட்சியின் மீதும் அதிருப்தியுற்றனர். அவர்கள் இவ்விரண்டு வழிகளையும் தவிர்த்துப் புதுவழி காண விழைந்தனர். விளைவு" 1934 அக்டோபர் மாதம் ஜெயப்பிரகாஷ் நாராயண், ஆச்சார்ய நரேந்திர தேவ், மினோ மாசினி ஆகியோர் பம்பாயில்கூடி காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சியைத் துவக்கினர். இக்கட்சியின் குறிக்கோள்களாவன: 1. காங்கிரஸ் குடையின்கீழ் செயல்படுவது; 2. விடுதலைப் போராட்டத்தின்மூலம் சுதந்திர சோஷலிச சமுதாயத்தை உருவாக்கல்; 3.தொழிலாளர்களையும் விவசாயிகளையும் விடுதலைப் போராட்டத்தின் அடித்தளமாக்கல்; 4. இக்குறிக்கோள்களுக்கு ஏற்ப காங்கிரஸ் அமைப்பை மாற்றி அமைத்தல்.

காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சியினர் 1939ல் திருப்பூரில் காங்கிரஸ் ஆண்டுக் கூட்டத்திலும் 1940ல் ராம்கர் காங்கிரஸ் கூட்டத்திலும் காங்கிரஸ் தலைமையில் மாற்றம் கொண்டு வருவதில் தீவிரமாகச் செயல்பட்டனர். காங்கிரசைப் பிளவுபடுத்தாமல் இது சாத்தியமல்ல என்பதை உணர்ந்தனர். அதுமட்டுமல்ல, காந்திக்கு பதிலாக மாற்றுத் தலைமைப் பொறுப்பேற்று விடுதலைப் போராட்டத்தை நடத்துவது நடக்காத காரியம் என்பதைத் தெரிந்து கொண்டனர். அத்தகைய முயற்சி காங்கிரஸ் இயக்கத்தைப் பலவீனப்படுத்திவிடும், காலனி ஆதிக்கத்தின் கருத்தைப் பலப்படுத்திவிடும், சோஷலிஸ்டுகள் ஒரங்கட்டப்படுவர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாகத் தெரிந்தது. எனவே சோஷலிஸ்டுகளும் கம்யூனிஸ்டுகள் போன்றே காங்கிரஸ் கடலில் சங்கமமாயினர். இருப்பினும் ஆச்சாரிய நரேந்திர தேவ், ஜெயப்பிரகாஷ் நாராயண், மினோ மாசினி ஆகியோரின் திறமையான தலைமையின்கீழ் செயல்பட்ட சோஷலிஸ்டுகள் இடதுசாரி இயக்கம் விரிவடையவும் வலுப்பெறவும் உதவினர் என்பதில் ஐயமில்லை.

இடதுசாரி இயக்கத்தின் சாதனைகள்

கருத்தொற்றுமைகள்

இந்திய இடதுசாரி இயக்கம் 1930களில் புதிய பரிமாணத்தோடு காட்சியளித்தது. 1930ம் ஆண்டு இந்தியா திரும்பிய எம்.என்.ராய் தனது ஆதரவாளர்களை ஒன்றுகூட்டி வலுவான இடதுசாரி அடிப்படையை அமைத்தார். 1939ல் காங்கிரஸ் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகிய சுபாஷ் போஸ் பார்வர்டு பிளாக் கட்சியைத் துவங்கினார். இந்துஸ்தான் ரிபளிக்கன் அசோசியேசன், புரட்சி சோஷலிஸ்டு கட்சி போன்ற அமைப்புகளும் சுவாமி சகஜானந்த சரஸ்வதி, பேராசிரியர் என்.ஜி.ரங்கா, இந்துலால் யஞ்னிக் போன்ற பிரபல இடதுசாரி சிந்தனையாளர்களும் காங்கிரசுக்கு வெளியே இருந்து செயல்பட்டனர். இருப்பினும் சோஷலிச நாட்டம் கொண்டோர் அனைவரும் 1. இந்தியா விரைந்து விடுதலை அடைய வேண்டும்; 2. மக்கள் அடிப்படை

உரிமைகளோடு பொருளாதார சமுதாய சமத்துவமும் பெற வேண்டும்; 3.வறுமைக்கும் சமத்துவமின்மைக்கும் மேலாக சமுதாய பொருளாதார அமைப்பு முறை முக்கிய காரணம் என்பதில் கருத்தொற்றுமை கொண்டிருந்தனர்.

குறைபாடுகள்

இடதுசாரி இயக்கம் பல்வேறு குறைபாடுகளால் பலவீனப்பட்டது. 1.இடதுசாரிகள் மார்க்சிய கம்யூனிஸ்டுகள், காங்கிரஸ் சோஷலிஸ்டுகள், பெபியன் சோஷலிஸ்டுகள், காந்திய சோஷலிஸ்டுகள் (சர்வோதயவாதிகள்), ராய் ஆதரவாளர்கள் (Royists) என்று பிரிந்து செயல்பட்டார்களேயன்றி ஒரே சோஷலிஸ்டுக் குடையின்கீழ் இயங்கவில்லை; 2. இவர்களால் காங்கிரசுக்கு மாற்றுத் தலைமையைக் கொடுக்க முடியவில்லை; 3. இவர்கள் காங்கிரசுக்கு உள்ளேயும், வெளியேயும் இருந்துகொண்டு காங்கிரசை மறுசீரமைக்க மேற்கொண்ட முயற்சி தோல்வியுற்றது; 4. இவர்களிடம் தீவிர கொல்லாற்றல் இருந்த அளவுக்கு இலட்சியத் தெளிவில்லை; 5. இவர்களது போராட்டத் திட்டங்களும் உத்திகளும் முறைகளும் அகில இந்திய அளவில் பின்பற்றத்தக்கதாயில்லை; 6. யாவற்றுக்கும் மேலாக இவர்கள் கற்பித்துக் கொண்டதைப்போன்று ஆயுதப்புரட்சிக்கு மக்கள் ஆதரவு இல்லாமல் போயிற்று.

சாதனைகள்

இடதுசாரி இயக்கம் காங்கிரஸ் இயக்கத்துக்கு மாற்று இயக்கமாக உருவெடுக்க முடியாவிட்டாலும் அதன் தாக்கமும், சாதனைகளும் பாராட்டுக்குரியவை; 1. இந்திய இளைஞர்களையும் விவசாயிகளையும், தொழிலாளர்களையும் அமைப்பு ரீதியாக ஒன்று சேர்த்தது சிறப்பான சாதனையாகும்; 2. 1936 லிருந்து 1939 வரை நேருவும் போசும் தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் தலைவர்களாக இருந்து இடதுசாரி இயக்கத்துக்கு உயிர்ப்பூட்டினர்; 3. சோஷலிச சிந்தனையாளர்களும் செயல்வீரர்களும் காங்கிரசுக்கு இடதுசாரிப் பரிமாணத்தைக் கொடுத்தனர்; 4. இடதுசாரிகளின் பொருளாதாரக் கொள்கை பற்றி பெல்பூர் காங்கிரஸ் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. காங்கிரஸ் தேர்தல் அறிக்கை இடதுசாரி சமுதாயச் சீரமைப்புக்கு அங்கீகாரமளித்தது (1936); தேசிய திட்டக்குழு அமைக்கப்பட்டது (1938); 5. இந்திய கம்யூனிஸ்டு கட்சியும், காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சியும் இடதுசாரி இயக்கத்தின் நன்கொடைகளாகும்; 6. காந்தி உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்கள் இந்தியப் பொருளாதார சமுதாயப் பிரச்னைகளுக்கு தீவிரப்பரிகாரம் காண வேண்டும் என்ற கட்டாயத்தை உணர்ந்தனர். பிபன் சந்திரா குறிப்பிடுவதைப்போன்று "அரசியல் விடுதலையின் இலக்கு தெளிவான கூர்மையான சமுதாய பொருளாதார உட்பொருளைப் பெற்றது".

Scanned by CamScanner

25. 1935 இந்திய அரசியல் சட்டமும் மாநில சுயாட்சியும்

பதவிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு ஒரு பக்கம் 1935 சட்டத்தை எதிர்த்துக்கொண்டு, மறுபக்கம் நிர்மாணத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.
- காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானம், 1937 ஜூலை.

1935 இந்திய அரசாங்கச் சட்டம்

மார்லி-மின்டோ சீர்திருத்தங்களின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட 1909 கவுன்சில் சட்டமும் அது செயல்பட்ட முறையும் இந்திய தேசியப் போராட்டத் தலைவர்களுக்குத் திருப்தியளிக்கவில்லை. அச்சட்டத்தின் குறைபாடுகளைப் போக்குவதற்காக மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தின் அடிப்படையில் கொண்டு வரப்பட்ட 1919 இந்திய அரசாங்கச் சட்டம் இந்திய மாநிலங்களில் இரட்டை ஆட்சி (Dyarchy)யைப் புகுத்தியது. அப்பரிசோதனையில் காங்கிரஸ் பங்கேற்க மறுத்துச் சட்டமன்றப் புறக்கணிப்பு செய்தது. சுயராஜ்யக் கட்சியினர் சட்டமன்றத்தினுள் ஒத்துழையாமை இயக்கத்தை நடத்தி இரட்டை ஆட்சியின் பலவீனங்களை அம்பலப்படுத்தினர். சைமன்குழு நாடெங்கெனும் புறக்கணிக்கப்பட்டாலும் அதன் அறிக்கை இந்திய அரசியல் அமைப்பு மாற்றத்துக்கான திசையைக் காட்டியது. மூன்று வட்டமேஜை மாநாடுகளின் விளைவாகப் புதிய அரசியலமைப்புக்கான அடித்தளம் அமைக்கப்பட்டது. மாநாட்டு முடிவுகளை உள்ளடக்கிய வெள்ளை அறிக்கை (White Paper) பிரிட்டிஷ் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது (1933 மார்ச்). பின்னர் அந்த அறிக்கையைப் பாராளுமன்றக் கூட்டுப் பொறுக்குக்குழு (Joint Selection Committee) பதினெட்டு மாதங்கள் விரிவாகப் பரிசீலித்த பின்னர் அதன் அறிக்கையைக் கொடுத்தது (1934 நவ 22). அந்த அறிக்கையில் அடிப்படையில் மசோதா தயாரிக்கப்பட்டு (1935 ஜனவரி 22) பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு 1935 இந்திய அரசாங்கச் சட்ட (Government of India Act, 1935)மாக நிறைவேற்றப்பட்டது.

சட்டத்தின் முக்கிய உள்ளீடுகள்

பிரிட்டிஷ் வரலாற்றிலேயே மிகவும் நீளமானதாகக் கருதப்படும் 1935 சட்டத்தின் முக்கிய சரத்துக்கள் அல்லது உள்ளீடுகள் வருமாறு:

1. பிரிட்டிஷ் இந்திய மாநிலங்களையும் இந்திய மன்னர் மாநிலங்களையும் கொண்ட அகில இந்தியக் கூட்டாட்சி (All India Federation) அமைக்கப்படும்;

2. மாநில இரட்டை ஆட்சிமுறை நீக்கப்படும்; மத்தியில் இரட்டை ஆட்சிமுறை செயல்படும்;

3. மத்தியக் கூட்டாட்சி சட்டமன்றம், மாநிலங்கள் அவை, மக்கள் அவை ஆகிய இரண்டு அவைகளையும் கொண்டிருக்கும்;

4. சட்ட அமைப்புச் சம்பந்தமான விக்கல்களையோ மத்திய அரசுக்கும் மாநில அரசுக்குமிடையே எழுகின்ற வேறுபாடுகளையோ அல்லது ஒரு மாநிலத்துக்கும் இன்னொரு மாநிலத்துக்குமிடையே ஏற்படுகின்ற தகராறையோ தீர்த்து வைப்பதற்கென உச்சநீதி மன்றம் ஏற்படுத்தப்படும்;

5. அரசாங்க அதிகாரங்கள் மத்தியப் பட்டியல், மாநிலப் பட்டியல், பொதுப் பட்டியல் என்று மூன்று வகையாகப் பங்கிடு செய்யப்பட்டன;

6. சிறுபான்மைச் சமுதாயங்களுக்கான தேர்தல் பாதுகாப்புக்களும், இட ஒதுக்கீடுகளும் கொடுக்கப்பட்டன;

7. மாநிலம் சம்பந்தப்பட்ட அதிகாரங்களை அமைச்சர்களின் பொறுப்பில்விட்டு மாநில சுயாட்சிக்கு வகை செய்யப்பட்டது;

8. இந்திய விவகாரச் செயலருக்கிருந்த இந்திய சபை (India Council)யை நீக்கிவிட்டு அதற்குப்பதில் ஒரு கிலைக்கொண்ட ஆலோசகர் குழு ஏற்படுத்தப்பட்டது;

9. பர்மா இந்தியாவிடமிருந்து பிரிக்கப்பட்டது. ஐதராபாத்தின் பகுதியாக இருந்த பீகார் மத்திய மாகாணத்துடன் இணைக்கப்பட்டது;

10. இந்த அரசியல் சட்டத்தின் மாற்றத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் மட்டுமே செய்ய முடியும். பாதுகாப்பு, வெளிவிவகாரம் போன்ற ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள் (Reserved Powers) வைசிராயிடமும் மாற்றப்பட்ட அதிகாரங்கள் (Transfered Powers) வைசிராயால் நியமிக்கப்பட்ட அமைச்சர்களிடமும் கொடுக்கப்பட்டதால் இது மத்தியில் இரட்டை ஆட்சி என்று அழைக்கப்பட்டது. சுருங்கக்கூறின் 1935 சட்டம் சில பாதுகாப்புகளுடன் (Safeguards) கூடிய பொறுப்பாட்சியை ஏற்படுத்தியது.

காங்கிரசின் நிலை என்ன?

காங்கிரசாரும், மக்களும் சட்டமறுப்புப் போராட்டத்தால் களைத்துப் போயிருந்தனர். காந்தி காங்கிரசை விட்டு விலகியிருந்தார். 1935 சட்டத்தின்படி பொதுத்தேர்தல்கள் நடக்கவிருந்தன. அத்தேர்தலில் போட்டியிடுவது பற்றிக் காங்கிரஸ் தலைவர்களிடையே மீண்டும் கருத்து மாறுபாடுகள் தோன்றலாயின. ஜவஹர்லால் நேரு, சுபாஷ்சந்திர போஸ், ஜெயப்பிரகாஷ் நாராயணன் போன்றோர் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டுமென்றனர். அதுமட்டுமல்ல, அந்தச் சட்டத்தையே நிராகரிக்க வேண்டும் என்று கூறினர். அச்சட்டத்தை அடிமைப் பட்டயம் (Charter of Slavery)என்று வர்ணித்தார் நேரு. புதிய சட்டம் விடுதலைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்திவிடும், முழுச்சுதந்திரம் பெறுவதனின்றும் மக்களைத் திசை திருப்பிவிடும், 1920 விருந்து காங்கிரஸ் பின்பற்றிவரும் அரசியல் போக்கைக் கேலிக் கூத்தாக்கி விடும் என்று அவர்கள் வாதிட்டனர். ஆனால் வல்லபாய் பட்டேல், ராஜகோபாலாச்சாரி, சத்தியமூர்த்தி, ராஜேந்திர பிரசாத் போன்றோர் 1935 சட்டப்படி ஏற்படவிருக்கும் இந்தியக் கூட்டாட்சியின் குறைகளை நன்கு உணர்ந்திருந்த போதிலும் அச்சட்டத்தை செயல்படுத்த ஒத்துக் கொண்டனர்.

Scanned by CamScanner

புதிய அரசியல் அமைப்புமுறை மூலம் காங்கிரசின் பொருளாதார, கூட்டாய்க் கொள்கைகளை எளிதில் நிறைவேற்றலாமென்றும், நாடு விரைவில் விடுதலை அடைவதற்குப் புதிய சட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாமென்றும் அவர்கள் வாதிட்டனர். குறிப்பாக மாநில சுயாட்சிக்கு அவர்கள் பெரிதும் அவசரப்பட்டனர் சட்டமறுப்பு இயக்கத்தின் தோல்வி, காந்தியின் நிர்மாணத் திட்டத்தில் மக்களுக்குப் போதிய ஆர்வமில்லமை, அரசாங்க அதிகார ஆசை ஆகியவை ஓரளவுக்கு அவர்கள் 1935 சட்டத்தை ஆதரித்தமைக்கு காரணமாக இருக்கலாம். பதினேழாண்டுகள் சிறைக் கூடங்களில் இருந்தும், வீதிகளில் போராட்டம் நடத்தியும் காங்கிரஸ்காரர்கள் சோர்வுற்றிருந்தனர்; மூத்த தலைவர்களுக்கும் வயதாகிவிட்டது. அதிகாரத்தைக் கைப்பற்றி அவர்கள் விரும்பியவாறு இந்திய தேசிய இயக்கத்தை வளர்த்து, மக்கள் நலனைக் காக்க முடியும் என்று கருதியதால் அவர்கள் புதிய சட்டத்தைச் செயல்படுத்த எண்ணினர் என்று டேவிட் அர்னால்டு (David Arnold) குறிப்பிட்டுள்ளார்.

காங்கிரசும் தேர்தலும்

லக்னோவில் ஜவஹர்லால் நேருவின் தலைமையில் கூடிய காங்கிரஸ் (1935 ஏப்ரல் 29) 1935 சட்டத்தை வன்மையாகக் கண்டித்தது. அதே சமயம் சட்டமன்றங்களுக்கான பொதுத்தேர்தலில் போட்டியிட முடிவு செய்தது. அரசாங்கப் பதவி ஏற்பதா? என்ற பிரச்சனை தள்ளிப் போடப்பட்டது. 1936 ஏப்ரல் மாதம் கூடிய காங்கிரஸ் செயற்குழு தேர்தல் அறிக்கை (Election Manifeso)யின் அடிப்படையில் அடுத்த ஆண்டு நடக்கவிருந்த தேர்தலில் போட்டியிடுவதெனத் தீர்மானித்தது. காங்கிரஸ் தேர்தல் அறிக்கை தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது (ஆகஸ்டு 23). பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதும், இந்திய தேசிய விரோதச் சட்டங்கள், கட்டுப்பாடுகள், விதிகள் ஆகியவற்றை நீக்குவதும் காங்கிரஸ் தேர்தலில் கலந்து கொள்வதற்கான நோக்கமாகும் என்று அத்தேர்தல் அறிக்கை குறிப்பிட்டது.

மாநிலச் சட்டமன்றங்களுக்கான தேர்தல் 1937 பிப்ரவரி மாதம் நடைபெற்றது. காங்கிரசும், முஸ்லீம் லீக்கும் தேர்தலில் போட்டியிட்ட பிரதான கட்சிகளாகும். தேர்தலில் காங்கிரஸ் அமோக வெற்றி பெற்றது. ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம், சென்னை, பீகார், ஒரிஸ்ஸா ஆகிய ஐந்து மாநிலங்களிலும் காங்கிரஸ் அறுதிப் பெரும்பான்மை பலம் பெற்றது. பம்பாய், வங்காளம், அஸ்ஸாம், வடமேற்கு எல்லை மாகாணம் ஆகிய மாநிலங்களில் காங்கிரஸ் தனிப்பெரும் கட்சியாக வெற்றியடைந்தது. பஞ்சாபில் கம்யூனிஸ்ட் கட்சி பெரும்பான்மை பலத்தைப் பெற்றது. இந்தத் தேர்தலில் முஸ்லீம் லீக் படுதோல்வி கண்டது. காங்கிரசின் தேர்தல் வெற்றியைச் சட்டமறுப்பு இயக்கத்தின் விளைவு எனக் கருதுகிறார் ஆர்.ஜே.மூர் (R.J.Moore). வெற்றிபெற்ற காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் டெல்லியில் கூடி (மார்ச் 17) தேச விடுதலைக்காகப் பாடுபடுவதென்றும், அரசியல் சட்ட அமைப்பு மன்றத்தைக் (Constituent Assembly) கூட்ட வழிவகை செய்ய வேண்டுமென்றும்; சுதந்திர ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்த முயல வேண்டுமெனவும் தீர்மானித்தனர்.

அமைச்சரவை அமைப்பு

தேர்தல் முடிந்தது. தேர்தல் முடிவுகள் தெரிந்துவிட்டன. அடுத்து அமைச்சரவை அமைக்க வேண்டும். காங்கிரஸ் பெரும்பான்மையுடைய மாநிலங்களில் அமைச்சரவை அமைப்பது பற்றி மீண்டும் காங்கிரஸ் தலைவர்களிடையே கருத்து வேறுபாடு உண்டாயிற்று. அப்போது காந்தி தலையிட்டு சமரசத் தீர்வொன்றைக் கொடுத்தார். அதன்படி கவர்னர்கள் மாநில நிர்வாகத்தில் தலையிடுவதில்லை என்று உத்திரவாதமளித்தார். காங்கிரஸ் அமைச்சரவை அமைக்கலாம் என்றார் அவர். காந்தியின் தீர்வை காங்கிரஸ் தலைவர்கள் ஏற்றுக் கொண்டனர். ஆனால் கவர்னர்கள் அத்தகைய உத்தரவாதமளிக்கத் தயாராயில்லை. எனவே, அமைச்சரவை அமைப்பதில் தேக்கநிலை ஏற்பட்டது. அதைச் சாதகமாக்கிக் கொண்டு சென்னை, ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம், பீகார், ஒரிஸ்ஸா கவர்னர்கள் சிறுபான்மைக் கட்சியிலிருந்து அமைச்சர்களைத் தேர்ந்தெடுத்து இடைக்கால அரசாங்கத்தை (Interim Government) அமைத்தனர். பஞ்சாப், வங்காளம், சிந்து, அஸ்ஸாம், வடமேற்கு எல்லை மாகாணத்தில் காங்கிரசில்லாத கூட்டு அமைச்சரவை (Coalition Ministries) அமைக்கப்பட்டு 1937 ஏப்ரல் 11ஆம் தேதியிலிருந்து செயல்படத் துவங்கின. வைசிராய் லின்லித்கோ பிரபு (Lord Linlithgow) தனது வானொலிப் பேச்சில் மாநில அரசின் அன்றாட நிர்வாகத்தில் கவர்னர் குறுக்கிடமாட்டார் என்று மறைமுகமாக அறிவித்ததை அடுத்து அரசியல் தேக்கநிலை அகன்றது (ஜூன் 21). முதன்முறையாக காங்கிரஸ் சென்னை, ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம், பம்பாய், பீகார், ஒரிஸ்ஸா, வடமேற்கு எல்லை மாகாணம் ஆகிய ஏழு மாநிலங்களிலும் அமைச்சரவை அமைத்தது (ஜூலை) 1938. செப்டம்பர் மாதம் அஸ்ஸாமில் காங்கிரஸ் அமைச்சரவை அமைக்கப்பட்டது. பஞ்சாபில் காங்கிரஸ் பிரதான எதிர்க்கட்சியாகச் செயல்பட்டது. மிகப் பெரும்பான்மையான மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சிபீடத்தில் அமர்ந்ததைப்பற்றி மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

மாநில சுயாட்சியின் செயல்பாடு

காங்கிரஸ் மேலிடம்

1937 மார்ச் மாதம் காங்கிரஸ் ஒரு பாராளுமன்றத் துணைக்குழு (Parliamentary Sub-Committee)வை ஏற்படுத்தியது. அதுவே காங்கிரஸ் மேலிடம் (Congress High Command) என்றழைக்கப்பட்டது. ராஜேந்திர பிரசாத், மௌலானா ஆசாத், வல்லபாய் பட்டேல் ஆகியோர் அக்குழுவில் இடம் பெற்றிருந்தனர். காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டவற்றை நடைமுறைப்படுத்துவதும், காங்கிரஸ் அமைச்சர்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் மேற்பார்வையிடுவதும்; அவர்களிடையே கட்டுப்பாட்டை நிலைநாட்டுவதும் அவர்களுடைய பொறுப்புகளாகும். மேலிடத்தின் முடிவை மீறியவர்கள் எச்சரிக்கப்பட்டார்கள் அல்லது தண்டிக்கப்பட்டார்கள். உதாரணமாக மத்திய மாகாண முதலமைச்சர் டாக்டர் காரே காங்கிரஸ் மேலிடத்தின் உத்திரவை மீறியதற்காக அவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அவருக்குப்பதில் பண்டிட் ரவி சங்கர் சுக்லா முதலமைச்சராக்கப்பட்டார்! காங்கிரஸ் அமைச்சரவை அமைக்கப்பட்ட நேரத்தில் சில நிபந்தனைகளோடு முஸ்லீம் லீக்கும்

Scanned by CamScanner

காங்கிரசோடு அமைச்சரவையில் இடம்பெற முன்வந்தது. ஆனால் காங்கிரஸ் அதற்குச் சம்மதிக்கவில்லை. அந்த முடிவு பெரிய அரசியல் தவறு (Political blunder) என்பதைப் பின் நிகழ்ச்சிகள் நிருபித்தன. காங்கிரஸ் அமைச்சரவையில் 28 மாதங்கள் பதவியிலிருந்தன. அவை பெரும்பாலும் சுதந்திரமாகவே செயல்பட்டன. கவர்னர்களும் அன்றாட நிர்வாகத்தில் தலையிடவில்லை. சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்குத் தடையின்றி அவர்கள் கையொப்பமிட்டனர். ஆயினும் அவசியப்பட்டபோது கவர்னர்கள் குறுக்கிடவே செய்தனர். உதாரணமாக மத்திய மாகாணத்தில் ஏற்பட்ட முதலமைச்சர் டாக்டர் காரே பற்றிய தகராறில் கவர்னர் தலையிட்டார். ஐக்கிய மாகாணத்திலும், பீகாரிலும் காங்கிரஸ் ஆட்சி அரசியல் கைதிகள் அத்தனைபேரையும் விடுதலை செய்ய முற்பட்டபோது கவர்னர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். ஒரிஸ்ஸாவில் கவர்னர் விடுப்பில் சென்றிருந்தபோது அமைச்சர்கள், கவர்னர் பொறுப்பிலிருந்த தலைமைச் செயலரின்கீழ் செயல்பட மறுத்தனர்.

மாநில சுயாட்சி செயல்படுத்தப்பட்டபோது சில அரசாங்க அதிகாரிகள் இந்திய அமைச்சர்களின்கீழ் பணிபுரிய விரும்பாது வேலையிலிருந்து விலகிக் கொண்டனர். பெரும்பாலோர் சூழ்நிலை மாற்றத்துக்கேற்பத் தங்களை மாற்றிக்கொண்டு அமைச்சர்களோடு ஒத்துழைத்தனர். வேறு சிலர் காலில் குத்திய முள்ளாக இருந்துகொண்டு தொல்லைகள் பல தந்தனர். பொதுவாக காங்கிரஸ் அமைச்சர்களும் அதிகாரிகளும் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொண்டு நல்லிணக்கத்துடனேயே செயல்பட்டனர். ஒரே ஒரு விதிவிலக்காக இருந்தவர் ஐக்கிய மாகாணத்தின் தலைமை செயலர் ஆவார். தன்னுடைய ஒப்புதலின்றி எந்த அமைச்சருடைய உத்தரவையும் எந்த அரசாங்க ஊழியரும் நிறைவேற்றக் கூடாதென சுற்றறிக்கை அனுப்பினார் அவர். முதலமைச்சராயிருந்த பண்டித பந்த் தலைமைச் செயலரின் போக்கை வன்மையாகக் கண்டித்தார். தலைமைச் செயலர் தனது சுற்றறிக்கையைத் திரும்பப் பெற்றுக் கொண்டார். அச்செயல் பிற அரசு ஊழியர்களிடையே நல்ல விளைவை ஏற்படுத்தியது.

ஐக்கிய மாகாணத்தில் காங்கிரசுடன் கூட்டு அமைச்சரவை அமைக்க முஸ்லிம் லீக் ஆர்வத்தோடு இருந்தது. ஆனால் காங்கிரஸ் அமைச்சரவையில் முஸ்லீம்களுக்கு இடமளிக்கவில்லை. அதன் காரணமாகப் பெரிய சர்ச்சை எழுந்தது. ஐக்கிய மாகாணத்திலும், பீகாரிலும் காங்கிரஸ் ஆட்சியில் முஸ்லீம்களுக்குக் கொடுமைகள் இழைக்கப்படுகின்றன என்ற புகார் கிளம்பிற்று. அந்த புகார்களைப் பற்றி விசாரிக்க பீர்ப்பூர் குழு (Pirpur Committee), ஷரீப் குழு (Sanff Committee) என்ற இரு விசாரணைக் குழுக்களை முஸ்லிம்கள் அமைத்தனர். 'காங்கிரஸ் ஆட்சியின்கீழ் முஸ்லீம்களின் துன்பங்கள்' என்ற தலைப்பில் பஸல்உல்ஹக் அறிக்கை விட்டார். அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான தகுதியுடைய முஸ்லீம் எவருமில்லை எனக் கூறியதற்காக ஒரிஸ்ஸாவில் முஸ்லீம்கள் காங்கிரஸ் அமைச்சரவைக்கெதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர். இவையெல்லாம் ஜின்னாவின் வாய்க்கு அவலாயின. காங்கிரஸ் அமைச்சரவையிலிருந்து முஸ்லீம்கள் ஒதுக்கப்பட்டதைக் காரணமாக கொண்டு நலிந்து போயிருந்த முஸ்லீம் லீக்குக்குப் புத்துயிர்க் கொடுத்தார் ஜின்னா.

பிற அமைச்சரவைகள்

காங்கிரஸ் அமைச்சரவை அமைக்காத பிற மாநிலங்களில் கவர்னர்களின் தலையீடு அதிகமாக இருந்தது. உதாரணமாக, பஞ்சாபில் முதலமைச்சர் சிக்கந்தர் ஹயாத் கானைக் கலந்தாலோசிக்காமலேயே அரசாங்கம் அரசியல் கைதிகளை விடுவிக்கப் போவதில்லையென்று கவர்னர் லைகிராய்க்கு அறிவித்தார். 1942 அக்டோபர் மாதம் நிந்து முதலமைச்சரை கவர்னர் பதவிநீக்கம் செய்துவிட்டார். நிந்து, வங்காள, வடமேற்கு எல்லை மாகாண கவர்னர்கள் முஸ்லிம்களுக்கு அளவுக்கு மீறிய சலுகைகளை வழங்கினர் என்று கருதப்பட்டது. குறிப்பாக பஞ்சாப், வங்காள மக்கள் கவர்னர்களின் அடக்குமுறைக்கு உள்ளாயினர்.

மதிப்பீடு

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் 1937ல் காங்கிரஸ் மாநில ஆட்சியில் அமர்ந்தது ஒரு சர்ச்சைக்குரிய செயலாகக் கருதப்பட்டது. 1920களில் சட்டமன்றத்தைப் புறக்கணித்த காங்கிரஸ் 1930களில் சட்டமன்றத்துக்குள் நுழைந்ததோடு மட்டுமின்றி அமைச்சரவைகளையும் அமைத்தது. அரசாங்கப் பதவியை ஏற்றுக் கொண்டதால் காங்கிரசால் பல ஆக்கப் பூர்வமான பணிகளைச் செய்ய முடிந்தது. கல்வி, கிராமக் கைத்தொழில்கள், உள்ளாட்சி நிர்வாகம், மதுவிலக்கு, கடன் நிவாரணம், நிலவரி ஒழிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, அரசாங்கத்தால் பறிக்கப்பட்ட சொத்துக்களைத் திருப்பிக் கொடுத்தல், அரசியல் தொண்டர்களின் நடமாட்டக் கட்டுப்பாடு நீக்கம், பத்திரிக்கைச் சுதந்திரம், அரசியல் அமைப்புகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடைநீக்கம் போன்ற பல நடவடிக்கைகள் காங்கிரஸ் அமைச்சரவையால் மேற்கொள்ளப்பட்டன. மாநில சுயாட்சியின் விளைவாகப் பல நல்ல சட்டமன்ற வழக்காறுகளும், சம்பிரதாயங்களும் நடைமுறைக்கு வந்தன. காங்கிரஸ் அமைச்சர்கள் பொறுப்பேற்று அரசாங்கத்தை நடத்தும் அனுபவம் பெற்றனர். மக்களும் சுயாட்சி முறைக்குப் பழக்கப்பட்டனர். அதனால் அவர்களுக்கு முழுச்சுதந்திரம் வேண்டுமென்ற வேட்கை எழுந்தது.

ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்தால், அரசாங்க அதிகாரத்தைக் கொண்டு சுதந்திரப் போராட்டத்தை வலிமை பெறச் செய்தல் என்று இரண்டு அடிப்படைக் குறிக்கோள்களோடுதான் காங்கிரஸ் அமைச்சரவையை அமைத்தது. காங்கிரஸ் ஆட்சியிலிருந்தவரை அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்து வந்தது என்பதில் ஐயமில்லை. ஆனால் அது எந்த அளவுக்கு அரசாங்க அதிகாரத்தைக் கொண்டு சுதந்திரப் போராட்டத்தை மேலும் வலிவுடன் தாக்கிற்று என்பது சந்தேகமே. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நாட்டு விடுதலைப் போராட்டம் பின்னுக்குத் தள்ளப்பட்டது என்பதில் ஐயமில்லை. மேலும் அமைச்சரவை அமைப்பில் முஸ்லீம் லீக்கை இணைத்துக் கொள்ளாதது இந்து-முஸ்லீம் வேற்றுமை விசுவரூபமெடுக்கக் காரணமாயிருந்தது. குறைகள் பல இருப்பினும் மாநில சுயாட்சி அனுபவம் மேலும் மக்களுக்கு அதிக அதிகாரங்களைப் பெற்றுத் தரும் நேரிய இயக்கத்தைத் தீர்மானமாக வழி நடத்தவும் போதிய அனுபவத்தைக் காங்கிரசுக்குப் பெற்றுத் தந்தது என்பதில் ஐயமில்லை.

Scanned by CamScanner

26. கிரிப்ஸ் தூதுக்குழு, 1942

கிரிப்ஸ் வந்தார். பார்த்தார். ஆனால் ஆக்கிரமிக்கவில்லை.

-டி.வி. தமங்கர்.

இரண்டாவது உலகப்போரும் இந்தியாவும்

வைசிராயின் வெள்ளை அறிக்கை

1939 செப்டம்பர் முதல் தேதி இட்லர் போலந்தின்மீது படையெடுத்தபோது இரண்டாவது உலகப்போர் துவங்கியது. இரண்டு நாட்களுக்குப் பின்னர் இங்கிலாந்து ஜெர்மனியின்மீது போர் தொடுத்தது. வைசிராய் லின்லித்கோ பிரபு இந்தியத் தலைவர்களைக் கலந்தாலோசிக்காமலேயே இந்தியாவும் போரில் ஈடுபட்டுள்ளதாக ஒரு சார்பாக அறிவித்தார். காங்கிரஸ் செயற்குழு வைசிராயின் ஒருதலைப்பட்ச அறிவிப்பை வன்மையாகக் கண்டித்து (செப்.14) அதோடு பிரிட்டன் போரில் ஈடுபட்டதற்கான நோக்கங்களையும் தெளிவுபடுத்த வேண்டுமெனக் கோரியது. இல்லையெனில் இந்தியர் பிரிட்டனின் போர் முயற்சிகளுக்கு ஒத்துழைக்க மாட்டார்கள் என்று செயற்குழு அறிவித்தது. செயற்குழுவின் தீர்மானத்தை வர்தாவில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி (அக் 9-10) உறுதி செய்தது.

வைசிராய் பல்வேறு அரசியல் அமைப்புகளைச் சேர்ந்த 52 பிரதிநிதிகளைக் கலந்தாலோசித்த பின்னர் ஒரு வெள்ளை அறிக்கையை (White Paper) வெளியிட்டார் (அக்.17) அதன்படி,

1. இந்தியா பிற டொமினியன்களுக்கிடையே உரிய இடத்தைப் பெறுவதற்கேற்ப பிரிட்டிஷ் பேரரசுக்குள் பிரிட்டனுக்கும் இந்தியாவுக்குமிடையேயான பிணைப்பைப் பலப்படுத்துவதே அரசுக் கொள்கையாகும்;

2. போர் முடிந்த பின்னர் இந்தியாவின் அரசியல் அமைப்பு முறையை முழுமையாக பிரிட்டிஷ் அரசாங்கம் மறுபரிசீலனை செய்யும்;

3. உடனடியாக இந்தியாவுக்கு அதிக அளவுக்கு அதிகார மாற்றம் செய்வதென்பது இயலாது;

4. அனைத்து அரசியல் அமைப்புகள் வழங்கும் ஆலோசனைகளுக்கும் உதவிகளுக்கும் உரிய மதிப்பளிக்கப்படும்;

5. போர்க் காலத்தில் வைசிராய்க்கு உதவியாக இருக்க ஒரு 'ஆலோசனைக்குழு' நியமிக்கப்படும்.

காங்கிரஸ் பதவி விலகல்

வைசிராய் வெள்ளை அறிக்கை அறிவிப்பு காங்கிரசுக்குத் திருப்தியளிக்கவில்லை. ரொட்டி கேட்டதற்குக் கல்தான் கிடைத்தது என்றார் காந்தி. வைசிராயின் அறிவிப்பு மிகுந்த ஏமாற்றத்தைக் கொடுப்பதாக உள்ளது என்று கருதினார் ராஜேந்திர பிரசாத். யதார்த்த நிலைக்கும் அந்த அறிவிப்புக்கும் எந்தவித தொடர்புமில்லையே எனக் கண்டித்தார் ஜவஹர்லால் நேரு. பொதுவாக வைசிராயின் வெள்ளை அறிக்கையில் புதிதாக ஒன்றுமில்லை. அது புதிய மொந்தையில் பழைய கள் போன்றிருந்தது. எனவே போர் முயற்சியில் காங்கிரஸ் கலந்து கொள்வதில்லை என்று தீர்மானித்தது. அனைத்து காங்கிரஸ் அமைச்சர்களும் அக்டோபர் மாத இறுதிக்குள் பதவி விலகினர். உடனே காங்கிரஸ் ஆட்சி செய்த மாநிலங்களிலெல்லாம் கவர்னரின் ஆலோசகர் அரசு (Advisers Regime) ஏற்படுத்தப்பட்டது. அங்கெல்லாம் கவர்னரின் அடக்குமுறை ஆட்சி தங்கு தடையின்றி செயல்படத் துவங்கியது. போரில் முயற்சிக்கு இனி காங்கிரசின் தயவு தேவையில்லை அல்லவா? காங்கிரஸ் அரசாங்கத் தொடர்பை இழந்தது' காங்கிரசின் இழப்பு முஸ்லிம் லீக்குக்கு இலாபம்' பிரிட்டனின் போர் முயற்சிகளுக்கு அது முழு ஆதரவை அளிக்க முன்வந்தது. காங்கிரஸ் அமைச்சர்கள் பதவி விலகியதைக் கொண்டாடும் பொருட்டு 1939 டிசம்பர் 22ஆம் நாளை 'இரட்சிப்பு தின' (Day of Deliverance) மாகக் கொண்டாட வேண்டுமென முஸ்லீம்களைக் கேட்டுக் கொண்டார் முகமது அலி ஜின்னா.

'ஆகஸ்டு அறிவிப்பு'

1940 மத்தியில் இங்கிலாந்து மிகவும் இக்கட்டான நிலையில் இருந்தது. போரில் பிரிட்டன் தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்தவாறு இருந்தது. டன்கிர்க் தோல்வி அதன்மீது விழுந்த பேரிடி போன்றிருந்தது. எனவே போர் முயற்சியில் இந்தியர்களின் பரிபூரண ஒத்துழைப்பு இங்கிலாந்துக்கு இன்றியமையாததாயிற்று. இந்தியர்களின் ஆதரவைப் பெறும் பொருட்டு 1940 ஆகஸ்டு 8 ஆம் நாள் அரசாங்கத்தின் கொள்கை பற்றி அறிவித்தார் வைசிராய் லின்லித்கோ. அதுவே ஆகஸ்டு அறிவிப்பு (August offer) என்றழைக்கப்படுகிறது. அவ்வறிப்பின்படி,

1. இந்தியாவுக்கு டொமினியன் தகுதியை வழங்குவதே பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகும்;

2. இந்தியர்களே அவர்களது அரசியல் அமைப்பு முறையை வகுத்துக் கொள்ள அனுமதிக்கப்படுவர்;

3. போர் முடிந்த உடனேயே அத்தகைய அரசியல் அமைப்பு முறையை வகுத்துக் கொள்வதற்கான ஏற்பாடு செய்யப்படும்;

4. புதிய அரசியல் அமைப்பு பிரிட்டிஷ் காமன் வெல்த்தின் பகுதியாகச் செயல்படும்;

5. அரசியல் அமைப்பு மாற்றம் செய்யும்போது சிறுபான்மையினரின் கருத்துக்களுக்கு முழுகவனம் செலுத்தப்படும்;

6. இந்தியப் பிரதிநிதிகளுக்கு இடமளிக்கும் வகையில் வைசிராயின் ஆட்சிக்குழு விரிவு படுத்தப்படும்;

7. இந்தியப் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு 'ஆலோசனைக்குழு' அமைக்கப்படும்;

Scanned by CamScanner

8. ஒரு கட்சிக்கு அதிகார மாற்றம் செய்வதை அடுத்து பெரிய கட்சி ஆட்சேபிக்குமானால் பிரிட்டிஷ் அரசாங்கம் எந்தக் கட்சிக்கும் அதிகார மாற்றம் செய்யாது.

வெள்ளை அறிக்கையைவிட ஆகஸ்டு அறிவிப்புச் சிறந்தது என்பதில் ஐயமில்லை. முதன்முறையாக இந்தியா பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடுகளுக்கு இணையானது என்று அறிவிக்கப்பட்டது. இந்திய அரசியல் அமைப்பைத் தீர்மானிக்கும் உரிமை இந்தியர்களுக்கே வழங்கப்படுவதாக உறுதியளிக்கப்பட்டது. போர் முடிந்த உடனேயே இந்தியாவுக்கு டொமினியன் தகுதி வழங்கப்படுவதற்கான உத்திரவாதம் கொடுக்கப்பட்டது. எனினும் ஆகஸ்டு அறிவிப்பு இந்தியத் தலைவர்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யவில்லை. முதலாவது, போர் முடிந்தபின் இந்தியாவுக்கு டொமினியன் தகுதி வழங்குவதற்கான காலக்கெடு குறிப்பிடவில்லை. இரண்டாவதாக, அரசியல் அமைப்பைத் தீர்மானிப்பதற்காக அரசியல் அமைப்புச் சட்டமன்றம் (Constituent Assembly) அமைக்கப்படுமா, அல்லது வட்டமேஜை மாநாடு கூட்டப்படுமா என்பது தெளிவுபடுத்தப் படவில்லை. மூன்றாவதாக, புதிய அரசியல் அமைப்பு இந்தியப் பாதுகாப்பு பற்றிய பொறுப்புகள், மன்னர்களோடு செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள், பொதுப்பணிகள் பற்றிய உரிமைகள் போன்றவற்றைப் பற்றியதாக உள்ளதேயன்றி முழுமையான சுயாட்சிக்கான அமைப்பாக இல்லை. நான்காவதாக, எந்த அரசியல் அமைப்பு மாற்றமும் முஸ்லிம் லீக்கின் சம்மதமின்றி செய்யப்பட மாட்டாது என்ற லீக்கின் கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது. ஐந்தாவதாக, பிரிட்டிஷ் காமன்வெல்த் அமைப்புக்குள் இருக்கும் வகையில் இந்தியாவுக்கு டொமினியன் தகுதி வழங்கப்படும் என்பது தெளிவில்லாமல் இருந்தது. இறுதியாக வைசிராய் ஆட்சிக்குழு விஸ்தரிப்பும், போர் ஆலோசனைக்குழு அமைப்பும் வெறும் கண்துடைப்பு முயற்சியேயாகும். காங்கிரசும் முஸ்லிம் லீக்கும் லின்லித்கோவின் ஆகஸ்டு அறிவிப்பை நிராகரித்தன! காங்கிரஸ் நிராகரித்ததற்குக் காரணம் உடனேயே தற்காலிகத் தேசிய அரசாங்கம் (Provisional National Government) அமைக்கவில்லை என்பதாகும். முஸ்லிம் லீக் நிராகரித்ததற்குக் காரணம் வைசிராயின் ஆட்சிக் குழுவில் அதற்குச் சம அந்தஸ்து கொடுக்கப்படவில்லை என்பதாகும்.

தனிநபர் சத்தியாக்கிரகம்

வைசிராய் லின்லித்கோ பிரபுவின் ஆகஸ்டு அறிவிப்பும் காங்கிரஸ் தலைவர்களுக்கு நம்பிக்கையைத் தரவில்லை. மற்றொரு போராட்டத்தைத் துவக்குமாறு காங்கிரஸ் காந்தியைக் கேட்டுக் கொண்டது. போர்க்கால நெருக்கடியை மனதில் கொண்டு மக்கள் இயக்கத்துக்கு பதிலாகத் தனிநபர் சத்தியாக்கிரகத்தை (Individual Satyagraha)த் துவக்குவதெனத் தீர்மானித்தார் காந்தி. இந்தியாவின் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காகவும், இந்தியர்களின் விடுதலை உணர்வை உலகுக்குக் காட்டவும், மேற்கொள்ளப்படும் அடையாளப் போராட்டமாகவே தனிநபர் சத்தியாக்கிரகத்தைக் கருதினார் காந்தி. முதல் சத்தியாக்கிரகியாக வினோபா பாவே (Vinoba Bhave) காந்தியால் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1940 அக்டோபர் 17 ஆம் நாள் வினோபாவே

வார்தாவுக்கு அருகேயுள்ள பௌனார் (Paunar) கிராமத்தில் போர் எதிர்ப்பு பிரச்சாரம் செய்து சத்தியாக்கிரகத்தைத் துவக்கினார். பின்னர் அவர் கைது செய்யப்பட்டு (அக் 21) மூன்று மாதம் சிறைத் தண்டனை பெற்றார். அடுத்த தனிநபர் சத்தியாக்கிரகி ஜவஹர்லால் நேரு. அவர் கைது செய்யப்பட்டு (அக் 31) நான்காண்டுகள் சிறை தண்டனை வழங்கப்பட்டது. வேறு எந்தச் சத்தியாக்கிரகிக்கும் இவ்வளவு நீண்டகாலச் சிறைதண்டனை கொடுக்கப்படவில்லை. பின்னர் வல்லபாய் படேலும், சுபாஷ் சந்திர போசும் கைதானார்கள். எல்லா மாநிலங்களிலும் காங்கிரஸ் முன்னாள் அமைச்சர்கள், பாராளுமன்ற செயலர்கள், முன்னாள் மத்திய மாநில சட்டமன்ற உறுப்பினர்கள், நகர காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்கள் ஆகியோர் தனிநபர் சத்தியாக்கிரகிகளாக கைதானார்கள். 1941ஆம் ஆண்டு இறுதிவரை நடைபெற்ற இந்த சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்ட 30,000 பேர் கைது செய்யப்பட்டனர்.

தனிநபர் சத்தியாக்கிரகம் பிரிட்டனின் போர் முயற்சியை ஒன்றும் பாதிக்கவில்லை. அதற்கு அமோகமான மக்கள் ஆதரவும் கிடைக்கவில்லை. அப்போராட்டத்தை 'வருந்தத்தக்கது' 'அறிவுக்கொவ்வாதது' என்று வர்ணித்தார் இந்திய விவகாரச் செயலாளர் ஏமெரி (Amery). சில சத்தியாக்கிரகிகள் அவர்களுடைய அரசியல் எதிர்காலத்தை உத்தேசித்து சிறை சென்றனர் என்று கூறியுள்ளார் பி.கே.மிஸ்ரா. போர்க் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட வித்தையான, பலவீனமான கிளர்ச்சியே இது என எழுதியுள்ளார் பி.ஆர். நந்தா. இருப்பினும் போர் முயற்சிக்கெதிராகத் துவக்கப்பட்ட கிளர்ச்சி அல்ல தனிநபர் சத்தியாக்கிரகம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இந்தியரின் சம்மதம் பெறாமல் இந்தியாவைப் போரில் ஈடுபடுத்தியதைக் கண்டிப்பதற்காகக் காந்தி துவக்கிய அடையாளப் போராட்டமே அது.

தனிநபர் சத்தியாக்கிரகம் மக்களின் மனதை இறுகச் செய்தது. அதேசமயம் அரசாங்கத்தின் மனதை இளக்கவும் செய்தது. வைசிராய் லின்லித்கோ பிரபு மேலும் ஐந்து இந்தியப் பிரதிநிதிகளைச் சேர்த்துக்கொண்டு தனது ஆட்சிக் குழுவை விரிவுபடுத்தியிருப்பதாக அறிவித்தார் (1941 ஜூலை). அது மட்டுமல்ல, தனிநபர் சத்தியாக்கிரகத்தின்போது கைது செய்யப்பட்டோர் அனைவரையும் விடுதலை செய்தார் (டிச.3). இருப்பினும் காந்தி போராட்டத்தை தொடர்ந்து நடத்தவே விரும்பினார். ஆனால் ராஜகோபாலாச்சாரி அதை நிறுத்த வேண்டுமென்றார். போரின் நிலைமை மிகவும் மோசமாகிக் கொண்டிருந்தமையால் பர்தோலியில் கூடிய காங்கிரஸ் செயற்குழு (டிச.30) தனிநபர் சத்தியாக்கிரகத்தை விலக்கிக் கொண்டதாக அறிவித்தது. காந்தியின் வேண்டுகோளுக்கிணங்க சத்தியாக்கிரகத் தலைமை பொறுப்பிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டார். நாட்டின் பாதுகாப்புக்காக மக்களைத் திரட்டும் பொறுப்பு ஜவஹர்லால் நேருவிடம் ஒப்படைக்கப்பட்டது. போர் முயற்சியில் காங்கிரஸ் பங்கேற்க முன்வந்ததால் ஆங்கிலேய அரசு இந்தியர்களுக்கு உடனடியாக சில அரசியல் சலுகைகளை வழங்கத் தீர்மானித்தது. அதன் விளைவே கிரிப்ஸ் தூதுக்குழு அமைக்கப்பட்டதாகும்.

Scanned by CamScanner

கிரிப்ஸ் தூதுக்குழு

கிரிப்ஸ் தூதுக்குழு (The Cripps Mission) 1942 மார்ச் 22 ஆம் தேதி இந்தியாவுக்கு வந்தது. அத்தூதுக் குழு அனுப்பப்பட்டதற்கான காரணங்கள், சூழ்நிலைகள், நிகழ்ச்சிகள் யாவை?

காங்கிரஸ் எதிர்ப்பு

இரண்டாவது உலகப்போர் துவங்கியதிலிருந்து பிரிட்டனின் போர் முயற்சிக்குக் காங்கிரஸ் எதிர்ப்புத் தெரிவித்து வந்தது. தனிநபர் சத்தியாக்கிரகம் விலக்கிக் கொள்ளப்பட்டாலும்கூட இங்கிலாந்து இந்தியச் சுதந்திரத்துக்குத் தடையாக உள்ளது என்ற குற்றச்சாட்டை நிறுத்தவில்லை. சத்தியாக்கிரகத்துக்குத் அனைவரையும் விடுதலை செய்த பின்னரும்கூடக் காந்தி தனது எதிர்ப்பை நிறுத்தவில்லை. போர் முயற்சிக்கு ஒத்துழைப்புக் கொடுக்க காங்கிரஸ் சம்மதித்த போதிலும் இந்தியா சுதந்திரமடையும்வரைப் போராட வேண்டுமென ஜவஹர்லால் நேரு செல்லுமிடமெல்லாம் மக்களைக் கேட்டுக் கொண்டார். எனவே காங்கிரசின் எதிர்ப்பைச் சமாளிப்பதற்காகவும் அதன்போர் முயற்சி ஒத்துழைப்புக்குப் பரிசாகவும் கிரிப்ஸ் தூதுக்குழு அனுப்பி வைக்கப்பட்டது என்பது ஒரு காரணமாகும்.

முஸ்லீம் லீக்கின் கோரிக்கை

முஸ்லிம் லீக் தன்னுடைய தனிப் பாகிஸ்தான் கோரிக்கையைத் தீவிரமாக வலியுறுத்தி வந்தது. முஸ்லீம்களின் சிறுபான்மை இனப்பிரச்னையைத் தீர்க்காமல் இந்தியாவுக்கு சுதந்திரம் கொடுத்தால் முஸ்லீம்களின் நலன் பெரிதும் பாதிக்கப்படும் என்று லீக் அஞ்சியது. முஸ்லீம்களின் நலனைக்காக்க எந்தவித வழியையும் பின்பற்றத் தயங்காது முஸ்லீம் லீக் என்று அரசாங்கத்தை எச்சரித்தார் ஜின்னா. 1940 ஆகஸ்டு அறிவிப்பிலிருந்து எந்த விதத்தில் விலகிச் சென்றாலும் அதை முஸ்லீம் லீக் முழுமூச்சுடன் எதிர்க்கும் என்று ஜின்னா எச்சரித்தார். எனவே முஸ்லீம் லீக்கின் கோரிக்கையையும் கவனிக்க வேண்டியது பிரிட்டிஷ் அரசின் கடமையுமாயிற்று.

லிபரல் கட்சியின் குரல்

இந்தியத் தேசிய லிபரல் பெடரேசன் (National Liberal Federation) பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சிலுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தது. அது சாப்ரு திட்டம் (Sapru Proposal) என்றழைக்கப்படுகிறது. போர் முயற்சிக்கு இந்தியர்களின் பூரண ஒத்துழைப்பைப் பெறுவதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் தீர்க்கதரிசனத்தோடு கூடிய துணிகரமான முடிவை மேற்கொள்ள வேண்டுமென சாப்ரு திட்டம் சர்ச்சிலைக் கேட்டுக் கொண்டது. சாப்ருதிட்டத்தின் சாரமாவது,

1. போர்க்காலத்தில் இந்தியா தன்னைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய தயார் நிலையில் இல்லாதது மிகவும் வருந்துதற்குரியது;

2. இந்தியாவுக்குப் பிற டொமினியன் நாடுகளோடு சம அந்தஸ்து கொடுக்கப்பட வேண்டும்;

3. இந்தியா சுயாட்சி நாடானாலொழிய அதன் இனப்பிரச்சினை தீர்வதற்கு முன் இந்தியாவுக்கு சுயாட்சி வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை ஜின்னா

கடுமையாகக் கண்டித்தார் எனினும் கிரிப்ஸ் தூதுக்குழு அமைக்கப்படுவதற்கு சாப்ரு, ஜெயகர் போன்ற லிபரல் கட்சியின் பங்கும் கணிசமானது.

அட்லியின் பங்கு

இரண்டாவது உலகப் போர் துவங்குவதற்கு முன்னரே கிளெமெண்ட் அட்லி (Clement Attlee) இந்தியாவின் அரியல் அமைப்பில் அடிப்படை மாற்றம் செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். வின்ஸ்டோ இந்தியாவைப் போரில் ஈடுபடுத்தியதைப் 'பெரிய தவறு' எனக் கண்டித்தார் அட்லி. அவர் 'போர்க்கால அமைச்சரவை' (War Cabinet)க்கு சமர்ப்பித்த நினைவூட்டுப் பத்திரத்தில் (Memorandum) ஏமெரி, வின்ஸ்டோ சர்ச்சிலின் நடைமுறைக் கொவ்வாத அணுகுமுறையைக் குறை கூறினார். இந்தியத் தலைவர்களோடு மீண்டும் பேச்ச வார்த்தையைத் துவக்கித் தேக்கநிலையைப் போக்குமாறு கேட்டுக் கொண்டார்; ஒரு உயர்மட்ட அதிகாரியிடம் போதிய அதிகாரங்களைக் கொடுத்து இந்தியர்களுடன் ஒரு உடன்பாட்டுக்கு வரச் செய்தோ அல்லது இந்தியப் பிரதிநிதிகளை லண்டனுக்கு அழைத்துப் பேசியோ அரியல் தீர்வு காண வேண்டுமென்று யோசனை கூறினார். டர்ஹாம் பிரபு கனடாவைப் பிரிட்டிஷ் போரிடமிருந்து பிரிந்துவிடாமல் பாதுகாத்தார், அதேபோன்று இந்தியாவைப் பாதுகாக்க ஒருவர் வேண்டும் என்றார் அட்லி. அந்த ஒருவராக அனுப்பப்பட்டவரே கிரிப்ஸ்.

போர்க்கால அமைச்சரவையின் பிளவு

பிரிட்டிஷ் போர்க்கால அமைச்சரவையில் டோரிக்கள், தொழிற்கட்சியினர், லிபரல்கள் இடம் பெற்றிருந்தனர். அரசாங்கத்தின் போர்க் கொள்கையில் அவர்கள் ஒருமித்த கருத்து மாறுபாடு கொண்டிருந்தனர். அட்லி, பெதிக் லாரன்ஸ் பிரபு, எர்னஸ்டு பெவின், ஸ்டோக்ஸ் போன்றோர் சர்ச்சில்-ஏமெரி-வின்ஸ்டோ இந்திய விவகாரத்தைக் கையாண்ட முறையைக் குறை கூறினர். போர் முயற்சியில் இந்தியர்களின் முழுஆதரவையும் பெற்று இந்திய அரியல் அமைப்புச் சிக்கலை விரைவில் தீர்க்குமாறு சர்ச்சிலை வற்புறுத்தினர். அவர்களின் வற்புறுத்தலுக்கு பிரிட்டிஷ் பிரதமர் செவிசாய்க்க வேண்டியதாயிற்று.

பாராளுமன்றத்தின் பங்கு

கிரிப்ஸ் தூதுக்குழு இந்தியாவுக்கு அனுப்பப்படுவதற்கு பிரிட்டிஷ் பாராளுமன்றமும் காரணமாயிருந்தது. அட்லியின் இந்தியாவுக்குச் சாதகமான போக்குக்குப் பாராளுமன்றத்தில் நல்ல ஆதரவும், வரவேற்பும் இருந்தது. பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில் அட்லாண்டிக் பட்டயம் (Atlantic Chatter) இந்தியாவுக்குப் பொருந்தாது எனக் கூறும்போது இந்தியா இங்கிலாந்தை ஆதரிக்குமென்று எவ்வாறு எதிர்பார்க்க முடியுமென்று கேட்டார் எச்.ஜி.ஸ்டோக்ஸ். இங்கிலாந்தின் மெத்தனப் போக்கால் இந்தியப்பிரச்னை தீராதென்றும், இந்தியாவுக்கு ஒரு பிரதிநிதியை அனுப்பி இந்தியத் தலைவர்களுடன்பேசி சமரசத் தீர்வு காண வேண்டுமென்று வற்புறுத்தினார் பாரிங்டன் பிரபு. போர்க் காலத்தில் அரியல் தீர்வு காண முடியாது என்ற அரசாங்கச் சார்பு வாதத்தை எதிர்த்த ஹெய்லி பிரபு முதல் உலகப் போரின்போது மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் அறிவிக்கப்பட்டதை நினைவு படுத்தினார். நிலைமையின் அபாய தன்மையையும், அவசரத்தையும் விளக்கி

Scanned by CamScanner

அரசாங்கம் இந்தியா விஷயத்தில் உடனடியாகச் செயல்பட வேண்டுமென கேட்டுக் கொண்டார் கேட்டோ பிரபு. இவர்களின் பேச்சுக்கள் இந்தியாவில் பெரிய வரவேற்பைப் பெற்றன. பிரிட்டிஷ் பாராளுமன்ற நடவடிக்கைகள் கிரிப்ஸ் தூதுக்குழு அனுப்பப்படுவதற்கான பின்னணியை அமைத்துக் கொடுத்தது எனலாம்.

பன்னாட்டுத் தலைவர்களின் ஆதரவு

பல நாடுகளின் தலைவர்கள் இந்தியாவுக்கு ஆதரவாக இருந்தார்கள். இந்தியாவுக்கு வருகைதந்த சீனாவின் அதிபர் ஷியாங் கே ஷேக் (Chiang Kaishek) போரில் நேச நாடுகளை ஆதரிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொண்டார். அதேசமயம் இந்தியாவுக்கு உண்மையான அரசியல் அதிகாரத்தை உடனே வழங்க வேண்டுமென பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் வேண்டுகோள் விடுத்தார். ஆஸ்திரேலியா வெளிவிவகார அமைச்சர் டாக்டர் இவாட் (Dr Evatt) இந்தியாவுக்கும் சுயாட்சி வழங்குவதை விரைவு படுத்துவதன்மூலம் இந்தியரின் ஆதவைப்பெற வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தினார். யாவற்றுக்கும் மேலாக அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் (Roosevelt) இந்திய சுயாட்சிக் கோரிக்கையை இங்கிலாந்து ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சர்ச்சிலைக் கேட்டுக் கொண்டார். அவர் சர்ச்சிலுக்கனுப்பிய கடல் கடந்த தந்திச் செய்தியில் (Cable) அமெரிக்க ஐக்கிய நாடுகள் அமைவதற்கு முன்பு 13 அமெரிக்கக் காலனிகளும் சேர்ந்த இணைப்பாட்சி ஏற்படுத்திக் கொண்டதைப் போன்ற ஒரு நிலையை இந்தியாவில் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அத்தகையதொரு ஏற்பாடு இந்தியரின் மனக்கசப்பைக் குறைத்து பிரிட்டனுக்கு விசுவாசத்தைத் தேடித்தரும் என அவர் நம்பினார். எனவே இந்தியாவுக்குச் சாதகமான பன்னாட்டுத் தலைவர்களின் விருப்பத்துக்கு மாறாக சர்ச்சிலால் நடந்து கொள்ள முடியவில்லை.

உடனடிக் காரணம்

தென் கிழக்காசியாவில் நேச நாடுகள் தோல்வி கண்டன. சிங்கப்பூர், மலேயா, இந்தோனேசியா, அந்தமான், பர்மா ஆகிய இடங்களில் ஜப்பான் வியத்தகு வெற்றிகளைப் பெற்றது. ஜப்பானின் வெற்றி பிரிட்டன்மீது மக்களுக்கிருந்த நம்பிக்கையை நலிவடையச் செய்தது. எதிரியின் தாக்குதலைச் சமாளிக்க மக்கள் ஆங்கிலேய அரசுக்குத் துணையாக நிற்பார்களா என்ற சந்தேகம் எழுந்தது. ஜப்பான் கல்கத்தாவையும், சென்னையையும் ஒரே நேரத்தில் தாக்கக்கூடும் என்ற வதந்தி விரைந்து பரவிற்று. 1942 மார்ச் 8ஆம் நாள் ரங்கூன் வீழ்ந்தது. அடுத்த மூன்றாவது நாளில் கிரிப்ஸ் இந்தியாவுக்கு அனுப்பப்படுவார் என்று அறிவித்தார் சர்ச்சில். எனவே, ஜப்பானின் இந்திய ஆக்ரமிப்பு அபாயம் கிரிப்ஸ் குழு அனுப்பப்படுவதற்கு உடனடிக் காரணமாக இருந்தது.

கிரிப்சின் ஏற்பாடுகள்

சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் (Sir Stafford Cripps)

இங்கிலாந்து போர்க்கால அமைச்சரவையின் உறுப்பினர்; சிறந்த அரசியல் மதியூகி; சமரசப்பேச்சு வார்த்தையில் சூரர்; இங்கிலாந்திலும் இந்தியாவிலும் நன்கு மதிக்கப்பட்டவர்; நேருவின் இனிய நண்பர். கிரிப்ஸ் தூதுக்குழு 1942

மார்ச் 23ஆம் தேதி இந்தியாவுக்கு வந்தது. 8 பேர் கொண்ட 'அமைச்சரவைத் திட்டத்தை' (Cabinet Scheme) தன்னோடு கொண்டு வந்த மார்ச் 30ஆம் தேதி வெளியிட்டார். அதில் காணப்பட்ட கொள்கை முடிவுகள் கிரிப்ஸ் ஏற்பாடுகள் (Cripps Proposals) அதாவது, இங்கிலாந்திலிருந்து கிரிப்ஸ் கொண்டு வந்த அமைச்சரவையின் கொள்கை விளக்கங்கள் ஆகும்.

கிரிப்ஸ் கொண்டுவந்த பிரிட்டிஷ் அமைச்சரவையின் இந்திய அரியல் அமைப்பு பற்றிய ஏற்பாடுகளாவன:

1. இந்தியாவுக்கு பிரிட்டிஷ் காமன் வெல்த்திலிருந்து பிரிந்து போகக்கூடிய அதிகாரத்தோடு கூடிய டொமினியன் தகுதி வழங்கப்படும்.

2. போர் முடிந்த உடனேயே இந்திய அரியல் சட்டத்தை வரைவதற்கான அரியல் அமைப்புச் சட்டமன்றம் (Constituent Assembly) ஏற்படுத்தப்படும்;

3. புதிய அரியல் அமைப்புச்சட்டம் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு செயல்படுத்தப்படும்; இந்திய மாநிலங்களும், மன்னர் மாநிலங்களும் அந்த சட்டத்தை ஏற்றுக் கொள்ளலாம் அல்லது நிராகரிக்கலாம்; நிராகரிக்கும் மாநிலம் தனக்கென ஒரு அரியல் அமைப்புச் சட்டத்தை தயாரித்துக்கொண்டு சுதந்திரமாகச் செயல்படலாம். அதிகாரப் பொறுப்பு மாற்றம் சம்பந்தமாக பிரிட்டிஷ் அரசாங்கமும் அரியல் அமைப்புச் சட்டமன்றமும் கலந்துபேசி ஒரு உடன்படிக்கையைச் செய்து கொள்ளும்;

4. இடைக்காலத்தில் பாதுகாப்புத்துறை பிரிட்டிஷ் அரசாங்கத்திடமே இருக்கும். மேற்கண்ட கிரிப்ஸ் ஏற்பாடுகளும் இந்தியத் தலைவர்களுக்குப் பெரிய ஏமாற்றத்தையே தந்தன. எனவே அவர்கள் கொண்டுவந்த பிரிட்டிஷ் அமைச்சரவைத் திட்டத்தையும் நிராகரித்தனர். 1942 ஏப்ரல் 12 ஆம் தேதி கிரிப்ஸ் ஏமாற்றத்துடன் இந்தியாவை விட்டுச் சென்றார்.

கிரிப்ஸ் தூதுக்குழுவின் தோல்வி

கிரிப்ஸ் தூதுக்குழு தோல்வியடைவதற்குப் பல காரணங்கள் இருந்தன. கிரிப்ஸ் திட்டத்தை 'விரைந்து மூழ்கிக் கொண்டிருக்கும் வங்கியின் பெயரில் பின்தேதியிட்டு வழங்கப்பட்ட காசோலை' என்று வர்ணித்தார் காந்தி. எல்லோரையும் திருப்தி செய்யவில்லை கிரிப்ஸ் காங்கிரசோடு மட்டும் பேச்சுவார்த்தை நடத்தியது எனக் கூறும் முஸ்லிம் லீக் கிரிப்ஸ் திட்டத்தை நிராகரித்தது. கிரிப்ஸ் ஏற்பாடுகள் இந்தியாவின் ஒற்றுமைக்கும் பாதுகாப்புக்கும் எதிரானவை எனக் கூறி இந்திய லிபரல்கள் ஏற்க மறுத்தனர். கிரிப்ஸ் திட்டம் மறைமுகமாகப் பாகிஸ்தானை ஆதரிக்கிறது என்று எண்ணிய இந்து மகாசபையினர் அதை எதிர்த்தனர். பஞ்சாபில் பெரும்பான்மையாக உள்ள முஸ்லீம்கள் தனியாகப் பிரிந்தால் தங்களுக்கு பாதகமேற்படும் என்று பயந்த சீக்கியர்கள் அத்திட்டத்துக்கு ஆதரவளிக்கவில்லை. தங்களுக்குப் போதிய பாதுகாப்பு தரவில்லை எனக்கூறி தாழ்த்தப்பட்டோர் எதிர்ப்பு தெரிவித்தனர். கிரிப்ஸ் தூதுக்குழு தோல்வியுற்றதற்கான காரணங்கள் வருமாறு:

Scanned by CamScanner

1. பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில் கிரிப்ஸ் தூதுக்குழுவை இந்தியாவுக்கு அனுப்பியதற்குக் காரணம் இந்திய அரசியல் பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டுமென்பதல்ல, மாறாக, சர்வ தேச கருத்துக்கு மதிப்பளிப்பதற்காகவும், போர்க்கால நெருக்கடியைச் சமாளிப்பதற்காகவுமே கிரிப்சை அனுப்பினார் எனவே கிரிப்ஸ் தூதுக்குழுவின் தோல்வி முன்கூட்டியே தீர்மானம் செய்யப்பட்டு விட்டது;

2. கிரிப்ஸ் தனது வெற்றியிலும் திறமையிலும் அளவுக்கு மீறிய நம்பிக்கை வைத்திருந்தார். இந்தியத் தலைவர்களை எளிதில் சம்மதிக்க வைத்துவிடலாம் என்று நம்பினார். அவருக்கு முடிவெடுக்கக்கூடிய அதிகாரங்கள் கொடுக்கப்படாமையால் அவர் அடிக்கடி தனது முடிவுகளை மாற்றிக்கொள்ள வேண்டியதாயிற்று. கைகளையும் கால்களையும் கட்டிக்கொண்டு அவரால் நீந்த முடியவில்லை;

3. கிரிப்ஸ் தூதுக்குழு அனுப்பப்பட்டதன் உண்மையான நோக்கம் கடைசிவரைத் தெளிவு படுத்தப்படவில்லை. நோக்கத் தெளிவின்மையால் நடைமுறைச் சிக்கல்கள் தடைக் கற்களாயின;

4. கிரிப்ஸ் ஏற்பாடுகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருந்தன. அவை கலப்பு அமைச்சரவையின் கொள்கை மாறுபாடுகளைப் பிரதிபலித்தன. காங்கிரஸ்தான் இந்திய மக்களின் உண்மையான பிரதிநிதி என்று தொழிற்கட்சி நினைத்தது. ஆனால் டோரிகள் சிறுபான்மையினருக்கும் மன்னர்களுக்கும் தாங்கள் கடமைப்பட்டிருப்பதாகக் கருதினர். இந்த அணுகுமுறை பற்றிய முரண்பாடு பிரிட்டிஷாரின் உண்மையான நோக்கத்தைப் பற்றிய சந்தேகத்தை ஏற்படுத்தியது;

5. இந்திய அரசியல் அமைப்பு பற்றி மாற்றங்கள் போர் முடிந்த பிறகுதான் செய்யப்படும் என்ற முடிவு ஜீக்கமளிக்கக் கூடியதாக இல்லை. மாநிலங்களுக்களிக்கப்பட்ட பரிந்துபோகக் கூடிய உரிமை விஷமத்தனமானது என்று கருதப்பட்டது;

6. அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் இந்தியாவை ஆதரித்தது ஒப்புக்காகக் கொடுக்கப்பட்டதேயன்றி உண்மையானதன்று. இந்திய விவகாரத்துக்கு உடனடிப் பரிகாரம் காண வேண்டுமென்று அவர் சர்ச்சிலை வற்புறுத்தவில்லை. போகப்போக ரூஸ்வெல்ட் பட்டும்படாமலும் இருந்துவிட்டார்;

7. கிரிப்ஸ் இந்தியத் தலைவர்களைத் தனித்தனியே சந்தித்துப் பேசினாரேயன்றி அவர்களனைவரோடும் பொதுப் பிரச்னைகளை அவர் விவாதிக்கவில்லை. மேலும் காங்கிரஸ் ஒன்றுதான் இந்தியாவின் பிரதிநிதி என்பதுபோல் கருதினார். அதிலும் நேருவின் மூலம் காங்கிரசைத் தன் வழிக்குக் கொண்டுவந்துவிடலாம் என்று நம்பினார். அதன் விளைவு! முஸ்லீம் லீக்கை விரோதித்துக் கொண்டார். காங்கிரசையும் தன்வழிக்குக் கொண்டுவர முடியவில்லை;

8. காங்கிரசும் சில தவறான எதிர்பார்ப்புகளோடு கிரிப்சுடன் பேச்சவார்த்தை நடத்தி வந்தது. உதாரணமாக வைசிராயின் 'ஆட்சிக் குழு தேசிய அரசாகச் செயல்படும் என்று நம்பியது. அதே போன்று கிரிப்ஸ்-ஜான்சன் ஏற்பாடுகள்

(Cripps - Johnson Proposals) போர் முடிவதற்கு முன்னரே அதிகாரமாற்றத்துக்கு வழிவகுக்கும் என்று எதிர்பார்த்தது. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கட்டாயத்தால் இவை இரண்டையும் கிரிப்ஸ் விலக்கிக் கொண்டதால் காங்கிரஸ் ஏமாற்றமடைந்தது. அதனால் அது பிற ஏற்பாடுகளை எதிர்த்தது;

9. அமைச்சரவை நிட்டத்துக்கு அப்பாற்பட்டு எந்த விஷயத்தைப் பற்றியும் முடிவுசெய்வதற்கான அதிகாரம் கிரிப்சுக்கு வழங்கப்படவில்லை. எந்த அளவுக்கு இந்தியத் தலைவர்களுடன் விவாதித்து முடிவுக்கு வரலாம் என்பதுபற்றி கிரிப்சுக்கும் போர்க்கால அமைச்சரவைக்குமிடையே எந்த விதமான உடன்பாடும் இல்லை. மேலும் இந்திய வைசிராய் லின்லித்கோ அமைச்சரவைத் திட்டத்துக்குள்ளேயே பேச்சுவார்த்தைகள் நடக்குமாறு பார்த்துக் கொண்டார். எனவே அந்த குறுகிய திட்ட வளையத்துக்குள்ளேயே கற்ற வேண்டியதாயிற்று;

10. சர்ச்சில், ஏமெரி, லின்லித்கோ ஆகிய மூவரும் துவக்கத்திலிருந்தே இந்திய அரசில் பிரச்னை தீர்வதிலோ அல்லது கிரிப்ஸ் தூதுக்குழு வெற்றியடைவதிலோ ஆர்வம் காட்டவில்லை. மாறாக, தூதுக்குழு தோல்வியடைவதையே அவர்கள் விரும்பினார்கள். பிரிட்டிஷ் பிரதமரின் ஆதரவில்லாதபோது கிரிப்ஸ் தூதுக்குழு தோல்வியடைவதைத்தவிர வேறு வழியில்லை. கிரிப்சின் தோல்வியைப்பற்றி அறிந்த சர்ச்சில் அமைச்சரவை அறையில் நடனமாடிக் கொண்டே கற்றி வந்ததாகக் குறிப்பிட்டுள்ளார் எம். எட்வர்ட்ஸ் (M.Edwards). 'கிரிப்ஸ்' வந்தார், பார்த்தார், ஆனால் ஆக்கிரமிக்கவில்லை' என்று எழுதியுள்ளார் டி.வி.தமங்கர் (D.V. Tahmankar)

Scanned by CamScanner

27. வெள்ளையனே வெளியேறு இயக்கம், 1942

நான் உங்களுக்கு ஒரு சிறிய மந்திரத்தைக் கொடுக்கிறேன். அதை உங்கள் இதயத்தில் இறுத்தி மூச்சோடு வெளியிடுங்கள்! 'செய் அல்லது செத்தொழி' என்பதே அந்த மந்திரம்.

- மகாத்மா காந்தி.

புதிய போராட்டம்

ரௌலட் சத்தியாக்கிரகம் (1919), ஒத்துழையாமை இயக்கம் (1920-22), சட்ட மறுப்பு இயக்கம் (1930-34), தனிநபர் சத்தியாக்கிரகம் (1940) ஆகியவை இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் நினைவு கூறத்தக்க முக்கிய நிகழ்ச்சிகளாகும். அவை யாவும் பிரிட்டிஷ் இந்திய ஆதிக்கத்துக் கெதிராக மேற்கொள்ளப்பட்ட அகிம்சைப் போராட்டங்களாகும். தோல்வியுற்றதைப் போலத் தோன்றினாலும் அவை மக்களை இந்திய விடுதலைக்கான இறுதிப்போராட்டத்துக்குத் தயார் செய்த ஒத்திகைகளாகும். இரண்டாவது உலகப்போர் முடிந்த உடனேயே இந்தியாவுக்கு டொமினியன் தகுதியை வழங்கிவிடுவோமென்ற கிரிப்ஸ் தூதுக் குழுவின் வாக்குறுதி காலங்கடந்த அறிவிப்பாகும். அதிலும் கிரிப்ஸ் தூதுக் இந்தியாவை விட்டுப் புறப்பட்டு சென்றது (1942 ஏப். 12) பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நோக்கத்தில் சந்தேகத்தை ஏற்படுத்தியதோடு, இந்தியத் தலைவர்களையும் நட்டாற்றில் விட்டது போலாயிற்று! மேலும் ஜப்பான் எந்த நேரத்திலும் இந்தியாவின்மீது படையெடுக்கக்கூடிய அபாயம் இருந்தது. அப்படி ஒருநிலை ஏற்பட்டால் பிரிட்டன் இந்தியாவைக் காப்பாற்றுமா என்பதற்கு எவ்வித உத்திரவாதமுமில்லை. ஆங்கிலேயர் அகன்றால் ஜப்பான் இந்தியாவைத் தாக்குவதற்கான முகாந்திரம் இருக்காதல்லவா? எனவே, காந்தியின் தலைமையில் வெள்ளையனே வெளியேறு இயக்கம் (Quit India Movement) என்ற போராட்டம் துவக்கப்பட்டது.

சூழ்நிலைகள்

வெள்ளையனே வெளியேறு இயக்கம் துவக்கப்பட்டதற்கான சூழ்நிலைகள் வருமாறு:

கிரிப்ஸ் தூதுக்குழுவின் தோல்வி

கிரிப்ஸ் தூதுக்குழுவின் தோல்வியால் ஏற்பட்ட ஏமாற்றத்தின் விளைவே வெள்ளையனே வெளியேறு இயக்கம் எனக் கூறியுள்ளார் யு.என்.பியாரேலால் (U.N. Pyarellal). கிரிப்ஸ் வந்தபோது இந்தியத் தலைவர்களிடையே ஏற்பட்ட

நம்பிக்கை அவர் சென்றபோது அவநம்பிக்கையாயிற்று. கிரிப்ஸால் மனையைக் கூட எளியைக்கூடப் பிடிக்க முடியவில்லை! சர்ச்சில், ஏமெரி, லின்லித்கோ ஆகியோர் கிரிப்சை எலி அளவு சாதனையைக்கூட சாதிக்க விடவில்லை. கிரிப்ஸ் தூதுக்குழு அமெரிக்காவைத் திருப்திப்படுத்துவதற்காக அனுப்பட்ட தேயன்றி இந்தியாவின் அரியல் அமைப்புப் பிரச்னை தீர்ப்பதற்காக அனுப்பட்டதல்ல. பிரிட்டனின் அரியல் சதுரங்க விளையாட்டால் கலித்துப்போன காங்கிரஸ் தலைவர்கள் நேரடி நடவடிக்கையில் இறங்கத் தீர்மானித்தனர்.

பிரிட்டனின் பிடிவாதம்

கிரிப்ஸ் தூதுக்குழுவின் தோல்வியை அடுத்து பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியத் தலைவர்களுக்குத் திருப்தியளிக்கக்கூடிய தீர்வை வழங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அப்படி எதுவும் நிகழவில்லை. மாறாக, இந்திய விவகாரச் செயலர் எமெரி இனி இந்தியர் பிரச்னைகளை ஒடமுடியாது என்று கூறிய இறுமாப்புப் பேச்சு இந்தியத் தலைவர்களை ஆத்திரமடையச் செய்தது. இந்தியா ஒரு நாடாக இல்லாமையால் யாரிடம் அதிகாரத்தைக் கொடுப்பதென்று தெரியவில்லை என்ற பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நிலை காங்கிரஸ் தலைவர்களின் கோபத்தைக் கிளறிவிட்டது. எனவே, பிரிட்டனின் பிடிவாதம் இந்திய விடுதலைப் போராட்டத் தீயைத் தூண்டிவிட்டது போலாயிற்று.

இனப்பாகுபாடு

ஜப்பானிய ஆக்கிரமிப்பின் விளைவாக பினாங்கு, சிங்கப்பூர், மலேயா, பர்மா ஆகிய நாடுகளிலிருந்து பல்லாயிரக் கணக்கான இந்திய அகதிகள் குடிபெயர்ந்தனர். அதேபோன்று ஆங்கிலேயர்களும் அரக்கான் மலைகள் மற்றும் வடகிழக்குப் பகுதிக் காட்டுவழியே வந்தனர். அவர்கள் அனைவரும் தப்பிச் செல்வதற்கு இரண்டு வழிகள் மட்டுமே இருந்தன: ஆபத்துக் குறைந்த பாதுகாப்பான வழி ஆங்கிலேயர்க்கும் ஐரோப்பியர்களுக்கும் ஆபத்துமிக்க பாதுகாப்பற்ற வழி இந்திய அகதிகளுக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டன! வரும் வழியில் இந்திய அகதிகளில் பலர் விரோதிகளின் தாக்குதலுக்கும் பலி பட்டினிக்கும் வியாதிகளுக்கும் பலியாயினர்! இந்திய வீரர்கள் ஆங்கிலேயருடன் இணைந்து போரிட்ட போதிலும்கூட இனப்பாகுபாடு காட்டப்பட்டது. ஆங்கிலேய அரசு அகதிகளிடையே, இனப்பாகுபாடு காட்டியதறிந்த காங்கிரஸ் தலைவர்கள் கொதித்தெழுந்தனர்.

ஜப்பான் படையெடுப்பு பற்றிய பயம்

பினாங்கு, சிங்கப்பூர், மலேயா, பர்மா ஆகியவை ஒன்றன்பின் ஒன்றாக ஜப்பானியத் தாக்குதலுக்கு இரையாயின. அவற்றை பிரிட்டனால் காப்பாற்ற முடியவில்லை. பர்மா வரை வந்த ஜப்பானிய இராணுவம் இந்தியாவுக்குள் நுழைவதற்கான அபாயம் இருந்தது. கல்கத்தா, சென்னை, விசாகப்பட்டினம் துறைமுகங்கள் ஜப்பானிய விமானத் தாக்குதல்களுக்கு இலக்காகவையாகக் கருதப்பட்டன. சென்னை மக்களும், அதிகாரிகளும் பீதியடைந்தனர். கிழக்குக்கரையோரப் பகுதிகளிலிருந்து பல நகரங்கள், கிராமங்களிலிருந்த மக்கள் வேறு இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர். பிரிட்டன் செயலற்றுப் போயிற்று. இந்தியாவை இங்கிலாந்து காப்பாற்றும் என்ற நம்பிக்கை இல்லாத நிலை

Scanned by CamScanner

உருவாயிற்று. இந்த நெருக்கடியைச் சமாளிக்க வேண்டிய கட்டாயம் இந்திய தலைவர்களுக்கேற்பட்டது. வெள்ளையனை வெளியேற்றி இந்தியாவைக் காப்பாற்றத் துணிந்தனர்.

ஜப்பானுக்கு ஆதரவு பற்றி அச்சம்

ஜப்பான் இந்தியாவின் கதவைத் தட்டிக்கொண்டிருந்தபோது சுபாஷ் சந்திரபோஸ் பெர்லினில் இருந்தார். பெர்லினில் இருந்து கொண்டே வானொலிமூலம் பிரிட்டனுக்கெதிராகக் கிளர்ந்தெழுமாறு இந்தியர்களைத் தூண்டினார். பிரிட்டனின் போதாத காலம் இந்தியாவுக்கு நல்ல காலம். பிரிட்டனின் சங்கடம் இந்தியாவுக்குச் சந்தர்ப்பம் என்ற போக்கில் விரோதிக்கேற்பட்ட நெருக்கடியை இந்தியாவுக்குச் சாதமாக்கிக் கொள்வதில் உறுதியாக இருந்தார் போஸ். ஜப்பானோடு ஒத்துழைக்குமாறு அவர் இந்திய மக்களைக் கேட்டுக் கொண்டார். சுபாஷ் சந்திர போஸின் வீரவார்த்தைகள் இந்தியரிடையே ஜப்பானிய ஆதரவு எண்ணத்தை உருவாக்கின. ஜப்பானிய வெற்றி கண்டு மக்கள் மகிழ்ந்தனர். காட்டுத் தீ போல் பரவியது. ஜப்பானிய ஆதரவு காங்கிரஸ் தலைவர்களிடையே கிலியை ஏற்படுத்தியது. ஜப்பானிய ஆக்ரமிப்பையும் ஆதிக்கத்தையும் விரும்பாத அவர்கள் இந்திய விடுதலைப் போராட்டத்தை நெறிப்படுத்தத் துணிந்தனர்.

காங்கிரசின் நிலை

ஒருபக்கம் ஜப்பானிய ஆக்கிரமிப்பு அபாயம், மறுப்பக்கம் பிரிட்டனின் இயலாமை. காங்கிரசுக்கு ஒரு தீர்க்கமான, திட்டவட்டமான முடிவெடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆனால் காங்கிரஸ் தலைவர்களால் ஒருமித்த முடிவுக்கு வரமுடியவில்லை. சிலர் ஜப்பான் இந்தியாவை பிரிட்டனின் பிடியிலிருந்து விடுப்பதை விரும்பினர். போரின் விளைவைக் கணிக்க முடியாமையால் எப்பக்கம் சாய்வதென்று தெரியாது திகைத்தனர் சிலர். பலரும் இரு ஏகாதிபத்தியங்களையும் எதிர்க்க வேண்டுமென்றனர். சுபாஷ் சந்திரபோஸ் ஜப்பான் ஆதரவாளர். ஜவஹர்லால் நேரு பிரிட்டனுடன் சமரசப் பேச்சைத் துவக்குவதை விரும்பினார். ராஜகோபாலாச்சாரி தேசிய அரசாங்கத்தை ஏற்படுத்துவதை வலியுறுத்தினார். காங்கிரசும் முஸ்லீம் லீக்கும் ஒத்துப்போகாமல் பிரிட்டனோடு உடன்பாட்டுக்கு வருவதென்பது காரியசாத்தியமற்றது என்பது அவரது முடிவு. ஆனால் அனைவரும் காந்தியின் முடிவை ஆவலோடு எதிர்பார்த்தனர்.

காந்தியின் தீர்மானம்

காந்தி ஒரு தெளிவான முடிவுக்கு வந்தார். அவருடைய கணிப்புப்படி ஜப்பான் இந்தியாவைத் தாக்கினால் பிரிட்டன் சிங்கப்பூர், மலேயா, பர்மாவில் செய்ததுபோல் எதிர்ப்பின்றி பணிந்து விடும்; அந்நிலையில் ஜப்பானிய இராணுவ ஆதிக்கம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைவிட மோசமாக இருக்கும். பிரிட்டன் இந்தியாவைவிட்டு வெளியேறினால் ஜப்பான் இந்தியாவைத் தாக்குவதற்கான முகாந்தரம் எதுவுமிருக்காது; எனவே ஜப்பான் இந்தியாவைத் தாக்கக்கூடுவதற்கு முன்னால் பிரிட்டன் இந்தியாவைவிட்டு வெளியேற வேண்டியதில் அவசியத்தைப் பற்றி காந்தி 'அரிஜன்' பத்திரிக்கையில் தொடர்ந்து எழுதினார். எனவே அந்தியன் வெளியேற வேண்டும் என்பதே காந்தியின் தீர்க்கமான

தீர்மானமாகும். 'வெள்ளையனே வெளியேறு தீர்மானம்' காந்தியின் புதிய போராட்ட உத்தியைப் பரிவிப்பதற்காக காங்கிரஸ் செயற்குழு 1942 ஜூலை 14ஆம் தேதி வார்தாவில் கூடியது. காந்தியின் முடிவை அப்படி கலாம் ஆசாத், ஜவஹர்லால் நேரு, கோவிந்த வல்லப்பந்த், சதுமுகமது, எம். ஆசப் அலி ஆகியோர் எதிர்த்தனர். எனினும் கூட்ட இறுதியில் அனைவரும் காந்தியின் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டனர். பிரிட்டன் இந்தியாவிலிருந்து வெளியேற வேண்டும். இன்றேல் காந்தியின் தலைமையில் சாத்வீக மக்கள் இயக்கம் துவக்கப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்தீர்மானம் ஒரு சில மாற்றங்களோடு பம்பாயில் ஆகஸ்டு 7 ஆ தேதிகளில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கீகரித்தது. அக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய காந்தி போர் முழக்கம் செய்தார். 'நான் உங்களுக்கு ஒரு புதிய மந்திரத்தை சொல்லிக் கொடுக்கிறேன். 'செய் அல்லது செத்துமடி' (Do or Die) என்பதே அந்த மந்திரமாகும். ஒன்று நாம் இந்தியாவை விடுவிக்க வேண்டும், அல்லது அந்த முயற்சியில் உயிர் துறக்க வேண்டும். மீண்டும் அடிமை நிலை நீடிப்பதைப் பார்ப்பதற்கு நாம் உயிர் வாழக்கூடாது'.

மக்கள் கிளர்ச்சி

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் பம்பாயில் 1942 ஆகஸ்டு 8 இரவு 10 மணிக்கு முடிவுற்றது. மறுநாள் அதிகாலையில் காந்தியும் பிற காங்கிரஸ் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். ஒரு வாரத்துக்குள் நாடு முழுவதுமுள்ள காங்கிரஸ் பிரமுகர்கள் அனைவர்களையும் அரசாங்கம் கைது செய்துவிட்டது. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, காங்கிரஸ் செயற்குழு மாநில காங்கிரஸ் கமிட்டிகள் அனைத்தும் சட்டவிரோதமென அறிவிக்கப்பட்டது. காங்கிரஸ் காரியாலயங்கள் அனைத்தும் அரசாங்கத்தால் அடைக்கப்பட்டன. காங்கிரஸிடமிருந்து நிதியனைத்தும் கைப்பற்றப்பட்டது. காங்கிரஸ் வெளியீடுகள் அனைத்தும் நிறுத்தப்பட்டன. கடைகள், ஓட்டல்கள் ஆகியவை மூடப்படுவது தடைசெய்யப்பட்டது. காங்கிரஸ் துவக்கிய இயக்கத்தைப் பற்றிய செய்திகளை வெளியிடக் கூடாதென பத்திரிக்கைகள் தடைசெய்யப்பட்டன. ஒழுங்கை நிலைநாட்ட மாநில அரசாங்கங்களுக்கு முழுஅதிகாரம் வழங்கப்பட்டது. இத்தகைய மின்னல்வேக அடக்குமுறை நடவடிக்கைகளால் அரசாங்கம் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை முளையிலே கிள்ளிவிடுவதென்று முடிவு செய்துவிட்டது.

காந்தியும், காங்கிரசும் அரசாங்கத்தின் இந்த அடக்குமுறையை எதிர்பார்க்கவில்லை. பம்பாய் தீர்மானத்தைப்பற்றி அரசாங்கத்துக்கு விளக்கிக்கூறி இரண்டு வாரங்களுக்குப் பின்னரே போராட்டத்தைத் துவக்குவதாக இருந்தார் காந்தி. தலைவர்கள் கைதுசெய்யப்பட்டதை வெளிநாட்டு வானொலி மூலமாகவும், ஆங்காங்குள்ள அதிகாரிகள் வழியாகவும் கேள்விப்பட்டு மக்கள் கொதித்தெழுந்தனர். தலைவர்களின்றி தக்க திட்டமின்றி போதிய முன்னேற்பாடு செய்யாமல் மக்கள் தன்னிச்சையாகக் கிளர்ச்சியில் ஈடுபடலாயினர். மக்கள் அவர்களுக்குத் தெரிந்த முறைகளையெல்லாம் கையாளத் தொடங்கினார்கள். காங்கிரஸ் ஊழியர்கள் பொதுக்கூட்டங்களைக் கூட்டி அரசாங்கத்தின் செயலைக் கண்டித்தார்கள். வியாபாரிகள் கடையடைப்புச் செய்தார்கள். தொழிலாளர்கள்

Scanned by CamScanner

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். மாணவர்கள் கல்விக்கூடங்களைப் புறக்கணித்தனர். விவசாயிகள் வரிகொடா இயக்கத்தைத் துவக்கினார்கள். பல அரசாங்க ஊழியர்கள் பதவிகளைத் துறந்தார்கள். ஊர்வலங்கள், பல ஆர்ப்பாட்டங்கள், அர்த்தால்கள் நடத்தப்பட்டன. கள்ளுக்கடைகள், சாராயக்கடைகள், கஞ்சாக் கடைகள், ஜவுளிக்கடைகள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள், மாஜிஸ்ரேட் டிவிஷனல் அலுவலகங்கள், முன்சீப் கோர்ட்டுகள், காவல் நிலையங்கள் ஆகியவை மறியல் செய்யப்பட்டன. கடலோரப் பகுதிகளில் உப்புவரிச் சட்டம் மீறப்பட்டது. நீதிமன்றங்கள் புறக்கணிக்கப்பட்டன. ஐக்கிய மாகாணம், பீஹாரில் மட்டும் முஸ்லீம்கள் இப்போராட்டத்தில் கலந்து கொண்டனர்! அம்மாநிலங்களில் கிராமப் பஞ்சாயத்துக்கள், ஊர்வலங்கள் நடத்தி, தீவிரச்செயல்களில் இறங்கின. அஸ்ஸாமில் தேயிலை அரசாங்கங்கள் அமைக்கப்பட்டன. பெண்கள் பெருவாரியாகக் கலந்து கொண்டனர்.

அரசாங்கம் அடக்குமுறையை ஈவிரக்கமின்றி அதிகரித்தபோது மக்கள் வன்முறைச் செயல்களில் ஈடுபடலாயினர். இந்தியா முழுவதும் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. கள் பானைகள், பீப்பாய்கள் உடைக்கப்பட்டன. தென்னை, பனைமரங்களை வெட்டி சாய்த்தனர். புகைவண்டிப் பாதைகள் பெயர்க்கப்பட்டன. தந்தி டெலிபோன் கம்பிகள் வெட்டப்பட்டன. பாலங்கள் பெயர்க்கப்பட்டன. குளங்களும் கம்மாய்களும் உடைக்கப்பட்டன. தபால் பெட்டிகளுக்குள் கந்தகம் போடப்பட்டது. பிரிட்டிஷ் பேரரின் சிலைகள், வளைவுகள், நினைவுச் சின்னங்கள் போன்றவை உடைக்கப்பட்டன. கிராம அதிகாரிகள், ஆசிரியர்கள் ஆகியோர் வேலையை விடும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். போலீசார் பயன்படுத்திய வாகனங்கள் கொளுத்தப்பட்டன; போலீசார் அணிந்திருந்த உடைகள் குல்லாய்களை கழற்றிக் கொளுத்தினார்கள்! சிறைச் சாலைகளை உடைத்துக் கைதிகளை விடுவித்தனர். கஜானாக்கள் கொள்ளையிடப்பட்டன. அரசாங்க அலுவலகங்கள் தீக்கிரையாயின. ஜமீன்தார்கள், இனாம்தாரிகளின் தானியக் களஞ்சியங்கள் சூறையாடப்பட்டன. தடையுத்தரவுகள் தாராளமாக மீறப்பட்டன. ஜெயப்பிரகாஷ் நாராயணன், ராம் மனோகர் லோகியா, அலிபட்வர்த்தன், அருணா அசப் அலி போன்ற காங்கிரஸ் சோஷலிஸ்ட் தலைவர்கள் தலைமறைவாகி அரசாங்கத்துக்கெதிரான எதிவேலைகளில் ஈடுபட்டனர். நாளுக்கு நாள் அழிவு வேலைகளும் கொலைவெறித் தாக்குதல்களும் அதிகரித்த வண்ணமிருந்தன. புகை வண்டி நிலையங்கள் தாக்கப்பட்டன. புகைவண்டிகள் கவிழ்க்கப்பட்டன. விமான நிலையங்களும் விதிவிலக்கல்ல.

தமிழ்நாட்டிலும் வன்முறை நிகழ்ச்சிகளுக்குப் பஞ்சமில்லை. இராஜபுவத்தினருக்குச் சீருடைத் துணியைத் தயாரித்துக் கொடுத்த பக்கிங்காம் கர்னாடிக் மில் வேலை நிறுத்தத்தால் மூடப்பட்டது. சென்னை போர்ட் டிரஸ்டு, சென்னை மாநகராட்சி, மின்சார டிராம்கள் செயலிழந்தன. பொதுக்கட்டிடங்கள் தாக்கப்பட்டன. வடஆற்காடு மாவட்டத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் தொலைபேசி தந்திக்கம்பிகளை அறுத்துவிட்டனர். ஒரு சரக்கு ரயில் வண்டியை கவிழ்த்துவிட்டனர். தென்னாற்காடு மாவட்டத்தில் மாணவர்கள் வன்முறைச் செயல்களில் தீவிரமாக ஈடுபட்டனர். கோயமுத்தூருக்கருகே உள்ள சூலூர் விமான நிலையம் அழிக்கப்பட்டது. புகைவண்டிகள் கவிழ்க்கப்பட்டன.

கள்ளுக்கடைகள் கொளுத்தப்பட்டன. தென் மாவட்டங்களில் வன்முறை விகலருபமெடுத்தது. ராஜபாளையம், காரைக்குடி, தேவகோட்டை, திருவாடானை, பூலாங்குறிச்சி ஆகிய இடங்களில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் பலர் மாண்டனர்

விரைவாகப் பாலிய போராட்டத்தை அடக்க அரசாங்கம் கொடூரமான முறைகளையெல்லாம் கையாண்டது. அதிகாரிகளின் மேற்பார்வையில் கிராமங்கள் கொளுத்தப்பட்டன. கொள்ளைக்காரர்களுக்குக் கையடியிலிருந்து மரண தண்டனை வரை கொடுக்கப்பட்டது. அதிரடி அபராதங்கள் விதிக்கப்பட்டு அக்கிரமமாக வசூலிக்கப்பட்டன. சந்தேகத்துக்கு உள்ளோரது வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. ஆர்ப்பாட்டக்காரர்களின் ஆடுமாடுகள் கைப்பற்றப்பட்டு ஏலமிடப்பட்டன. விவசாயிகளும், தொழிலாளர்களும் தித்வதைக் குள்ளாயினர். பெண்கள் மானபங்கப் படுத்தப்பட்டனர். நள்ளிரவில் போலீசார் கிராமங்களுக்குள் புகுந்து உறங்கிக் கொண்டிருந்தோரை மிருகத்தனமாக தாக்கினர். கைகால்களைக் கட்டி, கட்டுகளில் மணல் செலுத்தித் தண்ணீர் ஊற்றி வதைத்தார்கள். தலைக்குத் தலை முடிந்து நடக்கச் செய்தனர். தொண்டர்களின் கழுத்துக்களில் செருப்புகளையும் துடைப்பக் கட்டைகளையும் மாலைகளாகப் போட்டார்கள். வாய்களில் செருப்பைக் கவ்விக்கொள்ளும்படி செய்தனர். நகக்கண்களில் ஊசிகள் ஏற்றப்பட்டன. தொப்புள்களில் பிள்ளைப்பூச்சிகளை வைத்துக் கட்டினர். கால்களில் லாடங்கள் அடிக்கப்பட்டன. தலைகள் மொட்டையடிக்கப்பட்டன. மீசை தாடிகள் கொளுத்தப்பட்டன. பெண்கள் பலவகையாலும் துன்புறுத்தப்பட்டார்கள்.

எடுத்துக்காட்டாக, ராஜபாளையத்தில் புதுப்பாளையம் சத்திரத்திலிருந்து பொன்விழா மைதானம் நோக்கிப் புறப்பட்டுச்சென்ற பிரமாண்டமான ஊர்வலத்தினர் காவல் நிலையத்தைக் கல்லெறிந்து தாக்கிப் போலீசாரிடமிருந்து ஆயுதங்களைப்பறிக்க முயன்றனர். அங்கே இருந்த ஜார்ஜ் சிலையை உடைத்தனர். நகரின் வடக்கு தெற்காகச் சென்ற தந்திக் கம்பிகள் துண்டிக்கப்பட்டன. கள்ளுக்கடைகள் கொளுத்தப்பட்டன. தபால் பெட்டிகள் உடைக்கப்பட்டன. வன்முறைக் கூட்டத்தைக் கலைக்கத் தடியடிப்பிரயோகமும், துப்பாக்கிச் சூடும் நடந்தன. பழனிச்சாமி செட்டியார் தளத்திலேயே மாண்டார். பெருமாள் குடும்பன் காலை இழந்தார். கருப்பையாத் தேவர் குண்டுக் காயம் பட்டார். ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. வீடுகளிலும், சாவடிகளிலும் போலீசார் புகுந்து அங்கிருந்தோரைக் கடுமையாகத் தாக்கினர். காங்கிரஸ் அபிமானிகளின் கடைகள் சூறையாடப்பட்டன. அர்த்தால் செய்த 25 பேர்மீது குற்றவழக்கு தாக்கல் செய்யப்பட்டது. கே. குருசாமி செட்டியார், சுப்பராஜா, சஞ்ஜீவி ராஜா, அக்னிவேல் ராஜா முதலியார், இராமசாமி நாயுடு, ஒ.மு.திருப்பதி ராஜா, கந்தசாமி ராஜா ஆகியோர் தித்திரவதை செய்யப்பட்டனர். இளைஞர் பி.எஸ்.வசந்தனைக் கைது செய்து கைகளைக் கட்டி சந்தையில் நிறுத்தி வாயில் பூட்சை கவ்விக் கொள்ளச் செய்து இருபுறமும் போலீசார் வரிசையாக நின்றுகொண்டு அவரை இங்குமங்குமாக உதைத்துத் தள்ளிப் பந்தாடினார்கள்! காட்டுக்குச் சென்ற விவசாயிகளும் தண்ணீர் எடுக்கச் சென்ற பெண்களும் போலீசாரால் அடித்து நொறுக்கப்பட்டனர்.

Scanned by CamScanner

இயக்கத்தின் வீழ்ச்சி

1942 ஆகஸ்டு புரட்சியால் வெள்ளையன் வெளியேறவில்லை. வெளியேற்றப்படவுமில்லை. முந்தைய போராட்டங்களைப்போலவே இப்போராட்டமும் சாத்வீகமானதாக இருக்க வேண்டுமென்றே காந்தி விரும்பினார். ஆனால் அது வன்முறைக் கிளர்ச்சியாயிற்று. இரண்டு மாதங்கள் நடைபெற்ற அக்கிளர்ச்சியை அரசாங்கம் ஈவிரக்கமின்றி அடக்கி ஒடுக்கிவிட்டது. அதன் வீழ்ச்சிக்கான காரணங்கள் யாவை?

1. வெள்ளையனே வெளியேறு இயக்கம் தலைமையற்ற போராட்டமாயிற்று. பம்பாய்க் காங்கிரஸ் கூட்டம் முடிந்த மறுநாளே தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு விட்டனர். மக்களை வழிநடத்திய பலரும் அகிம்சைப் போராட்ட விதிகளைப்பற்றிக் கவலைப்படவில்லை. மேலும் செயல்திட்டத்தைப் பற்றி அவர்களுக்குள்ளே தெளிவில்லை. தலைமையற்ற மக்கள் தவறுகள் பல செய்தனர்;

2. போராட்டக்காரர்களுக்கு தெளிவான திட்டம் எதுவும் கொடுக்கப்படவில்லை. திட்டமில்லாத கிளர்ச்சி சுக்கான் இல்லாத படகு போலாயிற்று. நேரு கொடுத்த திட்டங்கள் ஐக்கிய மாகாணத்துக்கு மட்டுமே பொருந்துவதாக இருந்தது. பெர்லினிலிருந்து சுபாஷ் சந்திர போஸ் கொடுத்த 'அகிம்சை' கொரில்லாப் போர்முறைத் திட்டம்' நடைமுறை சாத்தியமில்லை. போராட்டத் திட்டத்தை கொடுப்பதற்கு முன் காந்தி கைது செய்யப்பட்டுவிட்டார்;

3. மையக் கட்டுப்பாடு இல்லாததால் ஒவ்வொரு மாநிலமும் அதை தன்போக்கில் போராட்டத்தை நடத்தியது. அமைப்பாளருக்கிடையே ஒருங்கிணைப்பின்மையால் ஒரு பகுதியில் நடப்பது மறுபகுதிக்குத் தெரியாமல் போயிற்று. இயக்கம் வலுவிழந்தது;

4. போராட்டக்காரர்களிடையே செய்திப் போக்குவரத்து தொடர்பில்லாது போயிற்று. கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் இரகசியமாகச் செய்திகளை அனுப்ப முடியவில்லை. 'தேசிய காங்கிரஸ்' வானொலி, காங்கிரசின் தீவிரவாத நடவடிக்கைகளை மட்டுமே ஒலிபரப்பிற்று. இந்து முஸ்லீம்களுக்கிடையே பதட்டநிலை, ஏற்பட்டபோது துவக்கப்பட்ட 'ஆசாத் முஸ்லீம் வானொலி' இயக்கத்தை நடத்தப் பயன்படவில்லை;

5. வெள்ளையனே வெளியேறு இயக்கம் காங்கிரஸ் இயக்கமாகவே கருதப்பட்டது. தேசிய இயக்கமாகக் கருதப்படவில்லை. அவ்வியக்கம் பிரிட்டிஷ் இந்தியா, முஸ்லீம் இந்தியா, பாகிஸ்தான் திட்டம் ஆகியவற்றுக்கெதிராகத் துவக்கப்பட்டதாகவும், பிரிட்டிஷ் ராஜிடமிருந்து இந்து ராஜ்யத்துக்கு அதிகாரம் மாற்றப்பட வேண்டுமென்பதே காங்கிரசின் குறிக்கோள் என்றும் கருதிய ஜின்னா முஸ்லீம்களைப் போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டாமெனக் கேட்டுக் கொண்டார். இந்து மகாசபை அப்போராட்டத்தில் ஆர்வம் காட்டவில்லை. ரஷ்யா நேசநாடுகள் பக்கம் சேர்ந்தால் இந்தியக் கம்யூனிஸ்டுகள் அரசாங்கத்தை ஆதரித்தனர். எனவே ஆகஸ்டுப் போராட்டத்துக்கு அனைத்து அமைப்புக்களின் ஆதரவும் கிடைக்கவில்லை;

6. காந்தி எந்த நம்பிக்கைகளின் அடிப்படையில் இந்த இயக்கத்தைத் திட்டமிட்டாரோ அந்த நம்பிக்கைகள் அனைத்தும் தவறாகப் போயின. போரின் கெடுபிடிகளுக்குள்ளான பிரிட்டன், இந்தியாவுடன் சமரசத்துக்கு வரும் என்றும்; அரசாங்கம் முன் நடவடிக்கைகளை மேற்கொண்டு போராட்டத்தைத் துவக்கத்திலேயே அடக்காதென்றும்; போராட்டத்தைத் துவக்க அவகாசம் அளிக்கப்படுமென்றும்; அகிம்சை முறையில் மேற்கொள்ளப்படும் கிளர்ச்சியை அரசாங்கம் பொறுத்துக் கொள்ளுமென்றும்; இந்து முஸ்லீம் இணைப்பின்றியே இயக்கத்தைத் துவக்கிவிட்டு இந்தியா விடுதலை பெற்றபின்னர் அவ்வொற்றுமையை ஏற்படுத்திக் கொள்ளலாமென்றும், சியாங்கேஷேக், ரூஸ்வெல்ட் போன்றோர் இந்தியாவுக்குத் துணையாக இருப்பார்கள் என்றும் காந்தி எதிர்பார்த்தார். ஆனால் அவர் எதிர்பார்த்தவாறு எதுவும் நடக்கவில்லை;

7. அரசாங்க ஊழியர்களும் போலீசும் இராணுவத்தினரும் அரசாங்கத்துக்கு விசுவாசமாகவே இருந்தனர். அரசாங்க அலுவலகங்கள் தாக்கப்பட்டபோதும், தீக்கிரையாக்கப்பட்ட பின்னரும், ஆவணங்கள் கொளுத்தப்பட்டாலும் அரசாங்க நிர்வாகம் தடைப்படவில்லை. போலீசும் இராணுவமும் முனைந்து நின்று போராட்டத்தை அடக்கினர்;

8. அரசாங்கம் ஆரம்பத்திலிருந்தே தயார்நிலையில் இருந்தது. போராட்டத்தை முளையிலேயே கிள்ளிவிட வேண்டுமென்ற உறுதியோடு அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தது. கிளர்ச்சியை ஒடுக்க நிர்வாக இயந்திரம், போலீஸ், இராணுவம் அனைத்தையும் முடுக்கிவிட்டது. கிளர்ச்சியை அடக்க அது எந்த முறையையும் கையாளத் தயங்கவில்லை. சமரற்ற போராட்டம் அது. அரசாங்கத்தின் அரக்கத்தனமான அடக்குமுறைக்கு முன்னால் தலைமையும் தக்க திட்டமும் இல்லாது துவக்கப்பட்ட வெள்ளையனே வெளியேறு இயக்கம் வீழ்ச்சியுற்றது.

இயக்கத்தின் இயல்பும் சிறப்பும்

"வெள்ளையனே வெளியேறு" இயக்கத்தின் இயல்புபற்றி இன்றைக்கும் ஆராய்ச்சியாளர்கள் மாறுபட்ட முடிவுகளைக் கூறி வருகின்றனர். இந்த இயக்கம் இயல்பாகத் தோன்றியதா அல்லது திட்டமிட்டு நடத்தப்பட்டதா? இவ்வியக்கம் காங்கிரசின் சாத்வீகப் போராட்டத்துக்கு பதில் வன்முறைக் கிளர்ச்சியாக வெடித்தது ஏன்? என்ற வினாக்களுக்கு விடை அளிப்பது கடினம். எனினும் 'ஆகஸ்டு புரட்சி'யின் சில இயல்புகளை அடையாளம் கண்டறியலாம்.

1. இந்திய விடுதலைப் போராட்டத்தில் பொதுமக்கள் முன் எப்போதும் இல்லாத அளவுக்குப் பங்கேற்றனர்; 2. அருணா அசப் அலி, சுலோசனா இருபளாளி போன்ற பெண்களும், பள்ளி கல்லூரி மாணவிகளும் கலந்து கொண்டனர்; 3.தர்பங்கா அரசர் போன்ற ஜமீன்தார்களும், நிலச்சுவான்தார்களும் இந்த இயக்கத்துக்கு உதவினர்; 4. அரசாங்க அலுவலர்கள் குறிப்பாகக் கீழ்நிலை ஊழியர்கள் போராட்டத்துக்கு மறைமுகமாக உதவி செய்தனர்; 5. முஸ்லீம்கள் இந்த இயக்கத்தை ஆதரிக்கவில்லையாயினும் எதிர்க்கவில்லை: 6.இப்போராட்டத்தைத் தலைவர்கள் சிறையில் இருந்தபோது மக்களே முனைப்பார்வத்துடன் நடத்தினர். 7. 'ஆகஸ்டுப் புரட்சி' வன்முறைக் கிளர்ச்சியாகும்; 8. இந்த போராட்டத்தின்போது நாட்டின் சில பகுதிகள் 'இணை அரசாங்கங்கள்' அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்க அம்சமாகும்; 9. இரண்டாம்

Scanned by CamScanner

உலகப் போரைக் காரணம்காட்டி பிரிட்டிஷ் அரசாங்கம் இந்த இயக்கத்தை இரும்புக்கரம் கொண்டு அடக்கியது. 10. இந்த இயக்கம் சுபாஷ் சந்திர போஸின் இந்திய தேசிய இராணுவத் தாக்குதல் தொடங்கத் தூண்டுகோலாக இருந்தது.

'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் அரியல் கட்சிகளின் நிலை என்ன? முஸ்லீம் லீக்கின் தலைவரான ஜின்னா இந்த இயக்கத்தைப் பழித்தார்; தம் கட்சியினரை இப்போராட்டத்திலிருந்து ஒதுங்கி இருக்குமாறு கேட்டுக் கொண்டார். இந்து மகாசபையின் தலைவர் சவார்க்கர் இந்த இயக்கத்துக்கு ஆதரவு அளிக்க வேண்டாம் என்று இந்துக்களைக் கேட்டுக் கொண்டார். உலகப் போரில் ரஷ்யாவை ஆதரித்த இந்திய கம்யூனிஸ்டு கட்சி இப்போராட்டத்தை ஆதரிக்கவில்லை. நேஷனல் லிபரல் பெடரேஷன் தலைவர் டேஜ் பகதூர் சாப்ரு 'வெள்ளையனே வெளியேறு' தீர்மானத்தை, 'சரியாகப் பரிசீலிக்கப்படாத, சமயப்பொருத்தமற்ற முடிவு' என்று கூறினார். எனினும் பார்சிக்கள் ஆதரித்தனர். அகாலிகள், கிறித்துவர்கள், அரிஜன் தலைவர்கள் அரசாங்கத்தை விரோதித்துக் கொள்ள வேண்டாம் என்று இந்த இயக்கத்தை ஆதரிக்கவில்லை.

மதிப்பீடு

இந்திய விடுதலைப் போராட்டத்தின் உச்சக்கட்டமே வெள்ளையனே வெளியேறு இயக்கமாகும். அதுவே இந்திய விடுதலைக்காக மேற்கொள்ளப்பட்ட இறுதிப் போராட்டமாகும். முந்திய இயக்கங்களெல்லாம் குறிப்பிட்ட திட்டங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டவை. ஆனால் ஆகஸ்டு போராட்டம் வெகுஜன எழுச்சியாகும்; பிரிங்கக் கிளர்ச்சியாகும். அரசாங்கத்தை வன்முறையால் கவிழ்க்கும் முயற்சியாகும். இதில் படித்தோர், பாமரர், விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள், கைவினைஞர்கள், ஊழியம் செய்வோர், பெண்கள் ஆகிய சமுதாயத்தின் அனைத்துப் பகுதியினரும் கலந்து கொண்டனர். சில காங்கிரஸ் சோஷலிஸ்டு தலைவர்கள் தலைமறைவாக இருந்து கொண்டு இயக்கத்துக்குப் பயங்கரவாதப் பரிமாணத்தைக் கொடுத்தனர். 1857 'கிளர்ச்சிக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட மாபெரும் கொந்தளிப்பே 1942 ஆண்டுப் போராட்டமாகும். மக்களிடையே தன்னியல்பாக எழுந்த கிளர்ச்சி இது. கடந்த காலப் போராட்ட அனுபவ ஆர்ப்பாட்டக்காரர்களுக்குத் துணைநின்றது. புரட்சித் தத்துவம் எதுவும் பின்புலமாக இல்லாததால் இவ்வியக்கத்தைப் புரட்சி என அழைத்தல் பொருந்தாது. எனினும் இந்தியாவை விடுதலை செய்யத் தங்களது உயிரையும் அர்ப்பணிக்கத் தயார் என்பதை இந்தியர் நிரூபித்தனர். ஆங்கிலேயரை இந்தியா இனியும் பொறுத்துக் கொள்ளத் தயாராயில்லை என்பதைப் பறைசாற்றினர். இயக்கம் அடக்கப்பட்டாலும் இந்தியாவை அந்நிய ஆதிக்கத்திடமிருந்து விடுவிக்க வேண்டும் என்ற இதயத்துடிப்பு அடங்கவில்லை. என்றுமில்லாத அளவுக்கு இந்திய தேசியத்தின் உரமும் உறுதியும் ஆங்கிலேய ஆட்சியினருக்குத் தெளிவாக்கப்பட்டது. பிரிட்டிஷ் இந்திய ஆதிக்கம் ஆட்டங்காணத் துவங்கியது. வெள்ளையனே வெளியேறு இயக்கம் வெள்ளையன் இந்தியாவைவிட்டு வெளியேற்றுவதற்கான எச்சரிக்கை அறிவிப்பாக அமைந்தது.

28. சுபாஷ் சந்திரபோசும் இந்திய தேசிய இராணுவமும், 1942-1945

இந்தியாவின் இறுதி விடுதலைப் போராட்டம் துவங்கிவிட்டது... தேசப் பிதாவே! இந்திய சுதந்திரத்துக்கான புனிதப்போர் வெற்றிபெற உங்கள் ஆசிகளையும் வாழ்த்துக்களையும் வழங்குங்கள்.
- நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ்

சுபாஷ் போசின் எழுச்சி

பணித்துறப்பு

சுபாஷ் சந்திர போஸ் 1897 ஜனவரி 23ம் நாள் ஒரிசாவிலுள்ள கட்டாக்கில் பிறந்தார். இவரது தந்தை ஜானகிநாத் போஸ் பிரபல வழக்குரைஞராக இருந்தவர். சுபாஷ் போசுக்கு சுவாமி விவேகானந்தர் ஆன்மீக முன்னுதாரணமாகவும், தேசபந்து சித்தரஞ்ஜன் தாஸ் அரசியல் முன்மாதிரியாகவும் திகழ்ந்தனர். போஸ் இந்திய அரசுப் பணிக்கான (ஐ.சி.எஸ்.) தேர்வில் வெற்றி பெற்று அரசாங்க வேலையில் சேர்ந்தார் (1920). அரசாங்க வேலையிலிருந்துகொண்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு ஒத்துழைப்பதைவிட அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்து இந்திய விடுதலைக்காகப் போராடுவதே சாலச்சிறந்தது என்று முடிவுசெய்த போஸ் அரசாங்க வேலையைத் துறந்தார்.

போராட்டத்தில் பங்கேற்பு

அரசாங்கத்திலிருந்து விலகிய சுபாஷ் சந்திரபோஸ் காந்தியின் தலைமையின்கீழ் துவக்கப்பட்ட ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்தார் (1921). வங்காளத்தில் சி.ஆர்.தாஸ் முன்னின்று தீவிரமாக நடத்திய அர்த்தால், அந்நியத்துணி மற்றும் அரசாங்கக் கல்வி நிலையப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஆர்வத்துடன் பங்கேற்றார் போஸ். தாஸ் நடத்தி வந்த பிரச்சார இதழின் பதிப்பாசிரியராகவும், சுதேசி தேசியக் கல்லூரிக்கு முதல்வராகவும் பணியாற்றினார் போஸ். கல்கத்தாவுக்கு வருகைதந்த வேல்ஸ் இளவரசருக்கு எதிராக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியதற்காக போஸ் கைதுசெய்யப்பட்டு, ஆறு மாத கால சிறை தண்டனை பெற்றார். காந்தி ஒத்துழையாமை இயக்கத்தைத் தன்னிச்சையாக விலக்கிக் கொண்டபோது (1922 பிப்ரவரி 12) போஸ் அச்செயலைக் கடுமையாகக் கண்டித்தார். அப்போது அவருக்கு வயது 25!

Scanned by CamScanner

சுயராஜ்யக் கட்சியில் போஸ்

சிறையிலிருந்து விடுதலையான போஸ், தி.ஆர்.தாகூம், மோதிலால் நேருவும் துவக்கிய சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்து செயல்பட்டார். வடக்கு வங்காளத்தில் வெள்ள நிவாரணப் பணி செய்தார். சுயராஜ்யக் கட்சியின் நாளேடான பார்வர்டு (Forward) பத்திரிகையின் பதிப்பாசிரியராக இருந்தார் போஸ். தி.ஆர்.தாஸ் கல்கத்தா மாநகராட்சி மன்றத் தலைவராகப் பொறுப்பேற்ற போது அவரது தலைமைச் செயலாட்சி அதிகாரியாகப்(C.E.O.) பணியாற்றினார் போஸ். போஸ் அகில இந்திய தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் பங்கேற்றார்.

தி.ஆர். தாசால் தீவிர அரசியலுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட சுபாஷ் போஸ் தனது புரட்சிக் கருத்துக்களைப் பகிரங்கமாகப் பேசி வந்தார். 1924 அக்டோபர் 24ல் தீவிரவாதிகளை அடக்குவதற்காக அரசாங்கம் பிறப்பித்த அவசரச் சட்டத்தின்கீழ் சுபாஷ் போஸ் கைது செய்யப்பட்டு பர்மாவிலுள்ள மாண்டலே சிறையில் அடைக்கப்பட்டார். அவர் சிறையிலிருந்தவாரே வங்காள சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்! சிறையிலிருந்து விடுதலையான போஸ் வங்காள காங்கிரஸ் தலைராகப் பொறுப்பேற்றார்; சைமன் கமிஷன் புறக்கணிப்பு போராட்டத்தை முன்னின்று நடத்தினார். இந்தியாவுக்கு முழுசுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என்ற காங்கிரஸ் தீர்மானத்தைத் தீவிரமாக ஆதரித்தார். ஆனால் இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்தைப் பரிந்துரைத்த 'நேரு அறிக்கை'யைக் கடுமையாகக் கண்டித்தார். 1928ல் சுபாஷ் போஸ் ஜவகர்லால் நேருவுடன் சேர்ந்து இந்திய சுதந்திர லீக்கை (Indian Independence League)த் தோற்றுவித்தார். தீவிர சோஷலிசக் கருத்துக்களால் பெரிதும் கவரப்பட்ட போசும், நேருவும் காங்கிரசை வெகுஜன இயக்கமாக மாற்ற வேண்டுமென்று முனைப்புடன் செயல்பட்டனர்.

காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சி

1929ம் ஆண்டு பகத்சிங்கின் தெருங்கிய நண்பரான யதீந்தரநாத் சிறையில் உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்தார். அவரது உடல் கல்கத்தாவுக்குக் கொண்டு வரப்பட்டு பிரமாண்ட பிரேதப் பேரணி நடத்தப்பட்டது. அப்பேரணியில் கலந்துகொண்டு பேசிய போஸ் ஆங்கிலேய ஆட்சியின்அடக்குமுறைக்கு எதிராக வீர உரையாற்றினார். அதற்காக அவருக்கு ஆறு மாத கால சிறைதண்டனை அளிக்கப்பட்டது. தீவிர நடவடிக்கைகளுக்காக போஸ் மீண்டும் சிறையிலடைக்கப்பட்டார் (1931). விடுதலையானவுடன் அவர் மதுராவில் நடைபெற்ற இளைஞர் மாநாட்டில் கலந்துகொண்டு பிரிட்டிஷாரின் கபடநாடகத்தைக் கண்டித்துப் பேசினார், சிறை சென்றார்.

1932ம் ஆண்டு சுபாஷ் போஸ் மருத்துவ சிகிச்சைக்காக வியன்னா சென்றார். அங்கு அவருக்கு விதல்பாய் பட்டேலுடன் தொடர்பு ஏற்பட்டது. இருவரும் சேர்ந்து காங்கிரசை ஒரு தீவிரவாத அமைப்பாக மாற்ற வேண்டும் என்ற அறிக்கை வெளியிட்டனர் (1933 மே). வெளிநாட்டு உதவியுடன் இந்திய விடுதலையை விரைவில் பெற வேண்டும் என்றும் வலியுறுத்தினர். ஐரோப்பாவிலிருந்து திரும்பிய சுபாஷ் போஸ் (1934) தீவிர முற்போக்கு மனப்பான்மையுடைய காங்கிரஸ்காரர்களுடன் சேர்ந்து 'காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சி'யைத் துவக்கினார்.

1934ம் ஆண்டு பம்பாயில் துவக்கப்பட்ட காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சியில் ஜெயப்பிரகாஷ் நாராயண், ஆச்சார்ய நரேந்திர தேவ், மினோ மாஷினி, நேரு, சுபாஷ் போஸ் போன்றோர் பிரதான பங்கேற்றனர். இக்கட்சியின் கொள்கைகள் நான்கு: 1. இந்திய விடுதலைப் போராட்டத்தை தேசிய உணர்வுமிக்க வெகுஜன இயக்கமாக தீவிரப்படுத்த வேண்டும் 2. சோஷலிஸ்டுகள் காங்கிரசுக்குள்ளிருந்தே செயல்பட வேண்டும் 3. தேசிய இயக்கம் சோஷலிசப் பாதையில் செல்ல வேண்டும் 4. பொருளாதாரத் தேவைகளை மையப்படுத்தி விவசாயிகளையும் தொழிலாளர்களையும் ஒன்றுதிரட்டி ஏற்படுத்தப்படும் அமைப்பு விடுதலைப் போராட்டத்தின் அடித்தளமாக இருக்க வேண்டும். இந்த நோக்கங்களை மனதில்கொண்டு காங்கிரஸ் சோஷலிஸ்டுகள் காங்கிரஸ் தலைமையில் மாற்றம் கொண்டுவர முனைந்தனர்.

பார்வர்டு பிளாக் கட்சி

காங்கிரஸ் தலைவர்

சுபாஷ் சந்திரபோஸ் காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சியின் குறிக்கோளை அடையும் முயற்சில் தீவிரமாக ஈடுபட்டார். அவர் 1935ம் ஆண்டுச்சட்டம் இந்தியாவின் மீது திணிக்கப்பட்டதையும் அச்சட்டத்தின்படி காங்கிரஸ் மாநில அரசாங்கங்களில் பதவி ஏற்பதையும் எதிர்த்தார். எனினும் போஸ் 1938ம் ஆண்டு காங்கிரஸ் தலைவராக ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். காங்கிரஸ் தலைவர் பொறுப்பேற்ற போஸ் தனது தீவிரவாதக் கொள்கைகளையும், கோரிக்கைகளையும், திட்டங்களையும் படிப்படியாகச் செயல்படுத்தத் துவங்கினார். இந்தியாவின் திட்டமிட்ட சோஷலிச வளர்ச்சிக்காக 'தேசிய திட்டக்குழு' ஒன்றை ஏற்படுத்தினார். போசின் இடதுசாரி கட்சி நோக்கும், போக்கும் காந்திக்கும் அவரது வலதுசாரி ஆதரவாளர்களுக்கும் ஏற்புடையதாயில்லை

பதவி விலகல்

காங்கிரஸ் வலதுசாரிகளின் எதிர்ப்பையும்மீறி சுபாஷ் சந்திரபோஸ் 1939ம் ஆண்டு நடைபெற்ற காங்கிரஸ் தலைவர் பதவிக்கு பட்டாபி சீத்தாராமையாவுக் கெதிராகப் போட்டியிட்டு 203 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். பட்டாபியின் தோல்வி தனது தோல்வியே என்று அறிவித்தார் காந்தி. 1939 மார்ச் மாதம் நடைபெற்ற திரிபுரா காங்கிரஸ் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய போஸ் பிரிட்டிஷ் அரசாங்கம் அடுத்த ஆறு மாதங்களுக்குள் இந்தியாவைவிட்டு வெளியேற வேண்டுமென்றும், இல்லையேல் காங்கிரஸ் வெகுஜன இயக்கத்தைத் துவங்க வேண்டுமென்றும் வலியுறுத்திப் பேசினார். மூத்த காங்கிரஸ் தலைவர்கள் போஸ் காங்கிரசின் கொள்கைக்கு எதிராகச் செயல்படுகிறார் என்று குற்றம் சாட்டினர். போஸ் காங்கிரஸ் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டார்.

பார்வர்டு பிளாக் கட்சி

சுபாஷ் போஸ் காங்கிரஸ் தலைவர் பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டாரேயன்றி காங்கிரசைவிட்டு விலகவில்லை. அவரும், அவரது ஆதரவாளர்களும் காங்கிரசுக்குள்ளேயே 'பார்வர்டு பிளாக்' (Forward Block)

Scanned by CamScanner

என்ற கட்சியைத் துவக்கினர் (1939மே). இந்த அமைப்பு காங்கிரசுக்குள் இருந்து செயல்படும் தீவிரவாத முன்னேற்றக் கட்சி என்று அறிவித்தார். விவசாயிகளும், தொழிலாளர்களும், இளைஞர்களும், தீவிரவாதிகளும் இவரது அமைப்பில் சேர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். இராணுவக் கட்டுப்பாட்டோடு செயல்பட்டு வெள்ளையரை இந்தியாவைவிட்டு வெளியேற்ற வேண்டுமென்று அறைகூவல் விடுத்தார். காந்தியின் இலட்சியவாதமும், நேருவின் உணர்ச்சிவாதமும் போசைக் கட்டுப்படுத்தவில்லை. காங்கிரஸ் போல்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தது!

கட்சியின் வளர்ச்சி

காங்கிரசைவிட்டு விலகிய சுபாஷ்போஸ் பார்வர்டு பிளாக் கட்சியை வளர்ப்பதில் கவனம் செலுத்தினார். "1925ல் சி.ஆர்.தாஸ் இறந்தபின் காங்கிரசின் தலைமைக்குப் பெரிய சவாலாக இருந்த அமைப்பு பார்வர்டு பிளாக்தான்" என்று குறிப்பிட்டுள்ளார் 'சுபாஷ் சந்திர போசும், இந்திய தேசிய இயக்கமும்' என்ற நூலின் ஆசிரியர் ஹரி ஹர தாஸ் (Hari Hara Das). பார்வர்டு பிளாக்கை புரட்சி ஆயுதமாகக்கொண்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கெதிரான போராட்டத்தைத் துவக்கினார் போஸ். இரண்டாம் உலகப்போர் ஆரம்பித்தவுடன் பிரிட்டிஷ் ஆட்சிக்கெதிராக போஸ் இந்தியா முழுவதும் சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டார். பிரிட்டனின் போர் முயற்சிக்கு உதவ வேண்டாமென மக்களைக்கேட்டுக் கொண்டார். பிரிட்டனின் விரோத நாடுகளின் துணைகொண்டு தீவிர தேசிய இயக்கத்தின்மூலம் இந்தியா விரைவில் விடுதலை பெற முடியும் என்று பேசி வந்தார் போஸ். அவருக்கு மக்கள் ஆதரவு அதிகரித்தது.

அரசால் அடக்குமுறை

1940 ஜனவரி 31ம் நாள் சுபாஷ் சந்திரபோஸ் அரசாங்கத்தின் தடை ஆணையையும் மீறி கல்கத்தா சிரத்தானந்தா பூங்காவில் பொதுக்கூட்டம் நடத்தினார். பின்னர் டாக்கா நகரில் பார்வர்டு பிளாக்கின் வங்காள மாகாண சிறப்பு மாநாட்டைக் கூட்டினார் (1940 மே 25). அம்மாநாட்டில் 1940 ஜூலை 3ம் நாளை சிராஜ்-தௌலா தினமாகக் கொண்டாடுவது என்றும் இருட்டறைச் சாவு (Black Hole Tragedy) நினைவாகக் கட்டப்பட்ட ஹோல்வெல் நினைவுச் சின்னத்தை (Hollwell Monument) இடிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. போஸ் கைது செய்யப்பட்டு டிசம்பர் 5ம் நாள் விடுதலை செய்யப்பட்டு அவரது வீட்டில் காவலில் வைக்கப்பட்டார். 1941 ஜனவரி 26ம் நாள் சுபாஷ் போஸ் மாறுவேடத்தில் வீட்டுக் காவலில் இருந்து வெளியேறி பெஷாவர், காபூல், மாஸ்கோ வழியாக ஜெர்மனியின் தலைநகர் பெர்லின் சென்றடைந்தார் (1941 மார்ச் 28).

ஜெர்மனியில் போஸ்

சுபாஷ் சந்திர போசுக்கு ஜெர்மனியில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இட்லரின் வலக்கரமாகத் திகழ்ந்த வெளியுறவுத் துறை அமைச்சர் ரிபோன்ட்ராப் (Ribbontrop) போசை சந்தித்துப் பேசினார். ஜெர்மனியில் "சுதந்திர இந்தியா மையம்" (Free India Centre) அமைத்துச் செயல்பட போஸ் அனுமதிக்கப்பட்டார்.

அதுமட்டுமல்ல, அவர் "அசாத் ஹிந்த் வானொலி" (Azad Hind Radio) மூலம் நாள்தோறும் தன் திட்டங்களைத் தொடர்ந்து இந்தியாவுக்கு ஒலிபரப்பினார்.

1941 மே 29ம் நாள் போஸ் ஜெர்மனியின் அதிபர் இட்லரை சந்தித்துப் பேசினார். அப்போது அவர் ஜெர்மனியில் இருந்துகொண்டு இந்திய இராணுவம் அமைத்து ஜெர்மன் இராணுவத்துடன் சேர்ந்து மத்திய ஆசியா வென்று வடமேற்கு எல்லையில் இருந்த பிரிட்டிஷ் படையுடன் போரிட வேண்டுமென்றும் அச்சநாடுகள் (Axis Powers) இந்திய சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். இட்லர் அவரது கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. இருப்பினும் மேற்கு ஆப்பிரிக்காவில் ஜெர்மனி இராணுவத்தால் பிடிக்கப்பட்ட இந்தியப் போர்க் கைதிகளை (Prisoners of War)க் கொண்டு இரண்டு இராணுவப் பிரிவுகளை அமைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டார் போஸ் (1942 ஜனவரி).

சுபாஷ் போஸ் இந்தியப் போர்க்கைதிகளைக் கொண்ட "அசாத் ஹிந்த் பௌஸ்" (Azad Hind Fauz) அல்லது இந்தியப் படையணிப் பிரிவை (Indian Legion) ஏற்படுத்தினார். 12 போர்க் கைதிகளைக் கொண்டு சிறிதாகத் துவக்கப்பட்ட அப்படைப் பிரிவு விரைவில் மூன்று போர்ப் படைப் பிரிவுகளாக (Battalions) விரிவடைந்தது. போஸ் முறையான இராணுவப் பயிற்சி பெறாவிடினும் அசாத் ஹிந்த் பௌஸின் தளபதியாகப் பொறுப்பேற்றார். போஸின் முயற்சியை ஜெர்மானியர் பாராட்டி வரவேற்றனர். எனினும் போஸ் எதிர்பார்த்த அளவுக்கு இட்லரின் ஆதரவு கிடைக்கவில்லை.

இந்திய தேசிய இராணுவம்

ஜப்பானில் போஸ்

இரண்டாம் உலகப்போரில் ஜப்பான் தூரக்கிழக்கில் நேசநாட்டுப் படைகளைத் தோற்கடித்து உலகை வியப்பில் ஆழ்த்தியது. சிங்கப்பூர் ஜப்பானியர் வசம் வந்தது (1942 பிப்ரவரி 15). சிங்கப்பூர் வீழ்ந்தது, பிரிட்டிஷ் பேரரசு வீழ்ந்தது போலாகும் என்றும் இந்திய வரலாறில் புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்தது என்றும் வர்ணித்தார் போஸ். அவர் ஜெர்மனியிலிருந்து வெளியேறி ஜப்பான் செல்லத் தீர்மானித்தார். ஜப்பானின் துணைகொண்டு இந்தியாவை பிரிட்டனின் பிடியிலிருந்து எளிதில் விடுவித்து விடலாம் என்று நம்பினார் போஸ். அப்போது ஜப்பானில் வாழ்ந்துவந்த இந்தியப் புரட்சித் தீவிரவாதி ராஷ் பிஹாரி போஸ் (Rash Behari Bose)ஸின் அழைப்பின்பேரில் டோக்கியோ சென்றார் சுபாஷ் (1943 ஜனவரி 13).

ராஷ்பிகாரி போஸ்

ராஷ்பிஹாரி போஸ் இந்திய தேசிய இராணுவம் (Indian National Army) தோன்றுவதற்குக் காரணகர்த்தாவாக இருந்தவர். இவர் டோக்கியோவில் வாழ்ந்த இந்தியர்களை ஒன்றுகூட்டி 'இந்திய சுதந்திர கழக'த்தை (Indian Independence League)த் துவக்கினார். இவரது தலைமையில் நடைபெற்ற இந்திய சுதந்திர கழகத்தின் ஹாங்காங் மாநாட்டில் மோகன் சிங்கைத் தளபதியாகக் கொண்டு இந்திய தேசிய இராணுவத்தை உருவாக்குவதென்று தீர்மானிக்கப்பட்டது. காப்டன் மோகன் சிங் பிரிட்டிஷ் இராணுவத்தில்

Scanned by CamScanner

அதிகாரியாக இருந்து, ஜப்பானியரிடம் சரணடைந்தவர். இவர் ஹாங்காங் மாநாட்டுத் தீர்மானத்தின்படி ஜப்பான் வசமிருந்த 40,000 இந்தியப் போர்க் கைதிகளைக்கொண்டு இந்திய தேசிய இராணுவத்தை சிங்கப்பூர், பதேர் பூங்காவில் (Farrer Park) அமைத்தார் (1942 ஆகஸ்ட்).

போஸ் நேத்தாஜியானார்

1943 துவக்கத்தில் டோக்கியோ வந்த சுபாஷ் சந்திரபோஸ், ராஷ் பிகாரிபோஸ், மோகன் சிங் ஆகியோரை சந்தித்து நிலையை நன்கறிந்து கொண்டார். பின்னர் சிங்கப்பூர் சென்ற போகுக்கு (1943 ஜூலை 2) ஆரவாரமான வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்குதான் ராஷ்பிகாரி போஸ் சுபாஷ் சந்திரபோசுக்கு இந்திய சுதந்திர கழகத்தின் தலைமைப் பொறுப்பைக் கொடுத்து அவருக்கு ஆலோசகராக இருந்தார்! பின்னர் போஸ் இந்திய தேசிய இராணுவத்தின் தளபதி பொறுப்பேற்றார் (25 ஆகஸ்ட்) அன்றிலிருந்து சுபாஷ் சந்திர போஸ் நேத்தாஜி அல்லது 'தன்னிகரற்ற தளபதி' என்று அழைக்கப்பட்டார். நேத்தாஜி சிங்கப்பூரில் இருந்தபடியே 'டெல்லி நோக்கிப் போவோம்' (Delhi Chalo) என்று போர் முழக்கமிட்டார். ஒற்றுமை, நம்பிக்கை, தியாகம் ஆகிய குறிகோள்களை முன்வைத்து இந்திய சுதந்திர கழகத்தை மறுசீரமைத்தார். அதே போன்று இராணுவ ஒழுங்குடனும் கட்டுப்பாட்டுடனும் இந்திய தேசிய இராணுவத்தை மூன்றாகப் பிரித்து அவற்றுக்கு காந்தி படையணிப் பகுதி, அசாத் படையணிப் பகுதி, நேரு படையணிப்பகுதி என்று பெயரிட்டார். சிங்கப்பூர் வாழ் இந்திய தேசியவாதிகள் பணஉதவியும், பொருளுதவியும் செய்து இந்திய விடுதலை வீரர்களை வெகுவாக ஊக்கவித்தனர்.

'சுதந்திர இந்தியாவின் தற்காலிக அரசாங்கம்'

1943 அக்டோபர் 21ம் நாள் சிங்கப்பூர் கேத்தே மண்டபத்தில் (Cathy Hall) சுதந்திர இந்தியாவின் தற்காலிக அரசாங்கம் அமைக்கப்பட்டது. நேத்தாஜி இந்த அரசாங்கத்தின் பிரதமராகப் பொறுப்பேற்றார். அமைச்சரவையில் ஏ.சி.சாட்டர்ஜி நிதித்துறைக்கும், எஸ்.ஏ.ஐயர் விளம்பரத் துறைக்கும், லட்சுமி சுவாமிநாதன் பெண்கள் அமைப்புத் துறைக்கும் பொறுப்பேற்றனர். ரவீந்திரநாத் தாகூர் எழுதிய தேசியகீதம் இசைக்கப்பட்டது. தற்காலிக அரசாங்கத்தின் செயல் திட்டங்களாவன: 1. பிரிட்டிஷாரை இந்திய மண்ணிலிருந்து வெளியேற்றுவது; 2. மக்களின் ஒத்துழைப்போடு இந்தியாவில் அசாத் ஹிந்த் தேசிய அரசாங்கத்தை அமைப்பது; 3. அதுவரை தற்காலிக அரசாங்கம் இந்திய விவகாரங்களைக் கவனித்துக் கொள்வது. இந்த இடைக்கால அரசாங்கத்தை ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி, தாய்லாந்து, பர்மா, தேசிய சீனா, மஞ்சூரியா, குரோஷியா, பிலிப்பைன்ஸ் ஆகிய ஒன்பது நாடுகள் ஆதரித்தன. ஜப்பான் பிரதமர் டோஜோ (Tojo) வின் ஆதரவும் நேத்தாஜிக்கு இருந்தது.

பிரிட்டனுக்கு எதிராகப் போர்

1943 அக்டோபர் 23ம் நாள் நேத்தாஜியின் கீழ் செயல்பட்ட தற்காலிக அரசாங்கம் பிரிட்டனுக்கெதிராகப் போர்ப் பிரகடனம் செய்தது. அதன்பின் நேத்தாஜி சிங்கப்பூரிலிருந்து டோக்கியோ சென்றார் (அக்டோபர் 28). ஜப்பான்

பிரதமர் டோஜோவும், நேத்தாஜியும், கிழக்காசிய மாநாட்டில் கலந்து கொண்டனர் (நவம்பர் 6). அந்த மாநாட்டில்தான் ஜப்பான் பிரதமர் அந்தமான் நிக்கோபார் தீவுகளை நேத்தாஜியிடம் ஒப்படைத்தார். அதன்பின் அந்தமானுக்குச் சென்ற நேத்தாஜி அந்தமானுக்கு ஷாகித் (Shahid) என்ற பெயரையும், நிக்கோபாருக்கு சுவராஜ் (Swaraj) என்ற பெயரையும் சூட்டினார். இடைக்கால அரசாங்கத்தின் தலைமை மையத்தைச் சிங்கப்பூரிலிருந்து ரங்கூனுக்கு மாற்றினார்.

இந்தியப் படையெடுப்பு

1944 பிப்ரவரி 4ம்நாள் நேத்தாஜி தனது வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தியப்படையெடுப்பை ரங்கூனிலிருந்து துவங்கினார். இந்திய தேசிய இராணுவம் இந்தியா-பர்மா எல்லையில் பிரிட்டிஷ் படையின் எதிர்ப்பை முறியடித்து, இந்தியாவுக்குள் நுழைந்தது (மார்ச் 21). "இந்திய வீரர்கள் தாங்கள் விடுவிக்க நினைத்த தாய்நாட்டுப் புனித மண்ணில் விழுந்து புறண்டு முத்தமிட்டனர்" என்று குறிப்பிட்டுள்ளார் 'நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ்' என்ற நூலின் ஆசிரியர் ஹயாஷிதா (Hayashida). இந்திய மண்ணில் தேசியக் கொடி ஏற்றப்பட்டது. தேசியகீதம் இசைக்கப்பட்டது.

வீரமரணம்

கடுமையான போருக்குப்பின் ஜப்பான்-இந்திய தேசிய இராணுவ கூட்டுப் படை இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த கொஹீமாவைக் கைப்பற்றியது (1944 ஏப்ரல் 6). மே மாதத்துக்குள் இம்பாலும் (Imphal) கூட்டுப்படை வசம் வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பருவமழை குறுக்கிட்டதால் இராணுவ தளவாடங்களும் உணவுப்பொருள்களும் வந்து சேர்வது தடைப்பட்டது. மேலும் அப்பகுதியில் பிரிட்டிஷ் கூடுதல் படையினர் வந்ததால் கூட்டுப்படை பின்வாங்க நேர்ந்தது. பிரிட்டிஷ் படை ரங்கூனைக் கைப்பற்றி (1945, மே) 23,000 இந்திய தேசிய இராணுவத்தினரைப் போர்க் கைதிகளாகப் பிடித்தது. பின்னர் அவர்கள் விசாரணைக்காக இந்தியாவுக்கு அனுப்பப்பட்டனர். 1945 ஆகஸ்டு 15ம் நாள் ஜப்பான் சரணடைந்தது. நேத்தாஜியின் நோக்கம் நிறைவேறவில்லை. மலைகுலைந்தாலும் நிலைகுலையாத நேத்தாஜி ரஷ்யாவின் துணையோடு பிரிட்டனுக்கு எதிராகப் போரிடத் திட்டமிட்டார். ஆனால் ரஷ்யா செல்லும் வழியில் அம்மாவீரர் தேசிய ஜோவின் தலைநகர் தைபை (Taipei)யில் நடந்த விமான விபத்தில் அகால மரணமடைந்தார் (1945 ஆகஸ்டு 18) நேத்தாஜி இறந்தும் உயிர் வாழ்ந்தார்.

மதிப்பீடு

சுபாஷ் சந்திரபோஸ் இளமைக் காலத்தில் ராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், அரவிந்தர் ஆகியோரின் ஆன்மிக வாழ்வாலும் வாக்காலும் கவரப்பட்டார். அவர் அரசியலில் திலகரின் தீவிரவாதத்தால் ஈர்க்கப்பட்டார். காந்தியின் வழிக்கு மாற்றுவழி காண விரும்பிய சி.ஆர்.தாஸ், சுபாஷ் போஸைத் தீவிரவாத அரசியலுக்கு அறிமுகப்படுத்தி அவரது பன்முகத் திறமைகள் மலர வாய்ப்பளித்தார். தன் திறமைகளை வளர்த்துக் கொண்ட போஸ், இளைஞர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோரின் ஆற்றல்களை ஒருங்கிணைத்து காங்கிரஸ் பேரியக்கத்தை வெகுஜன இயக்கமாக மாற்றி தீவிரவாதப் பாதையில் கொண்டுசென்று இந்திய விடுதலையைத் துரிதப்படுத்த விரும்பினார். காங்கிரஸ்

Scanned by CamScanner

தலைமையைக் கைப்பற்றி. நேரு, ஜெயப்பிரகாஷ் நாராயண், ஆச்சார்ய நரேந்திர தேவ், மினூ மாஸினி போன்றோரின் துணையோடு இந்திய விடுதலைப் போராட்டத்தை விரைவுபடுத்தி சமயச் சார்பற்ற சோஷலிச இந்தியாவைக் காண விரும்பினார் போல். ஆனால் காங்கிரசுக்குள்ளிருந்து கொண்டு அவரது நோக்கத்தை நிறைவேற்ற முடியவில்லை.

சுபாஷ் போஸ் காங்கிரசைவிட்டு வெளிவந்து பார்வர்டு பிளாக் அமைத்து இடதுசாரி சக்திகளை ஒன்று சேர்த்து புரட்சிகர தீவிரவாத இயக்கத்தின்மூலம் பிரிட்டிஷ் போரசை எதிர்க்கத் துணிந்தார். இந்தியா வன்முறைப் பாதையில் சென்றுவிடுமோ என்று அஞ்சிய காந்தி 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தைத் துவக்கினார் என்று கூறுவோரும் உண்டு. போஸின் எழுச்சியையும் எதிர்ப்பையும் கண்டு கலங்கிய பிரிட்டிஷ் அரசு அவரை அடக்குமுறையால் ஒடுக்க முற்பட்டது. பிரிட்டனின் எதிரி இந்தியாவின் நண்பன் என்ற அடிப்படையில் சுபாஷ் போஸ் நாசிச ஜெர்மனி, பாசிச இத்தாலி, ஏகாதிபத்திய ஜப்பான் ஆகிய நாடுகளின் ஆதரவைக் கோரத் தயங்கவில்லை. சுதந்திர இந்தியா மையம், அசாத் ஹிந் வானொலி, அசாத்ஹிந் பௌஜ், இந்திய தேசிய இராணுவம், சுதந்திர இந்திய தற்காலிக அரசாங்கம் ஆகிய அமைப்புகள்மூலம் போஸ் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி பெறாவிடினும் இந்திய இளைஞர்களிடையே தீவிரவாத எழுச்சியையும் இந்திய இராணுவ வீரர்களிடையே கிளர்ச்சி மனப்பான்மையையும் தூண்டிவிட்டன. நேத்தாஜி சுபாஷ் சந்திரபோசுக்கு மிகுந்த வேகம் இருந்த அளவுக்கு விவேகமில்லையாயினும் அவரது அப்பழுக்கற்ற தேசபக்தியும், இந்திய விடுதலை வேட்கையும், தியாகமும் புனிதமானது; போற்றுதற்குரியது.

இந்திய தேசிய இராணுவப் போராட்டத்தின் முக்கியத்துவம்

நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸின் தலைமையில் செயல்பட்ட இந்திய தேசிய இராணுவம் இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. இந்திய தேசிய இராணுவ வீரர்களின் உயிர்த்தியாகம் வீண்போகவில்லை. இந்த இராணுவப் போராட்டம் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்துக்கு இணையாக நடத்தப்பட்டதாகும். இவ்விரண்டும் இரட்டைக்குழல் துப்பாக்கியாகப் பயன்பட்டது. அதுமட்டுமல்ல, பிரிட்டிஷ் இராணுவத்திலிருந்த இந்திய அதிகாரிகள் மற்றும் வீரர்களைக்கொண்டு இனியும் இந்தியாவை அடக்கியாள இயலாது என்ற உண்மையை பிரிட்டிஷ் அரசாங்கம் உணர்ந்து கொண்டது.

ஒன்பது நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட இந்திய சுதந்திர தற்காலிக அரசாங்கமும், இந்திய தேசிய இராணுவத்தின் வீரசாகசச் செயல்களும் இந்தியவுக்கு சர்வதேச அந்தஸ்தைக் கொடுத்ததோடு, இந்திய விடுதலையின் அத்யாவசியத்தை உலக நாடுகள் உணரவும் செய்தன. இந்து, முஸ்லீம், சீக்கிய அதிகாரிகளையும், வீரர்களையும் கொண்ட இந்திய தேசிய இராணுவம் சமயச்சார்பற்ற, இனவேறுபாடற்ற இந்திய விடுதலைப் போராட்ட முனையாகச் செயல்பட்டது அனைவரது பாராட்டையும் பெற்றது. இந்திய தேசிய இராணுவ அதிகாரிகள்மீது தொடரப்பட்ட வழக்கு இந்தியரிடையே நாட்டுப் பற்றை கொழுந்துவிட்டு எரியச் செய்தது. 1946 பிப்ரவரி 18ம் நாள் பம்பாய் ராயல்

இந்தியக் கடற்படையினர் கிளர்ந்தெழ இந்த இராணுவப் போராட்டம் காரணமாக இருந்தது. கருங்கூற்றில், இந்திய தேசிய இராணுவப் போராட்டம் இந்திய விடுதலையை விரைவு படுத்தியது என்பதில் ஐயமில்லை.

இந்திய தேசிய இராணுவ அதிகாரிகள் மீது வழக்கு, 1945-46

இரண்டாம் உலகப்போர் முடிந்தபின் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் இந்திய தேசிய இராணுவ அதிகாரிகள் மீது வழக்கு தொடர்ந்தது. பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்த்துப் போரிட்டனர் என்று அவர்கள்மீது குற்றம் சாட்டப்பட்டது. இவ்வழக்கு ஷா நவாஸ் (முஸ்லீம்), லட்சுமி ஸேகல் (இந்து) மற்றும் தில்லான் (சிக்கியர்) ஆகிய மூவரை மையமாகக் கொண்டிருந்தது. 1945 நவம்பர் 5ம் நாள் டெல்லி செங்கோட்டை லால்கிலா (Lal Quila)வில் துவங்கிய இந்த வழக்கு நாட்டு மக்களிடையே பெரும் பரபரப்பையும் பதட்டத்தையும் ஏற்படுத்தியது.

குற்றம் சாட்டப்பட்ட அதிகாரிகளின் சார்பாக வழக்கை எதிர்கொள்ள காங்கிரஸ் தீர்மானித்தது (1945 செப்டம்பர் 23). 'வழக்கு நீதி' திரட்டப்பட்டது. இவ்வழக்கை நடத்த பிரபல வழக்கறிஞர்களான புலாபாய் தேசாய், டெஜ் பகதூர் சாப்ரு, கைலாஷ் நாத் கட்ஜு அடங்கிய கமிட்டி அமைக்கப்பட்டது. நேரு 22 ஆண்டுகளுக்குப்பிறகு வழக்குரைஞர் ரோபை அணிந்து இவ்வழக்கு விசாரணையில் வாதிட்டார். நீதிமன்றம் அதிகாரிகள்மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதாகக் கூறி அவர்களை வாழ்நாள் முழுவதும் நாடு கடத்தித் தீர்ப்பளித்தது (டிசம்பர் 31). பின்னர் 1946 ஜனவரி 3ம்நாள் பிரிட்டிஷ் தலைமை தளபதி தண்டனையைக் குறைத்து உத்தரவிட்டார். பின்னர் பிரிட்டிஷ் அரசாங்கம் வழக்கைத் தள்ளுபடி செய்தது.

வழக்கின் முக்கியத்துவம்

இந்திய தேசிய இராணுவ அதிகாரிகள்மீதான செங்கோட்டை வழக்கு இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் முக்கிய மைல் கல் ஆகும். வழக்கு விசாரணை விபரங்கள் பத்திரிகைகளில் விரிவாக வெளியிடப்பட்டதால் மக்கள் அவ்வீரர்களின் துணிவு, தீரம், தியாகம்பற்றி அறிந்துகொள்ள முடிந்தது. வழக்கு இயக்கமாக உருவெடுத்தது. டெல்லி, பம்பாய், கல்கத்தா, சென்னை போன்ற நகரங்களும், பல பெரிய ஊர்களும் இவ்வியக்கத்தின் 'நாம்பு மையங்'களாகச் செயல்பட்டன. அனைத்துத் தரப்பு மக்களும் அரசியல் கட்சிகளும் இந்திய இராணுவ வீரர்களுக்குச் சாதகமாகவும், ஆதரவாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது. அரசாங்க அலுவலர்களிடையேயும் முப்படை இராணுவ வீரர்களிடையேயும் அனுதாப அலை வீசியது எனலாம். விடுதலையான மூன்று அதிகாரிகளும் நாட்டுப்பற்றின் சின்னங்களாகவும், நாட்டு விடுதலையின் முன்னோடிகளாகவும் போற்றப்பட்டனர். அவர்கள் எங்கு சென்றாலும் மக்களால் உற்சாகத்துடன் வரவேற்கப்பட்டனர். அதுமட்டுமல்ல, இந்த வழக்கு, ராயல் இந்திய கடற்படையினரும், ராயல் இந்திய விமானப் படையினரும் கிளர்ந்தெழக் காரணமாக இருந்தது. அரசின் போக்கைக் கண்டித்து கல்கத்தாவில் பெரிய கலவரம் மூண்டது. 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்துக்கு இணையாக மேற்கொள்ளப்பட்ட நேத்தாஜியின் இராணுவப் போர் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியரிடம் அதிகாரத்தை ஒப்படைப்பதை விரைவு படுத்தியது.

Scanned by CamScanner

29. அமைச்சரவை தூதுக்குழு, 1946

1946ல் பிரிட்டிஷ் கொள்கை, முந்தைய பிரகடனங்களைப் போலன்றி, ஐக்கிய இந்தியாவை உருவாக்க வேண்டுமென்ற விருப்பத்தைப் பிரதிபலிப்பதாக உள்ளது.

- பிபன்சந்திரா.

வெள்ளையனே வெளியேறு இயக்கம் அடக்கப்பட்டது. காந்தி உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் சிறைக்குள்ளிருந்தனர். தேசிய அரசியல் மேடை காலியாகக் கிடந்தது! அரசாங்கத்தைக் கவிழ்க்க காங்கிரஸ் சதிசெய்ததென்றும், வன்முறை நிகழ்ச்சிகளுக்கெல்லாம் காந்தியே காரணமென்று அரசாங்கத்தின் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டது. நாட்டை ஆட்சி செய்யக் காங்கிரசுக்கு அருகதையில்லை என்ற பொருளில் இந்திய விவகாரச் செயலர் ஏமரி பேசத்தலைப்பட்டார்! மக்கள் அச்சுறுத்தி ஒடுக்கப்பட்டனர். இவற்றின் விளைவாக இந்தியாவில் அரசியல் சூனியம் நிலவியதைப் போன்றதொரு தோற்றம் ஏற்பட்டது. காந்தி மேற்கொண்ட உண்ணாவிரதமும், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட பல நிகழ்ச்சிகளும் பிரிட்டனின் அமைச்சரவை தூதுக்குழு (Cabinet Mission) இந்தியாவுக்கு வந்து இந்திய அரசியல் அமைப்பு பற்றிய பேச்சுவார்த்தை நடத்தி ஒரு தீர்வு காண வழிவகுத்தன.

தூதுக்குழு வருவதற்கு முந்தைய நிகழ்ச்சிகள்

காந்திஜி உண்ணாவிரதம்

வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின்போது இந்தியாவில் வெடித்துச் சிதறிய வன்முறைக்கெல்லாம் காந்தியே காரணம் என்று குற்றம் சாட்டியது பிரிட்டிஷ் அரசு. நாட்டில் ஏற்பட்ட நாசவேலைகள் அனைத்துக்கும் காங்கிரசே பொறுப்பாகும் என்றும் அரசு பிரச்சாரம் செய்து வந்தது. அந்தக் குற்றச்சாட்டுகளையெல்லாம் மறுத்துச் சிறையிலிருந்தவாறே காந்தி வைசிராய்க்கும், பம்பாய் கவர்னருக்கும் பதிலளித்து வந்தார். காங்கிரஸ் ஆட்சிக்குழு உறுப்பினர்களுடன் பேசவும் காந்திக்கு அனுமதி மறுக்கப்பட்டது. எனவே தன்மீது ஆதாரமின்றி சுமத்தப்பட்ட அபாண்டமான குற்றச்சாட்டை எதிர்த்தும் நீதிகேட்டும் 74 வயதான காந்தி 1943 பிப்ரவரி 10ஆம் தேதி தனது இரண்டாவது 21 நாள் உண்ணாவிரதத்தைத் துவக்கினார். உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து நாட்டின் பல இடங்களிலும் கண்டன ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் கடையடைப்பும் நடைபெற்றன. வைசிராய் ஆட்சிக்குழுவிலிருந்த மூன்று இந்திய உறுப்பினர்களும் பதவி விலகினர். டில்லியில் கூடிய அனைந்திந்தியத் தலைவர்கள் மாநாடு காந்தியை உடனடியாக விடுதலை

செய்யக்கோரி ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியது (பிப். 19 20). ஆனால் அல்லேண்டுகோளை வைசிராய் நிராகரித்தார். காந்தியின் உடல்நிலை நாளுக்கு நாள் மோசமாயிற்று. மருத்துவரும் நம்பிக்கை இழந்தார். காந்திஜி மரணமடைந்தால் ஏற்படக்கூடிய நிலைமையைச் சமாளிப்பதற்காக மாநில அரசுகளையும் போலீஸ் இராணுவப்படைகளையும் தயார் நிலையில் வைத்திருந்தது அரசாங்கம். உடலை எரிப்பதற்குச் சந்தனக் கட்டைகளும் கொண்டு வைக்கப்பட்டன! ஆனால் காந்தி உண்ணாவிரதத்தை வெற்றிகரமாக முடித்தார். நாடே திம்மிடிப் பெருமூச்சுவிட்டது.

ராஜாஜியின் திட்டம்

ஜின்னா நடைமுறைச் சாத்தியமற்ற போக்கைப் பின்பற்றுவதாக ராஜகோபாலாச்சாரி குறைகூறி வந்தார். இந்து-முஸ்லீம் உடன்பாட்டுக்கான அடிப்படையை விவரித்து விட்டுப்பின்னர் தன்னைக் குறைகூறட்டும் என்று 1942 பிப்ரவரி மாத மத்தியில் ஜின்னா ராஜாஜியைக் கேட்டுக் கொண்டார். அதைப்பற்றி ஆலோசித்து வந்த ராஜாஜி ஆகாகான் அரண்மனையில் உண்ணாவிரதமிருந்த காந்தியை சந்தித்து காங்கிரஸ் முஸ்லீம் லீக் உடன்பாட்டுக்கான அடிப்படையை பற்றி நான்கு நாட்கள் விவாதித்தார். ராஜாஜி தனது திட்டத்தைக் காந்திக்கு எழுதிக் காட்டியதாகவும், அதைக் காந்தி ஏற்றுக்கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார் ராஜ்மோகன் காந்தி. இதுவே ராஜாஜி திட்டம் அல்லது சி.ஆர். சூத்திரம் (C.R. Formula) என்றழைக்கப்படுகிறது.

ராஜாஜி திட்டத்தின்படி,

1. போர்க் காலத்தில் காங்கிரஸ் இடைக்கால தேசிய அரசை அமைப்பதற்கு முஸ்லீம் லீக் ஒத்துழைக்க வேண்டும்;

2. போர் முடிந்தவுடன் இந்தியாவின் வடமேற்கு, வடகிழக்கில் முஸ்லீம்கள் பெரும்பான்மையினராக உள்ள பகுதிகளைப் பிரிக்கவும், அவற்றின் எல்லைகளை வரையறுக்கவும் ஒரு கமிஷன் நியமிக்கப்படும்;

3. அக்கமிஷனின் பரிந்துரைப்படி எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட பகுதிகளில் மக்களின் சம்மதத்தோடு தேசப்பிரிவினைக் கோரிக்கை பற்றி முடிவெடுக்கப்படும்;

4. பெரும்பான்மையோர் இந்தியாவிலிருந்து பிரிந்து வாழ விரும்பினால் அவ்விருப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டுத் தனிஅரசுகள் ஏற்படுத்தப்படும்;

5. அவ்வாறு பிரிக்கப்படும் பகுதிகள் எல்லையோர மாவட்டங்களில் வாழும் மக்கள் அவர்கள் விரும்பும் அரசாங்கத்தோடு சேர்ந்து கொள்ளும் உரிமையை அளிக்க வேண்டும்;

6. வாக்கெடுப்புக்கு முன் சம்பந்தப்பட்ட கட்சிகள் தங்களுடைய நிலையை எடுத்துச் சொல்ல உரிமை உண்டு;

7. பிரிவினை ஏற்பட்டால் பாதுகாப்பு, போக்குவரத்து, வர்த்தகம் போன்றவை பற்றி அரசுகள் உடன்பாடு செய்து கொள்ளலாம்;

8. பிரிக்கப்படும் பகுதிகளிடையே உண்டாகக்கூடிய மக்கள் பரிமாற்றம் சம்பந்தப்பட்ட அரசுகளின் சம்மதத்தின்பேரில் நிகழ்வதாக இருக்க வேண்டும்;

Scanned by CamScanner

9. பிரிட்டன் இந்தியருக்கு அதிகார மாற்றம் செய்தால் மட்டுமே மேற்கூறிய திட்டங்கள் நடைமுறைக்கு வரும்;

10. இந்த நிபந்தனைகளுக்குட்பட்டு முஸ்லீம் லீக் இந்தியாவின் பூரண விடுதலைக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளலாம்.

காந்தியின் சம்மதத்தைப் பெற்றபின் ராஜாஜி தனது திட்டத்தைப் பதினான்கு மாதங்கள் இரகசியமாக வைத்திருந்து 1944 ஏப்ரல் மாதம் ஜின்னாவைச் சந்தித்து அவரிடம் அதுபற்றி விவாதித்தார். கேட்ட உடனேயே ஜின்னா ராஜாஜி திட்டத்தை நிராகரித்து விட்டார். பாகிஸ்தான் பிரிவினைக் கொள்கையை காந்தி ஒத்துக்கொண்டதைப்பற்றி ஜின்னா மகிழ்ச்சி தெரிவித்தார். இத்திட்டம் நாட்டைத் துண்டாடி, முஸ்லீம் லீக்கிடம் சரணாகதி அடையக்கூடியது எனக்கூறி இந்து மகாசபையினர் இத்திட்டத்தைக் கடுமையாக எதிர்த்தனர். காங்கிரஸ் மிதவாதிகளும் சீக்கியர்களும் இத்திட்டத்தைக் குறை கூறினர். ஆங்கிலேய அதிகாரிகளும் இதைச் சந்தேகக் கண்கொண்டே பார்த்தனர். பி.ஆர். திட்டம் ஜின்னாவின் செல்வாக்கை அதிகரிக்க மட்டுமே உதவும் என்றார் கே.எம். முன்ஷி. அப்படித்தான்ஆயிற்று.

மதிப்பீடு

இராஜாஜி திட்டத்தில் சில உட்புற முரண்பாடுகள் காணப்பட்டன. அவையாவன: 1. பாகிஸ்தான் பகுதிகளை வரையறுக்கும்போது மாநிலங்களுக்குபதில் மாவட்டங்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்து; 2. முஸ்லீம்கள் அறுதிப் பெரும்பான்மையுள்ள மாவட்டங்களை மட்டுமே முடிவு செய்ய வேண்டும்; 3. பாகிஸ்தான் இந்தியாவைவிட்டுப் பிரிய வேண்டுமா என்பதை இந்துக்களும், முஸ்லீம்களும் சேர்ந்து மக்கள் ஒப்புதல் வாக்கெடுப்பு (Plebiscite) மூலம் தீர்மானிக்கப்படும்; 4. வங்காளம், அஸ்ஸாம், பஞ்சாபில் இந்துக்கள் பெரும்பான்மையாக உள்ள மாவட்டங்கள் இந்தியா-பாகிஸ்தான் எல்லை நிர்ணயிப்பில் இடம் பெறாது; 5. இரு நாடுகளின் பாதுகாப்பு, வர்த்தகம், செய்தித் தொடர்புகளை கூட்டாட்சி அரசாங்கமே கவனித்துக் கொள்ளும். இராஜாஜியின் திட்டம் பாகிஸ்தான் பற்றிக் குறிப்பிட்டதேயன்றி, பாகிஸ்தான் இந்தியாவிலிருந்து பிரிந்துசென்று இறையாண்மை பெற்ற சுதந்திரத் தனிநாடாவதற்கு உத்திரவாதமளிக்கவில்லை. அப்படியே பாகிஸ்தான் சுதந்திரநாடாக உருவாக்கப்பட்டாலும் அது ஜின்னா குறிப்பிட்டபடி 'ஊனமுற்ற, முடமான, செல்லறித்த (Maimed, mutilated and moth-eaten) பகுதியாகவே இருக்கும்! ஜின்னா, இராஜாஜி திட்டத்தை ஏற்கமாட்டார் என்று தெரிந்தே காந்தி ஒப்புதல் அளித்தார் என்று குறிப்பிட்டுள்ளார் பி.என்.பாண்டே!

காந்தி-ஜின்னா சந்திப்பு

லின்லித்கோவை அடுத்து இந்திய வைசிராயாக வந்த வேவல் பிரபு (Sri Achibald Wavel, 1944-47) 1944 மே 6ஆம் தேதி காந்தியை விடுதலை செய்தார். விடுதலையான பின்னர் காந்தி ஜின்னாவுக்கு கடிதமெழுதி அவரைச் சந்திப்பதில் தனக்கிருந்த விருப்பத்தை வெளிப்படுத்தினார் (ஜூலை 17). ஜின்னா தனது வீட்டில் சந்திக்கும்படி காந்திக்குப் பதில் எழுதினார் (ஜூலை 24). ஜின்னா காந்தியை முதன்முறையாக 'மகாத்மா' என்று குறிப்பிட்டார். காந்தி, ஜின்னாவை 'காய்தே அலாம் (Quaid-ed-Azam) அல்லது 'மென்மைமிக்க தலைவர்' என்றழைத்தார். 'முகமதுவிடம் மலைபுறப்பட்டுச் சென்ற' கதையைப்போல காந்தி சென்று மலபார் மலைமாளிகையில் ஜின்னாவைச் சந்தித்தார். செப்டம்பர் 9 லிருந்து 27 ஆம் தேதி வரை பி.ஆர். திட்டத்தின் அடிப்படையில் இருவரும் விவாதித்தனர். ஜின்னாவின் இரு நாட்டுக்கொள்கை (Two Nation Theory) யின் அடிப்படையில் முஸ்லீம்களுக்குத் தனி நாடு கோருவதைக் காந்தி ஏற்றுக் கொள்ளவில்லை. 1940ல் லாகூரில் கூடிய முஸ்லீம் லீக் பாகிஸ்தான் பற்றி நிறைவேற்றிய தீர்மானத்தை அப்படியே காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று விடாப்பிடியாக இருந்தார் ஜின்னா. இருமாறுபட்ட துருவங்களும் ஒத்துப்போக வாய்ப்பில்லாமையால் காந்தி ஜின்னா சந்திப்பு தோல்வியுற்றது.

இத்தோல்வியால் முஸ்லீம்கள் தங்களது வாழ்நாள் வாய்ப்பை இழந்துவிட்டதாகக் கருதினார் ராஜகோபாலாச்சாரி. அச்சந்திப்பு சமய சந்தர்ப்பப் பொருத்தமற்றது எனக் குறிப்பிட்டார் வி.பி.மேனன். காந்தி ஜின்னா சந்திப்பை இமாலயத் தவறு என்று வர்ணித்தார் ஹீமாயூன்கபீர். காந்தியின் திட்டம் ராஜாஜியின் திட்டத்தைவிட மோசமானது என்றார் ஜியாவுல் கர்தார் சிங். விரும்பியவர்களுக்கு வாரி வழங்க மாநிலங்கள் ஒன்றும் ராஜகோபாலாச்சாரி அல்லது காந்தியின் சொந்தச் சொத்தல்ல எனக் கோபம் கொண்டார் சவார்கர். ராஜாஜி-காந்தி திட்டத்தைப் பாகிஸ்தான் திட்டத்துக்கெதிரான மோசடி எனச் சாடினார் லியாகத் அலிகான். காந்தி-ஜின்னா சந்திப்பால் பயனடைந்தது ஜின்னாவும் முஸ்லீம் லீக்கும்தான். முஸ்லீம்களிடையே ஜின்னா மிகுந்த செல்வாக்கைப் பெற்றார். காந்தியைக் குறை கூறுகிறவர்கள் அவருக்கு இந்திய விடுதலையின் மீதிருந்த உண்மையான வேட்கையையும், காங்கிரசுக்கும் முஸ்லீம் லீக்குக்குமிடையே ஒரு உடன்பாட்டைக்கொண்டு வந்துவிட வேண்டும் என்பதில் இருந்த நெஞ்சார்ந்த விருப்பத்தையும் காணத்தவறி விடுகின்றனர்.

தேசாய்-லியாகத் உடன்பாடு

காந்தி-ஜின்னா சந்திப்புத் தோல்வியை அடுத்து தேச அரசியல் தேக்க நிலைக்குத் தீர்வு காண மற்றொரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. புலாபாய் தேசாய் காந்தியின் நெருங்கிய நண்பர். மத்திய சட்ட மன்றத்தில் காங்கிரஸ் கட்சித் தலைவர் லியாகத் அலிகான்; முஸ்லீம் லீக்கின் சட்டமன்றக் கட்சித்தலைவர். அவ்விருவரும் சேர்ந்து 1945 ஜனவரிமாதம் ஒரு உடன்பாட்டுக்கு வந்தனர். அதுவே தேசாய்-லியாகத் உடன்பாடு (Desai - Liaquat Pact) என்றழைக்கப்படுகிறது. அவ்வுடன்பாட்டின்படி,

1. காங்கிரசும் முஸ்லீம் லீக்கும் இணைந்து மத்தியில் இடைக்கால அரசை (Interim Government) அமைக்கலாம்;

2. அந்த இடைக்கால அரசு சீக்கியர்கள், தாழ்த்தப்பட்டோர் போன்ற பிற சிறுபான்மை சமூகத்தினரின் பிரதிநிதிளையும் சேர்த்துக் கொள்ளலாம்;

3. மத்தியச் செயற்குழுவிற்குக் காங்கிரசும் லீக்கும் சமவிகிதத்தில் உறுப்பினர்களை நியமிக்கலாம்;

Scanned by CamScanner

4. இடைக்கால அரசு வைசிராயின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டுச் சுதந்திரமாக இயங்க வேண்டும்;

5. கட்சிகளின் சம்மதத்தோடு மாநிலங்களில் தேவையான மாற்றங்களைச் செய்து கொள்ளலாம்;

6. இடைக்கால அரசு ஏற்பட்டவுடன் காவல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்துவிடலாம். மத்தியில் கூட்டு அரசாங்கம் (Coalition Government) அமைப்பதும், காங்கிரஸ் லீக் சமவிதிக (Parity)த் தேர்வுரிமையும் இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்களாகும்.

தேசாய்-லியாகத் திட்டம் காங்கிரஸ் லீக்கின் சம்மதத்தைப் பெறுவதற்கு முன்பாக வெளியிடப்பட்டதால் பெரிய பரபரப்பையும் வேறுபாட்டையும் ஏற்படுத்திவிட்டது. காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர்கள் சிறையிலிருக்கையில், காங்கிரஸ்-லீக் உடன்பாடு ஏற்படாத நிலையில் இத்திட்டம் வெளியிடப்பட்டது காங்கிரஸ் தலைவர்களுக்குப் பிடிக்கவில்லை. தங்களைத் தேசாய் காட்டிக் கொடுத்துவிட்டாக அவர்கள் கருதினர். இதில் தன் பெயர் சம்பந்தப்படுவதைக் காந்தி விரும்பவில்லை. காங்கிரஸ் லீக் சமநிலைக் கோட்பாடு ஒத்துக் கொள்ளப்பட்டதில் ஜின்னாவுக்கு மகிழ்ச்சி. சூழ்நிலைகளின் கட்டாயத்தால் லியாகத் அலி கான் தனக்கும் இவ்வுடன்பாட்டுக்கும் எவ்வித சம்மந்தமுமில்லை என்ற பகிரங்கமாக மறுக்க வேண்டியதாயிற்று! புலாபாய் தேசாயின் அரசியல் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்ததைத் தவிர இந்த உடன்பாடு வேறெதையும் சாதிக்கவில்லை என்கிறார் கே.எம். முன்ஷி. எனினும் தேசாய்-லியாகத் உடன்பாட்டில் காணப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில்தான் வேவல் திட்டம் தயாரிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

வேவல் திட்டம்

தேசாய்-லியாகத் உடன்பாடும் தோல்வியுற்றதை அடுத்து வைசிராய் வேவல் பிரபு இலண்டன் சென்று பத்து வார காலம் தங்கி பிரிட்டிஷ் பிரதமருடனும், இந்திய விவகாரச் செயலருடனும் இந்திய அரசியல் நிலைப்பற்றிப் பேச்சு வார்த்தை நடத்தினார். அதன்பின் இந்தியா திரும்பிய அவர் 1945 ஜூனில் 14 ஆம் தேதி நிகழ்த்திய வானொலி உரையில் பிரிட்டிஷ் அரசின் சார்பில் ஒரு அறிவிப்பை வெளியிட்டார். அவ்வறிவிப்பே வேவல் திட்டம் (Wavel Plan) என்றழைக்கப்படுகிறது. அத்திட்டத்தின்படி,

1. ஒருங்கமைந்த அரசியல் கருத்துப்படி புதிய ஆட்சிக் குழுவை (Executive Council) அமைக்க வைசிராய் இந்தியத் தலைவர்களுக்கு அழைப்பு விடுப்பார்;

2. அமையவிருக்கும் ஆட்சிக் குழுவில் இந்தியாவின் முக்கிய வகுப்பினர் இடம் பெறுவர்;

3. அதில் சாதி இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் சம எண்ணிக்கையில் இடங்கள் ஒதுக்கப்படும்;

4. அக்குழுவில் வைசிராய், தலைமை தளபதி ஆகிய இருவரைத் தவிர பிற அனைத்து உறுப்பினர்களும் இந்தியப் பிரதிநிதிகளேயாவர்;

5. வெளி விவகாரத் துறை இந்திய உறுப்பினர்கள் வசம் ஒப்படைக்கப்படும்;

6. இந்த ஆட்சிக்குழுவே இடைக்கால அரசாங்கமாக செயல்படும்;

7. வைசிராய் தனது வெட்டதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டால் இந்திய நலனைக் கருதியே அதைப் பிரயோகிப்பார்;

8. அனைத்து மாநிலங்களிலும் கலப்பு அமைச்சரவைகளே பதவி ஏற்கும்;

9. இந்தியர்கள் தனியே தங்களுக்கென ஒரு அரசியல் அமைப்புச் சட்ட மன்றத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

வேவல் திட்டத்தில் காணப்பட்ட புதிய ஆட்சி இந்திய சுயாட்சிப் பாதையில் எடுத்து வைக்கப்பட்ட மற்றுமொரு முக்கிய அடியாகும் என்றார் வைசிராய். வைசிராயின் அறிவிப்பை அடுத்து சிறையிலிருந்த காங்கிரஸ் காரியக் கமிட்டி உறுப்பினர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். இந்திய அரசியல் அமைப்பு வரலாற்றில் வேவல் திட்டம் ஒரு முக்கியக் கட்டம் என்பதில் ஐயமில்லை. ஆனால் காங்கிரஸ்-முஸ்லீம் லீக்குக்கிடையேயான அரசியல் சமவிதத்துக்கு (Political Parity) ஒரு புதிய கோணத்தைக் கொடுத்து அதை இனச் சமவிதிதமாக (Communal Parity) மாற்றிவிட்டது வேவல் திட்டம். லீக்கின் நோக்கம் மிகவும் சாதுர்யமாக அரசாங்கத்தின் கொள்கை பற்றிய அறிவிப்பில் அங்கீகரிக்கப்பட்டுவிட்டது என்கிறார் மைக்கேல் பிரீச்சர் (Michael Breecher). இது முஸ்லீம் லீக்குக்குக் கிடைத்த மற்றொரு மறைமுகமான வெற்றியாகும்.

சிம்லா மாநாடு

வைசிராய் வேவல் பிரபு தனது வானொலி அறிவிப்பில் குறிப்பிட்டிருந்தபடி இந்திய அரசியல் தலைவர்களைக் கொண்ட ஒரு மாநாட்டை 1945 ஜூன் 25ஆம் தேதி சிம்லாவில் உள்ள வைசிராய் மாளிகையில் கூட்டினார். அம்மாநாட்டிற்குக் காந்தி உள்ளிட்ட 21 முக்கிய அரசியல் தலைவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். வேவல் திட்டத்தை விவாதிப்பதே சிம்லா மாநாட்டின் நோக்கமாகும். சிறுபான்மையினர் பிரதிநிதித்துவம், போர் முயற்சிக்கு ஆதரவு, போர் முடியும் வரை புதிய ஆட்சிக் குழு நீடித்தல் போன்ற திட்டங்கள் பற்றி கருத்தொற்றுமை ஏற்பட்டது. ஆனால் புதிய ஆட்சிக்குழுவை அமைப்பதுபற்றி அடிப்படையான கருத்து வேறுபாடுகள் தோன்றின. வேவல் திட்டத்தில் காணப்பட்ட 'சாதி இந்துக்கள்' என்ற சொற்றொடரைக் காந்தி பலமாக எதிர்த்தார். அதேபோன்று காங்கிரசுக்கும் முஸ்லீம் லீக்குக்கும் இடையே உள்ள சமவிதிதம் (Parity) இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையேயான சமவிதிதம் ஆகாது என்று வாதிட்டார். அதை ஜின்னா ஏற்றுக் கொள்ளவில்லை. ஜின்னா சில நிபந்தனைகளை விதித்தார்:

1. புதிய ஆட்சிக்குழுவுக்கு காங்கிரஸ் இந்து உறுப்பினர்களை மட்டுமே நியமிக்க வேண்டும்;

2. முஸ்லீம் உறுப்பினர்களை முஸ்லீம் லீக் மட்டுமே நியமிக்கும்;

3. லீக் நியமிக்கும் ஐந்து முஸ்லீம் உறுப்பினர்களையும் அப்படியே ஏற்றுக் கொள்ளப்படும் என்ற உத்திரவாதத்தை முன்கூட்டியே கொடுக்க வேண்டும்.

Scanned by CamScanner

ஜின்னாவின் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டால் காங்கிரஸ் ஆட்சிக் குழுவுக்கு எந்த முஸ்லீமையும் அதன் சார்பாக நியமிக்க முடியாது! மேலும் காங்கிரஸ் ஒரு இந்துக்கள் அமைப்பே என்பதை ஒத்துக்கொண்டதாகும்!

காங்கிரசும் லீக்கும் ஒத்துப்போகாததைக் கண்ட வேவல் தன் வழியே செல்லத் தீர்மானித்தார். ஒவ்வொரு கட்சியும் ஒரு பெயர்ப் பட்டியலைத் தர வேண்டுமென்றும், அதிலிருந்து தனது ஆட்சிக்குழுவுக்கு உறுப்பினர்களை தேர்ந்தெடுத்துக் கொள்வதாகவும் கேட்டுக் கொண்டார். ஜின்னாவைத் தவிர பிற அனைவரும் அந்த யோசனையை ஏற்றுக் கொண்டனர். அதன் படியே பட்டியல்கள் கொடுக்கப்பட்டன. தனது நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டாலொழிய தான் சிம்லா மாநாட்டைப் புறக்கணிக்கப் போவதாகக் கூறினார் ஜின்னா. வேவல் தனது பட்டியலைக் கூறாமல் திடீரென சிம்லா மாநாட்டைக் கலைத்துவிட்டார் (ஜூலை 14). சிம்லா மாநாடும் தோல்வியுற்றது. வேவலின் உறுதியின்மை, ஜின்னாவோடு ஒத்துப்போக வேண்டுமென்ற பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நோக்கு, ஆங்கிலேய அதிகார வர்க்கத்தின் சுயநலப்போக்கு, வேவலுக்கு பிற உயர் அதிகாரிகளின் ஆதரவின்மை, ஜின்னாவின் பிடிவாதம் ஆகியவை சிம்லா மாநாடு தோல்வியுற்றதற்கான காரணங்களாகும். சிம்லா மாநாட்டின் தோல்விக்கான பொறுப்பை வைசிராய் வேவலே ஏற்றுக் கொண்டார். வைசிராய் மீதும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மீதும் காங்கிரசுக்கிருந்த நம்பிக்கை மேலும் தளர்ந்தது.

மதிப்பீடு

சிம்லா மாநாடு தோல்வி அடையும் என்று தெரிந்தே வேவல்பிரபு அரசியல் தலைவர்களைக் கூட்டி ஆலோசித்தார்! காங்கிரசும், முஸ்லீம் லீக்கும் தங்களது நிலைகளைத் தெளிவுபடுத்த இம்மாநாடு உதவியது எனலாம். சாதி இந்துக்கள்-முஸ்லீம்கள் சமவிகிதக் கொள்கையைக் காங்கிரஸ் வேண்டா வெறுப்பாக ஏற்றுக் கொண்டாலும், வைசிராய் ஆட்சிக்குழுவில் தேசிய காங்கிரஸ் முஸ்லீம்களைப் பிரதிநிதிகளாக நியமிக்கும் உரிமையை விட்டுக்கொடுத்து மறுத்துவிட்டது. அதேபோன்று முஸ்லீம் பிரதிநிதிகள் அனைவரையும் முஸ்லீம் லீக் மட்டுமே நியமிக்க வேண்டும் என்பதில் ஜின்னா பிடிவாதமாக இருந்தார். சாதி இந்துக்கள்-முஸ்லீம்கள் சமவிகிதக் கொள்கையைக் காங்கிரஸ் ஏற்றுக்கொண்டது தவிற்கக்கூடிய தவறாகும்.

மத்திய அரசின் அமைப்பு பற்றிய தெளிவு பிரிட்டிஷ் அரசுக்கு இல்லை என்பது வைசிராய் வேவல் பிரபு திட்டத்திலும், சிம்லா மாநாட்டிலும் தெளிவாயிற்று. அதேபோன்று முஸ்லீம் லீக்கின் நியமன உறுப்பினர்கள் மற்றும் சமவிகிதக் கொள்கை பற்றிக் காங்கிரஸ் தலைவர்களிடையே ஒருமித்த கருத்து உருவாகவில்லை என்பதும் வெளிப்படையாகத் தெரிந்தது. அசாத், பந்த், ராஜாஜி ஆகியோர் சமவிகிதக் கொள்கையை எதிர்த்ததால் ஜின்னாவின் அச்சமும் சந்தேகமும் அதிகரித்ததேயன்றி குறையவில்லை. எனவே, அவர் வேவல் திட்டத்தை 'காவுச் சாசனம்', 'சூழ்ச்சி', 'முஸ்லீம் லீக்கின் அடிப்படையையே தகர்த்துவிடும்' என்று விமர்சித்தார். கருங்கக்கூறின், சிம்லா மாநாடு விளைவுகளற்ற வீண்முயற்சியாகும்.

சிம்லா மாநாடு துவங்குவதற்கு முன்பே தோல்வி அடைந்துவிட்டது! அதற்குக் காரணம் அரசாங்கம் அமைப்பதில் சாதி இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையேயான 'சமவிகிதக் கொள்கை' பற்றி காங்கிரஸ் செயற்குழு விடுத்த பின்வரும் நிபந்தனைகளேயாகும்: 1. இக்கொள்கை தற்காலிக ஒப்புதல்தான்; நிரந்தரத் தீர்வன்று. 2. இது மத்திய அரசாங்கம் அமைக்கத்தான் பொருந்தும்; மாநிலங்களுக்குப் பொருந்தாது. 3. மத்திய அரசாங்கத்தில் முஸ்லீம் நியமன உறுப்பினர்களைத் தீர்மானிக்கும் உரிமை முஸ்லீம் லீக்குக்கு மட்டுமே இல்லை; அந்த உரிமை காங்கிரசுக்கும் உண்டு. இந்த நிபந்தனைகள் ஜின்னாவின் சந்தேகத்தையும், அவநம்பிக்கையையும், அச்சத்தையும் அதிகரிக்கவே செய்தன. மேலும் உத்தேச தற்காலிக அரசாங்கத்தில் லீக்கின் பலம் காங்கிரசுக்கு இணையாக இருக்காது என்பது தெளிவாகத் தெரிந்தது. அசாத், பந்த், ராஜாஜி போன்ற தலைவர்கள் காங்கிரஸ் லீக்குக்குத் தேவைக்கதிகமாக விட்டுக் கொடுத்துவிட்டது என்று கருதினர். காங்கிரஸ் லீக்குக்கு இணையாகக் கருதப்படுவதைப் பல தலைவர்கள் நேரு உட்பட- உள்ளூர விரும்பவில்லை. இது காங்கிரஸின் ராஜதந்திர தோல்வியாகும். எனவே சிம்லா மாநாடு தோல்வி அடைந்ததில் வியப்பில்லை.

கப்பல்படைக் கிளர்ச்சி, 1946

கல்கத்தா கலவரம்

இந்திய தேசிய இராணுவ அதிகாரிகள் விசாரணையும் அதற்கு எதிரான ஆர்ப்பாட்டமும் மோதலில் முடிந்தது. 1945 நவம்பர் 21ம் நாள் கல்கத்தாவில் கல்லூரி மாணவர்கள் டல்ஹௌசி சதுக்கத்தில் கூடி ஆர்ப்பாட்டம் செய்தனர். கூட்டத்தைக் கலைக்க நடந்த துப்பாக்கிச் சூட்டில் இருவர் கொல்லப்பட்டனர். 52 பேர் காயமுற்றனர். அதேபோன்று இந்திய தேசிய இராணுவ அதிகாரி ரஷீத் அலிக்கு அளிக்கப்பட்ட 7 ஆண்டு கால சிறை தண்டனையை எதிர்த்து முஸ்லீம் லீக் மாணவர்கள் ஊர்வலம் நடத்தினர். அதில் காங்கிரஸ், கம்யூனிஸ்டு கட்சி மாணவர் அமைப்புகள் கலந்து கொண்டன. அவர்கள் தடியடிக்குள்ளாயினர், பலர் கைது செய்யப்பட்டனர் (1946 பிப்ரவரி11)

கப்பல்படைக் கிளர்ச்சி

இந்திய தேசிய இராணுவ அதிகாரிகள் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டதன் தாக்கம் பம்பாய் ராயல் கப்பற்படையில் எதிரொலித்தது. 1946 பிப்ரவரி 18ம் நாள் பம்பாயில் எச்.எம்.ஐ.எஸ். தல்வார் (H.M.I.S Talwar) என்ற கப்பலில் பணியாற்றிய 1100 பணியாளர்கள் (Naval Ratings) திடீர் வேலைநிறுத்தம் செய்தனர். பி. கி.தத் என்ற பணியாளர் 'வெள்ளையனே வெளியேறு' என்று எழுதப்பட்ட கொடியை தல்வார் கப்பலில் ஏற்றியதற்காகக் கைது செய்யப்பட்டார். அடுத்தநாள் காலில் மற்றும் கோட்டைக் குடியிறுப்புகளில் இருந்த பணியாளர்களும் இந்த வேலைநிறுத்தத்தில் கலந்து கொண்டனர். பின்னர் அவர்கள் காங்கிரஸ் கொடியேந்தி பம்பாய் வீதிகளில் ஆங்கிலேயர் மற்றும் காவல் படையினருக்கு எதிராகக் கோஷமிட்டுக்கொண்டு ஊர்வலமாகச் சென்றனர்.

Scanned by CamScanner

இந்த ஊர்வலத்தில் பொதுமக்கள் இலட்சக்கணக்கில் கலந்து கொண்டனர். ரயில்கள் நிறுத்தப்பட்டன; போலீஸ் மற்றும் இராணுவக் கார்கள் மீது கற்கள் வீசப்பட்டன; பாதைகளில் தடைகள் எழுப்பப்பட்டன; காவல் நிலையங்கள், தபால் அலுவலகங்கள், வங்கிகள், தானியக் கிடங்குகள் கடைகள் தாக்கப்பட்டன. இந்த கலவரம் கராச்சி, சென்னை, விசாகப்பட்டினம், கல்கத்தா, டெல்லி, கொச்சின், ஜாம்நகர், அந்தமான், பஹ்ரேன், ஏமன் போன்ற பகுதிகளுக்கும் பரவியது. இதனால் 78 கப்பல்கள், 20 கடற்கரை நிறுவனங்கள் பாதிக்கப்பட்டன. கப்பல் படைக் கலவரத்தில் 20,000 பணியாளர்கள் பங்கேற்றனர்.

வரலாற்றுச் சிறப்பு

கல்கத்தா ஆர்ப்பாட்டமும், பம்பாய் கப்பல் பணியாளர் கலவரமும் இராணுவத்தால் அடக்கப்பட்டன. எனினும் இந்த இரண்டு நிகழ்வுகளும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை மணியாக ஒலித்தது. இக்கலவரத்தில் கப்பல் பணியாளர்களோடு இலட்சக்கணக்கான பொதுமக்களும் பங்கேற்று அதிகாரிகளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. இக்கலவரம் இராணுவத்தில் கலகத்தை ஏற்படுத்தியது. மக்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக வன்முறைக் கிளர்ச்சியில் இறங்கத் தயாராக உள்ளனர் என்பதை இந்நிகழ்வுகள் நிரூபித்தன. காந்தி இந்த வன்முறைக் கலவரத்தைக் கண்டித்தார். பட்டேல் கப்பல் பணியாளர்கள் வேலைநிறுத்தத்தை விலக்கிக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

இந்திய தேசிய இராணுவ அதிகாரிகள் வழக்கு, கல்கத்தா ஆர்ப்பாட்டம், பம்பாய் கப்பல் பணியாளர் கலவரம் என்று அடுத்தடுத்து நடைபெற்ற நிகழ்வுகள் வரலாற்று முக்கியத்தும் வாய்ந்தவை. இந்நிகழ்ச்சிகள் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தின் இயல்பான தொடர்ச்சியேயாகும். இவை பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குச் சவாலாகவும், எச்சரிக்கையாகவும், இந்திய விடுதலையை விரைவுபடுத்த வேண்டியதன் இன்றியமையாமையை உணர்த்துவதாகவும் இருந்தன. இந்த நிகழ்வுகள் பிரிட்டிஷ் அரசாங்கம் அமைச்சரவைத் தூதுக்குழு (Cabinet Mission)வை இந்தியாவுக்கு அனுப்பும் முடிவை துரிதப்படுத்தியது என்றால் மிகையாகாது. 'இந்தியா விடுதலைப் புரட்சியின் விளிம்பில் நிற்பதாகத் தோன்றியது' என்று குறிப்பிடுகிறார் பிபன் சந்திரா.

பொதுத் தேர்தல், 1945

1945 ஜூலை 10ம் நாள் இங்கிலாந்தில் தொழிற்கட்சி பதவிக்கு வந்தது. சர்ச்சிலுக்கு பதில் அட்லி பிரதமரானார். ஏமெரி (Amery)க்கு பதில் பெத்திக் லாரன்ஸ்(Pethick Lawrance) இந்திய விவகாரச் செயலாளராகப் பொறுப்பேற்றார். அட்லியும் லாரன்சும் இந்தியா விரைவில் விடுதலை பெற வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டினர். இந்தியத் தலைவர்களைக் கலந்தாலோசித்து விரைவில் இந்தியாவுக்கு முழுசுதந்திரம் வழங்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று பிரிட்டிஷ் அரசர் நாடாளுமன்றத்தில் அறிவித்தார். இங்கிலாந்தில் தொழிற் கட்சி ஆட்சிக்கு வந்தது இந்திய விடுதலைப் போராட்டத்தில் முக்கிய திருப்பு முனையாகும்.

தொழிற் கட்சி அரசாங்கத்தின் நோக்கத்துக்கேற்ப, 1945 ஆகஸ்டு மாதம்

வைசிராய் வேவல் பிரபு மத்திய மாநில அரசாங்கங்களுக்கான பொதுத் தேர்தலை நடத்துவதென முடிவு செய்தார். அவர் லண்டன் சென்று ஆகஸ்டு 25 தொழிற் கட்சித்தலைவர்களுடன் விவாதித்துவிட்டு இந்தியா திரும்பியபோது, இரண்டாம் உலகப்போர் துவங்கியதால் தள்ளிப்போடப்பட்ட பொதுத்தேர்தல் நடைபெறும் என்று அறிவித்தார் (செப்டம்பர் 16).

வைசிராய் வேவல் அறிவித்தபடி 1945 இறுதியில் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டது. 1937க்குப் பின் நடைபெற்ற இத்தேர்தல் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த தேர்தல் 1935 அரசியல் சட்டப்படி முஸ்லீம் இடங்களுக்காக ஒதுக்கப்பட்ட முஸ்லீம் தொகுதிகளிலும், பிற இடங்களுக்கான பொதுத் தொகுதிகளிலும் தேர்தல் நடத்தப்பட்டது.

தேர்தல் பிரச்சாரத்தின்போது காங்கிரஸ் 'வெள்ளையனே வெளியேறு' தீர்மானத்தை மையப்படுத்தியது. மாநிலங்கள் இந்தியாவின் பிரிக்க முடியாத பகுதிகளாக இருக்கும்; ஒவ்வொரு மாநிலத்திலும் முழுவதும் பொறுப்பான அரசாங்கம் அமைக்கப்படும்; சுதந்திர இந்தியக் கூட்டாட்சியில் மன்னர் மாநில அரசர்கள் அரசியலமைப்புத் தலைவர்களாக (Constitutional Heads)இருப்பர் என்று பிரச்சாரம் செய்யப்பட்டது. சூறாவளி சுற்றுப்பயணம் செய்த நேரு மூன்று முக்கிய விஷயங்களில் சிறப்புக் கவனம் செலுத்தினார்: 1. ஏழை எளியோரின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கான தொழில்மயப் பொருளாதாரத் திட்டம்; 2. அனைத்துத் தொகுதிகளிலும் காங்கிரஸ் முஸ்லீம் வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்வது; 3. காங்கிரசின் மதச்சார்பின்மையை நிலைநாட்டுவது. இதன் காரணமாக இந்து மகாசபையுடன் தேர்தல் உடன்பாடு வைத்துக்கொள்ள வேண்டும் என்ற ராஜேந்திர பிரசாத்தின்யோசனையை நிராகரித்தார் நேரு.

தேர்தல் முடிவுகள் காங்கிரசும், முஸ்லீம்லீக்கும் எதிர்பார்த்தபடி இல்லை. காங்கிரஸ் பொதுத்தொகுதிகளில் பெரும்பான்மையான இடங்களைக் கைப்பற்றியது. மத்திய சட்டமன்றத்துக்கான 57 பொது இடங்களையும் காங்கிரசே பெற்றது; ஆனால் ஒரு முஸ்லீம் இடத்தைக்கூட அதனால் பெற முடியவில்லை! 30 முஸ்லீம் இடங்களிலும் முஸ்லீம் லீக்கே வெற்றி வாகை சூடியது. இது இந்திய அளவில் லீக்கின் அந்தஸ்தை உயர்த்தியது. ஆனால் 11 மாநிலங்களுக்கான தேர்தலில் முஸ்லீம் லீக் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றி பெறவில்லை. முஸ்லீம்லீக் இந்த மாநிலங்களில் பெரும்பான்மையான இடங்களைப் பெற்ற போதிலும், அனைத்து முஸ்லீம்களுக்கான இடங்களை அதனால் பெற முடியவில்லை. அவைகளில் பெரும்பான்மை பலம் பெற்றால்தான் ஜின்னாவின் பாகிஸ்தான் கனவு நனவாகும்!

இத்தேர்தலின் விளைவாக காங்கிரஸ் 7 மாநிலங்களில் ஆட்சி அமைத்தது. வடகிழக்கு எல்லைப் பிராந்தியத்தில் காங்கிரஸ்காரரான டாக்டர் கான் சாகிபின் தலைமையில் 'கிசப்புச் சட்டையினர்' அரசாங்கம் அமைத்தனர். பஞ்சாபில் சிரோன்மணி அகாலி தளம் மற்றும் சீக்கியரின் ஆதரவோடு கூட்டணி அரசாங்கம் அமைந்தது. முஸ்லீம் லீக்கால் சிந்துவிலும், வங்காளத்திலும் மட்டுமே அதிகாரத்தைக் கைப்பற்ற முடிந்தது! இந்த தேர்தலில் வகுப்புவாதப் பிரச்சாரம் எடுபடவில்லை. காங்கிரசின் சமயச்சார்பின்மைக் கொள்கையை மக்கள் அமோகமாக ஆதரித்தனர். இந்து மகாசபை வேரோடு களையப்பட்டு,

Scanned by CamScanner

அடியோடு அழிந்தது என்று குறிப்பிட்டுள்ளார் பி.எஸ்.பாண்டே. தேர்தல் மூலம் பாகிஸ்தானைப் பெற முடியாது என்ற கசப்பான உண்மையை உணர்ந்து கொண்டார்ஜின்னா. மேலும், காங்கிரசும் முஸ்லீம் லீக்கும் இந்தியாவில் இரண்டு பிரதான கட்சிகள் என்பதை 1945 பொதுத்தேர்தல் தெளிவு படுத்தியது.

அமைச்சரவைத் தூதுக்குழு

பின்னணி

1945 ஆகஸ்டு 15 ஆம் தேதி ஜப்பான் சரணடைந்ததோடு இரண்டாவது உலகப்போர் முடிவுக்கு வந்தது. பின்னர் பிரிட்டனில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தொழிற்கட்சி (Labour Party) வெற்றி பெற்று கிளெமெண்ட் அட்லி (Clament Attlee) பிரதமரானார். புதிய அரசாங்கம் 1946 துவக்கத்தில் இந்தியாவில் மத்திய மாநிலச் சட்ட மன்றங்களுக்கான பொதுத் தேர்தல்கள் நடத்தப்படும் என அறிவித்தது. இதற்கிடையே 1945 நவம்பர் மாதம் டில்லி செங்கோட்டையில் நடந்த நேதாஜியின் இந்திய தேசிய இராணுவத் தளபதிகளைப் பற்றிய வழக்கு (I.N.A. Trial) இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கெதிரான சூழ்நிலையை உருவாக்கிற்று. விசாரிக்கப்பட்டோர் விடுதலை செய்யப்பட்டது மக்களை எழுச்சி கொள்ளச் செய்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் காங்கிரசின் கரங்களைப் பலப்படுத்துமாறு மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். 1945-46ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் இந்துக்கள் காங்கிரசையும், முஸ்லீம்கள் லீக்கையும் ஆதரித்ததால் இந்து முஸ்லீம் வேறுபாடு வேகமாக வளரவே செய்தது. 1946 பிப்ரவரி 19 ஆம் தேதி பம்பாயில் நடந்த கடற்படை வீரர்களின் கிளர்ச்சியும் அம்பாலா, கராச்சி, சென்னை கல்கத்தா, ரங்கூன் ஆகிய இடங்களில் ஏற்பட்ட அதன் பிரதிபலிப்பும் பிரிட்டனுக்கு கவலையைக் கொடுத்தன. பிரிட்டிஷ் பாராளுமன்ற தூதுக்குழு (British Parlimentary Delegation) இந்தியாவுக்கு வந்து இந்திய அரசியல் நிலைமையை மதிப்பீடு செய்து சென்றது. அந்த மதிப்பீட்டின் அடிப்படையில் அமைச்சரவைத் தூதுக்குழு (Cabinet Mission)வை இந்தியாவுக்கனுப்ப பிரிட்டிஷ் அரசாங்கம் முடிவு செய்தது.

தூதுக்குழுவின் திட்டம், 1946 மே 16

நாடாளுமன்றக் குழு

இங்கிலாந்தில் புதிதாக அட்லியின் தலைமையில் ஆட்சிக்கு வந்த தொழிற்கட்சி (1945 ஜூலை 10) 'காங்கிரஸ் நண்பர்களிடம்' அதிகாரத்தை ஒப்படைப்பதில் உறுதியாக இருந்தது. அந்த அடிப்படையில்தான் பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டது (1945 செப்டம்பர் 19). 1946 ஜனவரி மாதம் பேராசிரியர் ராபர்ட் ரிச்சர்ட்ஸ் தலைமையில் 10 பேர் கொண்ட அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழு இந்தியாவுக்கு வந்து தலைவர்களுடன் கலந்து பேசிய பின்னர் இங்கிலாந்து திரும்பிச் சென்று, இந்தியர்களுக்கு உடனடியாக விடுதலை வழங்க வேண்டும் என்று ஒருமனதாகப் பரிந்துரைத்தது. அட்லி அரசாங்கம் அதே முடிவில் இருந்தால் அமைச்சரவை தூதுக்குழு (Cabinet Mission)வை அனுப்ப முடிவு செய்தது.

அமைச்சரவை தூதுக்குழு

இந்திய விவகாரத்துறைச் செயலர் பெதிக் லாரன்ஸ் பிரபு, வர்த்தக அமைச்சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ், கடற்படை அமைச்சர் ஏ.வி.அலெக்சாண்டர் ஆகியோர் அடங்கிய அமைச்சரவைத் தூதுக்குழு 1946 மார்ச் 23ல் தேதி இந்தியாவுக்கு வந்தது. இந்தியர்களுக்கு அதிகாரத்தை மாற்றிக் கொடுப்பதைத் துரிதப்படுத்துவதற்கான திட்டத்தைக் கொடுப்பதே இத்தூதுக்குழுவின் நோக்கமாகும். இந்தியத் தலைவர்களுடன் விரிவாக விவாதித்த பின் பிரிவினைவாதத்தை நிராகரித்தனர். ஒன்றுபட்ட இந்தியாவுக்குள் பாகிஸ்தான் கோரிக்கையை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது பற்றி யோசித்து அவர்களது திட்டதை வெளியிட்டனர் (1946 மே 16). இந்த அரசியல் அமைப்புத் தீர்வே 'அமைச்சரவைத் தூதுக்குழுத் திட்டம்' என்ற அழைக்கப்படுகிறது.

அமைச்சரவை தூதுக்குழுத் திட்டம்

இத்திட்டம் 4 பகுதிகளைக் கொண்டது: 1. இந்திய யூனியன் (Union of India); 2. அரசியலமைப்புச் சட்டமன்றம் அமைத்தல் (Compose of the Constituent Assembly); 3. இடைக்கால அரசாங்கம் (Interim Government); 4 அரசியலமைப்புச் சட்ட மன்றத்துக்கும் பிரிட்டனுக்கும் இடையே ஒப்பந்தம் செய்தல் (Treaty between the Constituent Assembly and Britain).

இந்திய யூனியன்

1. பிரிட்டிஷ் இந்திய மாநிலங்களையும், மன்னர் மாநிலங்களையும் உள்ளடக்கியதே இந்திய யூனியன் ஆகும்; 2. மத்திய அரசாங்கம் வெளியுறவு விவகாரங்கள், நாட்டுப்பாதுகாப்பு, செய்தித் தொடர்பு ஆகிய மூன்று துறைகளைப் பற்றிய அதிகாரத்தை மட்டுமே கொண்டிருக்கும்; 3. மத்திய அரசாங்கத்துக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் தவிர எஞ்சிய அதிகாரங்கள் (Residuary Powers) மாநிலங்களுக்கு வழங்கப்படும்; 4. இந்திய யூனியனில் ஆட்சித்துறையும், சட்டமன்றமும் பிரிட்டிஷ் இந்தியா மற்றும் மன்னர் மாநிலங்களின் பிரதிநிதிகளைக் கொண்டிருக்கும்; 5. மாநிலங்கள் 3 தொகுப்புகளாகப் பிரிக்கப்படும், முதல் தொகுப்பில் சென்னை, பம்பாய், ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம், ஒரிசா ஆகியவை இடம் பெறும். இரண்டாம் தொகுப்பு, பஞ்சாப், வடமேற்கு எல்லை மாகாணம், சிந்து ஆகிய மாநிலங்களை உள்ளடக்கி இருக்கும்; மூன்றாவது தொகுப்பில் வங்காளமும் அஸ்ஸாமும் இடம் பெறும்; ஒவ்வொரு தொகுப்பும் அதற்குப் பொதுவான அதிகாரங்களைத் தீர்மானித்துக் கொள்ளும்; 6. 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்திய யூனியன் மற்றும் மாநிலத் தொகுப்புகளின் அரசியலமைப்புச் சட்டங்களை மறுபரிசீலனை செய்து கொள்ளலாம்.

அரசியலமைப்புச் சட்டமன்றம்

1. அரசியலமைப்புச் சட்ட மன்றம் 389 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். 2. ஒவ்வொரு மாகாணத்துக்கும் 10 இலட்சம் பேருக்கு ஒரு பிரதிநிதி என்ற மக்கள் எண்ணிக்கைக்கேற்ற விகிதாச்சார அடிப்படையில் இடங்கள் ஒதுக்கப்படும். 3. ஒவ்வொரு மாகாண சட்டமன்றத்துக்கும் ஒவ்வொரு வகுப்பாரும் இந்துக்கள், முஸ்லீம்கள், சீக்கியர் போன்றோர் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களுக்கான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும் 4. மத்திய மாகாணத் தேர்தல்கள் முடிந்தபின் அரசியலமப்புச் சட்டமன்றம்

Scanned by CamScanner

டெல்லியில் ஒரே அமைப்பாகக்கூடி அதன் தலைவரைத் தேர்ந்தெடுக்கும்; யூனியன் அரசியலமைப்புச் சட்டம் வரையப்பட்டு நடைமுறைக்கு வந்தபின் மாகாணத் தொகுப்புகளுக்கான அரசியலமைப்புச் சட்டங்களைத் தீர்மானித்துக் கொள்ளலாம். அப்போது ஒரு மாகாணம் விரும்பினால் மற்றொரு தொகுப்புக்கு மாறிக் கொள்ளலாம். 6. அரசியலமைப்புச் சட்டமன்றம் இறையாண்மை அமைப்பு (Sovereign body) அல்ல. இது அமைச்சரவைத் தூதுக்குழுத் திட்ட வரம்புக்குட்பட்டே செயல்பட வேண்டும். இந்துக்கள் மற்றும் முஸ்லீம்களின் பிரதிநிதிகளின் பெரும்பான்மையினரின் ஒப்புதலின்றி அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்தவோ அல்லது வகுப்புவாதப் பிரச்னைக்குத் தீர்வு காணவோ கூடாது.

இடைக்கால அரசாங்கம்

புதிய அரசியலமைப்புச் சட்டம் வரையப்படும்வரை இடைக்கால அரசாங்கம் நாட்டு நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்ளும். யுத்த அமைச்சர் பொறுப்பு உட்பட அனைத்து அதிகாரங்களும் மக்கள் ஆதரவு பெற்ற இந்தியத் தலைவர்களிடம் ஒப்படைக்கப்படும். இடைக்கால அரசாங்கத்தை அனைத்துப் பெரிய கட்சிகளும் ஆதரிக்க வேண்டும். இந்தியாவுக்கு அதிகாரத்தை மாற்றிக்கொடுக்கவும், இடைக்கால அரசு செவ்வனே செயல்படவும் பிரிட்டிஷ் அரசாங்கம் முழு ஒத்துழைப்பைக் கொடுக்கும்.

ஒப்பந்தம்

இந்திய அரசியலமைப்புச் சட்டமன்றமும் பிரிட்டனும் அதிகார பரிமாற்றம் மற்றும் இந்தியா-பிரிட்டன் தொடர்பு பற்றிய அனைத்து விவகாரங்கள் பற்றியும் சமரசப் பேச்சு நடத்துவது பற்றி ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். அதிகார பரிமாற்றத்துக்குப்பின் இந்தியாவின்மீது இருந்த பிரிட்டிஷ் மேலாதிக்கம் முற்றிலும் விலக்கிக் கொள்ளப்படாமையால் இந்தியா காமன்வெல்த் அமைப்பிலிருந்து விலகிக்கொள்ளாது என்று அமைச்சரவைத் தூதுக்குழு நம்பிக்கை தெரிவித்தது.

திட்டத்தின் நன்மை தீமைகள்

அமைச்சரவைத் தூதுக்குழுவின் திட்டம், கிரிப்ஸ் தூதுக்குழுத் திட்டத்தை விடச் சிறந்தது என்பதில் சந்தேகமில்லை. இத்திட்டத்தில் குறைகள் இல்லாமல் இல்லை. உதாரணமாக இத்திட்டத்தை ஏற்றுக்கொண்டால் ஒட்டுமொத்தமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது அதை அப்படியே கைவிட வேண்டும் என்று கூறப்பட்டது. கூட்டாட்சியில் சேருவதும் சேராததும் மன்ன மாநிலங்களின் விருப்பத்துக்கு விடப்பட்டது. மாநிலங்கள் தங்களுக்குள் ஒரு அமைப்பை ஏற்படுத்திக் கொள்வது பற்றிய தெளிவில்லை. தேசிய ஒற்றுமையைப் பாதுகாக்கும் பெயரில் பாகிஸ்தான் அமைப்ப ஏற்றுக்கொள்ளப்பட்டது. அரசியல் அமைப்புச் சட்டமன்றத்தைப் பற்றி விபரங்களும் தெளிவில்லாமல் இருந்தன. மாநில அரசாங்கங்களைப் பற்றி விதிகளும் பலதரப்பட்ட விளக்கங்களைக் கிளப்பக் கூடியவையாய் இருந்தன இருந்தாலும் கூட அமைச்சரவை தூதுக்குழு திட்டம் முந்தைய திட்டங்களை

விடச் சாலச் சிறந்த ஒன்றாகும். பிளவுபடாத ஐக்கிய இந்தியாவுக்கான அரசியல் சட்டத்தைப் பரிந்துரை செய்தது இத்திட்டத்தின் தனிப்பெரும் சிறப்பாகும். இத்திட்டத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தின் எல்லை வரையறுக்கப்பட்டுக் கட்டுப்படுத்தப்பட்டது. அரசியல் அமைப்புச் சட்டமன்றத்தின் அடிப்படை விரிவு படுத்தப்பட்டதோடு ஜனநாயகமாக்கப்பட்டது. இடைக்கால அரசை முழுவதும் இந்தியர்களே அமைக்க வழிவகுக்கப்பட்டது. அனைத்துக் கட்சியினரும் ஏற்றுக் கொள்ளத்தக்க அறிவுப்பூர்வமான ஏற்பாட்டை இத்திட்டம் கொடுத்தது. தங்களுக்குப் பொருத்தமான அரசியல் அமைப்பை உருவாக்கிக் கொள்ளும் பொறுப்பு இந்தியர்களுக்கே கொடுக்கப்பட்டது. அப்போதைய சூழ்நிலைகளை மனதில் கொண்டு தயாரிக்கப்பட்ட மிகச்சிறந்த ஆவணமே இந்த அமைச்சரவை தூதுக்குழுத் திட்டம் எனப் பாராட்டினார் காந்தி. சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாத்து ஏக இந்தியாவுக்கு ஏற்பாடு செய்த தன்னிகரற்ற திட்டமே இதுவென்றால் மிகையாகாது. பல சந்தேகங்களை எழுப்பினாலும் கூட காங்கிரசும் முஸ்லீம் லீக்கும் அமைச்சரவைத் தூதுக்குழுவின் திட்டத்தை ஏகமனதாக ஏற்றுக் கொண்டன. காங்கிரசும் லீக்கும் இத்திட்டத்தை ஏற்றுக் கொண்டது. இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றிலேயே உன்னதமான நிகழ்ச்சியாகும் என்று பெருமிதத்தோடு குறிப்பிட்டார் அபுல் கலாம் ஆசாத்.

மதிப்பீடு

அமைச்சரவைத் தூதுக்குழுவின் திட்டத்தை முதலில் முஸ்லீம் லீக்கும் (1946 ஜூன் 6)) பின்னர் காங்கிரசும் (ஜூன் 25) ஏற்றுக் கொண்டன. எனினும் இத்திட்டம் முரண்பாடுகளின் முடிச்சாகக் காட்சியளித்தது.. காங்கிரசையும், முஸ்லீம் லீக்கையும் திருப்திப்படுத்துவதற்காக வரையப்பட்ட இந்த திட்டம் இரு சாராரையும் திருப்திப்படுத்தவில்லை. எடுத்துக்காட்டாக, ஜின்னா, பாகிஸ்தானை இத்திட்டம் ஏற்றுக்கொண்டது என்று வாதிட்டார். மாறாக, பட்டேல் இத்திட்டம் பாகிஸ்தானை நிராகரித்தது என்று கூறினார். நேரு இந்த திட்டத்தை மாற்றும் அதிகாரம் அரசியலமைப்புச் சட்டத்துக்கு உண்டு என்றார்.

சீக்கியர்கள் முதலில் இந்த திட்டத்தை ஏற்றுக்கொள்ள மறுத்து பின்னர் ஒத்துக் கொண்டனர். கம்யூனிஸ்டு கட்சி அரசியலமைப்புச் சட்டமன்றத்தின் அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்படுவதை எதிர்த்தது. இந்து மகாசபை மாநிலங்கள் தொகுப்பைக் கண்டித்தது. காங்கிரசும் முஸ்லீம்லீக்கும் காலத்தின் கட்டாயத்தால் வேறுவழியின்றி இத்திட்டத்தை ஏற்றுக்கொண்டு பின்னர் செயல்பட முடியாமல் செய்தன! காங்கிரஸ் தலைவர்களுக்குள் கருத்தொற்றுமை இல்லாமையால்தான் அமைச்சரவைத் தூதுக்குழுத் திட்டத் தீர்வைக் கொடுக்க வேண்டிய கட்டாயத்துக்குள்ளானது என்பது நினைவுகூறத்தக்கது. இந்த திட்டம் 'இணக்குவிக்க முடியாததை இணக்குவிக்க முயன்றது' என்று கூறுகிறார் பிபன் சந்திரா. இருப்பினும் நாட்டுப் பிரிவினையை நிராகரித்து, ஒன்றுபட்ட ஐக்கிய இந்தியாவை மையப்படுத்தி வரையப்பட்ட இந்தியாவுக்கேற்ற கூட்டாட்சி அரசியலமைப்புத் திட்டத்துக்கான முன்வடிவே இந்த திட்டம் என்பதில் ஐயமில்லை.

Scanned by CamScanner

காந்தி குறிப்பிட்டதைப் போன்று பிராமிசரி நோட்டை (Promissary Note) இந்தியருக்குக் கொடுத்துவிட்டு அமைச்சரவைத் தூதுக்குழு 1946 ஜூன் 29 ஆம் தேதி இங்கிலாந்துக்குப் புறப்பட்டுச் சென்றது. அதன்பின் நடைபெற்ற இந்திய அரசியல் அமைப்புச் சட்டமன்றத்துகான (Constituent Assembly) தேர்தலில் காங்கிரஸ் அமோக வெற்றியைப் பெற்றது. 210 பொது இடங்களில் 19 இடங்களை அது கைப்பற்றியது. 296 மொத்த உறுப்பினர்களைக் கொண்ட அந்த மன்றத்தில் காங்கிரசுக்கு 212 இடங்கள் கிடைத்தன. முஸ்லீம் லீக்குக்கு 73 இடங்கள் மட்டுமே கிடைத்தன. லீக்கின் அவலநிலை கல்லின்மீது பொறிக்கப்பட்ட எழுத்தாக ஜின்னாவுக்குத் தெரிந்தது. அந்த நேரத்தில் ஜவஹர்லால் நேரு கூறிய சில கருத்துக்கள் ஜின்னாவுக்குப் பிடிகொடுத்து விட்டன. எவ்வித உடன்பாடுமின்றி காங்கிரஸ் தன்னிச்சையாக அரசியல் அமைப்புச் சட்டமன்றத்தில் கலந்து கொள்ளுமென்றும், காங்கிரஸ் தன் விருப்பத்துக்கேற்ப அமைச்சரவைத் தூதுக்குழுத் திட்டத்தை மாற்றிக்கொள்ளும் என்று நேரு பத்திரிக்கையாளர்கள் கூட்டத்தில் குறிப்பிட்டார் (ஜூலை 10) அதைக் காரணங்காட்டி ஜின்னா இடைக்கால அரசாங்கத்தில் சேர மறுத்துவிட்டார்! முதலில் இடைக்கால அரசாங்கத்தை அமைக்க மறுத்த காங்கிரஸ் பின்னர் அவ்வரசாங்கத்தில் சேரச் சம்மதித்தது! 1946 ஆகஸ்டு 12 ஆம் தேதி இடைக்கால அரசாங்கத்தை அமைக்கும்படி வைசிராய் வேவல்பிரபு ஜவஹர்லால் நேருவைக் கேட்டுக் கொண்டார். அவ்வழைப்பை நேரு ஏற்றுக் கொண்டார். ஆனால் ஜின்னா மறுத்துவிட்டார்.

நேரடி நடவடிக்கை நாள்

இடைக்கால அரசாங்கத்தில் சேர மறுத்த ஜின்னா 1946 ஆகஸ்டு 16ஆம் தேதியை நேரடி நடவடிக்கை நாளாக (Direct Action Day) அனுசரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அந்நாளை துக்கதின (Black Day) மாகக் கருதப்பட வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். ஆங்கிலேய ஆட்சிக்கெதிராக நேரடி நடவடிக்கை எதையும் மேற்கொள்ளவில்லை. மாறாக இந்துக்கள் மீது புனிதப்போர் (Jehad) தொடுக்கப்பட்டது! கல்கத்தாவில் பிரம்மாண்டமான ஊர்வலத்தை நடத்தியது முஸ்லீம் லீக். ஏதுமறியா இந்து ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் கொல்லப்பட்டனர். அவர்களுடைய சொத்துக்கள் சூறையாடப்பட்டன. வீடுகள் கொளுத்தப்பட்டன. பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். அரசாங்கம் பாதுகாப்புத் தராமையால் இந்துக்கள் திருப்பித் தாக்கினர். கல்கத்தா ரத்தக் களறியாயிற்று. இது கலகமல்ல; பேயாட்டம் என்று எழுதினார் ஒரு பத்திரிக்கை நிருபர். கல்கத்தா இனக் கலவரத்தில் 10,000 பேர் மாண்டனர். 15,000 பேர் காயமுற்றனர்; 1,00,000 பேர் வீடிழந்தனர். கலவரம் நவகாளி, திப்பேரா போன்ற கிழக்கு வங்காள நகரங்களுக்கும் பரவியது. அங்கிருந்த சிறுபான்மை இந்துக்கள் சொல்லொணாத் துன்பங்களுக்குள்ளாயினர். ஆயிரக்கணக்கான இந்து அகதிகள் பீகாருக்குச் சென்றனர். பீகாரிலிருந்த முஸ்லீம் சிறுபான்மையினரை இந்துக்கள் பழிக்குப் பழி வாங்கினர். இனக் கலவரத்தில் எதிரொலி ஐக்கிய மாகாணத்திலும் பம்பாயிலும் அகமதாபாத்திலும்கூட கேட்டது. நேரடி நடவடிக்கை நாள் [illegible]

பீகார் நிகழ்ச்சிகளைக் காரணம்காட்டி ஜின்னா தனது பாகிஸ்தான் கோரிக்கையை உரக்க எழுப்பினார்.

இடைக்கால அரசாங்கம்

1946 செப்டம்பர் 2ஆம் நாள் இடைக்கால அரசாங்கம் (Interim Government) ஜவஹர்லால் நேருவின் தலைமையில் அமைக்கப்பட்டது. மூன்று முஸ்லீம்கள் உட்பட 12 பேர் இடைக்கால அரசில் இடம் பெற்றனர். நேரு, வல்லபாய் படேல், ராஜகோபாலாச்சாரி, ஆசப் அலி, ராஜேந்திர பிரசாத், சரத்சந்திர போஸ், ஜான்மத்தாய், சர்தார் பலதேவ் சிங், ஜெகஜீவன் ராம், அகமத்கான், சையத் அலி ஜாகிர், பி.எச்.பாபா ஆகியோரே அப்பன்னிருவர் ஆவர். இந்த இடைக்கால அரசைத் தற்காலிக தேசிய அரசாங்கம் (Provisional National Govenment) என்றழைத்தார் பட்டாபி சீத்தாராமையா. இவ்விடைக்கால அரசாங்க அமைப்பு முஸ்லீம் லீக்கின் மீதும் முஸ்லீம் இந்தியாவின் மீதும் விழுந்த இடி என்றார் ஜின்னா. நேருவும், வேவலும் ஜின்னாவோடு பேச்சுவார்த்தை நடத்தி இடைக்கால அரசோடு ஒத்துழைக்க வேண்டுமாய் கேட்டுக் கொண்டனர். முஸ்லீம் லீக் இடைக்கால அரசில் இடம்பெற ஜின்னா சம்மதம் தெரிவித்தார் (அக். 15). லியாகத் அலிகான், ஐ.ஐ. சுந்திரிகர், அப்துர்ராப் நிஷ்டார், கஸ்பைர் அலிகான், ஜே.என்.மண்டல் ஆகிய ஐவரும் இடைக்கால அரசில் இடம்பெற முஸ்லீம் லீக்கால் நியமிக்கப்பட்டனர். இவர்களும் சேர்ந்த இடைக்கால அரசு திருத்தி அமைக்கப்பட்டது (அக்.24) ஒரு வழியாக காங்கிரசும் லீக்கும் சேர்ந்து இடைக்கால அரசை அமைத்தன.

இடைக்கால அரசு அமைக்கப்பட்டது; ஆனால் அது ஒழுங்காக செயல்பட முடியவில்லை. இலாக்காக்களைப் பிரிப்பதிலேயே காங்கிரசுக்கும் லீகுக்கும உரசல்கள் தோன்றலாயின. உதாரணமாக உள்விவகாரத் துறை வேண்டுமென்று லீக் கேட்டது. வல்லபாய் படேல் அதற்கு விட்டுக்கொடுக்க மறுத்துவிட்டார். இறுதியில் நிதி, செய்தி, வர்த்தகம், சுகாதாரம், சட்டம் ஆகிய துறைகள் லீக்குக்குக் கொடுக்கப்பட்டன. லீக் உறுப்பினர்கள் அக்டோபர் 26ஆம் தேதி பதவி ஏற்றனர். அவர்கள் பதவி ஏற்ற நாளிலிருந்து இடைக்கால அரசு ஒரு அணியாகச் (Team) செயல்பட முடியவில்லை. கூட்டுப் பொறுப்பு (Collective Responsibility) என்பது கானல் நீராகிவிட்டது. அரசு முஸ்லீம் பிரிவு (Muslim Block) காங்கிரஸ் பிரிவு (Congress Block)என இருகூறுகளாகப் பிரிந்து தனித்தனித் தலைமையின்கீழ் செயல்பட்டதாகக் கூறியுள்ளார் வி.பி.மேனன். லியாகத் அலிகான் முஸ்லீம் உறுப்பினர்களை மட்டும் வைத்துக்கொண்டு தனியே விவாதித்து வந்தார். நிதித்துறையைக் கையாண்ட அவர் இந்து வர்த்தக சமூகத்தின் முதுகெலும்பை முறிக்க கூடிய வகையில் வரவு-செலவுத் திட்டத்தை ஒரு சார்பாகத் தயாரித்தார் என்று அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. ஒரு ஏவலரைக்கூட நிதி இலாகாவின் அனுமதியின்றி வேலையில் அமர்த்த முடியாதென்று எழுதியுள்ளார் அபுல் கலாம் ஆசாத். முஸ்லீம் லீக்குடன் அரசாங்கத்தை நடத்துவதென்பது காங்கிரசுக்குக் கழுத்தில் கருங்கல்லை கட்டிக்கொண்டு கடலை நீந்துவதற்கொப்பான செயலாகத் தோன்றியது. முஸ்லீம் லீக் ஒரு பக்கம் இடைக்கால அரசியல் அங்கம் வகித்துக்கொண்டு மறுபக்கம் இனக் கலவரங்களைத் தூண்டிவிட்டுக் கொண்டு இருந்தது.

Scanned by CamScanner

மதிப்பீடு

1946ல் இந்தியாவுக்கு தேசிய அரசாங்கம் அமைப்பது பற்றிய காலம் கனிந்திருந்தது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கும் இந்திய தேசியத்துக்கும் இடையேயான அரசியலமைப்புச் சட்ட சிக்கலைத் தீர்க்க பிரிட்டனும், காங்கிரசும், முஸ்லீம் லீக்கும் இறுதி முயற்சியை மேற்கொண்டன. பிரிட்டன் நினைத்த ஐக்கிய இந்தியாவை உருவாக்கிக் கொடுப்பதில் குறியாக இருந்தது. காங்கிரஸ் அரசியலமைப்புச் சட்டத்தின்மூலம் சுதந்திர இந்தியாவை அடைய விரும்பியது. முஸ்லீம் லீக்கோ முஸ்லீம்கள் பெரும்பான்மையினராக உள்ள மாநிலங்களை ஒன்றுசேர்த்து சுதந்திர பாகிஸ்தானைக் காண விழைந்தது. இடைக்கால அரசாங்கம் இம்மும்முனை முயற்சிக்கிடையே அமைக்கப்பட்டது. இந்தியாவில் உள்நாட்டுப் போரைத் தவிர்ப்பதற்காக வைசிராய் வேவல் பிரபு முஸ்லீம் லீக்கை இடைக்கால அரசாங்கத்தில் சேர சம்மதிக்க வைத்தார் (1946 அக்டோபர் 26). ஆனால் முஸ்லீம் லீக் இடைக்கால அரசாங்கத்தில் சேர்ந்து அதை அரசியல் ரீதியான உள்நாட்டுப் போருக்கான களமாகப் பயன்படுத்தியது. இடைக்கால அரசாங்கம் கூட்டணி ஆட்சி எவ்வாறு செயல்படக்கூடாது என்பதற்கான முன்னுதாரணமாக இருந்தது. 'நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி' வாய்ப்பச் செய்யாமையால் ஏற்பட்ட விளைவே இடைக்கால அரசாங்கத்தின் தோல்வி ஆகும்.

அரசியல் அமைப்புச் சட்டமன்றம்

இடைக்கால அரசில் சேர்ந்த முஸ்லீம் லீக்க் அரசியல் அமைப்புச் சட்ட மன்றத்தில் (Constituent Assembly) சேர மறுத்து, அதன் நடவடிக்கைகளைப் புறக்கணித்தது. லீக்கின் ஒத்துழைப்பின்றி இந்தியா முழுவதுக்குமான அரசியல் அமைப்புச் சட்டமன்றத்தில் கலந்து கொள்ளாத முஸ்லீம் லீக்குக்கு இடைக்கால அரசியல் தொடர்ந்திருக்கத் தகுதியில்லை என்று வாதிட்டது காங்கிரஸ். லீக் உறுப்பினர்கள் இடைக்கால அரசிலிருந்து பதவி விலகாவிடில் காங்கிரஸ் விலகிக் கொள்ளப் போவதாக அறிவித்தது. திரும்பவும் அரசியல் தேக்கநிலை உண்டாயிற்று. பிரிட்டிஷ் அரசாங்கத்தால் இந்திய அரசியல் பிரச்னைக்கு நிரந்தரத்தீர்வு காணமுடியவில்லை. கார்டியன் முடிச்சை (Gordion knot) வெட்டி தேக்கநிலை விடுகதைக்கு விடை காண்பதற்காகத் தற்கால மகாஅலேக்சாண்டருக்காக (Alexander the Great) இந்தியா காத்திருக்க வேண்டியதாயிற்று!

30. பிரிவினையும் விடுதலையும், 1947

இந்தியாவில் இஸ்லாம் ஆபத்தில் அழிந்துவிடாமல் காப்பாற்றப்பட வேண்டுமானால் பாகிஸ்தானைப் பெறுவதுதான் நடைமுறை சாத்தியமான ஒரே வழியாகும்.

- முகமது அலி ஜின்னா.

அட்லியின் அறிவிப்பு

நேருவின் தலைமையில் அமைக்கப்பட்ட இடைக்கால அரசாங்கம் முஸ்லீம் லீக்கின் பிடிவாதப் போக்கால் செயல்பட முடியவில்லை. லீக்கின் ஒத்துழைப்பில்லாமல் இந்திய அரசியல் அமைப்பு சட்டமன்றம் அதன் பணியைச் செய்ய இயலவில்லை. இனக்கலவரங்கள் நாட்டில் அமைதியின்மையையும் குழப்பத்தையும் அதிகரிக்கச் செய்தன. வைசிராய் வேவலால் அரசியல் தேக்க நிலையைப் போக்க முடியவில்லை. அந்த நேரத்தில் பிரிட்டிஷ் பிரதமர் பாராளுமன்றத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்பைச் செய்தார் (1947 பிப்.20) அவ்வறிவிப்பின்படி:

1. 1948 ஜூன் முதல் தேதிக்குள் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவுக்கு அதிகார மாற்றம் செய்துவிடும்;

2. யாருக்கு அதிகாரத்தை மாற்றிக் கொடுப்பது என்பதை பிரிட்டிஷ் அரசாங்கம் முடிவு செய்யும்;

3. வேவல்பிரபுவுக்கு பதில் மௌன்ட்பேட்டன் பிரபு (Lord Mountbatten) இந்திய வைசிராயாக நியமிக்கப்படுவார். புதிய வைசிராய் இந்தியர் கைக்கு அதிகாரத்தை மாற்றிக் கொடுப்பார். அட்லியின் இந்த உறுதியான அறிவிப்பு இந்தியாவில் நல்ல வரவேற்பைப் பெற்றது.

மௌன்ட்பேட்டன் திட்டம்

அட்லியின் அறிவிப்பைத் தொடர்ந்து மௌன்ட்பேட்டன் பிரபு 1947 மார்ச் 22 ஆம் தேதி இந்தியாவுக்கு வந்தார். வைசிராயாகப் பதவியேற்ற உடனேயே அவர் காந்தி, ஜின்னா, நேரு, ஆசாத், படேல் மற்றும் முக்கிய தலைவர்களை சந்தித்துப் பேசினார். ஜின்னாவையே அமைச்சரவையை அமைக்கச் சொல்லலாம் என்ற யோசனையைத் தெரிவித்தார் காந்தி. பாகிஸ்தான் கோரிக்கையிலிருந்து சிறிதும் விட்டுக்கொடுக்கத் தயாராயில்லை என்றார் ஜின்னா. நாட்டுப் பிரிவினை தேவையான தீமை என்பதை ஒத்துக் கொண்டார் நேரு. பிரிவினை தவிர்க்க முடியாது எனக் கருதினார் படேல். ஆனால் ஆசாத் கடைசி வரை பிரிவினைக்கு

Scanned by CamScanner

உடன்படவே இல்லை. மௌன்ட்பேட்டன் தனது சொல்வல்லமையாலும் சாதுர்யத்தாலும் பண்பான தொடர்பாலும் பிரிவினைத் திட்டத்துக்குக் காந்தியின் சம்மதத்தைப் பெற்றார்.

இந்தியத் தலைவர்களோடு பேசிய பின்னர் நாட்டைப் பிரிவினை செய்யாமல் இந்திய அரசியல் தேக்க நிலையைத் தீர்க்க முடியாது என்ற தெளிவான முடிவுக்கு வந்தார் மௌன்ட்பேட்டன். அட்லியின் அறிக்கையை ஒட்டி ஒரு திட்டத்தைத் தயாரித்தார். அத்திட்டம் அமைச்சரவை தூதுக்குழு திட்டத்தை (Cabinet Mission Plan) பெரிதும் தழுவியிருந்தது. அத்திட்டம் (Dickie Bird Planor Balkan Plan) பிரிட்டிஷ் அமைச்சரவையின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அமைச்சரவை அதில் சில மாற்றங்களைச் செய்து திருப்பி அனுப்பியது. திருத்தி அமைக்கப்பட்ட திட்டத்தை அப்போது இங்கிலாந்தில் தன்னுடன் தங்கியிருந்த நேருவிடம் காட்டினார் மௌன்ட்பேட்டன் (மே 10). அத்திட்டத்தைப் பார்த்த நேரு கோபம் கொண்டார்; அதை அங்கேயே நிராகரித்தார். அதன்பின்னர் வைசிராய் தன்னுடன் சிம்லாவிற்கு கமிஷனராய் (Reforms Commissioner) இருந்த வி.பி.மேனனின் துணையுடன் தனது திட்டத்தைத் தயாரித்தார். அதுவே மௌன்ட்பேட்டன் திட்டம் (Mountbatten Plan) என்றழைக்கப்படுகிறது. அத்திட்டத்துக்கு இந்தியத் தலைவர்களின் ஆதரவைப் பெற்ற பின்னர் மௌன்ட்பேட்டன் இலண்டன் சென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அங்கீகாரத்தையும் பெற்றுத் திரும்பினார் (1947 மே 30). புதிய திட்டத்தை வானொலி மூலம் அறிவித்தார் மௌன்ட்பேட்டன் (ஜூன் 3). உடனிருந்த நேரு, ஜின்னா, பலதேவ்சிங் ஆகியோர் இந்தியாவை இரண்டு சுதந்திர நாடுகளாகப் பிரிக்கும் அத்திட்டத்தை ஆதரித்துப் பேசினார்.

மௌன்ட்பேட்டன் திட்டம் நாட்டுப் பிரிவினையை அடிப்படையாகக் கொண்டது. அத்திட்டத்தின் சிறப்புக் கூறுகளாவன;

1. இந்திய அரசியல் அமைப்பு சட்டமன்றத்தின் வேலை இடையூறின்றி நடைபெறும்;

2. புதிதாக எழுதப்படும் அரசியல் சட்டம் அதை ஏற்றுக்கொள்ளாத பகுதிகளுக்குப் பொருந்தாது;

3. நடைமுறையில் இருக்கும் அரசியல் அமைப்பு சட்டமன்றத்தை ஏற்றுக்கொள்ளாத பகுதிகளில் பிரதிநிதிகளைக் கொண்ட தனிமன்றத்தின்மூலம் அப்பகுதிகளின் விருப்பம் அறியப்படும்;

4. பஞ்சாப், வங்காள சட்ட மன்றங்கள் பெரும்பான்மை முஸ்லீம்களைக் கொண்ட மாவட்டங்களின் பிரதிநிதிகளுக்கும், பிறருக்குமென இரு பகுதிகளாய்ப் பிரிக்கப்படும்;

5. சிந்து சட்டமன்றம் யார் பக்கம் இருக்க வேண்டுமென்பதை அதுவே தீர்மானித்துக் கொள்ள வேண்டும்;

6. வடமேற்கு எல்லை மாகாணத்தில் இப்பிரச்சனை மக்கள் வாக்கெடுப்பின்மூலம் தீர்மானிக்கப்படும்;

7. பலுசிஸ்தான் மக்களுடைய கருத்தை அறிவதற்கான முறையை வைசிராய் முடிவு செய்வார்;

8. பஞ்சாப், வங்காளம், சில்ஹெட் ஆகிய பகுதிகளில் தேர்தல்கள் நடத்தி அரசியல் அமைப்பு சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்;

9. மன்னர் மாநிலங்களைப் பொறுத்த வரை அமைச்சரவைத் தூதுக்குழுத் திட்டத்தில் (1946 மே 12) கண்டுள்ள விதிகள் பின்பற்றப்படும்.

10. இந்தியாவை இரண்டாகப் பிரிவினை செய்வதால் ஏற்படக்கூடிய நிர்வாக விளைவுகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் விவாதித்துத் தீர்த்துக் கொள்ளலாம். பிரிட்டிஷ் அரசாங்கம் அதிகார மாற்றத்தை அறிவிக்கப்பட்ட தேதிக்கு முன்னதாகவே செய்யலாம்.

முஸ்லீம் முடிவு

இந்தியாவைக் கூறுபோடும் மௌன்ட் பேட்டன் திட்டம் 1947 ஜூன் 3 ஆம் தேதி வானொலி மூலம் அறிவிக்கப்பட்டது. நேரு, ஜின்னா, பலதேவ்சிங் ஆகியோர் அப்போதே அப்பிரிவினைத் திட்டத்துக்கு ஒப்புதல் தந்துவிட்டனர். நாடு துண்டாடப்படுவதைக் கொஞ்சமும் விரும்பாத காந்தியை மௌன்ட் பேட்டன் தன்வழிக்குக் கொண்டு வந்து விட்டார். பிரிவினைத் திட்டம் அறிவிக்கப்பட்ட ஒரு வாரத்தில் முஸ்லீம் லீக் முறைப்படி அத்திட்டத்தை ஏற்றுக்கொண்டது (ஜூன் 9.) அதன்பின் காங்கிரஸ் செயற்குழு தன் சம்மதத்தைத் தெரிவித்தது (ஜூன் 12). டெல்லியில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி செயற்குழுவின் முடிவை அங்கீகரித்தது (ஜூன் 14-15) சீக்கியர்களும் தாழ்த்தப்பட்ட மக்களும் பிரிவினையை ஏற்றுக் கொண்டனர். ஆனால் காங்கிரஸ் சோஷலிஸ்டுகள் தேசம் துண்டாடப்படுவதைக் கடுமையாக எதிர்த்தனர். பிரிவினையை காங்கிரஸ் ஒத்துக் கொண்டது நம்பிக்கை இழந்துவிட்டதற்கான வக்காலத்து, பலவீனத்தின் வெளிப்பாடு என்ற புருசோத்தம் தாஸ் தாண்டன் குற்றம் சாட்டினார். ஆகாதும் பிற தேசிய முஸ்லீம்களும் துவக்கத்திலிருந்தே பிரிவினை திட்டத்தை எதிர்த்தனர். இறுதிவரை அவர்கள் நிலை தளரியாது இருந்தனர். இந்துமகா சபையினர் இந்திய ஒற்றுமைக்கு உலைவைக்கும் பிரிவினைத் திட்டத்தை நஞ்சென வெறுத்தனர். எனினும் பலமிக்க கட்சிகள் பிரிவினையை ஏற்றுக்கொண்டதால் பாகிஸ்தான் பிரிவது முடிந்த முடிவாகிவிட்டது.

இந்திய விடுதலை

இந்தியப் பிரிவினை பற்றி முடிவானதும் பிரிட்டிஷ் அரசாங்கம் துரிதமாகச் செயல்பட்டது. பிரிவினைத் திட்டத்துக்கு வடிவம் கொடுக்கப்பட்டது. இந்திய விடுதலை மசோதா (Indian Independence Bill) தயாரிக்கப்பட்டு, பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு (ஜூலை 4) இந்திய விடுதலை சட்டமாக (Indian Independence Act)நிறைவேற்றப்பட்டது (ஜூலை 18). அச்சட்டத்தின்படி இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு டொமினியன்கள் 1947 ஆகஸ்டு 15 ஆம் நாளிலிருந்து ஏற்படுத்தப்பட்டன. ஆகஸ்டு 14-15 நள்ளிரவில் பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் முடிவுக்கு வந்தது. புதுடெல்லியில் கூடிய

Scanned by CamScanner

இந்திய அமைப்பு சட்டமன்றத்தில் தலைவர்களின் கூட்டம் நிரம்பி வழிந்தது. சபாநாயகர் தலைக்கு மேலிருந்த கடிகாரம் பன்னிரெண்டு முறை அடித்து ஓய்ந்தது. நள்ளிரவின் நிசப்தத்துக்கிடையே நேருவின் குரல் ஒலித்தது: "நீண்ட நெடுங்காலத்துக்கு முன்னால் நாம் விதியோடு ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டோம். அந்த ஒப்பந்தத்திலிருந்து விடுவித்துக் கொள்ளும் நேரம் வந்துவிட்டது. இந்த நள்ளிரவு நேரத்தில் உலகமே உறங்கிக்கொண்டிருக்கையில் இந்தியா சுதந்திரமாக வாழ்வதற்காக விழித்துக் கொள்கிறது". இந்தியாவின் கடைசி வைசிராயும், முதல் கவர்னர் ஜெனரலுமான மௌன்ட் பேட்டன் பிரபு 'இந்தியா விடுதலை அடைகிறது' என்று அரசியல் அமைப்பு சட்டமன்றம் செய்த பிரகடனத்தில் கையொப்பமிட்டார். அவரே 'யூனியன் ஜாக்' கொடி பறந்து வந்த கொடிமரத்தில் அசோகச் சக்கரம் பொறித்த சுதந்திர இந்திய மூவர்ண தேசியக் கொடியை ஏற்றிப் பறக்கவிட்டார். அரசியல் அமைப்புச் சட்டமன்றம் சுதந்திர இந்தியாவின் பாராளுமன்றமாயிற்று. அந்த நள்ளிரவிலும் பாராளுமன்றக் கட்டிடத்துக்கு வெளியே மக்கள் வெள்ளம்போல் கூடியிருந்தனர். இராணுவ அணிவகுப்புகளுக்கிடையே முதல் பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேருவும் அவருடைய சக அமைச்சர்களும் மக்களின் மகிழ்ச்சி ஆரவாரத்துக்கிடையே அணிவகுத்துச் சென்றது கண்கொள்ளாக் காட்சியாகும்.

வெள்ளையன் வெளியேறியதேன்?

பிரிட்டன் இந்தியாவைவிட்டு தன்னிச்சையாக வெளியேறவில்லை. இந்திய மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடும் அது வெளியேறவில்லை. பிரிட்டனின் மணிமகுடத்தில் இருந்த பிரகாசமான வைரமே இந்தியா எனக்கருதி வந்த பிரிட்டன் அதை இழக்க சம்மதித்ததேன்? வெள்ளையன் இந்தியாவைவிட்டு வெளியேற சூழ்நிலைக் கட்டாயங்கள் காரணமாக இருந்தன.

1. இந்திய சுதந்திரப் போராட்டத்தின் வேகமும் தாக்கமும் இந்தியாவில் ஆங்கிலேயரது ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தது. தென்னிந்தியக் கிளர்ச்சி (1800-1801), வேலூர்க் கிளர்ச்சி (1806) கம்பனி ஆட்சிக்கெதிரான உட்புறக் கிளர்ச்சிகள் (1808-1857) ஆகியவை அந்நிய ஆதிக்கத்துக்கெதிராகத் துவக்கப்பட்ட ஆரம்ப எதிர்ப்புகளாகும். 1857 பெரும் புரட்சி கம்பெனி ஆட்சிக்கு இறுதி எச்சரிக்கையாக அமைந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுந்த சமுதாய சமய சீர்திருத்த இயக்கங்கள் இந்திய தேசியத்தின் நாற்றங்கால்களாயின. இந்திய காங்கிரசுக்கு முற்பட்ட அமைப்புகள் அரும்பி வந்த இந்த தேசியத்துக்கு உருவம் கொடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள், காங்கிரசின் தோற்றம், மிதவாதிகள், தீவிரவாதிகள், பயங்கரவாதிகள் ஆகியோரின் நடவடிக்கைகள் இந்தியாவை சுயராஜ்யத்தை நோக்கி நடைபோட வைத்தன. காந்தியின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட மக்கள் இயக்கங்களான ரௌலட் சத்தியாகிரகம் (1919), ஒத்துழையாமை இயக்கம் (1920-22), சட்டமறுப்பு இயக்கம் (1930-34), வெள்ளையனே வெளியேறு இயக்கம் 1942) ஆகியவை ஆங்கிலேயர்களை இந்தியாவில் வேண்டாதவர்களாக்கிவிட்டன: அவர்கள் இந்தியாவை விட்டு வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை.

2. பிரிட்டன் தனது இராணுவ வலிமையால் இந்தியாவை அடக்கி ஆண்டு வந்தது. ஆனால் இரண்டாவது உலகப்போரின் போது அதன் இராணுவ வலிமை மாயை அகன்றது. பிரிட்டன் ஜப்பானிடம் தோற்று ஹாங்காங், சிங்கப்பூர், மலேயா, பர்மா ஆகிய இடங்களைவிட்டு வெளியேற வேண்டியதாயிற்று! இராணுவத்தில் பணியாற்றிய ஆயிரக்கணக்கான இந்திய வீரர்கள் உலகப்போருக்கும் பின் இந்தியா விடுதலையடையும் என்று எதிர்பார்த்து ஏமாந்தனர். அவர்கள் விடுதலைப் போராட்டத்தை ஆதரித்தனர். மேலும் இந்திய கடற்படை, விமானப்படை வீரர்கள் 1946 ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் பம்பாய், கல்கத்தா, சென்னை, கராச்சி ஆகிய இடங்களில் கிளர்ச்சி செய்தனர். அக்கிளர்ச்சிகளில் ஆங்கிலேயர் தங்களது ஆட்சி முடிவுக்கான அபாய அறிகுறிகளைக் கண்டனர். உரிய காலத்தே விலகிக் கொள்ள தீர்மானித்தனர்.

3. டெல்லி செங்கோட்டையில் நடைபெற்ற நேதாஜியின் இந்திய தேசியப்படை தளபதிகள் பற்றிய வழக்கு இந்திய மக்களிடையே அசாதாரணமான ஆர்வத்தையும் எழுச்சியையும் ஏற்படுத்தியது. அவ்வழக்கின்போது இந்திய தேசிய இராணுவ அதிகாரிகள் வீரர்கள் பட்டதுன்பங்கள் அனைத்தும் வெளியாயின. அவர்களை விடுவிக்க வேண்டுமென்று நாடெங்கும் கிளர்ச்சிகள் நடந்தன. பொதுமக்களின் எதிர்ப்புக்குத் தலைவணங்கிய அரசாங்கம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டோர் அனைவரையும் நிபந்தனையின்றி விடுவித்தது. விடுவிக்கப்பட்ட அதிகாரிகளும் வீரர்களும் நாட்டின் பல பகுதிகளுக்கும் சுற்றுப்பயணம் செய்தனர். அவர்கள் விடுதலைப் போராட்டத்தின் கதாநாயர்களென மக்களால் போற்றப்பட்டனர். காற்று எத்திசைநோக்கி அடிக்கிறது என்பதைக் கவனித்து பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவை இனியும் அடக்கியாள்வது முடியாத காரியம் என்பதைப் புரிந்து கொண்டது.

4. இரண்டாம் உலகப் போருக்குப் பின் பிரிட்டன் பெரிய பொருளாதார நெருக்கடிக்குள்ளாயிற்று. ஐந்தாண்டு காலம் போரில் ஈடுபட்டதால் அதன் பொருளாதார வளம் வறண்டு போயிற்று. இங்கிலாந்து இரண்டாந்தர நாடாயிற்று. தனக்குத் தேவையான உணவுப்பொருள்களுக்கும் மூலப்பொருள்களுக்கும் அது அமெரிக்காவையும் பிற நாடுகளையும் எதிர்பார்க்கக்கூடிய பரிதாப நிலைக்கு உள்ளாயிற்று. தன்னுடைய பொருளாதாரப் புனருத்தாரணப் பிரச்சனையே பிரிட்டனுக்குப் பெரும்பாரமாக இருந்தது. அந்த நிலையில் இந்திய அரசியல் சிக்கலில் மாட்டிக் கொள்ளாது கவுரவமாக வெளியேறிவிடுவது தவிர்க்க முடியாதது மட்டுமல்ல, சமயோசிதமானதும்கூட எனக் கருதியது பிரிட்டன்.

5. பிரிட்டிஷ் பிரதமராவதற்கு முன்பிருந்தே அட்லி இந்தியாவின் நண்பராக இந்திய விடுதலைப் போராட்டத் தலைவர்களின் அனுதாபியாக இருந்து வந்தார். இராணுவ வலிமையால் இந்தியாவை அடக்கி ஆள்வது வீண்முயற்சியே என்பதை நன்குணர்ந்தவர் அவர். இந்தியாவின் நட்புறவைப் பெறுவது பிரிட்டனின் பொருளாதார நலனுக்குகந்தது என்பதை அறிந்திருந்தார். தக்க தருணம் பார்த்து இந்தியாவைவிட்டு வெளியேறிவிட வேண்டும் என்று விரும்பினார். அந்த விருப்பத்தின் அடிப்படையிலேயே அமைச்சரவைத் தூதுக்குழுவையையும் பின்னர் மௌன்ட் பேட்டன் பிரபுவையும் இந்தியாவுக்கு அனுப்பி வைத்து அரசியல் தேக்க நிலைக்குத் தீர்வு கண்டார்.

Scanned by CamScanner

6. சர்வதேச சூழ்நிலைகளும் இந்தியாவுக்குச் சாதகமாக இருந்தன. உலகப்போரின் போது இங்கிலாந்துடன் இணைந்திருந்த ரஷியா போருக்குப்பின் கொதிப்பதும், முதலாளித்துவம், காலனி ஆதிக்கம் ஆகியவற்றுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்யத் துவங்கியது. உலக கம்யூனிஸ்டு இயக்கத்துக்கு ஆதரவு திரட்டுவதற்காக ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளின் ஆதரவை நாடிற்று ரஷ்யா. காலனி ஆதிக்கத்துக்கெதிராக அந்நாடுகள் மேற்கொண்ட விடுதலை இயக்கங்களை அது ஆதரித்தது; அடிமை விலங்கொடிக்க ஆதரவு தந்தது. அது தவிர பேர்ல் எஸ்.பக், ஜூலி பிஷர், லின் யுடாங், நார்மன் தாமஸ் போன்ற செல்வாக்கு மிக்க எழுத்தாளர்கள் வெளிநாடுகளில் இந்திய சுதந்திரத்துக்கு ஆதரவாக இருந்தனர். சான்பிரான்சிஸ்கோவில் ஐக்கிய நாடுகள் அவையின் சாசனம் தீர்மானிக்கப்படுகையில் இந்தியாவின் நிலைப்பற்றி நன்கு எடுத்துச் சொல்லப்பட்டது. அச்சாசனத்தில் கையொப்பமிட்ட பிரிட்டன் இந்திய சுதந்திரத்தை ஏற்க வேண்டியதும் அவசியமாயிற்று.

7. பிரிட்டிஷ் பேரரசு கலைவதின் இன்றியமையாமையைக் கண்ட பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவுடன் தனக்குள்ள தொடர்பை ஒழுங்குபடுத்திக் கொள்ள முனைந்தது. பிரிட்டிஷ் காமென்வெல்த் பற்றிய கொள்கையில் மாற்றம் ஏற்பட்டது. 1947 ஜூலை மாதம் காமன்வெல்த் தொடர்பு அலுவலகம் (Common Wealth Relations Office) ஏற்படுத்தப்பட்டது அந்த மாற்றத்தில் விளைவேயாகும். இந்தியாவும் பாகிஸ்தானும் பிரிட்டனுக்குச் சமமான காமன்வெல்த்தின் உறுப்பு நாடுகளாயின. இதனால் இந்நாடுகளில் வர்த்தக நிதி, அரசியல் அனுகூலங்கள் பாதுகாக்கப்பட்டன. இந்த நன்மைகளை மனதில் கொண்டே பிரிட்டன் இந்தியாவைவிட்டு வெளியேற முடிவு செய்தது.

8. இந்தியாவில் கம்பெனி ஆட்சி துவங்கிய காலத்திலிருந்தே பிரித்தாளும் கொள்கை (Divide and Rule)யைக் கையாண்டு வந்தது. அதன் நெடுங்காலக் கொள்கைக்கேற்ப பிரிட்டன் இந்தியாவை விட்டு வெளியேறும் போதும் இந்தியாவை இரண்டாகப் பிரித்துவிட்டு வெளியேறிற்று! அப்படி வெளியேறிய பின்னரும்கூட அதன் செல்வாக்கு இந்தியத் துணைக்கண்டத்தில் நிலைத்திருப்பதற்கான வழியைச் செய்திருந்தது. பாகிஸ்தான் உருவாக்குவதன்மூலம், அதன் அண்டை நாடான இந்தியாவில் அதன் பொருளாதார நலன்களைப் பாதுகாத்துக்கொள்ள முடிந்தது. இந்த உன்நோக்கத்தின் அடிப்படையிலும் பிரிட்டன் இந்தியாவைப் பிரிவினை செய்துவிட்டு வெளியேறியது.

9. 1937லும்; 1946-1947லும் மாநில சட்ட மன்றங்களுக்கு நடந்த பொதுத்தேர்தல்கள் மக்களிடையே அபரிவிதமான அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தின. சட்டமன்றங்களில் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்துக்கெதிரான விவாதங்கள், வாக்குவாதங்கள் இந்திய மக்கள் பிரதிநிதிகள் பொறுப்பாட்சிக்குத் தயாராகி விட்டார்கள் என்பதைப் பறைசாற்றின. மக்கள் பிரதிநிதிகளாக மக்களின் ஆசைகளையும், ஆத்திர உணர்வுகளையும் அரசாங்கத்துக்கு வெளிப்படுத்தியதன்றி, விடுதலை இயக்கம் வலிமை பெறவும் காரணமாயிருந்தனர். உரிய நேரத்தில் மக்களிடம் அதிகாரத்தை ஒப்படைக்க வேண்டியது காலத்தின் கட்டாயத் தேவையாயிற்று.

10. முஸ்லீம் லீக் கட்சி விடுத்துவிட்ட நேரடிப் கலவரங்கள் இந்தியாவில் ஆங்கிலேயரின் நிலையை மோசமாக்கிவிட்டது. ஆங்கிலேய அரசால் கொண்டிருந்த சட்டஒழுங்கு நிலையை நிர்வாகமும் முடியவில்லை; அரசியல் தேக்க நிலைக்குத் தீர்வு காணவும் இயலவில்லை. இவ்வாறான பேராட்டத்தை அடக்குவது, இங்கிலாந்தை ஆட்சி செய்த தொழிற்கட்சிக்கு உகந்ததாகப்படவில்லை. இந்துக்களையும், முஸ்லீம்களையும் இணைத்து இந்தியர் கூட்டாட்சியை உருவாக்க முடியாத பிரிட்டிஷ் அரசாங்கம் நாட்டைப் பிரிவினை செய்து இரு நாடுகளின் நல்லெண்ணத்தோடும் நட்புறவோடும் இந்தியாவைவிட்டு வெளியேறியது. இங்கிலாந்து இந்தியாவைவிட்டு வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை.

தேசப் பிரிவினையைத் தவிர்த்திருக்கலாமா?

இந்தியாவில் ஆங்கிலேயரது ஆட்சி முடிவுக்கு வருவதற்கான உச்சகட்ட நிகழ்ச்சியாக அமைந்தது தேசப்பிரிவினையாகும். இந்திய விடுதலைக்குமுன் தேசப் பிரிவினை செய்ததைத் தவிர்த்திருக்கலாமா என்பது விவாதத்துக்குரிய விஷயமாகும். பாகிஸ்தான் உருவாக்கப்பட்டது பற்றி இந்திய வரலாற்று வரைவியலில் (Indian Historiography) விரிவாக சர்ச்சை செய்யப்பட்டுள்ளது. பாகிஸ்தான் பிரிக்கப்பட்டது நடந்த முடிந்த வரலாற்று உண்மையாகும். அப்படிப் பிரிவினை செய்துதான் இந்தியா விடுதலையடைந்திருக்க வேண்டுமா என்பது இன்றைக்கும் விவாதத்துக்குரிய பொருளாகவே உள்ளது.

இந்திய விடுதலைக்கு முன் தேசம் ஏன் இரண்டாகத் துண்டாடப்பட்டது என்பதற்கு பல விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இட்.எச்.ஸைதே (Z.H Zaide) போன்ற வல்லுனர்கள் இந்திய வரலாற்று வளர்ச்சியில் தவிர்க்க முடியாத விளைவே தேசப் பிரிவினையாகும் என வாதிட்டுள்ளார். இந்து சமயமும், இஸ்லாமும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட, மாறுபட்ட இணை தொலைவான (Parallel) சமயங்களாகும். இந்துக்களும், முஸ்லீம்களும் காலத்தின் கட்டாயத்தால் ஒன்றாக இருந்தார்களேயன்றி உள்ளத்தளவில் அவர்களால் ஒத்துப்போக முடியவில்லை. நீரும் எண்ணெயும் போலவே வாழ்ந்து வந்தனர். இரு சாராரது நலன்களும் பரஸ்பரம் பிரிவுபட்டவை என எண்ணினர். வரலாற்று சமய சமூக பழக்க வழக்க நம்பிக்கை நடைமுறைகள் இவ்வேறுபாட்டை உறுதி செய்ததோடு அதிகரிக்கவும் செய்தன. இவ்வேறுபாட்டின் அரசியல் அங்கீகாரமே 1906ல் முஸ்லீம் லீக் அமைக்கப்பட்டதாகும். மார்லி-மின்டோ சீர்திருத்தங்களும் (1909), மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களும் (1919) முஸ்லீம்களுக்குத் தனித்தொகுதிகள் ஒதுக்கப்படுவதற்கு வழிசெய்தன. மாநில சுயாட்சியின்கீழ் 1937ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்கள் முஸ்லீம் சிறுபான்மையினரால் அரசியல் செல்வாக்கு பெற முடியாது என்பதைத் தெளிவாக்கியது. கலப்பு அமைச்சரவைகளை அமைக்க காங்கிரஸ் உடன்படாதது இந்து-முஸ்லிம் ஒற்றுமை என்பது ஏட்டுச்சுரைக்காய் என்பதை உறுதி செய்தது. இந்தியா விடுதலையடைந்தால் இந்தப் பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தின் கீழ் முஸ்லீம் சிறுபான்மையினர் என்றைக்கும் அடங்கியே வாழ வேண்டும் என்ற அச்ச உணர்வு முஸ்லீம் தலைவர்களுக்கு உண்டாயிற்று. அதனுடைய தவிர்க்க இயலா விளைவே தேசப்பிரிவினையாகும்.

Scanned by CamScanner

இந்தியா இரண்டுபடப் புவியில் அரியலும் (Geo-Politics) முக்கிய காரணமாக இருந்தது. எஸ்.ஆர்.மெஹ்ரோத்ரா (S.R.Mehrota) போன்ற ஆராய்ச்சியாளர்கள் 1906ல் முஸ்லீம் லீக் அமைக்கப்பட்டதாலோ அல்லது முஸ்லீம் பிரிவினை வாதம் வளர்ந்ததால் மட்டுமோ தேசம் துண்டுபட்டது என்ற வாதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தியாவின் சில பகுதிகளில் முஸ்லீம்கள் பெரும்பான்மையினராக இருந்தனர். அப்படிப்பட்ட பகுதிகளை ஒன்று சேர்த்து இந்தியாவிலிருந்து சுலபமாகப் பிரிக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் இருந்தன. அத்தகைய விரித்தரமான புவியில் சூழ்நிலையைத் தங்களுக்கு சாதகமாக்கிக்கொண்டு முஸ்லீம் லீக் பிரிவினை அரசியல் விளையாட்டில் ஈடுபட்டது. எப்பகுதியிலும் முஸ்லீம்கள் பெரும்பான்மையினராக இல்லாதிருந்தால் பாகிஸ்தான் பிரிவினை பற்றிய எண்ணமே எழுந்திராது. எனவே முஸ்லீம் பெரும்பான்மைப் பகுதிகளே தேசப்பிரிவினையைத் தவிர்க்க முடியாமல் செய்துவிட்டன.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவரும், தேசப்பிரிவினை ஏற்படுவதற்கான சூழ்நிலைகளை எல்லாம் நேரில் கண்டவரும், பிரிவினைத் திட்டத்தை இறுதிவரை எதிர்த்தவருமான அபுல் கலாம் ஆசாத் இந்தியா பிரிக்கப்பட்டதற்கு மௌன்ட்பேட்டன் பிரபுவே காரணம் எனக் கூறியுள்ளார். முஸ்லீம் லீக்கின் பிடிவாதப் போக்கைத் தனக்குச் சாதகமாக்கிக்கொண்டு அவர் நாட்டைக் கூறுபோட்டுவிட்டார் என்பது அவரது வாதம். ஏனெனில் அமைச்சரவை தூதுக்குழு (Cabinet Mission) தேசப்பிரிவினையை அங்கீரிக்கவில்லை; அது ஐக்கிய இந்தியாவுக்கே திட்டமிட்டது. ஆனால் மௌன்ட்பேட்டன் தனது திருத்தப்பட்ட திட்டத்தில் பாகிஸ்தான் பிரிவதற்கான வழியை வகுத்துவிட்டார். அதுமட்டுமல்ல, காங்கிரஸ் லீக் சச்சரவையும் நாட்டில் காட்டுத் தீ போல் பரவி இனக் கலவரங்களையும் தனக்குச் சாதகமாக்கிக்கொண்டு காங்கிரஸ் தலைவர்களைத் தனது பிரிவினைத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளுமாறு செய்தார். தனது திறமைகள் அனைத்தையும் ஒன்றுதிரட்டி, அரசியல் சாணக்கிய சாதுர்யங்களையெல்லாம் பயன்படுத்தி வணங்கா முடியாக இருந்த காந்தியை, தனது உடலைக் கூறுபோட்ட பின்தான் நாட்டைக் கூறுபோட முடியும் என குளுரைத்த காந்தியைத் தனது பிரிவினைத் திட்டத்துக்குப் பணிய வைத்துவிட்டார். ஆசாதின் கணிப்புப்படி வைசிராய் மௌன்ட்பேட்டன் பிரபுதான் இந்தியா பிரிவது தவிர்க்க முடியாமல் போனதற்கான காரணமாகும்.

இதற்கு மாறாக எச்.வி.ஹட்சன் (H.V.Hodson) போன்றவர்கள் இந்தியா பிரிவினை செய்யப்பட்டதற்கு இந்தியத் தலைவர்கள்தான் காரணம் எனக் கூறியுள்ளார். மௌன்ட்பேட்டன் பிரபு அமைச்சரவைத் தூதுக்குழு திட்டத்தின் அடிப்படையில் ஐக்கிய இந்தியாவுக்கான அரசியல் அமைப்பை உருவாக்கத்தால் முழுமூச்சுடன் முயன்றார். ஆனால் இந்திய அரசியல் தேக்கநிலை நோய்க்கு ஒன்றுபட்ட இந்திய அமைப்பு என்ற மருந்து பயனற்றுப் போயிற்று என்பதை அனுபவத்தின்மூலம் அறிந்த மௌன்ட்பேட்டன் அறுவை சிகிச்சையின்முலம் நோய்க்குத் தீர்வு கண்டார். பண்டைக் கால மகாஅலெக்சாண்டர் போல அவிழ்க்க முடியாத முடிச்சை வெட்டிவிட்டார் வைசிராய்! கி.ஆர். திட்டம்

பாகிஸ்தானுக்குரிய விதைகளைத் தாங்கி நிற்கவில்லையா? அதன் அடிப்படையில் காந்தி ஜின்னாவிடம் வலிந்துசென்று பேச்சுவார்த்தை நடத்தவில்லையா? மௌன்ட்பேட்டன் இந்தியாவுக்கு வருவதற்கு முன்னரே நேரு, படேல் போன்றோர் தேசப் பிரிவினையைத் தவிர்க்க முடியாத தீமை என்று ஏற்றுக் கொள்ளவில்லையா? பிரிவினைத் திட்டம் உறுதியானதுடன் முடிந்த முடிவை ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லையென காந்தியே சமாதானப் படுத்திக் கொள்ளவில்லையா? எனவே தேசப் பிரிவினைக்கு மௌன்ட்பேட்டன் பிரபுவைப் பொறுப்பாக்குவது சரியல்ல என்பது இவர்களது வாதம்.

எம்.எம்.சங்தர் (M.M.Sankhdher), எச்.வி.சேஷாத்ரி (H.V.Seshadri), எம்.சி.சக்லா (M.C.Chagla) போன்றோர் தேசப்பிரிவினை தவிர்க்கப்பட்டிருக்க வேண்டிய நிகழ்ச்சி என வாதிடுகின்றனர். தான் உயிருக்குயிராய் நேசித்த இந்திய ஒற்றுமை உருக்குலையும்போது தேசப் பிரிவினையை எதிர்த்து காந்தி சத்தியாகிரகத்தை துவக்கியிருக்க வேண்டும் எனக் கூறுகிறார் சங்கதர். இரு தேசக் கொள்கை (Two Nation Theory)யை முழுமூச்சுடன் எதிர்த்து வந்த காந்தி அது நடைமுறைப்படுத்தப்பட்டதை ஒத்துக் கொண்டிருக்கக் கூடாது என்கிறார் அவர். காந்தி மட்டும் தீவிரமான போராட்டத்தைத் துவக்கியிருந்தால் பிரிவினையைத் தவிர்த்திருக்க முடியும். இந்திய ஒற்றுமையை நிலை நாட்டியிருக்க முடியும் என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறார் சங்கதர். மௌன்ட்பேட்டனின் 1947 ஜூன் 3ஆம் தேதிய திட்டம் தேசப்பிரிவினையோடு இனக்கொலையையும் தேடித் தந்தது. ஆனால் அப்பிரிவினைத் திட்டத்தை உறுதியாக எதிர்த்திருந்தால் குறைவாகக் குருதி சிந்தி ஐக்கிய பாரதத்தை அடைந்திருக்கலாம் என்பது சேஷாத்ரியின் கணிப்பு. பாகிஸ்தானைப் பிரித்துக் கொடுத்தது குற்றம்; மடமை; இந்தியத் தலைவர்கள் அறிவுக் கூர்மையோடும், அரசியல் சாதுர்யத்தோடும் நடந்து கொண்டிருந்தால் தேசப் பிரிவினையை நிச்சயமாகத் தவிர்த்திருக்கலாம் என்று கருதுகிறார் சக்லா.

இந்திய தேசப் பிரிவினை தவிர்க்கக் கூடியதா அல்லது தவிர்த்திருக்க முடியாததா என்பதைப் பற்றி இன்னும் பல ஆண்டுகளுக்கு விவாதித்துக் கொண்டிருக்கலாம். கிடைக்கின்ற வரலாற்று ஆதாரங்களை வைத்துக்கொண்டு இதுபற்றி முடிந்த முடிவுக்கு வருவதென்பது இயலாத காரியம். வரலாற்று வரைவியலில் ஊகங்களுக்கும், உறுதியான வாக்குவாதத்துக்கும் இடமில்லை. இப்படிச் செய்திருந்தால் அப்படி நடந்திருந்தால் தேசப் பிரிவினையைத் தவிர்த்திருக்கலாம் என அடித்துப் பேசுவது பிடிவாதமாக இருக்கலாமேயன்றி அறிவுப்பூர்வமான ஆதாரங்களின் அடிப்படையில் கூறப்படும் வாதமாகாது. அப்படியாயின் முஸ்லீம்கள் இந்தியாவுக்குள் வராமலேயே இருந்திருந்தால் பாகிஸ்தான் பிரச்னையே ஏற்பட்டிருக்காது என வாதிடலாம்! இந்து முஸ்லீம் ஒற்றுமையின் அடிப்படையில்தான் இந்திய ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க முடியும் என்ற நீர்க்கதரிசனத் தீர்மானத்தோடுதான் காந்தி கிலாபத் இயக்கத்தை தீவிரமாக ஆதரித்தார். அந்த நம்பிக்கையில்தான் அவர் இந்திய ஒற்றுமையின் இன்றியமையாமை பற்றி இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் வலியுறுத்திப் பேசினார். எப்படியாவது பிரிவினையை தவிர்க்க வேண்டும் என்ற தணியாத தாகத்தால்தால் காந்தி வலியச்சென்று ஜின்னாவை அவருடைய இல்லத்தில்

Scanned by CamScanner

பலமுறை சந்தித்துப் பேசினார். அவரைப் போன்றே நேரு, பட்டேல், ராஜேந்திர பிரசாத், ராஜகோபாலாச்சாரி போன்றோரும் ஒத்திய இந்தியாவைக்காண வேண்டுமென்றே விழைந்தனர். ஆனால் நடைமுறை நிகழ்ந்திகள் நினைப்புக்கேற்றவாறு இல்லை. இடைக்கால அரசாங்கப் பரிசோதனையும் அதையொட்டி நாட்டில் நடைபெற்ற இனக்கலவரங்களும் வன்முறை நிகழ்ச்சிகளும் தேசப் பிரிவினையைத் தவிர்க்க முடியாததாக்கிவிட்டது. ஒன்றுபட்ட இந்தியாவை உயிருக்கும் மேலாக நேசித்த காந்தியே தேசப்பிரிவினை என்ற யதார்த்த உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று.

விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றுச் சிறப்பு

தனித்துவம்

இந்திய விடுதலைப் போராட்டம் வரலாற்றுச் சிறப்புடையது; தனித்தன்மை வாய்ந்தது. இதை உலகின் வேறு எந்த நாட்டின் சுதந்திரப் போருடனும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. ஏனெனில், இந்திய இயக்கத்தின் இலட்சியமும், போராட்ட முறைகளும், வியூகமும், உத்தியும், விளைவும் பிற போராட்டங்களிலிருந்து வேறுபட்டவையாகும்.

பன்முகப் போராட்டம்

இந்திய சுதந்திர இயக்கம் முன்பே முடிவு செய்யப்பட்ட, சித்தாந்த அடிப்படையில் திட்டமிடப்பட்ட ஒரு 'வரைபட வியூக'த்தை வழிகாட்டியாகக் கொண்டு தொடர்ச்சியாகப் போராடி வெற்றிபெறவில்லை. மாறாக, இது படிப்படியாக, விட்டுவிட்டு, பல முறைகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்பட்ட இயக்கமாகும்.

புரட்சியல்ல; வளர்ச்சி

பிரிட்டிஷ் அரசாங்கம் அறிமுகப்படுத்திய நாடாளுமன்ற ஜனநாயக அமைப்புகளை ஊன்றுகோலாகக் கொண்டு நடத்தப்பட்ட இயக்கமே இந்திய விடுதலைப் போராட்டமாகும். காங்கிரஸ் துவக்கப்பட்டு 7 ஆண்டுகளில் (1885-1892) மிதவாதிகள் மேற்கொண்ட முயற்சிகளால் 1892 இந்திய மன்றங்கள் சட்டம் இயற்றப்பட்டது. அடுத்த 11 ஆண்டு (1892-1909) காலத்தில் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளின் விளைவாக 1909ம் ஆண்டுச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அதைத் தொடர்ந்து 10 ஆண்டுகளில் (1909-1919) மிதவாதிகள், தீவிரவாதிகள், பயங்கரவாதிகள் மேற்கொண்ட மும்முனைத் தாக்குதலின் காரணமாக 1919 இந்திய அரசாங்கச் சட்டம் அல்லது மாண்ட்-போர்டு சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டது. அடுத்த 16 ஆண்டுகளில் (1919-1935) மேற்கொள்ளப்பட்ட ஒத்துழையாமை இயக்கம், சட்டமன்ற உள்ளிருப்பு ஒத்துழையாமை இயக்கம், பயங்கரவாதிகள் நிகழ்த்திய கொலைகள், கொள்ளை, சூரையாடல், ஆயுதக் கிளர்ச்சி, உயிர்த்தியாகம் ஆகியவற்றின் கூட்டுவிளைவால் 1935ஆம் ஆண்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இறுதிக்கட்ட 12 ஆண்டுகளில் (1935-1947) கட்டவிழ்த்து விடப்பட்ட 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம், சுபாஷ் போஸின் இந்திய தேசிய போர்முயற்சி, இந்தியக் கப்பல் படைக்கிளர்ச்சி ஆகியவற்றின் முடிவில் 1947 இந்திய விடுதலைச் சட்டம் இயற்றப்பட்டது; இந்தியா சுதந்திரம் பெற்றது. எனவே, இந்திய விடுதலைப் போராட்டதைப்

'புரட்சி' என்று கூறுவதைவிட 'பரிணாம வளர்ச்சி' என்று அழைப்பதே பொருத்தமாக இருக்கும்.

கட்சியல்ல; இயக்கம்

காங்கிரஸ் ஒரு அரசியல் கட்சியாகச் செயல்படாமல் ஒரு இயக்கமாக விடுதலைப் போராட்டத்தை முன்னின்று நடத்தியது. அதனால்தான் அது எந்த ஒரு சித்தாந்தத்தையும் மையப்படுத்தவில்லை. அனைத்து வகுப்பாரும் அதில் இடம் பெற்றிருந்தனர். பலதரப்பட்ட கருத்துக்களையும் காங்கிரஸ் எதிரொலித்தது. காங்கிரஸ் இந்தியரிடையே நாட்டுப்பற்றை வளர்த்து, அகில இந்தியக் கண்ணோட்டத்தைக் கொடுத்து, மதச்சார்பற்ற தேசிய ஜனநாயக இயக்கமாக இருந்து இந்திய விடுதலைக்காகப் போராடியது.

மக்கள் இயக்கம்

மக்களின் சம்மதமின்றி அவர்களை அச்சுறுத்தி நீண்டகாலம் ஆட்சி செய்ய முடியாது என்ற வரலாற்று உண்மையை நன்குணர்ந்த காந்தி மக்களின் அச்சத்தைப் போக்கி அறப்போராட்டத்துக்கு அவர்களில் ஆதரவைப்பெற்று, வீட்டைவிட நாடேமேல் என்ற எண்ணத்தை ஏற்படுத்தி இந்திய சுதந்திரப் போராட்டத்தை மாபெரும் மக்கள் இயக்கமாக மாற்றியது அரசியல் அதிசயமாகும்.

வரலாற்று முன்னுதாரணம்

பின்வாங்கி முன்னேறுவதும், முன்னேறிப் பின்வாங்குவதும் போராட்ட உத்திகளாகும். இந்திய விடுதலைப் போராட்டம் ஒரே நேர்கோட்டில் செல்லவில்லை. ஒத்துழையாமை இயக்கம் விலக்கிக்கொள்ளப்பட்டது (1922); சட்ட மறுப்புஇயக்கம் சமரசத்தில் முடிந்தது (1930-31); தனிநபர் சத்தியாக்கிரகம் (1933-34) கைவிடப்பட்டது; 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் (1942) தொடரப்படவில்லை. எனினும் இப்போராட்டங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணத் திட்டம்- கதர், கிராமக் கைத்தொழில், ஆதாரக் கல்வி, தீண்டாமை ஒழிப்பு, அரிஜன முன்னேற்றம், விதேசிப் பொருள் புறக்கணிப்பு, கள்ளுக்கடை மறியல் - வேறு வகையான விடுதலைப் போராட்டமாகப் பயன்படுத்தப்பட்டது வரலாற்று முன்னுதாரணமாகும்.

பிறநாடுகளுக்கு எடுத்துக்காட்டு

இந்திய விடுதலைப் போராட்டத் தலைவர்கள் இந்தியாவின் சுதந்திரத்துக்காக மட்டுமின்றி, அந்திய ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராடிப் பிற ஆசிய ஆப்பிரிக்க நாடுகளின் விடுதலைக்காகவும் உரக்கக் குரல் கொடுத்தனர்; ஆதரவு அளித்தனர். இந்திய இயக்கம் இந்நாடுகளுக்கு எடுத்துக்காட்டாகவும், முன்னோடியாகவும் திகழ்ந்தது.

விதையும் விளைச்சலும்

இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகுப் பின்பற்றப்பட்ட குறிக்கோள்களும், கொள்கைகளும், திட்டங்களும், நாடாளுமன்ற ஜனநாயக முறை, மக்களின் அடிப்படை உரிமைகள், மதச்சார்பின்மை, தற்சார்புப் பொருளாதாரம், சமுதாய சமத்துவம்; 'கடையனுக்கும் கடைத்தேற்றம்', வெளியுறவுக் கொள்கை விடுதலைப் போராட்ட காலத்தில் விதைக்கப்பட்ட விதைகளின் விளைச்சலே ஆகும்.

Scanned by CamScanner

பகுதி - IV

31. வகுப்புவாதத்தின் வளர்ச்சி

வகுப்புவாதம் மதத்தின் பெயரால் நடத்தப்படும் அரசியல் விபசாரம்.

- கே.எம். அஷ்ராப்.

வகுப்புவாதம் : ஒரு விளக்கம்

வகுப்புவாதம் என்றால் என்ன?

'வகுப்பு' என்ற சொல் விவசாயிகள், தொழிலாளர்கள் போன்ற பாட்டாளி வர்க்கத்தினரைக் குறிக்கும். ஆனால் 'வகுப்பு வாதம்' என்ற சொற்றொடர் ஒரு மதத்தாரின் உணர்வுபூர்வமான நம்பிக்கையைக் குறிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. வகுப்புவாதம் மூன்று ஊகங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது; 1. ஒரு சமயத்தைச் சேர்ந்தோர் அனைவரது நலன்கள் ஒன்றாகவே இருக்கும்; 2. ஒரு மதத்தாரின் நலன்கள் பிற மதத்தாரின் நலன்களிலிருந்து மாறுபட்டிருக்கும்; 3. பல மதத்தாரின் நலன்கள் ஒன்றுக்கொன்று விரோதமாக இருக்கும்.

வகுப்புவாதத்தின் இயல்பு

மேற்கண்ட ஊகங்கள் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டிருப்பதால் பகுத்தறிவுக்கு உட்படாது, விவாதத்துக்குக் கட்டுப்படாது, சட்டபியுக்குள் அடங்காது. வகுப்புவாதம் பயம், பாதுகாப்பின்மை, பதற்றம், விரோதம், குரோதம், காழ்ப்புணர்வு, பழிவாங்கல், கற்பனை வரலாற்றுக் கண்ணோட்டம் போன்றவற்றை உந்துசக்தியாகக் கொண்டு வெளிப்படும். வகுப்புவாத உணர்ச்சியை உயிர்நாடியாகக் கொண்டிருப்பதால், குறுகிய மனப்பான்மை கொண்டோர் வகுப்புவாதத்தைக் கருவியாகக் கொண்டு ஒரு மதத்தை சேர்ந்தோரை எந்த சமயத்திலும் வன்முறை வழியில் எளிதில் திருப்பிவிட முடியும். வகுப்புவாதம் மக்களை பிரிக்கும் இயல்புடையது; எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது; பேரழிவை உண்டாக்க வல்லது; பாசிசப் பாதையில் செல்லும் தன்மையுடையது.

மூவகை வகுப்புவாதம்

வகுப்புவாத மனப்பான்மை வகுப்புவாத அணுகுமுறையைத் தீர்மானிக்கிறது. அதன்படி வகுப்புவாத அணுகுமுறையை மூன்று வகையாகப் பிரிக்கலாம்:

1. உடன்பாட்டு வகுப்புவாதம் (Positive Communalism) : வகுப்புவாதத்தை சமயச்சார்பற்ற நோக்குடன் தேசநலனுக்காகப் பயன்படுத்தல். அதாவது மதநம்பிக்கையைத் தன்வாழ்வில் பின்பற்றிக் கொண்டு பொதுவாழ்வில் கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதாரம், அறிவியல் தொழில் நுட்பம் போன்ற

பொதுநலன்களைப் பெறுவதற்காகப் பாடுபடல். சுதந்திரப் போராட்டத்தின்போது காங்கிரஸில் இருந்த இந்து மற்றும் முஸ்லீம் தலைவர்களை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

2. பாதுகாப்பு வகுப்புவாதம் (Protective Communalism) : பல மதத்தினரைக் கொண்ட பன்முக சமுதாயத்தில் குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்தோர் தங்களது தனித்தன்மையைப் பாதுகாத்துக்கொண்டு தேசிய நீரோட்டத்தில் பங்கேற்பது. மாளவியா, லஜபதிராய், எஸ்.ஐ.கேல்கர், அலி சகோதரர்கள் ஆகியோரை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

3. தீவிர வகுப்புவாதம் (Extreme Communalism) : எண்ணத்திலும், சொல்லிலும், செயலிலும் வெறுப்பு கலந்து வன்முறையை வளர்த்துக்கொண்டு, எதிர்ப்பாளர்களை விரோதிகளாகக் கருதுவது. மதம் அழிந்துவிடும், இனம் பலவீனப்பட்டுப் போகும் என்று கூறிக்கொண்டு மாற்று மதத்தாரை அழித்து ஒழிக்கத் தயங்காமை. 1937க்குப் பிறகு செயல்பட்ட முஸ்லீம் லீக்கையும், ராஷ்ட்டிய சுயம்சேவக் சங்கத்தையும் இந்த வகையில் சேர்க்கலாம் என்று கூறுகிறார் வரலாற்று ஆய்வாளர் பிபன் சந்திரா. வகுப்புவாதத் தீவிரவாதிகளை 'வன்முறை சிறுபான்மையினர் (Militant Minority) என்று அழைக்கலாம்.

வகுப்புவாத அரசியல்

மதமாறுபாடுகள், மதவாத வகுப்பு வேறுபாடுகள் இந்தியாவுக்குப் புதிதன்று. மதவாத வகுப்புகளை ஆங்கிலேயர் உருவாக்கவில்லை. மாறாக அவர்கள் இந்த வகுப்பாரை இனம் கண்டு அடையாளம் காட்டினர். இவ்வகுப்பினரைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். இந்திய வகுப்புவாதிகளும் ஆங்கிலேயரை ஆதரித்து வாய்ப்புகளையும், சலுகைகளையும் பயன்படுத்திக் கொண்டனர். இந்திய வகுப்புவாதிகளும் ஆங்கிலேயரை ஆதரித்து வாய்ப்புகளையும் சலுகைகளையும் பெறத் தயங்கவில்லை. காலனி ஆட்சியின் போது ஆங்கிலக் கல்வியும் முற்போக்குக் கருத்துகளும், புதிய அமைப்புகளும் வேலைவாய்ப்பு மற்றும் நிர்வாக வசதிகளும் அதிகரித்ததால் அவற்றை அடைவதற்காக இந்து-முஸ்லீம் வகுப்புவாதிகள் போட்டி போட்டனர். மதவாதத்தை வகுப்புவாதமாக உருமாற்றி அரசியல் ஆதாயத்துக்காக வகுப்புவாத அரசியலில் (Communal Politics) பங்கேற்றனர். காங்கிரஸ் வகுப்புவாத அரசியலை ஏற்காததால் பிற முஸ்லீம், இந்து மதவாத வகுப்பார் காலனி அரசாங்க ஆதரவுக்காகப் பிரிந்துநின்று போட்டியிட்டனர். இந்த வகுப்புவாதப்போட்டி அரசியலை ஆங்கில ஆட்சியாளர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். இதுவே 'பிரித்தாளும் சூழ்ச்சி' என்று கூறப்படுகிறது.

முஸ்லீம் வகுப்புவாதம்

தோற்றம்:

இந்தியாவுக்குப் படையெடுத்து வந்த முஸ்லீம்கள் பல நூற்றாண்டுகள் ஆட்சியாளர்களாக இருந்தனர். பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் விளைவாக முஸ்லீம் ஆட்சியாளர்கள் ஆளப்படுவோராயினர். அவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியின்மீது

Scanned by CamScanner

அடங்கிப்போவது கடினமான காரியமாக இருந்தது. அதுமட்டுமல்ல, அதுவரை முகலாயரது ஆட்சிக்கு அடங்கிபோயிருந்த பெரும்பான்மை இந்துக்கள் முஸ்லீம்களை விரோதக் கண்ணோட்டத்தோடு பார்க்கத் துவங்கினர். இந்த இருமுனைத் தாக்குதலில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக சிறுபான்மை முஸ்லீம்கள் வகுப்புவாதக் கேடயத்தைப் பயன்படுத்தினர். வகுப்புவாதம் அவர்களது தற்காப்பு ஆயுதமாயிற்று! கருங்கக்கூறின், வரலாற்று நிகழ்வுகளான முஸ்லீம் படையெடுப்புகள், முகலாய ஆதிக்கம், ஆதிக்க வீழ்ச்சி, பிரிட்டிஷாரின் பிரித்தாளும் காலனிக் கொள்கை, இந்துக்களின் மனப்பான்மை ஆகியவை முஸ்லீம் வகுப்புவாதம் தோன்றக் காரணமாயிருந்தன.

வளர்ச்சி

வகாபி இயக்கம்

பஞ்சாப் சீக்கியர் ஆட்சிக்கு எதிராகத் துவக்கப்பட்ட முஸ்லீம் வகாபி இயக்கம் (Wahabi Movement) பின்னர் பிரிட்டிஷ் காலனி ஆட்சிக்கு எதிராகத் திரும்பியது. அந்த இயக்கம் முஸ்லீம்களிடையே காலனி எதிர்ப்புணர்வைத் தோற்றுவித்தது. 1857 பெருங்கிளர்ச்சிக்கான விதைகளை விதைத்து, அக்கிளர்ச்சியில் ஆங்கிலேயருக்கு எதிராகச் செயல்பட்டது. பெருங்கிளர்ச்சி முறியடிக்கப்பட்டபின் ஆங்கில அரசு முஸ்லீம்களை இரக்கமின்றி தண்டித்தது; சந்தேகக் கண்ணோட்டத்தோடு பார்த்தது. ஆட்சியாளர்களை விரோதித்துக் கொள்ள விரும்பாது, அவர்களின் பாதுகாப்பைப்பெற வகுப்புவாத உத்தியை முஸ்லீம்கள் கையாண்டனர். முஸ்லீம் வகுப்புவாதம் வளரத் தொடங்கியது.

சையத்அகமது கானின் பங்கு

சையத் அகமதுகான் ஒரு தேசிய முஸ்லீம் தலைவர். நாட்டுப் பற்றுமிக்க பரந்த உள்ளம் கொண்டவர். 1857 பெருங்கிளர்ச்சிக்குப் பின்னர் முஸ்லீம் சமூகத்தை மறுசீரமைக்கும் பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். பல கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களை ஏற்படுத்தி முஸ்லீம் முன்னேற்றப் பணியில் ஈடுபட்டார். இந்து முஸ்லீம் ஒற்றுமைக்குப் பாடுபட்டார். இந்துக்களும், முஸ்லீம்களும், கிறித்துவர்களும், பிற மதத்தாரும் ஒரு தேச மக்கள் என்று பிரச்சாரம் செய்தார். மத நல்லிணக்கத்தைத் தன் மூச்சாகக் கருதிச் செயல்பட்டார். ஆனால் அவர் 1885ல் இந்திய தேசிய காங்கிரஸ் அமைக்கப்பட்டவுடன் தன் நோக்கையும் போக்கையும் அடியோடு மாற்றிக் கொண்டார். அதற்குக் காரணம் இந்தியாவைவிட்டுப் போனவுடன் இந்து பெரும்பான்மையினரைக் கொண்ட காங்கிரஸ், முஸ்லீம் சிறுபான்மையினர்மீது ஆதிக்கம் செலுத்தி நியாயமாக நடந்து கொள்ளாது என்று அஞ்சினார். இந்த அச்சமே அவரை முஸ்லீம் வகுப்புவாதியாக மாற்றியது. சையத் அகமதுகான் முஸ்லீம்களை மத அடிப்படையில் ஒன்று சேர்த்து காங்கிரசுக்கு எதிராக அணி சேர்க்கத் துவங்கினார்.

சுதேசி இயக்கம், 1905-06

வங்காளத்தில் சுதேசி இயக்கம் நடைபெற்றபோது முஸ்லீம்கள் வெளிப்படையாக பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்தை ஆதரித்தனர். அந்த இயக்கத்தை ஆதரித்த முஸ்லீம்களை 'கவைக்குதவாத காட்டிக் கொடுப்போர்' என்றும் 'காங்கிரஸ் கறுங்காலிகள்' என்றும் நிந்தித்தனர் முல்லாக்களும்

மௌல்விகளும் இந்த இயக்கத்துக்கு ஒத்துழைப்பு கொடுக்கவில்லை. நவாப் சாலிமுல்லா போன்ற தலைவர்கள் சுதேசி இயக்க எதிர்ப்புக் குழுமையமாகச் செயல்பட்டனர். எனினும் அப்துல் ரசூல் போன்ற வங்காள முஸ்லீம் தலைவர்கள் அந்த இயக்கத்தை ஆதரித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. பொதுவாக வங்காள முஸ்லீம்கள் சுதேசி இயக்கத்தில் பங்கேற்கவில்லை என்பது முஸ்லீம் வகுப்புவாதத்தின் விளைவேயாகும்.

அகில இந்திய முஸ்லீம் லீக், 1906

சையத் அகமது கானின் வகுப்புவாத அணுகுமுறை 1906ம் ஆண்டு இறுதியில் முஸ்லீம் லீக் என்ற பெயரில் அமைப்பு வடிவம்பெற்றது. முஸ்லீம்கள் காங்கிரசில் சேரக்கூடாது என்பதே முஸ்லீம் லீக்கின் துவக்க நோக்கமாக இருந்தது. அந்த அமைப்பு காலனி ஆட்சிக்கு ஆதரவாக இருந்தது; வங்கப் பிரிவினையை ஏற்றுக் கொண்டது; முஸ்லீம்களின் பிரத்யேக நலன்களை அடிக்கோடிட்டுக் காட்டியது; முஸ்லீம்களுக்குத் தனித்தொகுதிகளையும், அரசாங்கப் பணிகளில் போதிய பாதுகாப்பையும் கோரியது; பெரும்பான்மை இந்துக்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த காங்கிரஸ்மீது அவநம்பிக்கை கொண்டது. பிபன் சந்திராவின் வார்த்தைகளில் முஸ்லீம் லீக் அரசாங்க "விசுவாசமிக்க, வகுப்புவாத, பழமைவாத அரசியல் அமைப்பு" ஆகும். இந்தியாவில் முஸ்லீம் வகுப்பு இனை பரப்பி வளர முஸ்லீம் லீக் காரணமாக இருந்தது.

மார்லி-மின்டோ சீர்திருத்தங்கள், 1909

முஸ்லீம லீக்கின் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்த பிரிட்டிஷ் அரசாங்கம் மார்லி-மின்டோ சீர்திருத்தங்கள் மூலம் இனவாரிப் பிரதிநிதித்துவ முறையை ஏற்றுக்கொண்டு முஸ்லீம்களுக்கெனத் தனித் தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. இத்தொகுதிகளில் முஸ்லீம்கள் மட்டுமே வேட்பாளர்களாக நிற்க முடியும்; முஸ்லீம்கள் மட்டுமே அவர்களுக்கு வாக்களிக்க முடியும். இந்த முஸ்லீம் தனித்தொகுதிகள் முஸ்லீம்களை ஒன்று சேர்க்கவும், அவர்களிடம் முஸ்லீம்களுக்கான கோரிக்கைகள்பற்றிப் பிரச்சாரம் செய்வதற்கும், முஸ்லீம் வகுப்பு ஒற்றுமையை வெளிப்படுத்தவும் சரியான அரசியல் அரங்காகவும், சக்திவாய்ந்த சாதனமாகவும் பயன்பட்டன. தேர்தல் முஸ்லீம்களின் வகுப்புவாத ஆற்றலை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பைக் கொடுத்தது. இதன் மூலம் முஸ்லீம் வகுப்புவாதம் வலுப்படுத்தப்பட்டது.

லக்னோ உடன்பாடு, 1916

1916ம்ஆண்டு காங்கிரசுக்கும் முஸ்லீம் லீக்குக்குமிடையே ஏற்பட்ட லக்னோ உடன்பாடுமூலம் முஸ்லீம் வகுப்புவாத அரசியலுக்கு முறையான அங்கீகாரம் அளித்தது. இந்த காங்கிரஸ்-லீக் திட்டம் முஸ்லீம் தனித்தொகுதி ஏற்பாட்டை ஏற்றுக்கொண்டதோடு, சட்ட மன்றங்களில் சிறுபான்மையினருக்கு இட ஒதுக்கீட்டு முறைக்கும் ஒப்புதல் தந்தது. இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த லக்னோ உடன்பாடு ஏற்பட சர்தார் வல்லபாய் படேலும், முகமது அலி ஜின்னாவும் மூலகாரணமாக இருந்தனர் என்பது நினைவு கூறத்தக்கது. இந்த உடன்பாட்டின்மூலம் இந்தியா தனிப்பட்ட நலன்களைக் கொண்ட மதவாத வகுப்புகளின் கோரிக்கைகளுக்கு நியாய அடிப்படையை அமைத்துத் கொடுத்தது. அந்த அடித்தளத்தின்மீது முஸ்லீம் வகுப்புவாதம் விரைவு படுத்தப்பட்டது.

Scanned by CamScanner

கிலாபத் இயக்கம், 1919-22

லக்னோ உடன்பாடு இந்து முஸ்லீம் ஒற்றுமையை பலப்படுத்தியது என்பதில் ஐயமில்லை. காங்கிரசும் முஸ்லீம் லீக்கும் ஒரே குரலில் இந்திய விடுதலைக்காக பேசின; போராடின. ரௌலட் சத்தியாக்கிரகத்திலும் ஒத்துழையாமை இயக்கத்திலும் இவ்விரண்டு அமைப்புகளும் ஓரமைப்பாக இருந்து செயல்பட்டன. இந்து முஸ்லீம் ஒற்றுமையை மேலும் பலப்படுத்த வேண்டும் என்ற பேராவலத்தில் காங்கிரஸ் கிலாபத் இயக்கத்துக்கு ஆதரவு அளித்தது.

கிலாபத் பிரச்சனை அடிப்படையிலேயே மத சம்மந்தப்பட்டது. முஸ்லீம்கள் துருக்கிக்கு ஆதரவாக பிரிட்டனுக்கு எதிராகத் துவக்கிய எல்லை தாண்டிய இப்போராட்டத்துக்கு காங்கிரசும் ஆதரவு அளித்ததால் முஸ்லீம்களின் வகுப்புணர்வு மேலும் தூண்டி விடப்பட்டது. அவர்களுடைய மதப்பற்று பலப்பட்டது. கிலாபத் தலைவர்கள் முஸ்லீம்களின் மத ஒற்றுமைக்கும் மதஅடிப்படையிலான கோரிக்கைக்கும் புதிய பரிமாணங்களைக் கொடுத்தனர். துருக்கிக்காக இந்தியா போராடக்கூடிய சூழ்நிலை உருவாயிற்று. முஸ்லீம் மதத் தலைவர்கள் அரசியலில் தலையிட்டனர். இதன் விளைவாக மத அடிப்படையில் முஸ்லீம் கிலாபத் இயக்கம் கூட்டொற்றுமை பெற்றது. மதம் அரசியலோடு கலந்தது. மதவாத அரசியல் முஸ்லீம் வகுப்புவாதத்துக்கு உந்து சக்தியாக அமைந்தது.

போட்டி வகுப்புவாதம், 1922-27

1922 பிப்ரவரி மாதம் ஒத்துழையாமை இயக்கம் திடீரென விலக்கிக் கொள்ளப்பட்டது. இரட்டை ஆட்சி அறிமுகப்படுத்தப்பட்டது. கொந்தளித்துக் கொண்டிருந்த முஸ்லீம் வகுப்புவாத உலை ஒசையின்றி அடங்கிப் போயிற்று. அதனால் ஏமாற்றமடைந்த முஸ்லீம் தலைவர்கள் காங்கிரசின் நோக்கத்தையும் வாக்குறுதியையும் சந்தேகித்தனர். தேசிய உடையைக் கழற்றிவிட்டு வகுப்புவாதத் தொப்பியை அணிந்து கொண்டனர். இந்து முஸ்லீம் ஒற்றுமையில் பிளவும் ஏற்பட்டது.

1923ல் தோற்றுவிக்கப்பட்ட இந்து மகாசபை எரியும் நெருப்பில் எண்ணெயை வார்த்தது. இந்த வகுப்புவாத இந்து அமைப்பு சங்கதன், சுத்தி இயக்கங்களைத் துவக்கி முஸ்லீம்களை தாக்கின, தாக்கிக் இயக்கங்களுக்கு எதிராக எதிர் மதமாற்றத்தில் தீவிரமாக ஈடுபட்டது. மதமாற்றம் முக்கியத்துவம் பெற்றது.

மௌலானா முகமது அலி, ஷௌகத் அலி போன்ற தேசிய முஸ்லீம் தலைவர்கள்கூட காங்கிரஸ் இந்தியாவில் இந்து ஆட்சி அமைக்க முயற்சிப்பதாகக் குற்றம் சாட்டினர். இந்துக்கள் முஸ்லீம்களின்மீது ஆதிக்கம் செலுத்தி அடக்கிவிடுவார்கள் என்று அச்சுறுத்தினர். குழம்பிய குட்டையில் மீன்பிடித்த இந்து மகாசபையின் நடவடிக்கைகளால் போட்டி மதவாதம் தீவிரமடைந்தது. 1922ல் ஒத்துழையாமை இயக்கம் நிறுத்தப்பட்டதிலிருந்து அடுத்த ஐந்தாண்டுகளுக்கு முஸ்லீம் வகுப்புவாதம் இந்து வகுப்புவாதத்துக்குப் போட்டியாக வீரியத்துடன் வளர்ந்தது.

டெல்லி கோரிக்கைகள், 1927

முஸ்லீம் வகுப்புவாதம் மேலும் வளரவும் விரிவடையவும் சைமன் கமிஷன் நல்ல வாய்ப்பைக் கொடுத்தது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு முஸ்லீம் வகுப்புவாதத் தலைவர்கள் 1927 டிசம்பர் மாதம் டெல்லியில் கூடி தங்கு அடிப்படைக் கோரிக்கைகளை முறைப்படுத்தினர். டெல்லி கோரிக்கைகள் (Delhi Proposals) என்று அறியப்படுபவை: 1. மத்திய சட்டமன்றத்தில் முஸ்லீம்களுக்கு 33.3 சதவிகிதம் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும்; 2. பஞ்சாபிலும் வங்காளத்திலும் முஸ்லீம் மக்கள் தொகைக்கேற்ற விகிதாச்சாரத்தில் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும்; 3. முஸ்லீம்கள் பெரும்பான்மையினராக உள்ள சிந்து தனிமாகாணமாக வேண்டும் 4. வடமேற்கு எல்லை மாகாணம் பிற மாகாணங்களுக்குச் சமமாகக் கருதப்பட வேண்டும்.

14 அம்சத் திட்டம்

சைமன் கமிஷன் சவாலை எதிர்கொள்வதற்காக வரையப்பட்ட 'நேரு அறிக்கை' லக்னோ உடன்பாட்டுக்கு மாறாக முஸ்லீம் தனித்தொகுதிகளுக்கு பதில் இந்து முஸ்லீம் கூட்டுத் தொகுதிகளைப் பரிந்துரைத்தது. இந்த அறிக்கை காங்கிரஸ்மீது முஸ்லீம் தலைவர்களுக்கு இருந்த அவநம்பிக்கையை அதிகரிக்கவே செய்தது. முகமது ஷபி, ஆகாகான் போன்ற முஸ்லீம் லீக் தலைவர்களும், பிற முஸ்லீம் அமைப்புகளும் தனித்தொகுதிகளைத் தியாகம் செய்யத் தயாராயில்லை. நேரு அறிக்கை முஸ்லீம் தலைவர்கள் நெருக்கமாக ஒன்று சேர்வதற்கான வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தது.

1912ல் முஸ்லீம் லீக்கில் சேர்ந்த பின்னரும்கூட தேசியவாதத் தலைவராகத் திகழ்ந்த ஜின்னாகூட வகுப்புவாதக் கட்டாயத்துக்கு உள்ளாகி முஸ்லீம் வகுப்புவாதியாக உருமாற்றமடைந்தார். ஜின்னா முஸ்லீம் வகுப்புவாதக் கோரிக்கைகளை எல்லாம் ஒன்றுதிரட்டி 14 அம்சத் திட்டத்தைத் தயாரித்தார். ஜின்னாவின் தலைமையில் டெல்லியில் கூடிய முஸ்லீம் லீக்கின் சிறப்புக் கூட்டத்தில் ஜின்னாவின் திட்டம் பரிசீலிக்கப்பட்டது (1929 மார்ச் 28). நேரு அறிக்கை முஸ்லீம்களின் 'சாவாணை' என்று வர்ணிக்கப்பட்டது. சுருங்கக்கூறின், சைமன் கமிஷன் வருகை முஸ்லீம் வகுப்புவாதம் மேலும் வலுப்பெற்று வளர்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தது.

வட்டமேஜை மாநாடுகள், 1930-32

முஸ்லீம் வகுப்புவாதத் தலைவர்கள் வட்டமேஜை மாநாடுகளைச் செவ்வனே பயன்படுத்திக் கொண்டனர். இவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுடன் இணைந்து செயல்பட்டனர். முதல் மாநாட்டில் சிறுபான்மை வகுப்பாரின் பிரதிநிதித்துவப் பிரச்சனை வலியுறுத்தப்பட்டது. இரண்டாவது மாநாட்டில் இந்த பிரச்சனை பிரதானமாக விவாதிக்கப்பட்டது. சிறுபான்மையினருக்கு அளிக்க வேண்டிய பாதுகாப்பு குறித்து பிரிட்டிஷ் அரசாங்கமே முடிவு செய்யும் என்று அறிவிக்கப்பட்டது. மூன்றாவது மாநாட்டில் சிறுபான்மையினர் பாதுகாப்பு உள்ளிட்ட பிரச்சனைகள் விவாதிக்கப்பட்டன. அதன் அடிப்படையில்தான் வெள்ளை அறிக்கை தயாரிக்கப்பட்டு (1933), 1935 இந்திய அரசாங்கச் சட்டமாக நிறைவேற்றப்பட்டது. மூன்று வட்டமேஜை மாநாடுகளிலும் முஸ்லீம்

Scanned by CamScanner

வகுப்புவாதிகளும். இந்து வகுப்புவாதிகளும் போட்டி போட்டுக்கொண்டு தங்களது வகுப்புவாத நலன்களைப் பாதுகாத்துக் கொள்ள முற்பட்டனர். 1928ல் ஆகாகான் முகமது இக்பால், ஷபாத் அகமது போன்ற பிரபலங்கள் இரு தரப்பினராக முஸ்லீம்கள் நலனும் இந்துக்கள் நலனும் என்றுமே ஒன்றுசேர முடியாது என்று உறுதியாகக் கூறினார்.

வகுப்புத் தீர்வு 1932

இரண்டாம் வட்டமேஜை மாநாட்டில் அறிவித்தபடி பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மாக்டொனால்டு வகுப்புத் தீர்வை (Communal Award) வெளியிட்டார். இத்தீர்வு டெல்லி கோரிக்கைகள் மற்றும் ஜின்னாவின் 14 அம்சத் திட்டம் ஆகியவற்றுக்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அங்கீகாரத்தைக் கொடுத்தது எனலாம். இத்தீர்வு தொய்வடைந்திருந்த முஸ்லீம் வகுப்புவாதத்தை முட்டுக் கொடுத்துத் தூக்கி நிறுத்தியது. முஸ்லீம் வகுப்புவாதம் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஆதரவோடு புதுநம்பிக்கையுடன் வளரலாயிற்று. 1935 சட்டம் முஸ்லீம் வகுப்புவாத நம்பிக்கைக்கு வடிகாலாக அமைந்தது.

பிரிவினை வகுப்புவாத வளர்ச்சி, 1937-47

1937 பொதுத் தேர்தல்

1935 இந்திய அரசாங்கச் சட்டம் சிறுபான்மைச் சமுதாயங்களுக்கு சட்ட மன்றங்களில் இட ஒதுக்கீட்டுப் பாதுகாப்பு வழங்கப்பட்டது. அச்சட்டத்தின் மாநில சுயாட்சித் திட்டத்தின்கீழ் 1937ம் ஆண்டு மாநிலச் சட்டமன்றங்களுக்கான தேர்தல் நடத்தப்பட்டது. அந்தத் தேர்தல் முஸ்லீம் வகுப்புவாத வளர்ச்சி வரலாற்றில் முக்கிய திருப்புமுனையாகும். காங்கிரசும், முஸ்லீம் லீக்கும் 1937 தேர்தலில் போட்டியிட்ட பிரதான கட்சிகளாகும். தேர்தல் முடிவில் காங்கிரஸ் பலமான வலுவான கட்சியாக நிமிர்ந்து நின்றது. முஸ்லீம் லீக் தனித்தொகுதிகளுக்காக ஒதுக்கப்பட்ட 482 இடங்களில் 109 இடங்களில் மட்டுமே வெற்றிபெற முடிந்தது. லீக்குக்கு 4.6 சதவிகித வாக்குகளே கிடைத்தன! எஞ்சிய இடங்களைக் காங்கிரஸ் நேசிய முஸ்லீம் வேட்பாளர்கள் வென்றனர். இதன்மூலம் ஜனநாயகத் தேர்தல் அரசியலில் முஸ்லீம் லீக் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பே இல்லை என்ற கசப்பான உண்மையை உணர்ந்து கொண்டது. தேர்தலில் மகத்தான வெற்றி பெற்ற காங்கிரஸ் மதவாதத்துக்கு எதிரான பிரச்சாரத்தை முடுக்கிவிட்டது. காங்கிரசிலிருந்து வகுப்புவாதிகளை வெளியேற்ற முனைந்தது. முஸ்லீம் வகுப்புவாதம் தீவிர பயங்கர பிரிவினைவாத வடிவெடுத்தது. ஜின்னாவின் தலைமையில் முஸ்லீம் பிரிவினைவாத வகுப்புவாதிகள் அணி திரண்டனர்.

வகுப்புவாதி ஜின்னா

1937 தேர்தலுக்குப் பிறகு ஜின்னா காங்கிரசுடன் இருந்த தொடர்பைத் துண்டித்துக் கொண்டார். 14 அம்சத் திட்டத்தின் மூலம் வகுப்புவாதியான ஜின்னா இந்தத் தேர்தலுக்குப் பின் தீவிர பிரிவினை வகுப்புவாதியானார். காங்கிரஸ் இந்தியாவில் இந்து ராஜ்யத்தை ஏற்படுத்த முற்படுவதாகவும், இந்தியா சுதந்திரம் பெற்றபின் முஸ்லீம்கள் முற்றிலுமாக அழிக்கப்படுவர் என்றும், பாகிஸ்தான் தனிநாடாக உருவானால் மட்டுமே முஸ்லீம்களுக்கு விமோசனம் கிடைக்கும் என்றும் பிரச்சாரம் செய்தார். "பாகிஸ்தான் நடைமுறை சாத்தியமான இலக்கு

மட்டுமல்ல, அது மட்டுமே ஒரே இலக்காகும். அப்போதுதான் இந்தியாவில் இன்னும் அழிக்கப்படுவதைத் தடுக்க முடியும்" என்று கூறி ஜின்னா மதத்தை அரசியல் ஆதாயத்துக்குப் பயன்படுத்தினார். முஸ்லீம்களின் மனதில் பிரிவினைவாத, வகுப்புவாத வித்துக்களைத் தூவினார்.

லக்னோ சமரசப் பேச்சு, 1937

1937 தேர்தலுக்கும் பிறகு மாகாணங்களில் அரசாங்கம் அமைக்கும் வேலை தொடங்கியது. காங்கிரஸ் விதித்த நிபந்தனைகளை அரசாங்கம் ஏற்காததால் ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம், பிகார், ஒரிஸா, வெள்ளை ஆகிய மாகாணங்களில் கவர்னர்கள் இடைக்கால அரசாங்கங்களை அமைத்தனர். ஐக்கிய மாகாணத்தில் முஸ்லீம் லீக் அத்தகைய அரசாங்கத்தை அமைத்தது. பண்டேல்கண்டு இடைத்தேர்தலில் லீக் வெற்றி பெற்றது. 1937 ஜூலை மாதம் காங்கிரஸ் அரசாங்கம் அமைக்க முன்வந்ததால் பிரச்சனை எழுந்தது. காங்கிரசுக்கு அறுதிப் பெரும்பான்மை இருந்ததால் தனித்தே அரசாங்கம் அமைக்க விரும்பியது. ஆனால் முஸ்லீம் லீக் கூட்டணி ஆட்சி கோரியது. இதுபற்றி காங்கிரசுக்கும் முஸ்லீம் லீக்குக்குமிடையே லக்னோவில் சமரசப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்நிபந்தனைகளுக்குட்பட்டு இரண்டு லீக் பிரதிநிதிகளை அமைச்சரவையில் சேர்த்துக்கொள்ள காங்கிரஸ் சம்மதித்தது: 1. ஐக்கிய மாகாணத்தில் முஸ்லீம் லீக்கைக் கலைத்துவிட வேண்டும்; 2. லீக் நாடாளுமன்ற போர்டைக் கலைத்துவிட வேண்டும்; 3. அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்படும் லீக் நியமன உறுப்பினர்கள் காங்கிரசில் சேர வேண்டும்; 4. இனிவரும் இடைத்தேர்தல்களில் காங்கிரஸ் முஸ்லீம் வேட்பாளர்கள்தான் நிறுத்தப்படுவர். இந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வது தற்கொலைக்குச் சமம் என்பதால் முஸ்லீம் லீக் அமைச்சரவையில் சேரவில்லை. இந்த லக்னோ சமரசப் பேச்சு காங்கிரஸ் முஸ்லீம் லீக்குக்கிடையே பெரும்பிளவை ஏற்படுத்தியது. முஸ்லீம் வகுப்புவாதம் மேலும் தீவிரமடைந்தது.

போர்ப் பாதையில் ஜின்னா, 1937-42

பாசிசப்பாதை

ஜனநாயக முறையில் சாதிக்க முடியாததை பாசிச வழியில் சென்று வெற்றிபெற முடிவு செய்தார் ஜின்னா. முஸ்லீம் மக்களைத் திரட்டி அவர்களுடைய ஆதரவோடு மறுசீரமைக்கப்பட்ட முஸ்லீம் லீக்கை வகுப்புப் போராட்ட ஆயுதமாகக் கொண்டு காங்கிரசுக்கு இணையான இடத்தைப் பெரும் முயற்சியில் தீவிரமாகத் திட்டமிட்டு இறங்கினார். காங்கிரஸ் மாகாண அரசாங்கங்கள் முஸ்லீம் லீக்கையும், முஸ்லீம் கலாச்சாரத்தையும் அழிப்பதாக அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளைக் கூறினார். வகுப்புணர்ச்சி தூண்டிவிடப்பட்டது. வகுப்புக் கலவரங்கள் நிகழ்ந்தன. 1939க்கு முன் நடைபெற்ற பல இடைத்தேர்தல்களில் முஸ்லீம் லீக் வெற்றி பெற்றது. பிரிட்டிஷ் அரசாங்கம் 1. முஸ்லீம் லீக்கை முஸ்லீம்களின் ஏக பிரதிநிதியாக அங்கீகரிக்க வேண்டும்; 2. லீக்கை காங்கிரக்குள் சமமாகக் கருத வேண்டும்; 3. மத்தியிலும் மாநிலங்களிலும் முஸ்லீம் லீக்-காங்கிரஸ் கூட்டணி அரசாங்கம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து வலியுறுத்தினர். ஆனால் 1939

Scanned by CamScanner

அக்டோபர் 25ம் தேதி மாகாண அரசாங்கங்களிலிருந்து விலகிக்கொண்ட காங்கிரஸ் முஸ்லீம் லீக்குடன் பேச்சு வார்த்தை நடத்தத் தயாராயில்லை.

பிடிவாதம்

ஜின்னா வகுப்புவாதத் திட்டத்தைப் புதுஉத்வேகத்துடன் செயல்படுத்தத் துவங்கினார். 1939 டிசம்பர் 22ம் தேதியை மீட்பு நாளாக (Day of Deliverance) க் கொண்டாட வேண்டுமென்று முஸ்லீம்களைக் கேட்டுக் கொண்டார். 1940 மார்ச் 22ம் தேதி லாகூரில் நடைபெற்ற முஸ்லீம் லீக் கூட்டத்தில் ஜின்னா 1.இந்துக்களும் முஸ்லீம்களும் இரு தருவங்கள் என்றும்; 2. முஸ்லீம் பெரும்பான்மையுடைய வடமேற்கு மற்றும் கிழக்குப் பகுதிகள் வகுப்பு அடிப்படையில் சுதந்திர மாகாணத் தொகுப்புகளாக உருவாக்கப்பட வேண்டும்; 3. தனியாக 'முஸ்லீம் தாய் நாடு' அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை எழுப்பினார். இக்கோரிக்கைகள் அரசியல் விழிப்புணர்வு கொண்ட முஸ்லீம்களிடையே காட்டுத் தீ போலப் பரவிற்று. கிரிப்ஸ் மிஷன் தோல்விக்குப் பின் துவக்கப்பட்ட 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தை ஜின்னா ஆதரிக்கவில்லை. அவர் அந்த இயக்கத்தை ஆதரிக்க வேண்டாம் என்று முஸ்லீம்களைக் கேட்டுக் கொண்டார்.

காந்தி-ஜின்னா சந்திப்பு

1944 செப்டம்பர் மாதம் காந்தி, ஜின்னாவைப் பம்பாயில் அவரது மலபார் மலைமாளிகையில் சந்தித்து பாகிஸ்தான் பற்றிய ராஜாஜி திட்டத்தை விவாதித்தார். விவாதம் வெற்றி பெறவில்லை. ஆனால் அந்த சந்திப்புதான் தன்னை இந்திய முஸ்லீம்களின் ஒரே பிரதிநிதி என்பதை மெய்ப்பித்து விட்டதாக ஜின்னா கூறிக் கொண்டார். அரசியல் சந்தையில் ஜின்னாவின் மதிப்பும் அந்தஸ்தும் கவுரவமும் உயர்ந்தது. ஜின்னா அந்த சந்திப்பை வகுப்புவாதத்தை விதிவிடப் பயன்படுத்தினார். காந்தி இந்துக்களின் பிரதிநிதியாகவும், ஜின்னா முஸ்லீம்களின் பிரதிநிதியாகவும் சமநிலையில் இருப்பதுபோன்ற தோற்றத்தை ஏற்படுத்தினார்.

வேவல் திட்டம்

ஜின்னா வைசிராய் வேவல் திட்டத்தை சாதுர்யமாகப் பயன்படுத்திக் கொண்டார். அத்திட்டம் காங்கிரஸ் முஸ்லீம் லீக்குக்கிடையிலான அரசியல் சமயிகித முறையை வகுப்புச் சமயிகிதமாக உருமாற்றம் செய்துவிட்டது. அதை உடும்புப் பிடியாகப் பற்றிக் கொண்ட ஜின்னா 1. சாதி இந்துக்களும் முஸ்லீம்களுக்குச் சமயிகிதப் பிரதிநிதித்துவம்; 2. மத்தியிலும் மாநிலங்களிலும் கூட்டணி ஆட்சி; 3. மத்திய அமைச்சரவையில் இடம்பெறும் முஸ்லீம் பிரதிநிதிகள் அனைவரையும் முஸ்லீம் லீக்கே நியமித்தல் ஆகிய முப்பெரும் கோரிக்கைகளை வற்புறுத்தினார். வைசிராய் கூட்டிய சிம்லா மாநாட்டை (1945 ஜூன்) இந்த கோரிக்கைகளை மீண்டும் வற்புறுத்திக் கூறுவதற்கான வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டார்.

இடைக்கால அரசாங்கம்

அமைச்சரவைத் தூதுக்குழுவின் திட்டம் முஸ்லீம் லீக்கின் கோரிக்கைக்குச் சாதகமாக இருப்பதாகக் கூறி ஜின்னா அத்திட்டத்தை ஏற்றுக் கொண்டார் (1946 ஜூன் 6). பின்னர் காங்கிரசின் பாகிஸ்தான் திட்ட விரோதப் போக்கைக் காரணம்காட்டி அத்திட்டத்திலிருந்து விலகிக் கொண்டார் (ஜூலை 29, 1946 செப்டம்பர் 2ம் தேதி காங்கிரஸ் உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட இடைக்கால அரசாங்கத்தில் நாமதமாகச் சேர்ந்த முஸ்லீம் லீக் அரசாங்க அதிகாரத்தை வகுப்புவாதத்தைத் தூண்டிவிட வும், பாகிஸ்தான் திட்டத்தை விளம்பரப் படுத்தவும் பயன்படுத்தியது. ஜின்னாவைப் பொறுத்தவரை "இடைக்கால அரசாங்கம் உள்நாட்டுப் போரை வேறு வழியில் தொடர்வதாகும்" என்று கூறுகிறார் பிபன் சந்திரா. அதற்குக் காரணம் முஸ்லீம் லீக் இடைக்கால அரசாங்கத்தில் சேர்வதற்கு முன் 'நேரடி நடவடிக்கை நாள்' (1946 ஆகஸ்டு 16) என்ற பெயரில் ஜின்னாவின் முஸ்லீம் லீக் கல்கத்தாவில் இந்துக்கள்மீது 'புனிதப்போர்' தொடுத்ததாகும்.

விளையும் விளைவும்

அரசியலமைப்புச் சட்ட மன்றத்தின் (Constituent Assembly) மூலம் பாகிஸ்தான் அடைவதைவிட நேரடியாகப் போராடி அதைப் பெறுவதே நடைமுறைச் சாத்தியமானது என்ற முடிவுக்கு வந்தார் ஜின்னா. அந்த நோக்கில் அட்லியின் அறிவிப்பு வெளியிடப்பட்டது (1947 பிப்ரவரி 20). அந்த அறிவிப்பைத் தொடர்ந்து இந்தியாவுக்கு வந்த வைசிராய் மௌண்ட்பேட்டன் பிரபு (மார்ச் 2) காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக் தலைவர்களுடன் தொடர்ந்த விவாதத்திற்குப் பிறகு இந்தியப் பிரிவினைத் திட்டத்தை அறிவித்தார் (ஜூன் 3). அத்திட்டத்தைக் காங்கிரசும் முஸ்லீம் லீக்கும் ஏற்றுக் கொண்டன. இந்திய விடுதலைச் சட்டப்படி 1947 ஆகஸ்டு 15ம் நாள் இந்தியாவும் பாகிஸ்தானும் இறையாண்மை பெற்ற சுதந்திர நாடுகளாயின. ஜின்னா வகுப்புவாதத்தை விதைத்து பாகிஸ்தானைப் பழமாகப் பெற்றார்!

இந்து வகுப்புவாதம்

தோற்றம்

1857 பெருங்கிளர்ச்சி தோற்கடிக்கப்பட்ட பின்னர் இந்து வகுப்புவாதம் தோன்றியது எனலாம். 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்த வகுப்புவாதிகள் இடைக்காலத்தில் முகலாய மன்னர்கள் இந்து விரோதப் போக்கைக் கடைபிடித்ததாகவும், இந்துக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் பற்றியும், கட்டாய மதமாற்றம் குறித்தும், கோயில்கள் இடிக்கப்பட்டு மசூதிகள் கட்டப்பட்டதாகவும் தீவிர பிரச்சாரம் செய்தனர். ஆங்கிலேயர் இந்துக்களை முஸ்லீம்களின் அடக்குமுறைக் கொடுமையிலிருந்து மீட்டதாகக் கூறினர். உருது முஸ்லீம்களின் மொழி என்றும் இந்தி இந்துக்களின்மொழி என்றும் வேறுபடுத்திக் காட்டினர். 1890 துவக்கத்தில் பசுவதைக்கு எதிராக இந்தியாவின் பல பகுதிகளில் பிரச்சாரம் செய்யப்பட்டது. மாட்டிறைச்சி சாப்பிட்ட ஆங்கிலேயருக்கு எதிராக எதுவும் கூறாமல் பசுக்கொலைத் தடுப்புப் பிரச்சாரம் முஸ்லீம்களுக்கு எதிராகத் திருப்பி விடப்பட்டது. விளைவு? வகுப்புக் கலவரங்கள்.

சாதகமான சூழ்நிலை

பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் இந்தியாவில் வகுப்புவாதம் வேரூன்றி வளர்வதற்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்தது. காலனி

Scanned by CamScanner

ஆட்சியில் 1. இந்துக்கள், முஸ்லீம்கள், சிக்கியர் என்ற வகுப்புவா அங்கீகரிக்கப்பட்டன; 2. வகுப்புவாரியாக வேலைகளும் சட்டமன்றங்களில் பிரதிநிதித்துவமும், சலுகைகளும் தரப்பட்டன; 3. வகுப்புவாதத் தலைவர்கள் சம்பந்தப்பட்ட வகுப்பாரின் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டனர்; 4 வகுப்புவாதிகளின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டன; 5. வகுப்புவாதப் பிரச்சாரங்கள் பொறுத்துக் கொள்ளப்பட்டன; 6. வகுப்புவாதப் பிரச்சாரத்தில் ஈடுபட்ட தலைவர்கள், பத்திரிகைகள், பிரச்சாரகர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இத்தகைய சாதகமான சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு இந்து மற்றும் முஸ்லீம் வகுப்புவாதிகள் தங்களது வகுப்புவாதத்தைப் பரப்பும் பணியில் ஈடுபட்டனர். அதுமட்டுமல்ல வகுப்புவாதிகள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள், அரசாங்க ஊழியர்கள், சட்டமன்ற உள்ளாட்சித் துறை உறுப்பினர்கள் பதவிகளைப் பெறுவதற்காக காலனி அரசாங்கத்தைப் போட்டி போட்டுக் கொண்டு ஆதரித்தனர்! இவர்கள் மக்கள் பிரச்சனைகள்பற்றிக் கொஞ்சமும் கவலைப்படவில்லை என்பது நினைவுகூறத்தக்கது.

இந்து வகுப்புவாத வளர்ச்சி, 1909-1937

பஞ்சாப் இந்து சபை, 1909

20ம் நூற்றாண்டின் துவக்கத்தில் இந்து வகுப்புவாதம் அமைப்பு வடிவம் பெற்றது. திலகரும், அரவிந்தரும் தீவிர வகுப்புவாதிகளாக இருந்த போதிலும் அவர்கள் காங்கிரசுக்கு உள்ளிருந்தே செயல்பட்டார்களேயன்றி, காங்கிரசுக்கு வெளியே எந்த மதவாத அமைப்பையும் ஏற்படுத்தவில்லை. அத்தகைய அமைப்பு ஆரிய சமாஜம் மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்த பஞ்சாபில் தோற்றுவிக்கப்பட்டது. 1909ல் பிரிட்டிஷ் அரசாங்கம் முஸ்லீம்களுக்குத் தனித்தொகுதிகளை அமைக்க ஒப்புக்கொண்டதை எதிர்க்கும் விதமாக அதே ஆண்டில் பஞ்சாப் ஆரிய சமாஜிகள் இந்து சபையைத் துவக்கினர். அதிலிருந்து அவர்கள் 'ஆரியர்கள்' என்று கூறிக்கொள்வதை விட்டு 'இந்துக்கள்' என்று அழைத்துக் கொண்டனர்!

முதலில் இந்து, பிறகு இந்தியன்

லாலா லஜபதிராய், லால்சந்த், யு.என்.முகர்ஜி போன்றோர் முக்கிய இந்து சபைத் தலைவர்களாகத் திகழ்ந்தனர். இவர்கள் 'இந்துக்கள்தான் இந்திய தேசம்' என்ற கருத்தைப் பரப்பி வந்தனர். குறிப்பாக லால்சந்தும், முகர்ஜியும் அனைத்து வகுப்பாரையும் ஒரு குடையின்கீழ்க் கொண்டுவந்து இந்திய தேசத்தை உருவாக்க வேண்டும் என்ற காங்கிரஸ் கொள்கையைக் கடுமையாகக் குறை கூறினார். லால்சந்த் எழுதிய 'அரசியலில் தன்னை அழித்துக் கொள்ளல்' (Self Abnegation in Politics) என்ற நூலில் காங்கிரசைத் 'தன்னை அழித்துக் கொள்ளும் தூதிர்ஷ்டம்' என்றும், 'மதச்சார்பின்மை தற்கொலைக்குச் சமம்' என்றும் ஒவ்வொரு இந்துவும் 'முதலில் நான் ஒரு இந்து' பிறகுதான் இந்தியன்' என்ற உணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். பஞ்சாப் இந்து சபையைப்போன்றே இக்கிய மாகாணத்திலும் ஒரு சபை அமைக்கப்பட்டது.

அந்து மகாசபை, 1915

இந்து சபைகளையும் அதுபோன்ற இந்து வகுப்புவாத அமைப்புகளையும் ஒன்று சேர்த்து இந்து மகாசபை என்ற பொதுமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த சபையின் முதல்கூட்டம் 1915 ஏப்ரல் மாதம் காசியில் பஞ்சாப் மகாராஜாவின் தலைமையில் நடைபெற்றது. இந்துக்களின் நலன்களைக் காப்பாற்றுவதற்காகத் துவங்கப்பட்ட இந்து மகாசபை காங்கிரசுக்குள்ளேயே இருந்து செயல்பட்டது! நிர்வாகத்திலும், சட்டமன்றங்களிலும் முஸ்லீம்கள் இடஒதுக்கீடு கொருவதை எதிர்க்க வேண்டும் என்ற இந்த அமைப்பு காங்கிரஸ் தலைமையை நிர்ப்பந்தித்து வந்தது.

வகுப்புவாத செயல் திட்டம்

கேரளாவில் இந்துக்களுக்கு எதிரான 'மாப்பிள்ளைக் கிளர்ச்சியும்' கிலாபத் இயக்கமும் இந்து மகாசபையைக் கிளர்ந்தெழச் செய்தன. அதன் விளைவாக வடஇந்தியாவில் இளக்கலவரங்கள் ஏற்பட்டன. இந்து சங்கதன் இயக்கம் உருவெடுத்தது. மீண்டும் வேதகாலப் பொற்காலத்தை நோக்கிப் போக வேண்டும் என்ற கோஷம் எழுப்பப்பட்டது. சுவாமி சிரத்தானந்தா என்ற பஞ்சாப் ஆரிய சமாஜி எழுதிய இந்து சங்கதன் - இறந்து கொண்டிருக்கும் இனத்தின் இரட்சகன்' (Hindu Sangathan - Saviour of a Dying Race, 1926) என்ற நூல் மூலம் இந்து மகாசபை வகுப்புவாத அடிப்படையில் ஒரு செயல் திட்டத்தை வகுத்துக் கொடுத்தார்.

மதவாதியின் அரசியல் பிரவேசம்

சுவாமி சிரத்தானந்தாரின் வகுப்புவாத செயல்திட்டத்தின்படி இந்து வகுப்புவாத அமைப்புகளை ஒருங்கிணைக்கவும் சிதறிக் கிடக்கும் இந்துக்களை ஒன்று சேர்க்கவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. கார்வீர் பீட சங்கராச்சாரியார் கர்ட் கோட்டி வகுப்புவாத அரசியல் பிரவேசம் செய்தார்! மகாராஷ்டிரத்தில் இந்து தர்ம பரிஷத் என்ற அமைப்பை நடத்திவந்த அவர் இந்தியா சுயாட்சிபெற மதப்பிரச்சாரம் தேவை என்றார். அவர் இந்துக்களிடையே வகுப்புவாத உணர்வை உண்டாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

மதமாற்ற இயக்கங்கள்

1922 பிப்ரவரி மாதம் ஒத்துழையாமை இயக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டதால் மக்களிடையே ஏற்பட்ட ஏமாற்றத்தைப் பயன்படுத்திக்கொண்டு வகுப்புவாதம் வீரியத்துடன் தலைதூக்கியது. வகுப்புவாதக் கலவரங்கள் ஏற்பட்டன. இந்து மற்றும் முஸ்லீம் வகுப்புவாத அமைப்புகள் போட்டிபோட்டுக் கொண்டு இந்துக்களிடையேயும், முஸ்லீம்களிடையேயும் பய மனப்பான்மை ஏற்படுத்தின. அந்த காலகட்டத்தில்தான் முஸ்லீம் வகுப்புவாதிகள் தான்சீம், தாப்லிக் மதமாற்ற இயக்கங்களைத் தோற்றுவித்தனர். அவைகளுக்குப் போட்டியாக இந்து வகுப்புவாதிகள் சங்கதன், சுத்தி மதமாற்ற இயக்கங்களைத் துவக்கினர்!

இந்துத்வா

இப்போட்டி வகுப்புவாதப் பின்னணியில் வினாயக் தாமோதர் சவார்க்கர் எழுதி வெளியிட்ட இந்துத்வா: இந்து என்பவர் யார்? (Hindutva - Who is a

Scanned by CamScanner

Hindu ") என்ற நூல் இந்து வகுப்புவாத வரலாற்றில் ஒரு முக்கிய மைல் கல் ஆகும். இந்நூலின் சாரமாவது: 1. இந்துக்களுக்கென்று பொதுத் தன்மை உள்ளது. 2. இந்து இனத்தையும் நாட்டையும் பாதுகாக்க வேண்டும்; 3. இந்தியாவில் வந்து குடியேறிய ஆரியர்கள் இந்து தேசத்தை உருவாக்கினார்கள்; 4. இந்துத்வா என்பது பூகோள ஒற்றுமை, இனகுணம், பொதுப்பண்பாடு ஆகிய மூன்று தூண்களின்மீது கட்டப்பட்டது. சவார்க்கர் இந்து மதவாதத்துக்கு 'இந்துத்வா' என்று பெயரிட்டு, இந்து வகுப்புவாதத்துக்கு இனவாத முலாம் பூசினார். இந்துக்கள், ஆரியர்களின் வழித்தோன்றல்கள்; இந்தியத் துணைக் கண்டம் இவர்களது புண்ணிய பூமி, வேத நாகரிகம் இந்துக்களின் பண்பாடு, இந்துக்களின் நாளங்களில் ஓடுவது 'வேதகால தந்தைகளின் இரத்தம்' என்ற கற்பனைக் கோட்பாடு இந்து வகுப்புவாதிகளிடையே செல்வாக்கு பெற்றது.

இந்திய தேசியமல்ல, இந்து தேசியம்

இந்து மகாசபையினர் காங்கிரசுக்குள்ளிருந்தும், வெளியிலிருந்தும் வகுப்புவாதத்தை வளர்த்துக் கொண்டிருந்தனர். வகுப்புவாத வைரால் பாதிக்கப்பட்ட காங்கிரஸ் தேசியவாதிகளில் ஒரு சாரார் வகுப்புவாதத்தை ஆதரித்தனர்! இவர்கள் 'மறுதலிப்போர்' (Responsivists) என்று அறியப்பட்டனர். இவர்கள்தான் சுயராஜ்யக் கட்சியை இரண்டாகப் பிரித்தனர். இந்து வகுப்புவாதத்தைப் பாதுகாக்க அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதாக அறிவித்தனர்! லஜபதிராய், மாளவியா, கோல்கர் போன்றோர் இந்துமகா சபையில் சேர்ந்தனர். இந்து வகுப்புவாதிகளின் ஒற்றுமைக்காகப் பிரச்சாரம் செய்தனர். இந்து மகாசபைத் தலைவர்கள் காங்கிரஸ் மதச்சார்பின்மைக் கொள்கையைக் கடுமையாக விமர்சித்தனர். மோதிலால் நேருவை இந்துக்களைக் கைவிட்டவர், இந்து எதிர்ப்பாளர், இஸ்லாம் விரும்பி, மாட்டு இறைச்சி உண்பவர், பசுவதை எதிர்ப்புக்கு எதிரி என்றெல்லாம் விமரிசனம் செய்தனர். சுருங்கக்கூறின், இந்து மகாசபை காங்கிரசின் இந்திய தேசியத்துக்கு பதிலாக 'இந்து தேசியத்'தை உருவாக்கும் வேலையில் ஈடுபட்டனர்.

ராஷ்ட்ரிய சுவயம் சேவக் சங்கம், 1925

கேசவ் பலிராம் ஹெட்கேவார் 1925ம் ஆண்டு நாக்பூரில் ராஷ்ட்ரீய சுவயம் சேவக் சங்கத்தை (Rashtriya Swayam Sangh, RSS)த் தோற்றுவித்தார். இவர் மருத்துவப் படிப்புக்காகக் கல்கத்தா சென்று (1910) அனுசீலன் சமிதி என்ற பயங்கரவாத அமைப்புடன் தொடர்புகொண்டு நாக்பூர் திரும்பியவர் (1915). ஹெட்கேவார் காங்கிரசில் சேர்ந்தார். காந்தியின் அகிம்சைக் கொள்கையும், ஒத்துழையாமைப் போராட்ட முறையும் பிடிக்காமையால் காங்கிரசைவிட்டு வெளியேறினார். இவர் துவக்கிய சபை தனித்தன்மையுடன் திகழ்ந்தது. இதன் சிறப்பு அம்சங்களாவன:

1. இது மகாராஷ்டிர பிராமணர்களால் தோற்றுவிக்கப்பட்டு வளர்க்கப்பட்டது. ஹெட்கேவார், கோல்வால்கர், மூஞ்சே, நீனதயால் உபாத்தியாயா போன்ற தலைவர்கள் அனைவரும் பிராமணர்களேயாவர். இந்த சங்கத்தில் பிராமண இளைஞர்களே உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டனர்; 2. இந்த அமைப்பு சதுர் நான்கு) வர்ண முறையை அடிப்படையாகக் கொண்டது; 3. உயர்சாதி மத்தியதர

வகுப்பார். இந்த அமைப்பில் பிரதான பங்கேற்றனர்; 4. சமஸ்கிருத மயமாக்கப்பட்ட இந்து கலாச்சாரத்தைப் பரப்புவது; 5. இன தேசியமும் முஸ்லீம் எதிர்ப்பும் இதன் பிரதான பிரச்சார உத்திகள்; 6. அகிம்சை, வாய்மை, ஒத்துழையாமை ஆகியவற்றின்மீது அமைக்கப்பட்ட காந்தியின் அரசியல் முறையை நிராகரித்தல்; 7. தொண்டர்களுக்குக் காக்கி சீருடை கொடுத்து இராணுவக் கட்டுப்பாட்டுடன் பயிற்சி அளித்து, இந்துத்வா கலாச்சாரப்படை வீரர்களாக உருவாக்கல்; 8. இதன் அமைப்பு அதிகாரக் குவியல்முறையில் ஜனநாயகமற்ற ஆட்சியாதிக்க நிறுவனமாகும். தலைவரும் நிர்வாகிகளும் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை; 9. அடிப்படையில் கலாச்சார அமைப்பாயினும் இதன் அரசியல் கிளைகள் கட்சிகளைப் பதுக்கும் பட்டங்களாக, முகமூடிகளாகப் பயன்படுத்திக் கட்டுப்படுத்தும்; 10. அரசியலில் நேரடியாகப் பங்கேற்காமல் வகுப்புவாதக் கண்ணோட்டத்தில் அரசியல் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண முயற்சித்தல்.

ராஷ்ட்ரீய சுவயம் சேவக் சங்கத்தைத் தோற்றுவித்த ஹெட்கேவார் 1930ம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்துகொண்டார்! அப்போது அச்சங்கத்தின் பொறுப்பைத் தன் நண்பரிடம் ஒப்படைத்துவிட்டுத் தனிநபராகப் பங்கேற்றார். அதற்குக் காரணம் ஆர்.எஸ்.எஸ்ஸை அரசியலோடு தொடர்புபடுத்தக்கூடாது என்பதாகும்! வட்டமேஜை மாநாடுகளில் கலந்து கொள்வதற்காக இங்கிலாந்து சென்ற இந்த வகுப்புவாதத் தலைவர்கள் பிரிட்டிஷ் அதிகாரிகளின் ஆதரவைப் பெற முயற்சித்தனர். இந்து வகுப்புவாதத் தலைவர் மூஞ்சே இத்தாலி சென்று முசோலினியைச் சந்தித்தார். சவார்கர் 1938ல் ஜெர்மனியின் நாஜி அணுகுமுறை பற்றியும், இட்லர், முசோலினி, பிராங்கோவைப் பாராட்டியும் 'இந்து அவுட்லுக்', 'மராத்தா' பத்திரிகைகளில் எழுதினார். சுருங்கக்கூறின், ஆர்.எஸ்.எஸ். இந்தியாவில் 'இந்து ராஷ்டிரா' (Hindu Rashtra)வை ஏற்படுத்துதற்காகத் துவக்கப்பட்ட இந்து வகுப்புவாத அமைப்பாகும்.

நாம், நமது தேசியம்

எம்.எஸ். கோல்வால்கர் (M.S.Golwalkar) 1939ம் ஆண்டு ஆர்.எஸ்.எஸ்ஸின் வகுப்புவாத சித்தாந்தத்துக்குப் புதிய பரிமாணத்தைக் கொடுத்தார். அவர் இட்லர், முசோலினி ஆகியோரின் நாஜிச, பாசிச சித்தாந்தங்களால் பெரிதும் கவரப்பட்டவர். குறிப்பாக, கோல்வால்கருக்கு இட்லரின் ஜெர்மன் இனப் பெருமையும், கலாச்சாரத் தூய்மையும் செமிடிக் இனத்தவரான யூதர்களை அழித்தொதுக்கியதும் மிகவும் பிடித்தவை. எனவே, இவற்றையெல்லாம் மனதில் கொண்டு ஒரு 100 பக்க "நாம், நமது தேசியம் வரையறுக்கப்பட்டது" (We, Our Nationhood Defined) என்ற நூலை எழுதினார் (1939). இந்த நூல் இந்து வகுப்புவாதப் பட்டயமாகக் கருதப்படுகிறது.

கோல்வால்கரின் 'நாம்...' என்ற நூலில் காணப்படும் கருத்துக்களாவன: 1.தேசம், தேசியம் என்பவை பூகோள ஒற்றுமை, இனம், மதம், பண்பாடு, மொழி ஆகிய ஐந்து அளவுகோல்களைக்கொண்டு வரையறுக்கப்பட வேண்டும்; 2. இந்துக்கள் இந்திய மண்ணில் முதல் மைந்தர்கள், அவர்கள் எங்கிருந்தோ வந்தவர்கள் அல்லர், அவர்களே ஆரியர்கள்; 3. வேத கால கலாச்சாரமே ஆரிய கலாச்சாரம், ஆரிய கலாச்சாரமே இந்து கலாச்சாரம், இந்து கலாச்சாரமே இந்திய

Scanned by CamScanner

கலாச்சாரம்; 4. இனமும் கலாச்சாரமும் சமுதாய அமைப்பும் ஒரே அச்சில் வார்ப்படம் செய்ய வேண்டும்; 5. சமுதாயத்தில் அடிப்படை அலகு தனிமனிதன்தான், வர்ணம் அல்ல. சமுதாய ஒற்றுமைக்காகத் தனிமனிதன் பிரதிபலன் கருதாமல் தியாகம் செய்ய வேண்டும்; 6. பல இன, பலமத, பலமொழிப் பன்முக சமுதாயம் ஏற்கக் கூடியதன்று. ஒருஇனம், ஒருமதம், ஒருமொழி, ஒருபண்பாடு கொண்ட ஒன்றல் அடிப்படையான தேசமே விரும்பத்தக்கது. இத்தகைய தேசத்தை அரசாங்கத்தால் உருவாக்க இயலாது. கோல்வால்கர் இந்து வகுப்புவாத சித்தாந்த விளக்கம் கொடுத்ததோடு அமையவில்லை. காங்கிரஸ் பழைய படையெடுப்பாளர்களான முஸ்லீம்களை இந்தியர்களாகக் கருதுவதாகவும், எதிரிகள் நண்பர்களாக முடியாது என்றும் கடுமையாகத் தாக்கித் தனது முஸ்லீம் விரோத மனப்பான்மையைப் பிரகடனப்படுத்தினார்.

இந்து வகுப்புவாத வளர்ச்சி, 1937-47

1909, 1919 சட்டச் சீர்திருத்தங்களின் விளைவாக காங்கிரஸ் பொது மக்கள் பக்கம் நிரும்பியது. ஆனால் இந்து மகாசபை பழமைப் பிற்போக்குவாதிகளின் பிடியில் இருந்ததால் தேக்கமடைந்தது. பின்னர் 1922ல் ஒத்துழையாமை இயக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டபோது புத்துயிர் பெற்றது. 1923ல் நாக்பூர் வகுப்புக் கலவரங்களின் போது இந்த சபை தலைதூக்கியது. 1930களில் இந்து வகுப்புவாதத் தலைவர்கள் வட்டமேஜை மாநாடுகளில் கலந்து கொள்வதற்காக இலண்டன் சென்றபோது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஆதரவை நாடினர். 1938ம் ஆண்டு நாக்பூரில் கூடிய இந்து மகாசபை மாநாடு ஆர்.எஸ்.எஸ் தொண்டர்களின் அமோக ஆதரவோடு கோலாகலமாக நடத்தப்பட்டது!

இதற்கிடையே இந்து மகாசபை 1937ம் ஆண்டு மாகாணங்களுக்காக நடைபெற்ற பொதுத் தேர்தலில் பங்கேற்றுப் பரிதாபமாகத் தோல்வியுற்றது. காங்கிரசின் மதச்சார்பின்மைக்கு முன் இந்து மகாசபையின் வகுப்புவாதப் பிரச்சாரம் எடுபடவில்லை. பெரும்பான்மை இந்துக்களின் சார்பாகப் போட்டியிட்ட இந்து மகாசபை நிராகரிக்கப்பட்டது. 1937 தேர்தலுக்குப்பிறகு இந்த வகுப்புவாதிகள் காங்கிரசைவிட்டு வெளியேற்றப்பட்டனர். இச்சபைக்கு ஆதரவளிக்க லஜபதி ராயும், மாளவியாவும் இல்லை; ராய் 1928ல் இறந்தார், மாளவியா உடல்நலக் குறைவால் அரசியலிலிருந்து விலகிக் கொண்டார். அந்த காலக்கட்டத்தில் 1937லிருந்து 1942 வரை இந்து மகாசபையின் தலைவர் பொறுப்பேற்ற சவார்கர் பாசிசப் பாதையில் பயணித்தார். ஆர்.எஸ்.எஸ். மகாராஷ்டிரத்துக்கு வெளியே இந்து வகுப்புவாத வலையை விரிக்கத் துவங்கியது. ஒரு பக்கம் முஸ்லீம் லீக், இந்துக்களுக்கு எதிராக வெறுப்புப் பிரச்சாரம் செய்தது, மறுபக்கம் இந்துமகா சபையும், ஆர்.எஸ்.எஸ்சும் முஸ்லீம்களுக்கு எதிராக வெறுப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட்டன. விளைவு? 1946 ஆகஸ்டு இனப் படுகொலை. வங்காள நவகாளியில் இந்துக்களும், பீகாரில் முஸ்லீம்களும் கொல்லப்பட்டனர். 5 நாட்களில் 5,000 பேர் உயிரிழந்தனர்! இனப்படு கொலைப் பின்னணியில் நாடு பிரிக்கப்பட்டு 1947 ஆகஸ்டு 15ம் நாள் இந்தியாவும் பாகிஸ்தானும் இறையாண்மை பெற்ற சுதந்திர நாடுகளாயின.

32. விடுதலைப் போராட்டத்தில் புரட்சியாளர்களின் பங்கு

புரட்சியாளர்களின் ஆழ்ந்த நாட்டுப்பற்று, அஞ்சாமை, தியாக மனப்பான்மை மக்களை எழுச்சி பெறச் செய்தது

- பிபன் சந்திரா.

காங்கிரஸ் தீவிரவாதிகள்

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் 1905 லிருந்து 1919 வரை காங்கிரஸ் தீவிரவாதிகளின் செல்வாக்கு மேலோங்கி இருந்தது. வங்கப் பிரிவினையும், சுதேசி இயக்கமும் (1905) அவர்களை அடையாளம் காட்டியது. அரவிந்த கோஷ் 'தீவிர இயக்கத்தின் தீர்க்கதரிசி' என்று அழைப்பட்டார். சூரத் காங்கிரஸ் பிளவுக்குப்பின் (1907) திலகர் தீவிரவாதிகளின் தன்னிகரற்றத் தலைவராகத் திகழ்ந்தார். வன்முறை வழியில் சென்ற பயங்கரவாதிகள், துப்பாக்கித் தத்துவத்தில் நம்பிக்கை வைத்து, இரகசிய அமைப்புகளை ஏற்படுத்தி இந்தியாவைப் பிரிட்டிஷாரின் பிடியிலிருந்து விடுவிக்க இந்தியாவிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் முயற்சிகளை மேற்கொண்டனர். தீவிரவாதமும், பயங்கரவாதமும் விடுதலை இயக்கத்துக்குப் புதிய பரிமாணத்தைக் கொடுத்தன.

போராட்டப் புரட்சியாளர்கள்

முதல் உலகப் போரின்போது இந்திய இராணுவம் ஐரோப்பியப் போர்க்களங்களுக்கு அனுப்பப்பட்டது. அதை வாய்ப்பாகக் கொண்ட கதார் இயக்கத்தினர் இந்தியாவில் ஆயுதப்புரட்சி செய்யத் திட்டமிட்டனர். ஆனால் அத்திட்டம் முறியடிக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான புரட்சியாளர்கள் கைது செய்யப்பட்டனர். பலர் தூக்கிலிடப்பட்டனர். பலர் தப்பிச் சென்றனர். இறைக்கு வெளியே இருந்த பயங்கரவாதப் புரட்சியாளர்கள் ஒத்துழையாமை இயக்கத்தோடு ஒத்துழைத்தனர்! பின்னர் மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் செயல்படுவதற்கான சமூக சூழ்நிலையை உருவாக்கும் நோக்கத்துடன் 1920ம் ஆண்டுத் துவக்கத்தில் பெரும்பான்மைப் புரட்சியாளர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கி விடுவிக்கப்பட்டனர். இவர்கள் ஒத்துழையாமை இயக்கம் விலக்கிக்கொள்ளப்பட்டதால் பெரிதும் ஏமாற்றமடைந்தனர். இவர்கள் புரட்சி இயக்கத்தைத் துவங்கத் தீர்மானித்தனர்.

இந்துஸ்தான் குடியரசு சங்கம், 1924

சிறைகளிலிருந்து விடுவிக்கப்பட்ட புரட்சிப் பயங்கரவாதிகள் சச்சிதானந்தா சன்யால், ராம்பிரசாத் பிஸ்மில், ஜகதிஷ் சாட்டர்ஜி ஆகியோரது தலைமையில் ஒன்று கூடினர். இவர்களுள் சன்யால், ராஷ்பிஹாரி போசுடன் சேர்ந்து வைசிராய்

Scanned by CamScanner

வைசிராய் பிரபு மீது குண்டு எறிந்து கொலைசெய்ய முயற்சித்தனர் (1912). பின்னர் இவர் நாடுகடத்தலுக்குக் காரணமாக இருந்தவர் (1915). லண்டனில் கொள்கைத் தலைவராக தாங்குவதற்குக் எழுதிய பந்தி ஜீவன் (Bandhi Jiwan) என்ற நூல் புரட்சி இயக்கத்துக்குப் பாடபுத்தகமாகப் பயன்பட்டது. மேற்கண்ட மூன்று புரட்சித் தலைவர்களும் 1924 அக்டோபர் மாதம் கான்பூரில்கூடி இந்துஸ்தான் குடியரசு சங்கம் (Hindustan Republican Association) என்ற அமைப்பை உருவாக்கினர். இந்த அமைப்பின் நோக்கம் ஆயுதப் புரட்சிமூலம் பிரிட்டிஷ் ஆட்சியை அகற்றிவிட்டு அதற்கு பதில் ஐக்கிய இந்திய மாகாணங்களின் குடியரசுக் கூட்டாட்சி (Federal Republic of United States of India)ஐ ஏற்படுத்துவதாகும். இவர்கள் வயது வந்தோருக்கு வாக்குரிமை என்ற ஜனநாயகக் கோட்பாட்டின்படி இந்திய ஐக்கியக் குடியரசை ஏற்படுத்த முற்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ககோரி சதி வழக்கு, 1925

இந்துஸ்தான் குடியரசு சங்கத்தை ஏற்படுத்தியபின் ஆயுதப் புரட்சி பற்றிப் பிரச்சாரம் செய்யவும், புரட்சி வீரர்களைத் தெரிவு செய்து பயிற்சி அளிக்கவும், ஆயுதங்களைப் பெறவும் திட்டமிட்டனர். இதற்கு ஏராளமாகப் பணம் தேவைப்பட்டது. ராம் பிரசாத் பிஸ்மில்லின் யோசனைப்படி புகைவண்டியில் கொண்டு செல்லப்பட்ட தபால் கருவூலத்தைக் கொள்ளையடிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. அதன்படி 1925 ஆகஸ்டு 9ம் நாள் லக்னோ-சஹரான்பூருக்கு இடையேயிருந்த ககோரி ரயில் நிலையத்தில் புகைவண்டியை நிறுத்தி கைத்துப்பாக்கியுடன் வண்டிக்குள் நுழைந்து கருவூலத்தைக் கொள்ளையடித்துச் சென்றனர். இத்துணிகரக் கொள்ளை ஆட்சியாளர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

அரசாங்கம் ககோரி கொள்ளையர்களைப் பிடிக்கக் காவல்துறையையும் துப்பறியும் துறையையும் முடுக்கிவிட்டது. 40 புரட்சியார்களைக் கைதுசெய்து அவர்கள்மீது சதிவழக்கு தொடரப்பட்டது. 250 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். 1927 ஏப்ரல் 7ம் நாள் வழக்கு முடிந்தது. அஷ்பாயுல்லா, பண்டிட் ராம்பிரசாத் பிஸ்மில், ரோஷன் சிங், ராஜேந்திர லாகிரி ஆகியோருக்குத் தூக்கு தண்டனை கொடுக்கப்பட்டது. மன்மத்நாத் குப்தா போன்றோருக்கு 14 ஆண்டு கால சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. ராசேந்திர நாத் வாழ்நாள் முழுவதுக்கும் நாடு கடத்தப்பட்டார். மேலும் 4 பேருக்கு வாழ்நாள் தண்டனை கொடுக்கப்பட்டு அந்தமானுக்கு அனுப்பப்பட்டனர்.

இந்துஸ்தான் சோஷலிஸ்டு குடியரசு சங்கம், 1928

ககோரி சதிவழக்கு வடஇந்தியாவில் புரட்சிப் பயங்கரவாத இயக்கத்துக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. குடியரசு சங்கம் இருந்த இடம் தெரியாமல் போயிற்று. எனினும் ஐக்கிய மாகாணத்திலும் பஞ்சாபிலும் பல இளைஞர்கள் புரட்சி இயக்கத்தால் ஈர்க்கப்பட்டிருந்தனர். ஐக்கிய மாகாணத்தில் சுபஜாய் குமார் சின்கா, சிவவர்மா, ஜெய்தேவ் கபூர் போன்றவர்கள் வன்முறைச் செயல்களில் தீவிர பற்று கொண்டிருந்தனர். அதேபோன்று பஞ்சாபில் பகத்சிங், பகவதி சரண் ஓரா போன்ற இளைஞர்கள் ஆயுதப் புரட்சிக்குத் தயாராக இருந்தனர். அத்தகைய இளைஞர்கள் சோஷலிச சித்தாந்தத்தால் பெரிதும் கவரப்பட்டிருந்தனர்.

இப்புரட்சியாளர்கள் ககோரி சதி வழக்கிலிருந்து தப்பிச் சென்று தலைமறைவாய் இருந்த சந்திரசேகர் ஆசாத்தின் தலைமையில் ஒன்று சேர்ந்தனர். இவர்கள் அனைவரும் 1928 செப்டம்பர் 9-10 தேதிகளில் பெரோஸ்ஷா கோட்லா மைதானத்தில் ஒன்றுகூடி கூட்டுத் தலைமையின்கீழ் சோஷலிசத்தை இலட்சியமாகக் கொண்டு இந்துஸ்தான் குடியரசு சங்கத்தைப் புதுப்பித்து மறுசீரமைத்து இந்துஸ்தான் சோஷலிஸ்டு சங்கம் (Hindustan Socialist Republican Association) அமைத்தனர். இச்சங்கத்தைப் புரட்சி இராணுவமாகக் கருதிச் செயல்பட்டனர். இப்புரட்சியாளர்கள் தனி மனிதர்களைக் கொலை செய்வதைத் தவிர்த்து மக்கள் ஒத்துழைப்போடு இந்திய சோஷலிஸ்டுக் குடியரசை ஏற்படுத்துவதில் குறியாக இருந்தனர். சாதியைத் துறந்தவர்கள்தான் புதிதாகத் துவங்கப்பட்ட இந்த சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பகத்சிங், ராஜகுரு, சுகதேவ், ஆசாத், ஜெயகோபால் போன்றோர் இந்துஸ்தான் சோஷலிஸ்டு குடியரசு சங்கத்தில் பிரதான பங்கேற்றனர். இந்தியாவில் புரட்சி இயக்கம் குடு பிடிக்கத் துவங்கியது.

சான்டர்ஸ் கொலை, 1928

சைமன் புறக்கணிப்பு இயக்கம் புரட்சியாளர்களுக்கு நல்ல வாய்ப்பைக் கொடுத்தது. அவர்கள் விடுதலைப் போராட்டத்துப் புரட்சிப் பரிமாணத்தைக் கொடுத்தனர். சைமன் கமிஷனுக்கு எதிரான கருப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தின்போது, 1928 அக்டோபர் 30ஆம் நாள் பஞ்சாப் லாகூரில் லாலா லஜபதிராயின் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. போலீஸ் உயர்அதிகாரி ஜே.ஏ. ஸ்காட் உத்தரவின்பேரில் ஜே.பி.சான்டர்ஸ் என்ற போலீஸ் அதிகாரி, தடையை மீறிய லாலா லஜபதி ராயைத் தலையிலும், மார்பிலும் லத்தியால் பலமாகத் தாக்கினார். படுகாயமுற்ற 'பஞ்சாப் சிங்கம்' என்று அழைக்கப்பட்ட லஜபதிராய் அன்று மாலையே நடைபெற்ற பிரமாண்டமான பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசினார். "தன் குடிமக்களையே காட்டுத்தனமாகத் தாக்கும் அரசாங்கத்தை நாகரிகமான அரசாங்கம் என்று கூறமுடியாது. அத்தகைய அரசாங்கம் நீண்டநாள் நீடிக்காது" என்று எச்சரித்தார். காயமுற்ற லஜபதிராய் 1928 நவம்பர் 17ம் நாள் உயிர்நீத்தார். சந்திரசேகர் ஆசாத், பகத்சிங், ராஜகுரு ஆகியோர் தடியடித் தாக்குதலுக்கு உத்தரவு கொடுத்த உயர் போலீஸ் அதிகாரி ஜே.ஏ. ஸ்காட்டைக் கொல்லத் திட்டமிட்டனர். லாகூரில் ஸ்காட் தப்பிவிட, போலீஸ் துறை மேலாளர் ஜே.பி. சான்டர்ஸ் கொல்லப்பட்டார் (1928 டிசம்பர்). லாகூர் சதிவழக்கில் கொலையாளிகளுக்குத் தண்டனை வழங்கப்பட்டது.

சட்டமன்றத்தில் வெடிகுண்டு வீச்சு, 1929

இந்துஸ்தான் சோஷலிஸ்டு குடியரசு சங்கத்தினர் மக்கள் விரோத மற்றும் அந்நியின் சின்னமாகத் திகழ்ந்த சட்டமன்றத்தை வெடிகுண்டுவீசித் தாக்கத் திட்டமிட்டனர். 1929 ஏப்ரல் 8ம் நாள் பொது பாதுகாப்பு மசோதா, வர்த்தக வழக்குகள் மசோதா ஆகிய இரு அடக்குமுறை மசோதாக்களும் மத்திய சட்டமன்றத்தில் விவாதத்துக்கு வர இருந்தன. அரசாங்கம் மக்கள் பிரதிநிதிகளின்

Scanned by CamScanner

ஒருமித்த எதிர்ப்பையும் மீறி அந்த மசோதாக்களை நிறைவேற்றத் தீர்மானித்து அதை எதிர்த்து பகத்சிங்கும், பி கே தத்தும் சட்டமன்றத்துக்குள் நுழைந்து குண்டுகளை வீசினர். 'செவிடர்களும் கேட்க வேண்டும்' என்பதற்காகவே குண்டு வீசப்பட்டதாகத் துண்டுப் பிரசுரங்கள் தெரிவித்தன. பகத்சிங்கும், தத்தும் கைது செய்யப்பட்டனர்.

சட்டமன்ற வெடிகுண்டு வெடிப்பு வழக்கு, 1929

1929 ஜூன் 4ம் நாள் பகத்சிங், தத்தா, சுகதேவ், ராஜகுரு, பந்துகேஷ்வர் உள்ளிட்ட பல புரட்சியாளர்கள்மீது சதிக்குற்றம் சாட்டப்பட்டு வழக்கு விசாரிக்கப்பட்டது. வழக்கு நடைபெற்ற ஒவ்வொரு நாளும் இவர்கள் 'இன்குலாப் ஜிந்தாபாத்' அல்லது 'ஏகாதிபத்தியம் ஒழிக' என்று முழக்கமிட்டவாறு நீதிமன்றத்துக்குள் நுழைந்தனர். வழக்கு விசாரணை விவரங்களும் அஞ்சா நெஞ்சர் பகத்சிங் விசாரணையை எதிர்கொண்டதையும் பத்திரிக்கைகள் விரிவாக வெளியிட்டன. இவர்கள் வாக்குமூலத்தை வாய்ப்பாகக் கொண்டு இந்துஸ்தான் சோஷலிஸ்டு குடியரசு சங்கத்தின் நோக்கத்தையும் நடவடிக்கைகளைப் பற்றியும் பேசினர். இப்புரட்சியாளர்கள் நீதிமன்றத்தில் கொடுத்த விரிவான வாக்குமூலம் மக்களிடையே புரட்சிக் கனலைத் தூண்டிவிட்டது.

சட்டமன்ற வெடிகுண்டு வழக்கு சம்மந்தமாகக் கைது செய்யப்பட்டோர் அனைவரும் கொடூரமாக நடத்தப்பட்டனர். புரட்சியாளர்கள் அரசியல் கைதிகளாக நடத்தப்பட வேண்டுமேயன்றிக் கொலைக் குற்றவாளிகளாக கருதப்படக் கூடாது என்று கூறி யதீந்திரநாத் தாஸ் சாகும்வரை உண்ணாவிரதம் துவங்கினார் (1930 செப்டம்பர் 13). உண்ணாவிரதம் ஆரம்பித்து 64ம் நாள் உயிர்த்தியாகம் செய்தார். அவரது தியாகம் மக்களின் உணர்ச்சியைத் தூண்டிவிட்டது.

சிட்டகாங் கிளர்ச்சி, 1930

புரட்சி பயங்கரவாதம், ஐக்கிய மாகாணம், பஞ்சாப், பீகார் மட்டுமின்றி வங்காளத்துக்கும் பரவியது. 1924 ஜூன் மாதம் கல்கத்தாவின் போலீஸ் கமிஷனர் சார்லஸ் டெகார்ட் (Charles Tegart) டைக் கோபிநாத் சாகா கொல்ல முயற்சிக்கையில் குறிதவறி டே (Day) என்ற ஆங்கிலேயர் கொல்லப்பட்டார். மக்கள் செல்வாக்குமிக்க சாகா தூக்கிலிடப்பட்டார்.

புரட்சி இயக்கம் வங்காளத்தில் சூர்யா சென் தலைமையில் தீவிரமடைந்தது. இதில் பெண்கள் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது. அவர்கள் புரட்சியாளர்களுக்கு அடைக்கலம் கொடுத்தனர்; புரட்சித் தூதுவர்களாகச் செயல்பட்டனர். ஆயுதப் பாதுகாப்பாளர்களாக இருந்தனர்; பலர் ஆயுதம் தாங்கிப் போரிட்டனர்! ஒரு நிமிர்த் தாக்குதலின்போது பிரீதிலதா வடேதார் என்ற பெண் புரட்சியாளர் கொல்லப்பட்டார். கல்பனா தத்தா கைது செய்யப்பட்டு, விசாரணைக்குப்பின் ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. சாந்தி கோஷ், சுனிதி சவுத்திரி என்ற இரண்டு பள்ளி மாணவிகளும் கூட்டுக் கொல்லப்பட்டனர் (1931). பீனாதாஸ் என்ற பெண் பட்டதாரி, பட்டமளிப்பு விழா மண்டபத்தில் ஆளுநரை கட்டுக் கொன்றார் (1932 பிப்ரவரி).

சூர்யாசென் பிரிட்டிஷ் ஆட்சியை இந்தியாவிலிருந்து அகற்றத் திட்டமிட்டார். கட்சாங்கிலிருந்த இரண்டு பிரதான ஆயுதக் கிடங்குகளைக் கைப்பற்றி தந்தித் தொடர்பைத் துண்டித்து, புகைவண்டிப் போக்குவரத்தைச் சீர்குலைத்து, ஆயுதப்புரட்சி செய்வது என்று முடிவு செய்தார். அதற்கு ஏற்ப 1930 ஏப்ரல் 18ஆம் நாள் இரவு 10 மணிக்கு சூர்யா சென்னும் அவரது சகாக்களும் சிட்டகாங் போலீஸ் ஆயுதக்கிடங்குகளைக் கைப்பற்றினர். லோக்நாத் பால் என்பவரின் தலைமையிலும் மற்றொரு பிரிவினர் துணைப்பாதுகாவல் படை ஆயுதக் கிடங்கைக் கைப்பற்றினர். இந்துஸ்தான் சோஷலிஸ்டு குடியரசு சங்கத்தின் சிட்டகாங் கிளை இக்கிளர்ச்சியைத் துவக்க தற்காலிக புரட்சி அரசாங்கத்தைப் பிரகடனப் படுத்தியது.

சிட்டகாங் இரயுத் தாக்குதலுக்குப்பின் புரட்சியாளர்கள் ஜலாலாபாத் மலைப் பகுதிக்குச் சென்று விட்டனர். அதை அறிந்த இராணுவத்தினர் அந்த மலைப்பகுதியைச் சுற்றி வளைத்தனர் (ஏப்ரல் 22). அப்போது நடந்த மோதலில் 12 புரட்சியாளர்கள் உயிர் இழந்தனர், 80 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். சூர்யசென் தன் சகாக்களுடன் அருகிலிருந்த கிராமங்களுக்குச் சென்று கிராமமக்கள் துணையுடன் அரசாங்க அதிகாரிகளைத் தாக்கினர்; அரசாங்க சொத்துக்களைச் சூறையாடினர். கிராமங்களில் பெரும்பான்மையினராக இருந்த முஸ்லீம்கள் இந்து புரட்சியாளர்களுக்குப் புகலிடம் கொடுத்து மூன்றாண்டுகள் பாதுகாப்பு அளித்தனர் என்பது நினைவுகூறத்தக்கது. 1933 பிப்ரவரி 16ம் நாள் சூர்யாசென் கைது செய்யப்பட்டு, விசாரணைக்குப்பின் 1934 ஜூன் 12நாள் தூக்கிலிடப்பட்டார். அவருடைய சகப் போராளிகளுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. அரசாங்கம் 20 அடக்குமுறைச் சட்டங்களை இயற்றி புரட்சி இயக்கத்தை ஒடுக்கியது.

சிட்டகாங் கிளர்ச்சி இந்தியப் புரட்சிப் போராட்ட வரலாற்றில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது. அது வங்காள இளைஞர்களிடையே எழுச்சியைத் தூண்டிவிட்டது. பலர் பயங்கரவாத அமைப்புகளில் சேர்ந்தனர். மிட்னாப்பூர் மாவட்டத்தில் மட்டும் பல போலீஸ் அதிகாரிகளும், அரசாங்க அலுவலர்களும் கொல்லப்பட்டனர். மூன்றாண்டுகளில் இரண்டு ஆளுநர்களைக் கொலை செய்ய முயற்சிக்கப்பட்டது. ஆங்கில அதிகார வர்க்கத்தினரின் அடக்குமுறை ஆட்டங் கண்டது. புரட்சியாளர்களின் பயங்கருதா வீரதீரச் செயல்களும், உயிர்த் தியாகமும் விடுதலை போராட்டத்துக்கு உரமாகப் பயன்பட்டது. இந்தியா விரைவில் விடுதலை பெறவேண்டும் என்ற எண்ணத்தை எழுப்பியது. புரட்சியாளர்கள் இந்து, முஸ்லீம்கள் என்ற வகுப்பு வேறுபாடின்றிப் போராடினர். புரட்சி இயக்கம் முறியடிக்கப்பட்டது. ஆனால் புரட்சியார்களின் போராட்ட உணர்வு நீறுபூத்த நெருப்பாக இருந்தது. அந்த உணர்வு சுபாஷ் சந்திரபோஸ் உருவத்தில் வெளிப்பட்டது.

லாகூர் சதி வழக்குத் தீர்ப்பு, 1931

சைமன் கமிஷன் புறக்கணிப்புப் போராட்டத்தின்போது லாகூரில் லாலா லஜபதிராய், சான்டர்ஸ் என்ற போலீஸ் அதிகாரியால் தாக்கப்பட்டு இறந்ததற்குப் பழிதீர்க்க பகத்சிங்கும் அவரது கூட்டாளிகளும் சதிசெய்து சான்டர்சைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு வழக்கு நடைபெற்றது. அந்த வழக்கின்

Scanned by CamScanner

தீர்ப்பளித்து 1931 மார்ச் 23ம் நாள் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோர் குற்றவாளிகள் என்று குற்றம் சாட்டப்பட்டு லாகூர் மத்திய சிறையில் தூக்கிலிடப்பட்டனர்.

பகத்சிங் 1907-1931

பகத்சிங் 1907 செப்டம்பர் 27ம் நாள் பஞ்சாப் லியால்பூர் மாவட்டத்தில் பிறந்தார். இளவயதிலிருந்தே இவர் சிறந்த படிப்பாளியாகவும், தேர்ந்த போராளியாகவும் திகழ்ந்தார். லாகூரில் இருந்த துயாரகதாஸ் நூலகத்தில் மணிக்கணக்காக அமர்ந்து, இத்தாலி போன்ற நாடுகளில் நிகழ்ந்த புரட்சி இயக்கங்கள், புரட்சித் தலைவர்கள் பற்றிப் படித்துத் தெரிந்து கொண்டார். காரல் மார்க்சின் சோஷலிச சித்தாந்தம் பகத்சிங்கைப் பெரிதும் கவர்ந்தது. இவர் பல 'கற்றல் கூடங்களை' ஏற்படுத்தி அவற்றின்மூலம் இளைஞர்களிடையே புரட்சிக் கருத்துக்களைப் பரப்பினார்.

பகத்சிங் கைது செய்யப்பட்டு லாகூர் சிறையில் அடைக்கப்பட்டபோது சிறைக்கூடத்தைத் திறந்தவெளி பல்கலைக் கழகமாக மாற்றினார். இவர் சக கைதிகளுக்குப் புரட்சிக்கால மூலப் பொருள் கருத்துக்களே என்பதை எடுத்துரைத்தார். 'புரட்சி என்ற வாள் கருத்துக்கள் என்ற சாணைக் கல்லில் கூர்தீட்டப்படுகிறது' என்று லாகூர் உயர்நீதி மன்றத்தில் வழக்கு விசாரணையின்போது கூறினார். இவரது சக புரட்சியாளர்கள் அனைவரும் கற்றறிவாளர்களாக இருந்தனர்.

புரட்சிமூலம் இந்திய விடுதலையைப் பெற வேண்டும் என்பதே பகத்சிங்கின் மூச்சாகவும், பேச்சாகவும் இருந்தது. அந்த நோக்கத்தோடே அவர் பஞ்சாப் நவஜவான் பாரத சபை என்ற அமைப்பை உருவாக்கினார். 'மாணவர் சங்கம்' ஒன்றையும் ஏற்படுத்தினார். வகுப்புவாத சங்கங்களைச் சேர்ந்தோர் இந்த அமைப்புக்களில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. காலனி ஆதிக்கத்தைப்போன்றே வகுப்புவாத ஆதிக்கமும் அபாயகரமானது என்று எச்சரித்தார். மனிதனை மனிதனாக மதிக்க வேண்டுமேயன்றி இந்துவாகவோ, முஸ்லீமாகவோ, கிறிஸ்தியராகவோ பார்க்கக்கூடாது என்ற அவரது கருத்து நினைவுகூறத்தக்கது.

பகத்சிங் 'நான் ஏன் ஒரு நாத்திகன்' என்ற கட்டுரையில் சமயப்பொறையுடமை பற்றிக் கூறியுள்ளார். சமய நம்பிக்கை ஒருவரது தனிஉரிமை; ஆனால் மக்கள் மதம், மூடநம்பிக்கை, புராணம் என்ற பெயரால் 'மன அடிமைகள்' ஆகிவிடக்கூடாது என்பதை அடிக்கோடிட்டுக் காட்டினார். புரட்சியாளர்களுக்கு நாத்திகமும், பொருண்மை வாதமும் ஊன்றுகோல்களாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

பகத்சிங் தன்னிகரற்ற தலைவராகத் திகழ்ந்த லாலா லஜபதிராய் இறப்பதற்குக் காரணமான போலீஸ் அதிகாரி சான்டர்சைக் கொல்லத் தயங்கவில்லை. அதேபோன்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அநீதிச் சின்னமாக விளங்கிய மத்திய சட்டமன்றத்தில் குண்டு வீசினார். 'இன்குலாப் ஜிந்தாபாத்' என்ற கோஷமிட்டார். அஞ்சாநெஞ்சர், பகுத்தறிவாளர், புரட்சிப் பகலவன் பகத்சிங் 1931 மார்ச் 23ம் நாள் தூக்குமேடையை தோழமையுடன் எதிர்கொண்டார்; வாழ்வதற்காக இறந்தார்.

33. சுதந்திரப் போராட்டத்தில் பத்திரிகைகளின் பங்கு

இந்தியப் பத்திரிகை இரண்டு நூற்றாண்டுகள் பழமையானது. அதனுடைய பலம், சமூக சுதந்திரம், சீர்திருத்தம், நிவாரணம் ஆகியவற்றுக்காக மேற்கொள்ளப்பட்ட இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்று அனுபவத்தோடு பின்னிப் பிணைந்து உள்ளது.

- என்.ராம்

பத்திரிகைப் பணி

19ம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே மேலைநாட்டுக் கல்வி பெற்ற நாட்டுப்பற்றுமிக்க அரசியல் ஆர்வம் கொண்ட இந்தியத் தலைவர்கள் பத்திரிகைகளின் பங்கு பற்றியும், பத்திரிகை சுதந்திரத்தின் முக்கியத்துவம் குறித்தும் நன்கு அறிந்திருந்தனர். 1824ல் ராஜாராம் மோகன்ராய் 'கட்டுப்படுத்தப்படாத பத்திரிகை சுதந்திரம்' பற்றிய பதிவுக்குறிப்பை (Memorandum) உச்ச நீதிமன்றத்திடம் சமர்ப்பித்தார். மக்களுக்கு அரசியல் கல்வி அளிக்கவும், சமய, சமுதாய சீர்திருத்தங்களை மக்களிடம் கொண்டு செல்வதற்கும் அரசாங்க நடவடிக்கைகளை விமர்சிக்கவும் பத்திரிகைகள் பயன்பட்டன. இவை மக்களிடையே பொதுக்கருத்து உருவாகவும், அவர்களுடைய எதிர்பார்ப்புகள், ஏமாற்றங்கள், எதிர்ப்புகள் பற்றிய தகவல்களைத் திரட்டி வெளியிடவும், தேசியம் வளரவும் உதவின. துவக்கத்தில் பத்திரிகைகள் சேவைநோக்குடன் ஆரம்பிக்கப்பட்டன. நாட்டுப்பற்றும், அரசியல் ஆர்வமும் துன்பங்களைத் தாங்கும் தைரியமுமிக்க பத்திரிகையாளர்களே இத்துறைக்கு வந்தனர்.

காங்கிரசும் பத்திரிகைகளும்

காங்கிரஸ் தோற்றம்

1885 ல் அகில இந்திய காங்கிரஸ் துவக்கப்பட்டபோது அரசியல் பிரச்சாரத்துக்கான கட்டமைப்பு எதுவுமில்லை. அக்குறையைப்போக்க அதற்கிருந்த ஒரே சாதனம் பத்திரிகைதான். பம்பாயில் கூடிய காங்கிரசின் முதல் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் பிரபல பத்திரிகையாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களுள் ஜி.சுப்பிரமணிய ஐயர், பாலகங்காதர திலகர், சுரேந்திரநாத் பானர்ஜி, கிரிக்குமார் நகர்ஜி, மோதிலால் கோஷ், கோபால கிருஷ்ண கோகலே, எஸ்.எஸ்.கெல், தாதாபாய் நௌரோஜி, ஜி.பி.வர்மா ஆகியோர் முக்கியமானவர்கள்.

Scanned by CamScanner

துவக்கால பத்திரிகைகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்து, சுதேசமித்திரன், கேசரி, மராத்தா, பெங்காலி, அம்ரித பஜார் பத்திரிகா, சுதாரக், இந்தியன் மிரர், வாய்ஸ் ஆப் இந்தியா, இந்துஸ்தானி, அட்வகேட், டிரிபியூன், கால், குஜராத்தி, சோம்பிரகாஷ், பங்களாவாசி, சதாரானி போன்ற பத்திரிகைகள் பிரசுரிக்கப்பெற்றவை. 1887ல் நடந்த காங்கிரஸ் கூட்டத்தில் 'இந்து' பத்திரிகையின் பங்கு பெருமைக்குரியது. அம்ரித பஜார் பத்திரிகா தேசிய அந்தஸ்தைப் பெற்ற முதல்பத்திரிகை ஆகும். மோதிலால் கோஷ் பத்திரிகை மக்கள் குரலை பிரதிபலிக்கும் கண்ணாடி என்பதை நிரூபித்தார்.

பத்திரிகையாளர்கள்

அந்த காலகட்டத்தில் முக்கிய அரசியல் தலைவர்கள் பத்திரிகைகளை வெளியிட்டவர்களாகவோ, பத்திரிகையாளர்களாகவோ அல்லது பத்திரிகைகள்மூலம் தங்கள் கருத்துக்களையும், விமரிசனங்களையும், விளக்கங்களையும் வெளியிட்டவர்களாகவோ இருந்துள்ளனர். தலைவர்களின் பேச்சுக்களை பத்திரிகைகள் வெளியிட்டன. சட்டமன்ற விவாதங்கள், பத்திரிகைகளில் பிரதான இடத்தைப் பிடித்தன. நாட்டு அரசியலோடு மட்டும் நின்றுவிடாமல் பத்திரிகைகள் ஜரிஷ் சுதந்திரப் போராட்டம், ரஷ்யப் படையெடுப்பு போன்ற பன்னாட்டு நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகளையும் வெளியிட்டன. தலையங்கங்களும், செய்திகளும், விமரிசனங்களும் மக்களால் படிக்கப்பட்டன, விவாதிக்கப்பட்டன, கிராமங்களில் இவை படித்துக்காட்டப்பட்டன.

எதிர்க்கட்சி

இந்தியப் பத்திரிகைகள் காலனி அரசாங்கத்துக்கு எதிர்க்கட்சியாக செயல்பட்டன என்று கூறினால் மிகையாகாது. இவை அரசாங்கத்தின் கொள்கைகளையும், அரசாங்கத் துறைகளில் செயல்பாடுகளையும் அதிகாரிகளின் நடவடிக்கைகளையும் விமர்சித்தன. காலனி ஆட்சியின் நோக்கையும் போக்கையும் அம்பலப்படுத்தின. காங்கிரசின் குறிக்கோள்களையும், கோரிக்கைகளையும், கண்டனங்களையும் பத்திரிகைள் பொதுமக்களின் பார்வைக்குக் கொண்டு வந்தன. பத்திரிகைகளின் தாக்கத்தால் மக்களிடையே நாட்டுப்பற்றும், அரசியல் விழிப்புணர்வும் பொருளாதார சமூக அக்கறையும் அதிகரித்தது. அதன் காரணமாக பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சி இந்திய பத்திரிகை சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தத் துவங்கியது.

பத்திரிகை விரோதச் சட்டங்கள்

தண்டனைச் சட்டம், 1870

பத்திரிகைகளின் வழியாக இந்திய மக்களிடையே ஏற்பட்ட எழுச்சியையும் எதிர்ப்புணர்ச்சியையும் தேசப்பற்றையும் முளையிலேயே கிள்ளிவிட வேண்டும் என்ற நோக்கத்தில் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் 1870ல் இந்திய தண்டனைச் சட்டத்தை (Indian Penal Code)க் கொண்டு வந்தது. இச்சட்டத்தின்படி அரசாங்க எதிர்ப்பைத் தூண்டுபவர்கள் வாழ்நாள் முழுதும் நாடு கடத்தப்படுவர் அல்லது

மூன்றாண்டு காலம் சிறை தண்டனை பெறுவர் படிப்படியாக இத்தண்டனையின் வீச்சும் கடுமையும் அதிகரிக்கப்பட்டன.

பத்திரிகையாளர்களும், தேசத் தலைவர்களும் இச்சட்டத்துக்கு அஞ்சாமல் அதேசமயம் சட்ட வலையில் சிக்காமல் தங்கள் கருத்துக்களை துணிச்சலோடும், சாதுர்யமாகவும், மறைமுகமாகவும், நகைக்கவை கலந்த வகைப்பாங்கோடும், இலைமறை காயாகவும், சூட்சுமத் திறனோடும் வெளியிட்டனர். இதை மக்கள் ரசித்துப் படித்துப் புரிந்து கொண்டனர். சட்டத்தால் பத்திரிகை சுதந்திரக் குரலை ஒடுக்க முடியாது என்பது தெளிவாயிற்று.

தாய்மொழி பத்திரிகை சட்டம், 1878

நிலரே படித்த ஆங்கிலப் பத்திரிகைகளைவிட பலரும் படித்த தாய்மொழிப் பத்திரிகைகள் மக்களிடையே பெரும்செல்வாக்கு பெற்றிருந்தன. அவை இந்திய வைசிராய் லிட்டன்பிரபுவின் மக்கள் விரோதப் போக்கைக் கடுமையாக விமர்சித்தன. குறிப்பாக 1876-77ல் ஏற்பட்ட பஞ்சத்தால் பாதிக்கப்பட்டோரிடம் அவருடைய அரக மனிதாபிமானமற்ற முறையில் நடந்துகொண்டதைப்பற்றிப் பத்திரிகைகள், குறிப்பாக தாய்மொழிப் பத்திரிகைகள், கண்டித்தன. அதனால் ஆத்திரமடைந்த லிட்டன் பிரபு 1878ம் ஆண்டில் தாய்மொழிப் பத்திரிகைச் சட்டம் (Vernacular Press Act) கொண்டு வந்தார்.

தாய்மொழிப் பத்திரிகைச் சட்டத்தின் முக்கிய நோக்கங்கள் நான்கு: 1. இந்திய மொழிகளில் வெளியிடப்படும் பத்திரிகைகளை அரசாங்கக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருதல்; 2. அதற்காக அரசாங்கத்தின் அதிகாரத்தை அதிகரித்தல்; 3. அரசாங்க ஆணைகளை மீறிய மற்றும் அரச துரோகச் செய்திகளை வெளியிடும் பத்திரிகைகளின் அச்சு இயந்திரம் மற்றும் அச்சுத்தொழில் சம்பந்தப்பட்ட பொருள்களைப் பறிமுதல் செய்தல்; 4. பத்திரிகையைப் பிரச்சாரக் கருவியாகப் பயன்படுத்துவதை நிறுத்தல். இச்சட்டம் தமிழகத்தைத் தவிர பிற எல்லா மாகாணங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. சேலத்திலிருந்து வெளியான சுதேசாபிமானி என்ற பத்திரிகை இச்சட்டத்தை "தாய்மொழிப் பத்திரிகைகளுக்குக் கிடைத்த மரண அடி" என்று வர்ணித்தது. இந்தச் சட்டம் பத்திரிகை சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பதில் மக்களிடையே கோபத்தையும் கசப்புணர்ச்சியையும் தூண்டிவிட்டது. மக்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இச்சட்டத்தை எதிர்த்து கல்கத்தா நகர மண்டபத்தில் மாபெரும் கண்டனக் கூட்டம் நடத்தப்பட்டது. பத்திரிகைகள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்தன. அரசியல் அமைப்புகள் கண்டித்தன. லிட்டன் பிரபுவுக்கு அடுத்து இந்திய வைசிராயாக வந்த ரிப்பன் பிரபு மக்களின் ஏகோபித்த எதிர்ப்புகளை மதிப்பளித்து தாய்மொழி பத்திரிகை சட்டத்தை விலக்கிக்கொண்டார். பத்திரிகை சுதந்திரம் பாதுகாக்கப்பட்டது.

விசித்திர வழக்கு, 1883

1883ம் ஆண்டு கல்கத்தா உயர் நீதிமன்ற நீதிபதி நோரிஸ் (Justice Norris) முன் ஒரு குடும்பத்தின் சாமிசிலை பற்றிய வழக்கு விசாரணைக்கு வந்தது. சம்பந்தப்பட்ட சிலையை நீதிமன்றத்துக்கு கொண்டுவர உத்தரவிட்டார் நீதிபதி. சாமி சிலையை நீதிமன்றத்துக்குக் கொண்டுவரச் சொன்னது வங்காள இந்துக்களின்

Scanned by CamScanner

தோபத்தைக் கிளறியது. இது சம்பந்தமாக சுரேந்திரநாத் பானர்ஜி அவரது 'பெங்காலி' பத்திரிகையில் எழுதிய தலையங்கத்தில் நீதிபதி தோல்மீ அப்பதவிக்கு அருகதையற்றவர் என்று குறிப்பிட்டிருந்தார். அவர்மீது நீதிமன்ற அவமதிப்பு குற்றம் சாட்டப்பட்டு, இரண்டு மாத சிறை தண்டனை வழங்கப்பட்டது!

சுரேந்திரநாத் பானர்ஜிக்கு அளிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து கல்கத்தாவில் அர்த்தால் அனுசரிக்கப்பட்டது. மாணவர்கள் நீதிமன்றத்துக்கு முன் ஆர்ப்பாட்டம் செய்தனர். கல்லெறிந்து ஜன்னல்களை உடைத்தனர். போலீசார் தாக்கப்பட்டனர். பல நகரங்களில் கண்டனக் கூட்டங்களும் ஊர்வலங்களும் நடத்தப்பட்டன. வங்காளத்துக்கு வெளியே லாகூர், அமிர்தசர், ஆக்ரா, பைசாபாத், பூனா போன்ற நகரங்களிலும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. ஒரு பத்திரிகையாளர் தண்டிக்கப்பட்டதை எதிர்த்து முதல்முறையாக மக்கள் போராடினர் என்பது நினைவுகூறத்தக்கது.

திலகர் தண்டிக்கப்பட்டார், 1897

பால கங்காதர திலகர் 1888ல் பொறுப்பேற்று நடத்திய கேசரி (மராத்தி) மற்றும் மராத்தா (ஆங்கிலம்) பத்திரிகைகள்மூலம் தனது தீவிரவாதக் கருத்துக்களை அச்சமின்றி வெளியிட்டு வந்தார். 1897ல் பூனாவில் கொள்ளை நோய் பரவியபோது அரசாங்க அதிகாரிகள் நோயாளிகளிடம் இரக்கமின்றி அரக்கத்தனமாக நடந்து கொண்டார்கள் என்று கடுமையாக விமரிசனம் செய்தார். இந்திய தேசியவாதிகளிடையே தீவிரவாதம் வேகமாகப் பரவி வந்த நேரம்அது. தீவிர தேசியவாதியும் அரசாங்க எதிர்ப்புப் பத்திரிகையாளரும் மகத்தான மக்கள் செல்வாக்கைப் பெற்றவருமான திலகரைத் தண்டிப்பதற்கான தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது காலனி அரசாங்கம். பூனா பிளேக் கமிட்டித் தலைவராயிருந்த ராண்டு (Rand) கொலைச் சதியில் திலகரைச் சம்பந்தப்படுத்தி 1897 ஜூலை 27ம் தேதி அவரைக் கைது செய்தது. வழக்கை விசாரித்த நீதிபதி ஸ்ட்ராச்சி (Justice Strachy) திலகருக்கு 18 மாத கடுங்காவல் தண்டனை கொடுத்துத் தீர்ப்பளித்தார்!

திலகருக்குக் கொடுக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து நாடெங்கிலும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. தேசப் பத்திரிகைகள் அனைத்தும் திலகருக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தன. பல பத்திரிகைகள் முதல் பக்கத்தில் கருப்புச் கட்டம் கட்டி வெளியிட்டன. பத்திரிகை சுதந்திரத்துக்காகச் சிறைசென்ற திலகரைப் பற்றிய சிறப்பு இணைப்புகள் வெளியிடப்பட்டன. கட்டுரைகள் எழுதப்பட்டன. திலகருடன் கருத்து மாறுபாடுகொண்ட மிதவாதிகளும் திலகர் தண்டனையைக் கண்டித்தனர். இலண்டனில் இருந்த தாதாபாய் நௌரோஜி பத்திரிகையின் குரல்வளையை நெறிப்பது தற்கொலைக்குச் சமம் என்று கூறினார். அம்ராட்டி (Amraoti) காங்கிரஸ் கூட்டத்தில் பேசிய சுரேந்திரநாத் பானர்ஜி திலகர் கைது செய்யப்பட்டதை அறிந்து 'நாடே கண்ணீர் வடிக்கிறது' என்று குறிப்பிட்டார். மக்கள் செல்வாக்கையும் மதிப்பையும் ஒருங்கே பெற்ற திலகர் 'லோகமான்யர்' என்று கவுரவிக்கப்பட்டார்.

தாய்மொழிப் பத்திரிகைச் சங்கம், 1881

திலகர் தண்டனைக்கு எதிராக உருவான அரசாங்க எதிர்ப்பின் விளைவாக குற்ற தண்டனைச் சட்டம் திருத்தப்பட்டு அரசாங்க நிந்தனை செய்வோரும், இந்தியருக்கும் ஆங்கிலேயருக்கு மிடையே வெறுப்பை உண்டாக்குவோரும் குற்றவாளிகளாகக் (Criminals) கருதப்பட்டு தண்டிக்கப்படுவர் என்று கூறப்பட்டது. இப்பத்திரிகை விரோத சட்டத்திருத்தத்தை எதிர்த்து நாடு தழுவிய கண்டன எதிர்ப்பு எழுந்தது. பத்திரிகை சுதந்திரத்தை நிலைநாட்டவும், அரசாங்கத்தின் பத்திரிகை விரோதப் போக்கைக் கண்டிப்பதற்காகவும், பொதுமக்களிடையே கருத்துப் பரிமாற்றம் ஏற்படுவதற்காகவும், மேலாகத் தாய்மொழிப் பத்திரிகைகளின் குரலை உயர்த்துவதற்காகவும், வாவற்றுக்கும் கல்கத்தாவில் தாய்மொழிப் பத்திரிகைச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது.

சுதேசி இயக்கமும் பத்திரிகைகளும்

வங்காளப் பிரிவினைக்கு எதிராகத் தோன்றிய சுதேசி இயக்கத்தின்போது அரசவிரோத நடவடிக்கைகள் தீவிரமடைந்தன. அதற்கேற்ப அரசாங்க அடக்குமுறையும் கட்டவிழ்த்து விடப்பட்டன. மக்கள் கோபமுற்று கொதித்தெழுந்தனர். வங்காள இளைஞர்கள் வன்முறை வழி சென்றனர். 1908ம் ஆண்டின் துவக்கத்தில் அரசாங்க அதிகாரிகள்மீது குண்டுகள் வீசப்பட்டன. பத்திரிகைகள் பரபரப்பான போராட்டச் செய்திகளை வெளியிட்டன. பத்திரிகைகளைக் கட்டுப்படுத்தவும், பத்திரிகையாளர்கள்மீது வழக்கு தொடுத்து தண்டிக்கவும் புதிய சட்டங்கள் இயற்றப்பட்டன. பத்திரிகை சுதந்திரம் பறிக்கப்பட்டது.

சுதேசி இயக்கம் வங்காளத்தில் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்த சமயத்தில் திலகர் அரசாங்க அடக்குமுறையை எதிர்த்து, மக்கள் சுதந்திரத்துக்காகப் போராடுவதை ஆதரித்து கேசரியிலும், மராத்தாவிலும் பல கட்டுரைகள் எழுதினார். அரசாங்க அராஜகத்தின்போது வன்முறை தவிர்க்க முடியாதது என்றார். அதிகார வர்க்கம் மக்களை அச்சுறுத்தினால் குண்டு வெடிசத்தம் கேட்பது இயல்பே என்று எழுதினார். 1908 ஜூன் 24ம் நாள் திலகர் கைது செய்யப்பட்டார். நாடே சிறைச்சாலையாக இருக்கும்போது சிறைக்கூடம் பற்றிய பயமில்லை என்றார். வழக்கை விசாரித்த நீதிபதி தவார் திலகருக்கு ஆறாண்டு கால நாடு கடத்தல் தண்டனை கொடுத்தார் (ஜூலை 22). திலகர் பர்மாவிலுள்ள மாண்டலே சிறையில் அடைக்கப்பட்டார்.

லோகமான்யர் மீண்டும் தண்டிக்கப்பட்டதை எதிர்த்து நாடு முழுதும் கண்டனக் குரல்கள் எழுந்தன. திலகரின் வழக்கு விசாரணையும் அவருக்கு அளிக்கப்பட்ட நியாயமற்ற தண்டனை பற்றியும் பத்திரிகைகளில் செய்திகளும், கட்டுரைகளும் கண்டனங்களும் விரிவாக வெளியிடப்பட்டன. திலகருக்கு தண்டனை கொடுத்த அன்றுமுதல் பம்பாயில் அனைத்து கடைகளும் ஒரு வாரத்துக்கு அடைக்கப்பட்டன. நூற்பாலைத் தொழிலாளர்களும் ரயில்வே பட்டறை ஊழியர்களும் ஆறு நாட்கள் வேலை நிறுத்தம் செய்தனர். காவல்துறையினருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்குமிடையே ஏற்பட்ட மோதல்களைக் கட்டுப்படுத்த இராணுவம் வரவழைக்கப்பட்டது!

Scanned by CamScanner

1908ம் ஆண்டு கப்பிரமணிய பாரதியார் ஆரம்பித்த இந்தியா பத்திரிகையில் தீவிரவாதக் காங்கிரசை ஆதரித்து எழுதினார். தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை வெளியிட்டார். இப்பத்திரிகையில் சுதேசி இயக்கத்தில் மாணவர்களும் மற்றும் மக்களும் பங்கேற்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். சுதேசி இயக்கம் சென்னையில் பரவ பாரதியாரின் 'இந்தியா' பெரிதும் காரணமாக இருந்தது எனலாம். தமிழ்நாட்டுச் செய்திகளுக்குப் பிரதான இடத்தைக் கொடுத்து வந்த, காலனி அரசாங்கத்துக்கு விசுவாசமாக இருந்ததாகக் கருதப்பட்ட சுதேசமித்திரன்கூட, சுதேசி இயக்கத்துக்கு ஆதரவளித்தது! இந்தியப் பத்திரிகை வளர்ச்சி வரலாற்றில் திலகரின் பணியும் பங்கேற்பும் பெருமைக்குரியது.

புதிய பத்திரிகைச் சட்டம், 1910

வேகமாகப் பரவிவந்த அரச விரோதக் கருத்துகளை தடுத்து நிறுத்தும் நோக்கத்தோடு 1910ம் ஆண்டில் ஒரு புதிய பத்திரிகைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இச்சட்டத்தின்படி அச்சிடப்படும் செய்திகள் மக்களைத் தூண்டிவிடுகிற அல்லது அரசாங்கத்தைத் தாக்குகின்ற செய்தியாக இருந்தால் சம்பந்தப்பட்ட பத்திரிகையிடமிருந்து வைப்புத்தொகை கோர அரசாங்கத்துக்கு அதிகாரம் உண்டு. மேலும் குற்றம் சாட்டப்பட்ட பத்திரிகையாளர்கள் தங்களை நிரபராதி என்று நிருபிக்க வேண்டும். இச்சட்டத்தைப் பயன்படுத்தி பத்திரிகைகள் அச்சிடுவதற்கு முன்பே பொறுப்புத் தொகையைக் கட்டுமாறு வற்புறுத்தப்பட்டன. இந்த சட்டத்தை இந்தியப் பத்திரிகைகள் தன்மானக் குறைவாகக் கருதின. இப்புதிய பத்திரிகைச் சட்டம் வீண் விளைவுகளைத் தோற்றுவிக்கும் என்று எச்சரித்தார் கோகலே.

கோகலே எச்சரித்ததைப்போன்றே 1910 பத்திரிகைச் சட்டம் விரும்பத்தகாத, வெறுக்கத்தக்க விளைவுகளை ஏற்படுத்தியது. 1910 லிருந்து 1914 வரை பொறுப்புத்தொகை பலமுறை வசூலிக்கப்பட்டது. இத்தொகையைக் கட்ட மறுத்த பத்திரிகைகள் நசுக்கப்பட்டன. 'கல்' என்ற மராத்தித் பத்திரிகையில் எழுதியதற்காக திலகரின் நண்பரான எஸ்.எம்.பரஞ்சய் என்பவர் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. லாலா லஜபதிராயும், அஜீத் சிங்கும் பஞ்சாப் துணை ஆளுநரான டென்சிங் இப்பெட்சன் என்பவரால் நாடு கடத்தப்பட்டனர். வங்காளத்தில் கிருஷ்ணகுமார் மித்ரா, அசுவினி குமார் தத், ஷியாம் சுந்தர் சக்ரவர்த்தி, புலின் பிகாரிதாஸ், மனோரஞ்சன் குகே, புபேஷ் சந்திரநாத் ஆகியோர் மீது அரசியல் குற்றம் சாட்டப்பட்டு நாடு கடத்தப்பட்டனர். 'சந்தியா' பத்திரிகையின் பிரம்ம பாந்தவ உபாத்யாயா, 'யுகாந்தர்' பத்திரிகையின் புபேந்திரநாத் தத், பிபின் சந்திர பால் மற்றும் 'வந்தே மாதரம்' பத்திரிகையே அச்சிட்டோர் ஆகியோர் சிறையில் அடைக்கப்பட்டனர். வந்தே மாதரம் பத்திரிகை ஆசிரியரான அரவிந்த கோஷ் அலிப்பூர் சதிவழக்கில் சம்பந்தப்படுத்தப்பட்டு சிறையில் வைக்கப்பட்டார். அடக்குமுறைச் சட்டம் அரசியல் எதிரிகளைப் பழிவாங்கவே பயன்படுத்தப்படும் என்பதற்கு 1910 பத்திரிகைச் சட்டம் ஒரு முன்னுதாரணமாகும்.

சுயாட்சி இயக்கமும் பத்திரிகைகளும்

முதல் உலகப் போரின்போது அன்னிபெசண்ட் அம்மையாரும், திலகரும் தனித்தனியே சுயாட்சி இயக்கத்தை (Home Rule Movement)த் தோற்றுவித்தனர்.

இந்த இயக்கத்தைத் தோற்றுவிப்பதற்கான காரணங்களையும், அதன் கொள்கைகளையும் பற்றிப் பிரச்சாரம் செய்வதற்காக அன்னிபெசண்ட் அம்மையார் 'முதான்ஸ் ஈவ்னிங் பிரஸ்' என்ற பத்திரிகையை விலைக்கு வாங்கி, அதற்கு 'நியூ இந்தியா' என்று பெயரிட்டு நடத்தினார். அதோடு காமன்வில் (Common Weal) என்ற பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்தார். இவ்விரு பத்திரிகைகள் மூலமாகவும் சுயாட்சி கொள்கையை வலியுறுத்தி தீவிரமாக எழுதி வந்தார். அதேபோன்று திலகரும் கேசரி மற்றும் மராத்தா பத்திரிகைகளில் எழுதினார். அரசாங்கம் இப்பத்திரிகைகளுக்காக அதிக பொறுப்புத்தொகை வசூலித்தது. அதுமட்டுமல்ல, 1917 ஜூன் மாதம் சென்னை அரசாங்கம் அன்னிபெசண்ட் அம்மையாரையும் அவரது ஆதரவாளர்களையும் கைது செய்தது. அவர்கள் கைது செய்யப்பட்டபோது "பத்திரிகை அலுவலகம் புனிதஸ்தலமாகக் காட்சியளித்தது" என்று கூறுகிறார் பத்திரிகையியல் ஆசிரியர் தங்கமணியன். அரசாங்கத்தின் அடக்குமுறை நடவடிக்கை தன்னாட்சி இயக்கம் தீவிரமடையக் காரணமாயிற்று. பெரும்பான்மையான பத்திரிகையாளர்கள் இவ்வியக்கத்தில் பங்கேற்றனர்.

தமிழ்நாட்டில் திரு.வி.கல்யாணசுந்தரனார் சுயாட்சி இயக்கத்தால் உந்தப்பட்டு 'தேசபக்தன்' என்ற பத்திரிகையைத் துவங்கினார். திரு.வி.க. இப்பத்திரிகை வழியாக அன்னிபெசண்ட் மற்றும் திலகர் தலைமையில் நடைபெற்ற சுயாட்சி இயக்கத்துக்கு முழுஆதரவு அளித்தார். சுருங்கக்கூறின், சுயாட்சி இயக்கம், பத்திரிகைகளின் தோள்தாத் துணையோடு, இந்தியாவில் மக்களிடையே போராதரவு பெற்றுப் பரவியது.

போராட்டங்களும் பத்திரிகைகளும்

ரௌலட் சத்தியாக்கிரகம்

மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தின் விளைவாக 1910 பத்திரிகைச் சட்டம் நீக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் மக்கள் வெறுப்புக்காளான அச்சட்டத்தை நீக்குவதற்கு பதிலாக அரசாங்கம் ரௌலட் சட்டத்தைக் கொண்டு வந்தது (1919 பிப்ரவரி). இச்சட்டம் சாட்சிகள் இன்றி வழக்கை நடத்தவும், விசாரணையின்றி எவரையும் கைது செய்யும் அதிகாரத்தையும் மாகாண அரசாங்கங்கத்துக்குக் கொடுத்தது. ரொட்டி கேட்ட மக்களுக்குக் கல் தரப்பட்டது! இந்தக் கருப்புச் சட்டத்தை எதிர்த்து காந்தி ரௌலட் சத்தியாக்கிரகத்தைத் துவக்கினார்.

பத்திரிகை ஆசிரியர் காந்தி

காந்தி பத்திரிக்கை உலகுக்குப் புதியவரல்லர். அவர் தென்னாப்பிரிக்காவில் 'இந்தியன் ஒப்பீனியன்' என்ற பத்திரிகைமூலம் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டம் நடத்தியவர். பத்திரிகையின் குறிக்கோள் பொதுமக்கள் சேவையே என்பது காந்தியின் கொள்கை. இந்தியாவில் ஆங்கிலத்தில் 'யங் இந்தியா' என்ற பத்திரிகையையும் குஜராத்தியில் 'நவஜீவன்' என்ற பத்திரிகையையும் துவக்கி தனது கொள்கைகளையும் கருத்துக்களையும் வெளியிட்டு வந்தார். இவ்விரு பத்திரிகைகளிலும் இடம்பெறும் கட்டுரைகளைக் கட்டணமின்றி எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியிட அனுமதி அளித்தார்.

Scanned by CamScanner

காந்தியின் எழுத்துக்கள் மக்களிடம் மகத்தான பாதிப்பை ஏற்படுத்தியது. ரௌலட் சட்டம், ரௌலட் சத்தியாக்கிரகம், ஜாலியன்வாலா பாக் படுகொலை, அரசாங்கம் மேற்கொண்ட இராணுவச் சட்ட நடவடிக்கைகள், ஹண்டர் விசாரணைக்குழு, மான்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள், இரட்டை ஆட்சி, கிலாபத் இயக்கம், ஒத்துழையாமை இயக்கம் பற்றியெல்லாம் 'யங் இந்தியா' மற்றும் 'நவஜீவன்' பத்திரிகைகளில் எழுதினார். காந்தியின் கருத்துக்கள் மக்களை எளிதில் சென்றடைந்தன. விளைவு" 1922ம் ஆண்டு யங் இந்தியாவில் எழுதிய கட்டுரையை ஆதாரமாகக்கொண்டு அரசு துரோகக் குற்றம்சாட்டி, காந்திக்கு ஆறாண்டு கால நிறை தண்டனை கொடுக்கப்பட்டது' காந்தியின் கைது இந்திய விடுதலைப் போராட்ட எண்ணத்தை மேலும் தீவிரமடையச் செய்தது.

'சுயராஜ்யா'

1922ம் ஆண்டு ஆந்திரகேசரி டி.பிரகாசம் காந்தியின் கருத்துக்களையும் திட்டங்களையும் பரப்புவதற்காக 'சுயராஜ்யா' என்ற பத்திரிகையை சென்னையில் துவக்கினார். இது தேசியப் பத்திரிகையாகத் திகழ்ந்தது. இந்தியப் பத்திரிகைகளின் இடையறாப் போராட்டத்தின் விளைவாக மக்களின் வெறுப்புக்குள்ளான 1910 பத்திரிகைச் சட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது (1922). மோதிலால் நேருவும், சி.ஆர்.தாசும் சுயாஜ்யக் கட்சியைத் தொடங்கியபோது கே.எம். பணிக்கரை ஆசிரியராகக் கொண்டு இந்துஸ்தான் டைம்ஸ் என்ற பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. இப்பத்திரிகை சுயாராஜ்யக் கட்சியின் பிரச்சார பிரங்கியாக இயங்கியது.

'பார்வர்டு'

1923ல் சி.ஆர்.தாஸ் வங்காளத்தில் சுயாராஜ்யக்கட்சியின் குரலாக ஒலிக்க 'பார்வர்டு' என்ற பத்திரிகையை ஆரம்பித்தார். இப்பத்திரிகை வங்காளத்தில் பெரும்புகழ் பெற்றது. 1925 க்குப் பிறகு இப்பத்திரிகை 'லிபர்ட்டி' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. பின்னர் சுபாஷ்சந்திர போஸ் இப்பத்திரிகைக்கு மீண்டும் 'பார்வர்டு' என்று பெயரிட்டார். அப்பத்திரிகையே போஸ் துவக்கிய 'பார்வர்டு பிளாக்' என்ற கட்சியின் பிரச்சாரக் கருவியாகப் பயன்பட்டது. மக்களை ஆயுதப் புரட்சிக்கு ஆயத்தம் செய்வதற்காக போஸ் 'பார்வர்டு' பத்திரிகையைப் பயன்படுத்தினார்.

விவாதப் பொருள்

ஒத்துழையாமை இயக்கத்துக்குப்பின் இந்தியாவில் அடுத்தடுத்து நிகழ்ந்த சைமன் குழு புறக்கணிப்பு, நேரு அறிக்கை, ஜின்னாவின் 14 அம்சத் திட்டம், பூரண சுயராஜ்யக் கோரிக்கை, சட்ட மறுப்பு இயக்கம், உப்பு சத்தியாக்கிரகம், தண்டி யாத்திரை, வட்டமேஜை மாநாடுகள், காந்தி-இர்வின் ஒப்பந்தம், வகுப்புவாரித் தீர்வு, பூனா உடன்பாடு, 1935 மாநில சுயாட்சித் திட்டம், காங்கிரஸ் அமைச்சரவை அமைப்பு, தனிநபர் சத்தியாக்கிரகம், கிரிப்ஸ் தூதுக்குழு போன்ற நிகழ்ச்சிகள் பத்திரிகைகளில் விவாதப் பொருளாயின.

'இந்து'

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் தடைகளையும் அடக்குமுறை நடவடிக்கைகளையும்மீறி விடுதலைப் போராட்டம் தொடர்ந்ததால் இந்தியப்

பத்திரிகைகளின் மீதான பிடியை மேலும் இறுக்கமாக்க 1930 பத்திரிகைச் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டது. பல பத்திரிகையாளர்கள் பொறுப்புத் தொகையை இழந்தனர். இச்சட்டத்தின் வாயை மூடிக்க இந்தப் பத்திரிகை ஆசிரியர் ரெங்காசாமி ஐயங்கார் தலைமையில் பத்திரிகை ஆசிரியர்கள் சந்தித்து விவாதித்தனர். இதை முறியடிக்கும் பொருட்டு அரசாங்கம் பத்திரிகை ஆசிரியர்களுக்குத் தண்டனை அளிப்பதற்குப் பதிலாக அச்சிடுவோருக்குத் தண்டனை கொடுத்தது. பொறுப்புத் தொகை நிபந்தனைகள் மேலும் கடுமையாக்கப்பட்டது. நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்துக்காகப் பல பத்திரிகை ஆசிரியர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். பல அச்சகங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

'அரிஜன்'

இந்தியாவின் நெருக்கடியான காலகட்டத்தில் 1933 பிப்ரவரி 11ம் நாள் காந்தி 'அரிஜன்' பத்திரிகையை ஆரம்பித்தார். ஆங்கிலத்தில் வெளியான 'அரிஜன்' பின்னர் பல்வேறு மொழிகளில் பதிப்பிக்கப்பட்டது. அரிஜன் முன்னேற்றத்தை மையப்படுத்தியது காந்தியின் 'மிகப்பெரும் புரட்சிகரமான கண்டுபிடிப்பு' என்று குறிப்பிடுகிறார் ஜே.டி.சேத்தி (J.D.Sethi). தீண்டாமை இந்து மதத்தின் அங்கமல்ல, அதற்கு சாத்திரங்களில் ஆதாரமில்லை, அதனால் அக்கொடிய பழக்கம் அடியோடு அழிக்கப்பட வேண்டும் என்பதை மக்களுக்கு எடுத்துரைக்கவே அரிஜன் பத்திரிகை துவக்கப்பட்டது என்று கூறுகிறார் ஜே.பி.கிருபளானி. ஒவ்வொரு சனிக்கிழமையும் வெளிவந்த அரிஜன் படித்தோர் உள்ளங்களில் சமுதாய சீர்திருத்தம் பற்றிய இரசாயன மாற்றத்தை ஏற்படுத்தியது. சமுதாய சீரமைப்பை விடுதலைப் போராட்டத்தின் பிரிக்க முடியாத பகுதியாகக் கருதினார் காந்தி. பேனாவின் வலிமையை நன்கறிந்த காந்தி அரிஜன் பத்திரிகையை மக்களின் மனமாற்றத்துக்கான கருவியாகப் பயன்படுத்தினார்.

மாநில சுயாட்சி

1935ம் ஆண்டு சட்டமறுப்பு இயக்கம் நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து 1937ல் நடைமுறைக்கு வந்த இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் (1935) மாநில சுயாட்சித் திட்டத்தை அமல்படுத்துவதில் காங்கிரஸ் முனைப்புடன் செயல்பட்டது. காங்கிரஸ் ஆட்சி செய்த மாநிலங்களில் பத்திரிகை சுதந்திரம் அனுமதிக்கப்பட்டது; பத்திரிகைக் கட்டுப்பாடுகள் களையப்பட்டன; பொறுப்புத் தொகை முறை அகற்றப்பட்டது; பறிமுதல் செய்யப்பட்ட தொகைகள் திருப்பித் தரப்பட்டன.

புதிய பத்திரிகைகள்

இந்த காலகட்டத்தில் பல புதிய பத்திரிகைகள் துவக்கப்பட்டன. 1936ல் பம்பாயில் 'சண்டே ஸ்டாண்டர்டு' என்ற பத்திரிகை வெளிவந்தது. 1937ல் கல்கத்தாவில் 'இந்துஸ்தான் ஸ்டாண்டர்டு', 'யுகாந்தர்', 'ஸ்டார் ஆப் இந்தியா' பத்திரிகைகள் தோன்றின. 1938ல் ஆரம்பிக்கப்பட்ட லக்னோவில் துவக்கப்பட்ட 'நேஷனல் ஹெரால்டு' பத்திரிகையின் இயக்குநர்கள் குழுத் தலைவராக இருந்தார்

Scanned by CamScanner

நேரு. இந்த எடு காங்கிரஸ் இயக்கத்தை விமர்சிப்பதிலும், பத்திரிகை சுதந்திரத்தைப் பேணி காப்பதிலும் தளிக்கலலம் செலுத்தியது. 1941ல் ஆர்.கே.கரஞ்சியா பம்பாயில் 'பிளிட்ஸ்' ஆங்கில வாரஇதழை ஆரம்பித்தார். 'வந்தே மாதரம்' என்ற குஜராத்தி நாளேடும் தோன்றியது. 1942ல் இந்திய கம்யூனிஸ்டுக் கட்சி 'பியூப்பிள்ஸ் வார்' என்ற பத்திரிகையை ஆரம்பித்தது. இப்புதிய பத்திரிகைகள் விடுதலைப் போராட்டத்துக்கு உத்வேகத்தைக் கொடுத்தன.

'வெள்ளையனே வெளியேறு' இயக்கமும் பத்திரிகைகளும்

'ஆகஸ்டு புரட்சி' (1942)

1939ம் ஆண்டு இரண்டாம் உலகப்போர் துவங்கப்பட்டபின் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்திய பத்திரிகையாளர்கள் செய்தி வெளியிடுவதற்குமுன் குறிப்பிட்ட அதிகாரிகள் முன்அனுமதி பெற வேண்டுமென்றும்; அச்சிடுதல், வெளியிடுதல், அச்சகத்தைப் பயன்படுத்தல் ஆகியவை ஒழுங்குபடுத்தப்படும் அல்லது தடை செய்யப்படும் என்றும் கட்டளை பிறப்பித்தது. 1940ல் மத்தியிலும் மாகாணங்களிலும் பத்திரிகை ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டது. போர் எதிர்ப்புக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரவு தரும் எந்த செய்தியும் வெளியிடப்படாமல் தடை செய்யப்பட்டது. இச்சூழ்நிலையில்தான் 1942 ஆகஸ்டு மாதம் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் அல்லது ஆகஸ்டு புரட்சி துவக்கப்பட்டது.

அரக்கத்தனமான அடக்குமுறை

'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தைப் பிரிட்டிஷ் அரசாங்கம் இரும்புக்கரம் கொண்டு அடக்கியது. ஒடுக்கியது. காங்கிரஸ் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். பத்திரிகைகள்மீது கடுமையான கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டன. அரிஜன், நேஷனல் ஹெரால்டு, இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி போன்ற பல பத்திரிகைகள் நின்று போயின. புதுடெல்லியிலிருந்து வெளிவந்த இந்துஸ்தான் டைம்ஸ் ஆசிரியர் தேவதாஸ் காந்தி அரசாங்க கெடுபிடிகளால் அலக்கழிக்கப்பட்டார். லாகூரிலிருந்து வெளிவந்த டிரிபியூன், பாம்பே கிரானிகல், குஜராத்தி நாளேடான ஜன்ம பூமி, கல்கத்தாவிலிருந்து வெளிவந்த அம்ரித பஜார் பத்திரிகா ஆகிய பத்திரிகைகள் அரசாங்கத்தின் அரக்கத்தனமான அடக்குமுறைக்கு ஆளாயின. இந்த காலகட்டத்தில் இந்தியப் பத்திரிகைகள் சொல்லொணாத் துன்பங்களுக்கும், தாக்குதலுக்கும் துன்புறுத்தலுக்கும் உட்படுத்தப்பட்டன. பத்திரிகை சுதந்திரம் பறிக்கப்பட்டது.

விடுதலை விடியலை நோக்கி

இரண்டாம் உலகப் போர் முடிந்தவுடன் இந்திய விடுதலைப் போராட்டம் புதிய பாதையில் பயணித்தது. வேவல் திட்டம் தற்காலிகத் தீர்வைத் தந்தது. மவுண்ட் பேட்டன் திட்டம் இந்தியாவைத் துண்டாடி நாட்டின் விடுதலைக்கு வழி வகுத்தது. நாட்டுப் பிரிவினை பற்றிய விவாதங்களும், சர்ச்சைகளும்,

முரண்பட்ட கருத்துக்களும் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டன. பாகிஸ்தான் ஆதரவுப் பத்திரிகைகள் நாட்டுப்பிரிவினைக்கு நேரடியாக ஆதரித்ததோடு பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு நன்றியையும் தெரிவித்தன. இந்துமதவாத அமைப்புகளும் பத்திரிகைகளும் தேசப்பிரிவினையை முழுமூச்சுடன் எதிர்த்தன. காங்கிரஸ் ஆதரவுப் பத்திரிகைகள் பிரிவினையை விரும்பாவிடினும், நடைமுறை சாத்தியமான மாற்றுத் திட்டம் இல்லையால் இத்திட்டத்தை வேறுவழியின்றி ஆதரித்தன. சில பத்திரிகைகள் இந்த திட்டத்துக்கு உள்ளார்ந்தம் கற்பித்து எழுதின. 1947 ஆகஸ்டு 15ம் நாள் இந்தியா பிரிட்டிஷ் ஆட்சியின் பிடியிலிருந்து விடுதலை அடைந்தபோது பொதுவாக இந்தியப் பத்திரிகைகள் பெருமையும் பெருமிதமும் கொண்டது நியாயமே.

மதிப்பீடு

இந்தியப் பத்திரிகைகளின் வரலாறு இரண்டு நூற்றாண்டுகளுக்குமேல் பழமையானது. அதனுடைய பலம் வரலாற்று அனுபவத்தாலும், விடுதலைப் போராட்டத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பங்கேற்றதாலும், விடுதலைப் பொருளாதார மறுசீரமைப்பு முயற்சியாலும் பெருகிற்று. "சமகால இந்தியப் பத்திரிகைகளின் பலமும் பயனும் அடிப்படையிலேயே அதன் வரலாற்றுப் பலத்தைப் பொறுத்ததே" என்று குறிப்பிடுகிறார் என்.ராம். அதற்குக் காரணம் இந்திய தேசியப் பத்திரிகை 1868ல் அம்ரித பஜார் பத்திரிகா தோற்றுவிக்கப்பட்டதிலிருந்து நன்கு வேர்விட்டு வளர்ந்ததேயாகும். குறிப்பாக அரை நூற்றாண்டுக்கும் மேலாக இந்தியப் பத்திரிகைகள் தேச விடுதலைப் போராட்டத்தில் பெருமைக்குரிய பங்கேற்று, செயற்கரிய சேவைகள் செய்துள்ளன. அந்தக் கண்ணோட்டத்தோடு பார்க்கையில் இந்தியப் பத்திரிகையை 'ஒரு வரலாற்று நிறுவனம்' என்று கூறலாம்.

இந்தியப் பத்திரிகையின் தோற்ற வளர்ச்சிக்கும் விடுதலைப் போராட்டத்துக்கும் நெருங்கிய தொடர்புண்டு. பத்திரிகை சுதந்திரப் போராட்டம் இந்திய விடுதலைப் போராட்டத்தின் பிரிக்க முடியாத பகுதியாகும். 1799ல் கொண்டுவரப்பட்ட வெல்லஸ்லி கட்டுப்பாடுகளிலிருந்து 1940 இந்தியப் பாதுகாப்பு விதிகள் வரை 15 பத்திரிகை விரோதச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டன! அவற்றையெல்லாம் துணிவுடன் எதிர்கொண்டு இந்தியப் பத்திரிகைகள் வளர்ந்தன. அரசத் துரோகக் குற்றத்துக்காக திலகரும், காந்தியும், சந்தித்த வழக்குகள் இந்தியப் பத்திரிகை வளர்ச்சி வரலாற்றில் முக்கிய மைல் கற்களாகும். பத்திரிகை வளர்ச்சியில் ஏற்ற இறக்கங்கள் இல்லாமலில்லை. இருப்பினும் இந்திய விடுதலைப் போராட்ட கால பத்திரிகை உலகு பல்வகை, பன்முக சமயச்சார்பற்ற தேசநலனை மையப்படுத்தி பத்திரிகை சுதந்திரப் பாரம்பரியத்தை சுதந்திர இந்தியாவுக்கு நல்கொடையாகக் கொடுத்தது என்றால் மிகையாகாது.

Scanned by CamScanner

34. இந்திய விடுதலைப் போராட்டத்தில் நேருவின் பங்கு

நேரு அவரது வெளிப்பான பலதரப்பட்ட திறமைகளை மனித சுதந்திரத்துக்காகத் தாராளமாகச் செலவிட்டார்
- டாக்டர் எஸ்.ராதாகிருஷ்ணன்

இங்கிலாந்தில் நேரு, 1907-1912

செல்வமும் செல்வாக்குமிக்க மோதிலால் நேரு குடும்பத்தில் பிறந்த (1889 நவம்பர் 14) ஜவகர்லால் நேரு வீட்டுப் படிப்புக்குப்பின் மேல்படிப்புக்காக இங்கிலாந்து சென்றார். அங்கு மூன்றாண்டு (1907-10) ஹாரோவிலும், கேம்பிரிட்ஜிலும் பயின்று அறிவியல் பட்டம் பெற்றார். பின்னர் இன்னர் டெம்பிள் சட்டக் கல்லூரியில் படித்து பாரிஸ்டர் ஆனார். நேரு இங்கிலாந்தில் இருந்தபோது அவரது தந்தை எழுதிய கடிதங்கள்மூலம் இந்திய அரசியலைப்பற்றி அறிந்து கொண்டார். 'இந்தியன் பியூபில்' போன்ற இந்தியப் பத்திரிகைகளைத் தருவித்தும் படித்தார். வங்காளத்தில் துவக்கப்பட்ட சுதேசி இயக்கம் நேருவைப் பெரிதும் கவர்ந்தது.

நேரு 1907ல் அயர்லாந்து சென்றபோது ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்துப் போராடிய ஷேன்-பேன் (Sinn Fein) இயக்கம் நேருவின் கவனத்தைக் கவர்ந்தது. ஜே.எம். டூலியின் எழுதிய 'இத்தாலிய விடுதலை வீரன் கரிபால்டி' நேருவின் மனதில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. மஜ்லீஸ் மாணவர் அமைப்பின் மூலம் பிபின் சந்திரபால், லாலா லஜபதிராய், கோபால கிருஷ்ண கோகலே போன்ற காங்கிரஸ் தலைவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டு நாட்டுப் பற்றையும், விடுதலை வேட்கையையும் வளர்த்துக் கொண்டார். நேரு பிரிட்டிஷ் பேபியன் சோஷலிஸ்டுகள் மீது பற்று கொண்டார். சுருங்கக்கூறின், நேரு இங்கிலாந்திலிருந்த ஐந்தாண்டுகளில் படிப்பாளியாக, சிந்தனையாளராக, பகுத்தறிவாளராக, தனியுரிமைக் கோட்பாட்டாளராக, அரசியல் விழிப்புணர்வு பெற்ற சமயச்சார்பற்ற இந்திய தேசியவாதியாக உருவெடுத்தார்.

அரசியல் அறிமுகம், 1912-1916

இங்கிலாந்திலிருந்து இந்தியா திரும்பிய (1912) நேரு அவரது தந்தையின் மேற்பார்வையில் வக்கீலாக வேலை செய்தார். எனினும் நேருவின் நாட்டமெல்லாம் இந்திய அரசியல் மீதுதான் இருந்தது. பங்கிப்பூரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார். காங்கிரஸ் மிதவாதிகளின் கட்டுப்பாட்டில் கயதிருப்தியோடு செயல்படுவதைக் கண்டார். 23 வயதான நேருவுக்குக் காங்கிரஸ் தீவிரவாதிகளின் போக்கு பிடித்தது. ஆனால் இந்து சபாவின் வகுப்புவாத அரசியல் பிடிக்கவில்லை. மிதவாதத் தலைமையின் தீவிரவின்மையும், தீவிரவாதத் தலைமையின் பழிபாவத்துக்கு அஞ்சாமையும் நேருவை திருப்திக் படுத்தவில்லை. அதேபோலவே முஸ்லிம் லீக்கின் மிதவாத தீவிரவாதத் தலைமைகளையும் நேரு கவர்ந்திழுக்கத் தவறவில்லை. அவர் தந்தை மோதிலாலுடன் இருந்தமையால் பல தலைவர்களின் செயல்பாடுகள் நேரில் கண்டறிய முடிந்தது. நான்காண்டு கால அரசியல் அறிமுகத்தால் நேருவுக்கு அரசியல் தெளிவு ஏற்பட்டது எனலாம்.

அரசியல் பிரவேசம், 1916-1920

தீவிரவாதி

தீவிரவாத நாட்டம் கொண்ட நேரு திலகர் மற்றும் அன்னிபெசண்ட் அம்மையார் துவக்கிய சுயாட்சி இயக்கத்தில் சேர்ந்ததில் வியப்பில்லை. 1916 ஜூன் மாதம் அலகாபாத்தில் மோதிலால் நேருவைத் தலைவராகவும், ஜவகர்லால் நேருவை இணைச் செயலாளராகவும் கொண்ட ஹோம்ரூல் லீக் (Home Rule League) துவக்கப்பட்டது. அதை மாகாண அமைப்பாக விரிவுபடுத்துவதற்காக முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இரு நேருகளும் சுயாட்சி இயக்கத்தில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டனர். அவர்கள் காங்கிரஸ் மிதவாதிகளையும் பிரிட்டிஷ் அதிகாரவர்க்கத்தையும் கடுமையாக விமரிசித்தனர். காங்கிரசை திலகர்-பெசண்ட்-மோதிலால் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவர வேண்டும் என்ற நோக்கத்தோடு நேரு 500 க்கும் மேற்பட்ட சுயாட்சி சங்கப் பிரதிநிதிகளைத் திரட்டிக்கொண்டு கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டுக்குச் சென்றார் (1917). நேரு காங்கிரசை மிதவாதிகளின் ஆதிக்கத்திலிருந்து மீட்டு அதைத் தீவிரவாத அமைப்பாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டார்.

எதிர்ப்பாளர்

நேரு 1918 ஜூலை மாதம் வெளியிடப்பட்ட மாண்டேகு-செம்ஸ்போர்டு அறிக்கையை எதிர்த்தார். அதற்குக் காரணம் 5 சதவிகிதத்துக்குக் குறைவான கல்வி கற்ற, அரசியல் விழிப்புணர்வு கொண்ட இந்தியர், 95 சதவிகித கல்வி அறிவற்ற, அரசியல் விழிப்புணர்வு இல்லாத மக்களின் பிரதிநிதிகளாகச் செயல்பட முடியாது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்ததே ஆகும். இது பிரிட்டிஷ் ஆட்சியை இந்தியாவில் நிரந்தரமாக்குவதற்கான சதி என்று எச்சரித்தார் நேரு.

விவசாயிகளைத் திரட்டினார்

அதன் பின்னர் காங்கிரஸ் இயக்கத்தை அடித்தட்டு மக்களுக்குக் கொண்டுசெல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் உத்திரப் பிரதேச விவசாயிகளிடையே தீவிரப் பிரச்சாரத்தை மேற்கொண்டார். நேரு 500க்கும் மேற்பட்ட விவசாயப் பிரதிநிதிகளுடன் டெல்லி காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார். ஜாலியன் வாலாபாக் படுகொலை (1919 ஏப்ரல் 13) நேருவுக்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மீதிருந்த அவநம்பிக்கையை அதிகரித்தது. 1919 ஜூன் முதல் நவம்பர் வரை நேரு பஞ்சாப் இராணுவச் சட்டத்தால் பாதிக்கப்பட்டோர் சார்பாக வாதாடினார். காங்கிரஸ் தலைவர்கள் 1919 அரசியல் சட்டத்தைக் கண்டனம் தெரிவித்து ஏற்றுக் கொண்டனர். ஆனால் நேரு அச்சட்டத்துக்குக் கண்டனம் தெரிவித்து ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த சட்டத்துக்கு எதிராக மக்களைத்திரட்டிப் போராட வேண்டும் என்றார்.

Scanned by CamScanner

சத்தியாக்கிரகி

நேருவின் அரசியல் பிரவேசத்தால் அவரது தனித்தன்மை வெளிப்பட்டது. அடுத்த 10 ஆண்டுகளில் நேரு தன் வழிச்சென்று காங்கிரஸ் தலைவரானார். 1930ல் காந்தி ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்கியபோது அதை வெகுஜன இயக்கமாகக் கருதி நேரு அதில் ஆர்வத்துடன் கலந்து கொண்டார். 1920 டிசம்பர் மாதம் நேரு முசூரியில் அரசாங்க ஆணையை மீறி சத்தியாகிரகம் செய்தார். காலனி அரசாங்கம் அவரைத் தீவிரவாத தேசிவாதியாகக் கருதியது. நேரு 'சத்தியாகிரகி' என்ற தகுதியைப் பெற்றார்.

ஒத்துழையாமைக்கு ஒத்துழைப்பு

முசூரியிலிருந்து அலகாபாத் திரும்பிய நேரு (1920 ஜூன்) நிலச்சுவான்தார்களின் கரண்டலிலிருந்து விவசாயிகளைக் காப்பாற்றும் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். நேரு விவசாயிகளை நம்பினார்; விவசாயிகள் நேருவை நம்பினர். அவரைப் பார்க்கவும், அவரது பேச்சைக் கேட்கவும் கிராம மக்கள் ஆயிரக்கணக்கில் கூடினர். உத்திரபிரதேச காங்கிரஸ் கமிட்டி காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்ற நேரு காரணமாக இருந்தார் (1920 ஆகஸ்டு 22). பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கோ, அதிகார வர்க்கத்துக்கோ கொஞ்சமும் அஞ்சாத நேருவின் நடவடிக்கைகள் மக்களிடையேயும், காங்கிரஸ் அமைப்புக்குள்ளும் அவரது செல்வாக்கை உயர்த்தியது.

புறக்கணிப்புப் போராட்டம்

1921 டிசம்பர் மாதம் இந்தியாவுக்கு வந்த வேல்ஸ் இளவரசருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட புறக்கணிப்புப் போராட்டத்தில் நேரு ஆர்வத்துடன் பங்கேற்றார். அவர் லக்னோ சென்று அரசாங்க உத்திரவைமீறி அர்த்தால் பிரகரங்களை வினியோகித்தார். நேரு நேரில் சென்று போராட்டத்தில் கலந்துகொண்டது லக்னோ மக்களிடையே உற்சாகத்தையும் உத்வேகத்தையும் ஏற்படுத்தியது. அதேபோன்று நேரு 'அவத்' பகுதியில் மேற்கொண்ட ஒத்துழையாமைப் பிரச்சாரம் அப்பகுதி விவசாயிகளைக் கிளர்ந்தெழச் செய்தது. நேரு அவரது தந்தையுடன் ஆனந்த பவனத்தில் கைது செய்யப்பட்டனர்.

தொழிலாளர் தொடர்பு

கயா காங்கிரஸ் மாநாட்டில் (1922) காங்கிரஸ்காரர்கள் அரசாங்கத்தோடு ஒத்துழைப்பவர், ஒத்துழைக்காதர்கள் என்ற இரு கோஷ்டிகளாகப் பிரிந்தனர். நேரு எந்த கோஷ்டியிலும் சேராததால் அவரது செல்வாக்கு உயர்ந்தது. 1922ல் லஜபதிராய், சி.ஆர்.தாஸ் போன்ற பிரபலங்களோடு சேர்ந்து நேருவும் அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்டார். அதிலிருந்த நேருவுக்குத் தொழிலாளர் இயக்கத்துடன் தொடர்பு ஏற்பட்டது. மக்கள் செல்வாக்கு பெற்ற நேரு அலகாபாத் நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர், அலகாபாத் நகராட்சி மன்றத் தலைவர், உத்தரப் பிரதேச மாகாண காங்கிரஸ் செயலாளர், அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செலாளர் போன்ற பல பொறுப்புகளை வகித்தார்.

நாபா போராட்டம்

1923 செப்டம்பர் 19ம் நாள் பஞ்சாபில் சிக்கியர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்த்து நாபா (Nabha)வில் ஒத்துழையாமைப் போராட்டம் நடத்தினர். நேரு நாபாவுக்குச் சென்று அரசாங்கத் தடையைமீறி அப்போராட்டத்தில் பங்கேற்றார். அதற்காக நேருவுக்கு 30 மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் அரசாங்கம் அத்தண்டனையை ஒத்திவைத்து நேருவை நாபாவை விட்டு வெளியேறுமாறு உத்திரவிட்டது. நேரு அலகாபாத் திரும்பினார்.

அரசியல் அனுபவம்

நேரு இந்துஸ்தான் சேவாதளம் என்ற தன்னார்வத் தொண்டர்கள் அமைப்பை ஏற்படுத்தினார் (1923). அந்த ஆண்டு நடைபெற்ற காக்கிநாடா காங்கிரஸ் மாநாட்டில் நேரு காங்கிரஸ் பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பதவியில் இருந்தபோது நேருவுக்கு 1. காங்கிரஸ் அமைப்பு தீர்வுகாண; 2. இந்து முஸ்லீம் மோதல் பிரச்னை; 3. பஞ்சாபில் தலைதூக்கிய அகாலி இயக்கம் பற்றிய நேரடி அனுபவம் கிடைத்தது. மோதிலால் நேருவும், சி.ஆர்.தாசும் சுயராஜ்யக் கட்சியைத் துவக்கியபோது நேரு அதை ஆதரிக்கவில்லை.

பூரண சுயராஜ்யக் கோரிக்கை

நேரு 1926-27ல் இத்தாலி, இங்கிலாந்து, ஜெர்மனி, ரஷ்யா ஆகிய நாடுகளுக்குச் சென்று பாசிசம், தொழிற்சங்க இயக்கம், நாசிசம், கம்யூனிஸ்டு ஆட்சி பற்றிய விரிவான அனுபவத்தோடு இந்தியா திரும்பினார். அவர் சைமன் கமிஷன் புறக்கணிப்புப் போராட்டத்தில் தீவிர பங்கேற்றார். நேரு 1927 டிசம்பர் 27ம் தேதி சென்னையில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில், மிகுந்த முயற்சிக்குப்பின் பூரண சுயராஜ்யத் தீர்மானத்தை முன்மொழிந்தார், அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இளைஞரணி தலைவர்

மின்னர் நேருவும், சுபாஷ் சந்திரபோசும் சேர்ந்து காங்கிரஸ் குடியரசுக் கட்சி, இந்திய சுதந்திர லீக் ஆகிய இரு அமைப்புகளை ஏற்படுத்தினர். இந்த அமைப்புகள்மூலம் 1. சோஷலிஸ்டுக் குடியாட்சி இலட்சியத்துக்காக மக்கள் ஆதரவைத் திரட்டவும் 2. வகுப்புவாதத்தை எதிர்க்கவும்; 3. இந்திய விடுதலையைத் துரிதப்படுத்தவும் இருவரும் முயன்றனர். இளைஞர்களிடையே எழுச்சி ஏற்பட்டது. நேரு அகில இந்திய இளைஞர் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் (1928). அதன்மூலம் நேருவுக்கு அகில இந்திய அங்கீகாரம் கிடைத்தது.

காங்கிரஸ் தலைவர்

இந்தியாவின் பூரண சுயராஜ்யத்துக்காக விவசாயிகளையும் தொழிலாளர்களையும், இளைஞர்களையும் திரட்டிவந்த நேரு, இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்தைப் பரிந்துரைத்த மோதிலால் 'நேரு அறிக்கை'யை எதிர்த்தார். தொழிலாளர் இயக்கத்தில் ஆர்வம் கொண்ட நேரு அகில இந்திய தொழிற் சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் (1928). காங்கிரஸ் பொதுச்செயலாளராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட நேரு 1929ம் ஆண்டு காந்தியின் ஆதரவோடும் ஆசீர்வாதத்தோடும் காங்கிரஸ் தலைவரானார்.

Scanned by CamScanner

போராட்ட தனபதி, 1930-1942

இலக்கு நோக்கி இயக்கம்

காங்கிரஸ் தலைவரான நேரு காங்கிரஸ் இயக்கத்தை முழு சுதந்திர இலக்கு நோக்கிச் செலுத்த முற்பட்டார். வைசிராய் இர்வின் பிரபுவால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட, காந்தி மோதிலால் போன்றோரால் அங்கீகரிக்கப்பட்ட முதல் வட்டமேஜை மாநாட்டில் விவாதிக்கப்பட இருந்த டொமினியன் அந்தஸ்து பற்றிய டெல்லி அறிக்கை (Delhi Manifesto) யை நேரு முழுமூச்சுடன் எதிர்த்தார். அவரது எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காக காங்கிரஸ் செயற்குழுவிலிருந்து விலகினார். அதேபோன்று, காந்தி தனது 11 அம்சக் கோரிக்கையை வைசிராய் ஏற்றுக் கொண்டால் ஒத்துழையாமை இயக்கத்தை மீண்டும் துவக்கப் போவதில்லை என்ற சமரசத்தையும் நேரு ஏற்றுக்கொள்ளவில்லை. காந்தியின் சமரசம் காங்கிரஸின் பூரண சுயராஜ்யத் தீர்மானத்துக்கு முரணானது என்பதை எடுத்துக் காட்டினார். டொமினியன் அந்தஸ்து சுதந்திரம் ஆகாது என்று நேரு பிடிவாதமாக வாதிட்டார்.

உப்பு சத்தியாக்கிரகம்

1930 மார்ச் 12ம் நாள் காந்தி தண்டி யாத்திரை மூலம் உப்பு சத்தியாக்கிரகத்தைத் துவக்கினார். மக்கள் பங்கேற்கும் இயக்கம் என்பதால் நேரு ஆர்வத்துடன் இப்போராட்டத்தில் பங்கேற்றார். அரசாங்கத் தடையைமீறி உப்பு காய்ச்சியதற்காக காந்தி கைது செய்யப்படவில்லை. ஆனால் அதே குற்றத்துக்காக நேரு கைது செய்யப்பட்டார் (ஏப்ரல் 14). சிறையிலிருந்து விடுதலையான நேரு உத்திரப் பிரதேசத்தில் வரிகொடா இயக்கத்தைத் துவக்கினார். ஆக்ரா, ரேபரேலி போன்ற நகரங்களில் பெருங்கொந்தளிப்பு ஏற்பட்டது. விவசாயிகளின் உரிமைகளுக்காகப் போராடிய நேரு கைது செய்யப்பட்டார் (1931 டிசம்பர் 26). நோய்வாய்ப்பட்டிருந்த மனைவியை சந்திப்பதற்காக ஜெர்மனி செல்வதற்காக 1935 செப்டம்பர் 4ம் தேதி நேரு விடுதலை செய்யப்பட்டார். நேரு ஜெர்மனியில் இருந்தபோது மீண்டும் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் (1936 ஜனவரி)

ஜனநாயக சோஷலிஸ்டு

1936 மார்ச் மாதம் இந்தியா திரும்பிய நேரு காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் அவ்வியக்கத்துக்கு சோஷலிசப் பார்வையைக் கொடுக்க முற்பட்டார். தன்னை ஒரு 'குடியாட்சியில் நம்பிக்கையுடைய சோஷலிஸ்டு' என்று கூறிக்கொண்ட நேரு, காங்கிரசுக்குள் செயல்பட்டுவந்த காங்கிரஸ் சோஷலிஸ்டுக் கட்சியை ஊக்குவித்தார். தனது காரியக் கமிட்டியில் ஆச்சாரிய நரேந்திர தேவ், ஜெயப்பிரகாஷ் நாராயண், அச்சுதபட்வர்த்தன் ஆகிய மூன்று சோஷலிஸ்டு தலைவர்களையும் உறுப்பினர்களாக சேர்த்துக் கொண்டார். அப்போதிருந்து தான் சோஷலிச எதிர்ப்பாளர்கள் நேருவுக்கு எதிரான 'சித்தாந்த யுத்தத்தை' நேரடியாகவும், மறைமுகமாகவும் துவக்கினர் என்று குறிப்பிடுகிறார் 'நேரு, இந்திரா, ராஜீவ்' நூலின் ஆசிரியர் பி.ஜி.கணேசன்.

கிரிப்சுடன் நேரு

காங்கிரஸ் தலைவர் நேரு அலகாபாத்தில் அமைக்கப்பட்ட 'முஸ்லீம் மக்கள் தொடர்புக் குழு' மூலம் முஸ்லீம்களை காங்கிரஸ் உறுப்பினர்களாக சேர்க்கும்

பணியில் முழுமூச்சாக ஈடுபட்டார். 1937 இறுதியில் 1,00,000 முஸ்லீம்கள் காங்கிரஸில் சேர்ந்தனர். முஸ்லீம் லீக் கடுமையாக எதிர்த்ததால் அம்முயற்சி கைவிடப்பட்டது. 1939ல் இரண்டாம் உலகப் போர் துவங்கியபோது இந்தியா, பிரிட்டனுக்கு ஆதரவளிப்பதை நேரு எதிர்த்தார். அதேபோன்று காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்து விலகிய தனது நெருங்கிய சோஷலிஸ்டு சகாவான சுபாஷ் சந்திரபோஸ் துவக்கிய பார்வர்டு பிளாக் கட்சியையும் ஆதரிக்கவில்லை. 1940ல் காந்தி துவக்கிய 'தனி நபர் சத்தியாக்கிரக'த்திலும் நேருவுக்கு உடன்பாடில்லை. 1942ல் இந்தியாவிற்கு வந்த கிரிப்ஸ் தூதுக்குழுவுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் நேரு பிரதான பங்கேற்றார். நேருவின் தீண்டாமை நண்பரான கிரிப்சுடன் பேச்சுவார்த்தை நடத்தி இந்தியாவுக்குச் சாதகமான உடன்பாட்டைச் செய்துகொள்ளும் நிலை உருவானது. அதை விரும்பாத பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் கிரிப்சை இங்கிலாந்து திரும்புமாறு செய்து விட்டார் (ஏப்ரல் 12)

ஆகஸ்டு போராட்டம்

வெள்ளையனே வெளியேறு இயக்கம்

வெள்ளையனே வெளியேறு இயக்கம் துவங்குவதற்கு முன்பே நேரு காங்கிரஸ் தொண்டர்களுக்கு இரகசிய அறிவுரைகள் வழங்கினார். இந்த இயக்கம் முந்தைய இயக்கங்களைவிட வீச்சிலும், வீரியத்திலும் வித்தியாசப்பட்டிருக்கும். இவ்வியக்கத்துக்கு மத்திய அல்லது மாகாணத் தலைமை கிடைப்பது கடினம். எனவே தலத்தலைவர்கள் இப்போராட்டத்தை நடத்த வேண்டும். போராட்டத்தின்போது சொத்துக்களுக்கு அழிவேதும் ஏற்படக்கூடாது. நேரு முன்மொழிய படேல் வழிமொழிய 'வெள்ளையனே வெளியேறு' தீர்மானத்தை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி நிறைவேற்றியது (1942 ஆகஸ்டு 8). அடுத்த நாள் காங்கிரஸ் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். நேரு, அகமதுநகர் கோட்டையில் சிறைவைக்கப்பட்டார். 1041 நாள் சிறைவாசத்துக்குப்பின் விடுதலையானார் (1945 ஜூன் 15). 1945 ஜூலை மாதத்திலிருந்து 1946 மார்ச் வரை நேரு மக்கள் அமைப்புகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டார்.

சாதனையாளர், 1942-1947

இடைக்கால அரசு

தேர்தலுக்குப் பிறகு பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவுக்கு அதிகார மாற்றம் செய்யத் தீர்மானித்தது. உலகப்போர் குறுக்கிட்டதால் தள்ளிவைக்கப்பட்ட தேர்தல் 1945-46ல் நடத்தப்பட்டது. இத்தேர்தலுக்காக நேரு சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டார். தேர்தல் பிரச்சாரத்தின்போது: 1. மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்கான பொருளாதாரத் திட்டம்; 2. காங்கிரசின் சமயச்சார்பற்ற நிலை; 3.முஸ்லீம் தனித்தொகுதிகளில் காங்கிரஸ் முஸ்லீம் வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்தல்; 4. திட்டமிட்ட தொழில்மயமாக்கல் மூலம் வறுமையை ஒழித்தல் போன்ற வாக்குறுதிகளை நேரு மக்களுக்கு அளித்தார். இதற்கிடையே இந்திய தேசிய இராணுவ அதிகாரிமீது தொடரப்பட்ட வழக்கின்போது நேரு வக்கில் உடையணிந்து வாதிட்டார் (1945 நவம்பர்). அகில இந்திய மாகாண மக்கள் மாநாட்டில் உரையாற்றினார் (டிசம்பர் 31).

Scanned by CamScanner

தேர்தல் முடிவுகள் நேரு எதிர்பார்த்த அளவுக்கு இல்லையாயினும் காங்கிரஸ் பஞ்சாயில் கூட்டணி ஆட்சியும், வங்காளம், சிந்து, நீங்கலாக பிற மாகாணங்களில் தனித்தும் ஆட்சி அமைத்தது. முஸ்லீம் லீக்கால் வங்காளம் மற்றும் சிந்து மாகாணங்களில் மட்டுமே ஆட்சியைப் பிடிக்க முடிந்தது. இந்த தேர்தலில் காங்கிரசும் முஸ்லிம் லீக்கும் மட்டுமே பலமிக்க பிரதான கட்சிகள் என்பது உறுதியாயின. 1946 செப்டம்பர் 2ம் நாள் நேருவின் தலைமையில் 'இடைக்கால அரசு' அமைக்கப்பட்டது.

இருபெரும் சாதனைகள்

நேரு இடைக்கால அரசின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதிலிருந்து 1947 மார்ச் 22ம் நாள் மௌண்ட்பேட்டன் பிரபு வைசிராயாகப் பதவி ஏற்றது வரை நேரு இருபெரும் சாதனைகளைச் செய்தார். 1.அரியலமைப்புச் சட்டமன்றத்தில் ஒரு தீர்மானம் கொண்டு வந்து இந்திய அரியலமைப்புச் சட்டத்தின் (Constitution) அடிப்படைக் கட்டமைப்பை வடிவமைத்துக் கொடுத்தார் 2.இந்திய வெளியுறவுக் கொள்கையின் ஆதாரக் கூறுகளை வரையறுத்தார்.

தேசப் பிரிவினை

பிரிட்டிஷ் காலனி ஆட்சியின் இறுதி ஆறு மாதங்கள் தற்கால இந்திய வரலாற்றில் தனிச்சிறப்புடைய காலகட்டமாகும். அதற்குக் காரணம்: 1. 182 ஆண்டு பழமையான பிரிட்டிஷ் காலனி ஆதிக்கம் இந்தியாவில் முடிவுக்கு வந்தது; 2.இந்தியப் பிரிவினைத் திட்டப்படி சுதந்திரம் வழங்கப்பட்டது. சர்ச்சைக்குரிய பிரிவினைத் திட்டத்தை நேருவும் படேலும் ஏற்றுக் கொண்டனர். சூழ்நிலைக் கட்டாயத்தால் காந்தியும் இதற்குச் சம்மதித்தார். நடைமுறை சாத்தியமற்ற பாகிஸ்தான் அமைப்பால் (கிழக்கு-மேற்கு பாகிஸ்தான்) விரைவில் பாகிஸ்தான் பகுதிகள் மீண்டும் இந்தியாவுடன் இணைந்து ஐக்கிய இந்தியா உருவாகும் என்ற நம்பிக்கையில் இப்பிரிவினை ஏற்பாட்டுக்கு நேரு உடன்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார் பி.என்.பாண்டே! இந்தியா 1947 ஆகஸ்டு 14/15 நள்ளிரவில் விடுதலை அடைந்தது. நேரு தனது 58வது வயதில் சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரானார்.

வரலாற்று நாயகர்: மதிப்பீடு

ஜவஹர்லால் நேருவைப் பற்றிப் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் நேருவின் பங்குபற்றி இன்றைக்கும் ஆராய்ச்சியாளர்களிடையே கருத்தொற்றுமை ஏற்படவில்லை. அதற்குக் காரணம் நேருவின் ஆளுமையின் பன்முகப் பரிமாணங்களேயாகும். நேரு பரிணாம வளர்ச்சியில் நம்பிக்கை கொண்ட புரட்சியாளர். எனவே, அவர் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் பொது வன்முறை விரைவு மாற்றங்களை விரும்பவில்லை; ஆதரிக்கவில்லை.

நேருவிடம் காணப்பட்ட நாட்டின் நிலைமைக்கேற்ப தன்னை மாற்றிக்கொள்ளும் தனித்திறமை அதிசயிக்கத்தக்கது. அதனால்தான் அவர் காந்தியுடன் பலவிதத்திலும் மாறுபட்டாலும் காந்தியின் தலைமையில்கீழ் கடைசிவரை செயல்பட்டார். சுயாராஜ்யக் கட்சி மற்றும் டொமினியன் அந்தஸ்து

பற்றித் தந்தை மோதிலால் நேருவுடன் வேறுபட்டாலும் நேரு அவருடன் இணைந்தே போராட்டத்தில் கலந்து கொண்டார். சைமன் குழுவை முதலாம் காலகட்ட தயான் சந்திர போகட்டன் கருத்தொற்றுமை இருந்தாலும் அவர் பார்வார்டு பிளாக் துவக்கி ஆயுதப் புரட்சி நோக்கில் பயணித்தபோது நேரு அவரிடமிருந்து விலகிக்கொள்ளத் தயங்கவில்லை. இடதுசாரியான நேரு வலதுசாரியான பட்டேலுடன் சேர்ந்தே பணியாற்றினார். இறுதிவரை நேரு வலதுசாரியான விருப்பு வெறுப்புகளையும் தேசநலனே மூல முதன்மை முக்கியத்துவம் பெற்றது என்று நேருவின் உள்ளத்து உரைப்பேயாரும்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் நேருவின் தாக்கம் மற்றும் அவரது சாதனைகள்பற்றி மதிப்பீடு செய்வது எளிதன்று. இருப்பினும் நேருவின் வரலாற்று நன்கொடைகள் நினைவுகூறத்தக்கவை: 1. நேரு ஏகாதிபத்திய எதிர்ப்பாளர், அவர் காலனி ஆட்சி அடக்குமுறையையும், ஏகாதிபத்திய எதிர்ப்பாளர், எதிர்த்துப் போராடியவர், 2. நேரு ஏகாலத்தில் தேசிய வாதியாகவும், ஜனநாயகவாதியாகவும், சோஷலிசவாதியாகவும், பருத்தறிவாளராகவும், மனிதாபிமானியாகவும் இருந்தவர்; 3. காங்கிரஸ் இயக்கத்தைத் திவிர வெகுஜனப் போராட்டக் கருவியாக உருமாற்றம் செய்வதில் முழுமூச்சுடன் ஈடுபட்டவர் நேரு; 4. நேரு காங்கிரசுக்கும் இந்திய மக்களுக்கும் சோஷலிசப் பார்வையைக் கொடுத்தார்; 5. நேரு இந்தியா சுதந்திரம் அடைவதற்குமுன் 35 ஆண்டுகள் மக்கள் தலைவராகத் திகழ்ந்தார். விவசாயிகள், தொழிலாளர்கள், இளைஞர்கள், ஏழை எளியோர் ஆகியோருடன் அமைப்பு ரீதியாகத் தொடர்பு கொண்டிருந்தார். நேரு மக்களை நேசித்தார்; மக்கள் நேருவை நேசித்தனர்; 6. நேரு நாட்டு நலனுக்காகத் தியாகம் செய்யத் தயங்காதவர். தனது வாழ்நாளில் அவர் 14 ஆண்டுகள் சிறைச் சாலைகளில் கழித்தார் என்பது நினைவுகூறத்தக்கது.

நேருவை விரும்புவோரும் வெறுப்போரும் இன்றும் உளர். முஸ்லீம் லீக்கின் வகுப்புவாத சவாலை எதிர்கொள்ளாததும், இந்திய ஒன்றிய அமைப்புக்குள் ஐக்கிய இந்தியாவை உருவாக்காததும், குழ்நிலைக் கட்டாயத்தால் இந்தியப் பிரிவினையை ஏற்றுக்கொண்டதும் நேருவின் குறைபாடுகளாகக் கூறப்படுகின்றன. நேரு ஒரு மாபெரும் அமைப்பின் அங்கமாக இருந்தமையால் இக்குறைபாடுகளுக்கு அவரை மட்டும் குறைகூறுவதில் பயனில்லை. நேரு இக்குறைகளையும் தாண்டி 'வரலாற்று நாயகராக' விளங்குகிறார் என்பது தெளிவு.

K.THARMENDRA M.Sc M.Phil.,
Guest,
P.G. & Research Department of
Zoology & Wildlife Biology
A.V.C. College (Autonomous),
Mannampandal-609 305.

Scanned by CamScanner

35. விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கு

தமிழ்நாடு தவமுடையது. ஏனெனில் காங்கிரஸ் மகாசபையின் முதற் கூட்டத்தில் முதல் தீர்மானத்தைக்கொண்டு வந்து நிறைவேற்றிய பெருமை தமிழ்நாட்டுத் தலைவராகிய ஸ்ரீ சுதேசமித்திரன் ஜி.சுப்பிரமணிய ஐயருக்கே கிடைத்தது

- சுப்பிரமணிய பாரதியார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கு பெருமைக்குரிய ஒன்றாகும். விஜயநகர, மதுரை சுல்தானிய, மராத்திய மேலாதிக்கங்களை அந்நிய ஆதிக்கமாகக் கருதாத தமிழ்நாடு ஆங்கிலேய ஆட்சிக்கெதிரான போராட்டத்தில் முனைப்புடன் ஈடுபட்டது. பத்தொன்பதாம் நுற்றாண்டின் துவக்கத்திலேயே தென்னிந்தியக் கிளர்ச்சி (1800-1801)க்குத் தோற்றுவாயாக இருந்தது தமிழ்நாடு. வேலூர்க் கிளர்ச்சி (1806)யில் தமிழ்நாட்டுப் படைவீரர்கள் துணிவுடன் போராடினார்கள். ஆயினும் அவ்விரு துவக்ககால ஆங்கிலேய ஆதிக்க எதிர்ப்புப் போராட்டங்கள் முறியடிக்கப்பட்டன. அதன் பின்னர் ஆங்கிலக்கல்வி பெற்ற தமிழ்நாட்டுத் தலைவர்கள் உரிமை உணர்வும், விடுதலை வேட்கையும் பெற்று அரசியல் சார்ந்த அமைப்புகளை ஏற்படுத்தினர். சென்னை சுதேசிகள் சங்கமும், சென்னை மகாஜன சபையும் அத்தகைய அமைப்புகளேயாகும். 1884 டிசம்பர் மாதம் சென்னை அடையாற்றில் பிரம்மஞான சபையின் ஆண்டுக் கூட்டத்துக்குப்பின் திவான் இராகுநாதராவ் இல்லத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்திருந்த பிரதிநிதிகள்கூடி இந்தியாவுக்குப் பொதுவான ஒரு அமைப்பை ஏற்படுத்தவும், அதன் மாநில கிளைகளை துவக்கவும், அடுத்த ஆண்டு இறுதியில் தேசிய மாநாட்டைக் கல்கத்தாவில் கூட்டவும் தீர்மானித்தனர். ஆனால் அத்தீர்மானம் செயல் வடிவம் பெறுவதற்கு முன்னரே பம்பாயில் இந்திய தேசிய காங்கிரஸ் அமைக்கப்பட்டுவிட்டது.

தமிழ்நாடும் துவக்க கால காங்கிரசும்

முதல் மாநாட்டில் தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள்

ஆலன் ஆக்டேவியன் ஹியூமின் சோர்வற்ற முயற்சியின் விளைவாக இந்திய தேசிய காங்கிரசின் முதல் மாநாடு 1885 டிசம்பர் 28ஆம் தேதி பம்பாயில் கூடியது. அக்கூட்டத்தில் கலந்து கொண்ட 72 பிரதிநிதிகளில் சென்னை மாநிலத்திலிருந்து சென்றவர்கள் 21 பேர்; அவர்களுள் தமிழ்நாட்டுப் பகுதியிலிருந்து சென்ற பிரதிநிதிகள் 16 பேர். எஸ். சுப்பிரமணிய அய்யர், வி. அனந்தாச்சாரியார், எம்.வீராகவாச்சாரியார், பி.ரெங்கைய நாயுடு, எஸ்.ஏ.சுவாமிநாத ஐயர், எஸ்.வெங்கட சுப்பராய பந்துலு, பி.கேசவப்பிள்ளை,

ஜி. கிங்காரவேலு முதலியார், ரங்காச்சார், எல் வி அதல்வி, சபாபதி முதலியார், பால்பிட்டர் பிள்ளை, காமிநாத ஐயர், நாடு மாதவராவ், வெங்கட சுப்பராயலு, கேசவப்பிள்ளை ஆகியோர் தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள் ஆவர். அவர்கள் அனைவரும் சென்னை மகாஜன சங்கத்தின் சார்பாகச் சென்றவர்கள் ஆவர். இவர்களன்றி கோவை டிரேடியன் சங்கத்தின் சார்பாகச் சென்றவர்கள் ஆவர். கலெக்டர் ஆர்.ரகுநாத ஐயர், ஆர்க்காடு பொன்னிலியர் கே.சந்தரராமன், திருவல்லூர் டி.என் ஐயர் ஆகியோர் பாரிஸ்டர்களாகச் சென்றவர்கள் ஆவர். முதல் காங்கிரஸ் மாநாட்டுத் தலைவராக டபிள்யு சி பானர்ஜியின் பெயரை வழிமொழிந்து, மாநாட்டின் முதல் தீர்மானத்தை முன்மொழிந்த பெருமை தமிழ்நாட்டுப் பிரதிநிதியான எஸ்.சுப்பிரமணிய ஐயருக்கே கிடைத்தது. இந்திய விடுதலைப் போராட்டத்தில் புதிய சகாப்தத்தைத் துவக்கிய இந்திய தேசிய காங்கிரசின் முதல் மாநாட்டிலேயே தமிழ்நாட்டிலிருந்து சென்ற பிரதிநிதிகள் பிரதிபலிப்பும் பெற்றனர்.

சென்னையில் மூன்றாவது மாநாடு

1887 டிசம்பர் மாதம் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரசின் இரண்டாவது மாநாட்டில் சென்னையிலிருந்து 47 பிரதிநிதிகள் சென்று கலந்து கொண்டனர். அவர்களுள் ஜி.சுப்பிரமணிய ஐயர், எஸ்.சுப்பிரமணிய ஐயர், எஸ்.ஏ.சுவாமிநாத ஐயர், கேசவப்பிள்ளை, பி.ரெங்கைய நாயுடு, பி.அனந்தாச்சாரி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

காங்கிரசின் மூன்றாவது மாநாடு 1887 டிசம்பரில் சென்னை நகரில், தற்போது ஆயிரம்விளக்கு என்றழைக்கப்படும் பகுதியில் மக்கீஸ் தோட்டம் என்னுமிடத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பத்ருதீன் தியாப்ஜியின் தலைமையில்கூடிய அம்மாநாடு முதன்முறையாகத் திறந்த வெளித் திடலில் பிரத்யேகமாக அமைக்கப்பட்ட அலங்காரப் பந்தலில் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதில் சென்னை மாநிலத்தின் சார்பாக 362 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். சென்னை பட்டதாரிகள் சங்கம், சென்னை மகாஜன சபை, திருவல்லிக்கேணி இலக்கிய சங்கம், சென்னை மெட்டல் கம்பெனி, அஞ்சுமான் முப்த இஸ்லம், புரசைவாக்கம் இந்து நிதி, சாணார் முன்னேற்ற சங்கம் ஆகிய பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இம்மாநாட்டில் பங்கேற்றனர். சென்னை மாநாட்டில் ஒரு சிறப்பு அம்சம் அதன் செலவின் பெரும்பகுதி பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்பட்டதாகும். மாநாடு வரவேற்புக் குழுச் செயலரும் 'இந்து' பத்திரிகை நிர்வாகியுமான மு.விஜயராகவாச்சாரியார் தமிழில் எழுதிய 'காங்கிரஸ் வினாவிடை' என்ற சிறுநூல் மலிவு விலையில் விற்பனை செய்யப்பட்டு, அதனால் கிடைத்த நிதியும் மாநாட்டுச் செலவுக்குப் பயன்படுத்தப்பட்டது. ராஜா சர்.டி.மாதவராவ் வரவேற்புக் குழுத்தலைவராகப் பணியாற்றி மாநாட்டை வெற்றிகரமாக நடத்திக் கொடுத்தார். ராவ்சாகிப் மூக்கணாச்சாரி தமிழில் பேசி அனைவரது பாராட்டையும் பெற்றார். அப்போது சென்னை கவர்னராயிருந்த கன்னிமாரா பிரபு சென்னை மாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் அனைவருக்கும் சிறப்பு விருந்தளித்துச் சிறப்பித்தார்.

Scanned by CamScanner

துவக்கால காங்கிரசோடு தமிழ்நாடு தொடர்பு கொண்டிருந்தது. 1887க்குப் பின்னர் 1894, 1898, 1903, 1906, 1914, 1923, 1927 ஆகிய ஆண்டுகளில் காங்கிரஸ் மாநாடு சென்னை நகரில் நடைபெற்றது. 1920 கொகாத்து காங்கிரஸ் மாநாட்டில் தலைவர் சி.பி.விஜயராகவாச்சாரியும், 1926 கௌகாத்தி காங்கிரஸ் மாநாட்டுத் தலைவர் எஸ்.சீனிவாச ஐயங்காரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களே. துவக்க கால தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் ஆங்கிலக் கல்வி பெற்ற செல்வமும் செல்வாக்குமிக்க அரசாங்க விசுவாசிகளாகவே இருந்தனர். விக்டோரியா மகாராணியாரின் மறைவில் போதும் (1901) அவர்களது அரச விசுவாசம் தெளிவாக வெளிப்பட்டது. இந்துவும் சுதேசமித்திரனும் தமிழ்நாட்டு மக்களின் கருத்துக்களைப் பிரதிபலித்தன. அவை அவ்வப்போது அரசாங்கத்தின் நோக்கையும் போக்கையும் கண்டிக்காவிட்டாலும் குறைகூறவே செய்தன. இந்நூற்றாண்டின் துவக்கத்தில் நிகழ்ந்த வங்கப் பிரிவினையும் (1905), ஜப்பான் ரஷ்யாவைத் தோற்கடித்த நிகழ்ச்சியும் (1904-1905) தமிழ்நாட்டின் அரசியல் விழிப்புணர்ச்சிக்குப் புதிய பரிமாணத்தைத் தந்தன.

தமிழ்நாட்டு மிதவாதிகள்

கோபால கிருஷ்ண கோகலேயைப் பின்பற்றியவர்கள் காங்கிரஸ் மிதவாதிகள் என்றழைக்கப்பட்டனர். கோகலேயின் வலக்கரமாகத் திகழ்ந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த வி.எஸ்.சீனிவாச சாஸ்திரி மிதவாதிகளுக்கெல்லாம் மிதவாதியாக விளங்கினார். அவரைப் போன்றே பி.எஸ். சிவகாமி ஐயரும், வி. கிருஷ்ணசாமி ஐயரும், டி.ஆர்.வெங்கடராம சாஸ்திரியும், 'இந்தியன் ரெவ்யூ' பத்திரிக்கை ஆசிரியரான ஜி.ஏ.நடேசனும் தமிழ்நாட்டின் தலைசிறந்த மிதவாதிகளாவர். அவர்கள் அனைவரும் பிராமண மத்தியதர வகுப்பை சார்ந்தவர்களாகவே இருந்தனர். பெரும்பாலும் வக்கில் தொழிலை மேற்கொண்டிருந்தனர். தமிழ்நாட்டு மிதவாதிகள் அரசாங்க ஆதரவாளர்களாவர். மார்லி-மின்டோ சீர்திருத்தத்தின் (1909) விளைவாக ஏற்படுத்தப்பட்ட சென்னை சட்டமன்றத்தில் மிதவாதிகள் இடம் பெற்றனர். வி.கிருஷ்ணசாமி ஐயரும், பி.எஸ். சிவகாமி ஐயரும் 1914க்கு முன் சென்னை மாநில கவர்னர் ஆட்சிக் குழுவில் இடம்பெற்ற முக்கிய மிதவாதத் தலைவர்களாவர். 1917 ஆகஸ்டு 20ஆம் தேதி வெளியிடப்பட்ட மாண்டேகுவின் அறிக்கையைத் தமிழ்நாட்டு மிதவாதிகள் ஆர்வத்துடன் ஆதரித்தனர். அதேபோன்று இரட்டை ஆட்சியையும் ஏற்றுக் கொண்டனர். சீனிவாச சாஸ்திரி போன்ற மிதவாதத் தலைவர்கள் ரௌலட் சட்டத்தை எதிர்த்து கண்டமாருதப் பிரசங்கம் செய்தனர். ஆனால் காந்தி துவக்கிய ரௌலட் சத்தியாக்கிரகத்தினின்றும் ஒதுங்கியே நின்றனர். ஒதுங்கி நின்றதோடு மட்டுமன்றி அந்நேரடி நடவடிக்கையைக் கண்டிக்கவும் செய்தனர். அதனால்தான் காந்தி தனது ரௌலட் சத்தியாக்கிரகத்துக்குத் தமிழ்நாட்டு தீவிரவாதிகளின் ஆதரவை நாட வேண்டியதாயிற்று என்கிறார் டேவிட் அர்னால்டு.

தமிழ்நாட்டுத் தீவிரவாதிகள்

பாலகங்காதர திலகரைப் பின்பற்றியவர்கள் தீவிரவாதிகள் என்றழைக்கப்பட்டனர். சேலம் விஜயராகவாச்சாரியைத் தமிழ்நாட்டுத் தீவிரவாதத்தின் தந்தை எனக் கூறலாம். அவரது பாசறையில் பயிற்சி பெற்றவர்தான் சி.ராஜகோபாலாச்சாரி. சேலத்தைத் தென்னாட்டின் பூனா எனக்

கருதிக் கொண்டு திலகர் அடிபற்றித் தமிழ்நாட்டுத் தீவிரவாதிகள் செயல்பட்டனர். சென்னையில் டி.எஸ்.எஸ்.ராஜன், வ.உ.சிதம்பரம் பிள்ளை, எ.ராமசாமி ஐயங்கார், டி.ரெங்காச்சாரி, எஸ்.கஸ்தூரிரங்க ஐயங்கார் ஆகியோர் செல்வாக்கு மிக்க தீவிரவாதிகளாகத் திகழ்ந்தனர்.

வங்காளப் பிரிவினையின் விளைவாக எழுந்த கதேசி இயக்கத்தால் பெரிதும் கவரப்பட்ட வ.உ.சிதம்பரம் பிள்ளை தூத்துக்குடியில் கதேசி கப்பல் கம்பெனி ஒன்றை 1906 நவம்பரில் துவக்கினார். 1907ஆம் ஆண்டில் தடை பெற்ற சூரத் காங்கிரசுக்கு நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ்நாட்டுத் தீவிரவாதிகளைத் திரட்டி வருமாறு வ.உ.சிதம்பரம் பிள்ளைக்கு அரவிந்தர்தான் கொடுத்த தந்தியைத் திரமேற்கொண்டு தமிழ்நாட்டுக்குத் திலகரான அவர் சென்னை சென்று கப்பிரமணிய பாரதியாருடனும், மண்டையம் சீனிவாசாச்சாரியுடனும் கலந்து பேசித் தமிழ்நாட்டுப் பிரதிநிதிகளை சூரத் மாநாட்டுக்கு அழைத்துச் சென்றார். சூரத் மாநாட்டுப் பந்தலில் ஏற்பட்ட அமளியின்போது துரைசாமி ஐயர், கதேந்திரநாத் எத்திராஜ், திருவல்லிக்கேணி கிருஷ்ணமாச்சாரி, பாரதியார், வ.உ.சிதம்பரம் பிள்ளை, சீனிவாசராகவாச்சாரி, சர்க்கரைச்செட்டியார் ஆகிய தமிழ்நாட்டுத் தீவிரவாதப் பிரதிநிதிகள் திலகரைச் சூழ்ந்துகொண்டு அவருக்குப் பாதுகாப்பளித்தனர். 'தமக்கு எத்தனை அடிப்பட்டபோதும் திலகரைக் காக்க வேண்டுமென்று அசையாது நின்ற இந்த சென்னை பிரதிநிதிகளின் தீரத்தன்மையை எண்ணும்போது உடல் புல்லரித்து மிகுந்த மகிழ்ச்சி உண்டாக்கியது' என்று அந்த அனுபவத்தைப்பற்றி எழுதியுள்ளார் பாரதியார்.

1908 பிப்ரவரி மாதம் கோரல் தொழிற்சாலை வேலைநிறுத்தத்தில் வ.உ.சிதம்பரம்பிள்ளை சம்பந்தப்பட்டதும்; மார்ச் மாதம் தடை உத்தரவை மீறி அவரும் சுப்பிரமணிய சிவாவும் பொதுக் கூட்டத்தில் பேசியதும் அவர்கள் இருவரும் கைது செய்யப்படக் காரணமாயின. அவர்கள் கைதானதை அடுத்து தூத்துக்குடியிலும், திருநெல்வேலியிலும் வன்முறைத் கலவரங்கள் ஏற்பட்டுத் துப்பாக்கிச் சூட்டில் முடிந்தது. 1911 ஜூன் 11ஆம் தேதி வாஞ்சிநாதன் திருநெல்வேலி மாவட்டத் துணைக் கலெக்டரை மணியாச்சி ரயில் சந்திப்பு நிலையத்தில் சுட்டுக் கொன்றார். வன்முறை நிகழ்ச்சிகளை ஒடுக்க அரசாங்கம் மேற்கொண்ட அடக்குமுறையின் விளைவாகத் தமிழ்நாட்டுத் தீவிரவாதிகள் மறைமுகமாக செயல்படத் துவங்கினர். அவர்களில் வி.சுப்பிரமணிய பாரதியும், வ.வே.சுப்பிரமணிய ஐயரும் , நீலகண்ட பிரம்மச்சாரியும், சுதேசி பத்மநாப ஐயரும், சுப்பிரமணிய சிவாவும் குறிப்பிடத்தக்கவர்கள்.

தமிழ்நாட்டு புரட்சி தேசியவாதிகள்

மிதவாதிகள், தீவிரவாதிகள் ஆகியோரின் சட்டரீதியான நடவடிக்கைகளைக்கூட பிரிட்டிஷ் அரசாங்கம் முறியடித்தபோது தீவிரவாதிகளில் சிலர் பயங்கரவாதிகளாயினர் (Terrorists). மிதவாதிகளிடமிருந்து தீவிரவாதிகள் தோன்றியது போன்று தீவிரவாதிகளிடமிருந்து பயங்கரவாதிகள் உருவாயினர். இவர்களில் சிலர் 1905ல் இலண்டனில் 'ஹோம் ரூல் லீக்' என்ற அமைப்பையும், 1906ல் 'இந்தியா விடுதி' என்ற முகாமையும் அமைத்தனர். தமிழ்நாட்டைச் சேர்ந்த வ.வே.சுப்பிரமணிய ஐயரும், திருச்சி டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜனும், எம்.பி.டி.ஆச்சாரியாவும் இப்பயங்கரவாதப் பாசறையில் பயிற்சி பெற்றோர்

Scanned by CamScanner

ஆவர். வெள்ளை அதிகாரிகளைக் கொன்று அந்திய ஆட்சியாளரிடையே பயத்தை ஏற்படுத்தி தக்கதருணத்தில் வன்முறைக் கிளர்ச்சி செய்து, இந்தியாவை விடுவிப்பது இவர்களது குறிக்கோளாகும்.

வ.வே.சு. ஐயர்

பாரிஸ்டர் படிப்புக்காக இலண்டன் சென்ற வ.வே.சு.ஐயர் பயங்கரவாதியானார். 'இந்தியா விடுதி'யில் தங்கியிருந்த இவர் பிற பயங்கரவாதிகளுடன் சேர்ந்து இந்திய விடுதலைக்காக பிரிட்டிஷ் அரசை எதிர்த்து ஆயுதப் புரட்சியை ஏற்படுத்தத் திட்டமிட்டார். 1908ல் இவர்களோடு 'இந்தியா விடுதி'யில் தங்கியிருந்த மதன்லால் திங்ரா என்ற இந்திய பயங்கரவாதி கர்சான் வாலி என்ற பிரிட்டிஷ் அதிகாரியைச் சுட்டு கொன்றதையடுத்து இந்தியா விடுதி பிரிட்டிஷ் அரசாங்கத்தின் தீவிர கண்காணிப்புக்குள்ளாகியது. பயங்கரவாதிகள் தங்களது பாசறையை இலண்டனிலிருந்து பாரிக்கு மாற்றினர்.

வா.வே.சு.ஐயர் வீரசவார்க்கரின் '1857 முதலாவது இந்திய சுதந்திரப் போராட்டம்' என்ற நூலை மொழிபெயர்த்து அரசாங்கத் தடையைமீறி, உலகின் பல பகுதிகளுக்கும் அனுப்பினார். "தியாகப் பலிக்கு ஆயத்தமாகுங்கள், பாரத மாதா அழைக்கின்றாள். 1857 திரும்புகிறது" என்ற துண்டுப் பிரகரங்களுடன் புத்தகங்கள் தாங்கிய பெட்டி ஒன்றைப் பாண்டிச்சேரிக்கு அனுப்பினார். ஐயர் ரஷ்யாவுக்குச் சென்று வெடிகுண்டு தயாரிக்கும் முறையைக் கற்றுக்கொண்டு புதுவைக்கு வந்தார் (1910).

புதுவையில் தஞ்சம் புகுந்த ஐயர் 'தர்மாலயம்' என்ற அமைப்பை ஏற்படுத்தி பயங்கரவாதப் புரட்சியாளர்களுக்குக் குத்துச்சண்டை, மல்யுத்தம், கத்திச்சண்டை, துப்பாக்கிச் சுடல் ஆகியவற்றில் பயிற்சி அளித்து வந்தார். புதுவையில் புகலிடம் பெற்றிருந்த மற்றொரு தமிழ்நாட்டுப் பயங்கரவாதியான நீலகண்ட பிரம்மச்சாரியைப் பார்க்கச் சென்ற இளைஞர் வாஞ்சிநாதனுக்குப் 'பிரௌனிங்' கைத்துப்பாக்கியால் சுடுவதற்குப் பயிற்சியளித்தார் வ.வே.சு. ஐயர்.

வாஞ்சிநாதன்

செங்கோட்டை இரகுபதி ஐயரின் மகனான வாஞ்சிநாதன் திருவிதாங்கூரிலுள்ள புனலூரில் அரசாங்கக் காட்டிலாகாவில் பணிபுரிந்து வந்தார். வ.உ.சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா போன்ற தூய்மையான தேசியவாதிகளுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளால் வெள்ளை அதிகாரிகளுக்கெதிராக வெறுப்பையும், வஞ்சத்தையும் வளர்த்துக் கொண்டார் வாஞ்சிநாதன். அரசாங்க அடக்குமுறைக்குக் காரணமான நெல்லை மாவட்டக் கலெக்டர் ராபர்ட் வில்லியம் ஆஷ் (Robert William D.Ethcourt Ashe) என்ற அதிகாரியைக் கொலைத் திட்டமிட்டார். புதுவையிலிருந்து நீலகண்ட பிரம்மச்சாரியைச் சந்தித்தார். வ.வே.சு.ஐயரிடம் துப்பாக்கி சுட பயிற்சி பெற்றார். 1911 ஜூன் 17ஆம் தேதி கொடைக்கானலுக்குச் செல்வதற்காக நெல்லையிலிருந்து புகைவண்டியில் தன் மனைவியுடன் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்த ஆஷை மணியாட்சி புகைவண்டி நிலையத்தில் 'பிரௌனிங்' கைத்துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டு தன்னையும் சுட்டுக்கொண்டு உயிர்த்தியாகம் செய்தார் வாஞ்சிநாதன்!

நீலகண்ட பிரம்மச்சாரி

நீலகண்ட பிரம்மச்சாரி ஆஷ் கொலை வழக்கில் குற்றவாளியாகக் கருதப்பட்டு ஏழாண்டு கால சிறைத் தண்டனை பெற்றார். இவர் புதுவையில் தஞ்சம் புகுந்திருந்தபோது 1910 ஏப்ரல் 10ம் தேதி 'பாரத மாதா சங்கம்' என்ற அமைப்பை ஏற்படுத்தினார். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அந்திய அதிகாரிகளைக் கொன்று இந்தியாவுக்கு சுயராஜ்யம் பெறுவதே அதன் நோக்கமாகும். இச்சங்க உறுப்பினர்கள் காளி சிலைக்கு முன்நின்று கொண்டு தலைவரின் ஆணைக்குக் கட்டுப்பட்டு எதையும் தியாகம் செய்யத் தயாராயிருப்பதாக ஆன்காட்டிவிரலை அறுத்து இரத்தத்தில் தோய்த்துக் கையொப்பமிட்டனர். சங்கேத மொழியில் கடிதங்களை எழுதிக் கொண்டனர்.

நீலகண்ட பிரம்மச்சாரியின் தலைமையில் இயங்கிவந்த பயங்கரவாத புரட்சிப்படை ஐரோப்பிய நாடுகளிடமிருந்து ஆலோசனைகளையும், ஆயுத உதவியையும், பொருளுதவியையும் பெற்று வந்தது. புதுவையில் 'சூரியோதயம்' என்ற பத்திரிக்கையை நடத்தி வந்தார். வாஞ்சிநாதன் ஆஷை சுட்டுக் கொல்வதற்கு முன்பு புதுவை வந்து நீலகண்ட பிரம்மச்சாரியை சந்தித்தார். நீலகண்ட பிரம்மச்சாரிமீது சாட்டப்பட்ட ஆஷ் கொலைக் குற்றம் நிருபிக்கப்பட்டதாகக் கூறி இவருக்கு ஏழாண்டு கால சிறைதண்டனை வழங்கப்பட்டது.

இவர் இரண்டாண்டு காலம் சிறையில் இருந்த பின்னர் 1914ல் பெல்லாரி சிறையிலிருந்து தப்பியோடி விட்டார்! எனினும் இரண்டே நாட்களில் தர்மாவரம் புகைவண்டி நிலையத்தில் பிடிபட்டார். சிறையிலிருந்து தப்பியோடிய குற்றத்துக்காக இவருக்கு மேலும் ஆறுமாத கால சிறை தண்டனை விதிக்கப்பட்டது. சிறைமீண்ட நீலகண்ட பிரம்மச்சாரி கம்யூனிஸ்டாக மாறினார்! வர்க்கப் போராட்டத்தில் ஈடுபட்டு 1922ல் பத்தாண்டு கால சிறைதண்டனை பெற்றார். வ.வே.சு.ஐயர் சேரன்மாதேவியில் 'பரத்துவாஜ ஆசிரமம்' ஒன்றை நிறுவியதைப் போன்று நீலகண்ட பிரம்மச்சாரியும் கர்நாடகத்திலுள்ள நந்திமலையில் ஆசிரமம் ஒன்றை அமைத்து அமைதியாக வாழ்ந்து தனது 88வது வயதில் உயிர் நீத்தார்.

மாடசாமி

ஒட்டப்பிடாரத்தில் பிறந்த மாடசாமியை வ.உ.சியின் வலக்கரமாக இருந்து சட்டபூர்வமாக நடத்தப்பட்ட சுதேசிக் கிளர்ச்சியில் பங்கேற்றார். பின்னர் வாஞ்சிநாதன் சார்ந்திருந்த பயங்கரவாதப் படையில் சேர்ந்தார். ஆஷ் கொலைக்குப் பிறகு தலைமறைவாகி விட்டார்! இவரைக் கைதுசெய்ய பகீரதப் பிரயத்தனம் செய்யப்பட்டது. அவரது வீட்டிலிருந்த பொருள்களும் அவருக்குச் சொந்தமான நிலங்களும் பறிமுதல் செய்யப்பட்டன. ஒட்டப்பிடாரம் மாடசாமி பாண்டிச்சேரி, சிங்கப்பூர் வழியாக ஜெர்மனிக்குச் சென்றுவிட்டதாகக் கருதப்படுகிறது.

ஆச்சாரியா

எம்.பி.டி.ஆச்சாரியா சென்னை திருவல்லிக்கேணியில் வாழ்ந்து வந்த மைசூரைச் சேர்ந்த மண்டயம் குடும்பத்தைச் சார்ந்தவர். இவரது முழுப்பெயர்

Scanned by CamScanner

மண்டலம் பிராமணரல்லாதார் இயக்கத்தின் தலைவராக இருந்த டி.எம்.நாயர், டி.எஸ்.எஸ்.ராஜன் ஆகியோரோடு தங்கி விடுதி'யில் வ.வே.சு.ஐயர், டி.எஸ்.எஸ்.ராஜன் ஆகியோரோடு தங்கி பயங்கரவாதப் புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார். இவர் தூத்துக்குடி குருநாத ஐயர், டாக்டர் சண்பகராமன் ஆகியோருடன் சேர்ந்து பெர்லின் முகாமிலிருந்த புரட்சியாளரிடையே மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தார். பட்டதாரியான ஆச்சாரியா பெர்லின் முகாமில் இருந்துகொண்டு பயங்கரவாத ஆயுதப் புரட்சிவழி அந்நிய ஆதிக்கத்திலிருந்த இந்தியாவை விடுவிக்க முயன்றார்.

குருநாத ஐயர்

தூத்துக்குடி குருநாத ஐயர் போலீஸ் இலாகாவில் தலைமைக் காவலராக பணியாற்றியவர். வ.உ.சி நடத்திய சுதேசி இயக்கத்தில் பங்கேற்பதற்காக வேலையைத் துறந்தார். வ.உ.சி. கைதானதையொட்டி நெல்லை நகரில் நடைபெற்ற கலவரத்தில் ஈடுபட்டு, அரசாங்கக் கட்டிடங்களுக்குத் தீ வைத்ததாக குருநாத ஐயர் கைது செய்யப்பட்டார்! வழக்கு நடந்தது. சிறை தண்டனை வழங்கப்பட்டது. சிறைமீண்ட இவர் பெர்லின் சென்று அங்கு தங்கியிருந்த பயங்கரவாதப் புரட்சியாளர்களுடன் சேர்ந்துகொண்டு இந்திய விடுதலைக் கிளர்ச்சிக்குப் பாடுபட்டதாகக் கருதப்படுகிறது.

டாக்டர் சண்பகராமன்

நாஞ்சில் நாட்டைச் சேர்ந்த டாக்டர் சண்பகராமன் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்தார். பிரிட்டனுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்ய சில அமைப்புகளை ஏற்படுத்தினார். 'புரோ இந்தியா' என்ற பெயரில் பத்திரிகை நடத்தினார். ஆங்கிலம் தவிர பிற மொழிகளிலும் பத்திரிக்கைகள் நடத்தியவர். பெர்லின் முகாமில் இருந்தவர்களில் மிகுந்த செல்வாக்குப் பெற்றவர். ஜெர்மன் அதிபரான கெய்சரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். லெனினை சந்தித்து அவரது ஆதரவைப் பெற்றவர். முதல் உலகப் போரின்போது ஜெர்மனியின் துணைகொண்டு பிரிட்டிஷ் ஆட்சியை இந்தியாவிலிருந்து அகற்ற முற்பட்டவர். 'எம்டன்' என்ற நீர்மூழ்கிக் கப்பல் மூலம் சென்னை உயர்நீதிமன்றக் கட்டிடத்தைக் குறிவைத்து குண்டு வீசியவர் (1914). இந்தியப் புரட்சியாளர்கள் ஆப்கானிஸ்தான் தலைநகரான காபூலில் 'தற்காலிக இந்தியக் குடியரசு' ஒன்றை நிறுவியபோது அதன் அமைச்சரவையில் அயல்நாட்டு அமைச்சராக நியமிக்கப்பட்டார். ஆயுத ஆக்கிரமிப்பால் இந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட அந்நிய ஆட்சியை ஆயுத ஆக்கிரமிப்பால் அகற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் இந்திய விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் 'எம்டன் சண்பகராமன்'! தமிழ்நாட்டுப் பயங்கரவாதிகளின் வன்முறை ஆயுதப்புரட்சிமூலம் இந்தியாவுக்கு விடுதலை பெற்றுத்தர வேண்டும் என்ற கனவு நனவாகவில்லை. எனினும் இந்திய விடுதலைப் போராட்டத்தில் தேசிய பயங்கரப் புரட்சியாளர்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

பாரதியார்

1904ஆம் ஆண்டு பாரதியார் 'சுதேசமித்திரன்' பத்திரிக்கையின் துணை ஆசிரியர் பொறுப்பேற்றதிலிருந்து அவருடைய பத்திரிக்கை வாழ்க்கையோடு

அரசியல் வாழ்க்கையும் துவங்கியதெனலாம். வங்கப் பிரிவினையை எதிர்த்து வங்கத்தைப் பாராட்டி அவர் எழுதிய முதல் கவிதையை அப்பத்திரிக்கையில் வெளியிட்டார் (1905 செப் 15). வாரணாசி காங்கிரஸ் கூட்டத்தில் கலந்துகொண்டு சென்னை திரும்பும்முன்னர் கல்கத்தா சென்று சுவாமி விவேகானந்தரின் பிரதம சிஷ்யையான சகோதரி நிவேதிதையை சந்தித்தார். வங்கப் பிரிவினை எதிர்ப்பிலே பிறந்த சுதேசி இயக்கத்தை ஆர்வத்தோடு வரவேற்றார் பாரதியார். பக்கிம் சந்திரரின் 'வந்தே மாதரம்' பாடலைத் தமிழில் மொழிபெயர்த்து 'சுகர்வர்த்தினி' மாத இதழில் வெளியிட்டார். தானே 'வந்தே மாதரம்' என்ற பாடலையும் புனைந்தார். ஜி.சுப்பிரமணிய ஐயர் சுதேசி இயக்க வளர்ச்சிக்கென நிதி திரட்டும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டபோது அவரது நடவடிக்கையை ஆதரித்தும் பாராட்டியும் 'இந்தியா' பத்திரிக்கையில் எழுதினார். வ.உ.சி. வாங்கிய கப்பல்களை பாரத தேவி பெற்றெடுத்த இரண்டு தவப்புதல்வர்கள் என்று வர்ணித்தார்.

தமிழ்நாட்டுத் தீவிரவாதிகளின் பிரதிநிதியாகத் திகழ்ந்தவர் பாரதியார். அவரது இந்தியா பத்திரிக்கை தீவிரவாதக் கட்சியினரின் போர் முரசாக ஒலித்தது. 1906 டிசம்பர் மாதம் நடைபெற்ற கல்கத்தா காங்கிரஸ் கூட்டத்தில் கலந்த கொண்டார் பாரதியார். அக்கூட்டத்தில் தலைவராக ஸ்டேட் என்ற ஆங்கிலேயரை நியமிக்க வேண்டும் என்ற மிதவாதிகள் மேற்கொண்ட முயற்சியை 'மூடத்தனம்' என்று கண்டித்தார். அதேபோன்று தீவிரவாதிகள் வெளிநாட்டுப் பொருள்களைப் புறக்கணிக்க வேண்டும் என்று கல்கத்தா காங்கிரசில் கொண்டு வந்த தீர்மானத்தை எதிர்த்து மிதவாதிகளையும் சாடினார். தென்னகத்துக்கு வருகை தந்த வங்கத்து தீவிரவாதிகளின் தலைவரான பிபின் சந்திர பாலரை பாரதியார் ஆந்திராவுக்குச் சென்று சந்தித்து சென்னைக்கு அழைத்து வந்தார் (1907 மே). லாலா லஜபதிராய் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டபோது ஆங்கிலேய அரசாங்கத்தைக் கண்டித்தும், ராயின் தியாகத்தைப் பாராட்டியும், லஜபதிராய் துதி, லஜபதிராய் பிரவாபம் என்ற கவிதைகளைப் புனைந்தார். மிதவாதிகளைக் கேலி செய்தும், தீவிரவாதிகளைப் புகழ்ந்தும் பல பாடல்களை இயற்றினார் பாரதியார். சூரத் காங்கிரஸ் கூட்டத்தில் கலந்துகொண்டு திரும்பிய பாரதியார் அங்கு மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே ஏற்பட்ட அமளிபற்றி விரிவாக எழுதினார். 'எங்கள் காங்கிரஸ் யாத்திரை' என்ற நூலை வெளியிட்டார். 'புதிய கட்சியினரின் கோட்பாடுகள்' என்ற திலகரின் ஆங்கிலச் சொற்பொழிவைத் தமிழில் மொழி பெயர்த்தார் பாரதியார்.

தேசிய தீவிரவாதிகள் கட்சியின் தென்னகச் செயலாளரான வ.உ.சி. தீவிரப் பிரச்சாரத்திலும் போராட்டத்திலும் ஈடுபட்டிருந்தபோது அழைப்பின்பேரில் நெல்லை கலெக்டர் 'விஞ்ச்'சை சந்தித்ததை 'தேசபக்தனுக்கு ஆங்கிலேயன் சொன்னது' 'ஆங்கிலேயனுக்கு தேசபக்தன் சொன்னது' என்ற தலைப்பில் பாடினார் பாரதியார். வ.உ.சி., சிவா ஆகியோரைக் கைது செய்து சிறையில் அடைத்துப் பின்னர் அவர்கள்மீது வழக்கு தொடரப்பட்டபோது பாரதியார், நெல்லையிலேயே தங்கியிருந்து, பல நாட்கள் நீதிமன்றத்திற்கே சென்று வழக்கு விசாரணையைக் கவனித்து வந்ததோடில்லாமல் வ.உ.சி., சிவா ஆகியோருக்குச் சார்பாக சாட்சி சொல்லவும் தயாராகி இருந்தார். வழக்கு முடிந்தபின் வ.உ.சி.க்கு இருபதாண்டும், சிவாவுக்குப் பத்தாண்டும் சிறை தண்டனை

Scanned by CamScanner

விடுக்கப்பட்டபோது நீதிபதி பின்ஹேயின் தீர்ப்பை எதிர்த்தார். பாரதியார் அதற்காக 'இந்தியா' பத்திரிக்கை ஆசிரியரைக் கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அப்பத்திரிக்கையில் ஆசிரியர் எம்.ஸ்ரீனிவாசன் கைது செய்யப்பட்டு ஐந்தாண்டுகள் சிறை தண்டனை பெற்றார். சிறைசெல்வதைத் தவிர்க்க விரும்பிய பாரதியார் புதுச்சேரியில் தஞ்சம் புகுந்தார் (1908 ஜூன்).

தனது 27வது வயதில் புதுவை புகுந்த பாரதியார் நிதம்பரனாரும், சிவாவும் சிறையில் கொடுமைப்படுத்தப்பட்டதை அறிந்து குமுறினார், பதறினார், பாடினார். இந்தியாவிற்கு பிரிட்டிஷார் வழங்கிய மார்லி-மிண்டோ சீர்திருத்தத்தை கேலி செய்தார். வாஞ்சிநாதன் ஆஷைக் கொலை செய்த செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றார். அதை ஒரு 'துரதிஷ்டமான சம்பவம், எதிர்பாராத விபத்து' என்று வர்ணித்தார். ஆஷ் கொலையை வன்மையாகக் கண்டித்து எழுதினார் பாரதியார். அவருக்கு அரசியல் கொலையிலும், ஆயுதப் புரட்சியிலும் நம்பிக்கையில்லை. புதுவை வாசம் பாரதியாரை தேசியக் கவிஞராகவும், இலக்கியப் படைப்பாளியாகவும், உரைநடை, கட்டுரையாளராகவும் தத்துவ ஞானியாகவும், மனிதாபிமான முனிவராகவும் மாற்றியது. புதுவைப் புகலிட வாழ்க்கையில் சலிப்புற்று தனது மனைவி மக்களோடு தமிழ்நாடு திரும்பிய பாரதியார் கைது செய்யப்பட்டு கடலூர் சிறையில் அடைக்கப்பட்டார் (1918 டிசம்பர்). நோய்வாய்ப்பட்ட பாரதியார் சில வாரங்களில் நிபந்தனையின் பேரில் விடுவிக்கப்பட்டார். 1919 மார்ச் மாதம் ரௌலட் சட்டம் எதிர்ப்பு பற்றித் தமிழ்நாட்டுத் தலைவர்களுடன் பேச சென்னை வந்த காந்தியடிகளை சந்தித்துப் பேசினார் பாரதியார். மிதவாதியான பாரதியார் தீவிரவாதியாக மாறி பயங்கரப் புரட்சி வழியைத் தவிர்த்து அகிம்சா வாதியானவர். அவரது தேசபக்திப் பாடல்கள் மக்களிடையே நாட்டு விடுதலையுணர்ச்சிப் பெருக்கை ஏற்படுத்தின.

வ.உ.சிதம்பரம்

வங்காளப் பிரிவினையின் விளைவாக எழுந்த சுதேசிய இயக்கம் தமிழ்நாட்டுக்களித்த தவப்புதல்வன் வ.உ.சிதம்பர பிள்ளை. கோவில்பட்டி தாலுக்காவிலுள்ள ஒட்டப்பிடாரம் என்ற சிற்றூரில் பிறந்த வ.உ.சி., வீரபாண்டிய கட்டபொம்மனிடம் தலைமை அமைச்சராகப் பணியாற்றிய தானாபதிப் பிள்ளையின் குடும்ப வழித்தோன்றல் ஆவார். தூத்துக்குடியில் வழக்கறிஞராயிருந்த அவர் இராமகிருஷ்ணானந்தர், அபேதானந்தர், பிரமானந்தர் ஆகிய வங்கத் துறவிகளோடு தொடர்புகொண்டு சுதேசி இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். கடல்வழி வந்த வெள்ளை வியாபாரியை கடல்வழியே அனுப்ப வேண்டும் என்ற எண்ணத்தோடு 1882ம் ஆண்டு இந்தியக் கம்பெனிகள் சட்டப்படி 1906 அக்டோபர் 16ம்தேதி 'சுதேசி ஸ்டீம் நேவிகேசன் கம்பெனி' பதிவு செய்யப்பட்டது. 'காலியா', 'லாவோ' என்ற பெயருடைய இரண்டு கப்பல்களும், சரக்கு மூட்டைகளை ஏற்றுவதற்கு வசதியாக இரண்டு இயந்திரப் படகுகளும் வாங்கப்பட்டன. ஆங்கிலேய வியாபாரிகள், அரசாங்கம் ஏற்படுத்திய கடுமையான, கொடுமையான இடர்ப்பாடுகளுக்கிடையே கப்பல்களை ஓட்டினார் வ.உ.சி.

சுதேசி கப்பல் கம்பெனியை நிறுவியதோடு நில்லாமல் சுதேசி இயக்கத்தை பல தொழில் துறைகளுக்கும் விரிவு படுத்தினார். கப்பலோட்டிய தமிழன்

வ.உ.சி. தூத்துக்குடியில் தருமலிங்க நாடார் சாலை, தேசிய பண்டக சாலை ஆகியவற்றைத் தோற்றுவித்தார். சென்னை நகரில் 'சென்னை சிவசாமி கைத்தொழில் சங்கம் லிமிடெட்' என்ற நிறுவனர் தனது கதேசப் பணிக்கு மக்களிடையே ஆதரவைத் திரட்ட வி. சக்கரைச் செட்டியார் தலைமையில் சென்னை நகரில் கதேசி பிரச்சார சபையையும் அமைத்தார்.

1908ம் ஆண்டு இறுதியில் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் வ.உ.சி., ராஜாஜி, கஸ்தூரிரங்க ஐயங்கார், வெ.ராமலிங்கம்பிள்ளை, எஸ்.சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

1907 சூரத் காங்கிரசுக்குத் தீவிரவாதிகளை அதிக அளவில் அழைத்து வருமாறு அரவிந்தர் வ.உ.சிக்குத் கொடுத்த தந்தியை சிரமேற்கொண்டு தமிழ்நாட்டுத் தலைவரான அவர் சென்னை சென்று பாரதியாருடனும், சீனிவாசச்சாரியாருடனும் கலந்து பேசி தமிழ்நாட்டுப் பிரதிநிதிகளை சூரத் மாநாட்டுக்கு அழைத்துச் சென்றார். சூரத் மாநாட்டுப் பந்தலில் ஏற்பட்ட ரகளையின் போது வ.உ.சி, துரைசாமி ஐயர், சுரேந்திரநாத் எத்திராஜ், திருவல்லிக்கேணி கிருஷ்ணமாச்சாரி, பாரதியார், சீனிவாசாரி, சக்கரைசெட்டியார் ஆகிய தமிழ்நாட்டுத் தீவிரவாதிகள் தலைவரைச் சூழ்ந்துகொண்டு அவருக்குப் பாதுகாப்பளித்தனர். தமக்கு எத்தனை அடிபட்டபோதும், தலைவரைக் காக்க வேண்டுமென்று அசையாது நின்ற இந்த சென்னைப் பிரதிநிதிகளின் நேர்த்தன்மையை எண்ணும்போது உடல் புல்லரித்து மிகுந்த மகிழ்ச்சி உண்டாகிறது' என்ற அந்த நேரடி அனுபத்தைப்பற்றி எழுதியுள்ளார் பாரதியார். சூரத் மாநாட்டுப் பந்தலிலேயே தேசியத் தீவிரவாதிகள் தனிக்கட்சியைத் துவக்கி அக்கட்சிக்கு வங்காளத்துக்கு அரவிந்தரும், மகாராஷ்டிரத்துக்குத் திலகரும், சென்னை மாகாணத்துக்கு வ.உ.சியும் செயலாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சூரத்திலிருந்து திரும்பிய வ.உ.சி., பிபின்சந்திர பாலர் விடுதலையான நாளை விமரிசையாகக் கொண்டாடத் திட்டமிட்டார். அதன்படி நெல்லை நகரில் வியத்தகு ஊர்வலத்தை நடத்தினார். வ.உ.சி. மாவட்ட மாஜிஸ்ட்ரேட் கோர்ட் எதிரில், தாமிரபரணி ஆற்றங்கரையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் வ.உ.சியும், சுப்பிரமணிய சிவாவும் எழுச்சிப் பேருரையாற்றினர். வந்தே மாதரம் கோஷம் விண்ணைப் பிளந்தது. அழைப்பின் பேரில் நெல்லைக் கலெக்டர் விஞ்ச் சந்தித்தார். வ.உ.சியுடன் சிவாயும், பத்மநாப ஐயங்காரும் உடனிருந்தனர். பின்னர் இம்மூவரும் கைது செய்யப்பட்டனர். ராஜதுரோகக் குற்றம் சாட்டப்பட்டு வ.உ.சிக்கு 40 ஆண்டுகள் சிறைதண்டனை விதிக்கப்பட்டது! மக்கள் அதிர்ச்சியடைந்தனர். இந்தியப் பத்திரிக்கைகள் கண்டனக் குரல் எழுப்பின. வ.உ.சியின் மேல்முறையீடுகள் நிராகரிக்கப்பட்டன. எனினும் லண்டன் பிரிவி கவுன்சில் வ.உ.சிக்கு அளிக்கப்பட்ட தீவாந்தரத் தண்டனையை கடுங்காவல் தண்டனையாக மாற்றியது!

வ.உ.சி. கோயமுத்தூர் சிறையில் அடைக்கப்பட்டார். அங்கு அவர் அரக்கத்தனமான கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டார். பின்னர் அவர் கேரள மாநிலத்திலுள்ள கண்ணனூர் மத்திய சிறைக்கு மாற்றப்பட்டார். அங்கும் அவர் மலச்சட்டி தூக்கினார். கல்லுடைத்தார், செக்கிழுத்தார். ஆஷ் கொலை செய்யப்பட்டதைத் தனக்குக் கிடைத்த 'நற்செய்தி'யாகக் கருதினார் வ.உ.சி.

Scanned by CamScanner

1912 டிசம்பர் இறுதியில் விடுதலை செய்யப்பட்டு விட்டார் வ.உ.சி. எனினும் அவரது சுதேசிக் கப்பல் கம்பெனியைக் காப்பாற்ற முடியவில்லை; அது கவிழ்ந்துவிட்டது; அதோடு 'தமிழ்நாட்டு அரசியலிலே வ.உ.சி. சகாப்தம் முடிந்தது எனலாம்' எனக் கருதுகிறார் ம.பொ.சி.

சுப்பிரமணிய சிவா

வ.உ.சியும் சிவாவும் தமிழ்நாட்டு சுதேசி இயக்கத்தின் இரட்டையர்களாகத் திகழ்ந்தார்கள். வ.உ.சியைப் போன்றே சிவாவும் இராமகிருஷ்ண-விவேகாந்தா வேதாந்த இயக்கத்தில் ஈடுபட்டு, அதன் வழி சுதேசி இயக்கத்துக்கு ஈர்க்கப்பட்டவர். 'சுதந்திரானந்தா' என்ற புனைப்பெயரை சூட்டிக் கொண்டவர் சிவா. மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த வத்தலக்குண்டுவாசியான இளைஞர் சிவா தூத்துக்குடி வந்து வ.உ.சியுடன் இணைந்து செயல்படலானார். சுதேசி இயக்கம் பிரச்சாரத்தில் இவ்விருவரும் தீவிரமாகப் பங்குகொண்டனர். பிபின் சந்திர பாலர் விடுதலை நாளை மீறி தாமிரபரணி பொதுக்கூட்டத்தில் பேசியதற்காக வ.உ.சியுடன் சிவாவும் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு, பத்தாண்டுகள் சிறை தண்டனை பெற்றார். திருச்சி சிறையில் அடைக்கப்பட்ட சிவா பல கொடுமைகளுக்குள்ளானதோடு தொழுநோயால் பாதிக்கப்பட்டார். எனவே அவர் சேலத்தில் தொழுநோய் கண்ட கிரிமினல் குற்றவாளிகள் அடைக்கப்பட்டிருந்த சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார்.

சிறையிலிருந்து விடுதலையான சிவா தருமபுரி மாவட்டத்திலுள்ள பாப்பாரப்பட்டியில் 'பாரதி ஆசிரமம்' என்ற பெயரால் தேச பக்தர்களின் பாசறை ஒன்றை நிறுவி, இளம் தேசாபிமானிகளுக்கு நாட்டு விடுதலைப் போருக்கான பயிற்சி அளித்தார். பாரதியாரின் தேசியப் பாடல்களைப் பாடிச் செல்வதற்கென பாரத ஆசிரியப் பாடல் குழுவை அமைத்தார். சிவாஜி, தேசிங்கு ராஜன் ஆகிய மாவீரர்களின் வரலாற்றை நாடகங்களாக்கினார். ஏகாதிபத்திய எதிர்ப்புணர்ச்சியைத் தூண்டும் வகையில் நாடக உரையாடல்களை எழுதினார். பாடியும், பேசியும், நடித்தும் மக்களிடையே விடுதலை உணர்வை ஊட்டி வந்தார் சிவா. அரசுக்கெதிராக செயல்பட்டார் என சிவாமீது நான்கு முறை (1908, 1921, 1922, 1924) குற்றம் சாட்டி வழக்கு தொடுத்து தண்டித்தது அரசாங்கம். 'தேச சேவையிலும் சரி, சிறைபட்டு இன்னலுற்ற நியாகத்திலேயும் சரி, சிவாவுக்கு இணையாக இன்னொரு தேசபக்தரைச் சொல்ல முடியாது' என்று புகழாரம் சூட்டியுள்ளார் ம.பொ.சி.

சுயாட்சி இயக்கம்

1907ல் ஏற்பட்ட சூரத் பிளவுக்குப் பின்னர் காங்கிரஸ் தீவிரவாதிகள் அரசாங்கத்தால் கடுமையாக ஒடுக்கப்பட்டனர். மிதவாதிகள் வலுவிழந்து போயினர். தேசிய இயக்கத்தை வழிநடத்தக் கூடிய தலைவர் இல்லாதநேரத்தில் அன்னிபெசண்ட் அம்மையார் அக்கடமையை நிறைவேற்றினார். இந்தியா சுயாட்சிபெற வேண்டுமாயின் மிதவாதிகளும் தீவிரவாதிகளும் மீண்டும் ஒன்றுசேர வேண்டுமென்று விரும்பினார். அவ்விருப்பம் நிறைவேறவில்லை. அதனால் அவர் ஒரு புதிய அரசியல் அமைப்பான சுயாட்சி சங்கத்தை (Home Rule Legue) உருவாக்கினார்.

1917 செப்டம்பர் 3ஆம் தேதி சென்னை கோகலே மண்டபத்தில் சுயாட்சி சங்கம் துவக்கப்பட்டது. அன்னிபெசண்ட், பி.பி.வாடியா, எஸ்.சுப்பிரமணிய ஐயர், ஜி.எஸ்.அருண்டேல், பி.பி.ராமசாமி ஐயர், பி.பட்டாபி சித்தாராமையா, ஏ.ரெங்கநாத முதலியார், மாஜர் ராமய்யர் ஆகியோர் சுயாட்சி இயக்கத்தின் பிரதான தலைவர்களாவர். சுயாட்சி சங்கத்தின் தலைவராக அன்னிபெசண்ட், ஜி.எஸ்.அருண்டேல் அமைப்புச் செயலாளராகவும், ஜி.பி.ராமசாமி ஐயர் பொதுச் செயலாளராகவும், பி.பி.வாடியா பொருளாளராகவும் பொறுப்பேற்றனர். பிரிட்டிஷ் பேரரசுக்குள் இந்தியா சுயாட்சி பெற வேண்டுமென்பதே சுயாட்சி சங்கத்தின் குறிக்கோளாகும். அடையாற்றில் சுயாட்சி சங்கம் அமைக்கப்பட்டு செயல்பட ஆரம்பித்ததன் விளைவாக சென்னை மாநிலம் இந்திய தேசிய நிரோட்டத்தில் முழுதுமாகக் கலந்தது.

தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் சுயாட்சி சங்கத்தின் கிளைகள் துவக்கப்பட்டன. கோயம்புத்தூரில் இருந்த 10 பிரம்ம ஞான சபை விடுதிகளும் சுயாட்சி இயக்க மையங்களாகச் செயல்பட்டன. சென்னை சட்டமன்ற உறுப்பினரான தஞ்சை வி.கே.ராமானுஜாசாரி தமிழ்நாட்டில் சுயாட்சி இயக்கத் தலைவரானார். 1917 மே 9ல் கடலூரில் வி.பி.மாதவராவ் தலைமையில் மாநில சுயாட்சி மாநாடு நடைபெற்றது. பல மாவட்ட மாநாடுகள் நடத்தப்பட்டன. பிரசுரங்கள் மூலம் சுயாட்சிப் பிரச்சாரம் செய்யப்பட்டது. 1917 மே மாதத்துக்குள் 10,000 உறுப்பினர்கள் சேர்ந்தனர். காங்கிரஸ் மிதவாதிகளும் சுயாட்சி சங்கத்தை ஆதரிக்கத் துவங்கினர்.

சுயாட்சி இயக்கம் ராஜபாளையத்தில் அரசியல் சலசலப்பை ஏற்படுத்தியது. ஜ.பி.அரங்கசாமி ராஜா, பி.எஸ்.சின்ன வெங்கடராஜா, பி.எஸ்.குமாரசாமி ராஜா, பி.எஸ்.சுப்பராஜா ஆகியோரது முயற்சியால் சுயாட்சி சங்கம் இவ்வூரில் துவக்கப்பட்டது (1917). சுயாட்சி இயக்கத்தின் குறிக்கோளைப் பற்றிப் பிரச்சாரம் செய்வதற்கென பி.எஸ்.குமாரசாமி ராஜா 'மீனாட்சி சகாய விவேகா வித்யால'யத்தை ஏற்படுத்தினார். அன்னிபெசண்ட் அம்மையாரின் வேண்டுகோளுக்கிணங்க அரசியல் சட்டத்திருத்தத்துக்கு ஆதரவாகக் கையெழுத்து சேகரிப்பதற்கென பிரம்ம ஞான மாநாடு ஒன்று ராஜபாளையத்தில் நடத்தப்பட்டது. அன்னிபெசண்ட் கைது செய்யப்பட்டபோது பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கெதிராக முதல் அரசியல் ஊர்வலம் இங்கு நடத்தப்பட்டது. கல்கத்தாவில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் அம்மையார் ஆற்றிய உரையைத் தமிழாக்கம்செய்து பொதுக் கூட்டத்தில் படிக்கப்பட்டது. அரசியல் கூட்டங்கள் நடத்தப்பட்டன. கே.ஜி. சிவசாமி ஐயர் இந்நகருக்கு வருகைதந்து காங்கிரஸ் இயக்கத்துக்காதரவாகப் பல கூட்டங்களில் பேசினார்.

சுயாட்சி இயக்கத்தால் கவரப்பட்ட தமிழ்நாட்டு மாணவர்கள் 1916 ஜூலை 24ஆம் தேதி புகை வண்டிகளில் ஐரோப்பியர்களுக்கென இடஒதுக்கீடு செய்யப்பட்டதை எதிர்த்து எக்மோர் ரயில் நிலையத்திற்கு முன்ஆர்ப்பாட்டம் செய்தனர். சென்னை கோட்டை ரயில் நிலையத்துக்கு முன் மாணவர்களுக்கும் ஐரோப்பியர்களுக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டது. சுயாட்சி இயக்கத்தின் தீவிரப்போக்கு கண்டு கவலைகொண்ட சென்னை கவர்னர் பெண்ட்லாண்ட் பிரபு அதை ஒடுக்க முனைந்தார். மாணவர்கள் அரசியல் கூட்டங்களில் கலந்து

Scanned by CamScanner

கொள்ளக் கூடாதெனத் தடைவிதிக்கப்பட்டது. இயக்கப் பத்திரிக்கைகளுக்கும் பாதுகாப்புப் பணம் கட்டவேண்டுமென அன்னிபெசண்ட் கட்டாயப்படுத்தப்பட்டார். அரசாங்கத்தின் அப்போக்கை எதிர்த்து தஞ்சாவூர், ஈரோடு, கடலூர், தெனாலி, திருப்பூர் ஆகிய இடங்களில் கண்டனக் கூட்டங்கள் போடப்பட்டன. சென்னை நகரிலிருந்த இந்திய வியாபாரிகள் சங்கம் பத்திரிக்கைக் கட்டுப்பாட்டைக் கடுமையாகக் கண்டித்தது. சென்னை அரசாங்கத்துக்கெதிராக வழக்குத் தொடர்ந்து அன்னிபெசண்டே நேரில் ஆஜராகி வாதாடினார். வழக்கு தோற்றாலும் சுயாட்சி இயக்கம் செல்வாக்கு பெற்றது.

1917 ஜூன் 12ஆம் நாள் பெண்ட்லண்டு பிரபு அன்னிபெசண்ட் அம்மையாரை அழைத்து சென்னை மாநிலத்தின் நிலைமையை விளக்கிக்கூறி, இங்கிலாந்துக்குத் திரும்பிப் போய்விடுமாறு கேட்டுக் கொண்டார்! அதற்கு அன்னிபெசண்ட் மறுத்து விட்டார். எனவே ஜூன் 15 ஆம் தேதி அன்னிபெசண்ட், பி.பி.வாடியா, ஜி.எஸ். அருண்டேல் ஆகியோர் உதகமண்டலத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். 'போராட்டவாதிகளையெல்லாம் விஞ்சி நிற்கும் போராட்டவாதி' என்று காந்தியால் வர்ணிக்கப்பட்ட அன்னிபெசண்ட் காவலில் வைக்கப்பட்டதை கண்டித்து காங்கிரஸ் மிதவாதியும் 'ஒய்வுபெற்ற நீதிபதியுமான எஸ்.சுப்பிரமணிய அய்யர் 'சர்' பட்டத்தை துறந்தார். சுயாட்சி சங்கத் தலைவர்கள் காவலில் வைக்கப்பட்டதை எதிர்த்து மனித உரிமைகளைக் காப்பதன் அவசியம் பற்றிப் பிரகடனம் வெளியிட்ட அமெரிக்கக் குடியரசுத் தலைவர் உட்ரோ வில்சனுக்கு நீண்ட கடிதமொன்றை எழுதினார். அம்மையார் கைதுசெய்யப்பட்டதால் சுயாட்சி சங்கத்தின் கௌரவத் தலைவர் பொறுப்பையும் ஏற்றார்.

வெஸ்லி கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியாற்றிவந்த திரு.வி.கல்யாணசுந்தர முதலியார் வேலையைத் துறந்துவிட்டு அரசியல் பிரவேசம் செய்தார். அன்னிபெசண்டும் சகாக்களும் விடுதலையடைந்தபோது அவர்களுக்கு வழிநெடுகிலும் ரயில் நிலையங்களில் வரவேற்பளிக்க சுயாட்சி இயக்கத்தினர் ஏற்பாடு செய்தனர். சேலத்தில் சுயாட்சி சங்கத்தின் சார்பாக சி.ராஜகோபாலாச்சாரி பெருந்திரளான மக்களுடன் வந்து வரவேற்பளித்தார். அதுவே அவரது அரசியல் பிரவேசமாக அமைந்தது. இந்திய தேசிய காங்கிரஸ் பிளவுபட்டு முடங்கிக்கிடந்த சமயத்தில் அன்னிபெசண்ட் துவக்கிய சுயாட்சி இயக்கம் தேசியப் போராட்டத்தை தீரத்துடன் வழிநடத்தியது. அவரது சாதனைகளைப் பாராட்டி அவரைப் பெருமைப்படுத்தும் பொருட்டு 1917 டிசம்பரில் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1917 ஆகஸ்டு 20 மாண்டேகு பிரகடனம் அன்னிபெசண்ட் அம்மையாரின் சுயாட்சி சங்கத்துக்குக் கிடைத்த பரிசு எனலாம். எனினும் அன்னிபெண்ட் பிராமணர்களையே பெரிதும் சார்ந்திருந்தாலும், மக்களின் செல்வாக்கைப் பெற்றிருந்த நீதிக்கட்சியை விரோதித்துக் கொண்டதாலும், அரசாங்கத்தைப் பகைத்துக் கொண்டதாலும் சுயாட்சி இயக்கம் தமிழ்நாட்டில் தோல்வியுற்றது.

ரௌலட் சத்தியாக்கிரகம்

காந்தி துவக்கிய ரௌலட் சத்தியாக்கிரகத்தில் தமிழ்நாட்டுக்குத் தனிச் சிறப்புண்டு. அச்சத்தியாக்கிரகம் துவக்கப்பட்டதே தமிழ்நாட்டில்தான். 1919

பிப்ரவரி மாதம் இந்திய சட்டமன்றத்தில் ரௌலட் மசோதாக்கள் விவாதிக்கப்பட்டபோது வி.எஸ்.சீனிவாசாச்சாரி அம்மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டால் இந்தியா கொந்தளிப்புக்குள்ளாகும் என்று அரசாங்கத்தை எச்சரித்தார். ரௌலட் மசோதாக்கள் சட்டமாக்கப்படாமல் அதை எதிர்த்து சத்தியாக்கிரகம் செய்யப் போவதாக அறிவித்தார் காந்தி. சி.ராஜகோபாலாச்சாரியின் ஆலோசனையின் பேரில் கஸ்தூரி ரங்க ஐய்யங்கார் காந்தியைத் தமிழ்நாட்டுக்கு வருகை தருமாறு கேட்டுக் கொண்டார். அந்த அழைப்பை ஏற்று தமிழ்நாட்டுக்கு வந்த காந்தி (1919 மார்ச் 17) கஸ்தூரி ரங்க ஐய்யங்கார் வீட்டில் தங்கினார். அங்குதான் ரௌலட் சட்ட எதிர்ப்புத் திட்டம் உருவாக்கப்பட்டது (மார்ச் 21, 22). அதன் விளைவாக சத்தியாக்கிரக சபை அமைக்கப்பட்டது. காந்தி அச்சபையின் தலைவராகவும், வி.விஜயராகவாச்சாரி, டாக்டர்.எம்.வி நஞ்சுண்டராவ், டி.பிரகாசம் ஆகியோர் துணைத்தலைவர்களாகவும், சி.ராஜகோபாலாச்சாரி, எ.கஸ்தூரிரங்க ஐய்யங்கார், ஜி.அரிகரவோத்தம் ராவ், சேலம் டி.ஆதிநாராயண செட்டியார் ஆகியோர் செயலாளர்களாகவும் பொறுப்பேற்றனர். சென்னை மாநிலத்தில் 120 பேர் சத்தியாகிரக சபதத்தில் கையொப்பமிட்டனர். சி.ராஜகோபாலாச்சாரி, சத்தியமூர்த்தி, வ.உ.சிதம்பரம் பிள்ளை, திரு.வி.கல்யாண சுந்தர முதலியார் ஆகியோர் அச்சபதத்தில் கையொப்பமிட்டவர்களுள் முக்கியமானவர்களாவர். அவர்களோடு எஸ்.சீனிவாச ஐய்யங்கார், டி.வி.வெங்கட்ராமய்யர், டி.ராகவாச்சாரி, பி.டி.வாடியா, ஈ.வே.ராசாமி நாயக்கர், டாக்டர்.பி.வரதராஜுலு நாயுடு, சுப்பிரமணிய சிவா, பாரதியார் போன்றோரும் காந்தியின் போராட்டத்துக்கு ஆதரவளித்தனர்.

காந்தி தமிழ்நாட்டில் தங்கியிருந்தபோதுதான் ரௌலட் சட்டம் நிறைவேற்றப்பட்டது. நீவிர ஆலோசனைக்குப்பிறகு சென்னையிலிருந்து காந்தி தனது செயல்திட்டத்தை அறிவித்தார். 1919 மார்ச் 30 தேதியன்று இந்தியா முழுவதும் அர்த்தால் நடைபெற வேண்டும் என்று முதலில் அறிவிக்கப்பட்டது. பின்னர் கஸ்தூரிரங்க ஐய்யங்கார், ராஜகோபாலாச்சாரி, விஜயராகவாச்சாரி ஆகியோரைக் கலந்தாலோசித்து அர்த்தால் தேதியை தள்ளிப்போட்டார் காந்தி! பின்னர் தஞ்சாவூர், திருச்சி, மதுரை, தூத்துக்குடி ஆகிய நகரங்களுக்குச் சுற்றுப் பயணம் சென்று ரௌலட் சட்ட எதிர்ப்புப் பிரச்சாரம் செய்தபின்னர் சென்னையிலிருந்து பம்பாய் சென்றார் காந்தி (1919 மார்ச் 28).

1919 ஏப்ரல் 6ஆம் தேதி தமிழ்நாட்டில் ரௌலட் சட்ட எதிர்ப்பு நாள் துக்கதினமாகக் கொண்டாடப்பட்டது. பல பகுதிகளில் கண்டன ஊர்வலங்கள் நடைபெற்றன. சென்னை நகரின் பல பேட்டைகளிலிருந்து புறப்பட்ட ஊர்வலங்களெல்லாம் திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டன. ராஜகோபாலாச்சாரி, கஸ்தூரி ரங்க ஐய்யங்கார், சத்தியமூர்த்தி, ஜார்ஜ் ஜோசப் ஆகியோர் அக்கூட்டத்தில் உரையாற்றினர். கடற்கரையில் தொழிலாளர்களுக்கென தனியாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் திரு.வி.கல்யாண சுந்தர முதலியார், பி.பி.வாடியா, சிதம்பரம், எஸ்.தண்டபாணிப்பிள்ளை ஆகியோர் பேசினர். சத்தியாக்கிரகம் அமைதியான முறையில் நடைபெறுவதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

Scanned by CamScanner

குஜராத்தியர் மிகுந்த வெள்ளை வௌகார் பேட்டையில் ராம்தி கல்யாண்ஜியின் தூண்டுதலின்பேரில் முழு அர்த்தால் செய்யப்பட்டது. முஸ்லீம் வர்த்தகர்களும் இச்சத்தியாக்கிரகத்தில் ஒத்துழைத்தனர். நகரில் ட்ராம் கார்கள் ஓடவில்லை. நூற்பாலைத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். பத்திரிக்கை பதிவு சட்டத்தைமீறி சென்னை நகரில் 'சத்தியாக்கிரகி' என்ற பத்திரிக்கை வெளியிடப்பட்டது. அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட நூல்களான காந்தியின் 'சர்வோதயம்', 'இந்திய சுயராஜ்யம்' ஆகியவையும் வீர சவார்க்கரின் 'எரிமலை' என்ற நூலையும் தமிழ்நாட்டுச் சத்தியாக்கிரகிகள் விற்பனை செய்தனர். ரௌலட் சத்தியாக்கிரகம் தமிழ்நாட்டின் புறநகர்ப் பகுதிகளுக்கும் பரவின. எனினும் மாநகரங்களில் மட்டுமே ரௌலட் சத்தியாக்கிரகம் ஆர்வத்தோடு நடத்தப்பட்டது. அதுவும் ஏப்ரல் 6க்குப்பின் மறைந்து விட்டது என்கிறார் டேவிட் அர்னால்டு. பம்பாயிலும், அகமதாபாத்திலும் இருந்த அளவுக்கு இந்த சட்ட எதிர்ப்புப் போராட்டம் சென்னை மாநிலத்தில் தீவிரமடையவில்லையே என்பதில் காந்தி ஏமாற்றமுற்றார். தமிழ்நாட்டைவிட ஆந்திரப் பகுதியில் இப்போராட்டம் வேகமாகவும், வெற்றிகரமாகவும் நடைபெற்றது என்பது எஸ்.கோபாலகிருஷ்ணனின் கணிப்பு. எனினும் காந்தியின் முதல் அகில இந்திய சத்தியாகிரகப் போராட்டம் தமிழ்நாட்டில் துவக்கப்பட்டு அமைதியாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற்றது என்பது பெருமைபடத்தக்கதாகும்.

கிலாபத் இயக்கம்

காந்தியின் முழு ஒத்துழைப்போடு இந்திய முஸ்லீம்கள் துவக்கிய கிலாபத் இயக்கத்தில் தமிழ்நாடு ஆர்வத்தோடு கலந்து கொண்டது. ரௌலட் சத்தியாகிரகத்தில் முழுமூச்சுடன் ஈடுபட்டுத் தனது செல்வாக்கைப் பலப்படுத்திக் கொண்டிருந்த சி.ராஜகோபாலாச்சாரி கிலாபத் இயக்கத்தை ஆதரித்து அதன்மூலம் தமிழ்நாட்டு முஸ்லீம்களின் ஆதரவையும் பெற்றார். 1919 ஆகஸ்டில் கூடிய சென்னை மாநில காங்கிரஸ் மாநாட்டில் அலி சகோதரர்களை விடுதலை செய்யக்கோரும் தீர்மானததைக் கொண்டு வந்தார் அவர். அவ்வாண்டு அக்டோபர் 17ஆம் தேதி அனுசரிக்கப்பட்ட கிலாபத் தினத்துக்கு தமிழ்நாட்டு இந்துக்களின் ஆதரவையும் திரட்டித் தந்தார். கிலாபத் கூட்டங்களிலும் கலந்து கொண்ட ராஜகோபாலாச்சாரி யாகூப் ஹாசனை ஆதரித்துப் பேசினார். காங்கிரசோடு ஒத்துழைக்குமாறு யாகூப் ஹாசனையும் அவரது ஆதரவாளர்களையும் ஊக்குவித்தார் அவர். 1920 மே மாதத்தில் ராஜகோபாலாச்சாரியின் ஆதரவோடு யாகூப் ஹாசன் சென்னை மாநில கிலாபத் இயக்கத்தைத் தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தார். தமிழ்நாட்டில் வடஆற்காடு தவிர பிற மாவட்டங்களிலெல்லாம் கிலாபத் கமிட்டிகள் இந்துக்களின் ஆதரவோடு செயல்பட்டன. உதாரணமாக, திருச்சி கிலாபத் கமிட்டிக்கு ராஜகோபாலாச்சாரியின் நண்பர்களான டி.எஸ்.எஸ்.சுவாமிநாத சாஸ்திரியும் பக்கபலமாக இருந்தனர்.

1920 ஏப்ரல் 20ஆம் தேதி சென்னை நகரில் மௌலானா சவுக்கத் அலியின் தலைமையில் கிலாபத் மாநாடு நடைபெற்றது. அதில் சென்னை மாநிலத்திலிருந்து மட்டும் ஆயிரத்துக்கு மேற்பட்ட பிரதிநிதிகளும் பார்வையாளர்களும் கலந்து

கொண்டனர். ராஜகோபாலாச்சாரி, கஸ்தூரி ரங்க ஐயங்கார், பிரகாசம் ஆகியோர் அம்மாநாட்டில் கலந்துகொண்டு பேசினர். மற்றொரு கிலாபத் மாநாடு அலி சகோதரர்களின் தலைமையில் ஈரோட்டில் நடைபெற்றது. 1920 ஆகஸ்டு மாதம் தமிழ்நாட்டுக்கு வருகைதந்த காந்தி கிலாபத் இயக்கத்தை ஆதரித்துப் பிரச்சாரம் செய்தார். 'மகாத்மா காந்திக்கு ஜே' என்பதற்கு பதில் 'முகமது அலி சவுக்கத் அலிக்கு ஜே' என்று கோஷமிடுமாறு மக்களைக் கேட்டுக் கொண்டார் அவர். இவற்றால் தமிழ்நாட்டில் கிலாபத் இயக்கம் புதுபலம் பெற்றது. வடஆற்காடு மாவட்டத்திலுள்ள வாணியம்பாடி கிலாபத் இயக்கத்தின் உயிர்நாடியாகத் திகழ்ந்தது. அங்கிருந்த முஸ்லீம்கள் கிலாபத் பொதுக்குழு ஒன்றை ஏற்படுத்தி, அதன்மூலம் கிலாபத் பற்றிய பல பிரசுரங்களை வெளியிட்டனர். தமிழ்நாட்டில் நீதிக்கட்சியினரும் சுயாட்சி அங்கத்தினரும், லிபரல் கட்சியினரும் கிலாபத் இயக்கத்தை ஆதரிக்கவில்லை.

நீதிக்கட்சியும் இரட்டை ஆட்சியும்

தமிழ்நாட்டில் 1892 லேயே ஆதிதிராவிடர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. 20ம் நூற்றாண்டின் துவக்கத்தில் டாக்டர் டி.எம்.நாயர், தியாகராஜ செட்டியார், கேசவப்பிள்ளை, நடேச முதலியார் போன்றோர் பிராமணர்களின் ஆதிக்கத்தை எதிர்த்து, பிராமணர் அல்லாதோரின் உரிமைகளைக் கோரிப்பெற முயற்சித்தனர். சென்னையில் ஒரு திராவிடர் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. 1916ல் தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம் உருவாக்கப்பட்டது. அதுவே பின்னர் நீதிக்கட்சி என்ற பெயருடன் செயல்பட்டது.

நீதிக்கட்சி இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்காமல் பிராமணர் அல்லாதார் நலன் காக்கும் இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. அதற்குக் காரணம் இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்தால் ஆட்சி ஆங்கிலேயரிடமிருந்த பிராமணர்களுக்கு மாறுமேயன்றி முழுமக்களாட்சியாகாது என்று அக்கட்சி கருதியதேயாகும். மான்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தம் கொண்டு வந்த இரட்டை ஆட்சி முறையை காங்கிரஸ் நிராகரித்தது. ஆனால் நீதிக்கட்சி அதை வரவேற்று பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஆதரவு அளித்தது!

1920ல் நடைபெற்ற தேர்தலில் பிராமணர் பிடியிலிருந்த ஹோம்ரூல் லீக்கைத் தோற்கடித்து வலிமையான பெரும்பான்மை பலத்தைப் பெற்றது நீதிக்கட்சி. காங்கிரஸ் தேர்தலைப் புறக்கணித்தது. 1920லிருந்து 1937 வரை நீதிக்கட்சி ஆட்சிப்பொறுப்பில் இருந்தது. கப்பராயலு ரெட்டியார் தலைமையில் அமைச்சரவை பதவி ஏற்றது (1920). அதன்பின் நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சி சுயராஜ்யக் கட்சியை வென்று பனகல் அரசரின் தலைமையில் ஆட்சி அமைத்தது (1923). உட்கட்சிப் பூசலால் 1926ல் நடந்த தேர்தலில் நீதிக்கட்சி தோற்றது. சுயேச்சையாகப் போட்டியிட்ட 'கருப்புக்குதிரை' (Dark Horse) கப்பராயன் சுயராஜ்யக் கட்சி ஆதரவுடன் ஆட்சிப் பொறுப்பேற்றார். 1927 முதல் நீதிக்கட்சி மாநில சுயாட்சிக் கோரிக்கையை எழுப்பியது. 1930ல் நடைபெற்ற தேர்தலில் பிற கட்சிகள் பங்கேற்காததால், நீதிக்கட்சி எளிதில் வெற்றி பெற்று, முனுசாமி நாயுடு தலைமையில் ஆட்சியில் அமர்ந்தது. இந்தியா சட்டமறுப்பு இயக்கத்தை சந்தித்துக் கொண்டிருந்தபோது போப்பிலி அரசர் முதலமைச்சரானார் (1932)!

Scanned by CamScanner

1935 இந்திய அரசியல் சட்டம் கொண்டுவந்த மாநில சுயாட்சித் திட்டத்தின்படி நடைபெற்ற தேர்தலில் (1937) காங்கிரஸ் நீதிக்கட்சியைத் தோற்கடித்து சி. ராஜகோபாலாச்சாரியார் தலைமையில் ஆட்சியைக் கைப்பற்றியது.

நீதிக்கட்சி தனது 17 ஆண்டு கால ஆட்சியின்போது பல நிறப்பான சீர்திருத்தங்களைச் செய்தது:

1.இரண்டு உள்ளாட்சி மன்ற சட்டங்கள் - மதராஸ் தல போர்டுகள் சட்டம் (1920), மதராஸ் கிராமப் பஞ்சாயத்துகள் சட்டம் (1920) - மூலம் மூன்றடுக்கு பஞ்சாயத்து முறைக்கு வலுவான அடித்தளம் அமைக்கப்பட்டது; 2.1921ல் பிறப்பிக்கப்பட்ட இனவாரி ஒதுக்கீட்டு அரசாங்க ஆணை (Communal G O) பிராமணர் அல்லாதாரின் கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்கு உத்திரவாதம் அளித்தது; 3. பணியாளர் தேர்வுக்குழு (Staff Selection Board) அமைக்கப்பட்டு பணித்தேர்வு முறை சீரமைக்கப்பட்டது; 4. கல்விச் சேர்க்கைக்குழு மூலம் கல்விச் சமஉரிமை பாதுகாக்கப்பட்டது. வசதியற்றோர் கல்விபெறக் கட்டண சலுகையும் நிதி உதவியும் அளிக்கப்பட்டது. துவக்கப் பள்ளிச் சட்டம்மூலம் ஆரம்பக் கல்வி விரிவுபடுத்தப்பட்டது. மதிய உணவுத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. பல்கலைக் கழகச் சட்டங்கள் இயற்றி ஆந்திரா பல்கலைக் கழகமும் (1925), அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் (1928) தோற்றுவிக்கப்பட்டன; 5. தொழில் சட்டத்தின் (1922) மூலம் தொழில் விரிவாக்கம், தொழில் வளர்ச்சி, தொழில் நுட்ப ஆராய்ச்சி நடையின்றி நடைபெற்றன; 6. மருத்துவ வசதி விரிவாக்கப்பட்டு நாட்டு மருத்துவம் ஊக்கவிக்கப்பட்டது; 7. புறம்போக்கு நிலங்கள் பட்டாசெய்து கொடுக்கப்பட்டு, ஏழை எளியோருக்கு வீட்டுமனை வசதிசெய்து தரப்பட்டது; 8. அதீத அரசாங்க வரிகள் குறைக்கப்பட்டன. 9. ஆலய அறக்கட்டளை சட்டம் இயற்றி இந்து ஆலயங்களிலும், மடாலயங்களிலும் குவிந்துகிடந்த செல்வம் கண்காணிக்கப்பட்டது; 10. பெண்கள் வாக்குரிமைச் சட்டமும், தேவதாசி முறை ஒழிப்பும், பெண் உரிமையையும், ஆண்பால்-பெண்பால் சமத்துவத்தையும் உறுதிப்படுத்தியது. நீதிக்கட்சி விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொள்ளாவிட்டாலும், அது துணிவுடன் கொண்டுவந்த சமூக, பொருளாதார, கல்வி, சுகாதார, ஆலய அறக்கட்டளை, பெண்ணுரிமை சீர்திருத்தங்கள் அடிப்படை முக்கியத்துவமுடையவை; பாராட்டுக்குரியவை.

ஒத்துழையாமை இயக்கம்

தமிழ்நாட்டில் ஒத்துழையாமை இயக்கம் சி.ராஜகோபாலச்சாரியின் தலைமையில் ஆர்வத்துடன் நடத்தப்பட்டது. சென்னை பச்சையப்பன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த அவரது மகன் ரா.இராமசாமியையும் மாநிலக்கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த மற்றொரு மகன் ரா.கிருஷ்ணசாமியையும் அக்கல்லூரியிலிருந்து வெளியேறச் செய்து, அவர்களை கதர்த் தொண்டில் ஈடுபடுவதற்காக சேலத்துக்கு அனுப்பி வைத்தார் அவர். 'பாரிஸ்டர்' பட்டம் பெற்றிருந்த மதுரை வழக்கறிஞர் ஜார்ஜ் ஜோசப் தனது தொழிலைத் துறந்து ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்தார். எஸ்.சீனிவாச ஐயங்கார் தனது அட்வகேட் ஜெனரல் பதவியையும், 'சி.ஐ.ஈ.' என்ற பட்டத்தையும் துறந்தார். வ.உ.சிதம்பரம் பிள்ளை ஒத்துழையாமை இயக்கத்தை

ஆதரிக்காவிட்டாலும்கூட தனது வக்கில் தொழிலைத் துறந்து இலக்கிய பணியில் ஈடுபட்டார். சென்னை என்.எஸ்.வரதாச்சாரி, எஸ்.ராமநாதன் ஆகிய இளம் வழக்கறிஞர்கள் நீதிமன்றம் செல்வதை நிறுத்திவிட்டனர். முஸ்லீம்களில் சிலர் தாங்கள் வகித்த மாஜிஸ்ரேட் உத்தியோகங்களை உதறித் தள்ளினர்.

1920 இறுதியில் நடக்கவிருந்த மாநில சட்டமன்றப் புறக்கணிப்புப் பிரச்சாரத்தில் தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர்கள் தீவிரமாக ஈடுபட்டனர். தேர்தலில் போட்டியிட வேண்டாமென்று வேட்பாளர்களையும், மீறிப் போட்டியிடுவோருக்கு ஆதரவளிக்க வேண்டாமென்று வாக்காளர்களையும் அவர்கள் வேண்டிக் கொண்டனர். ராஜகோபாலாச்சாரியும் ராஜனும் திருச்சி, கோயமுத்தூர், சேலம் மாவட்டங்களில் சுறாவளிச் சுற்றுப்பயணம் செய்தனர். சென்னையிலும் திருச்சியிலும் காங்கிரஸ் கிலாபத் தொண்டர்கள் தேர்தல் புறக்கணிப்பு முயற்சியில் இறங்கினர். அதன் விளைவாக 24 தேசியவாதிகள் தேர்தலிலிருந்து விலகிக் கொண்டனர். எனினும் 1920 நவம்பர் 30ஆம் தேதி நடைபெற்ற தேர்தலில் சென்னை மாநில சட்ட மன்றத்துக்கான 98 இடங்களில் 63 ஐ கைப்பற்றியது நீதிக்கட்சி. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சட்டமன்றப் புறக்கணிப்பு வெற்றி பெறவில்லை. நீதிக்கட்சி தேசிய நீரோட்டத்திலிருந்து விலகிச் சென்று அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்று ஒத்துழையாமை இயக்கத்தை ஒதுக்கிவிட்டு மக்களின் செல்வாக்கைப் பயன்படுத்தி ஆட்சியை எளிதில் கைப்பற்றியது.

1921 ஜனவரி 10ஆம் தேதி சென்னைக்கு வருகைதந்த காளாட் கோமகனைப் புறக்கணித்தனர் தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர்கள். சென்னை நகரின் மூலை முடுக்குகளிலெல்லாம் கோமகன் புறக்கணிப்புப் பிரச்சாரம் மும்முரமாக நடைபெற்றது. நகரில் பூரண அர்த்தால் கடைப்பிடிக்கப்பட்டது. அன்று மாலை சென்னை கடற்கரை கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு காளாட் கோமகனது வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். கடற்கரையின் மற்றொரு பகுதியில் நீதிக்கட்சியின் செல்வாக்கின் கீழிருந்த சென்னை மாநகராட்சியின் சார்பாகக் காளாட் கோமகனுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது! இரண்டு நாட்களுக்குப் பின்னர் சென்னை மாநில புதிய சட்டமன்றக் கூட்டத்தைத் துவக்கி வைத்து உரையாற்றினார் கோமகன். எனினும் ராஜகோபாலாச்சாரியின் தலைமையில் செயல்பட்ட தமிழ்நாடு காங்கிரஸ் காளாட் கோமகனது சென்னை வருகையை வெற்றிகரமாகப் புறக்கணித்தது என்றே கூற வேண்டும்.

ஒத்துழையாமை இயக்கத்தின் ஒரு பகுதியாகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். சென்னை தொழிலாளர் யூனியன் சார்பாக பக்கிங்காம் தொழிற்சாலை தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். மீண்டும் வேலையில் சேரச் சென்ற 800க்கும் மேற்பட்ட ஆதிதிராவிடத் தொழிலாளர்கள் தாக்கப்பட்டனர்; அவர்களது குப்பங்கள் தீக்கிரையாக்கப்பட்டன (1921 ஜூன் 27). தமிழ்நாட்டின் பல பகுதிகளில் கள்ளுக்கடைகள் பகிஷ்கரிக்கப்பட்டன. கோயமுத்தூர், சேலம், தென்ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் கள்ளுக்கடை மறியல் தீவிரமாக நடைபெற்றது. மறியலில் பலாத்காரமும் பயன்படுத்தப்பட்டது. தடை உத்தரவை மீறியதால் நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர்.

Scanned by CamScanner

காந்தியடிகள் துவக்கிய ஒத்துழையாமை இயக்கத்தில் ராஜபாளையம் பெரும்பங்கேற்றது. கயாட்சி இயக்கத்தில் பங்கேற்ற நகரத் தலைவர்கள் ஒத்துழையாமை இயக்கத்திலும் தீவிரமாக ஈடுபட்டனர். திருச்சியில் நடைபெற்ற 35வது சென்னை மாகாண காங்கிரஸ் மாநாட்டில் பலபிரதிநிதிகள் இவ்வூரிலிருந்து சென்று கலந்து கொண்டனர். சண்டமாருதப் பிரசங்கி எஸ்.சத்தியமூர்த்தியின் வருகை இந்நகர் மக்களிடையே உற்சாகம் பிரவாகத்தை ஏற்படுத்தியது. ஜ.பி.அரங்காமி ராஜா, பி.எஸ்.சின்ன வெங்கட்ராஜா, பெருமாள் ராஜா, டி.எ.கே.அழகுராஜா ஆகியோர் நாக்பூர் காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்டனர் (1920). அம்மாநாட்டில் கலந்து கொண்டு திரும்பியோர் இந்நகரில் காங்கிரஸ் இயக்கத்தைப் பலப்படுத்தினர். ஜ.பி.அரங்காமி ராஜா வரலாற்று சிறப்புமிக்க கதர் இயக்கத்துக்கு ராஜபாளையத்தில் உறுதியான அடித்தளம் அமைத்துக் கொடுத்தார். அதற்காக அவர் சிறை தண்டனை பெற்றார். அவரும் அவரது சகாக்களும் மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக 'ராஜபாளையம் கை சர்க்கா நூல் நூற்கும் தொழிற்சாலை' துவக்கப்பட்டது. கதரின் பெருமை பற்றிய பிரச்சாரம் செய்யப்பட்டது. இப்பிரச்சாரம் பிரகரங்கள் விடுதலை இயக்க நீரோட்டத்தில் கலந்தது. பி.எஸ்.குமாரசாமி ராஜா துவக்கிய 'விவசாயிகள் சங்கம்' கிராமங்களின் தேசிய உணர்வைப் பரப்பியது. திருவில்லிபுத்தூர் தாலுக்காவில் நடைபெற்ற அரசியல் மாநாடு கிராமங்களில் காங்கிரஸ் கமிட்டிகள் அமையக் காரணமாயிருந்தது. 1922 மார்ச் 18ம் தேதி காந்தியடிகள் கைது செய்யப்பட்டதையடுத்து ராஜபாளைத்தில் அரசியல் கொந்தளிப்பு ஏற்பட்டது. எஸ்.ஸ்ரீனிவாச ஐய்யங்கார் ராஜபாளையத்தை சுய ராஜபாளையம் ஒன்று என்று வர்ணித்ததில் வியப்பில்லை.

ஒத்துழையாமை இயக்கத்தின்போது மலபாரில் நிகழ்ந்த மாப்பிள்ளைகள் கிளர்ச்சி தமிழ்நாட்டில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தியது. அதனால் தமிழ்நாட்டில் கிலாபத், ஒத்துழையாமை இயக்கங்கள் வலுவிழந்து போயின. முஸ்லீம்களின் வன்முறைக்கு அஞ்சிய தமிழ்நாட்டு இந்துக்கள் ஒத்துழையாமை இயக்கத்தின்றும் ஒதுங்கிக் கொள்ளத் துவங்கினர். திருச்சியில் பலப்பட்டிருந்த இந்து முஸ்லீம் ஒற்றுமை பலமற்றுப் போயிற்று. மதுரை மாநகராட்சி உறுப்பினர்கள் காந்திக்குக் கொடுக்கவிருந்த வரவேற்பைக் கைவிட்டனர்! வேலூரில் முஸ்லீம்களிடையே பதட்டநிலை ஏற்பட்டது. மாப்பிள்ளைகள் கிளர்ச்சியில் களங்கப்பட்டு போன ஒத்துழையாமை இயக்கத்தை மேலும் தொடர வேண்டுமாவென ராஜகோபாலாச்சாரி சந்தேகித்தார். 1921 செப்டம்பர் மாதம் தமிழ்நாட்டுக்கு வருகைதந்த காந்தி இந்து முஸ்லீம் ஒற்றுமை கேள்விக்குறியாக இருந்ததையும் காணத் தவறவில்லை. இயக்கம் எவ்வாறு உருவெடுக்குமோ என்ற அச்சம் மக்களிடையே பரவலாகக் காணப்பட்டதாகக் குறிப்பிட்டார் காந்தி.

மலபார் மாப்பிள்ளைகள் கிளர்ச்சியைத் தொடர்ந்து ஒத்துழையாமை இயக்கத்தை ஒடுக்க தீர்மானித்தது சென்னை அரசாங்கம். யாகூப் ஹாசன் கைது செய்யப்பட்டார். அப்துல் மஜித்ஷார் 'தமிழ்நாடு' பத்திரிக்கை ஆசிரியர் வரதாஜுலு நாயுடு, 'தேசபக்தன்' ஆசிரியர் குழுவினர் ஆகியோரும் கைது செய்யப்பட்டனர். 1921 நவம்பர் 4ஆம் தேதி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, தனிநபர்கள் சட்டமறுப்பு இயக்கத்தில் ஈடுபடலாம் என்று எடுத்த முடிவை

திருச்சியில் கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஆதரித்தது (நவ.20). அதன்படி நடை உத்தரவைமீறிய ராஜகோபாலாச்சாரியும், எம்.வி.சுப்பிரமணிய சாஸ்திரியும் கைது செய்யப்பட்டனர். கோயமுத்தூரில் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்ட வே.ராமசாமி நாயக்கரும் கைதானார். வேல்ஸ் இளவரசர் சென்னைக்கு வருகை தந்தபோது (1922 ஜனவரி 14) நகரில் பூரண அர்த்தால நடைபெற்றது. ஆனால் வன்முறையும் துப்பாக்கிச் சூடும் தமிழ்நாட்டில் நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்துக்கு அவப்பெயரைத் தேடித்தந்தன. வரிகொடா இயக்கத்துக்குத் தமிழ்நாட்டில் ஆதரவில்லை. தமிழ்நாட்டில் ஒத்துழையாமை இயக்கத்தின் முதுகெலும்பாக இருந்த ராஜகோபாலாச்சாரி சிறையில் அடைக்கப்பட்டதாலும், காங்கிரசுக்குள்ளேயே பலருக்கு ஒத்துழையாமை இயக்கத்தில் நம்பிக்கையின்மையாலும், நீதிக்கட்சி பொது மக்களிடையே செல்வாக்கு பெற்று ஆட்சியைக் கைப்பற்றி அரசாங்கத்தை ஆதரித்ததாலும் தமிழ்நட்டில் ஒத்துழையாமை இயக்கம் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றி பெறவில்லை. சௌரி சௌரா வன்முறை நிகழ்ச்சியை (1922 பிப்ரவரி 4) அடுத்து காந்தியே ஒத்துழையாமை இயக்கத்தை விலக்கிக் கொண்டார்.

சுயராஜ்யக் கட்சி

ஒத்துழையாமை இயக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டபோதிலும் தேசத்தலைவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. இந்திய விடுதலைப் போராட்டம் தேக்கநிலையில் இருந்த போது சுயராஜ்யக் கட்சியினர் சட்டமன்றத்துக்குள் ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்குவதென முடிவு செய்தனர். தமிழ்நாட்டில் கஸ்தூரி ரங்க ஐய்யங்கார், சீனிவாச ஐய்யங்கார், வரதராஜுலு நாயுடு, விஜயராகவாச்சாரி, ஏ.ரங்காசாமி ஐய்யங்கார் ஆகியோர் சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்து சட்டமன்ற நுழைவை ஆதரித்தனர். 1892 நவம்பர் 13ஆம் தேதி நடைபெற்ற மத்திய சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மத்திய சட்ட மன்றத்தேர்தலில் தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சுயராஜ்யக் கட்சியினருள் ஏ.ரங்காசாமி அய்யங்கார், ஆர்.கே.ஷண்முகம்செட்டியார், என்.சீனிவாச அய்யங்கார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். சென்னை மாநில சட்டமன்றத் தேர்தலில் சுயராஜ்யக் கட்சி 41 இடங்களைப் பெற்றாலும்கூட அமைச்சரவையை அமைக்க மறுத்துவிட்டது. அதனால் டாக்டர் பி.சுப்பராயன் தலைமையில் சுயேட்சை அமைச்சரவை அமைக்கப்பட்டது. சுயராஜ்யக் கட்சியும், நீதிக் கட்சியும் எதிர்க்கட்சிகளாக செயல்பட வேண்டியதாயிற்று! இரட்டை ஆட்சியைத் தோற்கடிக்கும் நோக்கத்தோடு சுயராஜயக் கட்சி நீதிக்கட்சியுடன் சேர்ந்து சுயேட்சை அமைச்சரவையைக் கவிழ்க்கும் முயற்சியில் ஈடுபட்டது. தமிழ்நாட்டில் சுயராஜ்யக் கட்சியினரால் இரட்டை ஆட்சியின் தீமைகளை எடுத்துக்காட்ட முடிந்ததேயொழிய அதை செயலிழக்கச் செய்ய முடியவில்லை. இரட்டை ஆட்சியின் முரண்பாடுகளுக்குள் இந்திய சுயராஜ்யக் கட்சியினர் புயலில் சிக்கிய படகென திசைதப்பித் தமிழ்நாட்டு அரசியலிலிருந்து மறைந்தனர்.

நீல் சிலைச் சத்தியாக்கிரகம்

சென்னை இராணுவப் பிரிவின் தலைவராக இருந்த கர்னல் நீல் 1857 பெருங்கிளர்ச்சியை ஒடுக்குவதில் தனித்தீவிரம் காட்டியவர். அவருடைய

Scanned by CamScanner

கோவையைப் பாராட்டி பிரிட்டிஷ் அரசாங்கம் சென்னையின் பிரதான பகுதியில் நீலின் சிலையை வைத்து விடுதலைப் போராட்டத்தின்போது அந்த 'அவமானச் சின்னத்தை' அகற்றுவதற்காக நெல்லை ந.சோமயாஜுலுவின் தலைமையில் சத்தியாக்கிரகக்குழு துவக்கப்பட்டது. மதுரை வீரவாகநாத ஐயங்கார், அவரது மனைவி பத்மாசனிஅம்மாள், ரெ.சிதம்பரபாரதி, டாக்டர் பி.வரதராஜுலு ஆகியோர் அச்சத்தியாக்கிரகத்தில் பெரும் பங்கேற்றனர். 1927 ஆகஸ்டு 11 ஆம் தேதி துவங்கிய அப்போராட்டத்துக்கு சுப்பராயலு நாயுடுவும், முகமது சாலியா ராவுத்தரும் தலைமை தாங்க நீலின் சிலையை உடைத்து சேதப்படுத்தினர். அவர்கள் கைது செய்யப்பட்டு ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை பெற்றனர். ஆகஸ்டு மாதம் துவக்கப்பட்ட நீல் சிலை சத்தியாக்கிரகம் டிசம்பர் வரை தொடர்ந்து நடைபெற்றது. தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலிருந்தும் தொண்டர்கள் சென்னைக்கு வந்து அப்போராட்டத்தில் கலந்து கொண்டனர். சோமயாஜுலு, குடியாத்தம் சாமிநாத முதலியார், பண்ருட்டி எஸ்.ஏ. தேவநாயக ஐயா ஆகியோர் முறையே தளபதிகளாயிருந்து நீல் சிலை சத்தியாகிரகத்தை நடத்தி கைதாகி கடுந்தண்டனையைப், பெற்றனர். 'நாகபுரியில் நடைபெற்ற தேசியக் கொடிப்போர், பர்டோலியில் நடைபெற்ற வரிகொடா இயக்கம், கேரளத்தில் நடைபெற்ற வைக்கம் சத்தியாக்கிரகம் ஆகியவற்றுக்கு இணையானதாக இருந்தது சென்னையில் நடைபெற்ற நீல்சிலைச் சத்தியாக்கிரகம்' எனப் புகழாரம் சூட்டியுள்ளார் ம.பொ.சிவஞானம்.

சைமன் குழு புறக்கணிப்பு

1930 பிப்ரவரி 3ஆம் தேதி சைமன் குழு பம்பாயில் வந்திறங்கிய போது அதை எதிர்த்து இந்தியாவெங்கிலும் அர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. சென்னையில் நடைபெற்றப் பிரமாண்டமான ஆர்ப்பாட்டத்தைக் கலைக்கப் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மூன்று பேர் மாண்டனர். பிரகாசம், முத்துரங்க முதலியார், பக்தவத்சலம் ஆகியோர் தடியடிக்கு ஆளாயினர். திருவல்லிக்கேணி ஜார்ஜ் டவுனில் நிலைமையை சமாளிக்க இராணுவம் அழைக்கப்பட்டது. சைமன்குழு சென்னைக்கு வந்தபோது 'சைமனே திரும்பிப் போ' என்ற முழக்கம் எழுந்தது. அக்குழுவுக்கெதிராகக் கருப்புக் கொடி காட்டப்பட்டது. கண்டன ஊர்வலமும் கடற்கரைக் கூட்டமும் நடைபெற்றன. சைமன் குழுவுக்கு அளிக்கப்பட்ட அரசாங்க வரவேற்பில் டாக்டர் பி.சுப்பராயன் கலந்து கொண்டதைக் கண்டித்து அவரது அமைச்சரவையிலிருந்து ரங்கநாத முதலியாரும், ஆரோக்கியசாமி முதலியாரும் பதவி விலகினர். சைமன் குழு மீண்டும் சென்னை வந்தபோது (1930 பிப்ரவரி29) தீவிரமாகப் புறக்கணிக்கப்பட்டது. சைமன் குழு வருகையால் தமிழ்நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சி மீதிருந்த அதிருப்தியும் வெறுப்புணர்ச்சியும் அதிகரிக்கவே செய்தன.

பூரண சுதந்திர சபதம்

1927 சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில்தான் முதன்முறையாகப் பூரண சுதந்திரமே இந்தியாவின் குறிக்கோள் என அறிவிக்கப்பட்டது. அடுத்த ஆண்டு கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் மக்கள் பூரண சுதந்திரப் பிரச்சாரத்தில் ஈடுபட வேண்டுமென்றும், 1929 இறுதிக்குள் இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்படாவிடில் காங்கிரஸ் பூரண

சுதந்திரம் கோரிப் போராடலாமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழ்நாட்டில் ராஜகோபாலாச்சாரி மீண்டும் அரசியலில் தீவிரமாக ஈடுபடலானார். தொடங்கப்படவிருந்த போராட்டத்துக்கு மக்களைத் தயார் படுத்த தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்தார் அவர். 1930 ஜனவரி 26ஆம் தேதி தேசமெங்கும் பூரண சுதந்திர நாள் கொண்டாடப்பட்டபோது தமிழ்நாட்டில் ஒவ்வொரு குடும்பத்திலும் ஊர்தோறும் அந்நாள் கொண்டாடப்பட வேண்டுமென்று ராஜகோபாலாச்சாரி பத்திரிகைகளில் வேண்டுகோள் விடுத்தார். மதுரையிலிருந்து அவரும் அவரது பரம பக்தருமான ஏ.வைத்தியநாத ஐய்யரும் அக்கொண்டாட்டத்தில் பங்கு கொண்டனர். சென்னையில் தேசியக்கொடி ஏற்றப்பட்டது. மாலையில் திருவல்லிக்கேணி திலகர் கூட்டத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதில் காங்கிரஸ் காரியக் கமிட்டி தயாரித்த பூரண சுதந்திர சபதத்தை கூட்டத் தலைவர் வரி வரியாக வாசிக்க குழுமியிருந்த அறுபதாயிரத்துக்கும் மேற்பட்டோர் அந்த வாசகங்களைத் திரும்பச் சொல்லிச் சபதமெடுத்தனர்.

உப்புச் சத்தியாக்கிரகம்

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராயிருந்த ராஜகோபாலாச்சாரி தமிழ்நாட்டில் உப்புச்சத்தியாக்கிரகத்தை நடத்துவதற்கான தளபதியாகக் காங்கிரஸ் மேலிடத்தால் நியமிக்கப்பட்டார். காங்கிரஸ் தலைமையகத்தை சென்னையிலிருந்து திருச்சிக்கு மாற்றி அதைச் சட்டமறுப்பு இயக்க மையமாகக் கொண்டிருந்தார் அவர். ராஜகோபாலாச்சாரி மதுரை சென்று மதுரை மாவட்டக் கமிட்டித் தலைவரான என்.எம்.ஆர்.சுப்பராமனையும் வக்கில் வைத்தியநாத அய்யரையும் சந்தித்துப்பேசி வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிரகம்பற்றி முடிவு செய்தார்.

தமிழ்ப் புத்தாண்டு நாளும் ஜாலியன் வாலாபாக் படுகொலை நாளும் ஒன்றாகச் சேர்ந்த 1930 ஏப்ரல் 13ஆம் நாளன்று ராஜாஜி, சுப்பராமன், மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 98 சத்தியாக்கிரகிகள் ஆக மொத்தம் 100 பேர் அதிகாலை 5 மணிக்குத் திருச்சியில் டாக்டர் டி.எஸ்.எஸ்.ராஜனின் மகள் ராஜகோபாலாச்சாரியின் நெற்றியில் திலகமிட்டு வழியனுப்ப, தேசியக் கொடி பிடித்தோர் முன்செல்ல, சத்தியாக்கிரகிகள் வரிசைக்கு இருவராக அணிவகுத்துச் சென்றனர். வழிநெடுகிலும் பாரதியாரின் 'அச்சமில்லை' என்ற பாடலை அவர்கள் பாடிச் சென்றனர். அந்த யாத்திரைக்கென்றே நாமக்கல் கவிஞர் ராமலிங்கம்பிள்ளை 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது, சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்' என்ற பாடலை புனைந்து தந்திருந்தார். சத்தியாக்கிரகிகள் அனைவரும் அப்பாடலைப் பாடிச் சென்றனர்.

தஞ்சை மாவட்டக் கலெக்டராயிருந்த எ.ஜே.தாரன் சத்தியாகிரகப் படையினரை வரவேற்பதோ, உபசரிப்பதோ, விருந்தளிப்பதோ, வேறு வகையில் உதவி புரிவதோ கடுமையான தண்டனைக்குரிய குற்றங்களாகும் என்று தஞ்சை மாவட்டம் முழுவதிலும் அறிவித்திருந்தார். இருப்பினும், போராட்ட வீரர்கள் கிராமம் கிராமமாகச் சென்றபோது மக்கள் தடை உத்தரவை உதாசீனப்படுத்திவிட்டு, மங்கலத் தோரணங்கள் கட்டி, வேட்டுகள் வெடித்து உற்சாகமாக வரவேற்றனர். பெண்கள் பூரண கும்பம் எடுத்தனர், திருஷ்டி

Scanned by CamScanner

கழித்தனர். குளிர்பானங்களும் பண்டங்களும் கொடுக்கப்பட்டன. பல ஊர்களில் வீரர்களுக்கு விருந்துகள் வழங்கப்பட்டன. ராஜகோபாலாச்சாரி, அண்ணாமலைப் பிள்ளை, ராஜன், வேதநாயகய்யா, வைத்தியநாதய்யர், எழுத்தாளர் வ.ரா. ஆகியோர் வழிக்கூட்டங்களில் பேசினர். போலீசாரின் அடக்குமுறைகளையும் அரசாங்க விசுவாசிகளின் விஷமச் செயல்களையும்மீறி யாத்திரை வெற்றிகரமாக நடைபெற்றது.

திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி வழியாக பதினாறு நாட்கள் யாத்திரைக்குப் பின்னர் 1930 ஏப்ரல் 28ஆம் தேதி சத்தியாகிரகிகள் வேதாரண்யத்தை அடைந்தனர். அங்கு கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் அவர்களை வாழ்த்தொலி எழுப்பி வரவேற்றனர். மறுநாள் முழுவதும் சத்தியாகிரகிகள் அனைவரும் உண்ணா நோன்பிருந்தனர். பிரார்த்தனை செய்தனர். ஏப்ரல் 30ஆம் தேதி ராஜகோபாலாச்சாரி 16 சத்தியாக்கிரகிகளுடன் அகஸ்தியம் பள்ளியிலுள்ள உப்பளத்தை அடைந்து சட்டத்தைமீறி உப்பை அள்ளினார்கள். ராஜகோபாலாச்சாரி மட்டும் கைது செய்யப்பட்டார். அவருக்குப்பின் க.சந்தானம், மட்டப்பாறை வேங்கட்ராம அய்யர், கே.சுப்பிரமணிய ஐய்யர், ஜி.ராமச்சந்திரன் ஆகியோர் உப்புச் சத்தியாகிரகத்துக்குத் தலைமை தாங்கி, சட்டத்தை மீறிச் சிறை சென்றனர். வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகம் ஒன்றரை மாதகாலம் நடந்தது.

ராஜகோபாலாச்சாரியின் தலைமையில் திருச்சியிலிருந்து உப்புச்சத்தியாகிரகிகள் புறப்பட்ட அன்றே (ஏப்ரல் 13) 'ஆந்திர கேசரி' பிரகாசம் தலைமையில் சென்னை நகரில் உப்புச்சத்தியாக்கிரகப் போராட்டம் துவக்கப்பட்டது. டாக்டர் நடராஜன், ஸ்ரீபாதசங்கர், ஆக்கூர் அனந்தாச்சாரி, ஜமதக்கனி, செல்வி துர்க்காபாய் ஆகியோர் அவருக்குத் துணையாக இருந்தனர். பிரகாசம் தலைமையில் சென்ற போராட்ட வீரர்கள் அதிகாலை 7 மணிக்குத் திலகர் கட்டடத்தை அடைந்து, அடுப்புக்களை அமைத்து, சட்டத்தை மீறி, உப்புக் காய்ச்சினர். காய்ச்சிய 'உரிமை உப்பை' விநியோகித்தனர். நாள்தோறும் அப்போராட்டம் நடைபெற்றது. பிரகாசம் நாகேஸ்வரராவ் பந்துலு ஆகியோர்மீது குற்றம் சாட்டப்பட்டு தலைக்கு ஐநூறு ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது (ஏப்ரல் 22). அபராதம் கட்ட மறுத்ததால் அவர்களுடைய கார்கள் ஜப்தி செய்யப்பட்டு ஏலத்தில் விடப்பட்டன.

டாக்டர் நடராஜன், செல்வி துர்க்காபாய் தலைமையில் உயர் நீதிமன்றம் வழியாக கடற்கரை நோக்கிப் போய்க் கொண்டிருந்த சுமார் 300 பேர் கொண்ட சத்தியாகிரகப் படையினரைப் போலீஸ் குதிரைப் படையினர் அடித்து உதைத்துக் கலைத்தனர். சென்னை அருகே இருந்த சோலிங்கபுரத்தில் சங்கர ஐய்யரும், முனுசாமி முதலியாரும் உப்புச் சத்தியாகிரம் செய்து தண்டனை பெற்றனர். வேதாரண்யம், சென்னை, சோலிங்கபுரம் மட்டுமன்றி மதுரை, தூத்துக்குடி, கடலூர், ஈரோடு, நெல்லை, திருச்சி ஆகிய நகரங்களிலும் உப்புச் சத்தியாகிரகம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கானோர் சிறைதண்டனை பெற்றனர். இதனால் தமிழ்நாட்டில் பரபரப்பும் விழிப்புணர்ச்சியும் ஏற்பட்டன.

அரசாங்கத்தின் அடக்குமுறை

1930 மே 5ஆம் தேதி காந்தி கைது செய்யப்பட்டு ஏரவாடா சிறையில் அடைக்கப்பட்டதை அடுத்து தேசம் முழுவதிலும் அர்த்தால்

அனுஷ்டிக்கப்பட்டது. சென்னை நகரிலும் தமிழ்நாட்டின் பிற நகரங்களிலும் கடையடைப்பும் வேலை நிறுத்தமும் நடைபெற்றன. சென்னை கடற்கரையில் நான்கு மேடைகள் போட்டு கண்டன கொற்பொழிவு நிகழ்த்தப்பட்டன. சென்னை மாநில சட்டமன்ற நியமன உறுப்பினரான திருமதி முத்துலட்சுமி ரெட்டி, காந்தி கைது செய்யப்பட்டதைக் கண்டித்து தனது பதவியை உதறித் தள்ளினார். மதுரை பாஸ்கர தாஸ் இயற்றிய 'காந்தியோ பரம ஏழை சந்தியாசி' என்ற பாடல் நாடக நடிகை கே.பி.சுந்தராம்பாவால் பாடப்பட்டது. அப்பாடலின் இசைத்தட்டு தமிழ்நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் எதிரொலித்தது.

சட்டமறுப்புப் போராட்டம் தீவிரப்படுத்தப்பட்டதை அடுத்து அரசாங்கத்தின் அடக்கு முறையும் கட்டவிழ்த்து விடப்பட்டது. சென்னை, சைனா பஜாரில் அந்நியத் துணிக்கடைகளுக்கு முன் மறியல் செய்த சத்தியாகிரகிகள் அத்துமீறித் தாக்கப்பட்டனர். தமிழ்நாட்டின் பல பகுதிகளில் நடைபெற்ற பொதுக்கூட்டங்களும் ஊர்வலங்களும் பலாத்காரமாகக் கலைக்கப்பட்டன. பல்வேறு நகர மன்றங்களிலும், நகர ஜில்லா போர்டுகளிலும் பஞ்சாயத்துக்களிலும் அடக்குமுறையைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சட்ட விரோதப் பேச்சுக்காக ராஜகோபாலாச்சாரி கைது செய்யப்பட்டார். சத்தியமூர்த்தி, கே.பாஷ்யம் ஐய்யங்கார், வி.ஏ.கந்தரம் ஆகியோரும் சிறை தண்டனை பெற்றனர். மதுரைக் கல்லூரி மாணவர் விடுதியில் போலீசார் புகுந்து தடியடிப் பிரயோகம் செய்தனர். கோவை நகரில் டவுன்ஹால் திடலில் நடத்தப்பட்ட காங்கிரஸ் பொதுக்கூட்டம் போலீசாரால் பலாத்காரமாகக் கலைக்கப்பட்டது. வால்பாறையில் எஸ்.ஆர்.வரதராஜுலு நாயுடு, எஸ்.எஸ்.ராமசாமி ஐய்யர் ஆகிய தொழிற்சங்கத் தலைவர்கள் பேசவிருந்த பொதுக்கூட்டம் தடைசெய்யப்பட்டது. கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தவர்கள் போலீசாரால் தாக்கப்பட்டனர்.

காந்தி இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றபோது காந்தி இர்வின் ஒப்பந்தம் மீறப்பட்டு அரசாங்கம் சட்டமறுப்புப் போராட்ட வீரர்களைப் பழிவாங்கத் தொடங்கியது. தமிழ்நாட்டில் சிறைக்குள்ளிருந்த விசாரணைக் கைதிகள் தடியடிக்கும், கசையடிக்கும் உள்ளாயினர். கள்ளுக்கடை, அந்நியத் துணிக்கடை மறியல் தடை செய்யப்பட்டது. பொய்க் குற்றங்கள் சாட்டப்பட்டுக் காங்கிரஸ்காரர்கள் கைது செய்யப்பட்டனர். சுயதேவைக்கு உப்பெடுப்பதற்குக்கூட அனுமதி மறுக்கப்பட்டது. இலண்டனிலிருந்து திரும்பிய காந்தி மீண்டும் சட்டமறுப்பு இயக்கத்தைத் துவக்கியதால் கைது செய்யப்பட்டார் (1932 ஜனவரி 4). காந்தி கைதான செய்தி கேட்டு, அதிர்ச்சியுற்ற திண்டுக்கல் வெள்ளைச்சாமி பிள்ளை உயிர் நீத்தார். சென்னையில் ராஜகோபாலாச்சாரி, சத்தியமூர்த்தி ஆகியோர் கைது செய்யப்பட்டனர். காங்கிரஸ் காரியகமிட்டிகள் அனைத்தும் சட்ட விரோதமானவை என்று அறிவிக்கப்பட்டது. அவற்றின் அலுவலகங்கள் பூட்டப்பட்டன. தமிழ்நாடு முழுவதிலும் காங்கிரஸ் கொடிகளை இறக்கிவிட்டு அவற்றுக்குப் பதில் பிரிட்டிஸ் யூனியன் ஜாக் கொடியை ஏற்றினர் போலீசார்.

காந்தி கைது செய்யப்பட்டதிலிருந்து தொடர்ந்து ஆறு மாத காலத்திற்கு தமிழ்நாட்டில் சட்டமறுப்பு இயக்கம் உப்புச் சத்தியாக்கிரகத்தைவிடத் தீவிரமாக

Scanned by CamScanner

நடைபெற்றது. நிறைச்சாலைகள் நிரம்பி வழிந்தன. 1932 ஜனவரி மாதம் 26ம் தேதி சுயராஜ்ய தினக் கொண்டாட்டத்தின்போது பலர் கைது செய்யப்பட்டனர். திருப்பூரில் தடை உத்தரவை மீறி பி.எஸ். சுந்தரம் தலைமையில் சென்ற ஊர்வலத்தை போலீஸ் அதிகாரி முகமதுவின் தலைமையில் போலீசார் மூர்க்கத்தனமாகத் தாக்கினர் (ஏப்ரல் 10). அத்தாக்குதலின்போது திருப்பூர் குமாரசாமியின் மண்டை நொறுக்கப்பட்டது. கொடியைப் பிடித்தவாறே உயிர் விட்டார் திருப்பூர் குமரன். கோவை மாவட்டத்தில் கணக்கற்ற காங்கிரஸ் பிரமுகர்களின் வீடுகள் சோதனையிடப்பட்டன. பலர் கைது செய்யப்பட்டனர். கோவை சி.ஏ.ஐயர் முத்துவும், அவருடைய மனைவி கோவிந்தம்மாளும் சட்டத்தை மீறியமைக்காக கடுங்காவல் தண்டனை பெற்றனர். அதேபோன்று ஈரோடு எம்.ஏ. ஈஸ்வரனும் கூகலூர் கே.கே.சுப்பண்ணை கவுண்டரும் தண்டிக்கப்பட்டனர். தஞ்சை மாவட்டத்திலும் பலர் சட்டமீறல் குற்றத்துக்காக கைது செய்யப்பட்டனர். விருதுநகரில் காமராஜர் ஜாமீன் கட்ட மறுத்து ஓராண்டு சிறை தண்டனை பெற்றார். பல மாவட்டங்களிலும் சட்டமீறல் குற்றத்துக்காகப் பலர் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டனர்.

தேர்தலில் வெற்றி வாகை

1934 பிப்ரவரி மாதம் 6ஆம் தேதி சிறையிலிருந்து விடுதலையான ராஜகோபாலாச்சாரி தனது நிலையை அடியோடு மாற்றிக் கொண்டு மத்திய, மாநில சட்டமன்றத் தேர்தல்களில் காங்கிரஸ் நேரடியாகப் போட்டியிட வேண்டுமென்றார். தேர்தல்களுக்கான பிரச்சார ஏற்பாடுகளையும் அவரே கவனித்தார். 1937ல் நடைபெற்ற மத்திய சட்டமன்றத் தேர்தலில் சென்னை மாநிலத்துக்குரிய 16 தொகுதிகளில் போட்டியிட்ட காங்கிரஸ் 11 தொகுதிகளில் வெற்றி பெற்றது. எஸ்.சத்தியமூர்த்தி, டி.எஸ்.அவினாசிலிங்கம் செட்டியார், பி.எஸ்.குமாரசாமி ராஜா, சி.என்.முத்துரங்க முதலியார், டாக்டர் டி.எஸ்.எஸ்.ராஜன், சாமுவேல் ஆரோஸ், அனந்த சயனம் அய்யங்கார், வி.வி.கிரி, கே.நாகேஸ்வரராவ், பேராசிரியர் என்.ஜி.ரங்கா, சாமி வெங்கடாசலம் செட்டியார் ஆகியோர் வெற்றிவாகை சூடிய காங்கிரஸ்காரர்களாவர். இவர்களன்றி முஸ்லீம்களுக்குரிய தென்சென்னைத் தொகுதியில் முர்த்துஸா சாகேப் பகதூர் காங்கிரஸ் ஆதரவோடு வெற்றி பெற்றார். அதேபோன்று 1937ல் நடைபெற்ற சென்னை மாநில சட்டமன்றத் தேர்தலில் மொத்த இடங்கள் 214ல் 159ஐ காங்கிரஸ் கைப்பற்றியது. இத்தேர்தலில் காங்கிரசின் வெற்றிக்காகப் பகம்பொள் உ. முத்துராமலிங்கத் தேவர் அரசின் அடக்குமுறையையும் மீறி அரும்பாடுபட்டார். பட்டதாரிகள் தொகுதியில் வெற்றி பெற்ற ராஜகோபாலாச்சாரி தலைமையில் முதன்முதலாகக் காங்கிரஸ் அமைச்சரவை அமைக்கப்பட்டது

ராஜாஜி அமைச்சரவை

நீதிக் கட்சியின் பதினேழாண்டு கால 'இரட்டை ஆட்சி'க்குப்பின் சென்னை ராஜதானியில் காங்கிரஸ் ராஜாஜியின் தலைமையில் ஆட்சி அமைத்தது. மாநில சுயாட்சித் திட்டத்தின்கீழ் ராஜாஜி அரசு கொண்டுவந்த மதுவிலக்குச் சட்டமும், ஆலயப்பிரவேசச் சட்டமும் செயற்கரிய செயல்களாகும். எனினும் மதுவிலக்குத் திட்டத்தால் ஏற்பட்ட இழப்பைச் சரிக்கட்டுவதற்காகப் புகுத்தப்பட்ட விற்பனை வரி மக்களின் குறிப்பாக வியாபாரிகளின் வெறுப்பையும் எதிர்ப்பையும் தேடித் தந்தது. மாறாக, ராஜாஜி ஆட்சியில் இந்திக் கொள்கை 'கம்மா இருந்த சங்கை அறுத்துக்கெடுத்ததுபோல்' ஆயிற்று; தமிழகத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் காட்டுத்தீ போல் பரவிற்று. இப்போராட்டத்துக்குத் தலைமை தாங்கிய பெரியார் ஈ.வே.ராமசாமி நாயக்கரின் கரம் ஓங்கிற்று. 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற குரல் எழுப்பப்பட்டது (1938 செப்டம்பர் 11). பெரியார் இந்தி எதிர்ப்பு காரணமாகக் கைது செய்யப்பட்டு, இரண்டாண்டு தண்டனை வழங்கப்பட்டு வேலூரி சிறையில் அடைக்கப்பட்டார் (1938 டிசம்பர் 6). ராஜாஜி கொண்டுவந்த மற்றொரு சட்டம் பொற்கொல்லர்களைக் கிளர்ந்தெழச் செய்தது. 1939ல் இரண்டாம் உலகப்போர் தொடங்கியதால் காங்கிரஸ் மாநில அமைச்சரவைப் பதவி விலகத் தீர்மானித்தது. அதன்படி ராஜாஜி 'மாநில சுயாட்சி' முடிவுக்கு வந்தது. இது தவறான முடிவு என்றும், இந்த முடியால் பிரிட்டிஷார் மாநிலங்களை நிர்வாகத்துக்கு நேரடி பொறுப்பேற்று போருக்கான முயற்சியை முடுக்கிவிட்டது என்று கூறுகிறார் கே. ராஜய்யன்.

தனிநபர் சத்தியாக்கிரகம்

1940 அக்டோபர் 13ல் வார்தாவில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் காந்தி வெளியிட்ட தனிநபர் சத்தியாகிரகத் திட்டத்தை யொட்டித் தமிழ்நாட்டில் பலர் கைதாயினர். டாக்டர் டி.எஸ்.எஸ்.ராஜன் தான் தமிழ்நாட்டின் முதல் சத்தியாக்கிரகியாகச் சிறை சென்றவர். தமிழ்நாடு காங்கிரஸ் சர்வாதியாகப் பொறுப்பேற்ற கே.காமராஜர், தமிழ்நாடு முழுவதற்குமான சத்தியாக்கிரகிகளின் பட்டியலைத் தயாரித்துக் கொண்டு காந்தியை சந்தித்துப்பேச சென்றபோது கூடூர் புகைவண்டி நிலையத்தில் கைது செய்யப்பட்டு வேலூர் சிறைபில் அடைக்கப்பட்டார். தஞ்சை, செங்கற்பட்டு, கோவை ஆகிய மாவட்டங்களில் பெரிய நிலச்சுவான்தார்களும் வணிகர்களும் தனிநபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு சிறை சென்றனர்.

ராஜகோபாலாச்சாரி, சத்தியமூர்த்தி, டி.பிரகாசம், டாக்டர் பி.சுப்பராயன், வி.ஐ.முனுசாமிப்பிள்ளை, எஸ்.இராமநாதன், பி.கோபால ரெட்டி, வி.வி.கிரி, எம்.பக்தவத்சலம், என்.எஸ்.வரதாச்சாரி, டி.எஸ்.அவினாசிலிங்கம் செட்டியார், பி.எஸ்.குமாரசாமி ராஜா, நாடிமுத்து பிள்ளை, நாச்சியப்பக் கவுண்டர், கே.வெங்கடசாமி நாயுடு, பன்மொழிப்புலவர் தெ.பொ.மீனாட்சி சுந்தரம், தமிழ்ப்பேராசிரியர் மறை திருநாவுக்கரசு, திருமதி நீலாவதி ராமசுப்பிரமணியம், ம.பொ.சிவஞானம், 'தினமணி' ஆசிரியர் டி.எஸ்.சொக்கலிங்கம் பிள்ளை, 'ஆனந்தவிகடன்' ஆசிரியர் ரா.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் தனிநபர் சத்தியாக்கிரகத்தின்போது சிறை புகுந்த செம்மல்களாவர். தமிழ்நாட்டில் ஒத்துழையாமை இயக்கம் உப்புச்சத்தியாகிரகம் ஆகிய போராட்டங்களில் ஈடுபட்டவர்களைவிட தனிநபர் சத்தியாகிரகத்தில் அதிக அளவிலும் அதிக ஆர்வத்துடனும் காங்கிரஸ்காரர்கள் கலந்துகொண்டு சிறை தண்டனை பெற்றனர். தமிழ்நாட்டில் தேச விடுதலையைப் போராட்டச் சுடர்விளக்கு தொடர்ந்து எரிந்துகொண்டே இருந்தது.

புரட்சித் தீவிரவாதம்

காங்கிரஸ் ஒத்துழையாமை இயக்கத்தைக் கைவிட்டு 1935 இந்திய அரசியல் சட்டப்படி ஆட்சிப்பொறுப்பேற்றது தீவிரவாத தேசியவாதிகளுக்குப் பெருத்த

Scanned by CamScanner

மாற்றத்தை அளித்தது. இரண்டாம் உலகப்போர் துவங்கி பின் காங்கிரஸ் பதவி விலகியதால் ஏற்பட்ட அரசியல் சூழியத்தைப் புரட்சித் தீவிரவாதிகள் திரப்பினர். தமிழ்நாட்டில் புரட்சிப்பாடல்கள் புனையப்பட்டு பொதுக்கூட்டங்களில் பாடப்பட்டன. குறிப்பாக, பகத்சிங்கின் தியாகம், தியாகம் பற்றி பாடல்கள் மக்களிடையே புரட்சி தேடிய உணர்ச்சியை ஏற்படுத்தியது. 'தொழிலாளர் வர்க்கப் பாதை' என்ற நூல் பிரிட்டிஷ் போரை உலகின் பிரமாண்டமான சிறை என்றும்; புதிய இந்தியாவை உருவாக்க மக்கள் வரி கொடுக்கக் கூடாது; அரசாங்க நிறுவனங்களை அழிக்க வேண்டும்; போலீஸ் மற்றும் இராணுவ நிலையங்களைத் தாக்க வேண்டும்; ஆயுதப்புரட்சி செய்ய வேண்டும் என்றும் கூறியது. சிவகாமிநாதன் எழுதிய புரட்சிக் கவிதைகள் அடங்கிய சுதந்திர முரசு என்ற கவிதைத் தொகுப்பை ஏ.முத்தையா நாடார் மதுரையில் வெளியிட்டார்.

சிவகாசி புரட்சித் தீவிரவாதத்தின் குவிமையமாகத் திகழ்ந்தது. துரைசாமி நாடார், தனமூர்த்தி நாடார், கணபதி நாடார் ஆகியோர் தலைமறைவாகிப் புரட்சி இயக்கத்தை நடத்தி வந்தனர். புரட்சி தீவிரவாதப் பிரகரங்களை வெளியிட்டனர். ஒரு பிரகரம் பிரிட்டனுக்குச் சமாதி கட்ட வேண்டும் என்ற துணிச்சல்மிக்க இளைஞர்களைக் கேட்டுக் கொண்டது. பிரிட்டிஷ் அதிகாரிகள் கூடியிருந்த மதுரை திருமலை நாயக்கர் மகாலில் வெடிகுண்டு வைக்கப்பட்டது (1937 மே 12).. சென்னை பெரம்பூரில் இருந்த ஒரு வீட்டைச் சோதனையிட்டு மோகன் குமாரமங்கலம், சுப்பிரமணிய சர்மா, ஹனுமந்தராவ், குன்சுப்ப நம்பியார் ஆகிய தலைமறைவுத் தலைவர்களைக் கைது செய்தனர். பாதிசப் புத்தகங்களும், பிரகரங்களும் கைப்பற்றப்பட்டன (1941 மார்ச்). பிரிட்டிஷ் ஆட்சியை ஒழிக்க சதி செய்ததாகக் குற்றம்சாட்டி உடுமலைப்பேட்டையில் நரசிம்ம நாயக்கரையும் அவரது சகாக்களையும் கோவையில் கைதுசெய்து, 5 ஆண்டு கடுங்காவல் தண்டனை கொடுத்து பெல்லாரி சிறையில் அடைத்தனர். சிறைக் கொடுமை தாங்காமல் நரசிம்ம நாயக்கர் உயிரிழந்தார்.

வெள்ளையனே வெளியேறு இயக்கம்

1942 ஆகஸ்டு 7,8 தேதிகளில் பம்பாயில் கூடிய காங்கிரசில் வெள்ளையனே வெளியேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அடுத்தநாள் காந்தி கைது செய்யப்பட்டார். பம்பாய் காங்கிரஸ் கூட்டத்தில் கலந்துகொண்டு திரும்பிய தமிழ்நாட்டுப் பிரதிநிதிகளான கே.காமராஜர், வேலூர் வி.எம்.உபயதுல்லா, திருவண்ணாமலை என். அண்ணாமலைப்பிள்ளை , கி.என்.முத்துரங்க முதலியார், எம். பக்தவச்சலம், எஸ்.சத்தியமூர்த்தி ஆகியோர் கைது செய்யப்பட்டு வேலூர் சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். மதுரை அருகே ம.பொ.சிவஞானம் கைது செய்யப்பட்டார். காங்கிரஸ்மீது அரசாங்கம் நடத்திய திடீர்த் தாக்குதலால் மக்கள் அதிர்ச்சி அடைந்தனர். தலைவர்கள் போராட்டத்திட்டம் எதுவும் அறிவிக்காத நிலையில் மக்கள் மனம்போன போக்கில் செயல்பட்டனர். ஆகஸ்டுப் போராட்டம் துவங்கியது.

காந்தி கைது செய்யப்பட்ட செய்தி எட்டிய உடன் சென்னையில் பூர்ண அர்த்தால் கடைபிடிக்கப்பட்டது. கடைகள் அடைக்கப்பட்டன. தொழிற்சாலைகள் மூடப்பட்டன. கல்விக்கூடங்கள் காலியாகக் கிடந்தன. தொழிலாளர்

தூப்பாட்டத்தை அடக்கப் போலிசார் சுட்டதில் 9 பேர் உயிரிழந்தனர். தபோஸ்பியர் நடத்திய கடைகள்மீது கற்கள் வீசப்பட்டன. நகரின் பல பகுதிகளில் டைபெற்ற தடியடிப் பிரயோகத்தில் பலர் காயமுற்றனர். சென்னை செங்கற்பட்டு, வடஆற்காடு, தென்ஆற்காடு மாவட்டங்களில் றுத்துக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர்.

தஞ்சை மாவட்டத்தில் காங்கிரஸ் கலகக்காரர்கள் பல குழுக்களாகப் பிரிந்து ளர்ச்சியில் ஈடுபட்டனர். நிர்காழியிலுள்ள உப்பளாற்றுப் பாலத்தை வெடி வைத்துத் தகர்க்க முயற்சித்தனர். அது சம்பந்தமாக 'தினமணி' துணை ரியர்கள் என்.ராமரத்தினம், டி.வி.கணேசன், தொழிலதிபர் சுப்புராயன், சேஷ அய்யர் ஆகியோர்மீது சதிவழக்கு தொடரப்பட்டது. பல்வேறு தவேலைகளுக்குக் காரணமாக இருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு க.ராஜவேலு உட்பட பலர் கைது செய்யப்பட்டனர்.

கோயமுத்தூரிலும், சிங்காநல்லூரிலும் பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லாமல் தடை உத்தரவைமீறி ஊர்வலம் சென்றனர். போலீசார் குறுக்கிட்டு ஊர்வலத்தைக் கலைக்க முற்பட்டபோது கலரவம் மூண்டது. கோவை இராணுவ விமானதளம் தாக்கப்பட்டு முழுதுமாக எரிக்கப்பட்டது. கோவைக்கு அருகேயுள்ள சூலூர் இராணுவ விமான தளமும் கடுமையாக தாக்கப்பட்டது. சுமார் 200 இராணுவ டாங்குகள் நாசமாக்கப்பட்டன. அக்கிளர்ச்சியில் போது இராணுவத்தினர் சுட்டதில் முப்பது பேர் மாண்டனர். சூலூருக்கு அருகாமையிலிருந்த கிராமத்திலிருந்த ஆண்கள் கைது செய்யப்பட்டு, ஒரு சிறு இடத்தில் ஒரு வார காலம் அடைத்து வைக்கப்பட்டனர்.

மதுரை மாவட்டம் முழுவதும் கடையடைப்பு செய்யப்பட்டது. பல இடங்களில் போலீசாருக்கும் இளைஞர்களுக்குமிடையே மோதல்கள் நடைபெற்றன. மதுரையிலும் பசுமலையிலுள்ள தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். மதுரையில் தடையைமீறி பேசியதற்காக எ.வைத்தியநாத அய்யர், ரெ.சிதம்பரபாரதி, கே.ராஜாராம் நாயுடு போன்ற பல பிரமுகர்கள் கைது செய்யப்பட்டனர். ஜான்சி ராணி பூங்காவில் தடையைமீறிக் கூடிய பொதுமக்களுக்கும் போலீசாருக்குமிடையே பல மணிநேரம் போராட்டம் நடந்தது. துப்பாக்கி சூட்டில் ஆறு பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமுற்றனர். மதுரை வீதிகளில் போலீஸ் வாகனங்கள் நடமாட முடியாதபடி போக்குவரத்து தடை செய்யப்பட்டது. அஞ்சலகம் தீக்கிரையாக்கப்பட்டது. அரசாங்க அலுவலகங்கள் செயலிழந்தன. சர்க்கிள் இன்ஸ்பெக்டர் விகவநாத நாயர் மீது திராவகம் ஊற்றப்பட்டது. நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே மதுரை மாநகரில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் வன்முறை நிகழ்ச்சிகள் பரவலாக நடைபெற்றன. செட்டிநாட்டு இளைஞர்களும் ஆகஸ்டு கிளர்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டனர். திருவேகம்புத்தூர் சாலையிலுள்ள பாலங்கள் உடைக்கப்பட்டன. சாலையோரங்களிலுள்ள மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டு போக்குவரத்து தடை செய்யப்பட்டது. திருவாடானையில் பஸ்கள் தீக்கிரையாக்கப்பட்டன. துப்பாக்கிச்சூட்டில் தருமராஜன் என்பவர் உயிரிழந்தார். பலர் காயமுற்றனர்.

Scanned by CamScanner

கட்டுக்கடங்காத கூட்டம் மாஜிஸ்ரேட் கோர்ட்டுக்குள் புகுந்து தன்தாவேஜுகளை கொளுத்தி, கட்டிடத்துக்குத் தீ வைத்தது. அப்போது நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஒரு பெண் உட்பட ஆறு பேர் இறந்தனர். சிகர்வு போலீஸ் படையொன்று சார்ஜண்ட் வாலட் தலைமையில் வீடுவீடாகப் புகுந்து மக்களை கொடுமைப்படுத்தினர். பிள்ளைகளையும் கணவன்மார்களையும் காட்டிக்கொடுக்க மறுத்த தாய்மார்கள் மானபங்கப் படுத்தப்பட்டனர். செல்வத்துறை தலைமையில் ஒரு கூட்டம் திருவாடணை சப் ஜெயிலை உடைத்துக் காவலில் வைக்கப்பட்டிருந்த பின்ன அண்ணாமலையையும் டி.எஸ்.ராமநாதனையும் பிறரையும் விடுவித்தனர்.

ராஜபாளையத்தில் தேசிய இளைஞர் அணியினர் ஆகஸ்டு 9ம் தேதி பிரமாண்டமான ஊர்வலத்தை நடத்தினர். பி.எஸ்.வசந்தன், எஸ்.ஆர்.தனுஷ்கோடி ராஜா, அனுஜம், திருப்பூர் பி.எஸ்.கந்தரம், பி.எஸ்.துரைசாமி ராஜா, வி.ஆர்.சுப்பாராஜா, பி.எஸ்.தர்மராஜா, குருசாமி செட்டியார், அக்னிவேல் முதலியார், பழனிச்சாமி செட்டியார் ஆகியோர் ஊர்வலத்தை முன்னின்று நடத்தினர். காவல் நிலையம் தாக்கப்பட்டது. அதன் அருகேயிருந்த ஜந்தாம் ஜார்ஜ் மன்னர் சிலை உடைக்கப்பட்டது. காவல்துறையினர் தடியடி செய்து ஊர்வலத்தைக் கலைத்தனர். கலைந்துசென்ற ஊர்வலத்தினர் 'காங்கிரஸ் பொன்விழா மண்டபத்தில்' கூடி தங்கள் தலைவர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்ததோடு அடுத்த நாள் (ஆகஸ்டு 10) அர்த்தால் அனுசரிக்க வேண்டுமென்று மக்களுக்கு அழைப்பு விடுத்தனர். காவல் துறையினர் முன்னெச்சரிக்கையாக தேசியவாதிகளின் வீடுகளை சோதனையிட்டனர். அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது. திருமண ஊர்வலங்கள்கூட தடை செய்யப்பட்டன. பி.எஸ்.சுப்பராஜா, வி.தேசிங்கு ராஜா, செல்லையா செட்டியார் ஆகியோர் கைது செய்யபபட்டனர். எனினும் திட்டமிட்டபடி அர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

ராஜபாளையம் மில் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லாமல் தடுக்கப்பட்டனர். அதைத்தடுத்த போலீசார்மீது கற்கள் வீசப்பட்டன. தந்திக்கம்பிகள் துண்டிக்கப்பட்டன. தபால் பெட்டிகள் பாஸ்பரஸ் போடப்பட்டு நாசம் செய்யப்பட்டன. கள் கடைகள், வளைவுகள், நினைவுச் சின்னங்கள் சேதப்படுத்தப்பட்டன.துணைக் கருவூலகம் சூறையாடப்பட்டது. தபால் பஸ்கள் தாக்கப்பட்டன. ஆர்ப்பாட்டக்காரர்கள் போர்டு உயர்நிலைப் பள்ளிக்குச் சென்று பள்ளியை மூடிவிடுமாறு நிர்ப்பந்தித்தனர். துப்பாக்கிச் சூட்டுக்குப் பின்னர் நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இருவர் இறந்தனர். மேலும் நான்கு பேர் கைது செய்யப்பட்டனர். கூட்டத்தில் நசுங்கி ஒரு குழந்தை செத்தது. பெருமாள் குடும்பனும், கருப்பையா தேவரும் படுகாயமுற்றனர். ஆகஸ்டு 21ம் தேதி மீண்டும் வன்முறைக் கலவரம் வெடித்தது. பலர் கைது செய்யப்பட்டனர். இளைஞர் அணித்தலைவர் பி.எஸ்.வசந்தன் சித்திரவதை செய்யப்பட்டார். பி.எஸ்.துரைசாமி ராஜா, எஸ்.ஆர். தனுஷ்கோடி ராஜா, கே.கே.அர்ஜுன் ராஜா ஆகியோர்க்கு ஒன்பது மாத சிறை தண்டனை வழங்கப்பட்டது.

ராஜபாளையத்தில் நடைபெற்ற ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். காவல் நிலையம் தாக்கப்பட்டது. அதன் அருகே இருந்த ஜார்ஜ் மன்னர் சிலை உடைக்கப்பட்டது. இராமலிங்காபுரம் என்ற கிராமத்தில் முஸ்லிம்களுக்குப் புனிய மரங்கள் எரிக்கப்பட்டன. நள்ளிரவில் போலீசார் அக்கிராமத்துக்குச் சென்று தாளியங்களை நாசம்செய்து, பலரை அடித்துத் துன்புறுத்தி, ஆடுமாடுகளை ஓட்டிச்சென்று, அக்கிரமங்கள் பல புரிந்தனர். சத்தூரில் காந்தி ஜயந்தியில் கலந்து கொண்டதற்காக கூலிங்கத் தேவர் வத்திராயிருப்பில் ஆத்சேபகரமான ஆயுதங்களை வைத்திருந்ததாகவும் தந்திக் கம்பிகளை வெட்டியதாகவும் அவர் கைது செய்யப்பட்டார்.

சாத்தூர் தாலுகா முழுவதும் கண்டனக் கூட்டங்கள் நடைபெற்றன. சிவகாசி ஸ்டேஷன் அலுவலகம், சாத்தூர் முன்சீப் கோர்ட், துணைப்பதிவாளர் அலுவலகம், விருதுநகர் இராணுவ ஆள்சேர்க்கும் மையம், சாராயக்கடைகள் ஆகியவற்றுக்குமுன் மறியல் செய்யப்பட்டன. விருதுநகரில் தா.பா.சுப்பிரமணிய நாடார், ராஜாக்கனி நாடார், கருப்பையா நாடார், எஸ் மார்ப்பா, மறியல் வீரப்பன், ரா.குருசாமி நாடார், ஜெயராம் ரெட்டியார் ஆகியோர் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டனர். அருப்புக்கோட்டை தாலுகாவில் அர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. கண்டனக் கூட்டங்கள் நடைபெற்றன. தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். தந்திக்கம்பிகள் வெட்டப்பட்டன. தபால் பெட்டிகளுக்குள் பாஸ்பரஸ் போடப்பட்டது. பாலம் உடைக்கப்பட்டது. கள்ளுக்கடை, அந்நியத் துணிக்கடைகள் மறியல் செய்யப்பட்டன. கண்மாய்களிலிருந்த கருவேல்மரங்கள் வெட்டி சாய்க்கப்பட்டன. சிர்வ் போலீசார் ஆனைக்குளம், பாளையம்பட்டி, புளியம்பட்டி, கோமிலாங்குளம், இராமானுஜபுரம், ஜோகில்பட்டி, கல்குரிச்சி, மல்லாங்கிணர், இலுப்பையூர், ரெட்டியாபட்டி, புலிக்குரிச்சி ஆகிய இருபதுக்கும் மேற்பட்ட கிராமங்களுக்குள் நள்ளிரவில் நுழைந்து உரங்கிக் கொண்டிருந்த மக்களை அத்துமீறித் தாக்கிய பல்வேறு கொடுமைகளுக்குள்ளாக்கினர். முதுகுளத்தூர், இராமநாதபுரம், பரமக்குடி, சிவகங்கை, திருப்பத்தூர், திருவாடனை தாலுகாக்களிலும் வன்முறை நடவடிக்கைகளும் அவற்றைத் தொடர்ந்து அடக்குமுறையும் அன்றாட நிகழ்ச்சிகளாயின

நெல்லை, தூத்துக்குடி போன்ற நகரங்களில் ஆகஸ்டு இரண்டாவது வாரத்தில் கடையடைப்பு நடைபெற்றது. கல்வி நிலையங்கள் மூடப்பட்டன. மாணவர்கள் தடை உத்தாவைமீறி ஊர்வலம் சென்றனர். தொழிலாளர் வேலை நிறுத்தத்தால் தூத்துக்குடி ஹார்வி மில் மூடப்பட்டது. குலசேகரப்பட்டினத்திலிருந்து உடன்குடி வரையுள்ள இடங்களில் தந்திக்கம்பிகள் அறுக்கப்பட்டன. போக்குவரத்து தடைசெய்யப்பட்டது. குலசேகரப்பட்டினத்தில் உப்பளங்களிலிருந்த காவலர்களைக் கட்டிப் போட்டுவிட்டு அவர்களிடமிருந்து துப்பாக்கிகளைக் கலகக்காரர்கள் கைப்பற்றிக் கொண்டனர். உப்பள இன்ஸ்பெக்டர் டபிள்யு.லோன் என்பவரது துப்பாக்கித் தாக்குதலுக்குப் பல கிளர்ச்சிக்காரர்கள் பலியாயினர். லோன் ஷெக் கொல்லப்பட்டார். ஆர்ப்பாட்டக்காரர்கள் தப்பிச்சென்று உடன்குடி மற்றும் சுற்றுப்புறக் கிராமங்களில் ஒளிந்து கொண்டனர். அவர்கள் இருந்த பகுதியை 'சுதந்திரப்பிரதேசம்' என அறிவித்தனர். ஒரு வாரத்திற்குப் பின்னர்

Scanned by CamScanner

இராணுவத்தினர் அப்பகுதிக்குச் சென்று அட்டூழியங்கள் பலசெய்து 115 கலகக்காரர்களைக் கைது செய்தனர். காங்கிராஜனும் ராஜகோபாலும் கடுங் தண்டனை பெற்றனர். பின்னர் கருணை மனுவினால் விடுதலை பெற்றனர்.

1942 ஆகஸ்டு மாதம் முழுவதும் தமிழ்நாட்டின் பல இடங்களிலும் வன்முறைக் கலவரங்கள் நடைபெற்றன. அவையாவும் தனிநபர்களாலும், குழுக்களாலும், கூட்டங்களாலும் நடத்தப்பட்டவையேயாகும். அதனால் அப்போராட்டம் ஒரு தலைமையின்கீழ் ஒருங்கிணைக்கப்பட்ட மக்கள் இயக்கமாக உருவெடுக்க முடியாமல் போய்விட்டது. ராஜகோபாலாச்சாரியும் அவரது ஆதரவாளர்களும் காங்கிரசிலிருந்து வெளியேறியதால் ஆகஸ்டு இளர்ச்சியில் அவர்கள் கலந்து கொள்ளாமல் ஒதுங்கியே இருந்தனர். அதே போன்று மாணவர்களிடையேயும் தொழிலாளர்களிடையேயும் மிருந்த செல்வாக்குப் பெற்றிருந்த கம்யூனிஸ்டுகள் இரண்டாவது உலகப்போரில் நே நாடுகளை ஆதரித்ததால் அரசாங்கச் சார்புடையவர்களாக இருந்துகொண்டு வெள்ளையனே வெளியேறு இயக்கத்தைப் பலவீனப்படுத்தினர். தமிழ்நாட்டில் நாசவேலைகள் 1942 ஆகஸ்டு மாதத்தோடு முடிந்துவிட்டன. அதன்பிறகு அகப்பட்ட காங்கிரஸ்காரர்கள்மீது 'சதிவழக்கு' என்ற பெயரில் பல பொய்வழக்குகள் போடப்பட்டன. தமிழ்நாட்டில் நடைபெற்ற அக்னித் திராவக வழக்கு, லோன் கொலை வழக்கு, சீர்காழி சதி வழக்கு, விமான தள எதிர்ப்பு வழக்கு, திருவையாறு கலவர வழக்கு ஆகியவை பிரசித்தம். இவ்வழக்குகளில் சம்பந்தப்பட்டதாகப் பலருக்கு மரண தண்டனை, ஆயுள் தண்டனை, நாடு கடத்தல், கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டன. ஆகஸ்டு இளர்ச்சியின்போது தமிழ்நாட்டுப் போராட்டக்காரர்கள் வன்முறை வழிகளின் மூலமாகவும் நாட்டு விடுதலையைப் பெறத் தயங்கமாட்டோம் என்பதை சந்தேகத்துக்கிடமின்றி நிருபித்தனர்.

"விடுதலை, விடுதலை, விடுதலை"

புனாவில் ஆகாகான் அரண்மனையில் சிறை வைக்கப்பட்டிருந்த காந்தியை விடுதலை செய்யுமாறு நாடெங்கும் பொதுக்கூட்டங்களும் மறியல்களும் நடைபெற்றன. சென்னை நகரில் அரசு தலைமை அலுவலகத்துக்கு முன்பாக மறியல் செய்யப்பட்டது. காங்கிரஸ் தொண்டர்கள் பலர் கைதாயினர். மதுரை, திருச்சி போன்ற நகரங்களில் தடை உத்தரவைமீறி ஊர்வலம் சென்றவர்களும் ஆர்ப்பாட்டம் செய்தவர்களும் கைது செய்யப்பட்டனர். லின்லித்கோ பிரபுவுக்குப்பின் வேவல் பிரபு (1942-47) இந்திய வைசிராயானவுடன் இந்திய அரசியல் நிலைமையில் நல்ல மாற்றம் ஏற்பட்டது. 1944 மே 8 ஆம் தேதி காந்தி விடுதலை செய்யப்பட்டார். நாடு தன் விடுதலை நோக்கி நடைபோடத் துவங்கியது.

காந்தியின் கட்டளைப்படி 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் துவங்கிய ஆகஸ்டு 9 ஆம் தேதியை நாட்டு மக்கள் கொண்டாடினர். தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, திருநெல்வேலி ஆகிய நகரங்களில் மாபெரும் ஊர்வலங்கள் நடத்தப்பட்டன: பலர் கைது செய்யப்பட்டனர். காந்தியின் ஆலோசனைப்படி தலைமறைவாயிருந்த காங்கிரஸ்காரர்கள் பகிரங்கமாக வெளியே வந்தனர்.

தஞ்சாவூர் கோவை, இராமநாதபுரம் மாவட்டங்களில் தலைமறைவாய் இருந்த தலைவர்கள் 1943 ல் வெளிப்பட்டனர். அவர்களுள் கோவை விமான நிலைய தீவைப்பு வழக்கில் குற்றவாளியாக சேர்க்கப்பட்டிருந்த கே.பி.திருவேங்கடமும் ஒருவராவார். அவர்மீது வழக்குத் தொடரப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்திய விடுதலையில் அக்கறை காட்டி வந்த பிரிட்டிஷ் தொழிற்கட்சி 1945 பொதுத்தேர்தலில் வெற்றி பெற்றது. இந்திய சுதந்திரப் போராட்டத்தின் மேற்றி வாய்ப்புக்கான அறிகுறியாக அமைந்தது. இந்திய சட்டமன்றத் தேர்தலில் தமிழ் மாவட்டங்களில் சென்னை நகரத் தொகுதியிலிருந்து திருமதி அம்மு சுவாமிநாதனும், செங்கற்பட்டு தென்ஆற்காடு தொகுதியிலிருந்து வெங்கடசுப்பா ரெட்டியாரும், கோவை, வடஆற்காடு, சேலம் தொகுதியிலிருந்து வி.வி.வெள்ளியங்கிரிக் கவுண்டரும், தஞ்சை திருச்சித் தொகுதியிலிருந்து டி.வி.கோபாலசாரியாரும், மதுரை இராமநாதபுரம் நெல்லைத் தொகுதியிலிருந்து ஆதித்த நாடாரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1939ல் பாதுகாப்புக் கைதியாகச் சிறையிலடைக்கப்பட்டு 1945 செப்டம்பர் 6ஆம் தேதி விடுதலை செய்யப்பட்ட முத்துராமலிங்கத் தேவர் இத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். வர்த்தகர்களுக்கான ஒரே தொகுதியிலிருந்து டி.எ.ராமலிங்கம் செட்டியார் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்த ஆண்டு நடைபெற்ற சென்னை மாநில சட்டமன்றத் தேர்தலில் 215 தொகுதிகளில் வெற்றி பெற்ற காங்கிரஸ் 1946 ஏப்ரல் 30ஆம் தேதி டி.பிரகாசம் தலைமையில் அமைச்சரவை ஆட்சிப் பொறுப்பேற்றது. இராமநாதபுரம், வடஆற்காடு, கோவை, மதுரை, திருநெல்வேலி, மலபார், கிழக்கு கோதாவரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 84 அரசியல் கைதிகளைப் பிரகாசம் ஆட்சி விடுதலை செய்தது. அவர்களுள் 62 பேர் தமிழர்கள்.

ஜப்பான் சரணடைந்ததற்குப்பின் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்ட சுபாஸ் சந்திர போஸின் இந்திய தேசிய இராணுவக் கைதிகளில் ஒருவரான காப்டன் ரஷித் என்பவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. அதை எதிர்த்து கல்கத்தாவில் வெடித்த கிளர்ச்சியின் எதிரொலி தமிழ்நாட்டில் கேட்டது. சென்னை, திருச்சி ஆகிய நகரங்களில் ரஷித்தை விடுதலை செய்யக் கோரிக் கலவரங்கள் நடந்தன. சென்னை நகரம் வன்முறையின் பிடியில் சிக்கியது. அதேபோன்று பம்பாய் கப்பற்படையிலிருந்த இந்திய வீரர்கள் கிளர்ந்தெழுந்தபோது சென்னை, விமான நிலையத்தில் 200க்கு மேற்பட்டவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். சென்னை போர்க்கோலம் பூண்டது. மாணவர்கள் நகரின் பல்வேறு பகுதிகளில் ஊர்வலம் சென்றனர். பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் நகரில் கிளர்ச்சியைத் தொடங்கி வைத்தனர் எனலாம். தொழிலாளர் வேலை நிறுத்தம் சென்னை நகரை ஸ்தம்பிக்கச் செய்தது. டிராம், பஸ், போக்குவரத்து நின்றது. கடைகள் மூடப்பட்டன. பெண்களும் இப்போராட்டத்தில் பெருமளவில் கலந்து கொண்டனர். மாலையில் திருவல்லிக்கேணி திலகர் கட்டிடத்தில் நடைபெற்ற பிரமாண்டமான பொதுக்கூட்டத்தில் ப.ஜீவானந்தம், எம்.கல்யாணசுந்தரம், ஏஸ்.கே.அய்யங்கார், மாணவர் தலைவர் எம்.பி.சிவிவாசன் ஆகியோர் சொற்பெருக்காற்றினர். பம்பாய்க்

Scanned by CamScanner

மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறையைக் கைவிடுமாறு கோரியும் சென்னை நகரில் இரண்டாவது முறையாக ஆர்ப்பாட்டமும், தொழிலாளர் வேலை நிறுத்தமும், வன்முறை நிகர்ச்சிகளும் நடைபெற்றன.

ஆனந்த சுதந்திரம்

மத்தியில் ஜவஹர்லால் நேருவின் தலைமையில் அமைக்கப்பட்ட இடைக்கால அரசாங்கத்தில் தமிழ்நாட்டிலிருந்து டி. ராஜகோபாலாச்சாரி இடம் பெற்றார். அதேபோன்று இந்திய அரசியல் அமைப்புச் சட்டமன்றத்துக்காக சென்னை மாநிலத்திலிருந்து தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட 49 பிரதிநிதிகளில் 22 பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். அட்லியின் அறிவிப்பைத் தொடர்ந்து மவுண்ட்பேட்டன் பிரபு இந்திய வைசிராயாகப் பொறுப்பேற்றார். பாகிஸ்தான் பிரிவினையோடு இந்தியா பிரிட்டிஷ் பிடியிலின்றும் விடுதலை பெற்றது. 1947 அகஸ்டு 14 ஆம் தேதி நள்ளிரவில் டெல்லியில் நடைபெற்றது போன்றே சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலும் பிரிட்டிஷ் யூனியன் ஜாக் கொடியை இறக்கிவிட்டு அதற்கு பதில் அசோகச் சக்கரம் பொறிக்கப்பட்ட சுதந்திர இந்தியாவின் மூவர்ணக்கொடி ஏற்றப்பட்டு பட்டொளி வீசிப் பறக்கவிடப்பட்டது. சென்னைநகரம் அலங்கார ஒளிவிளக்கு வெள்ளத்தில் மிதந்தது. நள்ளிரவிலும் தமிழ்நாட்டுத் தெருக்கள்தோறும் மக்கள் கூட்டம் ஆனந்த சுதந்திரக் கூத்தாடிற்று. "ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று" என்ற பாரதியாரின் பாடல் தமிழ்நாட்டின் பட்டிதொட்டியெல்லாம் பரவி மக்களைப் பரவசத்தில் ஆழ்த்தியது.

காலவரிசைப் பட்டியல்

17ம் நூற்றாண்டு: கம்பெனியின் வர்த்தக விரிவாக்கம்

1600	ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி துவக்கப்பட்டது
1609	முதலாம் ஜேம்ஸ் மன்னரின் பட்டயம் கம்பெனியை பலப்படுத்தியது
1612	கம்பெனி வர்த்தகமுறை நவீனமயமாக்கப்பட்டது
1613	சூரத்தில் வர்த்தகக் கிடங்கு கட்டப்பட்டது
1616-18	சர் தாமஸ் மன்றோ ஜஹாங்கீரிடமிருந்து முக்கிய வாணிப உரிமைகளைப் பெறல்
1635-36	கிராம்வெல் கம்பெனியின் வர்த்தக உரிமையை விரிவுபடுத்தல்
1640	புனித செயின்ட் ஜார்ஜ் கோட்டை கட்டப்படல்
1661	பம்பாய் போர்த்துக்கீயரிடமிருந்து தேனமாகப் பெறப்பட்டது
1668	பம்பாய் கம்பெனிக்கு வாடகைக்குக் கொடுக்கப்பட்டது
1670	சென்னை மக்கள் தொகை 40,000
1678-81	சென்னை கோட்டை பலப்படுத்தப்பட்டது
1685-88	சென்னை கர்னாடகத்தின் தலைமையகமாயிற்று
1687	பம்பாய் வர்த்தகத்தலைமையகமாதல்
1688	சென்னை மாநகராட்சி துவக்கப்படல்
1689	கம்பெனி படை ஒன்றை வைத்துக்கொள்ளும் உரிமை பெற்றது
1693	சர்ஜோஷியா சைல்டு கம்னிக்குப் புதிய பட்டயத்தை வாங்கிக் கொடுத்து பாதுகாப்பு அளித்தல்
1696	வங்காளப் பண்டகசாலை 'வில்லியம் கோட்டை' என்று பெயரிடப்படல்

18ம் நூற்றாண்டு - கம்பெனி ஆதிக்கம்

1709	'கொடால்பின் தீர்வு' - லண்டனில் போட்டிக் கம்பெனியால் ஏற்பட்ட பிரச்னை தீர்க்கப்பட்டது
1710	கம்பெனியின் ஏகபோக உரிமை நீடிக்கப்பட்டது
1710-32	ஆர்காடு நவாபி முறை அறிமுகப்படுத்தப்படல்
1717	பரூக்ஷியரிடமிருந்து மேலும் வர்த்தகச் சலுகைகள் பெறல்
1726	கல்கத்தா நீதிநிர்வாகம் சீரமைக்கப்படல்
1730	மதராஸ் மக்கள் தொகை 300,000
1730	வாணிப ஏகபோக உரிமை மேலும் நீடிப்பு
1746-48	முதல் கர்னாடகப் போர்
1749-54	இரண்டாம் கர்னாடகப் போர்
1757	பிளாசிச் சண்டை

Scanned by CamScanner

1757-67	ராபர்ட் கிளைவின் 'இரட்டை ஆட்சி'
1758-63	மூன்றாம் கர்னாடகப் போர் - கர்னாடகத்தில் ஆங்கிலேயர் ஆதிக்கம்
1761	மூன்றாம் பானிபட் போர்
1764	பக்சார் போர்
1765-72	அலகாபாத் உடன்படிக்கை - வங்காளத்தில் ஆங்கிலேயர் ஆதிக்கம்
1767-69	முதல் மைசூர் போர் - சென்னை உடன்படிக்கை
1772-85	வாரன்ஹேஸ்டிங் சீர்திருத்தம்
1775-82	ஆங்கில - மராட்டிய போர்
1780-84	இரண்டாம் மைசூர் போர்
1781	வருவாய் வாரியம் துவக்கப்படல்
1786-93	காரன்வாலிஸ் சீர்திருத்தம்
1787	கர்னாடக ஒப்பந்தம்
1790-92	மூன்றாம் மைசூர் போர்
1790-1800	காரன்வாலிஸின் பத்தாண்டு நிலவரித் திட்டம்
1793-98	வெல்லஸ்லியின் சீர்திருத்தம் - பட்டயச் சட்டம்
1799	நான்காம் மைசூர் போர் - தென்னிந்தியாவில் ஆங்கிலேயர் ஆதிக்கம்

19ம் நூற்றாண்டு: ஆங்கில ஆதிக்கத்துக்கு எதிர்ப்பு

1800-1801	தென்னிந்தியக் கிளர்ச்சி
1806	வேலூர்க் கிளர்ச்சி
1808	திருவாங்கூர் கிளர்ச்சி
1809	கோப்பால் ஜமீன்தார் கிளர்ச்சி
1820	மெர்வாரா மக்கள் கிளர்ச்சி
1828	பிரம்ம சமாஜம் தோற்றுவிக்கப்பட்டது
1829	காஸி மக்கள் கிளர்ச்சி
1831	பில்லர்கள் கலகம்
1844	சூரத் மக்கள் எதிர்ப்பு
1855	சாந்தல் கிளர்ச்சி
1857	பெருங்கிளர்ச்சி
1861	பிராத்தனா சமாஜம் நிறுவப்பட்டது
1875	பிரம்மஞான சபை ஆரிய சமாஜம் துவக்கப்பட்டது
1885	இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றுவிக்கப்படடது
1887	ஸ்ரீராமகிருஷ்ண மடமும், மிஷனும் ஆரம்பிக்கப்பட்டது
1892	இந்திய மன்றங்கள் சட்டம் அதிகாரிகள் காங்கிரஸ் கூட்டங்களில் கலந்து கொள்ளக்கூடாது என்ற தடையை நீக்கியது.

20ம் நூற்றாண்டு : விடுதலைப் போராட்டம்

1905	வங்காளப் பிரிவினை - சுதேசி இயக்கம்
1906	முஸ்லீம் லீக் துவக்கப்பட்டது
1907	சூரத் காங்கிரஸ் பிளவு
1909	மார்லி-மிண்டோ சீர்திருத்தங்கள்
1911	டெல்லி தர்பார்
1914-1918	முதல் உலகப்போர் - சுயாட்சி இயக்கம்
1916	லக்னோ காங்கிரஸ் - பிரிந்தோர் கூடினர்
1917	மாண்டேகுவின் ஆகஸ்டு பிரகடனம்
1919	ரௌலட் சத்தியாகிரகம் - மாண்ட் போர்டு சீர்திருத்தம் - இரட்டை ஆட்சி
1920-1922	கிலாபத் - ஒத்துழையாமை இயக்கம்
1921	வேல்ஸ் இளவரசர் புறக்கணிப்பு
1923-1926	சுயராஜ்யக் கட்சி இயக்கம்
1927-1929	சைமன் குழு
1928	நேரு அறிக்கை
1929	பூரண சுயராஜ்யத் தீர்மானம்
1930-1931	சட்டமறுப்பு இயக்கம் - உப்பு சத்தியாகிரகம்
1931	முதல் வட்டமேஜை மாநாடு - காந்திஜி இர்வின் ஒப்பந்தம்
1932	இரண்டாவது வட்டமேஜை மாநாடு - வகுப்புத் தீர்வு - பூனா உடன்பாடு மூன்றாவது வட்டமேஜை மாநாடு
1935-1937	இந்திய அரசியல் சட்டம் - மாநில சுயாட்சி
1940	ஆகஸ்டு அறிவிப்பு
1942-1945	தனிநபர் சத்தியாகிரகம் - கிரிப்ஸ் தூதுக்குழுவின் பரிந்துரைகள் - வெள்ளையனே வெளியேறு இயக்கம் ராஜாஜியின் திட்டம் - சுபாஷ் சந்திர போசும் இந்திய தேசிய இராணுவமும்
1945	வேவல் திட்டம் - சிம்லா மாநாடு அமைச்சரவைத் தூதுக்குழுத் திட்டம்
1946	நேரடி நடவடிக்கை நாள் - இடைக்கால அரசாங்கம்
1947	மௌன்ட் பேட்டன் திட்டம் - பிரிவினை - விடுதலை

Scanned by CamScanner

SELECT BIBLIOGRAPHY

Ameles Tripathy - The Extremist Challenge, Calcutta, 1967

Andrews, C.F. - The Renaissance in India, London, 1912

Anne Besant. - How India Wrought for Freedom, Madras, 1915

Argot, D. - Moderates and Extremists in the Indian Nationalist Movement, Bombay, 1967

Avinashulingam, T.S. - Educational Philosophy of Swami Vivekananda, Coimbatore, 1963

Bamford, P.C. - Histories of Khilafat and Non-Cooperation Movements, Delhi, 1985

Beni Prasad. - The Hindu-Muslim Questions, Allahabad, 1941

Bipan Chandra. - The rise and Growth of Economic Nationalism in India, New Delhi, 1984

- Communalism in Modern India, New Delhi, 1987

- Indian National Movement : The Long Term Dynamics, New Delhi, 1988

- India's Struggle for Independence, New Delhi, 1989

Bimal Prasad. - Gandhi, Nehru and J.P., Delhi, 1985

Bose, A.C. - Indian Revolutionaries Abroad 1905-22, Patna, 1971

Briton Martin, New India, 1885, Bombay, 1990

Buch, M.S. - Rise and Growth of Indian Liberalism, Baroda, 1939

Chandran, D.S. - Devanesan, the Making of the Mahatma, Madras, 1969

Charles, H. - Indian Nationalism and Hindu Social Reform, Princeton, 1964

Chaturvedi, T.N. - Civil Disturbances during the British Rule in India, Calcutta 1955.

- Indian Politics since Mutiny, New Delhi, 2002

Christophe Jaffrelot. - The Hindu Nationalist Movement and Indian Politics, 1925 to the 1990s, New Delhi, 1999

Desai, A.R. (ed) - Peasanty Struggles in India, Delhi, 1979

Ericson Stokes. - The Peasant and the Raj, Cambridge, 1978

Frances Hutchins. - Spontaneous Revolution, The Quit India Movement, New Delhi, 1976

Gail Omvedt - Cultural Revolt in a Colonial Society:

- The Non-Brahmin Movement in Western India (1873-1930), Bombay, 1976

Gangali, B.N. - Indian Economic Thought, Nineteenth Century Perspective, New Delhi, 1977

Ghose, K.K. - The Indian National Army, Meerut, 1969

Ganja Shankar. - Socialist Trends in Indian National Movement, Meerut, 1987

Gopal, S. - British Policy in India, 1858-1905, Cambridge, 1965

Goyal, D.R. - Rashtria Swayam Sevak Sangh, New Delhi, 1978

Gordon, L.A. - The Nationalist Movement, 1876-1940, New York, 1974

Grover, B.L. - British Policy Towards Indian Nationalist Movement, 1885-1909, Delhi, 1967

Haripad Chattopadhyaya. - The Sepoy Mutiny, Calcutta, 1957

Hemendranath Gupta. - Deshbandew Chittaranjan Das, Delhi, 1960

Holms, T.R. - A History of Indian Mutiny, 1857, London, 1896

Homi Mody. Sir Pherozeshah: - A Politicial Biography, Bombay, 1963

Jawaharlal Nehru. - An Autobiography, Bombay, 1962

Jhon V. Bandurant. - Conquest of violence, Berkeley, 1971

Josh, S.S. - Hindustan Ghadar Party: A Short History, 1977

Karan Singh. - Prophet of Indian Nationalism, London, 1963

Keer, D. - Dr. Anibedkar : Life and Mission, Bombay, 1954

Krishna, K.B. - The Problem of Minorities, London, 1939

Mahadev Desai. - The Story of Bardoli, Ahmadebad, 1957

Majumdar, B.B. - Militant Nationalism in India, Calcutta, 1966

Malleson, G.B. - History of Indian Mutiny, London, 1880

Mc Lane, J.R. - Indian Nationalism and the Early Congress, Princeton, 1977

Mehrotra, S.R. - Emergence of Indian National Congress, Delhi, 1971

Mohit Sen. - The Indian Revolution, Review and Perspectives, New Delhi, 1970

Moin Shakir. - Khilafat to Partition, 1919-1947, Delhi, 1983

Moore, R.J. - Escape from Empire, Oxford, 1983

Namboodripad, E.M.S. - How I become a Communist, Trivandam, 1976

Nanda, B.R. - Mahatma Gandhi, New Delhi, 1958

- The Nehrus, Motilal and Jawaharlal, London, 1962

- Gokale, The Indian Moderates and the Raj, Delhi, 1977

- Gandhi and His Critics, Delhi, 1985

Nataraja, T. - History of Indian Journalism, New Delhi, 1955

Pandey, B.N. - Nehru, New Delhi, 1976

Pannikkar, K.N. (ed). - The Concerned Indian's Guide to Communalism, New Delhi, 1999

Pattabi Sitaramayya, B. - The History of Indian National Congress 1935

Scanned by CamScanner

Peter Hardy. - The Muslims of British India. Cambridge. 1972
Prabha Dix - Communalism: A struggle for Power. New Delhi. 1974
Puri. H.K. - Ghadar Movement. Amritsar. 1983
Rajayyan.K. - South Indian Rabellion. 1800-1801. Mysore. 1971
- History of Madurai. 1736-1801. Madurai University. 19
- History of Tamil Nadu. 1565-1982. Madurai. 1982
Ranade, M.G. - Religious and Social Reform. Bombay. 1902
Ranga, N.G. - Fight For Freedom. Autobiography. Delhi. 1968
Ram Gopal. - Lakamanya Tilak. Bombay. 1965
Ravindran. T.K. - Vaikkam Satyagraha and Gandhi. Trivandram. 1973
Reginald Coupland. - Indian Politics. 1936-1942. Bombay. 1944
Satyabrata Rai Chawdhry. - Leftist Movements in India. 1917-1947. Calcutta. 19
Sathianathaier. R. - History of India. Vol.III. Madras. 1952
Savarkar. V.D. - The Indian War of Independence. 1857. Bombay. 19
Seal. A. - The Emergence of Indian Nationalism. Cambridge. 19
Sen. S.N. - Eighteen Fifty Seven. Delhi. 1957
Sir Syed Ahmed. - Essay on Causes of the Indian Revolt. 1859
Subhas Chandra Bose. - The Indian Struggle. Calcutta. 1964
Subramanian. N. - History of Tamil Nadu. Madurai. 1982
Sumit Sarkar. - The Swadeshi Movement in Bengal. 1903-1908. New Delhi. 1973
- Modern India. Delhi. 1983
Sundarlal. P. - British Rule in India. Bombay. 1972
Surendranath Banerjee. - A Nation in the Making. Calcutta. 1963
Valantine Chirol. - Indian Unrest. London. 1940
Venkatesan. G. - Development of Rural Local Self-Government. Coimbatore. 1983
Viswanathan. E. Sa. - The Political Career of E.V.Ramasamy Naicker. Madras. 1983
William Wedderburn. - Allen Octavian Hume. C.B.. London. 1913
Will Durant. - Our Oriental Heritage. New York. 1954
Wolpert Stanley. - Tilak and Gokhale. Berkeley. 1962
- Morley and India. 1906-1910. Berkeley. 1967
- Jinnah of Pakistan. New York. 1984

Scanned by CamScanner

நூலாசிரியர்கள் பற்றி...

டாக்டர் க.வெங்கடேசன் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த சீர்காழியில் பிறந்தார் (1983). இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் வரலாறு மற்றும் அரசியலில் முதுகலைப் பட்டத்தையும், புது டெல்லியிலுள்ள பொது நிர்வாக இந்திய இன்ஸ்டிட்டியிலிருந்து முதுகலைப் பட்டத்தையும், குஜராத் ஆனந்திலுள்ள சர்தார் பட்டேல் பல்கலைக் கழகத்திலிருந்து டாக்டர் பட்டத்தையும் பெற்றார். கோவை ஸ்ரீராமகிருஷ்ணா வித்யாலயா கிராமியக் கல்லூரி மற்றும் கலைக் கல்லூரியிலும் (1957 - 77), ராஜபாளையம் ராஜூக்கள் கல்லூரியிலும் (1977 - 91) வரலாற்றுப் பேராசிரியராகவும், கல்லூரி முதல்வராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றார். இவர் **அக்பர், தற்கால அரசியல் ஆய்வு, உள்ளாட்சி அரசாங்க வளர்ச்சி, இந்திய உள்ளாட்சி அரசாங்கம், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வரலாறு, மேலாண்மைத் தத்துவங்கள், அலுவலக நிர்வாகம், வரலாற்று வரைவியல், இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு, சமகால இந்திய வரலாறு** ஆகிய நூல்களை எழுதியுள்ளார். பல வரலாற்று ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்.

டாக்டர் பி.எஸ்.சந்திரபிரபு திருநெல்வேலி மாவட்டத்தில், திருவேங்கடம் என்ற கிராமத்தில் பிறந்தவர் (1959). மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத் துறையில் முதுகலை, இளநிலை ஆய்வாளர் மற்றும் டாக்டர் பட்டங்களைப் பெற்றவர். ராஜபாளையம் ராஜூக்கள் கல்லூரியில் பேருரையாளராகப் பணிபுரியும் இவர் ஒரு காந்திய சிந்தனையாளரும், எழுத்தாளரும் ஆவார். இவரது **மதுரை காந்தி சுப்பராமன், அ.வைத்தியநாத அய்யர், காந்தி கிராமம் டி.எஸ்.சௌந்தரம்** போன்ற காந்தியத் தலைவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்கள் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. வரலாற்றுக் கருத்தரங்குகளில் பங்கேற்றுள்ள இவர் பல ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்.

வி.சி. பப்ளிகேஷன்ஸ்
32-ஏ, மீனாட்சி தியேட்டர் ரோடு
இராஜபாளையம் - 626 117

Scanned by CamScanner